சன்மார்க்க சபை

பொன்விழா மலர்

விகாரிஞு புரட்டாசித் திங்கள் 17, 18-ஆம் நாள்

மேலைச்சிவபுரி

1909 1959

உ



வெண்பா

செய்ய சவுமியத்திற் சித்திரைமுப் பானென்றிற்
றுய்யகுரு வார சுபதினமே – வையத்திற்
சேமமுறு மேலைச் சிவபுரியிற் சன்மார்க்க
நாம அவைநிறுவு நாள்.

ஆயிரத்துத் தொள்ளா யிரத்தொன்ப தாங்கிலவாண்
டேயுமதி மேபதின்மூன் றேய்தினமே – யாயறிஞர்
சன்மார்க்க மென்னுஞ் சபைநிறுவிச் சைவமெனு
நன்மார்க்க மோர்ந்ததிரு நாள்.

உ

கணபதி துணை.

சன்மார்க்க சபை

பொன்விழா மலர்



விகாரி௵ புரட்டாசித் திங்கள் 17, 18-ஆம் நாள்

மேலைச்சிவபுரி

1909 1959



பொன்னும் மெய்ப்பொரு ளும்தரு வானைப்
போக மும்திரு வும்புணர்ப் பானைப்

பின்னை என்பிழை யைப்பொறுப் பானைப்
பிழையெ லாம்தவி ரப்பணிப் பானை

இன்ன தன்மையன் என்றறி வொண்ணு
எம்மா னைஎளி வந்தபி ரானை

அன்னம் வைகும் வயற்பழ னத்துஅணி
ஆரு ரானைம றக்கலும் ஆமே.

பொருளடக்கம்

நன்றியுரை

ஐம்பது ஆண்டு மொழிப்பணி புரியும் சன்மார்க்கசபையின் பொன்விழாத் தமிழ் மலர் இன்று உங்கள் கைமலராக விளங்கக் காண்கின்றீர்கள். கேட்பித்தும் கற்பித்தும் எழுதுவித்தும் செல்வத்தமிழ் பரப்பிய சபைக்கு ஏற்ற இனிய அழகிய மலர் இது என்பதனை விரித்துப் படிக்குந்தோறும் காண்பீர்கள்.

தனியொருவர் பல்லாண்டு தொண்டாற்றுவது அவர்தம் உளத்திட்பத்தைப் பொறுத்தது. ஒரு கழகம் பல பத்தாண்டுகள் தொண்டுபுரிதல் என்பது பலர் தம் ஒத்துழைப்பைப் பொறுத்த தன்றோ! அதுவும் தமிழ்த்தொண்டாகுமேல், அக்கழகம் புகழை நாடவில்லை, பொருளை நாடவில்லை என்பதும், மொழியையே நாடிற்று என்பதும் வெளிப்படை. வெண்ணெய்ச் சடையன் பிறந்து கம்பரை ஆதரித்ததால், ஆயிரமாயிரம் தமிழ்ப் பாடல்கள் எழுந்தன. மேலைச்சிவபுரிப் பழநியப்பர் தோன்றி ஒரு சபையை நிறுவியதால், எழுத்தறிவு பெற்ற மக்கள் ஆயிரக் கணக்காக விளங்குகின்றனர்; கபிலன் பாடிய பாரியின் பறம்பு மலையைச் சூழ்ந்து தமிழ்வளம் கொழிக்கின்றது. இவ்வண்ணம் தமிழையும்; சமயத்தையும் வளர்த்துப் பொன்விழாக் கண்ட சபையின் திருவடிக்கு எழுத்து மலர் இட்டு வாழ்த்துகின்றோம்.

சபைப் பொன்மலர் திட்பமும் நுட்பமும் வளனும் வனப்பும் பொருந்திய கட்டுரையிதழ்களைத் தாங்கி இலங்கு கின்றது. "பொன்மலர் நாற்றம் உடைத்து" என்பதனைக் காணக்காண இறும்பூது எய்துகின்றோம். கட்டுரைக் கொடை செய்த அறிஞர் பெருமக்கட்கு மிகுந்த நன்றியுடையோம். சபை என்றும் வாழ வாழ்த்து அருளிய சான்றோர்களுக்கெல்லாம் பெரு நன்றியம்.

விளம்பரங்கள் தந்த அன்பர்கட்கும், காலம் போற்றி அழகுபெற அச்சிட்டுக்கொடுத்த லலிதா பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிடெட், அச்சகப் பொறுப்பாளர் திரு. S. இராமச்சந்திரன் அவர்கட்கும், அமைவோடு அச்சு மேற்பார்த்து உதவிய திரு. மீ. கந்தசாமிப் புலவர், திரு. கு. மா. நாராயணசாமிப் பிள்ளை, திரு. மு. கோவிந்தராசன் ஆகிய புலவர்களுக்கும், ஏனைய உதவிகள் பல செய்த துணையாளர்க்கும் நன்றியுடையோம்.

அன்புள்ள,
பதிப்புக் குழுவினர்.
சன்மார்க்கசபை

SECRETARY TO THE PRESIDENT OF INDIA,
RASHTRAPATI BHAVAN,
NEW DELHI-4.

September 5, 1959.

The President is glad to learn from your letter of the 1st September 1959 that the Sanmarga Sabha, Melasivapuri will celebrate its Golden Jubilee shortly and sends his best wishes on the occasion.

Yours sincerely.

(Sd.) A. V. PAI.

NO. 2 MAULANA AZAD ROAD,
NEW DELHI.

2 Sept. 1959.

Thank you for you letter of the 1st inst. I am glad to know that the Golden Jubilee of your Saba will be celebrated on the 3rd and 4th Octr. I send my best wishes for the success of the celebrations.

Yours faithfully,

(Sd.) S. RADHAKRISHNAN.

MINISTER,
SCIENTIFIC RESEARCH AND CULTURAL AFFAIRS,
INDIA,
NEW DELHI.

September 14, 1959.

I have received your letter of September 1st 1959 and am glad to hear that the Ganesar Sentamil Kalloori is celebrating its Golden Jubilee shortly.

I am impressed by the useful work done by the Kalloori and wish it further growth. I also hope that its activities besides promoting the learning of Tamil will increase understanding and goodwill among various language groups of the country.

Yours sincerely,

(Sd.) HUMAYUN KABIR.

PRIVATE SECRETARY TO
MINISTER OF
TRANSPORT & COMMUNICATIONS
INDIA
NEW DELHI.

14th September, 1959.

I am desired by the Union Minister of Transport & Communications to thank you for your letter of the 1st September, 1959, and to convey to you his kind message wishing the Institution prosperity and every success in its endeavours to promote Tamil.

Yours faithfully,

(Sd.) B. S. KOHLI.

DEPUTY MINISTER, RAILWAYS
INDIA
NEW DELHI.

Septr. 12, 1959.

I am very glad to know that THE SANMARGA SABA, Melasivapuri is celebrating its Golden Jubilee on 3rd & 4th Octr.

2. The services rendered by the Saba are well-known to all lovers of Tamil and need no eulogy.

3. I wish the celebrations all Success.

(Sd.) S. V. RAMASWAMY.

கு. காமராஜ்,
CHIEF MINISTER OF MADRAS

FORT ST. GEORGE
MADRAS

2-9-1959.

தங்கள் சன்மார்க்க சபையின் பொன் விழாவை அக்டோபர் 3, 4 தேதிகளில் நடத்த இருப்பது அறிந்து மிக்க மகிழ்ச்சி யடைகிறேன்.

பொன் விழா இனிது நடைபெறவும், அதையொட்டி வெளி யிட இருக்கும் சிறப்பு மலர் நல்ல முறையில் வெளிவரவும் எனது இதயங் கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள,
(ஒப்பம்.) காமராஜ்.

C. SUBRAMANIAM
MINISTER FOR FINANCE AND EDUCATION

FORT ST. GEORGE
MADRAS

18-9-59.

மேலைச்சிவபுரி சன்மார்க்க சபையினர் தங்கள் சங்கத்தின் பொன் விழாவைக் கொண்டாடுவது குறித்து மகிழ்ச்சியடைகிறேன்.

அன்பு நெறியில் உயர்வு கண்ட நாடு நம் நாடு. – தலைமுறை தலைமுறையாக நமது பெரியோர்கள் சன்மார்க்க நெறிகளைப் போதித்து வந்துள்ளனர்.

“ அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று ” என்று

வள்ளுவர் பாடியருளினர். சென்ற தலைமுறையில் வாழ்ந்த இராம லிங்க அடிகளார் சன்மார்க்க நெறியைப் பரப்புவதிலேயே தமது வாழ்நாளைக் கழித்தவர்.

“ உயிர்களிடத்தில் அன்பு வேண்டும் ” என்று சிறு குழந்தையை நோக்கிப் பாடினர் பாரதியார். இளம் பிராயத்தில் மக்களது உள்ளங்கள் கள்ளங்கபடமற்றவையாகவே விளங்குகின்றன. ஆனல் கால வெள்ளத்தில் மனித மனம் பலவிதமான உணர்ச்சிப் போராட்டங்களால் தாக்குண்டு தீய நெறிகளுக்கும் இடமளித்து விடுகின்றது. அப்போது உயிர்களிடத்தில் அன்பு செலுத்துதல்—கொல்லாமை போன்ற நற்குணங்களுக்கு இடமில்லாமலே போய்விடுகின்றன. எனவே குழந்தைகள் படிப்படியாக வளர்ச்சியடையும் காலங்களிலெல்லாம் சன்மார்க்க நெறியைப் பற்றியும் – “சன்மார்க்க நெறிதான் ஆண்டவனின் நெறி” என்னும் உயர்ந்த தத்துவத்தைப்பற்றியும் போதிக்க வேண்டும். அப்போதுதான் வள்ளுவரும், புத்தரும், இயேசுவும், வள்ளலாரும், காந்தியடிகளும் போற்றிய இந்த சன்மார்க்க நெறி நம் தமிழ் நாட்டில் மேன்மேலும் வளரமுடியும்.

சன்மார்க்க நெறியினைப் பரப்புவதோடன்றி மேலைச் சிவபுரி சங்கம் தமிழை வளர்ப்பதிலும் நல்ல ஆர்வம் காட்டி வருவது பாராட்டத்தக்கது. ஏனெனில் சன்மார்க்கமும் – சைவமும் – தமிழும் ஒன்ருேடொன்று இணைந்தவையாகும். திருஞானசம்பந்தர்—அப்பர் போன்ற நமது சைவ சமய மெய்யன்பர்கள் சைவத்தோடு—தமிழையும் வளர்த்து வந்ததை நாம் அனைவரும் அறிவோம். திருவாசகமும் —திருமுறைகளும் — திருத்தாண்டகங்களும் சைவ மத நூல்கள் என்பதோடு மட்டுமின்றி — இனிய செந்தமிழ்க் கருவூலங்களும் ஆகும்.

மேலைச் சிவபுரி சன்மார்க்க சங்கம் சன்மார்க்க நெறியினைப் போதிக்கும் உயர்ந்த பணியினைத் தொடர்ந்து செவ்வனே செய்வதுடன் தமிழ்ச் சேவையையும் அயராது ஆற்றி வரும் என்று மனப்பூர்வமாக நம்புகிறேன்.

பொன் விழா சிறப்பாக நடைபெறவும் — பொன் விழா மலர் சுவையும் பயனும் மிகுந்து விளங்கவும் எனது நல் வாழ்த்துக்கள்.

அன்புடன்,

(ஒப்பம்.) சி. சுப்பிரமணியம்

M. BHAKTAVATSALAM
HOME MINISTER

FORT ST. GEORGE
MADRAS

3-9-59.

தங்கள் 31ம் தேதிக் கடிதம் கிடைத்தது. வந்தனம். தங்கள் சன்மார்க்க சபைக்கு என் பாராட்டுதலேயும், வாழ்த்துக்களேயும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். பொன் விழா இனிது நடைபெற வேண்டுகிறேன்.

தங்கள் அன்புள்ள,

(ஒப்பம்.) எம். பக்தவத்சலம்.

V. RAMAIAH
MINISTER FOR ELECTRICITY

FORT ST. GEORGE
MADRAS

செப்டெம்பர் 8, 1959.

வணக்கம். மேலேச்சிவபுரி சன்மார்க்க சபை தனது பொன் விழாவை அக்டோபர் மாதம் கொண்டாட இருப்பது அறிய மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். கடந்த ஐம்பதாண்டுகளாக பல பெரியோர்களின் துணை கொண்டு ஆற்றிவந்துள்ள பெருந்தொண்டை மேலும் பல்லாண்டுகள் இச்சபை தொடர்ந்து நடத்திவர எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

தங்களன்புள்ள,

(ஒப்பம்.) வெ. ராமையா.

வாழ்த்து

மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபை என்னும் கழகம் தமிழகத்தில் பெரும்புகழுடன் விளங்கும் ஒரு தாபனம். அவ்வூரில், பெருங்குடி வணிகர் மரபினுக்கணியாய்த் தோன்றிச் சைவமும் தமிழும் தமதிருகண்களெனப் போற்றி வாழ்ந்த சைவத்திருவாளர்கள் வ. பழ. சா. பழநியப்பச் செட்டியாரவர்களாலும் அவர்கள் அருமைத் தம்பியார் அண்ணாமலை செட்டியாரவர்களாலும் இற்றைக்கு ஐம்பது ஆண்டுகட்கு முன்பு அது தோற்றுவிக்கப்பெற்றது. இது நிகழ்தற்கு ஊக்கமூட்டியவரும், உடனிருந்து சபையைப் பலவகையிலும் வளர்த்து வந்தவரும் தமிழகம் பெரிதும் போற்றும் மகாமகோபாத்தியாய முதுபெரும் புலவர்–பண்டிதமணி–கதிரேசஞ்செட்டியாரவர்களென்னும் பேராசிரியராவர்.

இச்சபை, சிறந்த புலவர்கள் பலரது தொடர்பைக்கொண்டது. பண்டிதமணியவர்களியற்றிய அரிய நூல்களிற் பலவற்றை வெளியிட்ட பெருமையையுடையது. பல்லாண்டுகளாகத் தொடர்ந்து ஆண்டுவிழாக்களை நடத்திப் பெரும்புலவர்களை வருவித்துக் கேள்விச் செல்வத்தை வழங்கிய சிறப்பையும் படைத்தது. இவற்றினோடு, கணேசர் செந்தமிழ்க் கல்லூரி என்னும் பெயரில் சிறந்த கல்வி நிலையம் ஒன்றையும் தொடங்கிப் பல்லாண்டுகளாக வித்துவான் வகுப்புகளையும் இனிது நடத்தி மாணவர் பலர்க்குப் பொருளுதவியும் புரிந்து, நல்ல தமிழ்ப் புலவர்கள் பலரை நாட்டிற்கு அளித்துவரும் மாண்பினையும் உடையது. சிறந்த நூல்நிலையமொன்றை அமைத்தும் அறிவு வளர்ச்சிக்குப் பெருந்துணை புரிந்துவருகிறது.

இத் துணைச் சிறப்பார்ந்த தொண்டுகள் பலவற்றை ஆற்றி வந்துள்ள இச் சபையின் பொன்விழா, அண்ணாமலையார் அருளால் எல்லாச் சிறப்புடனும் இனிது நிறைவேறுவதாக.

சென்னை,
15—9—1959.

(ஒம்.) ச. சச்சிதானந்தம் பிள்ளை, B. A., L. T.

C. RAJAGOPALACHARI

60, BUSLULLAH ROAD
TYAGARAYANAGAR
MADRAS 17

மேலைச்சிவபுரி சன்மார்க்கச் சபையின் பொன் விழாவுக்கு என் அன்பார்ந்த வாழ்த்துக்கள்.

அறிவின்மையும், நாஸ்திகமும், நம் தமிழ்நாட்டைச் சூழ்ந்திருக்கும் இக்காலத்தில் இத்தகைய சபைகள் வளர்ந்து பணிசெய்து கொண்டிருக்கவேண்டும்.

(ஒப்பம்.) இராஜகோபாலாச்சாரி.

P. O. BOX 8
DELISLE
OOTACAMUND

September 8, 1959.

Glad to learn that a Souvenir is to be published in connection with the Golden Jubilee of the Sanmarga Sabha, Melaisivapuri and I wish the publication all success and the Sabha all prosperity.

(Sd.) C. P. RAMASWAMI AIYAR.

The Southern India Chamber of Commerce

MESSAGE.

I am very glad to note that the Sanmarga Sabai devoted to the development of Tamil Literature has completed 50 years of useful service in the cause of developing Tamil Literature and will be celebrating its Golden Jubilee in a fitting manner. I know this Sabai has been rendering very useful service in the cause of advancement of Tamil Literature. At a time when much attention is focussed on the development of Regional Language it is to organisations like yours that Tamil Literature has to look up for its due advancement. I wish the function every success and hope that this sangham will render more useful service for the development of Tamil language and literature in the years to come.

SECRETARY,
The Southern India Chamber of Commerce,
MADRAS—1.

வாழ்த்து

சைவமுந் தமிழும் இருகண்களாகக் கொண்டு விளங்கும் செட்டி நாட்டில் மேலைச் சிவபுரி வ. பழ. சா. குடும்பம் பழம்பெருமை யும் பண்பும் சான்றது. இத்தொல்குடியில் தோன்றிப் பாவலர் பாட, நாவலர் பாராட்ட, சிவநேயச் செல்வர்கள் வாழ்த்தச் சிறந்து, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த உயர்திரு. வ. பழ. சா. பழநியப்பச் செட்டியார் அவர்களின் நன்முயற்சியால் தோன்றி, இறையன்பையும், இன்தமிழையும் கடந்த ஐம்பது ஆண்டுகளாக வளர்த்து வரும் சன்மார்க்க சபை, தனது பொன்விழாவைக் கொண்டாட இருப்ப தறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

பொன்விழா இனிதே நிகழ்ந்தேறவும், சன்மார்க்க சபை நாளும் வளர்ந்து நற்றொண்டு பல புரிந்து சிறப்புற்றோங்கவும், வ. பழ. சா. குடும்பத்தார் நிறைந்த செல்வமும், நிலைத்த புகழும் எய்தி இறைப்பணியும், தமிழ்த்தொண்டும் ஆற்றி இலங்கவும் 'வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்' திருவருளை மன, மொழி, மெய்களால் நினைந்து, வாழ்த்தி, வணங்குகின்றேன்.

கருமுத்து தியாகராசன்.

T. M. Narayanaswamy Pillai,
M. A. B. L.,
VICE-CHANCELLOR

ANNAMALAI UNIVESRITY
ANNAMALAINAGAR P. O.
SOUTH INDIA.

8—9—59.

தமிழ் மொழி வாயிலாகக் கல்வியை வளர்க்கும் சங்கங்கள் சிலவே. அவற்றுள் மேலைச் சிவபுரிச் சன்மார்க்க சபையும் ஒன்று. தன வணிகச் செல்வர்கள் வாழும் மேலைச்சிவபுரியில் தொடங்கப் பெற்ற இச்சபையானது, தமிழ்ப்பெரும் புலவர்களை அழைத்து விரி வுரைகள் நிகழ்த்தியும், சுக்கிர நீதி, மண்ணியல் சிறுதேர் முதலிய சிறந்த நூல்களை வெளியிட்டும் ஐம்பது ஆண்டுகளாகத் தமிழ்த் தொண்டு புரிந்து வருகிறது. இச்சபையின் ஆதரவில் ஆரம்ப பாடசாலையும் 'கணேசர் செந்தமிழ்க் கல்லூரி' என்ற புலவர்கல்லூரி யும் சிறந்த முறையில் நடைபெறுவது அறிந்து பெருமகிழ்ச்சியடை கின்றேன். இதனைத் தோற்றுவித்து நன்முறை நடத்திவரும் வ. பழ. சா. குடும்பத்தாரது தமிழ் ஆர்வம் போற்றத்தக்கது. இச்சபையின் தொண்டினை எல்லோரும் உணர்ந்து பயன்கொள்ளும் முறையில் இதன் பொன்விழா மலர் சிறந்து விளங்குக.

T. M. நாராயணசாமி பிள்ளை.

R. P. SETHU PILLAI, B. A., B. L., D. Litt.
Professor of Tamil
University of Madras

10, SECOND MAIN ROAD
GANDHINAGAR
MADRAS-20

22-9-1959.

வாழ்த்துரை

செந்தமிழ் மொழியையும் சைவ நன்னெறியையும் இந்நாட்டில் ஐம்பதாண்டுகளாகப் பேணி வளர்க்கும் பெருமைசான்றது மேலைச் சிவபுரி சன்மார்க்க சபை. அதன் ஆதரவில் நடைபெற்றுவரும் கணேசர் செந்தமிழ்க் கல்லூரியில் தமிழ்நாட்டுப் பெரும்புலவர் பலர் ஆசிரியராக அமர்ந்து அரும்பணிபுரிந்துள்ளனர். அக்கல்லூரியிற் கலைபயின்று புலமைப் பட்டம் பெற்ற அறிஞர்கள் தமிழகம் எங்கும் அறிவொளி பரப்பி வருகின்றனர். தண்டமிழாசான் பண்டிதமணி அவர்களின் ஆசிபெற்ற சன்மார்க்க சபை மேன் மேலும் ஓங்கி வளர்ந்து சிவமணங் கமழ்ந்து செந்தமிழ்த் தொண்டாற்றும் வண்ணம் இறைவன் அருள்புரிக.

அன்பன்,

(ஒப்பம்.) ரா. பி. சேதுப்பிள்ளை.

T. P. MEENAKSHISUNDARAM,
M. A., B. L., M. O. L.,
Professor and Head of the Departments of
Tamil (Arts) and Dravidian Linguistics
Annamalai University

ANNAMALAINAGAR

18—9—1959.

மேலைச்சிவபுரி இந்த நூற்றுண்டின் தமிழ்ப்பெரு நிலையம்; தமிழ் வளர்க்கும் தனிப்பெரு நகர்; பண்டிதமணி மு. கதிரேசஞ் செட்டியாரின் தமிழன்பின் வடிவமாக ஓங்குவது. இதன் ஆண்டு விழாப் பண்டைய இந்திரவிழாப் போலப் புலவர் கூட்டுண்ணும் அறிவு விழாவாக ஓங்கியது. இதன் வெள்ளி விழாவில் தமிழ்ப் பெருந்தலைவர் சுவாமிநாத ஐயர் தலைமை பூண மகா வித்துவான் ரா. இராகவையங்கார் முதலியோர் பேசக்கண்ட கேட்ட காட்சிகள் என் மனத்தைவிட்டு அகலா. பண்டிதமணிக்கு அப்பட்டத்தைக் கொடுத்ததும் இச்சபையே. திரு. ரா. இராகவ ஐய்யங்காருக்கு மகா வித்துவான் என்ற பட்டம் கொடுத்ததும் இச்சபையே. எனவே இச்சங்கத்தின் சிறப்பைக் கூறி முடிப்பது அருமை. செந்தமிழ்க் கல்லூரி நடத்தித் தமிழை வளர்க்கும் இச்சங்கம் இன்று பொன் விழாக்கொண்டாடுகிறது. சன்மார்க்க சங்கம் நீடுழி வாழ்க.

(ஒப்பம்.) தெ. பொ. மீனுட்சிசுந்தரம்

வாழ்த்துரை.

என்னுட்டவர்க்கும் இறைவனை சிவபெருமான் தென்னுடைய தனிப்பெருங்கடவுளாக விளங்குதல் போன்று, தமிழரின் தாய்மொழியாகிய தண்டமிழ் செட்டிநாட்டில் தனிச் சிறப்புடன் இலங்குகிறது,

தீந்தமிழ் மொழியும், அதன் உயிராக அமைந்துள்ள சைவப் பெருநெறியும் மீண்டும் தமது பண்டைப்பெருமையும், புகழும் பெற்று ஓங்கி வளரச் செட்டிநாட்டைச் சேர்ந்த நகரத்தார் சமூகப் பெரியார்கள் பலர் ஆற்றியுள்ள தொண்டும், அளித்துள்ள நன்கொடைகளும் அளப்பரியன.

இத்திருநெறிய பெருமரபில் "தோன்றிற் புகழொடு தோன்றுக' என்ற பொய்யில் புலவர் பொருளுரைக்கேற்பத் தோன்றி, பாவலரும் நாவலரும் பாராட்டுமாறு சிறந்து வாழ்ந்த மேலைச்சிவபுரி உயர்திருவாளர் வ. பழ. சா. பழனியப்பச் செட்டியார் அவர்களின் நன்முயற்சியால் 50 ஆண்டுகட்கு முன் தோன்றிய 'சன்மார்க்க சபை' தமிழுக்கு ஆற்றியுள்ள நற்பணி சொல்லுந் தரத்தன்று.

இச்சன்மார்க்க சபை, புகழுடம்பு எய்திய முதுபெரும் புலவர் பண்டிதமணி அவர்களின் துணையுடன் கணேசர் செந்தமிழ்க் கல்லூரியைத் தொடங்கித் தமிழார்வமிக்க பல இளைஞர்களை ஆண்டு தோறும் புலவர்களாக்கி வருவது நாடறிந்த உண்மையாகும்.

இவ்வாறு கடந்த 50 ஆண்டுகளாக நற்பணிபுரிந்துவரும் சன்மார்க்க சபையின் பொன்விழா சிறப்புறக் கொண்டாட இருப்பதறிந்து எல்லையற்ற உவகையெய்துகிறேன்.

பொன்விழா இனிதே நடைபெறவும், சன்மார்க்க சபையும், கணேசர் செந்தமிழ்க் கல்லூரியும் மேன்மேலும் வளர்ந்து தமிழ்த் தொண்டாற்றிச் சிறந்து விளங்கவும், இவற்றின் தோற்றத்திற்குக் காரணமான வ. பழ. சா. குடும்பத்தார் எல்லா நலங்களும் இனிதெய்தி நீடூழி வாழவும் ஆலவாய் அவிர்சடையண்ணல் திருவருளை வாழ்த்தி வணங்குகிறேன்.

(ஒப்பம்) கருமுத்து தி. சுந்தரம்.

Dr. S. S. BHARATHI,
M. A., B. L., D. LITT.

"MALAIYAHAM"
PASUMALAI.
(SOUTH INDIA)

14—9—1959.

நலமே நாளும் நிலவுக. தங்கள் சபையின் பொன்விழா நடைபெறுவது கேட்டு மகிழ்கிறேன். பன்னூருண்டுகள் நிறைவுற்றும் பெருமையுறவேண்டுமென விரும்புகிறேன்; வாழ்த்துகிறேன்.

அன்பன்,

(ஒப்பம்.) ச. சோ. பாரதி.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்
ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

ஆசிச் செய்தி

தெய்வத் தமிழைக் குடிசையிலும், மாளிகையிலும், சந்தையிலும், நாற்சந்தியிலும் ஒலிப்போமாக ஒலிவிப்போமாக.

நம் தமிழைத் தெய்வத்தமிழ் என்கிறோம் தமிழ்த்தாய் என்றும் சொல்லுகின்றோம். ஈன்றெடுப்பதை விட அரவணைத்தலே தாயின் உயரிய அருள்தன்மையாகும்.

தாய் ஆரோக்கியமும் புஷ்டியும் நிறைந்திருந்தால்தான் சிறு குழந்தைகளை அரவணைக்க முடியும். தெய்வீகத்தன்மையில் நம் தமிழ் முன்னணியில் நின்றால்தான் என்றும் அதற்கு அழிவிராது. தெய்வீகத் தமிழை வளர்ப்பதே தமிழின் தெய்வீகத் தன்மையை வளர்ப்பதாகும்.

ஐம்பதாண்டுகளாக நன்முறையில் தொண்டாற்றி வரும் இச்சன்மார்க்க சபை ஸ்ரீ திரிபுரசுந்தரீ சமேத ஸ்ரீ சந்திரமௌளீச்வரருடைய அருளை மூலதனமாகக்கொண்டு தொண்டாற்றி மேன்மேலும் விருத்தியடையுமாக.

கி. ஆ. பெ. விசுவநாதம் திருச்சிராப்பள்ளி-8.

மேலைச்சிவபுரி சன்மார்க்க சபை தோன்றி 50 ஆண்டுகளாயின என்ற செய்தி தமிழக மக்களுக்கு வியப்பையும், மகிழ்வையும் ஒருங்கே அளிக்கும் செய்தியாகும். அது நூல்களை வெளியிட்டும், கல்லூரி நடத்தியும் செந்தமிழுக்குச் செய்த, செய்கின்ற தொண்டுகள் போற்றக்கூடியனவாகும்.

தோன்றி மறைந்த, தோன்றியிருக்கின்ற, இனித் தோன்றப் போகின்ற எல்லாச் சபைகளுக்கும் இச்சபை ஒரு எடுத்துக்காட்டான சபை எனத் துணிந்து கூறலாம். ஒரு சபை என்னென்ன செய்ய வேண்டுமோ அவைகளை அது செய்துகொண்டிருக்கிறது.

திரு. வ. பழ. சா. அவர்களின் குடும்பத்தினரின் விடாமுயற்சி கலந்த தொண்டினையும், பண்டிதமணி உயர்திரு. கதிரேசச்செட்டியார் அவர்களின் பெருந்துணையையும் சபை நன்கு பயன்படுத்திக் கொண்டு வளர்ந்து வந்திருக்கிறது.

பொதுவாக தமிழகத்திலும், குறிப்பாக செட்டிமார் நாட்டிலும் உள்ள தமிழ் இளைஞர்களைச் செந்தமிழ் இளைஞர்களாக ஆக்கிக் கொடுத்து உதவி, நாட்டிற்கும் மொழிக்கும், மக்களுக்கும் நற்றொண்டு செய்வதில் சபை சிறந்து விளங்கவேண்டும் எனவும், பொன் விழா சிறப்படைய வேண்டுமெனவும் முழு மனதுடன் வாழ்த்துகிறேன்.

தங்களன்பிற்குரிய,

(ஒப்பம்.) கி. ஆ. பெ. விசுவநாதம்.

தவப்பெருந்திரு, சோமசுந்தர ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

குருமகா சந்நிதானம் மதுரை.

பொன்விழா ஆசியுரை.

மூவேந்தர்களாகிய சேர, சோழ, பாண்டியர்கள் தென் இந்தியாவில் வானளாவிய கோபுரங்களும், கோயில்களும் பலப்பல கட்டுவித்து, அவற்றிற்கு வேண்டிய நிலங்களையும், மானியங்களையும், ஆபரணங்களையும், தானமாக ஈந்து, நமது உலகப் பொது சமயமாகிய சைவ சமயத்தைப் போற்றிவந்தார்கள் என்பதை யாவரும் அறிவர்.

மூவேந்தர்கள் காலத்தற்குப் பின் சிறப்பாக பாடல்பெற்ற ஸ்தலங்களிலுள்ள சிவன் கோவில்களையும், பொதுவாக ஆங்காங்கே புதிய விநாயகர் சுப்பிரமணியர் ஆலயங்களையும் என்றும் அழியாத கருங்கல் திருப்பணியால் செய்து, தமிழுலகிற்கு உதவிய தனிப்பெரும் பெருமை, செட்டிநாட்டு நகரத்தார்களுக்கே உரியதாகும்.

கல்விக்காகப் பெரும்பொருள் செலவுசெய்து, தமிழ் நாட்டில் தமிழையும், தமிழ் இசையையும், சமயத்தையும் வளர்ப்பதற்காக, அண்ணாமலை நகரில் பல்கலைக் கழகம் ஒன்று நிறுவி, அதனைச் சீருடனும் சிறப்புடனும் பொலியச் செய்த பெருமை, நகரத்தார்களில் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களையே சாரும்.

ஆனால் நமது மாபெரும் சமயத்தையும், தமிழையும் போற்றி வளர்ப்பதற்காக மேலைச் சிவபுரியில் சன்மார்க்க சபை ஒன்றை 50 ஆண்டுகளுக்கு முன் (13-5-1909) தோற்றுவித்த தனிப்பெரும் பெருமை மேலைச் சிவபுரியில் அவதரித்த திருவாளர் வ. பழ. சா. பழநியப்ப செட்டியார் அவர்களையே சாரும். அதனை ஊக்கமாகப் போற்றி வரும் பெருமையும், அதன் மூலமாக நடத்திவரும் பலபணிகளும், 'கணேசர் செந்தமிழ்க் கல்லூரி'' என்னும் ஒரு பெரிய கல்லூரியை நிறுவி, சன்மார்க்க சபையைச் சிறப்புற நடத்திவரும் பெருமை இன்று வ. பழ. சா. அவர்களின் குடும்பத்தார் அனைவருக்குமே உரித்தாகும்.

நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய நமது ஆதி குருமூர்த்தியாகிய திருஞானசம்பந்தப் பெருமான் செய்தருளியது போல, தமிழால் சைவத்தையும், சன்மார்க்கத்தையும், பல்லாற்றானும் போற்றி வருகின்ற மேலைச் சிவபுரிச் சன்மார்க்க சபையின் நிர்வாக உறுப்பினர் அனைவரையும் பாராட்டுகின்றோம். அதற்கு ஒல்லும் வகையான் உதவிபுரிந்து, ஒத்துழைக்கின்ற எல்லோரையும் பாராட்டுகின்றோம்.

சிறந்த முறையில் நம்நாட்டில் தொண்டாற்றிவரும் இச்சபையின் பொன்விழா நடைபெறத் திட்டமிட்டிருப்பதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி எய்துகின்றோம், பொன் விழா இனிது நிறைவெய்தவும், இச்சபையும், அதன் கல்லூரியும் இவை மூலம் நடைபெற்றுவரும் இதர தொண்டுகளும் எல்லா வகையாலும் சிறந்தோங்கி வளர்ந்து, பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்து, தமிழையும் சைவத்தையும், தமிழனது பண்பாட்டையும் வளர்த்து, மேன்மை கொள் சைவ நீதி உலகெங்கணும் விளங்கும்படி செய்விக்கத் திருவருள்பாலிக்குமாறு எல்லாம்வல்ல எம் அங்கயற்கண்ணிபங்கனும் ஆலவாய் அண்ணலைப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றோம்.

ஸ்ரீ ஞா.

Dr. M. RAJAMANIKKAM,
M. A., L. T., M. O. L., Ph. D.
Reader in Tamil,
University of Madras

15, METTU STREET.
MADRAS-1.

வாழ்த்துரை.

மேலேச்சிவபுரி—சன்மார்க்க சபை பாண்டிய நாட்டில் கடந்த ஐம்பது ஆண்டுகளாக சிறந்த முறையில் தமிழ்த் தொண்டு செய்து வந்துள்ளதை நாட்டில் பிறந்த நன்மக்கள் அறிவர். மதிப்பிற்குரிய என் நண்பர் திரு. வ. பழ. சிதம்பரம் செட்டியார் அவர்களும், அவர் தம் குடும்பத்தாரும் இதனைத் தம் உயிரெனப்பேணி வருகின்றனர். சபையின் சிறப்பு உறுப்பாக நடைபெற்று வரும் கணேசர் செந்தமிழ்க் கல்லூரி போதிய அடிப்படைப் பொருள் இல்லாமல் இருக்கின்றது. செட்டிநாட்டுப் பெருமக்கள் இக்குறையை விரைந்து நீக்கவேண்டு மென்பது எனது வேண்டுகோள். தாய்மொழித்தொண்டே தாய் நாட்டுத் தொண்டாகும். நமக்கு நாமே செய்துகொள்ளும் நல்ல தொண்டாகும். தனவணிகப் பெருமக்கள் சிறிது மனம் வைத்தாலும் செல்வம் சேர்ந்துவிடும்.

பொன்விழா நடைபெறும் அளவிற்கு இச்சபையை வெற்றியுற நடத்தி வந்த பெருமக்கட்கு என் வாழ்த்தும் வணக்கமும் உரிய. பொன் விழா பொலிவுடன் நடைபெற இறைவன் திருவருளை வேண்டுகின்றேன்.

(ஒப்பம்.) மா. இராசமாணிக்கம்.

டாக்டர் மு. வரதராசன்
தமிழ்ப் பேராசிரியர்

செல்லம்மாள் தெரு
சென்னை-30
3—9—59

வாழ்த்து.

தங்கள் சபையின் பொன்விழா இனிது நிறைவேறுக. சபை ஆற்றிவரும் தமிழ்த்தொண்டு மென்மேலும் சிறப்புறுவதாக.

தங்கள் அன்புள்ள,
(ஒப்பம்.) மு. வரதராசன்.

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை

கருந்திட்டைக்குடி,
Karuntattamkudi P. O.
10—9—1959.

தங்குபுகழ்ச் செந்தமிழ்க்கோர் அன்பராகில்
அவர்கண்டீர் யாம்வணங்குங் கடவுளாரே!

அன்புடையீர்,

மேலைச்சிவபுரிச் "சன்மார்க்கசபை"யின் பொன்விழாக் கொண்டாடுவது குறித்து மகிழ்கின்றேன். சென்ற பலயாண்டுகளில் தமிழும் சைவமும் குன்றாது தழைக்கத்தக்க தொண்டுகளைத் தங்கள் அவை ஆற்றியுள்ளமையை இந்நானிலம் நன்கறியும். இவ்வவை சிறந்த பெரும் புலவர் பலருக்குப் புகலிடமாய் விளங்கியது; இக்காலச் சிறந்த புலவர் பலர் வெளிவர முதலாக நின்று விளங்கியது.

இப்பேரவை பல்லாற்றானும் சிறத்தற்குத் துணையாகவிருந்த பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்களொடு நம் கரந்தைத் தமிழ்ச் சங்கம் பெருந் தொடர்பு கொண்டிருந்தது. தமிழ்ச் சங்கத்தின் நீண்டகால அமைச்சராகவும், கரந்தைக் கவியரச ராகவும் விளங்கிய R. வேங்கடாசலம் பிள்ளையவர்களும், தலைவர் தமிழ்ப்புரவலர் திரு. த. வே. உமா மகேசுவரம் பிள்ளையவர்களும் சன்மார்க்க சபையுடன் தொடர்புடை யவராக இருந்தனர் என்பது நினைத்தற்குரியது.

நல்ல தமிழ் நூல்களை வெளியிடல், பேரறிஞர்களைக் கொண்டு விரிவுரை யாற்றச்செய்தல், புலவர் கல்லூரியொன்றைத் தோற்றுவித்துத் தமிழ்க் கல்வியை வளர்த்தல் போன்ற செயன்முறைகளைத் தொடர்ந்து இப்பேரவை நிகழ்த்திவருகின்றது. மேற்குறிப்பிட்ட செயன்முறைகள் தமிழுக்குச் செய்யும் தக்க தொண்டுகளென்பதில் ஐயமில்லை. இவ்வவை பொன்விழாக் கொண்டாடுவதோடு வையிரவிழா முதலிய பல விழாக்களையும் கொண்டாடித் தமிழ் கூறும் நல்லுலகிற்றிகழப் பல்லாண்டு கூறுகின் றேன்.

அன்பன்,
சி. வேதாசலம்.
அமைச்சர்.

உ

முருகன் துணை.

சிவத்திரு சிவஞான பாலய அடிகள் திருவடி வாழ்க
ஸ்ரீமத் ஞான இராசதானியான பொம்மையப்பாளையம் திருக்கயிலாய பரம்பரைப்
பெரியமடம் சிவகஞ்சி மயூராசல நிவாச யதீச்சுர கர்த்தரான
மயிலம் தேவஸ்தானம் ஆதீன பரம்பரைத் தர்மகர்த்தத்துவம்
பதினெட்டாம்பட்டம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் மகா சந்நிதானம்
அருளிய

ஆசி மொழி

உயிர்களை உய்விக்க எழுந்த நல்லடியார்களைப் போல சன்மார்க்க சபைகளும் இயங்குகின்றன. மேலைச்சிவபுரியில் ஐம்பது (50) ஆண்டுகளுக்குமுன் எழும்பிய இச் சன்மார்க்க சபை செய்துள்ள நலங்கள் பல. பல ஆண்டுகளுக்கு முன் இருந்தது ஞாயிறு என்ற காரணத்தால் இன்றைக்கு உள்ள அஞ்ஞாயிற்றைக் கிழ ஞாயிறு என்று கூறுவாருளரோ? இன்று தோன்றும்பொழுதும் இளஞாயிறு என்றே கூறுவர். முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொருளாய் பின்னைப்புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றியனாய் உள்ள பெருமானைப்போலவே இச்சபை காலத்தாற் பழையதாய், கருத்திலும் தொண்டாற்றுதலிலும் புத்தம் புதிய தாய் இன்று பூத்த புதுமலர் என மணம் வீசி விளங்குகின்றது.

சிவநெறி வளர்க்கும் சீலத்தையும் அதனை நன்கு போற்றிப் பயன் கோடற்குரிய தமிழ்ப்புலமை அறிவையும் வளர்த்து வருகிறது இச்சபை. நல்ல மனமும் சபையினிடத்து மாறாத பற்றும் உள்ள பெரியோர்கள் இதைத் தோற்றுவித்து. வளர்த்தார்கள். அவர்கள் உள்ளம் என வளர்ந்து தள்ளரிய பெருந்தொண்டை இத்தரணியெலாம் செய்து ஐம்பதாம் ஆண்டு நிறைவு விழாவை இச்சபை இன்று எய்தியுள்ளது.

சமுதாயப் புரட்சியால் சிக்கல்கள் நிறைந்துள்ள எதிர்காலத்தில் தமிழ்நாட்டில் சபை ஆற்றவேண்டிய பணிகள் பல உள. சமய உண்மைகளை நாடெங்கும் உள்ள மக்கள் உணரும்படிச் செய்தல், சைவ சமயத்தின் அரும்பெருங் கருத்துக்களை இளைஞர்களின் உள்ளங்களில் ஊன்றிக் காத்தல், சைவ சமய ஆராய்ச்சி அரங்குகளை நிகழ்த்தல், சமயத் தொண்டர் பலரை உண்டாக்கி நாடெங்கும் தக்க முறையில் சைவசமயப் பிரசாரம் செய்தல் முதலிய பற்பல தொண்டுகள் எதிர்காலத்தில் செய்யப்பெற வேண்டும். அதற்கு வேண்டிய ஆற்றலும், ஆதரவும், வாய்ப்பும் சபைக்கு நிறைந்துள்ளன.

சன்மார்க்க சபையும், சபையைக் காத்து, இயக்கி, வளர்த்து வருகிற சபையோர்களும் தமது தொண்டினைத் தளராது இயற்றி வைர விழாக்கள் பல கொண்டாடி, எல்லா நலனும் பெற்றுப் பல்லாண்டு வாழ, தில்லைஅம்பலத்துத் திருக்கூத்தப் பெருமானது திருவருளையும், மயிலம் முருகப் பெருமான் திருவருளையும், ஆதி சிவஞான பாலய சுவாமிகளது திருவருளையும், இட்டலிங்கப் பெருமான் திருவருளையும் வாழ்த்துகிறேன்.

வாழ்க சிவநெறி — வாழ்க வையகம்.

L. ALAGUSUNDARAM CHETTIAR

PASUMALAI P. O.
MADURAI-4

14—9—1959.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் மேலைச்சிவபுரி வ. பழ. சா. குடும்பத்தாரால் சன்மார்க்க சபை தோற்றுவிக்கப் பெற்று இத்தனை ஆண்டுகளும் சிறந்த முறையில் நடைபெற்று வருவது எல்லோருக்கும் மகிழ்ச்சியைத் தருகிறது. தமிழ்த் தாய்க்கு இச்சபை செய்துள்ள தொண்டு மிகவும் போற்றத் தக்கது.

கணேசர் செந்தமிழ்க் கல்லூரி மிகவும் நல்ல முறையில் நடைபெற்று மாணவர்களுக்கு தமிழ்க் கல்வி பயிற்றுவித்து வருவதை நான் நன்கு அறிவேன். செந்தமிழ் நூல்கள் பல இக்கல்லூரி வெளியிட்டிருக்கிறது.

தமிழ் மொழிக்கு மென்மேலும் தொண்டாற்றுவதற்கு மகா மகோபாத்யாய பண்டிதமணி கதிரேசன் செட்டியாரவர் போன்ற பெரும் புலவர்களின் பெருந்துணையுடன் தோற்றுவிக்கப்பட்ட இச் சபை வளர்ந்தோங்க வேண்டுமாய் விரும்புகிறேன்.

(ஓப்பம்.) லெ. அழகுசுந்தரம் செட்டியார்.

A. M. M. MURUGAPPA CHETTIAR

"CHAMUNDESWARI BAUGH"
SANTHOME HIGH ROAD,
SANTHOME, MADRAS-4.

12—9—1959.

26-9-59ம் தேதியன்று நடைபெறவிருக்கும் சன்மார்க்க சபையின் பொன்விழாவைபம் குறித்து தாங்கள் எழுதிய 1—9—59ம் தேதிய கடிதம் கிடைக்கப்பெற்றேன். மிக்க சந்தோஷம்,

மேலைச்சிவபுரியில் 1909ல் வ. பழ. சா. குடும்பத்தாரால் தோற்றுவிக்கப்பட்ட இந்த சன்மார்க்க சபையென்னும் தமிழ்க் கல்விக் கழகம் மகாமஹோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியாரவர்களின் பெரும் துணையுடன் நன்குவளர்ந்து முன்னேறியுள்ளது. இச்சபை தமிழ் நாட்டிற்குச் செய்துவரும் சமயப்பணியும், நம் தாய்மொழியாகிய தமிழ் மொழிக்கும், கல்வியறிவுக்கும், தமிழ் நூல்கள் வெளியீட்டின் மூலமும் செந்தமிழ்க்கல்லூரி மூலமும் செய்து வரும் தொண்டும் மிகவும் போற்றுதற்குரியதாகும். இச்சபையின் 50 வருஷத்திய உயரிய சேவையைக் குறிக்கும் இந்தப்பொன் விழாவை மிகச்சிறப்பாகவும், பெருமையான முறையிலும் தகுந்த வகையில் கொண்டாடவேண்டியது மிக்க பொருத்தமே.

இச்சன்மார்க்க சபையின் உயரிய சேவைகள் மென்மேலும் அபிவிருத்தியடைந்து, மக்களுக்குப் பெரிதும் பயன்படவேணுமாயும், இச்சபை மென்மேலும் வளர்ந்து தமிழ்நாட்டில் உயர்வடைய வேணுமாயும் வாழ்த்துவதுடன், பொன்விழா வைபமும் இனிது நடைபெற வேணுமாய் வாழ்த்துகிறேன்.

தங்கள் அன்புள்ள,

(ஓப்பம்.) முருகப்ப செட்டியார்.

வாழ்த்து.

(விருத்தம்)

கா. பெரியகருப்பன் செட்டியார்,
பழைய மாணவர், சன்மார்க்கசபை மேலைச்சிவபுரி.

ஆங்கிலமோ கம்மிகவும் அதிகரித்த ஐம்பதாண் டுகளின் முன்னர்ப்,
பாங்குபெறும் தமிழ்சைவப் பயிர்வளர்த்த பெருமையெல்லாம் பாண்டி
நாட்டில்
ஓங்குபுகழ் தருமேலைச் சிவபுரிச்சன் மார்க்கசபை ஒன்றுக் கேயாம்
ஈங்கிதினை மறுப்பவர்யார் எவருமிலர் எனத்துணிவாய் இயம்ப லாமே 1

அத்தகைய சன்மார்க்க சபையமைத்தார் திருப்பெயர்கள் யாதோ என்னில்
உத்தமராம் சாமிநா தப்பெரியார் நற்றவத்தால் உதித்த மைந்தர்
நத்துபுகழ்ப் பழநியப்பர் அவர்துணைவர் நல்லண்ணு மலையார் எங்கள்
சித்தமகிழ் கதிரேசப் பண்டிதமா மணியென்றுல் சிறப்புத் தானே 2

சிந்தனைக்கு நல்விருந்தாய்த் திகழ்மேலைச் சிவபுரியாம் சீரூர் நாடிப்
பைந்தமிழை நன்குகற்றுப் பண்புயர்த்தும் விருதுபெற்ருேர் பல்லோர்
ஆவார்
எந்தஊர் தனில்அலுவல் ஏற்ருலும் அவர்களின்நல் இதயத் துள்ளே
முந்திநிற்கும் நினைவுசன் மார்க்கசபை தானென்று மொழியலாமே 3

பூமகளுக் கினிப்பூட்டும் பொன்விழா எங்கள்சபை பூண்பதாலே
நாமகளும் பூமகளும் நயந்தொன்ருய்க் கூடிநலம் பாலித் தோங்கித்
தேமதுரத் தமிழ்முழக்கம் செகமனைத்தும் பரவஅருள் செய்யும் வண்ணம்
மாமகிழ்வாய் அவரிருவர் மலரடித்தா மரையை யென்றும் வழுத்துவோமே 4

வான்கொண்ட புகழ்மணக்க வையமெலாம் சன்மார்க்க சபையை
வாழ்த்தத்
தான்கொண்ட பெரும்பணியில் சலியாமல் செயல்புரியும் தக்கார் கூடத்
தேன்கொண்ட கலைவளரும் திருச்சபையீ தாகுமெனச் சிறப்புற்ருேங்க,
ஆன்கொண்ட ஐந்தாடும் அமலனருள் அமைந்துபல ஆண்டு வாழ்க. 5

வாழ்த்து.

வித்துவான் கு. சங்கரநாராயண பிள்ளை
விரிவுரையாளர் :
கணேசர் செந்தமிழ்க் கல்லூரி
சன்மார்க்க சபை, மேலைச் சிவபுரி.

1. பூதலத் தோர்முன் புரிந்தநற் றவமோ
புலவர்க ளன்பு பொருந்திய தவமோ
காதலர் தமிழர் கருதிய தவமோ
கவின்பெறு மேலைச் சிவபுரி நகர்க்கண்
மேதகு பழநி யப்பரோ டண்ணு
மலைகதி ரேச மெய்ம்மைசேர் அறிஞர்
ஓதுசன் மார்க்க சபைதனை நிறுவி
ஒண்டமிழ் வளர்க்க உற்றநற் பேறே

2. பேறிதன் மேலே வேறெதும் உண்டோ
பிறங்கிடு கல்விப் பெருந்துணை எவர்க்கும்
வீறுகொள் வாழ்க்கை தந்ததின் மேலும்
வீடுறு நெறியும் தந்திடும் என்றே
கூறிடும் நமது தமிழ்மறை போலக்
குவலயத் துண்டோ பேதமில் நூலே
ஏறிடும் புகழ்சால் அதன்பயன் பெறுதல்
ஏற்றநற் றவமே அன்றிவே றுண்டோ!

3. உண்டிவ ணுலகம் தனக்கென அன்றி
பிறர்க்குரி யவரால் எனும் உயர் உண்மை
கொண்டிவ ணறங்கள் பலப்பல இயற்றிக்
குலவிய அறிவின் திறமதி னாலே
எண்டிசை புகழும் தண்டமிழ் நெறிதான்
எழுமையும் சென்று உதவுக என்றே
கண்டிவண் தமிழும் சைவமும் வளர்க்கக்
கருதிய செயல்தான் செயற்கருஞ் செயலே

4. செயற்கருஞ் செயலே செய்தஅப் பெரியோர்
செயலினைப் போற்றல் தங்கட னென்றே
வியத்தரு முறையே அவர்செயல் வளர்த்து
மேதினி எங்கும் மேன்மைசால் புலவர்
உயத்தகு நெறியைப் பரப்பிடச் செய்தே
ஒள்ளிய புகழ்கொள் அவர்மர பினராம்
மயக்கறு கல்வி கேள்விநற் செயலால்
வல்லவர் வளர்ந்து வாழியர் பெரிதே !

5. வாழியர் சாமி நாதராம் தலைவர்
வாழியர் சிதம்பர மாண்புறு துணைவர்
வாழியர் இவர்தம் சோதரர் சாமி
நாதரோ டிளவல் மற்றுமுள் ளோரும்
வாழியர் நலஞ்சேர் நாகப்ப வள்ளல்
வாழிபொன் விழாக்கொள் சன்மார்க்க
நற்சபையும்
வாழியர் மற்றும் சபைத் தொடர் புடையோர்
மதியணி வேணிப் பிரானரு ளாலே.

வாழ்த்துப் பா.

கி. வா. ஜகந்நாதன்,
ஆசிரியர் ''கலைமகள்''

புலமையும் பண்பும் நிறைதரும் பெரியோர்
பொற்புற வாழ்தரு பதிநன்
னிலைமையி லுள்ளோர் அறஞ்செயும் நகரம்
நிறைசிவ பத்திசேர் வார்ஊர்
கலைஞர்சார் மேலைச் சிவபுரி யதனில்
கவினிய சன்மார்க்க சபைதான்
புலபல ஆண்டு நிலவிப்பொன் விழவைப்
பாரிக்கச் சிறந்தது கண்டீர். (1)

பண்டித மணிமா மாஉபாத் தியாயப்
பருணிதன் கதிரேச வணிகன்
கொண்டஆர் வத்தின் கொழுந்தெனத் தமிழ்த்தாய்
குளிர்நட மிடுசபை இதுவென்
றெண்டிசை யோரும் புகழ்தர ஓங்கும்
இனியசன் மார்க்கநற் சபையின்
தொண்டினைச் சொல்லச் சொற்குவை
உண்டோ? சுலவிய பயன்மிகப் பெரிதே. (2)

பற்பல புலவர் இச்சபை வந்து
பயில்புலச் சிறப்புடை உரைகள்
அற்புத மாக நவின்றனர்; தமிழை
ஆழமாய் ஓதிநன் னூல்கள்
கற்பதற் காக வந்துமெய்ப் புலமை
கமழமே லோங்கினர் பலரே
பொற்புறப் பயிற்றி நலந்தந்த பெரியோர்
புகழினைக் கூறுதல் எளிதோ? (3)

இத்துணைச் சிறப்பு மேவிய சபைபொன்
விழாவினை இனிதுற நிகழ்த்தி
உத்தமர் போற்ற மணிவிழா ஆதி
ஒன்றுென்று நடைபெற ஓங்கி
முத்தமிழ் வளர்க்கும் பண்ணையாய்த் தமிழ்த்தாய்
முழுவருள் தாங்குமா லயமாய்
எத்திசை யும்சீர் மணக்கமேன் மேலே
எழிலுறப் பரந்துவா ழியவே.

பண்டித அ. முத்துசாமி பிள்ளை,
தலைமைத் தமிழாசிரியர்
தூயமரியன்னை உயர்நிலைப் பள்ளி
மதுரை.

வாழ்த்து

நிலைமண்டில ஆசிரியப்பா

திருமகள் கலைமகள் மருவிவீற் றிருக்கும்
அருமைப் பதியெனப் பெரியவர் புகலும்
மேலைச் சிவபுரி மேவிய புரவலன்;
நூலைப் பயின்ற நுண்மதிப் புலவர்தம்
உள்ளக் கருத்தை உணர்ந்தவர்க் குதவும்
வள்ளற் றன்மை வரையாது படைத்தோன்;
உமையொரு பாகத்(து) இமையவர் தலைவனை
அமைவொடு பணியும் அன்புடைக் குரிசில்
தமிழ்மொழிப் பற்றும் தமிழினப் பற்றும்
தமிழகப் பற்றும் சால்புறக் கொண்டோன்;
வருந்தி வந்தோர் அருந்துயர் களைந்தவர்
திருந்துமுகம் காணும் செம்மனச் செல்வன்;
அருளும் அன்பும் அறமும் பொறையும்
தெருளும் அறிவும் செறிகுணக் குன்று;
பழனி யப்பவேள் பார்வையில் தோன்றி
மழலை பேசி மாண்புற வளர்ந்தும்,
முன்னவன் கருத்தை முற்றுற முடிக்கும்
பின்னவன், சொன்னசொற் பிறழா; வாய்மையன்;
ஈதலும் இசைபட வாழ்தலும் இரண்டும்
ஊதியம் உயிர்க்கென உணரும் கொள்கையன்;
பண்ணார் தமிழிற் பற்றுமிக் குடையோன்
அண்ணா மலையெனும் அண்ணல்; தன்னிரு
கண்ணெனப் போற்றிக் கருத்துடன் காக்கத்
திண்ணிய இளமைச் செருக்குடன் திகழ்ந்தும்,
அருந்தமிழ் பயிலும் ஆர்வம் மிகமிகப்
பொருந்திய மாணவர் வருந்தாது கற்க
உண்டியும் உடையும் உறையுளும் தந்து
தண்டமிழ்க் கல்வியைச் சால்புற ஊட்டியும்,
மன்னிய பெருமை மண்ணியல் சிறுதேர்
சொன்னயங் கெழுமிய சுக்கிர நீதி
போன்ற நூல்களைப் புலமைமிக் கூர்ந்த
சான்றோர் பலரும் ஊன்றிப்படித்துப்
பயன்பெறும் வண்ணம் பண்டித மணியால்
வியன்றமிழ் மொழியில் வெளிவரச்செய்தும்,
இலக்கிய நயங்களை இனிமை ததும்பப்
பலப்பல புலவரால் துலக்கியும், உயர்ந்த
சைவ சமய சாத்திர உண்மையை
எவ்வகை யோரும் எளிதின் அறிய
நல்ல முறையில் நாடெலாம் பரப்பியும்,
ஒல்லும் வகையால் உறுபணி புரிந்தும்,
அல்லும் பகலும் அரனடி மறவா
நல்லோன் சாமி நாதன் தலைமையில்
ஒள்ளறி வுடையோர் உவந்து வாழ்த்தெடுப்ப
வெள்ளி விழாவினை மேதகப் பூண்டும்,
செந்தமிழ்ச் செல்வன்; திறமைசால் பெருமகன்;
முந்தையோர் சென்ற முறைமையின் வழாது
வாணிகம் புரிந்து வளர்பொருள் ஈட்டிப்
பேணியப் பொருளைப் பெரிதும் பொதுநலப்
பணிக்கே செலவிடும் பண்புகொள்ளுந்தன
வணிகர் குலந்தரும் மாசிலாப் பெருமணி;
சிதம்பர நாதன்; சீரிய ஆட்சியில்
இதம்பெற விளங்கியும், இடைவிடா முயற்சி யால்
பெரும்பொருள் திரட்டிப் பிறர்நலம் பேணும்
அருங்கலை விநோதன் அன்பின் உறைவிடம்
ஈகையும் இன்சொலும் எளிமையும் கொண்ட
நாகப்ப வள்ளலின் நல்லாதரவாற்
பொன்விழாக்கொண்டும் பொலிதரு கின்ற
சன்மார்க் கப்பெயர் தாங்கிய பேரவை
நன்மார்க்கத்தவர் நாடொறும் புகழப்
பொன்னம் பலத்தில் நன்னடம் புரியும்
முன்னவன் அருளாற் பன்னலம் பெற்றுக்
கண்டினும் இனிய தண்டமிழ் மொழிக்குத்
தொண்டுகள் மேலும் தொடர்ந்து செய்துபூ
மண்டலமீமிசை மன்னிவா ழியவே!

நேரிசை வெண்பா

பொன்விழாக் கொண்டு பொலியுஞ்சன் மார்க்கசபை
தன்னிகரில் லாது தழைத்தோங்கி மன்னுக! நம்
ஆசிரியர் மாணவர்கள் ஆட்சிக் குழுவிலுளார்
காசினியில் வாழ்க கதித்து.

வேந்தன்பட்டி திருவள்ளுவர் செந்தமிழ்க் கலாசாலை
ஆசிரியர்

திரு. வெ. வேங்கடராம ஐயரவர்கள்

வாழ்த்துப்பா.

செய்யசௌ மியவாண்டு சித்திரைத் திங்களில்
திகழுமுப் பத்தோன் றினில்
தெய்வமொழி யானதமிழ் சைவநெறி யானதிரு
செவ்வனம் புவியில் வளர
ஐயனிங் கரமூர்த்தி திருவருள் துணைகொண்
டமைத்தசன் மார்க்க சபைதன்
அருமைமிகு பொன்விழாப் பெருமைதரு நிறைவெய்தி
ஆன்றோர்தம் ஆசி பெறவும்
வையமீ தித்திருப் பணிபுரியும் அன்பர்கள்
வாழையடி வாழை யெனவே
வளரவரு செல்வமும் ஒளிரவரு கீர்த்தியும்
வாணாளும் நன்று பெறவும்
துய்யனே! சிவகாமி மகிழவரு மெய்யனே!
சொல்லுமிச் செய்தி யெல்லாம்
தோடுவார் செவிகொண்டு பீடுசால் வரமுதவு
துரிய நடராச மணியே!

உ

கணபதி துணை.

மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபைப்

பொன்விழா வாழ்த்து.

பாரியுயர் அருளரசன் பாவேந்தன் கபிலனிவர்
ஒருயிர்வாழ் ஈருடல்போல் ஒன்றுபெருங் கேண்மையினர்
மாரியினும் உயர்கொடையும் மாண்பும்மிகும் இந்நாட்டுள்
வீறுபெற நம்தமிழ்த்தாய் வீற்றிருக்கும் அரியணையாய்
ஏறுபெரு வளங்கெழுமும் எழில்மேலைச் சிவபுரிக்கண்
சாறுயர்பொன் விழாகொள்ளும் சன்மார்க்க சபையணங்கே

எழும்பொழுதே இருள்பருகி ஒளியுதவும் இளங்கதிர்போல்
கொழுங்கதிராம் தமிழ்க்கலையால் குலவுசிவந் தனைவிளக்கும்
தொழுந்தகைய பெருந்தாய் நீ துலங்கைம்ப தாண்டுகளாய்ச்
செழும்பணிசெய் பெருமிதத்து செம்பொன்விழா நாளில்யாம்
இழுமெனுமென் மொழிமலர்கொண் டிணையடிகள் தொழுதேத்தி
விழுமியவுன் மெய்ப்புகழை விழைந்தினிது வாழ்த்துதல்கேள்

அரியைஉனை பழநியப்ப ரான்றகதி ரேசர்பெற
செறிவுதிகழ் தரவளர்த்தார் சீரண்ணு மலையவரே

பாடுபெறு கதிரேசன் பயந்துன்னை தந்திருக்க
நாடுபுகழ் பண்டிதமா மணியவனைத் தந்தனைநீ

வேற்றவர்தம் ஆட்சியினுல் விழியிருந்தும் குருடரெனச்
சாற்றரிய தமிழ்மறந்த தடுமாற்றம் போக்கினையே

மெய்ம்மொழிநூற் புலவர்கள்செய் விளங்குபொரு ளுரைப்பொழிவால்
தெய்விகமாச் சிவப்பயிர் நீ செழிக்கவளர்க் கின்றனையால்

செந்தமிழ்க்கல் லூரியினிற் றேர்ந்தொளிரும் புலவர்களாற்
பைந்தமிழின் நல்லுணர்வு பாரெங்கும் பரப்பினை நீ

முந்துதமிழ் நூலகத்தால் மொழிபெயர்ப்பு நூல்களினுற்
சந்ததமும் அழியாத தனிப்பெருமை பெற்றுயர்ந்தாய்

தீந்தமிழிற் றலைசிறந்தோர் செவ்வியநற் சொன்மலராற்
போந்திண்டுன் னடிபோற்றிப் புகழாதா ருளரோதான்

அலகில்புக ழாரணங்குன் னரியசெயல் பாராட்டி
உலகுபுகழ் விழாவாற்ற உளங்கொண்டார் உறுப்பினர்தாம்

அதனால்

முரசதிர்ந்தன முழவியம்பின முறைதிரண்டன ருலகமெங்குளோர்
பரசுசெந்தமிழ் அகல்விசும்பினிற் பரவியெங்கணு மெதிரொலித்தது
மாலைதாழ்வன மணியொளிர்வன மன்னுபேரெழில் மண்டபம்
நீலவானுறு கோலமாமதி நிகரைவென்றது பேரவை

இதனுள்,

கோவேந்தர் சூழ்ந்திருக்க நாவேந்தர் வாழ்த்திசைப்பத்
தேவேந்தாய் நீகொள்விழா சிறப்புமிக மிகவினிதால்
வாரியுவாக் காட்சியினால் மகிழ்சிறந்து பொங்குதல்போல்
சீரியபொன் விழாமகிழ்ச்சி சிறந்ததனை விஞ்சியதே

மேலும்,

வானகத்துப் புலவரெல்லாம் மல்குகவென் றூர்வாழ்த்து
பாநயத்துப் பண்டிதமா மணியிசைத்தார் பல்லாண்டு
வள்ளல் பழநியப்பர் வளர்கவென் றூர்பணி
தெள்ளியவண் ணமலையார் திரள்கவென் றூர்நிதி
அரசன் சண்முகனார் ஆர்கவென் றூர்தமிழ்
உறவுகந்த சாமியவ ருயர்கவென் றூர்புகழ்
விபுலா னந்தரவர் வெல்கவென் றூர்நெறி
சாமிநா தையர்வளந் தழைக்கவென் றூர்சபை

என ஈண்டு,

நின்விழா எம்விழா வாகத் திளைக்கும்
அன்பராம் எங்களை யாதரித் துதவும்
உலையா முயற்சியால் உன்செயற் குழுவின்
தலைவர் துணைவர் செயலர் உறுப்பினர்
யாவரும் வேண்டிய வேண்டியாங் குதவி
மேவருள் கணேசர் காப்ப
வாழி யூழிநீ வழிவழி சிறக்கவே!

மேலைச்சிவபுரி,
3—10—'59.

ஆசிரியர்கள்,
க. செ. கல்லூரி.


தமிழ் வாழ்க.

அன்பு-கருணையானந்தா
பேராசிரியர்

மதுரைத் தமிழ்ச் சங்கக் கல்லூரி

உவகை வாழ்த்து.

பூவுல கெங்கும் போற்றிடும் பண்பால்
மேவிடும் புகழ்சால் மேன்மைத் தமிழீர் !
செட்டிமார் நாட்டில் சிவபுரி என்றோர்
பட்டணங் காண்பீர் பாங்கெலாம் பூண்பீர்
தமிழும் சைவமும் தழைத்திட மதுரைத்
தமிழ்ச்சங் கத்துடன் தக்க போழ்தினில்
வளர்ந்திட இச்சபை வைத்தநம் வள்ளல்
பாங்குடைச் செம்மல் பழநி யப்பனே
ஆங்கவன் இளவல் அண்ணல் குறிப்பினன்
அருட்சிவ நேசன் அண்ணா மலையான்
ஈங்கிவ ருயிர்க்கோ ரின்பத் துணையாய்த்
தாங்கிய தமிழ்வளர் சன்மார்க் கசபைக்
கணேசர் செந்தமிழ்க் கல்லூ ரிப்பொன்
விழாவின் காட்சி வெற்றியைக் காண்மின் !
பொன்னுல் புலவரைப் போற்றுதல் காண்மின் !
கணியன் புலமை கண்டிடப் பண்டித
மணியன் போந்தான் மாபெருஞ் சபைக்கோர்
அணியன் அவனுளத் தடமே மலர்ந்த
தமிழ்மணத் தாமரை சன்மார்க் கசபை
தமிழகப் புலவர் தமிழ்க்கதிர் மணிகள்
எத்தனை எத்தனை இன்பத் தமிழரின்
அறிவின் நிலமாய் அமைந்த திச்சபை
தக்க சால்பினன் சாமி நாதனும்
அன்னேன் பின்னேன் அருமைக் குரிசில்
சிதம்பர வேளாம் திருவருட் டுணையால்
கண்ணிமை என்னக் காத்திடுஞ் சபையே
அன்பீர் புலவீர் அகிலத் தமிழீர் !
தாயீர் யாமெலாந் தாங்கிடுந் தமிழ்ப்பணி
புரிந்திடக் கண்டோம் பொன்விழாக் கண்டோர்
மணிவிழாக் கண்டிட மகிழ்ந்து வாழ்த்துதும்
தமிழகச் சார்பில் சபைப்பணி ஓங்கிட
எவரும் வாழ்த்துதும் இறைஞ்சி வாழ்த்துதுமே.



உயர்திரு. அண்ணல்
வ. பழ. சா. பழநியப்ப செட்டியார் அவர்கள்
சபையை நிறுவிய முதல் தலைவர்.

(1873—1912)



உயர்திரு. இளவல்
வ. பழ. சா. அண்ணுமலை செட்டியார் அவர்கள்
சன்மார்க்க சபையின் இரண்டாவது தலைவர்.

(1876—1925)



உயர்திரு, மகாமகோபாத்தியாய, பண்டிதமணி,
முதுபெரும் புலவர், மு. கதிரேசச் செட்டியார் அவர்கள்
சபையின் தோற்றத்திற்கு உறுதுணைவர்.


(1881—1953)



உயர்திரு. பழ. சிதம்பரம் செட்டியார் அவர்கள்

க. செ. கல்லூரி நடைமுறைச் செயலர், (Correspondent)

Proprietor, Central Paper Mart, Madurai, Trichy & Madras.



சன்மார்க்க சபைக் கட்டிடம் தோற்றம் 1911)

கணேசர் செந்தமிழ்க் கல்லூரி



கணேசர் செந்தமிழ்க் கல்லூரித் தொடக்கப்பள்ளி

(தோற்றம் 1956)



உயர்திரு. ஆ. நாகப்ப செட்டியார் அவர்கள்,
சன்மார்க்கசபைச் செயலாளர், க. செ. கல்லூரிக்குழுத் தலைவர்,
Managing Director, India Leather Corporation, Madras.

சபையின் ஆட்சிக்குழு உறுப்பினர்கள்.



தலைவர்
பழ. சாமிநாதச் செட்டியார்.



துணைத் தலைவர்
பழ. சிதம்பரம் செட்டியார்.



செயலாளர்
ஆ. நாகப்ப செட்டியார்.



உறுப்பினர்
அ. சாமிநாதச் செட்டியார்.



உறுப்பினர்
அ. விசுவநாதன் செட்டியார்.

சபையின் ஆட்சிக்குழு உறுப்பினர்கள்.



உறுப்பினர்
Dr. வ. சுப. மாணிக்கனர்.



உறுப்பினர்
கு. பழ. சு. பழ. சுப்பிரமணியன்
செட்டியார்.




உறுப்பினர்
மு. கதி. சுப்பிரமணியன்
செட்டியார்.




உறுப்பினர்
கோ. இராமலிங்கனர்.
க. செ. கல்லூரி முதல்வர்.



உயர்திரு. பெருங் கொடைவள்ளல் டாக்டர்
ராஜா சர் மு. அண்ணுமலைச் செட்டியார் அவர்கள் K.T.L.L.D. D. Litt.



உயர்திரு, கனம் கே. காமராஜ் அவர்கள்
சென்னைமாநில முதலமைச்சர்
(பொன்விழாவைத் தொடங்கி வைத்து, புதுக் கட்டிடக் கால்கோள் செய்தவர்.)



டாக்டர் ராஜா சர் மு. அ. முத்தைய செட்டியார் Kt. B. A., D. Litt., M. L. A. அவர்கள்,
இணைவேந்தர் அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.
(பொன்விழாவின் முதல்நாள் தலைவர், சன்மார்க்கசபையின் முன்னாள் தலைவர்கள்
இருவர் உருவப்படத்தை திறந்துவைத்தவர்-புலவர் நால்வர்க்குப் பட்டம் வழங்கியவர்)

செந்தமிழ் மணி



டாக்டர். உயர்திரு.
ரா. பி. சேதுப்பிள்ளை B.A., B.L., D.Litt. அவர்கள்
தமிழ்ப் பேராசிரியர், சென்னைப் பல்கலைக்கழகம்
(பொன்விழாவின் இரண்டாம்நாள் தலைவர்,
அரசஞ்சண்முகனர் படத்தைத் திறந்துவைத்து,
பொன்விழா மலரை வெளியீடு செய்தவர்.)



உயர்திரு. டி. எம். நாராயணசாமிப்பிள்ளை, M. A., B. L., அவர்கள்,
துணைவேந்தர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.
(ராஜா சர் மு. அ. அண்ணாமலை செட்டியார் படத்தைத் திறந்து வைத்தவர்.)

பெருந்தமிழ் மணி



உயர்திரு. தெ. பொ. மீனுட்சிசுந்தரம் பிள்ளை M.A., B.L., M.O.L. அவர்கள்
தமிழ்ப் பேராசிரியர், அண்ணுமலைப் பல்கலைக் கழகம்

பண்டிதமணி



பண்டிதவித்துவான்
முத்தமிழ் வித்தகர், பேராசிரியர்,
திரு. லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்,
Dean of the Faculty of Oriental Studies,
அண்ணாமலை பல்கலைக்கழகம்
(மு. ரா. கந்தசாமிக் கவிராயர் படத்தை திறந்து வைத்தவர்.)

முத்தமிழ் மணி



உயர்திரு
வித்துவான் மு. அருணசலம் பிள்ளை அவர்கள்
தமிழ் ரீடர் அண்ணுமலைப் பல்கலைக் கழகம்



உயர்திரு, வித்துவான் நல்லப்பரெட்டியார் அவர்கள்

(க. செ. கல்லூரியின் பழைய மாணவர்)

1948-ல் சென்னைப் பல்கலைக் கழக வித்துவான் தேர்வில்
ஆயிரம் ரூபாய் பரிசு பெற்றவர்.

தமிழாசிரியர், இந்து க்ஷத்திரியர் நாடார் உயர்நிலைப் பள்ளி, சிவகாசி

க. செ. கல்லூரிக்குழு உறுப்பினர்கள்.



தலைவர்
ஆ. நாகப்ப செட்டியார்.



செயலாளர்
பழ. சிதம்பரம் செட்டியார்.



உறுப்பினர்
லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்



உறுப்பினர்
Dr. வ. சுப. மாணிக்கனார்.




உறுப்பினர்
சி. ராம. இராமசாமி செட்டியார்



உறுப்பினர்
கோ. இராமலிங்கனார்.
க. செ. கல்லூரி முதல்வர்

பொன்விழாக்குழு உறுப்பினர்கள்.



தலைவர்
திரு. பழ. சாமிநாதச் செட்டியார்



துணைத் தலைவர்
திரு. ஆ. நாகப்ப செட்டியார்.



உறுப்பினர்
திரு. லெ. ப. கரு. இராமனாதன் செட்டியார்



உறுப்பினர்
Dr. வ. சுப. மாணிக்கனார்.




செயலாளர்
திரு. பழ. சிதம்பரம் செட்டியார்.



துணைச் செயலாளர்
திரு. கோ. இராமலிங்கனார்.



கணேசர் செந்தமிழ்க் கல்லூரி முடி நிலை (I & II) 1959-1960.
ஆசிரியர்களும் மாணவர்களும்.



கணேசர் செந்தமிழ்க் கல்லூரி முன்னிலை (I & II) 1959-1960
ஆசிரியர்களும் மாணவர்களும்

சன்மார்க்க சபையின் தொண்டு

[டாக்டர் வ. சுப. மாணிக்கம், எம்.ஏ., எம்.ஓ.எல்., பி.எச்.டி.,
தமிழ்ப் பேராசிரியர், அழகப்பா கல்லூரி.]

I

"சன்மார்க்க சபை வாழ்க; தமிழணங்கு நீடுழிதழைத்துவாழ்க" என்பது சோழவந்தான் அரசஞ் சண்முகனுர் ஐம்பது ஆண்டுகட்குமுன் பாடிய பொய்யா வாழ்த்து. அவ் வாழ்த்துப் பெற்ற சபை இடையருத் தமிழ்த் தொண்டு செய்து இன்று பொன்விழாக் கொள்ளும் வீறெய்தித் திகழ்கின்றது. சன்மார்க்கசபை பாரியின் பறம்பு நாட்டிற்கு உட்பட்டதும், அவன் இரவலர்க்கு வழங்கிய முந்நூறு ஊர்களில் ஒன்றெனக் கருதத் தக்கதும் ஆன மேலைச்சிவபுரிக்கண் சௌமிய சித்திரை 31-ம்நாள் (13-5-1909) நிறுவப்பெற்றது. இதனை நிறுவிய தோன்றல் இவ்வூர்ப் பெருங்குடி வணிகர் திரு. வ.பழ.சா. பழநியப்ப செட்டியார் ஆவார். நிறுவுதற்கு உறுதுணையான புலமைச் சான்ருேர்கள் மகா மகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார், சோழவந்தான் அரசஞ் சண்முகனுர், மதுரை மு. ரா. கந்தசாமிக் கவிராயர் ஆவார்கள். தமிழும் சைவமும் தழைத்து இனிதோங்க வேண்டும் என்ற குறிக்கோளோடு சிற்றூரின்கண் தோற்றிய இச்சபை, 'தான் சிறிதாயினும் தக்கார்கைப் பட்டக்கால் வான்சிறிதாப் போர்த்து விடும்' என்னும் உண்மைப்படி, புலமையும் பொருளும் சான்ற அன்பர்களின் செவிலிமையால் நிரம்பிய செயல்கள் ஆற்றி, இன்னும் ஆற்றுவான் நெடிது வாழ்கின்றது. மகா மகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள் ஐந்தினும் பதினறினும் இருபத்தைந்தினும் ஆக மும்முறை ஆண்டுத் தலைமை பூணப்பெற்ற தனிப் பெருமையுடையது இச்சபை. பண்டித மணியாரின் வடநூல் தமிழாக்கத்திற்கும், திருவாசகக் கதிர்மணி விளக்கத்திற்கும் ஊட்டம் தந்தது இச்சபை. பதினுயிரக்கணக்கான கேள்விச் செல்வர்களையும், ஆயிரக்கணக்கான கல்விச் சிறுர்களையும், நூற்றுக்கணக்கான புலமை இளைஞர்களையும், எண்ணத்தக்க நல்லாசிரியர்களையும் ஈன்றருளிய தாயகம் இச்சபை. தமிழ் இன்று ஆட்சி மொழியாகவும் கல்வி மொழியாகவும் விளங்கக் காண்கின்ருேம். தமிழில் உரை நடைகளும், மொழி பெயர்ப்புக்களும் பெருகக் காண்கின்ருேம். தமிழ் தழுவிய பள்ளிகளும், கல்லூரிகளும், நூலகங்களும், படிப்பகங்களும் இடந்தோறும் பூப்பக் காண்கின்ருேம். இன்னேரன்ன தமிழ் மலர்ச்சியெல்லாம் ஒருநாட் பயிரல்ல; ஓரேர் உழவனின் செயலல்ல; இற்றைத் தமிழ் மக்களின் தனித் தொண்டல்ல. நாம் சுவைக்கும் கனி முன்னேர் வித்திய விதையின் பயன்; நீருற்று முன்னுட் பெய்த மழையின் பயன். இன்று தமிழ் பெற்று வரும் செல்வாக்குக்கு எத்துணையோ ஆண்டுகட்குமுன் அடிகோலிய தொண்டர்கள் பலர்; ஆக்கம் செய்த கழகங்கள் பல. இவ்வுண்மை காலத்தால் மறையாதபடி வரலாறு நினைவுறுத்துகின்றது. அவ் வரலாற்றை அறியும் நமக்கு நன்றியுணர்வு பெருக வேண்டும்.

சன்மார்க்கசபை தோன்றிய இந்நூற்ருண்டின் தொடக்கத்துத் தமிழகத்துக் கழகங்கள் என இருந்தவை சில; அவற்றுள்ளும் தமிழ்ப் பணியை ஒரு குறிக்கோளாகக் கொண்டவை மிகச் சிலவே. பெருமை சான்ற தமிழின் அருமையறிந்தார் சிலர்; அவருள்ளும் அருந்தமிழினை வளர்க்க முன்வந்த செவிலிச் செல்வர் மிகச் சிலரே. தமிழ்க் கல்வி கல்வியாகாது; தமிழ்ப் புலவர் கற்ருேராகார் என்று மதி மருண்ட காலம் அது. அரசினர் காப்பும் இன்றிக் கல்வித் துறையாளர்களின் சார்பும் இன்றி, ஞாதியற்ற குமரிபோலத், தமிழ் தமிழகத்தும் புகலிடம் இழந்த காலம் அது. காமஞ் சான்ற தமிழ்மேல் ஐந்திணைக் காதல் கொள்ளாதே, காமஞ் சாலா ஆங்கிலத்துமேல் தமிழரெல்லாம் கைக்கிளைக் காதல் போக்கிய காலம் அது. இன்றுங்கூடத் தமிழ் ஒருபாற் படுகின்ற

அவமதிப்பை எண்ணுங்கால், ஐம்பது ஆண்டு கட்குமுன்,வீதிக்கு விலக்கான விதவைபோலத், தமிழ்க்குமரிபட்ட ஒதுக்குநிலை ஒருவாறு நம் மனக்கண்ணுக்குத் தோன்றும். இவ்வவலச் சூழ்நிலையில், தமிழ் காத்தோம்பச் சபை தோற் றினர், பொருள் வழங்கினர், புலவர்ப் போற் றினர் பழநியப்பர் என்பது தமிழ் வரலாற்றுப் பெருஞ்சாலையில் ஓர் ஆலமரம் அன்றோ !

II

சன்மார்க்க சபை தமிழ் பரப்ப மேற் கொண்ட முதல்வழி தமிழ்ச் சொற்பொழிவுகளை மக்கள் திரளாகக் கேட்கச் செய்தல். "கற்றில ணாயினும் கேட்க" "கற்றலிற் கேட்டலே நன்று" என்னும் அறிவுரைகள் சபையாரின் நன்னெறிக்கு வழி காட்டின. ஆண்டுதோறும் சபை விழா மூன்று நாள் நடைபெறும். வேற் றூரார் பலகற்றுலைவு நடந்தும் வண்டியூர்ந் தும் சோறு கட்டிக்கொண்டு வருவர். ஏறக் குறைய 1500 மக்கள் பலதிசைகளிலிருந்தும் வந்து குழுமுவர். இன்று போல் கூட்டத்தின் இடைநடுவே எழுந்தோடாது, இறுதி வரை அமரவிருந்து கேள்வித்தேன் பருகுவர். வந் தோர்க்கெல்லாம் செவி விருந்தோடு விருந் தும் ஊட்டுவர் சபையார். ஆண்டுப் பெருங் கூட்டங்களே யன்றித் திங்கட் கூட்டங்களும் அடிக்கடி கூடும். இங்ஙனம் முப்பதாண்டு வரை கேள்வி வாயிலாகத் தமிழ்ச்செல்வத்தைப் பரப்பிற்று இச்சபை. செட்டிமார் நாட்டு வட் டத்துத் தமிழ் வளமும் தமிழன்பும் பெருகிக் கிடப்பதைப் பலர் புகழ்வர். இந்நன்னிலைக்கு இப்பகுதிக்கண் முதலில்தோன்றிய சன்மார்க்க சபையே காரணமாகும். காரைக்குடி, தேவ கோட்டை, புதுவயல், கண்டனூர், பள்ளத்தூர், கொற்றமங்கலம், அரிமளம், இராயவரம், கானாடுகாத்தான், பனையப்பட்டி, உலகம்பட்டி, கோனாபட்டு, பட்டமங்கலம் எனப் பலவூர் மக்கள் சபையின் உறுப்பினர்களாகத் தொடக் கத்துச் சேர்ந்துள்ளனர். இச்சபையின் நடை முறையையும் நன்மையையும் அறிந்தவர்கள் தம் ஊர்களிலும் சபைகள் நிறுவினர்; பள்ளி கள் தொடங்கினர். சபை நாட்டைச் சேர்ந்த ஆண்களுக்கும் பெண்களுக்கும் நீரூற்றுப் போல் தமிழூற்றுப் பெருகிற்று. திருவிழாக் களுக்கு உறவினர்களை அழைப்பது போலச் சபை விழாக்களுக்கும் விருந்து சொல்வது ஊர்வழக்கமாயிற்று. கடவுள் வாழ்த்தில் "மூளைத்தானை எல்லார்க்கும் முன்னேதோன்றி" என்ற திருவாக்குக் கூறப் பெற்றமையால் இந்தப் பக்கங்களில் இச் சன்மார்க்க சபையே முதற்கண் தோன்றினமையும், சிவபிரானுக்கும் தமிழுக்கும் சம்பந்தம் உண்டு என்பதும், சங்கம் இருந்த இடமான பாண்டி நாட்டிலுள்ள ஒற்றுமையும் விளங்குகின்றன. 'நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி நற்கனகக் கிழி தருமிக்கு அருளினோன்காண்' என்ற திருப்பாசுரம் பெற்ற திருப்புத்தூரைச் சார்ந்தது இந்நகராத லால் தமிழ் வளர்தற்கு இதுவே தக்க இட மாகும்" என்பது டாக்டர் சாமிநாத ஐயரவர் கள் ஐந்தாம் ஆண்டு விழாவில் மொழிந்த பாராட்டுரை.

III

வயது முதிர்ந்தார்க்குக் கேள்வி வாயிலா கத்தான் அறிவூட்ட வேண்டும்; இளங் குழந்தைகட்கு முறையாகக் கற்பித்தல் நன்று; ஆதலின் முதியோர் தம் கேள்வி வளர்ச்சிக்குக் கூட்டங்கள் நடத்திய சபை, சிறுவர்களின் முறையான கல்வி வளர்ச்சிக்கு ஸ்ரீ கணேசர் செந்தமிழ் வித்தியாசாலை என்னும் ஒரு பள்ளியை நிறுவிற்று. பாலர் வகுப்பு முதல் சிறு வகுப்புகள் தொடங்கப்பட்டன. குழந்தை கட்குக் கட்டணம் இல்லை. கற்பலகைகளும், பாட நூல்களும், எழுது நூல்களும் அவர்கட்கு விலையின்றி வழங்கப்பெற்றன. ஆசிரியர் ஊதிய முதலான பல் செலவையும் சபையே பல்லாண்டு தாங்கிற்று. இத்தொடக்கப்பள்ளி யில் கசடறக் கல்வி எய்திய மாணவருள் நானும் ஒருவன். மேலைச்சிவபுரி வட்டாரத்து ஆண் பெண் பலர் எழுத்தறிவர்களாய் இன்று விளங்குதல் சபையின் ஒளியினால் ஆகும். சபைத் துணைத் தலைவரின் நன்கொடையால் தொடக்கப்பள்ளி இன்றுதனிக்கட்டிடம்பெற்று இலங்குகின்றது. இருநூற்றுக்கு மேலான

பிள்ளைகள் ஈங்குக் கல்விச் செல்வம் ஈட்டு கின்றனர்.

சிற்றிலக்கண இலக்கியங்களைப் பொது வாகக் கற்றுக்கொடுத்து வந்த சபை ஏழாவது ஆண்டு முதல் மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பிரவேச பால பண்டித வகுப்புகளுக்குப் பாடஞ் சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்தது. இப் பெரு வகுப்பு மாணவர்கள் உணவுதவி பெற்ற னர். சங்கப் பாட வகுப்புகள் இருபத்துமூன்று ஆண்டுகள் நடந்தன. பின்னர்க் காலமதிப்பிற் கேற்பச், சென்னைப் பல்கலைக்கழக வித்துவான் வகுப்பு 1939-இல் தொடங்கப்பெற்று இருப தாண்டுகளாக நிகழ்ந்து வருகின்றது. இன்று தமிழ்க் கல்லூரியில் 120 மாணவர் பயில்கின்ற னர்.இவர்கட்கு இளங்கோ இல்லம் எனப்பெய ரிய ஒரு விடுதி உண்டு. இவர்களுட் சிலர்க்குச் சபை உதவித் தொகை அளிக்கின்றது. கல்விக் கடன் பூண்ட நல்லாசிரியர் ஐவர் உளர். இக் கல்லூரி மாணவர் 1948-ஆம் ஆண்டு வித்து வான் தேர்வில் மாகாண முதல்வராய் விளங் கித் திருப்பனந்தாள் ஆயிர ரூபாய்த் தமிழ்ப் பரிசினை வென்ருர் என்பது இங்குத் தமிழ் கற் பிக்கும் ஆசிரியர்களின் பணிக்கு ஒரு சான் ருகும். இக் கல்லூரி தோன்றிய பின் செட்டி மார் நாட்டில் வித்துவான் வளம் நிறைந்து காணப்படுகின்றது. சபை நிறுவியோர் குடும்பத்து மக்களும் உறவினர்களும் வித்து வான்களாக இலங்குவது சபையின் நீடிய வளர்ச்சிக்கு உரமாகும்.

சபையிற் கல்வி பயின்ற பண்டிதர்களும் வித்துவான்களும் தமிழ்த்தூதுவர்களாக நாடெங்கும் பரவியிருப்பக் காணலாம். அண்ணுமலைப் பல்கலைக் கழகத்துத் தமிழாசிரி யர்களாக இருந்த கந்தசாமியார், பூவராகன் பிள்ளை, அமிர்தலிங்கம் பிள்ளை எல்லோரும் சன்மார்கக சபையின் முன்னை ஆசிரியர்கள் ஆவார்கள். அப் பல்கலைக் கழகத்து இன்று ஆசிரியப்பணி ஆற்றிவரும் துணைப் பேராசிரி யர் அருணுசலம் பிள்ளையவர்களும், விரிவுரை யாளர் முத்துச்சாமி பிள்ளையவர்களும் சபை யின் மாணவர்கள்; முன்னை ஆசிரியர்களும் ஆவர். அக்கழகத்துத் தமிழ்ப் பேராசிரியராய்ப் பொலிவு செய்த பண்டிதமணியார் சன்மார்க்க சபையை உருவாக்கி அச்சபையால் தாமும் உருவாக்கம் பெற்றவர். இவ்வுண்மைகளை நினைந்தே, “இச்சபையின் ஆதரவில் நடந்து வரும் ஸ்ரீ கணேசர் செந்தமிழ்க் கலாசாலை தமிழ் நாட்டிற்குக் கல்வி கேள்விகளிற் சிறந்த பண்டிதர்களைத் தந்து உதவுகின்றது” என்று பல்கலைக் கழகம் கண்ட அண்ணுமலையரசர் 1940-இல் கருத்துரை வழங்கியுள்ளனர். இன்று அண்ணுமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் திரு. லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள் இளமையிலேயே தமிழ்க் கல்வி பயிலுவதற்குக் காரணம் அன்னேர் தந்தையாருக்கிருந்த சபைத் தொடர்பே என்ப. இங்ஙன் சன்மார்க்க சபை பல்கலைக் கழகத் துக்குத் தமிழாசிரியக் கொடைக்களமாக விளங் கிற்று என்பது பெருமைக்குரியது. சபையாற் பயன் கொண்ட பல்கலைக் கழகமும் கைம்மாறு செய்யத் தவறவில்லை. வித்துவான் வகுப்பு 1939-இல் சபை தொடங்கிய நாள்முதல் தமிழ்க் கல்லூரியின் முதல்வர்களாக அண்ணுமலைப் பல்கலைக் கழகத்துக் கற்ற மாணவர்களே இருந்து வருகின்றனர் என்பது நினையத்தகும். பயிற்சிவாய்ந்த ஆசிரியர்களைச் சபையிலிருந்து கொண்ட எம் பல்கலைக் கழகம் பயிற்சிக்குரிய மாணவர்களை எம் சபைக்குக்கொடுத்துதவிற்று என்ருல் பெருமை எதற்குரியது?” “தந்தது உன்தன்னைக் கொண்டது என் தன்னைச் சங்கரா யார்கொலோ சதுரர்? என்பது திருவாசக வினு.

IV

சன்மார்க்க சபையின் ஓர் உறுப்பாக 1910-ஆம் ஆண்டில் தொல்காப்பியனுர் புத்தக சாலை என்னும் நூல்நிலையம் அமைக்கப் பட்டது. தொல்காப்பியனுர் என்றும் நின்று நிலவும் இலக்கண நூல் எழுதிய தமிழ் முதல் வர் என்பதனை இன்றும் பலர் அறியா நிலையில், நாற்பத்தேழு ஆண்டுகட்கு முன்னே இம் முதல்வரை நினைந்து போற்றிய சபையின் மொழிப்பற்றுப் பாராட்டுதற்குரியது. இந்நூல் நிலையமே தொல்காப்பியர்க்குத் தமிழகத்து

முதற்கண் தோற்றப்பெற்ற நினைவு நிலையம். தமிழ், வடமொழி, ஆங்கிலம் என்ற வகையில் 3500 நூல்கள் இந்நிலையத்து உள்ளன. இவை மாணவர்க்கும் வெளியார்க்கும் பயன் படுகின்றன. கட்டணம் என்பது இல்லை. நூல்களின் தோற்றத்தைக் காண்பார்க்கு எடுத்துப் படித்த கைகளின் பன்மை விளங்கும். புத்தகசாலை வாசகசாலையாகவும் பயன் பெற்றது. நாளிதழ், கிழமையிதழ், திங்களிதழ்கள் பல தமிழிலும் ஆங்கிலத்திலும் வரவழைக்கப் பட்டன. 28-ஆம் ஆண்டில் பயன் கொண்டோர் தொகை 7573 என்ப. ''இதனுற் பயனடைவோர் மிகப் பலராவர் என்பதனை நான் எடுத்துக் கூறுவது மிகையாகும்'' என்று தொல்காப்பியனுர் புத்தகசாலையைக் குறித்து டாக்டர் உ. வே. சா. பாராட்டியுள்ளனர்.

V

சபையின் தமிழ்த் தொண்டுகளுள் ஒன்று நூல் வெளியிடு. பண்டிதமணியார்தம் முதல்நூலாகிய 'நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் சீர்திருத்தம்' சபையினரால் இரண்டாம் ஆண்டு வெளியிடப்பட்டது. தேவகோட்டைச் செல்வர் ஒருவரின் நன்கொடையால் 2000 படிகள் விலையின்றி வழங்கப் பெற்றன. 'வடமொழியினின்றும் தமிழில் மொழி பெயர்க்கப் படாதனவற்றுள் அரியனவற்றை மொழி பெயர்த்து வெளியிடுதல்' என்பது 13-ஆம் ஆண்டில் சபையின் ஒரு புது நோக்கமாயிற்று. வடமொழி வித்துவான் ஒருவர் அமர்த்தப் பட்டார். சுலோசனை, உதயன சரிதம், சுக்கிர நீதி, மண்ணியல் சிறுதேர் எனப் பண்டித மணியார் வடமொழி பெயர்த்த நான்கு தமிழ் நூல்களும் சபையின் வெளியீடுகளாயின. 'பிரதாப ருத்திரீயம், மாலதி மாதவம், ஹித்ய தர்ப்பணத்திலுள்ள இரசங்களைப்பற்றிய பகுதி என்னும் இவ்வரிய நூல்களும், கௌடலியம் என்னும் பொருள் நூலின் ஒரு பகுதியும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன' என்று 25-ஆம் ஆண்டறிக்கை கூறுகின்றது. பண்டிதமணியார் மொழி பெயர்த்து ஆக்கிய அண்ணுமலைப் பல்கலைக் கழகக் கௌடலிய வெளியிடு சன்மார்க்க சபை ஆதரவில் முன்னர் அவர் செய்த பணியின் தொடர்ச்சியே என்று அறிக்கைக் குறிப்பால் அறியப்படும். வடமொழியிற் சிறந்த நீதி நூல்களான சுக்கிர நீதி சாணக்கியங் களின் தமிழாக்கம் சபையின் பணியாகுமேல், அதன் மொழித் தொண்டுக்கு மேலும் சான்று வேண்டா. பண்டித மணியார் சபை விழாக் களில் திருவாசகத்தின் உண்மை நுண்மைகளைப் பற்றிப் பல சொற்பொழிவுகள் நயம்பட ஆற்றியபோது எல்லோரும் வியந்தனர். தாமின்புறுவது உலகின்புறக்கண்ட கதிரேசனுர் மேன் மேலும் திருவாசகத்தைக் காமுற்ருர். இதன் பயனே திருவாசகவுரையாக வளர்ந்தது என்று கொள்வது மிகையாகாது. சபைத் தொடர்பால் வேறுசில நூல்களும் எழுந்தன. சபையின் 5-ஆம் ஆண்டு விழாவில் நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் படித்த நக்கீரர் வியாசமும், திரு. மு. இராகவையங்கார் அவர்கள் பேசிய பொருளதிகாரத்தின் சாரமும் பின்பு நூல்களாயின.

VI

தமிழ்ப் புலவர்களைப் போற்றுவதும் தமிழ் வளர்ச்சி செய்வதனேடு ஒக்கும்; ஆதலின், கேட்பித்தும், கற்பித்தும், மொழி பெயர்த்தும் தமிழ் பரப்பிய சன்மார்க்க சபை மொழிப் புலவர்களை ஒல்லும் வாயெல்லாம் சிறப்பித்தது. ஐந்தாம் ஆண்டு சபைக்குத் தலைமை தாங்க வந்த உ. வே. சா. அவர்களைச் சிறப்பிக்கு முகத்தான், ஒரு தனியறிக்கை சபை வெளியிட்டிருக்கக் காணலாம். தமிழ்ப் புலமை மிக்கார்க்குப் புலமைப்பட்டம் வழங்குவது என்பது சபை நோக்கங்களுள் ஒன்று. 16–ஆவது ஆண்டு விழாவில், திரு ரா. இராகவையங்கார் அவர்களுக்கு 'மகாவித்துவான்' என்ற பட்டமும், திரு. மு. கதிரேசச் செட்டியார் அவர்களுக்குப் 'பண்டித மணி' என்ற பட்டமும் டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் தலைமையில் சபை வழங்கிற்று. இப்பட்டங்கள் நாடு முழுதும் பரவி உரியார்க்குப் பெரும்புகழ் தந்தன. திரிசிரபுரம் மகாவித்துவான் மீனுட்சி சுந்தரம் பிள்ளை குடும்பத்துக்குச் சபையின் முயற்சியால் நிதி தொகுக்கப்பட்டது. திரு. ம. வி.இராமானுசாச்சாரியார் அவர்கள் இருபத்

தைந்தாண்டு உழைத்து வடமொழி வியாச பாரதத்தைத் தமிழ்ப் படுத்தியதற்குச் சபை நன்றி பாராட்டியதோடு அவர் செயலை ஆத ரிக்குமாறு தமிழகத்தாரை வேண்டிக்கொண் டது.

VII

சன்மார்க்க சபை தமிழ்ப் புலவர்களின் சேரியாகப் பொலிந்தமையின், இச்சபை செய் யும் பாராட்டுத் தீர்மானங்களும், வேண்டுகைத் தீர்மானங்களும் நாட்டில் நன்மதிப்புற்றன. சபையும் தமிழ் பற்றிய பல நடப்புச் செய்திகளை நடுவு நிலைமையால் ஆராய்ந்து அவ்வப் போது துணிவாகப் பல தீர்மானங்கள் செய்து வந்தது. அரசர் அண்ணுமலைச் செட்டியார் தமிழ் நாட்டிற்கெனத் தனிப் பல்கலைக் கழகம் நிறுவும் வினையாண்மையைப் பாராட்டும் ஒரு தீர்மானமும், அப்பல்கலைக்கழகம் தமிழ் வளர்ச் சியை முக்கிய நோக்கமாகக்கொள்ள வேண் டும் என்ற ஒரு தீர்மானமும் 1929-இல் இயற் றப் பெற்றன. தமிழ் உயர் தனிச் செம்மொழி யாகக் கருதப்பட வேண்டும் எனவும் அஃது ஐ. சி. எசு. பரீட்சைக்குப் பாடமாக ஏற்படுத்தப் பட வேண்டும் எனவும் 1918-இல் தீர்மானங் கள் செய்யப்பட்டு, அவை இந்தியவரசுத் தலைவருக்கும், சென்னை மாநிலத் தலைவர்க்கும், சென்னை, கல்கத்தா, பம்பாய், அலகாபாத்து, காசி, பஞ்சாப்பு முதலிய பல்கலைக் கழகங்கட்கும் விடுக்கப்பட்டன. எல்லா இடங்களிலும் தீர்மானங்கள் கவனிக் கப்படும் என விடைகள் வந்துள்ளன என்று ஆண்டறிக்கை கூறுகின்றது. மகாமகோபாத் தியாயப் பட்டமுடையார்க்கு ஆண்டு தோறும் பொருளுதவி செய்ய முன்வந்த இந்தியவரசினை 1912-இல் சபை பாராட்டிற்று. தமிழகத்தில் இந்தி கட்டாயப்பாடமாதல் கூடாது; இசை யரங்கில் தமிழ்ப் பாடல்களே முதன்மை பெறுதல் வேண்டும்; ஶ்ரீ, வித்துவான் என்பன வற்றிற்குப்பதிலாகத், திரு,புலவர் என்ற தமிழ்ச் சொற்களை ஆளுதல் வேண்டும் என்பன போலும் பல தீர்மானங்கள் சபையில் நிறை வேற்றப்பட்டன. 1932-இல் அடிகள் விபுலா னந்தர் தலைமையில் தமிழ் வளர்ச்சி கருதிச் சபை செய்த தீர்மானங்கள் எட்டும் மிக்க சிறப்புடையவை. அவற்றுள் சிலவற்றை ஈண்டுக் காண்க:—

(5) சென்னை, அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தார்களை அவர்கள் ஏற்படுத்தி யிருக்கும் வடமொழிச் சிரோமணி வகுப்புகளுக்கு ஒப்பத் தமிழிலும் இலக் கணம், இலக்கியம், சித்தாந்தம், வேதாந்தம், மருத்துவம், சோதிடம் முதலிய பிரிவுகளையும் ஏற்படுத்தி நடத் தும்படி இச்சபையார் வேண்டிக்கொள் கின்றனர்.

(7) பள்ளியின் இறுதித் தேர்தலுக்குத்தமிழ் கட்டாய பாடமாக இல்லாமலிருப்ப தால் மாணவர்களிற் சிலர் முதற்படி வத்திலேயே தமிழை விடுத்துப் பிற மொழிகளைப் படிப்பதால் அவர்களது தமிழறிவு குறைந்து வருவது வருந்தத் தக்கதாயிருக்கிறது என்பதையும், முன் போல் தமிழில் ஒரு பகுதியாவது கட்டாயப் பாடமாக ஏற்படுத்த வேண் டும் என்பதையும் இச்சபை தெரிவித்துக் கொள்கின்றது.

(8) தமிழ் மொழியை வளர்ப்பதற்கு முயன்று வரும் இச்சங்கங்கள் யாவும் ஒன்று சேர்ந்து ஒத்துழைக்கும்படியும் ஆண்டு தோறும் ஒவ்வோரூரில் தமிழ் மகாநாடு கூடி இச்சங்கங்கள் உறுப் பினர்களை அனுப்பித் தமிழ் வளர்ச்சிக் குரிய பல முடிவுகளை நடைமுறைக்குக் கொண்டுவரும் வழிகளில் முயலும்படி யும் இச்சபையார் கேட்டுக் கொள்ளு கின்றனர்.

VIII

தமிழும் சைவமும் தழைத்தினிது ஓங்குகை சபையின் குறிக்கோளாதலின், சபை ஆற்றிய சைவத் தொண்டினை இனிக் காண்பாம். சன் மார்க்க சபை திருநாவுக்கரசர் பிறந்த நன் னளில் கணேசர்கோயிலில் கணேசர்முன்னிலை

யில் தொடங்கப்பெற்றது. இதன் உறுப்பாகிய கலாசாலை ஸ்ரீ கணேசர் செந்தமிழ்க் கலாசாலை எனவும், தமிழ்க் கல்லூரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரி எனவும் பெயர் கொண்டன. நால்வர்க்கும் காரைக்காலம்மையார்க்கும் குருபூசைகள் ஆண்டுதோறும் நிகழ்கின்றன. இப்பூசைகள் ஒருநாளும் இடையுருதபடி சைவப்பெருமக்கள் நிதி வைப்பு வழங்கியுள்ளனர். ஊர்தோறும் சென்று சமயவுண்மைகளை எடுத்துச் சொல்லுதற்குச் சபை சைவம் பரப்பி ஒருவரை அமர்த்திற்று. ஆடு கோழி அடைக்கல விண்ணப்பம், சைவசமயிக்கும் பாதிரியார்க்கும் நடந்த உரையாடல், சிவாலய வழிபாடு என்றின்ன துண்டு வெளியீடுகள் ஆயிரக்கணக்காய் விலையின்றி வழங்கப்பட்டன. விபூதி மான்மியம், சைவசமய மகிமை,சிவபரத்துவம்,பஞ்சாக்கரம், நித்தியப் பொருள்கள், பதிபுண்ணியம், சைவ சித்தாந்தம், அத்துவிதவுண்மை, சிவவேட வணக்கமுறை, சிவஞானம் என்றின்னோரன்ன சைவச் சொற்பொழிவுகளைச் சபை விழாக்களில் தக்கோர் நிகழ்த்தினர். தேவாரம் பண்ணோடு காலையும் மாலையும் மாணுக்கர்க்கு நல்லாசிரியரால் ஓதுவிக்கப்பட்டது. திருச்சக்கரப் பள்ளித் தலத் திருப்பணியைப் புதுக்கிக் குடமுழுக்கு நடத்திய திருவாவடுதுறை மகாசந்நிதானத்தின் தொண்டு சபையின் பாராட்டுக்கு உரிய தாயிற்று.

IX

சன்மார்க்க சபை தன் பெயருக் கேற்ப நல்லவையெல்லாம் கடனுகக் கருதி ஒழுகி வந்துள்ளது. மொழி சமயங்களின் வளர்ச்சியோடு சபையின் தொண்டு அமைந்துவிடவில்லை. நாட்டு நலத்திலும் நாட்டுரிமையிலும் சபை ஈடுபாடு காட்டியது. ஆளும் அரசின் மேல் அன்புடையதாகவும் ஒழுகியது. தேசிய நிதிக்கு இருமுறைதொகை அளித்ததும், தென்னுப்பிரிக்கா இந்தியர்களுக்கு உதவி நிதி வழங்கியதும், கோபாலகிருட்டிண கோகலேயின் படம் சபையில் தோற்றுவித்ததும், நாட்டுத் தலைவர்களின் மறைவுக்கு இரங்கல் தீர்மானங்கள் நிறைவேற்றியதும், முதல் உலகப்போரில் இந்தியவரசின் வெற்றிக்கு உவந்து உணவு வழங்கியதும் எல்லாம் சபையின் அகன்று விரிந்த பெருநோக்கிற்கு எடுத்துக் காட்டுக்களாம். நாட்டு நலம் பற்றிய சொற்பொழிவுகளும் சபையரங்குகளில் நிகழ்வனவாயின.

X

சபையின் பொன்விழா என்பது அதனை அந்நிலைக்குக் கொண்டு வந்த தொண்டர்களின் புகழ் விழாவே யாகும். சபையை நிறுவிய தோன்றல்கள் வ. பழ. சா. பழநியப்பரும் அவர் தம்பி அண்ணாமலையாரும் ஆவர். இவ்விரு தமிழ்ச் சான்றோர்களும் நல் லுடன்பிறப்புக்கு இலக்கியமாக வாழ்ந்தவர்கள். அண்ணன் பழநியப்பர் சபையின் முதற்றலைவராய் இரண்டாண்டு வீற்றிருந்தார். இவர் தம் சபையாட்சிக் காலத்துக் கணேசர் செந்தமிழ்க் கலாசாலையும்,தொல்காப்பியனர் புத்தகசாலையும் தோற்றம் பெற்றன. சபைக்கு ஓர் இடமும், அவ்விடத்துப் பதினாயிரம் ரூபாய் செலவில் இன்றுவரை நிலைபெற்று விளங்கும் கட்டிடமும் உரியவாயின. பழநியப்பர் கடமையைக் காலந்தவருது ஆற்றுபவர்; சொல்லுறுதியை எஞ்ஞான்றும் காப்பவர். இவர் பெரும் பிரிவு புலவருலகத்துக்கு ஓர் அதிர்ச்சியை விளைவித்தது.

நீயுற்ரு யாதலினுற் ருயுற்ரு ரெனமகிழ்ச்சி
நேர்ந்தோஞ் சற்று
நோயுற்ரு யெனவறிந்து புண்பட்ட
வெம்மனத்தி னுதிக்கோல் பாயத்
தீயுற்ரு லென்னவிண்ணிற் போயுற்ரு
யெனுங்கொடிய செய்தி கேட்டோம்
வாயுற்ரு ரெவரிரங்கார் பழநியப்ப
வள்ளானீ வந்தி டாயோ.

என மு. ரா. கந்தசாமிக் கவிராயர் இரங்கினர். "நட்டார்த் தீர்தலினும் தீப்புகுதல் சால நன்றே" என்று அரசஞ் சண்முகனர் துடித்தார். "மருணிறைந்தார் தமைத்தெருட்டு மதியெங்கே வறியார்க்கு மகிழவியும், பொருணிறைந்த கரமெங்கே" என்று பண்டித மணி கதிரேசனர் உருகினர், பழநியப்பர் தம் தம்பிக்கு எழுதி வைத்துச் சென்ற இறுதி நல்லெழுத்து தமிழ் நாகரிகத்துக்குக் கிடைத்தற்கரிய சான்று. அவ்வெழுத்து தம் தம்பிக்கு

மாத்திரம் எழுதி வைத்த எழுத்தாகக் கருது தற்கில்லை. பின் பிறந்த தமிழகத் தம்பியர்க் கெல்லாம் அவ்வெழுத்து உரியது. ஆதலின் அதனைப் பிறிதோரிடத்து இம்மலரில் காண்க. பழநியப்பர் தம்பி அண்ணாமலையார் மூன்றும் ஆண்டு முதல் சபைத் தலைமையேற்றார். இவர் தம் சபையாட்சிக் காலத்து மதுரைத் தமிழ்ச் சங்க வகுப்புகள் தொடங்கப்பெற்றன. இருபதி னாயிரம் ரூபாய் அளவு சபைக்கு மூலதனம் தொகுக்கப்பட்டது. குருபூசைகளுக்கு அரு ளாளர்கள் தனிநிதி வழங்கினர். மொழி பெயர்ப்பு வேலை தொடங்கிற்று. "சன்மார்க்க சபையைத் தளரவிடாது எப்பொழுதும் நீடித்து நடத்தி வருக" என்னும் அண்ணலார் எழுத்தின்படி தம்பியார் சபையின் நீடிய வளர்ச்சிக்கு வேண்டிய உரமிட்டார்.

பழநியப்ப செட்டியார் மூத்த மகன் சாமி நாதன் செட்டியார் அவர்களின் தலைமைக்காப் பில் சன்மார்க்க சபை 16-ஆம் ஆண்டு முதல் நன்னர் நிகழ்ந்து வருகின்றது. இவர் தம் ஆட்சியில் சபை வெள்ளிவிழாவைக் கண்டது. இப்போது பொன் விழாவைக் காணும் வாழ்வு பெற்றிலங்குகின்றது. சென்னைப் பல்கலைக் கழக வித்துவான் வகுப்புத் தொடங்கப்பட்டு இருபதாண்டுகளாக நடைபெற்று வருகின் றது. தொடக்கப் பள்ளிக்குத் தனிக் கட்டிடம் ஏற்பட்டுள்ளது. செந்தமிழ்க் கல்லூரிக் குழு என ஒரு தனிக் குழு அமைக்கப்பட்டது. கல்லூரிமாணவர்கள் தொகை ஆண்டுதோறும் பெருகிவருவது குறிப்பிடத்தகும். சபைத் தலைவரின் தம்பி சிதம்பரஞ் செட்டியார் அவர் கள் சபையின் துணைத்தலைவராகவும் கல்லூரிக் குழுவின் செயலாளராகவும் இருந்து வருகின் றனர். "சிதலை தினப்பட்ட ஆலமரத்தை மதலையாய் மற்றதன் வீழூன்றி யாங்கு" என்ற படி, சிதம்பரனர் சபையைத் தளராது காத்து நிறுத்திய உறுதி மிகப் போற்றுதற்குரியது. இவர்கள் சபை வளர்ச்சிக்கு 15000 வெண் பொற்காசுகள் வழங்கியுள்ளனர்.

அண்ணல் பழநியப்பர் மக்கள் கண்ணுங் கருத்துமாகச் சபையைக் காத்து வருதல் போலவே இளவல் அண்ணாமலையார் மக்களும் சபைப் பணியில் தம் தந்தையாரைப்போல் இயைந்து ஈடுபடுகின்றனர். இவர்களில் மூத்தவர் சாமிநாதன் செட்டியார். இளையவர் விசுவநாதன் செட்டியார். இவ்விருவரும் இன்றியமையாத காலங்களிலெல்லாம் பொரு ளுதவி புரிந்து சபைத் தளர்ச்சியைப் போக்கி யுள்ளனர்; ஆட்சிக் குழு வுறுப்பினருமாகித் தம் மாலான உதவிகள் யாவும் புரிகின்றனர். சபையின் செயலாளரும் கல்லூரிக் குழுவின் தலைவரும் ஆன திரு ஆ. நாகப்ப செட்டியார் அவர்கள் உற்றுழியுதவியும், உறுபொருள் கொடுத்தும் சபைக்கு நல்வாழ்வு அளிப்பவர் ஆவர். மொழி நலமும் ஊர் நலமும் கருத் துட்கொண்ட ஆ. நா. செய்யும் பணி மாசில் புகழ் சான்றது. தாய் மொழி வளர்ச்சிக்கு வாரி வழங்கிய பழந் தமிழகச் செம்மல்களை யொப்ப இவர்கள் சபை வளர்ச்சிக்கு 25000 வெண் பொற்காசுகள் நல்கியிருக்கின்றனர். மேலும் மகிபாலன் பட்டியைச் சேர்ந்த சி. ராம. இராம சாமிச் செட்டியார் அவர்களும் சபையை வளர்க் கும் செம்மல்களில் ஒருவராவர். இவர் சபைப் பழைய மாணவர்களில் ஒருவரும், அண்ணாமலையார் இல்லத்திற் பெண்கொண் டோரு மாவர். இவ் வில்லத்து இவ்வாறு தொடர்பு கொண்ட இவர்கள் சபைத் தொண் டிலும் தொடர்பு கொள்ளலாயினர். சபைக்கு இவர்கள் வழங்கிய தொகை மூவாயிரம் வெண்பொற்காசுகள். மேற்சொல்லிய இவர்கள் பொறுப்பில் வளரும் சபையும் அதன் உறுப்புகளும் வாழ்வாங்கு வாழும் என்பது தெளிவு. சபையுறுப்பினர்களும் கல்லூரிக்குழு வுறுப்பினர்களும் சபை வளர்ச்சியில் தன்னல மற்ற ஈடுபாடு உடையவர்கள்; ஒல்லும் வகை யான் உதவும் ஆர்வம் உடையவர்கள். ஆத லின் சபை நீடு வாழும் என்பது உறுதி.

சபை பொன்விழாக் கொண்டாடும் இப் பெருநாள் அமயத்துத் தொன்றுதொட்டு உதவி செய்த பெருமக்கள் அனைவரையும் நாம் நினைவுகூர வேண்டும். சபையின் தொடக்க விழாத்தலைவர் அரசஞ்சண்முகனரும், முத லாண்டு விழாத் தலைவர் மு. ரா. கந்தசாமிக் கவிராயரும், பல்லாண்டு செயலாளர்களாகப் பணிபுரிந்த ஏ. இராமநாதச் செட்டியார் அவர்

களும், கும. மு. குமரப்ப செட்டியார் அவர்களும், சிறந்த உறுப்பினராய்த் துணைபுரிந்த கரு. முத்து. அழகப்ப செட்டியார் அவர்களும் நம் செய்ந்நன்றியறிவுக்கு உரியோராவர். நிலைத்த சபைக் கட்டிடத்துக்கும், நீடிய சபை வளர்ச்சிக்கும், நாயன்மார்களின் குருபூசைக்கும் நிதி வழங்கிய நற்செல்வர் பலர். மாணவர் உண்டிக் கொடைக்கும், பிறபொருட் கொடைக்கும், புத்தகசாலையின் பெருக்கத்திற்கும் காலந்தோறும் உதவிய நன்மக்கள் பலர். சன்மார்க்க சபை ஊர்ப் பொதுநிலையம் என்பதனை உணர்ந்து உழைத்த ஊர் மக்கள் பலர். இன்னோரென்ன நலங்களெல்லாம் அன்போடு செய்த அறப்பேராளர்கள் வழிவழி வாழ்க. சபை தோற்றும் எண்ணம் அருளியவரும், தோன்றிய சபையை நாற்பத்து நான்கு ஆண்டுகள் உடனிருந்து வளர்த்தவரும், சபையின் தமிழாக்கத்திற்கு நூலாக்கம் இயற்றியவரும், பல்லோர் தொண்டுக்கு நிலைக்களம் அமைத்தவரும் ஆய தமிழ்ப் பெரியார், என் பேராசிரியர் மகா மகோபாத்தியாய முதுபெரும் புலவர் பண்டிதமணி கதிரேசச் செட்டியார் அவர்கள் என்பது நாடறியும். அன்னோர் புலமைத் திருவடியைத் தொழுது பீடுசால் சபையின் நீடுவாழ் பணியில் முயல்வோமாக.

பழநியப்பர் தம் தம்பி அண்ணாமலையாருக்கு எழுதி வைத்த பொருண்மொழி

1. எனக்கு உடம்புக்கு இருக்கிற மாதிரி கடுமையாகவே இருக்கின்றது. இறைவன் அருளின்படி நடக்கட்டும். அதைப் பற்றிக் கவலைப்படுவது உசிதமன்று. வினையுள்ள அளவுமே கூடி நிற்கும்.
2. இருப்பது பொய்; எந்நாளிருப்பினும் இறப்பது நிச்சயம்.
3. ஒருவரும் கொண்டுபோகக் கூடியது ஒன்றுமே இல்லை. பாவ புண்ணியம் இரண்டுமே பின் வருவது நிச்சயம்.
4. சன்மார்க்க சபையைத் தளர விடாது எப்பொழுதும் நீடித்து நடத்தி வருக.
5. குடும்பத்தை ஒருநாளும் கவலைக்குள் விடாது கௌரவமாகவே கொண்டு வருக.
6. வியாபாரம் முதலியன அளவோடு செய்து வருக.
7. மற்றக் காரியங்களெல்லாம் நன்மையாகவும் சாந்தமாகவும் நடத்தி வருக.

இங்ஙனம்,

வ. பழ. சா. பழநியப்ப செட்டி.

அண்ணல் பழநியப்பரும் இளவல் அண்ணுமலையாரும்

பழ. சிதம்பரம் செட்டியார்,

(சன்மார்க்க சபைத் துணைத்தலைவர், கணேசர் செந்தமிழ்க் கல்லூரிச் செயலாளர், சென்ட்ரல் பேப்பர் மார்ட் உரிமையாளர்.)

உலகில் வழங்கிவரும் மொழிகளுள் இலக்கிய இலக்கண வளம் நிரம்பிச் சீரும் சிறப்பும் பெற்றுத் திகழ்வது நம் உயர்தனிச் செம்மொழியாம் தமிழ் மொழி. இம் மொழியைச் சங்கம் வைத்துப் போற்றி வளர்த்த பெருமை பாண்டிவள நாட்டையே சாரும். அந்நாட்டில் முல்லைக்குத் தேரீந்த வள்ளல் பாரி ஆண்ட பறம்பு நாடு தமிழ்ப் புலவரைப் போற்றிப்புரத்தலில் தலைசிறந்ததாகும். இத்தகைய பெருமை வாய்ந்த நாட்டில் தேன் சொரியும் பறம்பு மலையை அடுத்துத் திகழும் திருநகர் தீந்தமிழ் வளர்க்கும் மேலைச்சிவபுரியாகும்.

அந்நகரின்கண், பொருளீட்டி யறம் பேணிப் புகழ்வளர்த்து நெறிநின்று பொருவிலீசன், திறம்பேணி வாழ்ந்து வரும் தனவணிகர் குலம் போற்றும் சிறந்தோர் வ. பழ. சா. குடும்பத்தார். அக்குடும்பத்தார் தந்நலம் போல் பிறர் நலமும் பேணி வருகின்றோராவர். அவர்கள் தனவணிகப் பெருமக்களின் கோயில்கள் ஒன்பதினுள் வயிரவன் கோயில் பெரிய வகுப்பைச் சார்ந்தவர்கள். அக்குடும்பத்தின் உயர்தனிச்செம்மலாகிய சாமிநாதன்செட்டியார் -அவர்தம் மனையறம் பேணும் மாண்புமிக்க வாழ்க்கைத் துணைவியாம் கண்ணம்மையாச்சி- இவர்களின் அருந்தவப் புதல்வராவர் அண்ணல் பழநியப்பரும் — இளவல் அண்ணுமலையாரும்.

அண்ணலும் இளவலும் இராம இலக்குவர் போன்று ஓருயிர் ஈருடம்பெனத் திகழ்ந்தனர். அண்ணல் பொதுப் பணிகளில் ஈடுபட, இளவல் தொழில் துறையில் ஈடுபட்டு அண்ணலின் பணிகளுக்கு உறுதுணையாய் அமைந்தனர். இவர்கள் செய்த அறங்கள் பலவாம். அவற்றுள் சிக்கல் சிங்கார வடிவேலவர் திருப்பணிக்குப் பதினெண்ணுயிரம் வெண் பொற்காசுகள் நல்கியதும், சன்மார்க்க சபை நிறுவியதும், மேலைச்சிவபுரியிலிருந்து பொன்னமராவதிக்குச் சாலையமைத்ததும் குறிப்பிடத் தக்கன.

அண்ணல் பழநியப்பர்

அண்ணலார் 1873-ஆம் ஆண்டு நவம்பர்த்திங்கள் 23-ம் நாள் இந்நகரமும் தமிழ் நாடும் செய்த தவப்பயனுய்த் தோன்றினர். இவர் இளமையிலேயே நுண்மாண் நுழைபுலம் மிக்கோராய் விளங்கினர். இவர் தம் தந்தையார் இவரது இருபதாம் ஆண்டிலேயே இறைவனடி எய்தினர். அதுமுதல் அண்ணல் குடும்பப் பொறுப்பேற்றர். இவர் பிறரைத் தம் வயப்படுத்தும் தோற்றப் பொலிவுடன் காட்சிக்கெளியராய்க், கடுஞ்சொல்லரல்லராய் மீக்கூருவாராயினர். இவர் தூய எண்ணமும் துயருற்றோர்க்கு இரங்கும் தன்மையும், ஈகையும் உடையவராய், மேலைப்பத்தூர் நகரத்தாருள் தனிப்பெருஞ் சிறப்பு வாய்க்கப் பெற்றவராவர். இவர் பெருஞ்செல்வம் படைத்தாரல்லராயினும் தம்மையடைந்தார் தகுதியறிந்து, மனம் மகிழ ஈத்துவக்கும் இயல்பினர். "ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு" என்ற வள்ளுவர் வாய்மொழிக்கிணங்க, வாழ்நாளெல்லாம் புலவர் பெருமக்களின் குறிப்பறிந்து பொருளுதவி என்றும் குன்றுத புகழ் படைத்தவராவார். இவர் நிதி வழங்குவதில் "இளமை நாணி முதுமையெய்தி உரை முடிவு காட்டிய" கரிகாலனை யொப்ப முறையிட்டாரும் முறையிடப் பெற்றருரும் ஆகிய இருதிறத்தாரும் ஒருங்கே மகிழும் வண்ணம் ஒப்ப நாடித் தீர்ப்பு வழங்கும் உயர்வு படைத்தவர். தம் இறுதிக் காலத்திலும் பிறரால் தீர்த்து வைக்க முடியாத பெருஞ் சிக்கலில் இருந்த வழக்கொன்றைத்தொடர்புகொண்ட இருதிறத்

தாரும் மன நிறைவு கொள்ளத் தீர்த்து வைத்தது இவர்தம் சிறந்த திறமைக்கு எடுத்துக் காட்டாகும்.

அண்ணலார்க்கு அருமை வாழ்க்கைத் துணைவியாராக அமைந்தவர் நங்கையர் திலகமாம் நாச்சம்மையாச்சியாவர். அவர்பால் கனிவுள்ளம் கொண்ட கண்ணம்மை எனும் பெண்மணியும், தகவு சான்ற சாமிநாதன் செந்தமிழ்ச் செல்வர் சிதம்பரம் என்ற ஆண் மக்கள் இருவரும் தோன்றினர். முதல் மனைவியார் காலம் சென்றபின் அவர்தம் தங்கையாகிய மீனுட்சியாச்சியை அண்ணலார் அன்புடன் மணந்தனர். அவ்வம்மையார்பால் சிங்கார வடிவேலவன் எனும் செம்மல் பிறந்தனர்.

அண்ணலார் எப்போதும் புலவர் குழாம் சூழ்ந்து மகிழப் புரவலராய் வீற்றிருப்பார். இவர் தமிழின்பால் கொண்ட பேரார்வத்தால் தமிழ்ப் புலவர்களின் தொடர்பைப் பெரிதும் விரும்புவாராயினர். இதன் பயனாக, மகிபாலன் பட்டி பண்டிதமணி திரு. மு. கதிரேசச் செட்டியாரவர்களுடன் தொடர்பு கொண்டமை குறிப்பிடத்தக்கது. பின்னரும் திருவாளர்கள் சோழவந்தான் அரசன் சண்முகனர், மு. ரா. கந்தசாமிக் கவிராயர், இரா. இராகவ ஐயங்கார், மு. இராகவ ஐயங்கார், உ. வே. சாமிநாத ஐயர் போன்ருேர் பலருடைய தொடர்பும் ஏற்பட்டது. அண்ணலாரின் குடும்பப் புலவராக நெடுவை திரு. இராமசாமி ஐயங்கார் பல ஆண்டுகள் இவர் ஆதரவில் இருந்து வந்தனர்.

அண்ணலார் தேவாரம், திருவாசகம் முதலிய திருமுறைகளில் மிக மிகப் பற்றுடையவர், ஆதலின் அவைகளை இன்னிசையுடன் பாட வல்ல புலவர்களை ஆதரித்தார். இவர் ஆதரவு பெற்றுத் திருஞான சம்பந்த தேசிகர் என்பார் பல நாட்கள் காலையும் மாலையும் இப் பாடல்களை இன்னிசையுடன் பாடி அண்ணலாரை மகிழ்வித்து வந்தார்.

தன வணிகப் பெருமக்கள் கடல் கடந்து பொருள் ஈட்டி வந்து திருக்கோயில் கட்டுதல், நந்தவனம் திருத்தல், பெருணவளித்தல், இருக்கோதும் இடம் அமைத்தல், இன்னபல அறம்புரிந்து தருக்கோடு வாழ்ந்துவந்தனர். இவ்வறங்களோடு கலைக்கோயில் அமைத்துக் கல்வி வளர்த்தல், நாட்டின் தேவைக்குத் தக்கதோர் அறமென அண்ணலார் தேர்ந்தார். எனவே இவர் பண்டிதமணியவர்களின் துணை கொண்டு சமய குரவருள் ஒருவராகிய திருநாவுக்கரசர் திருநாளாகிய "செய்ய சவுமியத் திற் சித்திரைமுப் பானென்றில், துய்யகுரு வார சுபதினத்தில்" (13–5–1909) சைவமும் தமிழும் தழைத்தினிதோங்கச் சன்மார்க்க சபையைச் சோழவந்தானூர்ப் புலவர் திலகம் அரசன் சண்முகனர் தலைமையில் தோற்றுவித்தார்.

இச் சபையின் தோற்றத்துக்கு இளவல் பெருக்கம் காட்டி அண்ணலாருக்குத் துணை புரிந்தார். மக்கள் தமிழ்க் கல்வியிற் பற்றற்று வேற்று மொழியில் விருப்புற்றிருந்த ஐம்பதாண்டுகட்கு முன்னரே எதிர்கால நிலை அறிந்த அண்ணலார் உண்டியும் உறையுளுங் கொடுத்துத் தமிழ்க் கல்வி பயில்வாரை ஊக்குவித்து வந்தார். அண்ணலார் தோற்றுவித்த சன்மார்க்க சபை செந்தமிழ் நாட்டுக்குச் செய்துவரும் தொண்டுகள் மிகப் பலவாம். இச்சபையின் உறுப்புக்களாகத் தொடக்கப் பள்ளி ஒன்றும், தமிழ்க் கல்லூரி ஒன்றும், நூல் நிலையம் ஒன்றும் பலருக்கும் பயன்தரும் நிலையில் இடம் பெற்றுத் திகழ்ந்தன, இன்றும் திகழ்கின்றன. மேலும் திகழும். அன்றியும் இச்சபை நிலையான சைவ சமயப் பிரசாரகர் ஒருவரைத் தன்னகத்தே கொண்டு சைவ சமயத்தின் உயிர் நாடியாம் கொள்கைகளைத் தமிழகம் எங்கும் பரப்பும் தொண்டில் தலை சிறந்து விளங்கியது. மேலும் இச்சபை போக்கு வரத்து வசதியில்லாத அக்காலத்தும் பல்வேறு இடங்களிலிருந்தும் பல புலவர் பெருமக்களை வரவழைத்து அவர்கள் சொற் பொழிவின் வாயிலாகச் சமயம், ஒழுக்கம், தமிழ்ப்பண்பாடு இவைகளில் மக்கள் உள்ளத்

தில் மறுமலர்ச்சி ஏற்படும் வண்ணம் மாசற்ற தொண்டாற்றி வந்தது. அதனோடமையாது சமய குரவர் நால்வர்,காரைக்கால், அம்மையார் இவர்கள் திருநாட்களில் செவிக்குணவும் வாய்க்குணவும் வழங்கித் திகழ்வதாயிற்று. இத்தகைய சீரும் சிறப்பும் அமைந்த சன் மார்க்க சபைக்குத் தனிக்கட்டிடம் அமைக்க வேண்டுமென்ற பேரார்வத்தால் வ. பழ சா., வ. பழ. வ., வ. பழ. கரு, குடும்பத்தார் அதற்கேற்ற இடம் நல்கினர். அவ்விடத் தில் அண்ணலாரே முன்னின்று பெரும் பொருட் செலவில் வருங்கால மறிந்தார்போல் ஓராயிரவர் ஒருங்கே குழுமியிருந்து சொற் பொழிவு கேட்டு இன்புறுமாறு எழில் மண்ட பத்துடன் ஏற்ற மிக்கதோர் கட்டிடத்தை இனிதே கட்டி முடித்தார். அத்தகு சிறப்புற் ரோங்கிய அப் புது மனை புகு விழா, மாண்பு மிகு விருதை சிவஞான யோகிகள் அவர்களின் சீரிய தலைமையில் மூன்று நாட்கள் நடை பெற்றது. அவ்வமயம் உயர்திருவாளர்கள் பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார், மு. ரா. கந்தசாமிக் கவிராயர், சோழவந்தான் அரசன் சண்முகனர் போன்ற தோலா நாவின் மேலோர்கள் கலந்துகொண்டு அரிய சொற் பொழிவுகள் ஆற்றி மக்கள் உள்ளத்தை மகிழ் வித்தனர். இவ்விழா நிகழ்ச்சி தமிழ் நாட்டுப் பெருமக்கள் உள்ளத்தில் புதிய உணர்ச்சியை யும் ஊக்கத்தையும் ஊட்டியது. இதுவே தன வணிகர் நாட்டில் மேலும் மேலும் கலைக்கூடங் கள் தோன்றக் காரணமாயிருந்தது என்றால் அது மிகையாகாது. இத்தகு பெருமைவாய்ந்த சபையின் முதற்றலைவராய் அண்ணலார் மூன்ருண்டுகள் தொடர்ந்து பணியாற்றிச் சிறப்பித்துள்ளனர்.

சன்மார்க்க சபையின் தலைவராய்ச் சீரும் சிறப்பும் பெற்று விளங்கிய அண்ணலார் 1912-ம் ஆண்டு மேத்திங்கள் ஆரும்நாள் காலை 5 மணி அளவில், மனைவியும், மக்களும், இளவலும், சுற்றமும், துணையும், தமிழும், தமிழ ரும் செயலற்று வருந்தத் தமக்கு முப்பத்தொன் பது ஆண்டு முடிவு பெறும் முன்னரே தம் பூதவுடம்பை நீத்துப் புகழுடம்பெய்தினர்.

இவர் பிரிவாற்ருது வருந்திய புலவர் பலர் கையறு நிலைச் செய்யுள் பல பாடியுள்ள னர். அவற்றுள் இரண்டு வருமாறு.

(1) ஐயாநின் றனைப்போல வணிகருக்குட்
பேர்படைத்தார் யாரு முண்டோ
மெய்யாகச் சைவமெங்கே தமிழெங்கே
பிரசங்க விருப்ப மெங்கே
கையாரக் கனிந்துதவும் கொடையெங்கே
யறமெங்கே கருணை யெங்கே
துய்யாநீ நினைந்திலையே எவனுற்ருய்
பழநியப்பச் சுமுக வாழ்வே.

—(மு ரா. கந்தசாமிக் கவிராயர்)

(2)சிங்நயவேள் சென்றுவிட்டான் சிதம்பரவேள்
சென்றுவிட்டான் செம்மை யான
நன்னயஞ்சேர் நல்லரங்க நாதனெனும்
நட்டோனும் நடந்து விட்டான்
பன்னயங்கொள் பழநியப்பப் பண்பாளா
நீகூடப் பறந்து விட்டாய்
எந்நயங்க ளறிவதற்கு வணிகர்குலத்
தியாவருளர் இயம்பு வாயே.

—(ஜி. சதாசிவம் பிள்ளை)

என்பனவாம்.

அண்ணலாரின் எண்ணமெல்லாம் சன் மார்க்க சபையின் வளர்ச்சிபற்றியனவேயாகும். அவர் நோய்வாய்ப்பட்டிருக்கும் காலத்திலும் சபையின் ஆக்கங்கருதிச் செய்ய வேண்டியவற்றையே சிந்திப்பாராயினர். இவர் இளவலுக்கு எழுதிவைத்த கடிதத்தில் "சன் மார்க்க சபையைத் தளரவிடாது எப்பொழுதும் நீடித்து நடத்தி வருக" என ஆணையிட்டிருந்த னர். அண்ணலாருக்குப் பின் அவர்தம் இளவல் அண்ணுமலையாரும் அண்ணலார் கருத்திற்கு அணுவளவும் தவருது சன்மார்க்க சபையைக் கண்ணினைக் காக்கின்ற இமையிற் காத்துச்சிறப்புற நடத்திவந்தனர். அவருக்குப் பின் அண்ணலார் இளவலார் ஆகிய இருவர்தம் புதல்வர்களும் அவ்வாணையை மேற்கொண்டு சன்மார்க்க சபையைத் தளர

விடாது போற்றிப்புரந்து வருகின்றனர். கால வேறுபாட்டால் இடையே தளரும் நிலை யெய்திய சன்மார்க்க சபை மீண்டும் தழைத்து ஓங்கிச் சிறப்பதற்கு அண்ணலாரின் தூய எண்ணமே காரணமாகும். மேலும் அவ் வெண்ணம் வருங்காலத்திலும் சன்மார்க்க சபையின் வளர்ச்சிக்குத் துணைபுரியும் என்பதில் அணுவளவும் ஐயம் இன்று.

அருமை இளவல் அண்ணாமலையார்

இளவலார் தாது ஆண்டு புரட்டாசித் திங்கள் 28-ம் நாள் (12–10–1876) சைவமும் தமிழும் தழைக்கத் தோன்றினர். இவர் சீரிய ஒழுக்கமும், புன்னகை தவழும் முகமும், சிவ வேடப்பொலிவும், யாவரிடத்தும் பேரன்புள்ள மும் வாய்க்கப் பெற்றவராவர். இவர் காலத் திற் கேற்ற அறங்களை அறிந்து ஆற்றும் திற னுடையவர். அண்ணலார் தொடங்கிவைத்த சன்மார்க்க சபையைப் பொன்னேபோல் போற்றித் தம் கண்ணே போல் காத்து அதன் ஆக்கத்திற்கு இவர் பெரும் பணியாற்றினர். இதன் நிலையான வளர்ச்சிக்குத் தக்கதொரு மூலதனம் தொகுத்து அதனை நாற்பதினாயிரம் வெண் பொற்காசுகள் வரை உயரும்படி செய் தார். இவர் பழமையிற் பற்றுடையவராயினும் புதுமையில் நல்லனவற்றைக் கொள்வதில் பெரு விருப்பமுடையவர். தன வைசிய ஊழி யர் சங்கம் தோன்றுவதற்கு முன்பே இவர் தனவணிகர் மரபில் முதியோர் திருப்பூட்டும் வழக்கத்தைப் பலவகை எதிர்ப்புகளுக்கிடையில் மாற்றித் தம் அண்ணலார் புதல்வர்களுக் கும் தம் புதல்வர்களுக்கும் நடைபெற்ற திரு மணங்களில் மணமகனே திருப்பூட்டும் வழக் கத்தை மேற்கொள்ளச் செய்தவர்.

இளவலாரின் மனையறம் பேணும் நல்லி யல்பு வாய்ந்த மெல்லியலார் விசாலாட்சியாச்சி யாவர். இவர்தம் நன்மக்கள் சாமிநாதன், விசுவநாதன், அன்னபூரணி ஆவார்.

இவர் காலத்தில் சபைக் கல்லூரி மாண வர்கள் மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பிரவேச, பால பண்டித, பண்டித தேர்வுகளுக்கு அனுப்பப்பெற்றனர்.

இவர் பதின்மூன்றாண்டுகள் சபைத் தலைமை தாங்கிச் சபையின் ஆக்கத்திற்குச் சிறந்த முறையில் பணியாற்றிய பெருமை யுடையோராவர்.

இவர்தம் இறுதிக் காலமாகிய இரத்தாட்சி ஆண்டு மாசித் திங்கள் 6-ம் நாள் தம் அண்ணலார் புதல்வர்களையும், தம் புதல்வர் களையும் அருகில் அழைத்துத்திருநீறு வழங்கித் தம் அண்ணலார் வாய்மொழியை நினைவிற் கொண்டு ''சபையைத் தொடர்ந்து செவ்வை யாக நடத்தி வருக'' என ஆணையிட்டுப் ''பரம சிவம்'' ''பரமசிவம்'' எனச்சொல்லி இறைவன் திருவடி நிழலெய்தினர்.

வாழ்க அண்ணலார் இளவலார் திருப்பெயர்!
வளர்க அவர்கள்தம் திருப்பணிகள்!



"பண்டிதமணியும் சன்மார்க்கசபையும்"

சைவசித்தாந்த வித்தகர்,
திரு. சி. ராம. இராமசாமி செட்டியார், மகிபாலன்பட்டி.

பண்டிதமணியார் தோற்றம் :-

மகாமகோபாத்தியாய பண்டித மணி, மு. கதிரேசச் செட்டியார் பூங்குன்ற நாட்டுத் தலைநகராகிய மகிபாலன் பட்டி யென்னும் சிற்றூரில், முத்துக்கறுப்பன் செட்டியார் சிவப்பி ஆச்சி யென்னும் இருவர்க்கும் அருமை மகனாகப் பிறந்தார். இவர் பிறந்த நாள், விசு ஆண்டு புரட்டாசித் திங்கள் 2-ஆம் நாள் (16-10-1881) வெள்ளிக் கிழமையும் திருவாதிரையும் கூடிய நன்னாளாகும். தமிழ்த்தாயின் தவப்புதல்வராகத் தோன்றிய இவரது பிறப்பால், பூங்குன்ற நாடு பொலிவுற்றது; மகிபாலன்பட்டி வார்புகழ் பெற்றது; நகரத்தார் மரபு கல்வியறிவிலும் மேன்மையெய்தி நனி சிறந்தது; தமிழன்னை தலை நிமிர்ந்தாள்.

நல்லூழ் :-

இவர் மூன்றாண்டுகள் நிரம்பாத குழவிப் பருவத்தரா யிருக்கும் போது இளம் பிள்ளை வாதம் என்னும் நோயாற் பீடிக்கப் பெற்றனர். அதனால் இவரது இடப்பக்கத்துக் கையும் காலும் சோர்வுற்றுச் சிறிது மெலி வெய்தின. இங்ஙனம் நேர்ந்த குறைபாட்டினைத் தம் நல்லூழ் வயத்தால் இறைவன் தமக்கு அளித்த நற்பேறு என்றே இவர் பிற் காலங்களில் கூறி மகிழ்ந்தனர். இக் குறைபாடு நேராதிருப்பின் தம் இனத்தவர் போல் தாமும் வெளி நாடுகள் சென்று வாணிகம் நடாத்திப் பெரும் பொருள் ஈட்டியிருக்கலாம். எனினும், பேரரசர்களும், பெரும் புலவர்களும் பெருமதிப்புச் செய்து பாராட்டும் பேரும் புகழும் சீரும் சிறப்பும் அச் செல்வப் பொருளால் தமக்கு வாய்த்திருக்க மாட்டா என்பது நம் கதிரேசனார் கருத்து. திருநாவுக்கரசரைச் சூலை நோயால் ஆட்கொண்ட சிவபிரான், தமிழ்ப் பணியும் சைவப் பணியும் செய்வித்தற் பொருட்டு இவர்க்கு இத்தகையதோர் நோயினை ஏவி விடுத்தனர் போலும்.

தொடக்கக் கல்வியும் புலமைப் பேறும் :-

இவர் அற்றை நாள் முறைப்படி ஏழாவ தாண்டில் திண்ணைப் பள்ளிக் கூடத்தில் சேர்ந்து கல்வி பயின்ற காலம் ஏழு திங்களே. அங்குப் பயின்ற கல்வி ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன் முதலிய நீதி நூல்களும் எண்சுவடிக் கணக்குமே யாம். ஆசிரியருக்குச் சம்பளமாகக் கொடுத்த தொகை ஏழு பணமே; அஃதாவது பதினொன்கு அணுக்களே. இவ்வளவில் பள்ளிப்படிப்பை முடித்துக் கொண்டாலும், ஆசிரியர் உதவியின்றியே தமிழிலக்கிய இலக்கணங்களைத் தாமாகப் படித்துணரும் ஆர்வமும் ஆற்றலும் இவர்பால் இளம் பருவந் தொட்டு வளர்ந்து வந்தன. இதற்குக் காரணம், எழுமையும் தொடரும் கல்வியில் இணையற்ற புலவராய் இவர் முன்னைப் பிறப்பில் விளங்கி இருத்தல் வேண்டும் என்பதேயாம். நீர் வேட்கையுடையா னொருவன் நீரிருக்கும் இடந்தேடியலைதல் போன்று, அறிவு வேட்கை மிகப்பெற்ற இவரும், புலவர்களிருக்கு மிடந் தொறும் சென்று தாம் கற்றவற்றை யெடுத்துரைத்தலும், ஐயுற்ற பொருளை அவர்பால் வினவுதலும், அவர் வினயவற்றிற்குத் தக்கவாறு விடையிறுத்தலும், இனிக்கற்க வேண்டுவன இவையெனத் தெரிந்து கொள்ளுதலும், தம்மை நாடிவரும் புலவர்களுடன் அளவளாவி அறிய வேண்டுவன அறிதலும் ஆகிய முயற்சிகளை இடையறாது மேற் கொண்டொழுகினர். கலைமகளின் கடைக்கண் நோக்கம் இவர்க்குச் சார்பாயிருந் தமையால் தமிழ்ப் புலமையை வளர்த்துக் கொண்டனர். செய்தித் தாள்களில் விளம்பரம் செய்யப் பெறும் நல்ல தமிழ் நூல்களெல்லாவற்றையும் அஞ்சல் வாயிலாக வர

வழைத்து அவற்றை அழுத்தமாகப் படித்து அவற்றிற் காணப்படும் பொருள் நயங்களையும், சுவையுள்ள பகுதிகளையும் தம்முள்ளத்தில் அமைத்துக் கொள்ளுதல் இவரது இயல்பு.

நூல்யாத்தலும் வடமொழிப் புலமையும்:-

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற அரிய செய்யுளை இயற்றிய கணியன்பூங் குன்றனுர் என்னும் சங்கத்துச் சான்றோர் பிறந்த ஊரிற் பிறந்தவராதலின் இவரும் விரிந்த மனப்பான்மையும், சிறந்த புலமையும் உடையவராயினர். கற்று வல்ல புலவர் பெருமக்களுடன் கலந்து உறவாடிக் கவிச்சுவை நுகர்ந்து இன்புறுதலையே தம் பொழுது போக்காகக் கொண்டனர். சொற் பொருட்சுவையும் அணி நயமுந் தோன்றச் செய்யுளியற்றுந் திறமும் பெற்றிருந் தமையால் தம் வழிபடு கடவுளாகிய விநாயகப் பெருமான் மீது பதிற்றுப் பத்தந்தாதி யென்னும் நூல் பாடி இளம்பருவத்திலேயே அரங்கேற்றினர். அது புலவர்கள் சுவைத் துணர்ந்து படிக்கத் தக்கதொரு நூலாகும். பின்னர், வட மொழி யிலும் வல்லுநராதல் வேண்டுமென்னும் அவா மேலிட்டமையால், அம் மொழியில் வல்ல புலவர் ஒருவரை வரவழைத்துப் பல ஆண்டு கள் மாதவூதியந் தந்து தம்பால் இருக்கச் செய்து அவரிடம் வரன் முறையாகக் கற்று வடமொழியிலும் சிறந்த புலமை எய்தினர். இங்ஙனம் இரு மொழிப் புலமையும், கூர்த்த மதி நலமும், செய்யுளிற்றுந் திறமும், மனத் திட்பமும், இடையரு முயற்சியும் உடைய இளைஞராய் இவர் விளங்கினர்.

பழநியப்பர் தொடர்பு:—

அது காலை, மேலைச்சிவபுரி என்னும் நக ரத்தில், வ. பழ. சா. குடும்பம் என்ற மதிப்பிற் குரிய குடும்பத்தில் பழநியப்ப செட்டியார் என்னும் உயர் குணச் செம்மல் ஒருவர் இருந்தார். அவர் கடவுட் கொள்கையும் கற்று வல்ல புலவர்களை ஆதரிக்கும் கருத்தும் உடையவர். இல்லை யென்று வந்தோர்க்கு இல்லை யென்றுரையாத ஈகையும், எளியவர் பால் இரக்கமும் இயல்பாயமையப் பெற்றவர். பழநியப்பருடைய அருமை பெருமைகளை அறிந்த புலவர்களும் இசைவாணர்களும் இவ ரிடம் வந்து தம்புலமை நலந் தோன்றப் பாடி பரிசில் பெற்றுச் செல்வர். வந்தவருடைய வரிசையறிந்து வழங்குதலை இவர் கடமை யாகக் கொண்டிருந்தார். மேலைச் சிவரிபுரி யிலுள்ள தம் தமக்கையார் இல்லத்திற்கு அடுத் தடுத்து வரும் போதெல்லாம் நம் கதிரேசனுர் பழநியப்பரைக் கண்டு தமிழிலக்கியங்களைப் பற்றியும், சைவசமயக் கருத்துக்கள் குறித்தும் உரையாடி மகிழ்வதுண்டு. இருவரும் வைரவன் கோயிற் குலப்பிரிவைச் சேர்ந்தவராதலின் பங்காளிகள் என்ற உறவாலும், ஒருவர் தகுதியை மற்றவர் நன்கு மதித்து வந்தமை யாலும் இவ்விருவரது நட்பும் இளம் பிறை போல நாளும் வளர்வதாயிற்று.

மதுரைத்தமிழ்ச்சங்கத் தொடர்பு

அப்போது, பாலவனத்தம் சமீன்தார ராகிய பாண்டித்துரைத் தேவரவர்கள் மதுரை யில் நிறுவிய தமிழ்ச் சங்கம் சிறந்த தமிழ்ப் பணியாற்றிவந்தது. பாண்டித்துரையவர்கள் விரும்பியழைத்தமையால் அத்தமிழ்ச் சங்கத் தின் ஆண்டுவிழாவிற்குச் சென்று "சிவபிரான் கருணையும் சீவர்கள் கடமையும்" என்ற கட்டு ரையை நம் கதிரேசனுர் எழுதிப்படித்தனர். அதன் வாயிலாக, இவரது இருமொழிப் புல மையும், எழுத்தாற்றலும், சிவநெறிப் பனுவல் களில் தேர்ந்தபயிற்சியும் ஆங்குக்குழுமியிருந்த புலவர் பெருமக்களுக்குப் புலப்பட்டன. அத ஞல் அரசஞ்சண்முகனுர், மு. ரா. கந்தசாமிக் கவிராயர், டாக்டர் உ. வே. சாமிநாதையர், சேதுமன்னர் பேரவைப் புலவர் ரா. இராகவை யங்கார் முதலான பெரும் புலவர்கள் இவர்க்கு நண்பராயினர். அது முதல் மதுரைத் தமிழ்ச் சங்கக் கூட்டங்களுக்குத் தவராமற் சென்று, புலவர்கள் உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிந்துவரும் கதிரேசனுருக்குத் தமது செட்டிமார் நாட்டில் இத்தகையதோர் சபை நிறுவித் தமிழையும் சைவத்தையும் வளர்க்க வேண்டுமென்ற ஆர்வமுண்டாயது.

சன்மார்க்க சபையின் தோற்றம்

"நன்பாட்டுப் புலவனுய்ச் சங்க மேறி நற் கனகக் கிழிதருமிக்கருளினேன்" என்று திரு

நாவுக்கரசராற் பாராட்டப் பெற்ற சிவபிரான் கோவில் கொண்டிருக்கும் திருப்புத்தூரைச் சார்ந்த மகிபாலன்பட்டியில் பிறந்த நம் கதிரேசனருக்குச், சங்கத்தமிழையெங்கும் பரப்புதல் வேண்டும்; சைவந் தழைக்க மெய் வருத்தம் பாராது உழைத்தல் வேண்டும் என்ற எண்ணம் தோன்றுதல் இயற்கைதானே! தம் எண்ணத்தை நம் பழநியப்ப செட்டியாரிடம் தெரிவித்தார். அவர் சிறிதும் தடைசொல்லாமல் அங்ஙனமே செய்ய முன் வந்தார். இருவரும், உள்ளமும் உணர்ச்சியும் ஒன்றியபெருங் கேண்மையராதலின் சௌமிய ஆண்டு சித்திரைத் திங்கள் 31-ஆம் நாள் (13—5—1909) திருநாவுக்கரசர் திருநாளாகிய நன்னுளில் சன்மார்க்க சபை தொடங்கப்பெற்றது. சோழவந்தானூர் மாபெரும் புலவராகிய அரசஞ் சண்முகனர் தொடக்க விழாவுக்குத் தலைவராயிருந்தனர். "சைவமும் தமிழும் தழைத்தினிது ஓங்குக" என்பதே அச்சபையின் குறிக்கோளாகக் கொள்ளப் பெற்றது. திங்கட் கூட்டங்களும் ஆண்டு விழாக்களும் சிறப்பாக நடைபெற்று வந்தன. செல்வர்களும் அறிஞர்களும் திரளாக வந்திருந்து செவிச் செல்வமாகிய கேள்விச் செல்வத்தால் அறிவுச் செல்வம் பெற்று அகமிக மகிழ்ந்தனர். உள்ளூர் வெளியூர் அன்பர்கள் பலர் சபையின் உறுப்பினராயினர். திருமகள் செழித்து வளரும் செட்டிமார் நாட்டில் முதலாவதாகத் தோன்றிய இச்சன் மார்க்க சபையின் நடைமுறையால் கலைமகளும் களிநடம் புரியத் தொடங்கினுள். தமிழ்நாட்டில் மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்குப் பின் தோன்றி ஐம்பது ஆண்டுகள் சைவமும் தமிழும் தழைக்க அரும்பணி புரிந்து பொன்விழாக் கொண்டாடப் பெறுவது இச்சன்மார்க்கசபை யன்றி வேறில்லை.

சபையின் அங்கங்கள் :—

சொற்பொழிவின் வாயிலாகத் தமிழார்வத்தையும் சமயப்பற்றையும் பரப்பலாமேயன்றி உண்மையான கல்வியை வளர்த்தல் இயலாதென்பதை உணர்ந்து, கணேசர் செந்தமிழ்க் கலாசாலை என்னும் செந்தமிழ்க் கல்லூரியும் தொல்காப்பியனர் புத்தகசாலை என்னும் நூல் நிலையமும் சன்மார்க்க சபையின் உறுப்புக்களாக நிறுவப் பெற்றன. கல்லூரியில் தக்க ஆசிரியர் பலர் இடம் பெற்றனர். மாணவர் பலர் உண்டியும், உறையுளும் பெற்று முறையான கல்வி பயின்று மதுரைத் தமிழ்ச் சங்கத் தனித்தமிழ் தேர்வுகளில் வெற்றிபெற்று வந்தனர். இப்போது அக் கல்லூரி சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பெற்றுத் தனித்தமிழ் வித்வான் தேர்வுக்குரிய பாடங்களை நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு இலவசமாகக் கற்பித்து வருகிறது.

மொழி பெயர்ப்பு :—

அன்றியும் நம் கதிரேசனருடைய இருமொழிப் புலமையை நன்கு பயன் படுத்திக் கொள்ள வேண்டுமென்றெண்ணிய சபையார் வடமொழியாசிரியர் ஒருவரை உதவிக்கு அமைத்துக் கொடுத்து மொழி பெயர்ப்பு வேலையை மேற்கொள்ளும்படி திட்டம் செய்தனர். தமிழ்மொழியில் பொருள் நூல்களும் நாடக நூல்களும் தனி நூலாக இல்லாத குறையை நீக்குதற்கு "சுக்கிர நீதி" என்னும் பொருள் நூலும், "மண்ணியல் சிறுதேர்" என்னும் நாடக நூலும், சுலோசனை, உதயண சரிதம் என்னும் உரை நடை நூல்களும் இவரால் மொழிபெயர்க்கப் பெற்று இச்சபையின் வாயிலாக அச்சிட்டு வெளியிடப் பெற்றன. மேலும், பிரதாபருத்திரீயம், மாலதி மாதவம், ரசகஸ்காதரம் என்ற நூல்களும் மொழி பெயர்க்கப் பெற்றுள்ளன. அவை இன்னும் அச்சிடப்பெற வில்லை. கௌடலீயம் என்னும் பொருள் நூலும் அப்போதே மொழி பெயர்க்கத் தொடங்கப் பெற்றது.

பண்டிதமணியும் சன்மார்க்கசபையும்

கல்லூரியின் வளர்ச்சியாலும், அடுத்தடுத்து நடைபெற்று வந்த அறிஞர் பலருடைய அரியபல ஆராய்ச்சிச் சொற்பொழிவுகளாலும், நூல் வெளியீட்டாலும் சன்மார்க்க சபையின் சிறப்பியல்புகளைத் தமிழுலகம் நன்கறிந்தது. கதிரேசனர் புகழ் ஈழம் முதல் இமயம் வரை யாண்டும் பரவியது. கதிரேசனரால் சன்மார்க்க சபையும், சன்மார்க்க சபையால் கதிரேசனரும் பெருமையும் புகழும்

பெற்ற செய்தி அறிந்து மகிழ்தற்குரியதாகும். சன்மார்க்க சபையின் விழாக்களில் தலைவரா கவும், சொற்பொழிவாளராகவும் கலந்து கொள்ளாத தமிழ்ப்பெரும் புலவர்கள் எவரும் இல்லை. அவ்வாறே நம் கதிரேசனர் தலைவ ராகவும், சொற்பொழிவாளராகவும் கலந்து கொள்ளாத சங்கங்களும் சபைகளும் தமிழ் நாட்டிற் பெரும்பாலும் இல்லை என்றே கூற லாம். இச்சபையின் பதினைரும் ஆண்டு நிறைவு விழாவில் தலைமை தாங்கிய மகா-மகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமி நாதையர் அவர்களால் நம் கதிரேசனுர்க்குப் "பண்டிதமணி" என்னும் பட்டம் வழங்கப் பெற்றது.

அண்ணாமலை அரசரும் பண்டிதமணியும்

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் நிறுவிய பெருங் கொடை வள்ளல் டாக்டர். ராஜா சர் அண்ணாமலை செட்டியார் அவர்கள் நம் பண்டிதமணியவர்களின் இரு மொழிப் புலமை யும், எழுத்தாற்றலும், பேச்சுவன்மையும், பல் கலைக் கழகத்திற்குப் பயன்பட வேண்டு மென்று கருதி விரும்பியழைத்துத் தமிழ் விரி வுரையாளராகவும், தமிழ்ப் பேராசிரியராகவும் தமிழிசை ஆலோசனைக் குழுவின் தலைவரா கவும், தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவரா கவும், வீற்றிருந்து பணிபுரியுமாறு செய்தார் கள். பண்டிதமணியார் அண்ணாமலைப் பல் கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராயமர்ந்து பாடஞ் சொல்லி வந்த காலங்களில் இவரது கற்பிக்கும் திறத்தையும் பாட்டின் பொருள் நயங்களை எடுத்து விளக்கும் ஆற்றலையும் கண்டுஆசிரியர்களும், மாணவர்களும் வியந்து பாராட்டினர். இவரிடம் பயின்ற மாணவர்கள் இப்போது பல்வேறு பல்கலைக் கழகங்களிலும், கல்லூரிகளிலும் தலைமைப் பதவியிலமர்ந்து பணியாற்றுகின்றனர். இவர் தமிழிசை ஆலோசனைக் குழுவின் தலைவராயிருந்த போது இவரது மேற்பார்வையில் பல தமிழி சைப்பாடல் தொகுதிகள் அச்சிடப் பெற்று வெளியாயின. தமிழாராய்ச்சித் துறைத் தலை வராயிருந்தபோது "கௌடலீயம்" என்னும் பொருள் நூலின் முற்பகுதியை மொழி பெயர்த் தனர். மேலும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தின் கல்வி மன்றம் (அக்கடமிக்கௌன்சில்) சட்டமன்றம் (செனட்சபை) ஆகியவற்றில் உறுப்பினராயிருந்தனர். அன்றியும், அண்ணா மலைப் பல்கலைக் கழகம், சென்னைப் பல்கலைக் கழகம், திருவனந்தபுரம் பல்கலைக் கழகம், மைசூர்ப் பல்கலைக் கழகம் ஆகியவற்றில் தமிழ்ப்பாடத்திட்டக்குழு, மாணவர்க்குத்தேர்வு நடத்தும் அதிகாரிகள்குழு என்னும் இவற்றில் தலைவராகவும், உறுப்பினராகவும் இடம் பெற்றிருந்தனர்.

மகாமகோபாத்தியாயப்பட்டம்

செட்டிநாட்டு அரசர் பெருமானாகிய அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் நம் பண்டிதமணியவர்கள்பால் எப்போதும் பெரு மதிப்பு வைத்திருந்தார்கள் என்பதை பண்டித மணியவர்கள் தம் ஊரில் புதிதாக அமைத்த மனையிற் குடிபுகும் விழாவிற்கும், இவரது அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவிற்கும் வந் திருந்து மகிழ்வித்த நிகழ்ச்சிகளாலும், இவரது திருவுருவப்படத்தைச் சன்மார்க்க சபையில் தமது பொற்கரத்தால் திறந்துவைத்த சிறப் பாலும்,காரைக்குடியில்பொன்னுடைபோர்த்துப் பெருமைப்படுத்திய செய்தியாலும் நன்கறிய லாம். மேலும், தமது பல்கலைக் கழகத்தில் எண்டிசை புகழும் தண்டமிழ் ஆசானாக வீற்றி ருந்து தொண்டாற்றிய பண்டித மணியார், பெரும் பேராசான் என்னும் மகாமகோபாத்தி யாயப் பட்டமும் பெறவேண்டுமென்று அண்ணாமலையரசர் அவர்களும், அவர்கள் திருக்குமாரராகிய டாக்டர் ராஜா சர். முத்தைய செட்டியாரவர்களும் பலகால் முயன்றதன் பய ஞகப் பண்டிதமணியாரின் தகுதிகளை நன்ருக அறிந்த அரசாங்கம் "மகாமகோபாத்தியாயர்" என்ற பட்டமும், அதற்குரிய விருதும், நற் சான்றிதழும் வழங்கிப் பாராட்டியதோடமை யாது ஆண்டுதோறும் ஓரளவு தொகையும் பரிசிலாக உதவிவந்தது. இப்பட்டம் பெற்றமை

யால் அமெரிக்கா முதலான வெளிநாடுகளிலும் பண்டிதமணியார் புகழ் பரவுவதாயிற்று.

திருவாசக உரை

இங்ஙனம் ஏறத்தாழப் பத்தாண்டுகள் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றபின், திருவாசகத்தில் திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம், திருவெம்பாவை என்ற பகுதிகட்குக் ''கதிர்மணி விளக்கப் பேருரை'' என்னும் சிறந்ததோர் உரை எழுதி வெளிப்படுத்தினர். இவ்வெளியீடுகளால் சிவநெறிக்கு நிலையான தொண்டுசெய்தார்கள் என்று கூறலாம். திருவாசகத்தின் எஞ்சிய பகுதிகளும் கதிர்மணி விளக்கம் பெற்று வாராதது தமிழ்நாடும் சைவ உலகும் செய்த தவக்குறையே யாம். இவர் எழுதிய உரை நடைக்கோவை இரண்டு பாகங்களும் பல்கலைக் கழகங்களிற் பாடமாக வைக்கப் பெற்றுள்ளன.

வழிகாட்டி

மகா மகோபாத்தியாய பண்டிதமணியவர்கள் தமிழ்ப் புலவர்களை ஆதரித்தல் தம்கடமை எனக்கொண்டமையால் இவரால் முன்னேற்றம் பெற்ற புலவர்கள் மிகப்பலராவர். இவர் ஆசிரியத் தொழில் புரிந்து வழிகாட்டியதனல் முத்தமிழ் வித்தகர் பண்டித வித்துவான் லெ.ப. கரு. இராமநாதன் செட்டியார், டாக்டர் வ. சுப. மாணிக்கம் செட்டியார் முதலான பலர் பல்கலைக் கழகங்களிலும் கல்லூரிகளிலும் பேராசிரியராகப் பணியாற்றி வருகின்றனர்.

முடிப்புரை

சன்மார்க்க சபை நிறுவிய பெருந்தகை பழநியப்ப செட்டியாரவர்களுக்குப் பின் அவர் உடன் பிறந்தவரும், தமையனர் குறிப்பறிந் தொழுகும் சால்பு மிக்கவரும், சன்மார்க்க சபைக்கு மூலதனம் தொகுத்து வைத்துத் தளராது பாது காத்தமையால் அதன் செவிலித் தாய் என்று சொல்லத்தக்கவரும் ஆகிய அண்ணுமலைச் செட்டியாரவர்கள் இச் சபையைப் பாதுகாத்து வந்தனர். அவர்களுக்குப் பின், முப்பத்தைந்து ஆண்டுகளாகச் சபையின் நிரந்தரத் தலைவராயிருந்து சிறந்த தொண்டாற்றி வரும் சாமிநாதன் செட்டியார், துணைத் தலைவராயிருந்து கண்ணுங் கருத்துமாகப் பேணிவரும் சிதம்பரம் செட்டியார், அண்ணுமலைச் செட்டியார் அவர்களின் புதல்வரும் சபையின் ஆட்சிக்குழு உறுப்பினருமாகிய சாமிநாதன்செட்டியார், அவர் இளவல் விசுவநாதன் செட்டியார், சபை வளர்ச்சியிற் பேரார்வங் கொண்டு உதவி செய்துவரும் ஆ. நாகப்ப செட்டியார் முதலான எல்லோரும், பண்டிதமணியவர்கள்கூறும் அறிவுரைகளின் படியே சன்மார்க்கசபையைப் போற்றி வளர்த்து வந்தனர். பண்டிதமணி யவர்களின் ஆலோசனையில்லாமல் சன்மார்க்கசபையில் ஒருசிறு காரியமும் நடைபெற்றதில்லை யென்று உறுதியாகக் கூறலாம். "ஐம்பதாண்டுகளாக அரும் பெருந் தொண்டுகள் செய்து பொன்விழாக் கொண்டாடப் பெறும் சன்மார்க்க சபையும், அதன் அங்கங்களும், அவற்றேடு பல்லாற்றுனும் தொடர்பு கொண்டுள்ளோர் அனைவரும் எல்லா நலங்களும் பெற்று நீடு வாழ்க! பண்டிதமணியார் புகழ் என்றும் நின்று நிலவுக!" என வாழ்த்துகிறேன்.

பண்டிதமணி யவர்களிடம் திருக்குறள், திருக்கோவையார், திருத்தொண்டர் புராணம், சிவஞான போதம் முதலான நூல்களை முறையாகப் பாடங்கேட்ட மாணவன் என்ற உரிமையால் அவர்களைப் பற்றி இக்கட்டுரை எழுதும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தமை குறித்து மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

அண்ணுமலை அரசர்

திரு. ஆ. நாகப்ப செட்டியார், சபைச் செயலாளர், மேலைச்சிவபுரி.

தமிழ் நாட்டுத் தனிப்பெருந் தலைவர், பல்கலைக்கழகம் நிறுவிய பெருங்கொடை வள்ளல் டாக்டர் ராஜா சர் அண்ணுமலைச் செட்டியார் அவர்களைத் தமிழகமும், இந்தியாவின் ஏனைய பகுதிகளும், வெளிநாடுகள் பலவும் நன்கு அறியும். யான் அறிமுகப்படுத்த வேண்டுவதில்லை. ஆயினும், அவர்கள் வாழ்க்கையில் மேற்கொண்ட ஆள்வினைத்திறங்களையும், அரிய பல செயல்களையும் அறத்தின் பெருமைகளையும், அவற்ருற் பெற்ற பெருஞ்சிறப்புக்களையும் நினைவு கூர்தல், நமக்கு ஊக்கமும், உறுதியும் தரும் ஆதலின் அவற்றுட்சில வற்றை ஈண்டுக்குறிப்பிடுகின்றேன்.

தோற்றமும் வளர்ச்சியும்

தண்ணர் தமிழ் அளிக்கும் தண்பாண்டி வளநாட்டின்கண் செட்டிமார் நாடென்பது சீரும், சிறப்பும் பெற்றுத்திகழும் ஒரு பகுதியாகும். அப்பகுதியில், வானுடரும் வந்து வாழ விரும்பும் வளம் மிக நிறைந்தது கானுடு காத்தான் என்னும் கவின் மிகு நகரம். அந்நகரத்தில் உத்தம குணங்கள் பலவும் நிரம்பப் பெற்ற முத்தைய செட்டியார் என்னும் செல்வத் தோன்றல் ஒருவர் இருந்தார். அவர் தில்லை, கருவூர், காசி ஆகிய திருத்தலங்களில் கோயில் திருப்பணிகள் பல செய்தார். தேவார பாடசாலை, திருநந்தவனம், அன்ன சத்திரம் முதலியனவும் அமைத்தார். அவையெல்லாம் குன்றின் மேலிட்ட விளக்குப் போல் இன்றும் நிலைபெற்று விளங்குகின்றன. இங்ஙனம் அறம்பல புரிந்த பெருமகனுராகிய முத்தைய செட்டியார்க்கும் அவரது வாழ்க்கைத் துணைவியாராகிய கற்பரசி மீனுட்சி ஆச்சிக்கும் மூன்ருவது குமாரராக நம் அண்ணுமலை வள்ளல் பிறந்தார்கள். விசு ஆண்டு புரட்டாசித் திங்கள் 16ஆம் நாள் (30—8—1881) வெள்ளிக்கிழமையுடன் கூடிய மூல நாள் இவர்கள் பிறந்த நன்ஞளாகும். "ஆண் மூலம் அரசாளும்" என்ற முதுமொழிக் கேற்ப இவர்கள் பேரரசராக விளங்கினுர்கள். அரசர்க்கேற்ற அங்கங்கள் பலவும் அமைத்தார்கள். தம் வழித் தோன்றல்களாக வருவோரும் அரசர் பட்டம் பெறுதற்கு உரிய அரிய சிறப்பினை ஆக்கி உதவினுர்கள். தனி ஒருவராய் நின்று பல்கலைக்கழகம் நிறுவித் தமிழ்நாடு மேன்மையுறச் செய்தார்கள். முத்தமிழ்க்கும் முதன்மை தந்தார்கள், எனவே தாம் பிறந்த குடும்பத்தையும், குலத்தையும், நாட்டையும் உலகறிய உயர்த்தினுர்கள் எனின் அது மிகையாகாது. இவ்வாறு கருவிலே திருவுடையராய் முதன்மையுற்று வாழப் பிறந்த, இப் பிள்ளையைப் பெற்ருேர் இருவரும் பேரன்பு செலுத்தி வளர்த்தனர். நுண்ணிய அறிவும், திண்ணிய நெஞ்சமும், வண்மைக் குணமும், எண்ணியது முடிக்கும் ஆற்றலும் இவர்களுடன் வளர்ந்து வந்தன.

இவர்கள் இளமைப் பருவத்தில் ஆங்கிலத்திலும் தமிழிலும் அழகாகப் பேசவும் எழுதவுங் கற்றுக் கொண்டார்கள். கணக்கிலும் வல்லுநரானுர்கள். தம் தந்தையாருடனிருந்து தொழில் துறைப் பயிற்சியும் பெற்ருர்கள். இவர்கள் திருமணப் பருவம் எய்திய பின் பெற்ருேர்கள், பள்ளத்தூர் நகரத்தில் செல்வத்திற் சிறந்த பெருந்தகையாளர் பழநியப்ப செட்டியாருடைய அருமை மகள் திருவளர் செல்வி சீதை ஆச்சியென்னும் மாதரசியைத் திருமணம் செய்து வைத்தார்கள். மணமக்கள் இருவரும், மலரும் மணமும் போல் மனங் கலந்து, இல்லற மென்னும் நல்லறத்தை இனிது நடாத்தினர். இங்ஙனம் பல ஆண்டுகள் சென்றன. இவர்கள் தந்தையார் முத்தைய செட்டியாரவர்கள் தம் 62ஆம் வயதில் (1901

ஜனவரி) இறைவனடி சேர்ந்தார்கள். அதன் பின்னர் 1902ல் இவரது தமையன்மார்களாகிய சிதம்பரம் செட்டியார், இராமசாமி செட்டியார் ஆகிய இருவரும் நம் அண்ணமலை வள்ளலும் மனவொற்றுமையுடன் குடும்பப் பிரிவு செய்து கொண்டார்கள்.

ஈட்டலும் காத்தலும்

அப்போது நம் அண்ணமலைச் செட்டியார் அவர்கள் இருபத்தோராண்டுகள் நிரம்பிய இளைஞராயிருந்தார்கள். தம் பாகத்துக்குக் கிடைத்த கடைகள், தென் இந்தியா, வட இந்தியா, இலங்கை, பர்மா, மலேயா, சையாம் செய்கோன் முதலான பல இடங்களில் சிறியனவும், பெரியனவுமாய்ப் பரவியிருந்தன. அவற்றிற்கெல்லாம் தகுதியும் நம்பிக்கையும் வாய்ந்த மேலாட்களையும். துணையாட்களையும் தேர்ந்தெடுத்து அனுப்பினர்கள். தாமும் அவ்விடங்களுக்குச் சென்று நடைமுறைகளைக் கவனித்தார்கள். ஒரு நொடிப் பொழுதும் இவர்கள் வாழ் நாளில் வீணனதில்லை. காலத்திற்கேற்றவாறு வட்டித் தொழிலுடன் புதிய, புதிய தொழிற்சாலைகளையும் தொடங்கினர்கள். தேயிலை, ரப்பர் தோட்டங்கள் தென்னந் தோப்புக்கள், நன்செய் நிலங்கள் வாங்கினர்கள். சித்தூர் மாவட்டத்தில் செட்டிநாடு எஸ்டேட் அமைத்தார்கள். செட்டிநாடு பாங்கு, செட்டிநாடு கார்ப்பரேஷன், தென் இந்தியக் கார்ப்பரேஷன், பர்மா கமர்ஷியல் கார்ப்பரேஷன், திருச்சி, தஞ்சாவூர் ஸ்டோர்ஸ், சென்னைத் தென்னிந்தியக் கார்ப்பரேஷன் என்று கூட்டுக் கிளைகளாக அண்ணமலை வள்ளலுடைய தொழில் பலஇடங்களில் முறையாக நடைபெற்றன. 1901 முதல் 1910 வரை பத்து ஆண்டுகள் இவர் மேற்கொண்ட ஊக்கத்தாலும், உழைப்பாலும் தென்னுட்டுக் குபேரர் என்று கூறும் வண்ணம் கோடிக்கணக்கான பொருளையீட்டினர்கள். ஈட்டப் பெற்ற செல்வத்தை நன்குபேணி வளர்த்தார்கள் '' முயற்சி திருவினையாக்கும்'' ''ஆக்கம் அதர்வினய்ச் செல்லும் அசைவிலா, ஊக்கம் உடையான் உழை'' என்ற பொய்யா மொழிகட்கு இவர்கள் ஓர் எடுத்துக் காட்டாய் விளங்கினர்கள்.

பொதுநலப்பணிகள்

பொருளீட்டுந் துறையில் வல்லுநராயிருந்த அண்ணமலை வள்ளலுக்குப் பொதுநலப் பணிகள் புரிதல் வேண்டுமென்ற ஆர்வம் தோன்றிற்று. அது முதல் இவர்களது வாழ்க்கையில் புதிய மலர்ச்சியும் பொலிவும் உண்டாயின. இந்நிலை இவர்களது வாழ்வில் நல்லதோர் திருப்பம் என்று கூறலாம். முதலாவதாகக் காரைக்குடி நகராண்மைக் கழகத் தலைமைப் பதவி இவர்களை நாடிவந்தது. இது நாட்டிற்கும் சமூகத்திற்கும் நல்லதொண்டுகள் செய்வதற்கு ஏற்றதெனக்கருதி இவர்கள் அப்பதவியை விரும்பி யேற்றுக்கொண்டார்கள். அப்பதவியிலிருந்த மூன்றுண்டு காலத்தில் காரைக்குடி நகரத்தில் குடிதண்ணீர் சுகாதாரம் கல்வி நடைவழிகள் விளக்குகள் முதலியவற்றில் இவர்கள் செய்த சீர்திருத்தங்கள் பல. நகரமக்களெல்லோரும் இவர்களை நல்ல தலைவராகக் கருதினர். இவர்கள் தம்மைப் பொது நலத் தொண்டராகவே கருதிப் பணிபுரிந்தார்கள். அப்போது இவர்கள் செய்த அரியதொரு தீரச்செயலைப் பாராட்டி அரசாங்கம் ''ராவ்பகதூர்'' என்ற பட்டம் அளித்து இவர்களைப் பெருமைப் படுத்தியது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் தாய் சேய் நலமருத்துவசாலை இல்லாதது ஒரு பெருங் குறையாக இருந்தது. பிள்ளைப் பேற்றின் போதும் பிற காலங்களிலும் பெண்டிரும் ஆடவரும் பிள்ளைகளும் நோயும் வருத்தமுமின்றி வாழவகை செய்யவேண்டு மென்ற எண்ணம் அண்ணமலை வள்ளல் உள்ளத்தில் எழுந்தது. அதற்குத் தக்க அமையம் நோக்கிக் கொண்டிருந்தார்கள். சென்னை மாநிலத் தலைவரான (கவர்னர்) பெண்ட்லண்டு துரையவர்கள் தம் மனைவியாருடன் கானடுகாத்தான் மாளிகைக்கு விருந்தினராக வந்திருந்த போது அவரால் மருத்துவசாலைக்கு அடிப்படைக் கல் நாட்டுவித்தார்கள். மூன்று நூறுயிரம் பொருட் செலவு செய்து சிறந்த மருத்துவ சாலை அமைத்தார். அதற்கு ''லேடி பெண்ட்லண்டு அறமருத்துவசாலை'' எனப் பெயரிட்டார்கள். அம் மருத்துவசாலை சென்னை மாநிலத்திற் சிறந்ததொன்றுகப் பணி செய்து வருகின்றது.

மகளிரும் ஆடவருடன் சமமான வாழ்க்கை நடத்த வேண்டும் என்ற விரிந்த நோக்க முடைய அண்ணுமலை வள்ளல் தமிழ் நாட்டின் தலை நகரமான சென்னைமாநகரத்தில் இரண்டு நூருயிரம் பொருட்செலவில் மகளிர் மன்றம் ஒன்று அமைத்து ''வெல்லிங்டன் கிளப்'' எனப் பெயரிட்டு உதவினுர்கள். அது தக்க இடத்தில் அமைந்திருத்தலால் மகளிர் இனத் திற்குப் பெரிதும் உதவியாயுள்ளது.

சிதம்பர நகரமக்கள் பொதுக் கூட்டங்கள் நடத்துவதற்குப் போதிய இடமில்லாமல் தயக்கமுறுவது கண்ட அண்ணுமலை வள்ளல் சிதம்பர நகரத்திற்கும் புகைவண்டி நிலையத் திற்கும் இடையில் விரிந்த இடம் வாங்கிச் சிறந்ததொரு கட்டடமும் ஆக்கித் தந்தார்கள். அது ''அண்ணுமலை டவுன்ஹால்'' என வழங் கப்பெற்று நகர மக்களுக்குப் பல வகையாலும் பயனளித்து வருகின்றது.

இங்ஙனம் ராவ்பகதூர் அண்ணுமலைச் செட்டியார் அவர்கள் புரிந்த அறச்செயல்கள் நாடெங்கும் நன்கு புகழப்பெற்றன. 1916-ல் சென்னைச் சட்டமன்றத்தின் ஓர் உறுப்பினர் ஆனுர்கள். 1921-ல் இந்திய அரசாங்க சபைத் தேர்தலுக்கு நின்று முதல்வராகத் தேர்ந்தெடுக்கப் பெற்ருர்கள். பின்னர் நடந்த இரண்டு தேர்தல்களிலும் முதல்வராக வெற்றி பெற்று 1921 முதல் 15 ஆண்டுகள் தொடர்ச்சி யாக அரசாங்க சபை உறுப்பினராயிருந்து நாட்டுமக்களுக்கு இவர்கள் செய்த நன்மைகள் பலவாகும். அரசாங்கச் செலவைக் குறைக்க வேண்டு மென்றும், இந்தியரை உயர்ந்தபதவி களில் நியமிக்கவேண்டு மென்றும், இலங்கை செல்லும் இந்தியரை மண்டபத்திற் சோதனை செய்வது பொருத்தமற்ற தென்றும் இவர்கள் அரசாங்க சபையிற் பேசிய பேச்சுக்கள் குறிப் பிடத்தக்கன.

தில்லை நடராசப் பெருமான் எல்லையிலா இன்பநடம் புரியும் பொன்னம்பலத்திற்கு அணிமையில் கோவிந்தராசப் பெருமாள் கோயில் உள்ளது. அது சிதைந்து இடிந்து விழும் நிலையிலிருந்தும் சைவர்களுக்கும் வைணவர்களுக்கும் உண்டான முரண்பாடு காரணமாகப் பழுது பார்க்கப் படாமல் இருந்தது. நம் அண்ணுமலை வள்ளல் அவ் விருதிறத் தாரையும் அமைதியான முறையில் உடன்படச் செய்து கோவிந்தராசருக்குப் புதிய கற்கோயிலமைத்து 25-5-1934-ல் குடமுழுக் காட்டும் நடத்தி வைத்தார்கள்.

இளையாற்றங் குடியில் நித்திய கலியாணி யம்மையுடன் கோயில் கொண்டிருக்கும் கைலாயநாதரே அண்ணுமலை வள்ளலுக்குக் குலதெய்வ மாவர். பாண்டிய மன்னர்களால் கட்டப்பெற்ற அம்மையார் கோயில் காலப் பழைமையால் பழுதுற்றிருந்தது. அக்கோயி லைப்புதிதாகக் கட்டிமுடித்துத் திருக்குளத் தையும் செப்பஞ் செய்து 28-5-1939 -ல் குடமுழுக்கும் நடத்தினுர்கள்.

மேலும், கருவூர்ப் பசுபதீசுரர் கோயில், கொழும்பு இந்துக் கோயில், திருவேட்களம் பாசுபதநாதர் கோயில், திருவண்ணுமலை அருணுசலேசுரர் கோயில் முதலான கோயில் களுக்கு இவர்கள் செய்த திருப்பணிகளும் உதவிகளும் பல.

1917-ல் சென்னையில் நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கம் என ஒரு சங்கம் நிறுவி, அதில் தம்மரபினர் அனைவரையும் உறுப்பினர் ஆக்கினுர்கள். சென்னைச் சட்டமன்றத்திலும், பர்மாச்சட்டமன்றத்திலும் தனவணிக மர பினர்க்கு ஓரிடம் கொடுக்க வேண்டு மென முயன்று வெற்றி பெற்ருர்கள். பர்மாப்பிரி வினையின் போதும், செய்கோனில் தனவணிகர் சிலர் நாடு கடத்தப்பட்ட போதும், இரண் டாவது உலகப் பெரும் போர் நடைபெற்ற காலத்திலும் வெளிநாடுகளில் தொழில் செய்து வந்த நகரத்தார் மரபினருக்கு ஏற்பட்ட அல் லல்களுக்கு அளவில்லை. அவர்களெல்லோரும் அண்ணுமலை வள்ளலுடைய உதவியை நாடினர். இவர்களும் காலந் தாழ்க்காமல்

உடன்பட்டு டில்லி அரசாங்கசபைக்கும், இங்கிலாந்து பாரிஸ் முதலான வெளி நாடுகளுக்கும் சென்று ஆங்காங்கு உள்ள உள்நாட்டு வெளி நாட்டு அமைச்சர்களைக் கண்டார்கள். அவர்கள் மனம் ஏற்றுக்கொள்ளுமாறு தொழில் துறைகளுக்கும் தம்மரபினர்க்கும் நேர்ந்துள்ள துயரங்களை நயமாக எடுத்துக் கூறினர்கள். அவர்கள் சட்டங்களில் வேண்டுந்திருத்தங்கள் செய்து இவரை வெற்றிவீரராகத் திரும்பும்படி செய்தனர். சமூகத்தாரனைவரும் அண்ணுமலை வள்ளலின் வினைத்திட்பத்தையும் மதிநுட்பத்தையும் வியந்து பாராட்டி மகிழ்ந்தார்கள்.

வெளிநாட்டுயாத்திரை :—

ஒரு சிறு நிலப்பரப்பில் வாழும் ஆங்கிலேயர்கள் ஐந்து கண்டங்களிலும் ஆட்சி செலுத்துகின்றனர். பிறநாட்டாரைக் காட்டிலும் கல்வியிலும் வாணிகத் துறையிலும் சிறந்து விளங்குகின்றனர். இதற்குக் காரணமான நுட்பங்கள் இவையெனக் கண்டறிய வேண்டுமென அண்ணுமலை வள்ளல் எண்ணினுர். அதனுல் 1911-ல் முதல் முறையாக இங்கிலாந்து சென்ருர்கள். இவர்கள் அங்கே தங்கியிருந்த காலத்தில் ஐந்தாம் சார்ஜ் மன்னர்க்கு முடிசூட்டு விழா நடைபெற்றது. பல நாட்டு அரசர்கள் அமைச்சர்கள் முதலானேர் குழுமியிருந்த அவ்விழாவிற் கலந்து கொள்ளும்படி அண்ணுமலை வள்ளலுக்கும் அழைப்புவந்தது. இவர்களும் முடிசூட்டும் விழா மண்டபத்திற்குச் சென்று ஆங்கு நடைபெற்ற பல சிறப்புக்களையும் கண்டு களிப்புற்ருர்கள். மேலும், பல திங்கள் இங்கிலாந்திலிருந்து ஆங்கிலேயருடைய ஒழுக்க வழக்கங்கள், நேர்மை, பரந்த உலகியலறிவு, காலத்தைப் பொன்னேபோற் போற்றி பயன்படுத்துதல் முதலான செயல் முறைகளைக் கூர்ந்து நோக்கினுர்கள். ஆக்ஸ்போர்டு கேம் பிரிட்ஜ் பல்கலைக் கழகங்களின் அமைப்புக்களும் நடைமுறைகளும் இவர்கள் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தன.

இரண்டாவதுமுறை 1935 ல் இங்கிலாந்து சென்றபோது தம் வாழ்க்கைத்துணைவியாரான அரசியாரையும் உடனழைத்துச் சென்ருர்கள். அப்போது ஐந்தாம் சார்ஜ் மன்னர்பிரானைக் கண்டு அளவளாவிமகிழும் வாய்ப்புக் கிடைத்தது. அவர் நம் செட்டிநாட்டு அரசர் பெருமானையும் அரசியாரையும் அகமும் முகமும் மலர வரவேற்று உபசரித்தார். இஃது எல்லோர்க்கும் கிடைத்தற்கு அரியதொரு பெரும் பேருகும். பின்னர், பிரான்சு, சேர்மனி, சுவிட்சர்லாந்து, இத்தாலி முதலான நாடுகளுக்குச் சென்று ஆங்காங்கு உள்ள அழகிய நகரங்களையும் இயற்கைக் காட்சிகளையும் பிற நிகழ்ச்சிகளையும் கண்டு திரும்பினர். நகரத்தார் மரபினர் தம் மனைவியரை வெளிநாடுகளுக்கு அழைத்துச்செல்லும் வழக்கம் அறவேயில்லாத அக்காலத்தில் செட்டிநாட்டு அரசருடன் சென்று உலகநாடுகள் சுற்றிப்பார்த்துவந்த பெருமை அவர் தம் மனைவியாரான சீதையாச்சி யென்னும் மாதரசியார்க்கே உரியதாகும். பழமை நலமும் புதுமை யெழிலும் கலந்து வாழவேண்டுமென்ற கருத்துடைய அண்ணுமலை யரசர் வெளிநாட்டிலுள்ள தம் கடைகளுக்கு அனுப்பும் இளைஞர்களைத் தத்தம் மனைவியருடன் செல்லுமாறு பணித்தனர். அதனுல் அவ்விருபாலாரும் அரசரை நெஞ்சார நினைந்து வாயார வாழ்த்தினர். இவ்வாறு காலத்திற்கேற்ற சீர்திருத்தம் செய்தது இவர்களது பரந்த உலகியலறிவிற்குச் சிறந்த சான்ருகும்.

கல்வித்தொண்டு :—

அண்ணுமலை வள்ளல் முதன்முறையாக இங்கிலாந்து சென்றிருந்தபோது ஆக்ஸ்போர்டு கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகங்கள் இவர்களது உள்ளத்தைக் கவர்ந்தன என்பதை முன்பே யறிந்தோம். அந்நாள் முதல் முதல்தரமான கல்லூரி யொன்று நிறுவிப் பல துறைக்கல்வியையும் வளர்த்து அறிவொளி பரப்பி நாட்டு மக்களுடைய அறியாமை யிருளைப் போக்குதல் வேண்டும் என்ற பெரு நோக்கம் இவர்கள் உள்ளத்தில் ஆழப்பதிந்திருந்தது. அது நாளடைவில் முளைத்துக் கிளைத்துச் செழித்து வளர்ந்து முழு மரமாகிப் பூத்துக் காய்த்துப் பயன் விளைக்கத் தொடங்கிற்று. இது தமிழ்நாடு செய்த தவப்பயனென்றே கூறலாம்.உடற்பிணிதீர்க்க மருத்துவசாலை

நிறுவிய அண்ணுமலே வள்ளலுக்கு மக்களின் உயிர்ப்பிணியாகிய அறியாமையை நீக்கி அறிவுச் சுடர் பரப்பவேண்டும் என்ற ஆர்வம் உண்டாதல் இயற்கைதானே!

பாண்டி நாட்டின் தலைநகராகிய மதுரைமாநகரம் முத்தமிழ் வளர்த்த முதல் இடமாதலின் அங்கு முதல்தரமான கல்லூரி நிறுவ வேண்டுமென முயன்ருர். அதற்காக விரிந்த நிலமும் வாங்கினுர்கள். ஏதோ ஒரு காரணத்தால்அவ்வெண்ணம் மாற்றப்பட்டது. அந்நிலத்தையும் அதிற் கட்டிடங்கட்டுதற்கு வேண்டும் பொருளேயும் மதுரைக் கல்லூரிக்கு நன்கொடையாக வழங்கிவிட்டுத் தில்லேயை நோக்கினுர்கள்.

தம் தந்தையாரும் தமையனுர் திவான் பகதூர் இராமசாமி செட்டியார் அவர்களும் சிவத் திருப்பணியும் பொது நலத்தொண்டுகளும் செய்த இடம் சிதம்பரம் ஆதலின் அத்திருத் தலமேகல்லூரியமைத்தற்கும்சிறந்தஇடமெனத் தீர்மானித்தார்கள். மேலும், 1918ல் தம் தமையனுர் இராமநாதன் செட்டியார் சிவபதம் எய்தினமையால் அவர் பெயரால் நடைபெற்று வரும் நகர உயர்நிலேப்பள்ளியைப் பேணி வளர்த்தலும் இவர்கள் பொறுப்பாயிருந்தது. அதனுல் 1920ல் அவ்வுயர்நிலேப்பள்ளியில் கல்லூரி முதல் வகுப்பும் தொடங்கி நடைபெறத் திட்டம் செய்தார்கள். ஆயினும் உள்ளுவதெல்லாம் உயர்வே யுள்ளும் அண்ணுமலே வள்ளலுக்கு அவ்வளவில் அமைதியுண்டாக வில்லே. ஊர்நடுவில் அமைந்திருக்கும் அவ்வுயர்நிலேப்பள்ளி கல்லூரிக்கேற்றவாறு விரிவு படுத்துதற்குப் போதிய இடம் உடையதன்று. அருகிலுள்ள மனேகளேயும் வாங்குதல் அரிது என்பது அவர்களுடைய எண்ணம். எனவே தில்லேப்பதியின் கீழ்பால் எல்லேயில்ஒன்றரைக் கல் தொலேவில் உள்ளதும், தில்லேக்கூத்தப் பிரானே வழிபடவந்த ஞானசம்பந்தப் பிள்ளேயார் தங்கியிருந்ததும், அவராலும் திருநாவுக்கரசராலும் தேவாரப் பதிகங்கள் பாடப்பெற்றதும் ஆகிய திருவேட்களத்தில் சிந்தை செலுத்திஞர்கள். திருவருள்வயத்தால் அதனேயடுத்துக்கள்ளியும் முள்ளியும் அடர்ந்து காடாகக் கிடந்த நிலப்பரப்பைக் கண்டார்கள். இதுவே கல்லூரி யமைத்தற்குப் பொருத்தமான இடமெனத்துணிந்தார்கள். விரைந்து நூறுஏக்கர் நிலம் முதலில் வாங்கினுர்கள். கட்டிட வேலே ஆரம்பமாகியது. 1922ல் அப்புதியகட்டிடத்தில் பி. ஏ. வகுப்புத் தொடங்கப் பெற்றது. தம் அருமை அன்னேயார் நினேவாக 'மீனுட்சிகலேக் கல்லூரி' என அதற்குப் பெயர் சூட்டினுர்கள். அதனேயடுத்து மீனுட்சி தமிழ்க் கல்லூரி, மீனுட்சி வடமொழிக் கல்லூரி, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, இசைக் கல்லூரி யென ஒன்றன்பின் ஒன்ருக ஐந்து கல்லூரிகள் 1929க்குள் நிறுவப்பெற்றன. பல நூறு மாணவர்கள் விஞ்ஞானக் கல்வி முதலான பல துறைக் கல்விபயின்றனர். மாணவர் உண்டு உறையும் விடுதிகளும், ஆசிரியர் சிலர்க்கு வீடுகளும் கட்டி முடிக்கப் பெற்றன. இதனுல் இவர்கள் எண்ணியதை முடிக்கும் ஆற்றல் மிக்கவர் என்பது இனிது புலப்படுகின்றதல்லவா?

செயற்கரும் செயல் செய்த தீரர்

இந்தியாவில் வழங்கிவரும் பல மொழிகளுக்கும் தனித் தனிப் பல்கலேக் கழகங்கள் இருந்தன. சென்னே மாநிலத்தைச் சேர்ந்த கன்னடருக்கு மைசூர்ப் பல்கலேக் கழகம் உண்டு. 1926ல் ஆந்திரரும் தனிப் பல்கலேக் கழகம் அமைத்துக் கெண்டனர். இவற்றிற்கெல்லாம் முதன்மையும், தொன்மையும் வாய்ந்த அமிழ்தினும் இனிய தமிழ்மொழிக்குத் தனிப்பல்கலேக் கழகம் இல்லே. தமிழ்ப் பண்பாடுகள் வளர்தற்குத் தனிப் பல்கலேக் கழகம் வேண்டும் என்று தமிழ்நாட்டுத் தலேவர்களும் தமிழார்வமுடையோரும் மேடைகளில் நின்று வீரமுழக்கம்செய்தனர். ''சொல்லுதல்யார்க்கும் எளிய அரியவாம், சொல்லிய வண்ணம் செயல்'' என்றவாறு எங்கும் இதுவே பேச்சாக இருந்தது. ஆனுல், பல்கலேக் கழகம் நிறுவ யாரும் முன்வரவில்லே. சொல்லுதல் அரிது; சொல்லிய வண்ணம் செய்தல் எளிது என்ற தன்மையுடையராய் அவற்றையெல்லாம் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்த தமிழ்நாட்டுத் தனிப் பெருவள்ளலாகிய அண்ணுமலே வள்ளல் அரசாங்கத்தார்க்கு அடக்கமாக அறிவிப்புச் செய்தனர்

அஃதாவது, "மீனாட்சி கல்லூரிகளும், நூல் நிலையங்களும்,மாணவர்விடுதி முதலாயினவும், இவற்றைச் சூழ்ந்துள்ள நிலப் பரப்புக்களும் 20 லட்சம் ரூபாய் (அக்காலத்தில்) மதிப்புடையன. மேலும் இருபது லட்சம் ரூபாய் வழங்குகின்றேன், இக்கல்லூரிகளை ஒன்றாக இணைத்துப் பல்கலைக்கழகம் ஆக்குங்கள்" என்பதேயாம். இவர்களுடைய வண்மைக் குணத்தையும் மனத் திண்மையையும் கண்டு வாயார, மனமாரப் பாராட்டி, அரசாங்கத்தார், "நாங்களும் இருபது லட்சம் ரூபாய் வைப்பு நிதியாக வழங்குகின்றோம். கட்டிடங்கள் கட்டுவதற்கு ஏழரை லட்சமும், ஆண்டு தோறும் உதவித் தொகையாக ஒன்றரை லட்சமும் உதவுவோம். இப்பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் என்றும், இதனைச் சார்ந்து உண்டான நகரம் அண்ணாமலை நகரம் என்றும், எந் நாளும் வழங்கப்பெறும்" என்று கூறி உடன்பாடு தெரிவித்தனர். இச் செய்தியை அறிந்த தமிழ் மக்களெல்லோரும் வாழ்க அண்ணாமலை; வளர்க பல்கலைக் கழகம் என மனமகிழ்ந்து வாழ்த்தினர்.

மேலும், கட்டிடங்கள் கட்டுவதற்காகவும், பரிசுகளுக்காகவும் பல லட்சங்கள் வழங்கினார்கள். இப் பல்கலைக் கழகம் இப்போது மூவாயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்களும், முப்பதுக்கு மேற்பட்ட பல துறைப் பகுதிகளும், பல்கலைக்கழகத்துக்கு வேண்டும் உறுப்புக்கள் அனைத்தும் நிரம்பப்பெற்றுப் பல கோடி மதிப்புடையதாய் நாளும் வளர்ந்து வருகின்றது. தனியொருவர் நிறுவிய பல்கலைக் கழகம் இதனையன்றி இந்தியாவில் வேறெங்கும் இல்லை. வெளி நாடுகளிலும் ஒன்றிரண்டைத் தவிர அதிகம் இல்லையென்றே கூறலாம். இப்பல்கலைக் கழகம் சில ஆண்டுகளுக்கு முன் சிறந்த முறையில் வெள்ளி விழாக் கொண்டாடப் பெற்றுப் பொன் விழாவிற்கு அடிகோலி நிற்கின்றது.

தன்னேரில்லாத் தனிப் பெருந்தலைவர் எனப் பொன்னெழுத்துக்களாற் பொறித்து வைக்கத் தகுந்த நம் அண்ணாமலை அரசர், மேலும், மதுரைக் கல்லூரிக்கு இடமும் பொருளும் உதவியதோடன்றி, மதுரை அமெரிக்கன் கல்லூரிக்கு மாணவர் விடுதியொன்று கட்டிக் கொடுத்தார்கள். திருச்சிராப்பள்ளியிலுள்ள தேசீய உயர்நிலைப்பள்ளி, சென்னையிலுள்ள பின்னத்தூர்ச் சுப்பிரமணிய ஐயர் உயர்நிலைப் பள்ளி, இராமகிருஷ்ண நிலையம், சேவா சதனம், இந்தியன் செஞ்சிலுவைச் சங்கம், கிறித்தவ வாலிபர் சங்கம், டில்லியிலுள்ள இர்வின் பாடசாலை, மகளிர் கல்விக் கழகங்கள் கொழும்பு, பர்மா இவற்றிலுள்ள கல்வி நிலையங்கள் ஆகியவற்றிற்குப் போதிய பொருளுதவி செய்துள்ளார்கள். டேராடூனிலுள்ள இந்தியர் பொது மக்கள் கல்விச்சாலைக்குச் சற்றேறக் குறைய அரை லட்சம் ரூபாய் நன்கொடையாக வழங்கினார்கள். சாந்தினிகேதனத்திற்கு இரண்டாயிரம் புத்தம் புதிய தமிழ் நூல்களைப் பரிசாகக் கொடுத்து உதவினார்கள். கலைக்களஞ்சிய வெளியீட்டிற்குப் பதினாயிரம் ரூபாய்கள் அளித்தார்கள். இன்னும் பல சங்கங்களுக்கும், சபைகளுக்கும், வழங்கிய தொகைகள் வரம்பிலவாகும். ஊருணி நீர் நிறைந் தற்றே உலகவாம், பேரறிவாளன் திரு "என்ற வள்ளுவர் வாய்மொழி இவர்கள் பால் முற்றும் உண்மையாயிற்று.

பட்டங்களும் பதவிகளும்

காரைக்குடி நகராண்மைக் கழகத் தலைவராயிருந்த போது அரசாங்கத்தார் இவர்களுக்கு "ராவ்பகதூர்" பட்டம்அளித்த செய்தி முன்பே கூறப்பட்டது. 1922ல் மீனாட்சி கல்லூரி நிறுவிய பின் 'திவான் பகதூர்' பட்டம் கிடைத்தது. 1923ல் திவான்பகதூர் அண்ணாமலைச் செட்டியார் சர். அண்ணாமலைச் செட்டியார் ஆனார். 4—3—1929ல் தகுதியான பட்டம் ஒன்று கிடைத்தது, அதுவே "பரம்பரை ராசா" என்னும் பட்டமாகும். முடிசூடா மன்னரான வள்ளல் அண்ணாமலை அரசர்க்கு அப்போது உள்நாட்டு நகரங்களிலும், வெளி நாடுகளிலும் பல வரவேற்புக்களும், உபசாரங்

களும் நடைபெற்றன. இவர்கள் செய்துள்ள கல்விப் பணியைப் பாராட்டிச் சென்னைப் பல் கலைக் கழகம் 3—8—1932ல் எல். எல். டி. என்ற சட்ட டாக்டர் பட்டம் வழங்கியது. 9—2—1942ல் அண்ணமலை பல்கலைக் கழகம் டி. லிட். என்றஇலக்கிய டாக்டர் பட்டமளித்துப் பெருமிதம் அடைந்தது. இப் பட்டங்களெல் லாம் இவர்களைச் சார்ந்து பெருமை பெற்றன. இவர்கள் அனைத்து இந்திய இம்பீரியல் பாங் கின் கவர்னராக இருந்து பத்து ஆண்டுகள் திறம்படச் செயலாற்றினர்கள். வர்த்தக சங்கங்கள், பேங்குகள் பலவற்றில் இவர்கள் சிறந்த தொடர்பு கொண் டிருந்தார்கள்.

தமிழிசைத் தந்தை

இயல், இசை, நாடகம் என்னும் முப் பெரும் பிரிவினதாய் எத்துணையோ ஆயிரம் ஆண்டுகளாக வழங்கிவருவது தமிழ் மொழி. தமிழ்ப் பாடல்களைப் பொருத்தமான இசை யுடன் இயைத்துப் பாடுவது தமிழிசை யென்று கூறப்பெறும். இசைவாணர்கள் பல ஆண்டு ளாக வேற்று மொழிப் பாடல்களை மிகுதியாகப் பாடி வந்தனர். தமிழ் நாட்டில் தமிழிசைப் பாடல்களை மிகுதியாகப் பாடவேண்டும்; பிற மொழிப் பாடல்களும் சிறிது பாடலாம்; என்ற தோர் இயக்கத்தை நம் அண்ணமலையரசர் தொடங்கினர்கள். இதற்கு எதிர்ப்புக்கள் பல இருந்தன. அவற்றிற் கெல்லாம் தக்கவாறு மறுமொழி கூறினர்கள். பல தமிழிசை மாநாடு கள் நடந்தன. சென்னையில் தமிழிசை ச்சங்கம் நிறுவப் பெற்றது. டாக்டர் சர். ஆர். கே. சண் முகம் செட்டியார் முதலான நண்பர்களின் உதவியுடன் அச்சங்கத்திற்கு நிலையானதொரு சிறந்த கட்டிடம் கட்டி முடிக்கப் பெற்றது. தமிழிசைக் கல்லூரி பல மாணவ, மாணவியர்க் குத் தமிழிசை கற்பித்து வருகின்றது. அச் சங்கத்தின் சார்பில் ஆண்டு தோறும் தமிழிசை விழாவும், தேவாரப்பண் ஆராய்ச்சியும் சிறப் பாக நடைபெற்று வருவது குறிப்பிடத் தக்க தாகும். இப்போது தமிழிசையை யாவரும் பாடுகின்றனர். இந்நிகழ்ச்சிகளால் இவர்களைத் தமிழிசைத் தந்தை யென்று கூறுதல் சாலப் பொருந்துவதாகும்.

தமிழ்ப்பற்று :—

புலவர் பாடும் புகழுடையோராகிய அண்ணமலையரசர்க்கு இளம்பருவந்தொட்டுத் தமிழ் நூல்களிலும் சைவ சமயத்திலும் உண்மையான பற்று உண்டு. ஓய்வு கிடைக் கும் போதெல்லாம் திருக்குறளைப்படிப்பார்கள். சிறந்த கருத்தமைந்த பாக்களைத் தனியே குறித்துக்கொண்டு அவற்றின் பொருளைச் சிந்தித்துத் தெளிந்து உள்ளத்தில் அமைத்துக் கொள்வார்கள். தேவார திருவாசகங்களைப் படிப்பதிலும் பிறர் பாடக்கேட்பதிலும் மிக்க ஆர்வங்காட்டுவார்கள். அண்ணமலைப் பல் கலைக் கழகத்தில் தமிழ் மொழிக்குப் பலவகை யாலும் முதன்மையளித்தார்கள். ஆத்தங் குடியில் நடைபெற்ற விழாவில் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை யவர்களுக்கும்,காரைக் குடியில் நடந்த விழாவில் மகாமகோபாத் தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்களுக்கும் தமது கையாற் பொன்னுடை போர்த்துப் பெருமைப் படுத்தினர்கள். இவற் ருல் அண்ணமலையரசருடைய தமிழ்ப் பற்றை யுணரலாம்.

மக்கட்செல்வம் :

அண்ணமலை அரசர்க்கு ஆண்மக்கள் மூவர். பெண்மக்கள் நால்வர். ஆக மக்கள் எழுவர் உள்ளனர். அவருள் மூத்தமகனுகிய டாக்டர். இராசா. சர். முத்தைய செட்டியார் அவர்கள் இப்போது அண்ணமலைப் பல்கலைக் கழகத்தின் இணைவேந்தராயுள்ளார்கள். இவர் கள் இளமைப்பருவத்திலே கல்வியில் ஆர்வங் கொண்டு தமது பத்தொன்பதாம் வயதில் (1924-ல்) பி. ஏ. பட்டம் பெற்ருர்கள். அது முதல் வணிகத்துறையிலும் பொதுநலப் பணி களிலும் ஈடுபட்டார்கள். 1929 ஆம் ஆண்டில் சென்னை நகரமன்ற ஆட்சிக்குழுவில் உறுப் பினர் ஆனர்கள். மூன்ருண்டுகளுக்குள் அந் நகரத்தின் முதல் மேயராகத் தேர்ந்தெடுக்கப்

பெற்ருர்கள். இவர்கள் மேயராகவீற்றிருந்து செய்த நன்மைகளால் இரண்டாவது முறையும் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றுப் பணிபுரிந்தார்கள். 1930 ஆம் ஆண்டுமுதல் சென்னைச் சட்ட மன்றத்தின் உறுப்பினராக இருந்து வருகிருர்கள். இத்துணையாண்டுகள் தொடர்ச்சியாகச் சட்டமன்ற உறுப்பினராயிருப்பவர் வேறுயாரும் இல்லையென்றே கூறலாம். 1936-37ஆம் ஆண்டில் சென்னை மாநிலக்கல்வி சுகாதார அமைச்சராக வீற்றிருந்து செயலாற்றினுர்கள். கல்வி அமைச்சர் என்ற முறையால் சென்னைப் பல்கலைக் கழகத்தின் இணைவேந்தராகவும் இருந்தார்கள். ஒரே காலத்தில் தந்தையார் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின் இணைவேந்தராகவும், மைந்தர் சென்னைப் பல்கலைக் கழகத்தின் இணைவேந்தராகவும் விளங்கியது வியந்து பாராட்டுதற்குரியது. பச்சையப்பர் அறநிலைய ஆட்சியாளர் குழுவில் 1928 ஆம் ஆண்டுமுதல் உறுப்பினராயிருக்கின்ருர்கள். அக்குழுவின் தலைவராய் இவர்கள் இருந்தபோது அக்கல்லூரி நூற்ருண்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. சென்னை மாகாணப் பாங்கின் விசாரணைக் குழுவில் உறுப்பினராயிருந்தார்கள். இம்பீரியல் பாங்கின் டைரக்டர் பதவிபெற்றுப் பல ஆண்டுகளாக நற்றெண்டாற்றியுள்ளார்கள். தென்இந்திய வணிகர் சங்கத்தின் தலைவராயும், அரசப் பிரதிநிதியின் தேசீயப் பாதுகாப்புக் குழுவின் உறுப்பினராயும் இருந்து செயலாற்றியுள்ளார்கள். இன்னும் இவர்கள் தொடர்புகொண்டுள்ள சங்கங்களும் பொதுநல நிலையங்களும் பலவாகும். இவர்களுடைய அறிவாற்றல்களையும் பொதுநலப்பணிகளையும் பாராட்டி, அரசாங்கத்தார் 12-6-1941-ல் 'சர்' பட்டமளித்துப் பெருமைப்படுத்தினர். தந்தையாரும் மைந்தரும் ஒரு காலத்தில் 'சர்' பட்டம் பெற்று விளங்கியது குறிப்பிடத்தக்கது. அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின் வெள்ளி விழாக் கொண்டாட்டத்தில் இவர்களுக்கு டாக்டர் பட்டம் வழங்கிப் பல்கலைக் கழகம் பெருமைபெற்றது. இவர்களுடைய குமாரர் குமார ராஜா முத்தைய செட்டியார் அவர்கள் சென்னை நகர ஷெரிப் ஆகச் சீரிய தொண்டாற்றிய செய்தி நாம் அறிந்ததே. அண்ணுமலைப்பல்கலைகழக இணைவேந்தர் டாக்டர் ராஜா சர். முத்தைய செட்டியார் அவர்கள் முத்தமிழ்ப்புரவலராகவும் தன்னேரில்லாத் தனிப்பெருந்தலைவராகவும் விளங்குகிருர்கள். இவர்களின் தம்பியராகிய திரு. இராமநாதன் செட்டியார் அவர்கள், திரு. சிதம்பரம் செட்டியார் அவர்கள் ஆகிய இருவரும் சென்னை நகர மேயராகத் திறம்படப் பணியாற்றியவர்கள். இத்தகைய அறிவறிந்த மக்களைப் பெற்று அகம் மிக மகிழ்ந்தார்கள் அண்ணுமலை அரசர். இந்த நன்மக்களைப் பெறுதற்கு இவர்கள் தந்தையார் என்னதவம் செய்தார்களோ என்று உலகம் பாராட்டும்படி மக்கள் வாழ்ந்து வருகின்ருர்கள்.

அண்ணுமலை அரசர்க்கு அறுபதாம் ஆண்டு நிறைவு விழா கானுடுகாத்தான் அரண்மனையில் மிக்க சிறப்புடன் நடைபெற்றது. அவ்விழா நிகழ்ச்சிகள் ஆங்குக் குழுமியிருந்த அரசர்கள் அமைச்சர்கள் அறிஞர்கள் செல்வர்கள் முதலான பல்லாயிரவருடைய கண்ணுக்கும் செவிக்கும் கருத்திற்கும் நாவிற்கும் களிப்பூட்டின. கல்விக் கழகங்கள் அறநிலையங்கள்முதலியவற்றிற்கு அரசர்பெருமான் மூன்றரை லட்சம் ரூபாய் நன்கொடையாக வழங்கினர். அண்ணுமலைப் பல்கலைக் கழகம் ஆயிரத்திருநூறு பக்க அளவில் அரியதொரு நினைவு மலர் வெளியிட்டது.

இங்ஙனம் பல்லாற்ருனும் நல்வாழ்வு வாழ்ந்து அழியாப் புகழ்படைத்த அண்ணுமலையரசரின் குறிக்கோள் இவையென்பதனை அவர்கள் எழுதிய எழுத்திற் காணலாம்.

"ஸ்ரீ நடராசப்பெருமானைத் தினமும் வணங்குவேன். அண்ணுமலை சர்வகலாசாலையின் வளர்ச்சியை ஒவ்வொரு நாளும் சிந்திப்பேன். தமிழ்நாடெங்கும் தமிழிசை முழங்க வேண்டுமென்பது எனது ஆவல். ஈட்டலும்

காத்தலும் வகுத்தலும் என் வாழ்க்கையின் கொள்கை".


இத்தகைய உயர்ந்த குறிக்கோளும் சிறந்த பண்பாடும் நிறைந்த மனமும் உடைய வராய் அறங்கள் பலபுரிந்த செட்டிநாட்டு அரசர்பெருமான் டாக்டர் ராசா சர். அண்ணுமலைச் செட்டியாரவர்கள் தம் அறுபத் தேழாம் வயதில் (15–6–1948-ல்) சிவபிரான் திருவடி நீழலிற் கலந்தனர். இவர்களது பெரும் பிரிவு எல்லோர்க்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாயிற்று.

மக்கட் பிறப்பால் எய்துதற்குரிய பெரும் பேறுகளெல்லாம் குறைவின்றிப் பெற்ற அண்ணுமலையரசரின் அரும்பெறற் புகழ் என்றும் அழிவின்றி நின்று நிலவுக; அப் புகழ்க்குக் காரணமாய் அவர் வகுத்த அறங்க களெல்லாம் நாளும் வளர்க; அவற்றைப் போற்றிப் புரந்துவரும் மக்களும் அவர்கள் வழித்தோன்றல்களும் நீடூழி வாழ்க என வாழ்த்துவோமாக.

★ ★


★

கணேசர் செந்தமிழ்க் கல்லூரி ஆசிரியர்கள் 1959-60.



திரு க. சங்கரநாரயண பிள்ளை, விரிவுரையாளர் திரு மு. கோவிந்தராசன், விரிவுரையாளர் திரு R. சோமசுந்தரனர், விரிவுரையாளர் திரு கோ. இராமலிங்கனர், முதல்வர்

திரு கு. மா. நாரராயணசாமிப் பிள்ளை, விரிவுரையாளர் திரு S. நடேசய்யர். எழுத்தாளர்



உயர்திரு. பெரும் புலவர்,
சோழவந்தானூர் அரசஞ் சண்முகனுர், அவர்கள்,
1868 - 1915.

★ அரசஞ்சண்முகனர் ★

வித்துவான். கு. மா. நாராயணசாமிப் பிள்ளை

தமிழ் விரிவுரையாளர், க. செ. கல்லூரி, மேலைச்சிவபுரி.

மதுரைமாவட்டத்திலுள்ள சோழவந்தான் என்னும் ஊரில் வேளாண் மரபினராகிய அரசப்ப பிள்ளை யென்பவர் ஒருவர் இருந்தார். அவர்க்கு அருந்தவப் புதல்வராக, 1868ஆம் ஆண்டு செப்டெம்பர்த்திங்கள் 15ஆம் நாளில் நம் சண்முகம் பிள்ளை யென்னும் மாபெரும் புலவர் தோன்றினர். தந்தையார் அரசப்ப பிள்ளையாதலாலும், இவர் புலவர்களுக் கெல்லாம் அரசர் போன்று புலமை நலம் பெற்றுச் சிறந்து விளங்கியமையாலும் இவ் விருவகை நயமுந் தோன்ற இவரை யாவரும் அரசஞ் சண்முகனர் என்றே அழைப்பாராயினர். இவர் இளமைப் பருவத்தில் பன்னிரண்டு ஆண்டுகள் வரை கல்வி கற்காமல் காலம் போக்கினர். பின்னர், சோழவந்தானிலுள்ள சைவ மடத்தில் அப்போது தலைவராயிருந்த சிவப்பிரகாச அடிகளாரிடத்தில் முறையாகப் பலஆண்டுகள் பயின்று தமிழ்ப் புலவர் ஆனர். மேலும் பழந் தமிழ் இலக்கிய, இலக்கணங்களைத் தாமாகவுங் கற்றுப் பெரும் புலவர் ஆயினர். நூலாராய்ச்சியிலும், எழுதும் வன்மையிலும், விரைந்து செய்யுளியற்றுந் திறத்திலும் சிறந்து விளங்கினர். இலக்கணக் கடல் என்று இவரை யெல்லோரும் பாராட்டுவர். இவர்காலத்து வாழ்ந்த பெரும்புலவர் அனைவரும் இவர்பாற் பெரு மதிப்பும், பேரச்சமும் கொண்டிருந்தனர். சித்தர் நூல், மருத்துவ நூல், சோதிட நூல்களிலும் நல்ல பயிற்சி பெற்றிருந்தார்.

இவர் இத்துணைக் கல்விகள் நிரம்பப் பெற்றவராயினும் இவர் படித்தவர், புலவர் என்று பிறர் எளிதில் அறிந்து கொள்ள இயலாதவாறு மிகவும் எளிய தோற்றத்துடன் இருப்பார். யாவரிடத்தினும் இனிமையாகப் பழகுவார். ஆடம்பரம் என்பது இவர் அறியாததொன்று. ஏழைகள்பால் இரக்கம் மிக்கவர். செய்ந்நன்றி மறவாதவர். அறிவாராய்ச்சித் துறையில் புலவர்களோடு வாதஞ்செய்ய நேரின் அஞ்சாமையின் வடிவாக நின்று எதிர்ப்பர். அந்நிலையில் யாரையும் பொருட் படுத்தமாட்டார். இவர் பேச்சிலும், எழுத்திலும் உள்ள நுட்பங்களைக்கண்டு கொள்ளப் பெரும் புலவர்களும் திகைப்பர். இரு பொருள்பட விரைந்து எழுதுதல் இவர்க்கு மிகவும் எளிவந்ததோர் செயலாகும். வரவுக்குமேல் செலவு செய்து வாட்டமுறினும் மனங்கலங்கா திருத்தல் இவரது இயல்பு.

1920ஆம் ஆண்டில் மதுரை சேதுபதி உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராயமர்ந்து 12 ஆண்டுகள் பணியாற்றினர். பாலவனத்தம் சமீன்தாரராகிய பாண்டித்துரைத்தேவர் அவர்களால் நிறுவப் பெற்ற மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பான செந்தமிழ்க் கல்லூரியில் 1901 முதல் தமிழாசிரியராக வீற்றிருந்து தமிழ்ப் பணி செய்தார். சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராயிருக்கும் போது இவருக்கு வயிற்றில் ஒரு கட்டி தோன்றியது. அதற்குத் தஞ்சையில் மருத்துவராக இருந்த எச். எம். ஹக்கீம் என்பவரிடம் அறுவை மருத்துவம் செய்து கொண்டார். அதனுல் அகத்ததோ, புறத்ததோ என இருந்த அவரது உயிர், நிலைபெறுவதாயிற்று. தமக்கு ஆவியும் உடலும் அளித்த அம் மருத்துவப் பெருமகனர்க்கு நன்றி தெரிவிக்கும் பொருட்டுத் தாம் எழுதிய தொல்காப்பிய விருத்தி என்னும் ஆராய்ச்சி நூலை அவர்க்கு உரிமையாக்கினர்.

மகாமகோபாத்தியாய பண்டிதமணி கதிரேசச் செட்டியார் அவர்களும் அரசஞ் சண்முகனரும் உள்ளங் கலந்த நட்புரிமை கொண்டு ஒழுகினர்கள். கற்றுரைக் கற்றுர் காமுறுதல் இயற்கைதானே! இவர் பண்டித மணி யவர்களுக்கு எழுதிய ஒரு கடிதத்தையும்

அது கண்டவுடன், உடுக்கையிழந்தவன் கை இடுக்கண்களைய முற்படுவது போலப் பண்டித மணியவர்கள் விரைந்து செய்த உதவியையும் இனிக் காண்போம்.

18—12—06

சோழவந்தான்

அன்புருவாய நண்பரவர்கள் சமூகத்துக்கு

வந்தனம்

உபயகுசலோபரி.

தங்களை விட்டு நீங்கி இவ்விடம் வந்த பின், கார்த்திகை 15வ வரை சில காரணத்தால் திண்டுக்கல் முதலாய சிலவிடத்துக் கடிதப் போக்கு வரத்தின்றியும், பிறரறியாதும் வசிக்க நேர்ந்தது. அதனால் தங்களுக்கும், ஏனை யோருக்கும் கடிதம் எழுதுதல் தடையுற்றது.

கனம் டிரசர ரவர்கள் மூன்று கடிதம் எழுதியும் என் கைக்கு எட்டாது பின் இவ் வூர்ப் போஸ்டுமாஸ்டர் அவர்களால் கேள்வி யுற்றுச் சென்ற வாரம் கடிதம் எழுதினேன். இன்று அவர்கள் கடிதம் நேரிலும் பார்க்கப் பெற்றேன்.

அவர்கள் கட்டளைப்படி டிசம்பர் மீ 21வ வெள்ளி இவணின்று பிரயாணமாய் மேலூர் மார்க்கம் வருவேன். வந்தால் ஞாயிறு அல்லது திங்கள் மகிபாலன்பட்டியில் தங்களைக் கண்ட பின் யாமிருவேமும் கனம் டிரசர ரவர்கள் பாற் செல்ல உத்தேசம். தாங்கள் ஞாயிறு, திங்கள், செவ்வாய் மாலை வரை ஊரிலிருக்கும்படி பிரார்த்திக்கிறேன்.

இனி என் வரலாறு சிறிதுகூறுவல்

சுயோதனனெனுங் கடனால் ஊக்கமெனும் நாடு இழந்து, சஞ்சலமென்னுங் காட்டில், மதியென்னும் பாஞ்சாலி யொடு பொறியென்னும் பஞ்சவர் கூட்டமாகிய யான் அலைந்து திரிந்தமை தாங்களும் அறிந்த தொன்றே.இவ்வாறு நிகழ் காலைத்தங்களைப்பிரிந்து இங்குற்றபின் ஐப்பசி முதற் கரந்துறைவு நேரத் திண்டுக்கல் லென்னும் விராட நகரத்து ஒரு மகமதிய கனவானிடந்தங்கி அக்கனவானுக்கு ஏக்கர் $5\frac{1}{2}$ உள்ள நன்செயை ரூ 3058க்குக் கிரையஞ் செய்தும், வேறு சில நன்செயை ரூ 2000க்கு ஒற்றி வைத்தும், பத்திரம் எழுதிக் கரந்துறை விடுத்து வெளிப்பட்டுப் பின், கார்த்திகை முதல் தேதி முதல் 15வ வரை உத்தியோக பருவமு நடத்தினேன். இப்போது பதினெட்டு நாட்போரும் முடிந்தது. சுயோதனனும் துடைமுறிந்து வீழ்ந்தான். இன்னும் உயிர் போகவில்லை; சீக்கிரம் போம். (ரூ5000 வரை கடன் தீர்த்தும் இன்னும் ரூ 800 வரை இருத்தலால் இவ்வாறு உருவகப் படுத்தினேன்.) போய பின் நூலாராய்ச்சியென்னு முடிசூட்டு நடக்கும். நடந்தால் நாடாட்சியால் தொல்காப்பியப் பயிர் தழைத் தோங்கலுமுண்மையே.

அன்பன்

அ. சண்முகன்

இதனால், 50 ஆண்டுகளுக்கு முன்னர்க் கடிதம் எழுதும் முறையும், இப்புலவர் பெருமான் கடன்தொல்லையாற்பட்ட துன்பங்களும், அந்நிலையிலும் புலமை நயந்தோன்ற உருவகஞ் செய்து எழுதியிருத்தலும் காணலாம்.

இக்கடிதம் பெற்றவுடன் பண்டிதமணி கதிரேசச்செட்டியார் அவர்கள் தம்பால் இருந்த பல முத்திரைப் பவுன்களை விற்று இவருடைய கடனைத் தீர்ப்பதற்கு உதவினர்கள். அங்ஙனம் காலத்தாற் செய்த நன்றியை மறவாமல் தாம் பாடிய வள்ளுவர் நேரிசையில்,

''கல்விதனஞ் சேருங் கதிரேசனும் வணிகன்
வல்விதனம் எற்கொழித்தான் வள்ளுவரே''

என்று பாராட்டுவாராயினர் :—

1909 ஆம் ஆண்டு மே மீ 13 ஆம்நாள் அரசஞ் சண்முகனர் அவர்கள் தலைமையில் சன்மார்க்க சபை தொடங்கப்பெற்றது. அப்போது அச்சபையின் வாழ்த்தாக இவர்பாடிய பாடல்கள் பலவற்றுள் இரண்டு பாடல்களை இங்கே காண்போம்.

"நகர்த்தார் எவ்வாறு நல்லறங்கள் பல
செயினும் நாட்டிற் கல்வி
பகரத்தான் பரவாத பான்மைதெரிந்
திக்குறையும் பாற்ற வேண்டி
ஒகரத்தார் வேள்பின்னும் வாய்பேசி
வணிகர்குலத் துதித்தா லன்ன
சிகரத்தார் திகழ்மேலைச் சிவபுரிவாழ்
பழநியப்பன் சிந்தித் தானே"

"செந்தமிழும் ஆரியமும் முற்றவுணர்
நுண்மதியான் சீர்த்திச் சிந்து
வந்துமிழு மாரிநிகர் வண்மையினன்
நற்குணமே வடிவ மானேன்
சுந்தரஞ்சேர் மகிபால நகர்வாழுங்
கதிரேசச் சுமுக னேடு
முந்தவே பலகாலும் ஆராய்ந்து
சபையொன்று முளைப்பித் தானே"

இப் பாடல்களால் பழனியப்ப செட்டியார் அவர்களையும் கதிரேசச்செட்டியார் அவர்களையும் பாராட்டியுள்ள முறைகளைப் பார்க்கலாம்.

திருவாவடுதுறை ஆதீனத் தலைவரவர்கள் நம் அரசஞ் சண்முகனாருடைய புலமைத் திறத்தைக் கேள்வியுற்று வரவழைத்துச் சொற்பொழிவுகள் பல செய்வித்துக் கேட்டுமகிழ்ந்து நூறுருபாயும் பொன்னாடையும் அளித்துப் பெருமைப்படுத்தினார்கள். இவர் அப்பரிசில் களைப்பெற்று வரும்போது ஏழைப் பெண் ஒருத்தி கந்தை ஆடையுடன் வருந்திச் செல்வதைக் கண்டு மனமிரங்கித் தாம் பெற்றுவந்த பொன்னாடையை அவளுக்கு அளித்து மகிழ்ந்தார். இதனால் இவர் ஏழைகள் பால் இரக்கமும் கொடைமடமும் உடையவர் என்பது தெரிகின்றது.

இவர் இயற்றிய நூல்கள் மாலைமாற்று மாலை, இன்னிசை யிருநூறு, மீனாட்சியம்மை சந்தத்திருவடிமாலை, திருவடிப்பத்து, சிதம்பர விநாயகர்மாலை, தொல்காப்பியப் பாயிர விருத்தி, திருக்குறட் சண்முகவிருத்தி, திருவள்ளுவர் நேரிசை, ஏகபாத நூற்றந்தாதி, முருகக் கடவுள் கலம்பகம், இசைநுணுக்கச் சிற்றுறை, நுண்பொருட் கோவை, மதுரைச் சிலேடை, நவமணிக்காரிகை நிகண்டு, பஞ்சதந்திரவெண்பா என்பன. இவற்றிற் சிலநூல்கள் அச்சாகியுள்ளன.

இவர் கட்டுரைகள் பல செந்தமிழ்த் திங்கள் வெளியீட்டில் வந்துள்ளன. அவற்றுள் ஆகுபெயர் அன்மொழித் தொகை ஆராய்ச்சி புலவர் பெருமக்களின் அறிவுக்குப் பெரு விருந்தாய் அமைந்துள்ளது.

சித்தர் நூல்களில் ஒன்றில் "இரு குரங்கின் கைச்சாறு" எனவந்துள்ளது. அதற்கு இரண்டு குரங்குகளின் கையிலிருந்து எடுக்கும் இரத்தம் என்று பிறர் பொருள் கூறிவந்தனர். இவர் "முசுமுசுக்கைச் சாறு" என்று பொருள் செய்தனர். முசு. குரங்கு. இதனால் இவரது நுண்ணறிவை யாவரும் பாராட்டினர்.

இவர் ஒரு செல்வரிடம் சென்றிருந்த போது, அவர் தம்மையும் தம்காதற் பரத்தையாய் அருகிலிருக்கும் கணிகைமாதினையும் பாராட்டிப் பாடுமாறு தெரிவித்தார். நம் சண்முகனார்க்கு அவ்விருவரையும் பாடவிருப்பமில்லை. காரணம், தாம்பாடுதற்கேற்ற பெருங்குணங்கள் அவ்விருவர்பாலும் இல்லை யென்பதே. பாடமுடியா தென்றாலும் அச்செல்வர் விடமாட்டார். இந்நிலையில் புகழ்வது போலப் பழித்துப் பாடிய பாடல் ஒன்றை அடியிற் காணலாம்.

அழகிருந்த வூர்வசியாள் அதியத்து
மேநகையாள் அவண ரம்பை
வழுவிலா மிகப்பெரியாள் மாதிலோத்
தமைவழங்கு குடியார் வாசம்
எழுகரமும் இவள்மொழிகேட்
டிறைஞ்சுமெனில் இக்கணிகைக்
கிணைவே றுண்டோ
கழுவும்எரி நிகர்கனக பூபாஇக்
கன்னியொடு கலந்து வாழி.

ஊர்வசியாள் = ஊர்வசிக்கு ஒப்பானவள்; ஊரிலும் வசியாதவள். அதிசயத்துமே நகையாள் = அதிகமேன்மை பெற்ற மேநகை போல்வாள்; வியக்கத்தக்க நிகழ்ச்சிகளைக்

கண்டாலும் சிரிக்காதவள். அவணரம்பை வழுவிலா மிகப்பெரியாள் = அவ்வுலகத்து அரம்பை யனையாள்; அ வ ள் ந ர ம் பு, ஐ, (கோழை), வழு, விலா (விலாஎலும்பு) மிகப் பெரியவள். மாதிலோத்தமை வழங்கு குடியார் வாசம்=சிறந்த திலோத்தமைக்கு இணையா வாள்; கொடையிற்சிறந்த பெருங்குடியில் தோன்றிய பெருமகனராகிய தங்களுடன் வாழ் கின்ருள்; மாது இல்லோ தமை வழங்கு குடியார் வாசம்—இவள் இல்லமோ தம் உயி ரையும் கொடுக்கத் துணியும் குடிகாரர்கள் வந்து தங்கும் இடம், எழுகரம்— ஏழிசை; எழுகின்ற கழுதை. கழுவும் எரி–எல்லா அழுக் குக் களையும் போக்கித் தூய்மை செய்யும் நெரு ப்பு; கழுவிய எரி—கொள்ளிக் கட்டை]


இங்ஙனம் நயந்தோன்றப் பாடி, அவ்விரு வரும் மகிழும் வண்ணம் சிறப்பான பொருள் கூறிப் பரிசில் பெற்று வந்தார். இவருடைய செய்யுளியற்றுந் திறத்திற்கு இஃது ஓர் எடுத்துக் காட்டு.

இத்தகைய பெரும் புலவராய் வாழ்ந்த நம் அரசஞ் சண்முகனுர் தம் நாற்பத்தேழாம் வயதில் (10—1—1915) இவ் வுலகவாழ்வை நீத்தார்.


★

கணேசர் செந்தமிழ்க் கல்லூரித் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள்

1959-60.



திரு RM. சாமிநாதப்பிள்ளை, திரு ரெங்கய்யங்கார், திரு N. சுப்பராயர் (தலைமையாசிரியர்), திரு மாதவராவ், திருமதி வீரம்மாள், திருமதி S. கமலசரசுவதி.



உயர்திரு. பெரும் புலவர்,
மதுரை மு. ரா. கந்தசாமிக்கவிராயர் அவர்கள்.

மு. ரா. கந்தசாமிக் கவிராயர் அவர்கள்

வித்துவான் R. சோமசுந்தரனுர் அவர்கள்
விரிவுரையாளர் க. செ. கல்லூரி, மேலேச்சிவபுரி.

சேற்றூர்ச் சமஸ்தான வித்துவான் இராம சாமிக் கவிராயர் அவர்களுக்கு மு. ரா. அருணுசலக்கவிராயர், சே. ரா. சுப்பிரமணியக் கவிராயர், மு. ரா. கந்தசாமிக் கவிராயர் என்ற மக்கள் மூவர் இருந்தனர். இவருள் கந்தசாமிக் கவிராயர் என்பவர் இளமையில் தம் தந்தையாரிடத்தும் பின்பு திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீ நமசிவாயத் தம்பிரான் அவர்களிடத்தும் முறையாகக் கல்வி பயின்று புலமை நிரம்பப் பெற்ருர். "குலவிச்சை கல்லாமற் பாகம் படும்" என்ற முதுமொழிக்கேற்ப இளம் பருவத்திலேயே விரைந்து கவிபாடும் ஆற்றல் இவர்பால் மிக்கிருந்தது. இவர் புலவர்களுக்கும் நண்பர்களுக்கும் எழுதுங் கடிதங்களெல்லாம் பெரும்பாலும் செய்யுள் வடிவாகவே யிருக்கும். சொற்பொழிவு செய்யும் திறமும், எழுத்து வன்மையும், சைவ சீலமும், நுண்ணிய அறிவும், திண்ணிய நெஞ்சமும் வாய்க்கப் பெற்ற நம் கவிராயர்பால் அரசர்களும் புலவர்களும் நன்மதிப்பு வைத்திருந்தனர்.

கவிராயர் அவர்கள் உடுமலைப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் பத்து ஆண்டுகள் தமிழாசிரியராயிருந்து பணிபுரிந்தார்கள். பின்னர் மதுரைநகரில் இருந்துகொண்டு 'விவேக பாநு' என்ற திங்கள் வெளியீட்டையும், 'விவேக பாநு' என்ற அச்சகத்தையும் நடத்திவந்தார்கள். தமிழ்ச்சங்க விழாக்களின் போதும் பிற காலங்களிலும் மதுரைக்கு வரும் புலவர்கள், நம் கவிராயர் இல்லத்தில் வந்து தங்குவர். நூற்கருத்துக்கள் பற்றித் தடைவிடை செய்துஆராய்வர். அவர்களுக்குஅவ்வப்போது வேண்டும் உணவுகளை நம் கவிராயர் அவர்கள் ஆர்வத்துடன் அளித்து மகிழ்ச்சியடைவார்கள். இதனல் இவர்கள் இல்லம் புலவர்களுக்குத் தாயகம்போல் விளங்கியது.

முகவை மன்னர்களான பாஸ்கர சேதுபதி, முத்துராமலிங்க சேதுபதி, பாலவனத்தம் சமீன்தார் பொ. பாண்டித்துரைத் தேவர், ஆண்டிபட்டிச் சமீன்தார் பெத்தாச்சி செட்டியார் முதலான வள்ளன்மை மிக்கவர்கள் நம் கவிராயர் அவர்களை ஆதரித்து வேண்டும் உதவிகள் செய்துவந்தார்கள். பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார், அரசஞ் சண்முகனர், வேம்பத்தூர் பிச்சுபாரதியார், டாக்டர் உ. வே. சாமிநாதையர், சேது சமஸ்தான மகாவித்துவான் ரா. இராகவையங்கார், மு. இராகவையங்கார், வயிநாகரம் இராமநாதன் செட்டியார், தேசிய கவி சுப்பிரமணிய பாரதியார், மேலகரம் சுப்பிரமணியக் கவிராயர், வெள்ளகால் சுப்பிரமணிய முதலியார், நாகை நீலலோசனி பத்திராதிபர் சதாசிவம் பிள்ளை ஆகியோர் நம் கவிராயருக்கு நெருங்கிய நண்பர்கள். இப் புலவர் பெருமக்களுடைய அன்பிற்கும் மதிப்பிற்கும் உரியவராக நம் கவிராயர் விளங்கினர்கள்.

இவர் இயற்றிய நூல்கள் திருப்பேரூர்த் திரிபந்தாதி, பவானி–வேதநாயகி பிள்ளைத் தமிழ், கழுமலை ஆண்டவர் துதிமஞ்சரி, மதுரைச் சிலேடை வெண்பா, சண்முகானந்த நவமணி மாலை, அரிமழத் தலபுராணம், குமண சரித்திரம் என்பன. மேலும் கம்பராமாயணத்தில் ஆரணிய காண்டத்திற்குச் சிறந்ததோர் உரை யெழுதியுள்ளார். பல்வேறிடங்களில் பல காலங்களிலிருந்த புலவர் பலரால் அவ்வப்போது பாடப்பெற்று அச்சுக்கு வராமலிருந்த ஆயிரக்கணக்கான பாடல்களைத் தொகுத்துத் தனிச்செய்யுட் சிந்தாமணி என ஒரு நூல் வெளியிட்டுள்ளார். அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ்த் தொகுதி ஒன்றும் இவரால் பதிப்பிக்கப்பெற்று வெளிவந்துள்ளது.

கவிராயர் அவர்கள் குமண சரித்திரம் பாடிய காலத்தில் இந்தியாவின் விடுதலைப் போராட்டம் மிகுவேகமாக நடந்துகொண்டிருந்தது. அப்போது வங்காளக் கவர்னராயிருந்த ஹிப்பட்ஸ் என்பவர் லாலா லஜபதிராயை நாடுகடத்தினார். வங்காளத்தை இரண்டாகப் பிரித்தார். இன்னும் பலவகையில் ஆங்கிலேயர் கொடுங்கோலாட்சி நாடெங்கும் நடைபெற்றது. இதனால் பாலகங்காதர திலகர், வ. உ. சிதம்பரனார், தேசிய கவி சுப்பிரமணிய பாரதியார் முதலான தேசத் தலைவர்கள் உள்ளங் கொதித்தனர். இந்நிகழ்ச்சிகளையெல்லாம் குமண சரித்திரத்தில் சிலேடைப் பொருளால் தோன்றுமாறு அமைத்து அழகுறப் பாடியுள்ளார். அவை படித்துச் சுவைத்து இன்புறத் தக்கன. இதனையுணர்ந்து அரசியலார், விவேகபாநுப் பத்திரிகைக்குத் தடைவிதித்தனர். அந்நிலையிலும் பத்திரிகை மறைமுகமாக வெளிவரும்படி செய்தது கவிராயர் அவர்களின் நெஞ்சுறுதியைக் காட்டுகிறது.

நாகை 'நீலலோசனி' ஆசிரியர் ஜி. சதாசிவம் பிள்ளையவர்கள் தம் முதுமைப் பருவத்தில் நோய்வாய்ப்பட்டுத் துன்புறும்போது, அன்று வாழ்ந்துவந்த புலவர்களுக்கு வேண்டுகோட் பாடல்கள் சில வரைந்திருந்தார். அப்பாடல்களில், "காலஞ்சென்ற புலவர்கள் வானுலகில் தமிழாராய்ச்சி செய்வர். அன்னாரை விரைவில் சந்திக்க யான் விரும்புகிறேன். அதற்கருளுமாறு இறைவனிடம் வேண்டுவீராக" என்ற கருத்துக்கள் இருந்தன. அப்பாடலில் ஒன்று,

"சோழவந்தான் சண்முகனார் தூயதொல்
காப் பியத்தையங்குத் துருவிநிற்பார்
முராமது ரக்கவிசொல் கந்தசா மிக்கவிஞர்
முனைந்து நிற்பார்
... ...
வேளையை சுப்பிரமணியக் கவிராய ரையு
மங்கு மேவ லாமே"

என்பதாகும். இதனால் கவிராயர் மதுரகவி பாட வல்லவரென்பதும், அப் பாடல்களில் பிள்ளையவர்கள் ஈடுபட்டுத் திளைத்தவரென்பதும் தெரிகின்றன.

ஒரு சமயம், திருவாவடு துறை ஆதீன கர்த்தராகிய ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்கள் தமக்குச் செய்த வரிசைகளைப் புகழ்ந்து பேச நேர்ந்த போது கவிராயர் ஆசுகவியாகப் பாடிய பாடல் ஒன்று வருமாறு:-

"வாணியுறை தென்துறைசை யம்பதியின்
அடியார்கள் மனத்தில் தோன்றும்
தாணுவருள் சுப்ரமண்யக் குருமணிதன்
கொடைக்குநிகர் சாற்றுங் காலைச்
சேணுயரும் மதி குமணன் கன்னன்
அரன் மாவலியைச் செப்புங் கால் மா
காணியரைக் கால் ஒருகால் இருகால்
முக் கால் அலது கண்டி லோமே"

1 மதி — பதினாறுகலைகளில் ஒன்றால் என்றும் ஒளி தருபவன், ஆதலால் அவன் மாகாணிக் கொடையாளி.

2. குமணன்—எண்சாண் உடம்பிற்குத் தலை முதன்மையானது. அவ்வுடம்பில் எட்டில் ஒரு பாகத்தை அது தனக்கு இடமாகக்கொண்டது. இக்குமணன் தலைக் கொடை செய்ய முன் வந்தவன் ஆதலின் அரைக்கால் கொடையாளி.

3. கன்னன்-பிற்பகலில் கொடைகொடுப்பதில்லை. ஒரு நாளில் முற்பகல் ஆறு மணி நேரமே கொடை கொடுப்பவன் ஆதலின் அவன் காற் கொடையாளி.

4. அரன் — தன் உடம்பில்பாதி உமை தேவிக்கு வழங்கியவன் ஆதலால் அவன் அரைக் கொடையாளி.

5. மாவலி — திருமாலின் பாதத்தால் மூன்றடிமண் அளந்து கொள்ள இசைந்தவன் ஆதலால் முக்காற் கொடையாளி.

நீவீர் முழுக்கொடையாளியாவீர் ஆதலால் உமக்கு மதி முதலானோர் நிகராகார் என்பது இதன் பொருள். இங்ஙனம் பொருட் சுவை தோன்ற விரைந்து பாடிய திறம் அறிந்து மகிழ்தற்குரியது.

பண்டிதமணி கதிரேசச் செட்டியார் அவர்களும் கவிராயர் அவர்களும் இனிய நண்பர்கள் என மேலே அறிந்தோம். கவிராயர் அவர்கள் இறுதிக் காலத்தில் பிணியாற் பீடிக்கப் பெற்றுத் துன்புறும் போது சிவபிரானைக் குறித்து பாடிய பாடல் ஒன்றை பண்டிதமணியவர்களுக்கு எழுதியனுப்பினார்கள். அப்பாடல் பின் வருமாறுள்ளது.

"பண்டிருந்தார் இன்றிருந்தார் என்போலத்
துன்பநுகர் பவர்யார் இன்பம்
உண்டிருந்தாய் உணர்ந்திலையால்
உண்ணுதார் பசிவருத்தம் உண்டார்க்
குண்டோ?
வண்டிருந்து வயிரமறத் துளைத்தமரம்
ஆனேன்என் வருத்த மெல்லாங்
கண்டிருந்தார் உயிர்விடுவர் காணார்கேட்
டுளங்கரைவர் கயிலை வாழ்வே."

நோய்வாய்ப் பட்டுத் துன்புறு நிலையிலும் இங்ஙனம் இனிமையும், எளிமையும், இரக்கமுந் தோன்றப் பாடியிருப்பது கொண்டு இவரது செய்யுளியற்றும் திறத்தினை நன்கறியலாம். இவர் தமது 49ஆம் வயதில் இறைவனடி சேர்ந்தார்.

உ

கணபதிதுணை.

மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபைப்

பொன்விழா வாழ்த்து.

இளமை குன்ரு எழில்மிகு செல்வீ !!

பழநியப்பர் கொடையால் தோன்றிய நீ அவர் காலத்தும், இளவல் அண்ணுமலையார் ஆட்சிபுரிந்த பிற்காலத்தும் மக்கள் சாமிநாதர், சிதம்பரனுர் இவர்கள் தலைமை, துணைத்தலைமை ஏற்றிலங்கும் இக்காலத்தும் மேன்மேலும் வளம்பல பெருகி அவ்வக்காலத்திற்கேற்ற அறப்பணிகள் பற்பலவற்றை மேற்கொண்டு புத்தாற்றலும் புத்திளமையும் என்றும் குன்ரு எழிலும் பெற்று விளங்கும் நீ இனி வருங்காலத்தையும் வென்று நிலைபெற்று மன்னுவை என்பது திண்ணம்.

பொன்விழாக் கொள்வோய் போற்றி போற்றி !!!!

இங்ஙனம் தெய்விகத் தன்மை வாய்ந்தொளிரும் உன் உறுப்புக்களுள் ஒன்ருய்த் தமிழ்த்தாயின் வீர அரியணையாய் விளங்கும் கணேசர் செந்தமிழ்க் கல்லூரியிற் சேர்ந்து பயில வாய்ப்பளித்த எங்கள் முன்னைத் தவத்தினை வாழ்த்துகிரேம். உன் பொன் விழாவினைக் காண நாங்கள் பெற்ற பேற்றினை எண்ணி எண்ணி மகிழ்கின் ரேம். சன்மார்க்கசபையின் மாணவர்கள் என்று கூறிக்கொள்வதில் ஒப்பற்ற பெருமிதம் கொள்கின்ரேம். அதனுல் ஒரு தனிப் பெருமை மிகுவதை உணர்கின்ரேம். இத்தகைய நிலையினை நாங்கள் எய்துதற்கு அடிப்படையாய்ச் சிறந்த பணிகள் பலவற்றை வெற்றியுற இடையருது ஐம்பதாண்டுகள் ஆற்றி இந்நாட்டின் எண் திக்கிலும், ஏன் கடல் கடந்த நாடுகளிலும்கூடப் புகழ்மணம் பரப்பிப் பொலிவுடன் திகழும் இப்பொன்விழா நாளில் எங்கள் அகங் கனிந்த அன்பை, உள்ளம் ஒன்றிய நன்றியை இச்சிறு சொற்களாகிய மலர்களை இட்டு உன் இணை அடிகளை இறைஞ்சு கின்ரேம்.

வணக்கம்

வாழிய செந்தமிழ்! மன்னுக சிவநெறி!! வளர்க சன்மார்க்கசபை!!!

அன்புள்ள,

மேலைச்சிவபுரி,
3—10—1959.

மாணவர் நன்னெறிக் கழகத்தார்,
கணேசர் செந்தமிழ்க் கல்லூரி.

சிலப்பதிகாரத்தில் தேவந்தி ஏன்?

பேராசிரியர் தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர், எம். ஏ., பீ. எல்., எம். ஒ. எல்.,
அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.

முன்னுரை.

சிலப்பதிகாரத்தின் தலைவி கண்ணகி. கற்புடைய கண்ணகி காவலர்களும் வழிபடும் பத்தினித் தெய்வமாக வளரும் வளர்ச்சியைக் கூறுவதேஅக்காப்பியமாகும். அந்தக்கண்ணகியின் உயிர்த் தோழி தேவந்தி. இவளுடைய கதை காப்பியத்தின் உயிர்நிலைக் கதையோடு பின்னிப் பிணைந்து விளங்குகிறது. தேவந்தி காப்பியத்தில் வருவானேன்? கண்ணகியின் கதையைக் கூறும்போது மற்ருெரு கதையை விரிப்பது மற்ருென்று விரித்தலாகாதா? ஒரு மரம் தோப்பாவதில்லை. ஓரறை அரண்மனையாவதில்லை. வாழ்க்கையும் ஒருவர் தனித்து வாழும் வரலாருவதில்லை. எனவே வாழ்க்கையின் நுட்பத்தினை விளக்கும் காப்பியமும் தனியொருவர்தம் கதையினைக் கூறி முடிப்பதில்லை. உலக வாழ்வு பலர் கூடி வாழும் கூட்டுறவு வாழ்வே ஆம்.

I

காப்பியத்தில் பலரும் வருவர். ஆனுல் அவர்கள் காப்பியத்தோடு ஒருங்கியைந்துவிட வேண்டும். உடலில் கையும் காலும் தலையும் மார்பும் போல உடலுறுப்பாக அவை அமைய வேண்டுமே அன்றிச் சட்டையும் அணிகலனும் போலப் புறக்கோலமாக ஒட்டிநிற்றலாகாது. அவை கதைக்குக் காலாக வரலாம். சுற்றுப்புறச் சூழலாக அமையலாம். இந்த ஊர், இந்தக் காலம், இந்த அரசன், இன்ன பெற்ருேர் என்று வருவன இத்தகையன. கதையை வளர்க்கப் பிற வரலாம்; திருப்புமையமாக அவை அமையலாம். இராமாயணத்தில் கூனியும் கைகேயியும் இல்லையானுல் கதை எப்படி வளரும்? கதையில் வருவார் நிலையை உடன்பாட்டாலும் எதிர்மறையாலும் விளக்கவும் பிற வரலாம். இராமன் எதிரே இராவணன் – தூது போகும் அனுமன் எதிரே அங்கதன் – சீதையின் காதல் எதிரே அசமுகியின் விலங்குநிலை; சூர்ப்பணகையின் காமம் – வாழ்வாக முடியும் சீதையின் கற்பின் எதிரே சாவாக முடியும் மண்டோதரியின் கற்பு; பிறழாக்கற்பின் எதிரே அகலிகையின் கற்பு – என இவ்வாறு வருவதனையும் காணலாம். வருவாரின் உள்ளத்தியல்பினை விளக்க வைக்கும் வகையில் பேசவைக்கவும் அவை வரலாம். கூனி அன்ருே கைகேயியின் உண்மையான உள்ளத்தினை வெளியாக்கிப் பேசவைக்கின்ருள். மந்திரப்படலங்கள் இத்தகைய தொண்டினையே நிறைவாக்குகின்றன. உலகம் பலவகை என்பதனை மெய்ப்பிக்கவும் பலகிளைக் கதைகள் வரும். மேலே காட்டியவை அனைத்தும் இந்த உண்மையையும் வற்புறுத்துவன ஆம்.

கிளைக் கதைக்கெனக் கிளைக்கதைகள் வருவதனைப் பழங்கதைகளிலும் இன்றைய காலட்சேபம் என வழங்கும் சொற்பொழிவு வகைகளிலும் காணலாம். மக்கள் மனப்போக்கு இம்முறையே நன்கு விளக்குகிறது. ஆனுல் காப்பியம் என ஒருமைப்பாட்டு வடிவம் கொண்டு விளங்கவரும் தலைசிறந்த இலக்கியங்கள் கிளைக் கதைகளை எல்லாம் உயிர்நிலைக் கதையோடு ஒருங்கியையவைத்து ஆழ்ந்த பொருளுடையனவாக மாற்றியமைப்பதனைக் காணலாம்.

II

தேவந்தியின் கதை கண்ணகியின் கதையோடு ஒன்ருகி இயைந்து விடுவதனைக் காணும் முன் அந்தக்கதை தான் என்ன என்று காணவேண்டாவா?

மேலோர் நாள்
மாலதி மாற்ருள் மகவுக்குப் பாலளிக்கப்
பால்விக்கிப் பாலகன் தான்சோர
மாலதியும்

பார்ப்பானொடு மனையாள் என்மேல்
படாதன இட்டு
ஏற்பன கூறுர் என்று ஏங்கி மகக்கொண்டு
அமரர் தருக்கோட்டம் வெள்யானைக்
கோட்டம்
புகர் வெள்ளை நாகர்தம் கோட்டம்
பகல் வாயில்
உச்சிக் கிழான்கோட்டம் ஊர்க்கோட்டம்
வேல்கோட்டம்
வச்சிரக்கோட்டம் புறம்பணையான்
வாழ்கோட்டம்
நிக்கந்தக் கோட்டம் நிலாக்கோட்டம்
புக்கெங்கும்
தேவிர்காள் எம்முறுநோய் தீர்ம் என்று
மேவியோர்
பாசண்டச் சாத்தற்குப் பாடுகிடந்
தாளுக்கு
ஏசும்படி ஓர் இளங்கொடியாய் ஆசிலாய்
செய்தவம் இல்லார்க்குத் தேவர்
வரங்கொடார்
பொய்யுரையே யன்று பொருளுரையே
கையில்
படுபிணம் தாஎன்று பறித்தவள்கைக்
கொண்டு
சுடுகாட்டுக் கோட்டத்துத் தூங்கிருளில்
சென்றுங்கு
இடுபிணம் தின்னும் இடாகினிப்பேய்
வாங்கி
மடியகத் திட்டாள் மகவை இடியுண்ட
மஞ்ஞைபோல் ஏங்கி அழுதாளுக்கு
அச்சாத்தன்
அஞ்ஞை நீ ஏங்கி அழல் என்று முன்னை
உயிர்க்குழவி காணுய் என்றக்
குழவியாயோர்
குயிற் பொதும்பர் நீழல் குறுக
அயிர்ப்பின்றி
மாயக் குழவி எடுத்து மடித்திரைத்து
தாய்கைக் கொடுத்தாளத் தையலாள்
தூய
மறையோன்பின் மாணியாய்
வான்பொருள் கேள்வித்
துறைபோ யவர்முடிந்த பின்னர்
இறையோனும்
தாயத்தா ரோடும் வழக்குரைத்துத்
தந்தைக்கும்
தாயர்க்கும் வேண்டும் கடன்கழித்து
மேயநாள்

ஒரு பார்ப்பனக் குடும்பம். அதில் பார்ப்பனத்தலைவன் ஒருவன். அவனுக்கு இரண்டு மனைவியர். அவருள் ஒருத்திக்கே ஒரு பிள்ளை. மாற்றுளும் அக்குழவியினிடம் ஈடுபடுகிருள். அழுகின்ற குழவிக்கு அதன் தாய் இல்லாத போது பால் ஊட்டுகின்ருள். ஆனுல் அவளுடைய கெட்டகாலம்! பால் புரைக்கு ஏறிக் குழவி சாகின்றது. ஒவ்வொரு கோவிலாக எல்லாத் தெய்வங்களிடமும் பாடுகிடக்கின்ருள். பேய் ஒன்று "நான் உயிர் கொடுக்கிறேன்" என்று கூறிப் பிள்ளையை வாங்கித் தின்றுவிடுகின்றது. அவள் நிலையைக் காணப் பொறுக்காத சாத்தன் என்ற தெய்வம் குழவி வடிவில் வருகிறது. மாற்றுந்தாய் மனம் மகிழ்கிருள். பெரும்பழி அவள் தலைமேல் விழாது போகிறது அன்றே! தெய்வக்குழவி தெய்வம் என்பதனை யாரும் அறியாமல் வளர்கிறது. திருமணமும் நடைபெறுகிறது. தேவந்தியே மணப்பெண். சில நாட்கள் ஆனபின் தேவந்திக்கு உண்மையைக் கூறித் தன்கோயிலுக்கு வருமாறு கேட்டுக் கொண்டு மறைகிருன் சாத்தன். வேற்றூருக்குப்போன கணவனைப் பெறுவதற்கு நோன்பு நோற்பவள் போலக் காட்டிக்கொண்டு பிறருக்கு உண்மையை உரையாமல் சாத்தன் வழிபாடு செய்து வருகின்ருள் தேவந்தி.

தேவந்தி என்பாள் மனைவி அவளுக்குப்
பூவந்த உண்கண் பொறுக்கென்று
மேவித்தன்
மூவா இளநலங் காட்டி எம் கோட்டத்து
நீவா என உரைத்து நீங்குதலும் தூமொழி
ஆர்த்த கணவன் அகன்றனன் போய்
எங்கும்
தீர்த்தத் துறைபடிவேன் என்றவனைப்
பேர்த்திங்ஙன்

மீட்டுத் தருவாய் என ஒன்றன் மேலிட்டுக்
கோட்டம் வழிபாடு கொண்டிருப்பாள்

எனக் கனுத்திறமுரைத்த காதை பாடுவது காண்க.

தேவந்தியோ கண்ணகியின் உயிர்த் தோழி. கோவலன் மாதவிமேல் காதலாய்க் கண்ணகியை மறந்த நிலை தேவந்தியின் மனத்தினை வாட்டுகிறது. சாத்தனை வழிபட்டுப் பூவும் அரிசியும் கொண்டு வருகிறுள்; கண்ணகியைக் காண்கிருள். அவள் வாட்டத்திற்கு உருகித் தான் அறிந்த உலகவழக் கொன்றைக் கூறுகிருள். சோமகுண்டம், சூரிய குண்டம் என்ற குளங்களில் குளித்தவர் தம் காதலரைத் திரும்பப் பெறுவர் என்ற வழக்கை எடுத்துக் கூறி நீராட அழைக்கின்ருள். தன் மனத்தினைத் தலைவனிடமும் தெரிவியாத கண்ணகி ஒப்புவாளா? "தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யும் மழை" என்ற குறளின் வழி நிற்பவளன்ரே அவள். "பீடு அன்று" என்று மெல்ல விலக்கி விடுகின்ருள்.

கைத்தாயும் அல்லை கணவற் கொரு
நோன்பு
பொய்த்தாய் பழம்பிறப்பில் போய்க்
கெடுக உய்த்துக்
கடலொடு காவிரி சென்றலைக்கும் முன்றில்
மடலவிழ் நெய்தலம் கானல் தடமுள
சோமகுண்டம் சூரிய குண்டம் துறை
மூழ்கிக்
காமவேள் கோட்டம் தொழுதார்
கணவரொடு
தாமின் புறுவர் உலகத்துத் தையலார்
போகம்செய் பூமியினும் போய்ப்பிறப்பர்
யாம்ஒருநாள்
ஆடுதும் என்ற அணியிழைக்கவ்
வாயிழையாள்
பீடன்று எனஇருந்த பின்னர்

கணவன் திரும்புவான் என்ற உள்ளத் துறுதி கொண்டவள் அவள். தேவந்தி "அறுகு சிறு பூளை நெல்லொடுதூஉய்ச் சென்று, பெறுக கணவனெடு" என்று வாழ்த்தக் கண்ணகி "பெறுகேன்" என்று உறுதி கூறுகிருள்.

ஆனுல், இன்று அவள் மனத்தினை அலைப்பது அவள் கண்ட கனவு. ஏறக்குறைய முன் நடக்கப் போவதனைக் குறிப்பாகக் காட்டும் கனவு அது.

கடுக்கும்என் நெஞ்சம் கனவினுல்
என்கை
பிடித்தனன் போயோர் பெரும்பதியுள்
பட்டேம்
பட்ட பதியில் படாத தொருவார்த்தை
இட்டனர் ஊரார் இடுதேளிட்டு என்றன்
மேல்
கோவலற் குற்றத்தோர் தீங்கேன் றதுகேட்டு
காவலன் முன்னர்யான் கட்டுரைத்தேன் காவலனேடு
ஊர்க்குற்ற தீங்கும்ஒன் றுண்டால்
உரையாடேன்
தீக்குற்றம் போலும் செறிதொடீஇ
தீக்குற்றம்
உற்றேனெ டுற்ற உறுவனேடு யானுற்ற
நற்றிறம் கேட்கின் நகையாகும்.

வேற்றூரில் தாம் படப்போகும்பாடு அங்கே கனவாகத் தோன்றுகிறது. அதனை முழுவதும் கூருது விழுங்கிவிடுகின்ருள். பின்னரே குளத்தில் குளிக்கும் பேச்சு வருகிறது. இவ்வாறு குளத்தின் பேச்சினைப் பேசிக்கொண்டு இருக்கும்போது கோவலன் வருகிருன். அவனேடு அந்த இடத்திலேயே புறப்படக் கண்ணகி உடம்படுகிருள்.

III

கோவலன் இறந்துபடுகிருன். கண்ணகியும் மேலுலகம் செல்கின்ருள். சேரன் செங்குட்டுவன் பத்தினித் தெய்வத்திற்குக் கோயில் எடுக்கின்ருன். கண்ணகி சிலம்போடும் காட்சி அளிக்கின்ருள். தேவந்தி கண்ணகியைக் காணப் புறப்பட்டவள் அந்தக் கோயிலை வந்து சேர்கிருள்.

"கோவலன்தன் வினையுருத்துக்
குறுமகனுல் கொலையுண்ணக்
காவலன்றன் இடஞ்சென்ற
கண்ணகிதன் கண்ணீர்கண்டு

மண்ணரசர் பெருந்தோன்றல்
உண்ணீரற்று உயிரிழந்தமை
மாமறையோன் வாய்க்கேட்டு
மாசாத்துவான் தான்துறப்பவும்
மனைக்கிழத்தி உயிர்இழப்பவும்
எனைப்பெருந் துன்பம்எய்திக்
காவற்பெண்டும் அடித்தோழியும்
கடவுள்சாத்த னுடனுறைந்த
தேவந்தியும் உடன்கூடிச்
சேயிழையைக் காண்டும்என்று
மதுரைமா நகர்புகுந்து
முதிராமுலைப் பூசல்கேட்டாங்கு
அடைக்கலமிழந்து உயிரிழந்த
இடைக்குலமக ளிடமெய்தி
ஐயைஅவள் மகளோடும்
வையைஒரு வழிக்கொண்டு
மாமலைமீ மிசைஏறிக்
கோமகள்தன் கோயில்புக்கு
நங்கைக்குச் சிறப்பயர்ந்த
செங்குட்டுவற்குத் திறமுரைப்பர்மன்''

என வாழ்த்துக் காதையின் முதலில் வரும் உரைப்பாட்டு மடை விளக்குகிறது.

தேவந்தியும், காவற்பெண்டும், அவள் மகளான அடித்தோழியும் தம்மை அறிமுகம் செய்துகொண்டு அரற்றுகின்றனர். கண்ணகி இதனைக் கேட்டுத்தானே என்னவோ சிலம்புடன் தோன்றுகிறாள். செங்குட்டுவன் கண்டு வியந்து பாடுகிறான்.

என்னே இஃதென்னே இஃதென்னே
இஃதென்னேகொல்
பொன்னஞ் சிலம்பிற் புனைமே
கலைவளைக்கை
நல்வயிரப் பொற்றோட்டு நாவலம்
பொன்னிழைசேர்
மின்னுக் கொடியொன்று மீவிசும்பில்
தோன்றுமால்.

கண்ணகி பழைய வஞ்சினம் மாறித் தனக்கும் தன் கணவனுக்கும் தீங்கிழைத்த பாண்டியன் மீது அன்புகுழைந்து அவனைத் தன்புகழுடம்பு தந்த தந்தை என உருகிப் பாடித் தன் தெய்வ இன்ப அன்புருவை வெளிப்படுத்துகிறாள். அன்பே கடவுள் என்பது தமிழ் கண்ட உண்மை.

தென்னவன் தீதிலன் தேவர்கோன்
தன்கோயில்
நல்விருந் தாயினன் நானவன் தன்மகள்
வென்வேலான் குன்றில் விளையாட்டு
யானகலேன்
என்னோடும் தோழிமீர் எல்லீரும்
வம்மெல்லாம்.

என்று பாடுகிறாள் கண்ணகி. அன்பே வடிவான சாத்தனை வழிபட்ட தேவந்தி கண்ணகியை வழிபட அமையும் பொருத்தத்தைச் செங்குட்டுவன் காண்கிறான்.

IV

இங்கே பாடத்தில் குழப்பம் ஒன்று உண்டு. தேவந்தி தன்னை அறிமுகம் செய்யும் பாடல் இது :-

முடிமன்னர் மூவரும் காத்தோம்பும்
தெய்வ
வடபே ரிமய மலையில் பிறந்து
கடுவரல் கங்கைப் புனலாடிப் போந்த
தொடிவளைத் தோளிக்குத் தோழிநான்
கண்டீர்
சோணாட்டார் பாவைக்குத் தோழிநான்
கண்டீர்.

பின் அரற்றும் பாடல் இது ;-

செய்தவ மில்லாதேன் தீக்கனாக்
கேட்டநாள்
எய்த உணரா திருந்தேன்மற்
றென்செய்தேன்
மொய்குழல் மங்கை முலைப்பூசல்
கேட்டநாள்
அவ்வை உயிர்வீவும் கேட்டாயோ தோழீ
அம்மாமி தன்வீவும் கேட்டாயோ தோழீ.

அடித்தோழி அரற்றுவதாகக் கீழ்க்கண்ட பாடல் வருகிறது.

காதலன் தன்வீவும் காதலிநீ பட்டதூஉம்
ஏதிலார் தாங்கூறும் ஏச்சுரையும்
கேட்டேங்கிப்

போதியின்கீழ் மாதவர்முன் புண்ணியதா னம்புரிந்த
மாதவி தன்துறவும் கேட்டாயோ தோழி
மணிமே கலைதுறவும் கேட்டாயோ
தோழி.

ஆனல் வரந்தருகாதையில் செங்குட்டுவன் "தேவந்திகையைச் செவ்விதின் நோக்கி வாய் எடுத்தரற்றிய மணிமேகலை யார்? யாது அவள் துறத்தற்கு ஏது? ஈங்கு உரை" எனக் கேட்கின்ருன். அப்படியானல் மணிமேகலையைக் கூறியரற்றியவள் அடித்தோழி யாகாது தேவந்தியே ஆதல் வேண்டும். தேவந்தி என்ற பெயர் தேவந்திகை எனவும் வழங்கும் என்பதும் இங்கு வெளியாகிறது. "மாதவி மணிமேகலையை வருகென அழைத்துக் கோதைத்தாமம் குழலோடு களைந்து, போதித்தானம் புரிந்தறம் படுத்தனள். ஆங்கது கேட்ட அரசனும் நகரமும் ஓங்கிய நன்மணி உறுகடல் வீழ்த்தோர் தம்மிற் றுன்பம் தாம் நனி எய்தச் செம்மொழி மாதவர் சேயிழை நங்கை தன்துறவு எமக்குச் சாற்றினள்" என்றே அன்புறு நன்மொழி அருளொடும் கூறினர். பருவம்அன்றியும் பைந்தொடி நங்கை திருவிழை கோலம் நீங்கின ளாதலின் அரற்றினன்" என்பது அரசனுக்குத் தேவந்தியே உரைக்கின்ருள். இதனலும் மணிமேகலையைக் கூறி அரற்றியவள் தேவந்தி என்பதே உறுதியாகும். எனவே "அடித்தோழி அரற்று" என்றுள்ளதனைத் "தேவந்தி மணிமேகலையைச் சுட்டி அரற்றியது" என்று குறித்ததாகவே கொள்ள வேண்டும். "தேவந்தி ஐயையைக் காட்டி அரற்றியது" என்பது இப்பாடலுக்கு முன் அமைந்து "அடித்தோழி ஐயையைக் காட்டி அரற்றியது" என்று இருந்திருத்தல் வேண்டும். பின் வந்தார் கேட்டாயோ என வருவதனை எல்லாம் ஒன்ருகக் கருதி மாற்றிவிட்டார்கள் போலும். காவற்பெண்டு மாதவியோடு வாழ்ந்ததனைக் கண்ணகி கேட்டபோது மாதவிமேல் சினம் கொள்ளவில்லை என்பதனை, "மடம்படு சாயலாள் மாதவி தன்னைக் கடம்படாள்" என்று கூற அவள் மகளாகிய அடித்தோழி மேலும் மாதவியின் வரலாற்றைக் கூறினள் எனப் பின்னோர் பிறழக்கொண்டனர் போலும்.

பழைய காலக் காப்பியங்கள் பலநாள்களில் பாடப்பெறும்போது முன்னுக்குப் பின் முரணுவதும் உண்டு என்று அறிஞர் கூறுவர். இது கொண்டு வரந்தருகாதை முரணிக் கூறுகிறது என்று கூறுவது பொருந்தாது. நாடோடிக் காப்பியமாக வாய்வழி வருவனவற்றிலன்றிச் சிலப்பதிகாரம் போல இலக்கியக் காப்பியமாக அமைவனவற்றில் ஒருமைப்பாடன்றி முரண்பாடு காண்பது அருமை. "அம்மாமி தன்வீவும் கேட்டாயோ தோழி" எனத்தேவந்தி அரற்றி முடிக்க "மாமிமட மகளைக் கண்டாயோ தோழி" என அடித்தோழி அரற்றுவதும் பொருத்தமாம். மாற்ருளான மாதவியின் உயர்ந்த நிலையை இங்கு நினைப்பூட்டுவதும் மணிமேகலையைக் குறிப்பதுவும் தேவந்தியாம் உயிர்த்தோழி கண்ணகியின் உயர்ந்த மனத்தை அறிந்ததன் பயனும். பின்னர்ச்செங்குட்டுவனிடம் மணிமேகலையைப் பற்றிப் பரிந்துபேசும் பேச்சும் இதனையே வற்புறுத்தல் காண்க.

V

செங்குட்டுவனிடம் கூறிய பின்னர்த் தேவந்திகைமேல் தெய்வச் சாத்தன் எழுந்தருளுகிருன்.

"குரற்றலைக் கூந்தல் குலைந்துபின் வீழத்
துடித்தனள் புருவம் துவரிதழ்ச் செவ்வாய்
மடித்தெயி றரும்பினள் வருமொழி
மயங்கினள்
திருமுகம் வியர்த்தனள் செங்கண்
சிவந்தனள்
பலரறி வாராத் தெருட்சியள் மருட்சியள்
உலறிய நாவினள் உயர்மொழி கூறித்
தெய்வம்உற் றெழுந்தாள் தேவந்திகை"

தேவந்திகையின் தெய்வநிலை இது. "பாசண்டன்யான் பார்ப்பனி தன்மேல் மாடல மறையோய் வந்தேன்" என்று சாத்தன் பேசுகிருன். மன்னவன் விம்மிதம் எய்துகிருன். மாடலன் இவற்றை விளக்குகிருன். பழங்கதையைக் கூறுகிருன்.

"கேள்இது மன்னு கெடுகநின் தீயது
மாலதி என்பாள் மாற்றாள் குழவியைப்
பால்சுரந் தூட்டப் பழவினை உருத்துக்
கூற்றுயிர் கொள்ளக் குழவிக் கிரங்கி
ஆற்றாத் தன்மையள் ஆரஞர் எய்திப்
பாசண் டன்பால் பாடு கிடந்தாட்கு
ஆசில் குழவி அதன்வடி வாகி
வந்தனன் அன்னைநீ வான்துயர் ஒழிகெனச்
செந்திறம் புரிந்தோன் செல்லல் நீக்கிப்
பார்ப்பனி தன்னோடு பண்டைத் தாய்பால்
காப்பியத் தொல்குடிக் கவின்பெற வளர்ந்து
தேவந் திகையைத் தீவலம் செய்து
நாலீ ராண்டு நடந்ததன் பின்னர்
மூவா இளநலம் காட்டிஎன் கோட்டத்து
நீவா என்றே நீங்கிய சாத்தன்"

கதையை விளக்கிய பின் சாத்தன் கூறிய படி குடத்து நீரைச் சிறுமியர் மீது தெளித்ததும் கோவலன் தாய், கண்ணகி தாய், மாதவி இவர்கள் அச்சிறுமியர் மீது வந்து பழங்கதையைக் கூறுகின்றனர். வியப்பென்னும் மருட்கைச் சுவை தோன்ற இவை எல்லாம் உதவுதலும், கடவுள் மங்கலத்தின் நம்பிக்கையை வளர்த்தலும் காணலாம்.

முன்னரே கூறிய தேவந்தி கதையை இவரும் கூறுவது, இந்தச்சுவையை வளர்க்கப் பயன்படுவதாலே ஆம். பழைய காப்பியங்களில் இவ்வாறு நிகழ்ச்சிகளைப் பலமுறை சுருக்கியும் பெருக்கியும் சுவைபல தோன்றப் பாடுவது வழக்கம். கூறியது கூறலாகாது. சுவையை வளர்ப்பனவாகவும் கேட்போர் உள்ளத்தில் கதையினை மறவாத வாறு பதிய வைப்பனவாகவும் விளங்குதலை இங்கும் காணலாம்.

பின்னர்ச் சேரன் "பத்தினிக் கோட்டப் படிப்புறம் வகுத்து, நித்தல் விழா அணி நிகழ்க என்று ஏவிப் பூவும் புகையும் மேவிய விரையும் தேவந்திகையைச் செய்க" என்று அருளியதனை அறிகின்றோம். இந்தப் பொருத்தத்தினை முன்னரே குறிப்பிட்டோம்.

VI

இவ்வளவே அவள் வரலாறு. இதற்கும் காப்பியப் போக்கிற்கும் என்ன தொடர்பு? இயற்கைக்கு அப்பாற் பட்ட நிகழ்ச்சிகள் காப்பியத்தின் உயிர்நிலையாகின்றன. அழற்படு காதை முதலியவற்றில் வரும் செய்திகள் அத்தகையன. கோவலன் மீண்டெழல், கண்ணகி வானுலகம் செல்லுதல், கண்ணகி சேரன் எதிர் தோன்றுதல் முதலியன இவ்வாறு தொடர்ந்து வருகின்றன. காப்பியக்கதை தனியே ஒருவனையோ ஒருத்தியையோ பற்றியது அன்று. உலகின் பேருண்மையை விளக்கும் ஓர் அடையாளம் அது. அந் நிகழ்ச்சி இயற்கை அனைத்தோடும் தொடர்புண்டு கிடப்பதனை வற்புறுத்தும் வழிகளில் மிகமிகப் பழையதே. இத்தகைய இயற்கைக்கும் அப்பாலான செய்திகளைக்கொண்டு வந்து கதையோடு இணைத்து விடும் முறையாம். இத்தகைய நிகழ்ச்சிகளை நம்பிய காலம் அது. ஆதலின் அக்காலத்தினை விளக்க மேலும் பல வியத்தகு செயல்கள் நிகழ்வதனைக் கூறுவதும் வேண்டும். வியத்தகு செயல்கள் அன்றாடச் செய்திகளாகக் கொண்டு வாழ்ந்த காலம் அக்காலம். அத்தகைய பின்னணிச் சூழ்நிலையை விளக்குதற்குச் சாத்தன் வரலாறும், தேவந்தி வரலாறும், சாத்தன் தேவந்திகைமேல் வந்து பேசுதலும் இன்றியமையாது வேண்டும். பேய்கள் வாழ்தல்–பேய் பிணம் தின்னுதல்–கூடுவிட்டுக் கூடு பாய்தல்–தெய்வம் குழவியாய் வருதல்–மானிடப் பெண்ணை மணத்தல்–குளத்தில் முழுகிக் காதலரைப்பெறுதல்–தெய்வக் காட்சி–தெய்வம் வந்து பேசல்–முற்பிறப்புக் கூறுதல் இவை யெல்லாம் அன்றுடைய நிகழ்ச்சிகள் என்று அந்நாளையர் நம்பிய நம்பிக்கை இக்கதையில் விளங்குகிறது. தெய்வத்தின் சேடம் அது நல்லதனைச் சுட்டுவது–பின்வருவன கனவில் வருதல், முதலியனவும் அந்நாளைய அன்றாடச் செய்திகள் என்பதும் இந்தக் கதையில் வெளியாகிறது. இந்த வியத்தகு சூழ்நிலையில் பின்வரும் செய்திகளை நம்புவதும் நம் மனத்திற்கு இயல்பாகி விடுகிறது.

பத்தினித் தெய்வ வழிபாட்டினைக் காப்பியத்தின் முடிபாகக் கூறும் இந்தக் காப்பியம் பிற வழிபாட்டிற்கு இது முரணுமையையும் எவர் மனங் கொளவும் இளங்கோவடிகள் கூறிப் போகின்றார். கோவலன் சாவக நோன்பி. சாரணரும் கவுந்தியடிகளும் சமணப் பெரியோர். மாதவியும் மணிமேகலையும் பௌத்தத் துறவிகளாகின்றனர். கோவலன் தந்தை சமணத் துறவி ஆகின்றார். கண்ணகியின் தந்தை ஆசீவகத் துறவியாகின்றார். துறவிலும் அனைவர்க்கும் பங்குதந்து பாடுகிறார் இளங்கோவடிகள். சேரன் செங்குட்டுவன் சிவனருளால் பிறந்தவன். சிவனைப் பிறவா யாக்கைப் பெரியோன் என்று வாயாரப் பாடுகின்றார் ஆசிரியர். திருமாலைப் பாடாத நாவென்ன நாவே? கேளாத செவி என்ன செவியே? என ஆழ்வார்கள்தாம் பாடுகின்றனரோ என்று ஐயுறும் வகையில் ஆய்ச்சியர் குரவையில் ஆசிரியர் பாடுகிறார். குன்றக் குரவையில் இவ்வாறே முருகனை அவர் பாடுகின்றார். வேட்டுவ வரியில் அம்மையைப் பாடுவதும் ஒப்புயர்வற்ற அன்பில் விளைந்த உருக்கமான பாடல்களாகும். சாரணர் அருகனைப் பாடுவதும் அறிவும் அன்பும் ஒருங்கியைந்ததே ஆம். அதே போல அக்காலத்தே மக்கள் சாத்தனை வழிபட்டதனையும், சாத்தனது உள்ளக் குழைவினையும், அன்புள்ளத்தையும் அழிய மாறிக் குழவியாய்வளர்ந்து மக்கள் மனத்தைக் குளிர்வித்ததனைப்புலவர் பெருமான் இளங்கோவடிகள் பாடும்போது அவரும் சாத்தனை வழிபட்ட பாவலரோ என்று ஐயம் கொள்ளும்படி பாடுகிறார். சாத்தனை வழிபட்ட தேவந்தி கண்ணகியை வழிபட வருகின்றாள். இந்த முறையும் காப்பியத்தின் முடிந்த முடிபான நோக்கிற்கு இன்றியமையாது வேண்டுவது ஒன்றேயாம். அனைவரையும் ஒன்று படுத்தும் புதிய முறை இது எனலாம். அன்புருவான சாத்தன் வழிபாட்டிற் பழகிய தேவந்திகைமேல் சாத்தன் வந்து பேசிய பின் தேவந்திகையைக் கண்ணகி வழிபாட்டிற்குச் செங்குட்டுவன் அமைப்பது மிக மிகப் பொருத்தமாகிறது.

VII

உலகம் பலவகை என்பதும் புலனாகிறது. மாற்றாள் மன நிலை—மாற்றாளுக்கு அஞ்சுதல்—மாற்றாள் குழவியே ஆனாலும் தன் கணவனை நினைப்பூட்டும் நிலையில் மனங்குழைந்து அன்பு பாராட்டல்—இவை உலகில் எழும் பல பல நிலைகள். இவற்றில் எழும் சிக்கல்களும் பலப் பல. உலகம் அறிந்து பேசிவரும் இவற்றை இங்குச் சுட்டுவதால் காப்பியம் உலகம் போலப் பரந்து விரிந்து உலகத்தோடு ஒட்ட ஒழுகி உயர்கிறது. மருட்கைச் சுவையில் முடியும் இக்காப்பியத்தில் அச்சுவையை வளர்க்க வாழ்த்துக் காதையிலும் வரந்தருகாதையிலும் தேவந்திகையின் நிகழ்ச்சிகள் உதவுதல் காப்பியத்தின் சிறப்பாகும்.

காதலின் பலவகைக் கற்பு நிலைகளும் இங்கே தோன்றுகின்றன. சேரனும் சேரமாதேவியும் வாழுங் காதலாய்க் கற்பினை வழிபடுவோர். பாண்டியனும் பாண்டிமாதேவியும் சாவுங் காதலாய் அறத்திற்கென உயிர் விடும் கற்புடையோர். மாதவியும் கோவலனும் ஒருவரை ஒருவர் ஐயுறுங் காதலர். வம்பப் பரத்தையரோ காமத்தின் நகைக் கூத்தாளர். பரத்தையர் வாழ்வோ ஆர வாரக் கூத்து. கண்ணகியும் கோவலனும் துயரில் ஒளிரும் காதற்கற்பின் விளக்கங்கள். தேவந்தியும் சாத்தனும் உடலுறு கூட்ட மில்லாத தெய்வக் கற்புக் காதலர். ஆனால் அக்காதலும் பத்தினியை வழிபடக் காதலைத் துறந்து வருகிறது. கண்ணகியின் கற்பும் உடலுறு கூட்டத்தில் முகிழ்த்தாலும் பின் பிரிவெனும் தீயில் உருகி ஆயிரம்மாற்றுப் பொன்னாகிறது. மாதவியின் கற்பும் அப்படியே. பாண்டிமாதேவியின் உயர்வும் அப்படியே. எனவே காதலும் கற்பும் உயர்ந்து ஒளிர்வதன் நுட்பம் இவ்வாறு முடிந்த முடிபாகத்தேவந்தியின் முடிவான வழிபாட்டில் விளங்குகிறது.

VIII

கண்ணகி முடிவில் தெய்வமாகின்றாள். அப்பெரு வியப்பு நிகழ்வதற்கு இன்றியமையா

இயல்புகள் அவளிடத்தில் முன்னரே அமைந்து கிடக்கின்றன. இந்த உண்மையை வற்புறுத் தாது போனுல் முடிந்த முடிபினை நம்புவது அருமை ஆகலாம். வனதேவதை கண்ணகி யின் கற்புக்கு அஞ்சுகிறது. மாதவியும் குலப் பிறப்பாட்டி என்று அவளை வணங்குகிருள். சாலினியும் கொங்கச் செல்வி குடமலையாட்டி செந்தமிழ்ப் பாவை செய்தவக் கொழுந்து ஒரு மாமணியாய் உலகிற்கோங்கிய திருமாமணி எனப் பின்வருவதனைச் சுட்டி வாழ்த்துகிருள். கற்புக்கடம் பூண்ட இத்தெய்வ மல்லது பொற் புடைத் தெய்வம் யாம் கண்டிலமால் எனக் கவுந்தி வாழ்த்துகிருர். ஆய்ச்சியர் பல்வளைத் தோளியும் பண்டு நம் குலத்துத் தொழுனை ஆற்றினுள் தூம்ணி வண்ணனை விழுமந் தீர்த்த விளக்குக்கொல் என விம்மிதம் எய்து கின்றனர்.

கவுந்தி கடவுள் நெறி நிற்பவர். இருந் தாலும் சாரணர் போல அவ்வழியிற் சிறந்தவர் அல்லர். இவர்கள் எல்லாம் கூறுவதற்கு முன் னரே கண்ணகியின்உயிர்த்தோழியாகஇருந்து அவளை அறிந்தவள் தேவந்தி. சாத்தனையே மணந்து தெய்வத்தோடு பழகியவள். இவளும் அவள் உயர்வினை அறிகின்ருள் என்பதில் ஓர் ஏற்றம் உண்டு. வம்பப்பரத்தையை நரியாக் கிய கவுந்தியின் மனத்தினும் பண்பட்டுப் பழுத்த நெஞ்சம் கண்ணகி நெஞ்சம் என்று அங்கு அறிகிருேம். அதேபோலத் தேவந்தி கையின் தெய்வம் பழுத்த நெஞ்சினும் கண் ணகியின் நெஞ்சம் கடவுளுரம் சான்றது, என் பதும் இந்தக் கதையில் வெளியாகிறது. தெய் வத்தோடு பழகும் தேவந்தி, தன் தோழி கண் ணகி தெய்வக் குளத்தில் மூழ்கித் தலைவனைப் பெறக்கூடும் எனத் தெய்வவழி என்று தான் கண்டதனை மனமிரங்கிக் கூறுகிருள். சாத்தனை வழிபட்டதால் எழுந்த தெய்வீக எண்ணம் போலும் இது. தற்காத்துத் தற்கொண்டாற் பேணித்தகைசான்றசொற்காத்துச்சோர்விலாள் பெண் என நம்பியவள், தன் காலில் நில்லாது தெய்வத்தின் காலையும் நம்புவாளா ? தெய்வந் தொழாஅத கற்புடைமை "பீடு அன்று" எனத் தெய்வந்தொழும் கற்பெதிரே பேசிவெல்கிறது. கணவன் வருவான் என்ற நெஞ்சுரத்தோடு வாழ்கிறது அது. இவ்வாறு கண்ணகியின் நிலையை விளக்குதற்கும் இந்தக்கதை இன்றி யமையாததாகிறது. தேவந்தியின் வெள்ளிய தூய்மையைக் கருதியே அவள் வரும் முதற் பகுதியைக் கலிவெண்பாட்டாகப் பாடுகின்ருர் இளங்கோ.

IX

கண்ணகியோடு ஒற்றுமையும் வேற்றுமை யும் கொண்டு திகழ்கின்ருள் தேவந்தி. புறத் தளவில் உலகினர் கண்ணுக்குக் கண்ணகியும் தேவந்தியும் ஒன்ருகவே தோன்றுகின்றனர். தேவந்தியும் உலகினர்க்குக் காதலனைப் பிரிந்து வாழ்பவளாகவே தோன்றுகின்ருள். கண்ணகி யும் உண்மையாக அவ்வாறே தோன்றுகின் ருள். இருவரும் வருந்தி நோற்கின்றனர். இருவரையும் ஒன்றுகூட்டி உயிர்த்தோழிமார் என உலகம் கருதுவது இயல்பு. அவ்வளவே ஒப்புமை. அகமுக நோக்கால் உண்மையைக் காணும்போது வேற்றுமையே பெரிதாம். தேவந்தியோ தெய்வத்தோடு வாழ்கின்ருள். காதலனைப் பிரிந்ததெல்லாம் வெளிமயக்கே. ஆனுல் கண்ணகியோ உண்மையில் பிரிந்தும் உரங்கொண்டு தன் வாழ்வினை நோன்பாகக் கழிக்கின்ருள். பிறருக்கும் தன் துன்பம் தோன்ருதவாறு மறைக்கின்ருள். தேவந்தியும் துன்பத்தைப் பொறுத்துக்கொள்பவள்போலத் தோன்றினுலும் அவள் பொறுக்கத் துன்பம் ஒன்றும் இல்லை. ஒரே சூழலிடையே பிறந்து உயிர்த்தோழியராக வளர்ந்தவரிடையேயும் என்ன வேற்றுமை! என்ன வேற்றுமை! ஆனுல் வெளித் தோற்றத்தில் என்ன ஒப்புமை! என்ன ஒப்புமை! இத்தகைய ஒப்புமை வகை யாலும் வேற்றுமை வகையாலும் அன்ருே கதையில் வருவோர் தனிச் சிறப்பு நிலை பெற்று விளங்குகிருர்கள்.

X

பாத்திரத்தின் அடிப்படையான சிறப் பியல்போ செயலாலும் பேச்சாலும் வெளி

யாவதே நாடக முறையாகும். செயலால் தன் மன நிலை பிறருக்குத் தெரியாதவாறு மறைக்கும் இயல்பே கண்ணகியின் இயல்பாகும். இதனு லேயே கோவலனும் அவள் உள்ளத்தின் உண்மையறியாது போகிருன் போலும். அத்தகையவளை எவ்வாறு தன் உண்மை நிலையைப் பேசவைப்பது? இதுவே இக்காப்பியத்தில் எழுகிற சிக்கல். கணவனுக்கும் மறைப்பவள் உயிர்த்தோழிக்கே மனந்திறந்து பேசக் கூடும். பேசாமற் போனுலும் அவளோடு பழகிய உயிர்த்தோழி அவளை அறிந்துகொள்ள முடியும். எனவே காப்பியம் உயிர்த்தோழியைப் படைத்தல் வேண்டும். அவளும் தெய்வத்தன்மையை அறிந்து பழகுபவள் ஆதல் வேண்டும். உலகினர் அறியக் கணவனேடு வாழாத நிலையின் உண்மையினை அறிந்தவளாதலும் வேண்டும். இத்தனையும் வேண்டுமானுல் தேவந்தி தானே வேண்டும்.

உயிர்த் தோழியோடும் சில சொற்களே பேசுகின்ருள் கண்ணகி. 'பீடு அன்று' என்று கண்ணகி கூறியது வெளியார் மெச்சப் பேசிய பேச்சன்று. உயிர்த் தோழியின் உள்ளத் துடிப்பினை அறிந்து தன் உள்ளத்தினைத் திறந்து காட்டும் பேச்சே அது. உயிர்த்தோழிக் கெதிரே தோன்றும் அவள் உயர்நிலை அது; கண்ணகி இவட்கே தன் நெஞ்சுரத்தினையும் காட்டுகிருள்; கணவன் வருவான் என்ற நம்பிக்கையையும் தெள்ளத் தெளியக் காட்டுகின்ருள். அவள் கற்பின் திண்மை அது. அவள் தான் கண்ட கனவின் கலக்கத்தையும் வெளியிடுகின்ருள். உயிர்த்தோழிக்கு அன்றி இதனைக் கூறி இருப்பாளா? அப்படிக் கூறும் போதும் அவளிடமேனும் முழுவதும் கூறுகின்ருளா? இல்லை.தன்னில் தான் தழைத்தொளிரும் ஒருமனப் பெண்டு அன்ருே அவள்!

இவ்வாறு கனவினை வெளிப்படையாகக் கூறியதன் காப்பிய நோக்கம் என்ன? கண்ணகியின் காதலின் ஆழம் இங்கே வெளியாகிறது. கனவினைக் கூறிக்கொண்டதன் பின்னர் உடனே கோவலன் வருகிருன். "சிலம்புள கொண்மோ" என்கிருள். வேற்றூர் போய் வாணிகத்திற் சிறக்கவேண்டும் என்கிருன் கோவலன். இவள் கண்ட கனவின் உண்மை இதோ வெளியாகவில்லையா? பின் ஏன் எழுகென எழுகிருள் கண்ணகி. அது தான் இவள் காதலின் ஆழம். கணவனைக் கண்டதும் கனவினையும் மறக்கின்ருள். அவனைத் தவிர அனைத்தையும் மறக்கின்ருள். கற்பின் வெற்றியில் மகிழ்கின்ருள். அவன் உடனிருக்கும் வரை இந்தக் கனவு இவள் நினைவுக்கு வரவே இல் லை. பின்னர்க் கோவலன் இறந்தபின் இவளைத் தழுவ எழுந்து "இருந்தைக்க" என்று கூறி மேலுலகம் சென்ற பின்னரே இந்தக் கனவினை மறுபடியும் நினைத்து வாடி வருந்துகின்ருள். கணவன் அருகிருக்க அனைத்தினையும் மறக்கும் காதலின் ஆழம் இவ்வாறு வெளியாகிறது. தேவந்தி இல்லையானுல் இந்த உண்மை வெளியாகி இருக்குமா? இந்தக் கனவினைத் தேவந்தியும் குளங்களின் பெருமையில் ஈடுபட்டுக் கூறும் தன் துடிதுடிப்பில் பொருட்படுத்தாது போகிருள். தீமையொன்றும் கண்ணகிக்கு வாராது என்ற நம்பிக்கை விளைவித்த ஏமாற்றம் இது. இதனையே கண்ணகியைக் கோயிலில் கண்ட போது அரற்றிப் புலம்புகிருள். பல சாவிற்குத் தானே முளை என மனம் புழுங்குகிருள்.

கண்ணகி தெய்வமாகிய பின்னும் இவளை வழிபட வருகின்ருள் தேவந்தி. முதலிலிருந்து பழகி அறிந்தவள் இவளைத் தெய்வம் என்று நிலையாக வழிபட வருவதே இங்குள்ள சிறப்பு. தானறிந்த சாத்தனையும் துறந்து பத்தினியை இவள் வழிபட வரும் கதையில் ஓர் ஏற்ற முண்டு.

XI

மாதவிமேல் என்ன எண்ணம் கொண்டிருந்தாள் கண்ணகி என அறியவும் நம் மனம் அவாவுகிறது. காவற்பெண்டு கடம்பட்டாள் எனச் சினவாமையைக் கண்ணகியிடம் காட்டியது புற நிலையைச் சுட்டியதாகலாம். கண்ணகி

யின் உள்ளத்தின் உண்மை நிலை என்ன? இவள் கண்கள் புலம்பிக் கறுத்தன. ஆனால் மாதவியை வெறுத்தன்று. பின் அவள் மனத்தில் ஓடியதனை இவளே கூறுகின்றாள்.

''அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை நும்
பெருமகள் தன்னொடும் பெரும்பெயர்த் தலைத்தாள்
மன்பெரும் சிறப்பின் மாநிதிக் கிழவன்
முந்தை நில்லா முனிவிகந் தனனா,
அன்புளம் சிறந்தாங்கு அருள்மொழி அளைஇ
என்பா ராட்ட யான்அகத்து ஒளித்த
நோயும் துன்பமும் நொடிவது போலும் என்
வாயல் முறுவற்கு அவர் உள்ளகம் வருந்தப்
போற்று ஒழுக்கம் புரிந்தீர் யாவதும்
மாற்ரு உள்ள வாழ்க்கையேன் ஆதலின்
ஏற்றெழுந் தனன்யான்''

எனக் கோவலனிடம் கூறுகின்றாள் கண்ணகி. தன் மாமன் மாமிக்காக இவள் உருகுகின்றாள்; உலகம் பேசும் ஏச்சுரைக்கும் ஏங்குகின்றாள். ஒருவேளை கோவலனிடம் பேசும் போது மாதவியைப்பற்றிப் பேசுவது. பொருந்தாது எனக் கருதுகிறாளா? இந்த ஐயமும் தீர வேண்டுமானால் யார் தீர்க்க முடியும்? இவள் உள்ளத்தினை உள்ளவாறு அறிந்த உயிர்த் தோழியே தீர்க்க வேண்டும். ''மாதவி தன் துறவும் கேட்டாயோ தோழீ மணிமேகலை துறவும் கேட்டாயோ தோழீஇ'' என்று கூறுவதற்குத் தேவந்திகை உள்ளம் முந்துவதால் மாதவியிடம் கண்ணகிக்குக் காழ்ப்பில்லை என்பதும், மணிமேகலை கண்ணகியைத் தன் தாய் எனக் கருதியது போலவும் மாதவியும் மணிமேகலைக்குத் தாய் கண்ணகியே என்று மற்றொரு காப்பியத்தில் கூறுவது போலவும் கண்ணகியும் மணிமேகலையைத் தன் மகள் என நெஞ்சுருகி ஈடுபட்டாள் என்று கருதவும் இடம் உண்டு.

ஏன் இவ்வாறு பொருள் கொள்ளுதல் வேண்டும். ''உன்னைப் படாத பாடு படுத்திய மாற்றாளும், மாற்றாள் மகளும் இவ்வாறு அழிந்தனர்'' என்று வயிறெரிந்து பாடுகின்றாள் தேவந்தி. அதுவே கண்ணகி எதிர்பார்ப்பது போலும்'' எனக் கருதலாகாதா என்ற ஐயமும் பிறக்கும். ஆனால் முன் பின் வரும் செய்திகளோடு ஒத்த சுவையுள்ளதாகவே இந்தப் பாட்டுக்கும் அமைதல் வேண்டும். கண்ணகியின் தாயாரின் இறப்பு, மாமியின் மறைவு, தந்தையின் துறவு, மாமனார் துறவு, மாதரியின் இறப்பு, ஐயையின் நிலை இவற்றின் இடையே மணிமேகலையின் துறவும் மாதவியின் துறவும் வருதலால் அனைத்தும் அன்பில் எழுந்த பரிவிரக்கம் ஆகுமே அன்றி அழுக்காறும் வெகுளியும் இடையேவருவதற்கு இடம்இல்லை. வரும் இடம் இவ்வாறு இப்பாட்டிற்குப் பொருள் செய்து விடுகிறது. ''அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர் புன்கணீர் பூசல் தரும்'' என்பதன்றோ குறள். மேலும் சிறிதளவேனும் ஐயம் இருக்குமானால் வரந்தருகாதையில் தேவந்திகையின் கூற்று உண்மையை விளக்கி மாதவியின் பெருமையையும் மணிமேகலையின் பெருமையையும் வற்புறுத்துவதோடு கண்ணகியோடு ஒத்த தேவந்தியின் உள்ளம் ''பருவம் அன்றியும் பைந்தொடி நங்கை, திருவிழை கோலம் நீங்கினள் ஆதலின் அரற்றினன்'' என்று குமுறி வெடித்துச் செங்குட்டுவனிடம் புலம்புதல் காண்க. இந்தத் தெய்விக உள்ள நிலையில் தான் தூய சாத்தனும் அவள் வழியே வெளிவந்து பேசுகிறான். எனவே தேவந்திகையின் உள்ளத்தின் வழியே கண்ணகியின் உள்ளத்தினை அறியலாம். அவளும் அவ்வாறு பரிவாள் என்று கருதியே தேவந்தி அவ்வாறு அரற்றுகிறாள். மாதவிமேல் கண்ணகி கொண்டுள்ள உள்ளப் பாங்கை வேறுவகையில் அறிய இயலாது. நம் மனம் இவ்வாறு அறிந்து உண்மை உணர்ந்து மகிழ்கிறது.

XII

கண்ணகியைப் பிரிந்த கோவலன் அவளை வெறுத்தானே என்பது நம் உள்ளத்தில் எழுகிற கேள்வி. "சிலம்புள கொண்மோ" என்று முடிவில் கூறிய கண்ணகி முன்னரும் "வளையுள கொண்மோ தொடியுள கொண்மோ" என்று கூறியிருப்பாள் போலும். ஆதலின் கோவலன் கண்ணகியைப் பாராமலே வாழ்ந்தவன் என்று கூறுவதற்கு இல்லை. இங்கு உயிர்த்தோழியாக அமைந்த தேவந்தி தன்தோழமையாலும் தெய்வத்தின் நல்லருளாலும் அறிந்து கூறுவது பெருவிளக்கந் தருவதாகும். "கண்ணகி நல்லாளுக்கு உற்ற குறை உண்டு என்று எண்ணிய நெஞ்சத்து இனையளாய் நண்ணி அறுகுசிறுபூளை நெல்லோடு தூஉய்ச் சென்று பெறுக கணவனோடு" என்றாள். இதற்கு விளக்கம் கூறும் அரும்பத உரையாசிரியர் "தெய்வத்தை வழிபாடு செய்து அதுகொண்டு பெறுக என்றாள் என்று விளக்கம் தருகின்றார். "தூஉய்ச் சென்று இதற்குப் பரிகாரமாகச் சாத்தற்குத் தூவிப் பின்பு கண்ணகிபாற் சென்று" என்று பொருள் கூறிப் பின்னர்க் "கண்ணகியிடத்தே தூய்" "என்பாரும் உளர்" என்று எழுதுவர். பின் கனவினைக் கேட்டபின் "கைத்தாயுமல்லை கணவற் கொருநோன்பு பொய்த்தாய் பழம் பிறப்பில்" என்று கூறுகிறாள். கைத்தாயுமல்லை என்பதற்கு "அவனால் வெறுக்கப்பட்டாயும் இல்லை" என்று உரை எழுதுகின்றனர் உரையாசிரியர் அனைவரும். எனவே கண்ணகியை வெறுத்தமனம் கோவலனிடம் இல்லை எனலாம். பொச்சாப்பே உண்டு.

முடிபு.

தேவந்தி இல்லையானால் இத்தகைய சிறப்பினை எல்லாம் சிலப்பதிகாரத்தில் காண முடியாது. உயிர்த்தோழியாகிக் கதையோடு கதையாகத் தேவந்தி ஒற்றித்து நிற்கின்றாள். முதலிலும் அவள் உயிர்த்தோழி. முடிவிலும் உயிர்த்தோழி. இவ்வாறு ஓர் ஒற்றுமை விளங்குகிறது. இவளை எடுத்து எறிந்தால் கதையே சிதைவுபடும் என்பதில் என்ன ஐயம்?

திருக்குறட் சிறப்பும், பொருள் இயைபும்

பேராசிரியர் பண்டித வித்வான் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

திருக்குறள், இற்றைக்கு ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முன்தோன்றித் தமிழ் மொழிக்குத் தனிப் பெருமை தந்து நிலவும் தலைசிறந்த தொரு நூல் என்பது யாவரும் அறிந்த உண்மையாகும். ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங் குறட்பாக்களைக் கொண்ட இந் நூலில் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பிரிவிற் கூறப் பட்டுள்ள செய்திகள், பெரும்பாலும் எல்லோருக்கும் எக் காலத்துக்கும் ஏற்றன. பிற மொழியாளர் பலர், இந் நூலைத் தம் மொழிகளில் மொழிபெயர்த்துக்கொண்டதற்கு இதுவும் ஒரு காரணமாகும். இவ்வாறு உலகம் முழுதுக்கும் இது பயன்படுவதால்தான் "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு," என்று பாரதியார் பாடினார். வள்ளுவரால் உலகம் முழுதும் பயன் அடைந்தாலும், அவரைப் பெற்ற புகழ் தமிழ் நாட்டையே சேர்ந்தது, என்று பாரதியார் குறிப்பிட்டிருப்பது, மகிழ்ச்சிக் குரியது.

திருக்குறளுக்குப்பின் இப்போதுள்ள தமிழ் நூல்களுள், இதன் சொல்லையும், பொருளையும் எடுத்தாளாத நூல் இல்லை யென்று கூறலாம். எடுத்தாண்டவர்களுள் சிலர், இந் நூலையும், இதனை இயற்றியருளிய திருவள்ளுவரையும் பலவாறாகப் புகழ்ந்திருக்கின்றனர். இவர்களும், திருவள்ளுவமாலை ஆசிரியர்களும் கூறிய புகழுரைகளால், திருக்குறளுக்கு ஒன்பது சிறப்புப் பெயர்களும், திருவள்ளுவருக்கு ஒன்பது சிறப்புப் பெயர்களும் வழங்கி வருதலை அறியலாம். இக் காலத்தில் இயற்றப் படும் நூல்களுக்குப் பல மதிப்புரைகளைத் தக்காரிடம் வாங்கி வெளியிடுதல்போலப் பலருடைய பாராட்டுரைகளை வாங்கி நூலுடன் சேர்க்கும் வழக்கம், அக் காலத்தில் இல்லை. சில நூல்களுக்கு ஒருவராற் பாடப்பட்ட சிறப்புப் பாயிரந்தான் உண்டு. மேலும், ஒரு நூலைப் பாராட்டிப் பிற்காலங்களில் எழுந்த சில பாடல்கள் அச்சிடும்போது சேர்க்கப்படும். ஆனால், திருக்குறளுக்கு ஐம்பத்தைந்து புலவர்களின் பாராட்டுரைகள் அடங்கிய திருவள்ளுவமாலை என்னும் தனி நூல் அக் காலத்தில் இயற்றப் பெற்றுள்ளது. இஃது, இதற்கு முன்னும் பின்னும் உள்ள வேறு எந் நூலுக்கும் இல்லாத தனிப் பெருமையாகும். திருவள்ளுவமாலைக்குப் பின்னும் திருக்குறளைப்பற்றி எழுந்த பாராட்டுரைகள் எத்தனையோ பல என்பதும் இங்கு நாம் நினைவு கூரத் தக்கது. இந் நூலின் பெயர்க்குத் திரு என்னும் அடை கொடுத்து வழங்குவது, இதன் ஒப்புயர்வற்ற தன்மைக்கு மற்றொரு சான்றாகும். தெய்வத்தைப் பற்றிய நூல்களுக் கன்றி மற்றைய நூல்களுக்குத் திரு என்னும் அடை கொடுக்கும் மரபு இல்லை என்பது, இங்கே நினைத்தற் குரியது.

தமிழில் எந் நூலுக்கும் ஆறுக்கு மேற்பட்ட உரை முற்காலத்தில் இருந்ததாகத் தெரியவில்லை. அவ்வா றிருந்தும், இத் திருக்குறளுக்கு முற்காலத்தில் பதின்மர் உரை எழுதியிருக்கிறார்கள்; இக் காலத்திலும் பலர் உரை எழுதிக்கொண்டேயிருக்கிறார்கள் என்றால், இதுவும் இதன் தனிப்பெருமைக்குப் பிறிதொரு சான்றாகும். மேற் கூறியவைகளிலிருந்து இத் திருக்குறளில், தொன்று தொட்டு மக்களுக்கு மிகுந்த ஈடுபாடு இருந்தது என்பது நன்கு புலனாகும். மக்கள் ஈடுபட்டு மிகுதியாகப் பயில்வது காரணமாகப் பாடபேதங்கள் பெருகிவருவது இயற்கை. இவ்வாறு பாடபேதங்கள் பெருகும் என்பதற்குக் கம்பராமாயணம் இப்போது சான்றாக இருக்கிறது. ஆனால், சொல்லையும், பொருளையும் எளிதில் மாற்றிவிடமுடியாத நிலையில், திட்ப நுட்பமாக நம் திருக்குறட் பாக்கள் அமைந்திருப்பதால், இவற்றின் சொற்களை மாற்றியோ கூட்டியோ குறைத்தோ யாரும் வழங்க முற்படவில்லை. இவ்வாறு வரையறையாக இருந்தும், இதன்கண்ணும் சில பாடபேதங்கள் நேர்ந்து விட்டமை உரைகளால் தெரிகின்றது. இப்

போதுள்ள உரைகளிலும் காணப்படாத சில பாடபேதங்கள் நன்னூலின் முதல் உரையாகிய மயிலைநாதர் உரையிற்காணப்படுகின்றன. அவற்றைப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் ஒரு கட்டுரையாக நான் எழுதி வெளியிட்டிருப்பதைத் தமிழ்ப்பெருமக்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

பிற்காலத்தில், இத்திருக்குறட் பாக்களை அமைத்து இயற்றப்பட்ட செய்யுள் நூல்களும், இதன் கருத்தைத் தழுவியும் ஆராய்ந்தும் எழுதப்பட்ட உரைநடை நூல்களும், கட்டுரைகளும் பற்பலவாம். இவ்வகையிலும் திருக்குறளுக்கு ஒப்பான நூல், வேறு எதுவும் இல்லை என்று கூறலாம்.

இவ்வாறு, பிற நூல்களுக்கில்லாத வீறு பெற்று, இந்நூல் விளங்குவதற்குக் காரணம், இதன்கண் அமைந்துள்ள குறட்பாக்களில் வழுவின்மை, சொற்சுருங்குதல், விளங்குதல், இனிதாதல், விழுப்பயன் தருதல் ஆகிய பண்புகள் அமைந்திருப்பதே யாகும். "நவில்தொறும் நூல்நயம் போலும்," "அறிதோ றறியாமை கண்டற்றால்," என்று இந்நூலிற் கூறப்பட்டிருக்கும் உவமைகள் இந்நூலுக்கு மிகவும் பொருந்தும்.

இத்திருக்குறளின் சீரிய அமைப்புகள் பலவற்றில், பொருள் இயைபாகிய ஒரு பகுதியைப் பற்றி மட்டும் இங்கே கூறுவேன். பொருள் இயைபை இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம். அவையாவன:— 1. ஒரு குறட்பாவோடு மற்றொரு குறட்பாவை இயைத்துப் பார்ப்பதால் பொருள் நலம் பெறுதல்; 2. இயையாது முரண்படுவனபோல் தோன்றும் குறட்பாக்களுக்கு இயைபு காண்டல் என்பன. இவற்றுள், முதற் பிரிவுக்கு மூன்று பாலிலும் இருந்து ஒவ்வோரெடுத்துக்காட்டுக் கூறுவேன்.

1. ஒரு குறட்பாவோடு மற்றொருகுறட்பாவை இயைத்துப் பார்த்தால் பொருள் நயம் பெறுதல்:

அறத்துப்பால்

"ஒறுத்தார்க் கொருநாளை யின்பம்
பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்." (156)

"ஒன்றா வுலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்றாது நிற்பதொன் றில். (233)

இவற்றுள், முதற் குறட்பாவை மேற்போக்காகப் பார்க்கும்போது, பொறுத்தார்க்குத் தாம் இறக்குமளவும் புகழ் உண்டு என்னும் பொருள் தோன்றும். அப்பொருளும் பொருந்துவதுபோலத்தோன்றினும் புகழின் இயல்பை நோக்கும்போது அது பொருந்தாது. புகழ், அதனை யுடையான் இறக்கு மளவும் நின்று மறைவ தன்று; உலகம் இருக்கு மளவும் நின்று நிலவுவது. இவ்வுண்மையை இரண்டாம் குறள் விளக்குகின்றது. இக்குறளில் உள்ள "புகழல்லால் உலகத்துப் பொன்றாது நிற்பதொன்றில்," என்பதோடு முதற் குறளில் உள்ள "பொன்றுந் துணையும் புகழ்"என்பதை இயைத்துப் பார்க்கும்போது பொன்றுந்துணையும் புகழ் என்பதற்கு, உலகம் அழியு மளவும் புகழ் உண்டாம் என்னும் சிறந்த பொருள் புலனாகின்றது. எனவே, பொறுமையுடையார்க்கு, உலகம் உள்ளவரையும் புகழ் உண்டு என்பது கருத்தாம். இவ்வாறே, திருவள்ளுவர் தாம் கருதிய பொருளை விளக்குவதற்கு ஏற்ற சொற்களைத் தம் நூலில் இயைபுபட வழங்கியிருக்கும் இடங்கள் பல. அவ்விடங்களில் உள்ள இயைபுகளைப் பரிமேலழகர் உணர்ந்து பொருள் நயங்களைப் புலப்படுத்தியிருப்பது, அவரது உரைத்திறத்துக்கு உள்ள தனிச் சிறப்பாகும்.

பொருட்பால்

"நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு." (782)

"பெரிதினிது பேதையார் கேண்மை
பிரிவின்கட்
பீழை தருவதொன் றில்." (839)

முதற் குறளின் பொருள்: அறிவுடையார் நட்புக்கள், பிறை நிறையுந் தன்மைபோல நாடோறும் நிறையும் தன்மையவாம். மற்றைப் பேதைமையுடையார் நட்புக்கள், நிறைந்த மதி, பின் குறையும் தன்மைபோல நாடோறும் குறையும் தன்மையவாம்.

இரண்டாம் குறளின் பொருள்: பின் பிரிவு வந்துழி, அஃது இருவருக்கும் தருவ தொரு

துன்பமில்லை; ஆதலால், பேதையாயினர் தம் முட் கொண்ட நட்பு மிக இனிது.

இவற்றுள், இரண்டாம் குறட் பாவை நோக்கும்போது, ''யாருடன் கொள்ளப்பட்ட நட்பாயினும், பிரியும்போது துன்பம் தருமே! 'பேயோடாயினும் பிரிவரிது' என்று பெரியோர் கூறுவார்களே! பேதையார் நட்பு, பிரிவின் கண் ஏன் துன்பந் தாராது?'' என்ற வினு எழும். இதனை முதற் குறளில் உள்ள ''பேதை யார் நட்பு மதிப்பின் நீர'' (பேதையார் நட்பு நிறைந்த மதி, பின் குறையும் தன்மை போல நாள்தோறும் குறையும்.) என்பதோடு இயைத் துப் பார்க்கும்போது ஐயம் தீர்கிறது. இவ் வாறு இயைத்துப் பார்த்துப்,'பேதையார் நட்பு நாடோறும் தேய்ந்து வருதலின், துன்பம் தாராதாயிற்று', எனப் பரிமேலழகர் எழுதியிருப் பது நயமுடைத்து. நாள்தோறும் தேய்ந்து, இறுதியில் நட்பே இன்றுய்விடும் ஆதலால், பிரிவினல் வரும் துன்பமும் இல்லை என்பது கருத்து.

காமத்துப்பால்

''வாராக்காற் றுஞ்சா வரிற்றுஞ்சா
வாயிடை
ஆரஞ ருற்றன கண்.'' (1179)

''பெருஅமை யஞ்சும் பெறிற்பிரி
வஞ்சும்
அருஅ விடும்பைத்தென் னெஞ்சு.''
(1295)

இவ்விரு குறட்பாக்களும், தலைவனது பிரிவினல் வருத்தமுறும் தலைவியின் துன்ப நிலையைக் கூறுவன. முதற் குறட்பாவைப் பார்த்த அளவில், வரின் துஞ்சா என்ற பகுதி பிரிந்த தலைவன் வந்தால் தலைவியின் கண்கள் ஏன் உறங்கமாட்டா? என்ற வினவை எழுப்பு கிறது. இவ்வினவுக்குத் தலைவன் வந்தால் அவனேடு இன்ப நுகர்ச்சியில் ஈடுபடுவதால், கண்கள் உறங்கமாட்டா என்ற விடையைத் தான் பெரும்பாலோரிடம் நாம் எதிர்பார்த்தல் கூடும். இவ் விடையும் இயற்கைக்குப் பொருத்த மானதே. ஆயினும், இவ் விடையை நாம் ஏற்றுக்கொண்டால், தலைவியை அன்று நுகரும் இன்பத்தைப் பெற விரும்பும் பேரார்வ முடையவளாகக் கொள்ளுதல் வேண்டும். இவ் வாறு கொள்ளாமல், இடையருது என்றும் நுகரும் இன்பத்தைப் பெற விரும்புபவளாகக் கொள்ளுதல் மிக்க சிறப்பாகும். இதுதான் திருவள்ளுவர் கருத்தாக இருத்தல் கூடும் என் பது, இரண்டாம் குறளிலுள்ள ''பெறின் பிரிவஞ்சும்'' என்பதோடு இதை இயைத்துப் பார்த்தால், நன்கு விளங்கும். இவ்வாறு இயைத்து உணர்ந்து, வரின் (பிரிந்த தலைவர் வந்தால்) அவர் பிரிவஞ்சித் துயிலா (இனியும் அவர் பிரிவாரோ என அஞ்சிக் கண்கள் உறங்காவாயின)என உரைகொண்ட பரிமேலழகர், மிகவும் பாராட்டுதற்குரியர். பரி மேலழகர் திருவள்ளுவரின் கருத்தறிந்து உரை எழுதியவர் என்று ஆன்ருேர் கூறுவதற்கு இதுபோன்ற சில இடங்கள் தக்க சான்ருகும்.

குறட்பாக்களை ஒன்ருே டொன்று இயைத்து நோக்குவதால், பொருளின் உண்மைத் தன்மையும், பொருளின் தெளிவும், பொருளின் உயர்வும் ஆகிய சிறந்த பயன்கள் விளைதலை மேற்காட்டிய மூன்று எடுத்துக் காட்டுகளிலும் முறையே காணலாம்.

2. இனி, இயையாது முரண்படுவன போல் தோன்றும் குறட்பாக்களுக்கு இயைபு காண வேண்டிய இடங்களை மூன்று பிரிவாகக் கூறலாம். அவையாவன;– 1. முரண்பாட்டைப் பரிமேலழகரே எடுத்துக்காட்டித் தீர்க்கும் இடம்; 2. பரிமேலழகர் உரை எழுதும் முறை யில் முரண்பாடு தீரும் இடம்; 3. நாம் உய்த் துணர்ந்து முரண்பாட்டைத் தீர்க்கும் இடம் என்பன. இம் மூன்று வகைக்கும் ஒவ்வோர் எடுத்துக்காட்டுக் கூறுவேன்;

1. முரண்பாட்டைப் பரிமேலழகரே எடுத் துக்காட்டித் தீர்க்கும் இடம் :

'' நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்
தன்
உண்மை யறிவே மிகும்.'' (373)

'' தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்
தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.'' (396)

இவ் விரு குறட் கருத்துக்கும் உள்ள முரண் பாட்டைக் கண்ட பரிமேலழகர், இரண்டாம் குறள் உரையில், "இஃது ஊழ் மாறு கொள்ளா வழியாகலின், மேல் 'உண்மையறிவேமிகும்' என்றதனேடு மலையாமை யறிக," என முரண் பாட்டை எடுத்துக் காட்டித் தீர்த்திருப்பது குறிப்பிடத்தக்கது.

2. பரிமேலழகர் உரையெழுதும் முறையில் முரண்பாடு தீரும் இடம் :

" ஊழிற் பெருவலி யாவுள மற்றென்று
சூழினுந் தான்முந் துறும்." (380)

" ஊழையு முப்பக்கங் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்." (620)

இவ் விரு குறட்கருத்தும் முரண் படுகின்றன. இம் முரண்பாட்டைப் பரிமே லழகர் வெளிப்படையாக எடுத்துக் கூரு விடினும் இரண்டாம் குறள் உரையில், 'ஊழ் ஒருகாலாக இருகாலாக வல்லது விலக்கலாகா மையின், பலகால் முயல்வார் பயனெய்துவர் என்பார் உப்பக்கங் காண்பர் என்ருர்' என எழுதியிருப்பதிலிருந்து 'ஊழிற் பெருவலி யாவுள' என்னும் குறள் நம் நினைவுக்கு வருவதோடு அதற்கும், பின் குறளுக்கும் உள்ள முரண்பாடும் தீர்கின்றது.

3. நாம் உய்த்துணர்ந்து முரண்பாட்டைத் தீர்க்கும் இடம் :

" கல்லாதா னொட்பங் கழியநன் றுயினும்
கொள்ளார் அறிவுடை யார்." (404)

" எப்பொருள் யார்யார்வாய்க் கேட் பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு." (423)

இவற்றுள், முதற் குறள், கல்லாமை என்னும் அதிகாரத்திலும், இரண்டாம் குறள், அறிவுடைமை என்னும் அதிகாரத்திலும் உள்ளன. முதற் குறள் கல்லாதாரது இயற்கை யறிவின் குற்றம் கூறும் நோக்கத்திலும், இரண்டாம் குறள் அறிவின் இலக்கணங்கூறும் நோக்கத்திலும் அமைந்துள்ளன. ஆயினும், குறள் இரண்டையும் பார்த்தவுடன், ஒன்றற் கொன்று மாறுபட்டன போலத் தோன்றுகின் றன. மிக நல்ல பொருளாயினும், கல்லாதான் சொன்னல், அதனைக் கொள்ளலாகாது என்ற பொருள், முதற் குறளில் இருப்பதாகத் தெரி கிறது. இவ்வாறு பொருள் கொள்வது ஏற் புடைத் தன்று. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள், மெய்ப்பொருள் காண்பது அறிவு என்ற முடிவுதான் பய னுடையது. இதனை உணர்ந்த பரிமேலழகர், இரு குறளுக்கும் முரண்பாடின்மையை நாம் உய்த்துணர்ந்துகொள்ளுமாறு உரையெழுதி யிருப்பது, கூர்ந்து நோக்குவார்க்குப்புலனுகும். ஒண்மை—அறிவுடைமை. அது நன்ருகாது; ஆயிற்ருயினும், ஏரல் எழுத்துப்போல்வதோர் விழுக்கா டாகலின், நிலைபெற்ற நூலறி வுடையார் அதனை மதியார் என்பதாம்,' என் பது முதற் குறளுக்கு எழுதப்பட்ட விசேட வுரை. 'சொல்வாரது இயல்பு நோக்காது, அப் பொருளின் பயன் நோக்கிக் கொள்ளுதல், ஒழிதல் செய்வது அறிவென்பதாம்,' என்பது இரண்டாம் குறளுக்கு எழுதப்பட்ட விசேட வுரை. முதற் குறளில் உள்ள கொள்ளார் என்ற சொல், சிறிது மயங்க வைப்பினும், அதற்கு எழுதப்பட்ட மதியார் என்ற பொருள், மயக்கத்தைத் தீர்க்கின்றது. அஃதாவது, 'கல்லாதான் சொல்லும் நற்பொருளை அறிஞர் ஏற்றுக்கொள்வர்; ஆனல், அதனை அவன் அறிவுடைமையினல் விளைந்த தென்று கருதி, அவன் அறிவை மதிக்கமாட்டார்கள்; தானுக நேர்ந்தது என்று கொள்வர்,' என்பது கருத்து. இவ்வாறு தெளிவுறும்போது, இரண்டு குறட் பாக்களுள்ளும் உள்ள முரண்பாடு தீர்ந்த தோடு பயன்களும் கிடைக்கின்றன.

பெருங்கடல் போன்ற திருக்குறளில், சிறு துளி போன்ற ஒரு செய்தியைப் பற்றி இங்கே எழுதினேன். இவ்வாறே எத்துணையோ பல செய்திகளை விரிவாகவும், விளக்கமாகவும் இந் நூலில் நாம் உணர்ந்து இன்புறலாம். "எல்லாப் பொருளும் இதன்பால் உள; இதன்பால், இல்லாத எப்பொருளும் இல்லை" என்ற ஆன்ருேர் வாக்கை நினைவூட்டி, இக் கட்டுரையை முடிக்கின்றேன்.

கலைகள் தேவை

டாக்டர் மு. வரதராசன், எம். ஏ., எம். ஓ. எல்., பி. எச். டி.,

தமிழ்ப்பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

இயற்கையும் வாழ்க்கையும் தானே கலைகளில் வடிக்கப்படுகின்றன? இயற்கையையும் வாழ்க்கையையுமே புலன்களால் நுகர்ந்து அவை தரும் இன்பத்தோடு அமைதியுறலாமே! கலைகள் ஏன் என்று கேட்கலாம்.

முதலாவதாக, இயற்கையிலும் வாழ்க்கையிலும் உள்ள அழகின்பம் தெளிவானதாக இல்லை. கதம்பமாகக் குழம்பிய நிலையில் வேண்டுவன வேண்டாதன, பொருந்துவன பொருந்தாதன எல்லாம் கலந்து உள்ளன. ஆதலின் மனம் அவற்றை நன்கு நுகர முடியவில்லை. குழம்பிய நிலையை-கதம்பமாகக் கலந்த நிலையை-மாற்றி, வேண்டுவனவும் பொருந்துவனவும் மட்டும் கொண்டு அமைத்தால் மனம் நன்கு நுகர முடிகின்றது. கலை இதைச் செய்து தருகின்றது; ஆதலால் தேவையாகின்றது.

இரண்டாவதாக, இயற்கையும் வாழ்க்கையும் தரும் இன்பம் நொடிக்கு நொடி மாறிவிடுகிறது; நாம் வேண்டும் போது கிடைப்பதும் இல்லை. நாம் வேண்டும் போது கிடைக்கக் கூடிய வகையில் கலை படைத்து நிலைக்கச் செய்கின்றது; ஆதலால் தேவைப் படுகின்றது.

மூன்றாவதாக, வாழ்க்கையில் குழந்தைப் பருவத்தில் மனம் இயல்பான நிலையில்இருந்து புலன்கள் வாயிலாக அழகுவிருந்தை நுகர்கின்றது. ஆனால் வளர வளர, வாழ்க்கைச் சுமையும் அதை ஒட்டிய கவலைகளும் பெருகப் பெருக, மனம் தன் இயல்பை இழந்து செயற்கையான போக்கிற்கு அடிமைப்பட்டுஇயந்திரம் போல் இயங்கத் தொடங்குகிறது. அந்நிலையில் குழந்தைபோல் வானவில்லையோ, முல்லை மலரையோ, ஓடும் நீரையோ, பறக்கும் காக்கையையோ பார்க்கும் ஆர்வம் இல்லாமற் போகிறது. ஆகையால், இயற்கையும் வாழ்க்கையும் புலன்களுக்கு உரிய விருந்துகளை ஏந்திக் காத்திருந்த போதிலும், மனிதன் அவற்றைப் புறக்கணித்து அப்பால் செல்கின்றான். பழக்கத்தின் காரணமாக அவற்றின் அழகின்பத்தை நுகரும் மனம் அவனுக்கு இல்லையாகிவிடுகிறது. கலை சுவை நிரம்பியதாக அமைந்து அத்தகைய மரத்துப்போன மனத்தையும் ஈர்த்து நிறுத்தி விருந்து ஊட்ட வல்லதாக இருக்கிறது; ஆதலின் தேவைப்படுகின்றது.

உலகம், வேண்டுவன வேண்டாதன, பொருந்துவன பொருந்தாதன எல்லாம் கலந்து குழம்பிய நிலையில் கதம்பமாக உள்ளது எனக் கண்டோம். புலன்கள் எல்லாவற்றையும் கொள்வதில்லை; வேண்டுவன பொருந்துவன சிலவற்றை மட்டும் கொண்டு மற்றவற்றைத் தள்ளுகின்றன; மறக்கின்றன. இந்தக் கொள்ளலும் தள்ளலும் இல்லாவிடில், அறிவான வாழ்க்கைக்கு உரிய மூளை சுமை தாங்காமல் துன்புறும். இது எல்லோர்க்கும் அனுபவமாகும். எல்லார்க்கும் உள்ள இந்த இயல்பே, கலைஞரிடத்தில் சிறப்புற அமைந்துள்ளது. அவர்கள் அழகுணர்ச்சியுடன் வேண்டுவன பொருந்துவன தேர்ந்து கொள்கின்றனர்; மற்றவற்றை விடுகின்றனர். பெரும்பாலோர் தன்னலம் கொண்டு கண்மூடிச் செய்வதையே கலைஞர் அழகுணர்ச்சி கொண்டு தெளிவுறச் செய்கின்றனர் எனலாம். அதனால், பெரும்பாலோர் கண்டு கேட்டு உணர்ந்து கூறுவனவற்றைவிடக் கலைஞர்கண்டுகேட்டு உணர்ந்து புலப்படுத்துவன கலையாக விளங்கிக் கற்பவரின் உள்ளத்தைக் கவர்கின்றன.

ஆற்றங்கரையில் சிதறுண்டு பரந்து கிடக்கும் கற்களைப்போல் உள்ளன, இயற்கையிலும் வாழ்விலும் காணப்படும் அழகுப்

பகுதிகள். அவற்றைக் கண்டு கவலையின்றிச் செல்கின்றனர் பெரும்பாலோர். ஆயின் சிறுமியர் காணின், அழகிய கற்கள் சிலவற்றைப் பொறுக்கி, ஓரிடத்தைத் தேர்ந்தெடுத்து, அங்கே அந்தக் கற்களை ஒழுங்குற அமைத்து விளையாடுவர்; சிற்றில் இழைத்துக் கண்ணுக்கும் மனத்துக்கும் இன்பம் ஊட்டுவர். ஒழுங்கற்று வடிவற்றுக் கிடக்கும் பொருள்களை இவ்வாறு ஒழுங்குற அமைத்து அழகு பெறச் செய்யும் இந்த ஆர்வம் மனிதர் எல்லோர்க்கும் பொதுவாக உள்ளது. குழந்தைப் பருவத்தில் இது தெளிவாக விளங்குகிறது; வளர்ந்தபின் செயற்கையான வாழ்க்கைக் கவலைகள் அந்த ஆர்வத்தை மழுங்கச் செய்கின்றன; கலைஞர் மட்டும் அந்த ஆர்வம் மழுங்காமல் காத்துக் கொள்கின்றனர்.

நிலையில்லாமல் மாறும் அழகின்பத்தை நிலைபெறச் செய்து வேண்டும் போது கிடைக்குமாறு செய்வதால் கலை தேவைப்படுகிறது என்பதை மேலே கண்டோம். நிலையாமையே உலகத்தின் இயற்கை என்பர் சான்றோர். யாக்கை, இளமை, செல்வம் முதலியவற்றின் நிலையாமையைப் புலவர் சிலர் உணர்ந்து உணர்ந்து பாடியிருக்கின்றனர். அவை மட்டும் அல்லாமல் அழகு, உணர்ச்சி என்பனவும் நிலையில்லாதவைகளே. மேற்கு வானத்தில் மாலையில் காணப்படும் அந்தி அழகு நொடிக்கு நொடி மாறிக்கொண்டே இருக்கிறது. உள்ளம் வியந்து போற்றும் அழகு மிக்க சிறந்த காட்சியை வானத்தில் கண்டு மகிழ்கிறோம். சிறிது நேரம் கழிந்தபிறகு மீண்டும் அதைக்கண்டு மகிழ விரும்பினால், அந்த அழகு புலன்களுக்கு எட்டாத ஒன்றாக ஆகி விடுகிறது. ஒருநாள் ஒருவேளை உள்ளத்தில் தோன்றிய புதிய உணர்ச்சி மற்றொருநாள் மற்றொரு வேளையில் தோன்றுதல் அரிதாகிறது. இவ்வாறு மறைந்து மாறிப்போகும் அழகையும் உணர்ச்சியையும் வேண்டும்போது பெற முடியாமல் மனம் ஏங்குகின்றது. இயற்கையோ உலகமோ அந்த ஏக்கத்தைத் தீர்க்க முடிவதில்லை. நிலையில்லாமல் மாறிப் போகும் அந்த அழகையும் உணர்ச்சியையும் மீண்டும் பெற்று மகிழ விரும்பினால் அதற்காகக் கலையின் உதவியையே நாடவேண்டியிருக்கிறது. அதற்கு உற்ற கருவியாய் இருந்து உதவுவது கற்பனையே ஆகும். ஓரிடத்தில் கண்ட அழகையும், பெற்ற உணர்ச்சியையும் மற்றோரிடத்தில் பெற விரும்பினால் அந்த அழகையும் உணர்ச்சியையும் கற்பனை வடிவத்தில் படைத்துக் காக்கவேண்டும். மறைந்துபோகும் மாலைக்கதிரவனின் அழகை ஓர் ஓவியம் மறையாமல் காத்துத் தருகின்றது. வளர்ந்துமாறும் குழந்தையின் அழகைச் சிற்பக் கலை என்றும் உள்ளதாக்கிக் காட்டுகிறது. மாறிப்போகும் உள்ளத்து உணர்ச்சியை அவ்வாறே பிடித்து வைத்து வேண்டும்போதெல்லாம் கொணர்ந்து தருவன இசைக்கலையும் இலக்கியக்கலையும் ஆகும். இவ்வாறு நில்லாதவற்றை நிலையின என்று ஆக்கும் நல்ல ஆற்றல் கலைக்கு அமைந்திருக்கிறது.

இப்படி இருந்தால் நன்றாக இருக்கும் என்று ஒரு வேளையில் ஏங்கி உணர்ந்த உணர்ச்சிக்குக் கற்பனை நிலையான வடிவம் தருவது உண்டு. 'ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே' என்ற பாரதியாரின் பாட்டு நாட்டுரிமை பெறாத காலத்தில் அதனைப் பெற்றுவிட்டதாகக் கற்பனைசெய்து பாடியதாகும். உரிமை பெற்றால் எவ்வாறு மகிழ்ந்து கூத்தாடுவோம் என்பதை, உரிமைபெறாத காலத்திலேயே பாரதியார் நன்கு உணர்ந்து பாடினார். உரிமை பெற்ற முதல்ஆண்டுக்கு உரிய பாட்டே ஆயினும் 1948-ல் பாடிக்கொண்டாட வேண்டிய பாட்டை நாம் இன்றும் பாடி மகிழ்கிறோம் இதற்குக் காரணம் என்ன? அந்தக் காலத்து மக்களின் உள்ளத்தில் இருந்த சுதந்தர வேட்கையை நாம் இன்று கற்பனை செய்து உணர முடிவது தான் காரணம். ஆகக் கற்பனை முன்னோக்கிச் செல்வதும் உண்டு; பின்னோக்கி வாழ்வதும் உண்டு. அந்தப் பாட்டுப் பாடிய நிலையில் பாரதியாரின் கற்பனை முன்னோக்கிச் சென்றது. அதை இன்று பாடும்போது நம்முடைய

கற்பனை பின்னேக்கிச் சென்று அந்தஉணர்ச்சியைப் பெற முயல்கிறது. புலவர்களின் கற்பனை பின்னேக்கிச் சென்று மறந்து போகக்கூடிய கலை உணர்ச்சியை எல்லாம் மறவாமல் காக்க முயல்வதும் உண்டு. கபிலர், பரணர் முதலான புலவர்கள் பாடிய புறப்பாட்டுக்களும் அகப் பாட்டுக்களும் அத்தகையன எனலாம்.

இவ்வாறு, ஒரு குறிப்பிட்ட காலத்தில் தோன்றி மறைந்து போகும் தன்மையுடைய உணர்ச்சிகளை நிலைபெறச் செய்து, வேண்டும் போதெல்லாம் பெற்று நுகருமாறு செய்தல் கலையின் சிறப்பியல்பாகும்.

வாழ்க்கைச் சுமையாலும் பழக்கத்தின் காரணத்தாலும் அழகின்பம் நுகரும் ஆற்றல் மழுங்கிவிடுதல் கண்டோம். 'பழகப் பழகப் பாலும் புளிக்கும்' 'ஆர்ந்தோர் வாயில் தேனும் புளிக்கும்.' படைப்பில் உள்ள அழகிய பொருள்கள் எல்லாம் பழக்கத்தின் காரணமாகக் கவர்ச்சி இழந்து போகின்றன. அதனல் எத்தனையோ அழகுகளைப் பெற்றிருந்தும் நுகர முடியாதவர்களாக இருக்கிறோம். அறிவியல் கருவிகள் பெருகிய பிறகு, வாழ்க்கையில் வேகம் மிகுந்த காரணத்தால் பரபரப்பும் ஆர்வமும் பெருகிவிடவே, அழகுணர்ச்சியைப்பற்றிக் கவலை இல்லாமற் போய்விட்டது. புலன்களின் அழகுணர்ச்சி மிக மழுங்கிவிட்டது. இந்தக் குறை எல்லாம் தீர்த்து அழகுணர்ச்சியை வளர்த்துப் பண்படுத்திக் காக்கவல்லதாக இருப்பது கலையே ஆகும்.

கலை என்றேனும் ஒருநாள் நம் உள்ளத்தில் பதியுமாறு அழகான காட்சியையும், அழகற்ற காட்சியையும் நன்ருக எடுத்துக் காட்டும்போது, அந்த முரண்பாட்டால் விழிப்புப் பெறுகின்ரேம். அத்தகைய விழிப்புப் பெற்றுப் புலன்கள் பண்பட்டு வாழ்வதற்குக் கலை தேவையாக உள்ளது.



பண்டை நாகரிகச் சிறப்பியல்புகள்

திரு பா. சூரியநாராயணன், எம். ஏ; (வரலாறு) எம். ஏ; (அரசியல்)

அரசியற் பேராசிரியர், அழகப்பா கல்லூரி.

இந்நிலவுலகின்கண் மக்கள் தோன்றிய காலமுதல் இந்நாள் வரையிலும், வாழ்க்கையின் பல்வேறு துறைகளிலும், தங்கள் அறிவினுலும் திறத்தாலும் செய்து கொண்ட வசதிகளையே 'மக்களது நாகரிகம்' எனக் குறிப்பிடுவர் வரலாற்றுசிரியர்கள். அரசியல், சமுதாயம், பொருளியல், சமயம், நுண்கலைகள், (இசை, சிற்பம், ஓவியம் போன்றவை) இலக்கியம் முதலிய துறைகளிலெல்லாம் மக்களது அறிவு வளர, வளர, அவர்களுடைய திறத்தினுல் தோற்றுவிக்கப்பட்ட புதிய படைப்புக்களையே 'நாகரிகம்' என வழங்குவர் மேற்கத்திய வரலாற்றுசிரியர். அறிவு வளர்ச்சியும் வசதிப் பெருக்கமும் மட்டுமே மக்களது வண்மையான நாகரிக வளர்ச்சியைக் காட்டுவனவல்ல; அவர்களது உள்ளம் 'இரக்கம்' என்னும் சிறந்த பண்பினுல் வளர்க்கப்பட்டிருப்பது தான் அவர்களுடைய உண்மையான நாகரிக வளர்ச்சியைக் காட்டுவதாகும். இதனை வள்ளுவப் பெருந்தகையார் சிறப்பித்துக்கூறும் 'கண்ணேட்டம்' (இரக்கம்) என்னும் தலைப்புப் பாக்களிலிருந்து அறியலாம். மேலை நாட்டவர் கருத்தின்படி 'நாகரிகம்' என்பதற்குப் பொருள் கொண்டு, உலக நாகரிகத்தின் தோற்றுவாய்களாகக் கருதப்படுகின்ற எகிப்திய, சுமேரிய, பாபிலோனிய, அசீரிய, கிரீட், சிந்துவெளி, கிரேக்க, உரோம நாகரிகங்களின் சில சிறப்பியல்புகளை நாம் சீர்தூக்கிக் காணலாம்.

மேலே குறிப்பிட்ட பல்வேறு வாழ்க்கைத் துறைகளிலும் வசதிகளைப் பெருக்கிக் கொள்ள வேண்டுமானுல், அவற்றைக் கண்டுபிடிப்பதற்குப் போதிய ஓய்வு (Leisure) வேண்டும். கி.மு. 10,000 வரை மக்கள் கற்கருவிகளைப் பயன்படுத்தி விலங்குகளை வேட்டையாடி வாழ்ந்து கொண்டிருந்தபோது அவர்கள் ஓரிடத்தில் நிலையாகத் தங்கியிருக்கவில்லை; இடம் விட்டு இடம் பெயர்ந்து திரிந்து கொண்டிருந்தனர். வளமிக்க ஆற்று வெளிப்பள்ளத்தாக்குகளில் அவர்கள் நிலையாகத் தங்கி வாழ்ந்த காலத்தில்தான், அவர்களுக்கு வேண்டிய உணவைப் பயிர்செய்யவும், எஞ்சிய ஓய்வான பொழுதில் வாழ்க்கை வசதிகளைக் கண்டுபிடித்துச் செய்யவும், தலைப்பட்டனர். எனவே உலகின் பண்டைய நாகரிகங்களெல்லாம் நைல், டைகிரிஸ், யூப்ரடிஸ், சிந்து போன்ற வளமிக்க ஆற்று வெளிகளில்தான் தோன்றி வளர்ந்தன.

எகிப்து கி. மு. 5000-ல் வளமிக்க நைல் ஆற்று வெளியில் குடியேறிய வெள்ளை காகேசிய இனத்தவரே நைல்வெளி நாகரிகத்தை வளர்த்தவர்கள். குட்டையான, உறுதியான உடலுள்ள இம்மக்கள் சப்பை மூக்கும், நீண்டு ஒடுங்கிய தலையும், கரிய மயிரும் உடையவர்கள். இவர்களது அரசர்களுக்காக எழுப்பப்பட்ட கல்லறைச் (பிரமிட்) சுவர்களிற் காணப்படும் ஓவியங்கள் இவர்களது நாகரிகத்தை அறிய உதவுகின்றன. நைல் ஆற்றில் பல இடங்களில் கரையிலிருந்து கால்வாய்களை வெட்டி, வெள்ளப் பெருக்குக் காலத்தில் தண்ணீரைக் கால்களின் வழியாகக் கொண்டு போய் உணவுப் பொருள்களைப் பயிரிட்டனர். கரை அமைப்பதையும், கால்வாய்களைக் காப்பதையும் அரசாங்கமே கண்காணித்தது. அதற்கு உரிய வரியும் குடிமக்கள் விளைவித்த கோதுமை, சணல்நார் முதலிய பொருள்களிலும் ஆடுமாடுகளிலுமாகக் கொடுக்கப்பட்டது. சணலிலிருந்து ஆடை நெசவு செய்தனர்; வேலைப்பாடமைந்த மட்கலங்கள் செய்யவும், கண்ணுடியில் பொருள்கள் செய்யவும் அறிந்திருந்தனர். பொன்னிலுல் சிறு அணிகலன்களைச் செய்து அணிந்தனர். மரம், யானைக்

கொம்பு, பொன், வெள்ளி, தோல் இவற்றைக் கொண்டு நாற்காலி, படுக்கைகள் முதலியவற்றைச் செய்தனர். துடுப்புகளை வைத்துத் துழாவிக்கொண்டு கடல் கடந்து செல்லும் தோணிகளை மரத்தால் செய்தனர். அவற்றால் அவர்கள் நடுத்தரைக் கடலைக் கடந்து சிரியா, கிரீட் நாடுகளோடு வாணிகத் தொடர்பு வைத்துக் கொண்டனர். முதலில் அவர்களுக்குக் குதிரையும், இரும்பும் தெரியாது. பிற்காலத்தில் அவர்களோடு சேர்ந்த வடக்கத்திய ஹிக்சாஸ் என்போரே இவற்றை அவர்களுக்கு அறிவித்தனர். இவ்வுலக வாழ்க்கைக்குப்பின் உயிர் மீண்டும் வாழும் தன்மையுடையதென அவர்கள் நம்பினர்; எனவே அவர்களில் இறந்தோரைப் பல வசதிகளோடு புதைத்துக் கல்லறைகளை எழுப்பினர். அரசர்களது உடலைப் புதைக்கும்போது, அதற்கருகிலுள்ள அறையில் மறுவாழ்க்கைக்கு உதவுவதற்காக உணவு, அணிகள், படைக் கலங்கள் முதலியவற்றை வைப்பதோடு, அவர்களுக்கு வேலைசெய்வதற்காக, இம்மையில் தொண்டுசெய்த அடிமைகளைக் கொன்று புதைத்து வைப்பதுமுண்டு! எகிப்திய அரசர்களிற் சிறந்தோரான சோசர், கியுபு என்போருக்கு எழுப்பப்பட்ட பிரமிட்டுகள் பெரியவை. கர்னக் என்றவிடத்தில் கட்டப்பட்ட கோயிலும், லுக்சார் என்றவிடத்தில் காணப்படும் அரசர்களது கல்வெட்டுக்களடங்கிய கோயிலும், தூண்களடங்கிய பெருங்கூடமும் கட்டடக் கலையில் எகிப்தியரது தேர்ச்சியைக் காட்டுகின்றன. சிங்கத்தின் உடலும், மனிதனின் தலையும் உடைய உருவமொன்றை (ஸ்பிங்ஸ்–Sphinx) கி. மு. 2160-ல் செய்துள்ளனர்; மரத்திலும், கல்லிலும் பல அரசரது உருவங்களைச் செய்தனர்.

எகிப்திய மக்கள் தொடக்கத்தில் பல கூட்டங்களாகத் தங்கி வாழ்ந்தனர்; ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தலைவன் உண்டு; அவற்றுள் எழுந்த போர்களின் பயனாக வடவெளியிலும், தென்வெளியிலுமாக இரண்டுபிரிவுகளே எஞ்சி நின்றன; மெனஸ் என்ற அரசனால் இரண்டும் ஓர் ஆட்சியில் இணைக்கப்பட்டன. சமுதாயத்தில் அரசர், செல்வர், பூசாரிகள், குடியானவர், அடிமைகள் எனப் பல வகுப்பினர் இருந்தனர். கெட்ட ஆவிகளினின்றும் காத்துக்கொள்ளக் கூடிய தாயத்துக்களைச் செய்து விற்றுப் பெரும் பொருள் திரட்டினர் பூசாரிகள். நைல் கரையில் வளரும் பேபைரஸ் புல்லின் தடித்த பட்டையைக் காகிதமாகவும், கூரிய மரக்குச்சியைப் பேனாவாகவும், கரித்தூட் கரைசலை மையாகவும் கொண்டு இருபத்துநான்கு ஒலிவகைகளை உணர்த்தும் குறியீடுகளை அவர்கள் எழுதினர். அவர்களுடைய மதிப்பின்படி ஆண்டு ஒன்று 30 நாட்களை உடைய 12 திங்களைக் கொண்டது; அதன் முடிவில் 5 நாட்கள் விடுமுறையாக எண்ணப்பட்டன. இந்த எகிப்திய காலஅளவு முறையையே பின்னால் கிரேக்கரும், உரோமரும், அவரிடமிருந்து மற்றெல்லா ஐரோப்பியரும் கற்றுப் பின்பற்றினர். நாட்காட்டிகளை அவர்கள் பயன்படுத்தினர். அவர்களுடைய நூல்கள் சில இறப்பிற்குப்பின் உயிர் அடையும் நிலைகளைப்பற்றிக் கூறுகின்றன. டாகொடாப் (Ptahotep) என்பான் எழுதிய நூல் நல்ல நெறிமுறைகளைக் கூறுகிறது; மக்கள் ஒருவரை ஒருவர் மதிக்க வேண்டுமெனவும், செல்வர்கள் பிறரை நெறிமுறை தவறாமலும், அன்புடனும் நடத்த வேண்டுமெனவும், பின்னொரு காலத்தில் மக்களையெல்லாம் காத்து இன்பமூட்டக் கடவுள் வருவாரெனவும் கூறுகிறது. பாலத்தீனத்திலிருந்து வந்த சில எபிரேய மக்களின் சமயத்தலைவர்கள் டாகொடாப்பின் கருத்தைக் கற்றே, மக்களைக் காக்கும் மெசையா வருவரெனக் கூறியதாக வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர்.

எகிப்தியர் பல கடவுள்களை வணங்கினர்; நைல் ஆறு, பகலவன், ஆசிரிஸ், பல ஆவிகள், விலங்குகள் முதலியவற்றை வணங்கினர். இவர்களுக்காக எகிப்திய அரசர்கள் பெருங் கோயில்களை எடுப்பித்துப், பலிகள் கொடுத்து விழாக்கள் நடத்தினர். பொதுவாக அவர்கள்

கடவுளைப்பற்றிக் கொண்டிருந்த கருத்து அச்சம் ஊட்டுவது. இப்பல கடவுள் வணக்கத்தையும், கொடிய வழிபாட்டு முறைகளையும் நீக்கி, ஒரே கடவுள் பகலவனே எனவும், அவனும் எவ்வுயிரிடத்தும் அன்பும், பரிவும் உடையவனெனவும் கருத்தை மாற்றி, அதற்கொப்பக் கொடிய வழிபாடுகளை நீக்கி அன்புச் சொற்களால் வழுத்துவதற்காகப் பாடல்களை எழுதிச் சமயத்துறையில் பெரும் புரட்சியொன்றைச் செய்தவன் கி. மு 1375லிருந்து கி. மு. 1358 வரை எகிப்தை ஆண்ட அரசனுகிய நான்காம் ஆமன்காட்டப் என்பவன். இவனுடைய செம்மையான சமயக் கருத்துக்களுக்காக இவனைப் புகழ்ந்து பேசுவர் டேவிஸ் என்னும் வரலாற்றுசிரியர். எனினும் எகிப்தியப் பொது மக்கள் இச்சீர்திருத்தக் கருத்துக்களைப் புரிந்து கொள்ளாமல் புறக்கணிக்கவே, இவனுக்குப் பின் வந்த டுடன்காமன் என்னும் அரசன் பழைய கடவுள்கள், கூளிகளின் கோயில்களைத் திறந்துவிட்டுப் பழைய கொடிய வழிபாடுகளை வளரவிட்டான்!

எகிப்தியரின் ஆட்சிமுறை, அரசனது ஆட்சிமுறையை ஒட்டியது. அவர் தங்களது அரசனை 'பாரோவா' என அழைத்தனர். அரசனது ஆணைக்கு மக்களது உரிமையோ வேறு எதுவுமோ வரம்பாக அமைந்ததில்லை. முப்பத்தொரு குடும்பங்களைச் சேர்ந்த அரசர்கள் ஆண்டனர்; கி. மு. 1600 முதல் கி. மு, 1000 வரை ஆண்ட அரசர்கள் தெற்கில் சூடானிலிருந்து வடக்கே சிரியா வரையிலும் ஒரு பேரரசை நிறுவியிருந்தனர். அவர்களில் சிறப்பாக ஆமன்காட்டப் I, டுட்மாஸ், அவனது மகள் ஹாட்சிப்சட் (முதல் அரசி), ஆமன்காட்டப் IV முதலியோரைக் குறிப்பிடலாம். மெம்பிஸ், தீப்ஸ், டெல்–அல்–அமார்ன முதலிய ஆற்றங்கரைப் பேரூர்கள் எகிப்தின் தலை நகரங்களாகப் பல்வேறு காலங்களில் இருந்தன. அரசாங்கம் மக்களை நாட்டின் பல வேலைகளைச் செய்யும்படி வற்புறுத்திற்று. தரைப்படையும், கப்பற்படையும் தலைவர்களின்கீழ் பாரோவாவின் கட்டளைப்படி நாட்டைக் காத்தன. பயிர்த்தொழிலுக்குரிய கால்வாய்களையும், ஏற்றங்களையும் அரசாங்கம் மேற்பார்வை செய்தது.

கி. மு. ஏழாம் நூற்றுண்டில் அசீரியரால் எகிப்து வென்றுகொள்ளப்பட்டது. எனினும் கால்வாய்ப் பாசன முறையை எகிப்து, அராபியர்களின் மூலம் ஐரோப்பியருக்குக் கற்றுக் கொடுத்தது.

சுமேரியா: எகிப்திய நாகரிகத்தைப் போலவே பழைமையிலும், சிறப்பிலும் விளங்குவது சுமேரிய நாகரிகம்; இது மேற்கு ஆசியாவிலுள்ள டைகிரிஸ் யூப்ரடிஸ் ஆறுகளுக்கிடையேயுள்ள செழிப்புமிக்க வெளியில் கி மு. 5000ல் சுமேரியரால் தோற்றுவிக்கப்பட்டது. இவரும் எகிப்தியரைப்போல் செமிடிக் இனத்தவரல்லர்; கருமையும் வெளுப்பும் கலந்த நிறமுடையவர்; எகிப்தியர் நாட்டுப்புறங்களிலிருந்து நாகரிகத்தை வளர்த்தனர்;சுமேரியரது நாகரிகம் நகரங்களில் தோன்றி வளர்ந்தது; இவ் வாற்று வெளியில் எழுந்த நகரங்களாகிய நிப்பூர், ஊர், கிஷ், எரெக் என்பவை நாகரிகத்தில் சிறப்புற்று விளங்கின.

முதலில் புற்களாலும், களிமண் சுவர்களாலும் வீடுகள் அமைத்துக்கொண்ட இம்மக்கள் நாளாவட்டத்தில் வெயிலில் காயவைத்த செங்கற்களைக்கொண்டு வீடுகள் கட்டிக்கொண்டனர். ஆறுகள்தரும் செழிப்பான வண்டல்மண்ணில் கோதுமை, பார்லி, அத்திப்பழம், முதலியவற்றைப் பெருவாரியாகப் பயிரிட்டனர்; உலகிலேயே முதன் முதலில் கோதுமை பயிராகியது இவ்வாற்று வெளியில்தான் என்பது சில வரலாற்றுசிரியர் கருத்து. இவையும், பேரீச்சம்பழம், மீன், ஊன் இவையும் இவர்களது உணவு, தூண்டில்முள், வலை முதலியவற்றைக் கொண்டு மீன் பிடித்தனர். சக்கரங்களைச் செய்து வண்டிகளை ஓட்டத் தெரிந்த முதல் மக்கள் சுமேரியரே. ஆறுகளையும் கால்வாய்களையும் அடுத்த பசும் புல் வெளிகளில் ஆடுமாடுகளை மேய்த்து, ஆட்டுமயிரைக்

கொண்டு கம்பள ஆடை நெய்தனர். பின்னுல் பருத்தி ஆடையும் நெய்யக் கற்றுக் கொண்டனர். துணிகளுக்கு அழகிய வண்ணங்களைக் குழைத்துச் சேர்க்கும் தொழிலை அறிந்தனர். பொன், வெள்ளி அணிகலன்களும், செம்பு, கல் கருவிகளும் அவர்களிடையே வழக்கத்திலிருந்தன. தங்களை வடக்கு, வடகிழக்கு, வடமேற்குப் பகுதிகளிலிருந்து அடிக்கடி தாக்கித் துன்புறுத்தி வந்த காட்டுமிராண்டிகளிடமிருந்து காப்பதற்காக ஈட்டி, கேடயம் முதலிய போர்க்கருவிகளைச் சுமேரியர் வைத்திருந்தனர்.

முதலில் கருத்துக்களைச் சிறுபடங்களாக எழுதிய இம்மக்கள், பிற்காலத்தில் 350 வகையான ஒலிவகைகளைக் காட்டும் குறியீடுகளை ஆப்பு வடிவத்தில் எழுதினர். அவர்கள் தங்களது நூல்களைக் களிமண் தகடுகளில் எழுதினர். வணிகர் வைத்திருந்த களிமண் தகடுகள் இந்தியருக்கும் சுமேரியருக்குமுள்ள வாணிகத் தொடர்பைக் காட்டுகின்றன. இந்திய விலங்குகளின் வடிவங்களும் அவற்றில் வரையப்பட்டுள்ளன. சுமேரிய சமுதாயத்திலும், அரசர், செல்வர், பூசாரிகள், வணிகர், தொழிலாளர், அடிமை என்ற வகுப்புக்கள் உண்டு. சுமேரியர் ‘என்லில்’ என்ற நிலக் கடவுளையும், ‘எங்கி’ என்ற நீர்க்கடவுளையும் வணங்கினர். என்லில், எல்லம் என்ற மலை நாட்டுக் கடவுளாகையால், அக்கடவுளுக்கு உயர்ந்த கோபுரங்களமைத்துக் கோயில் கட்டினர். இறப்புக்குப்பின் உயிர், வாழுந்தன்மையது எனச் சுமேரியரும் எண்ணி இறந்தவருக்குரிய உணவு, கருவி முதலியவற்றையும் உடலோடு புதைத்தனர். அரசர், அரசியரின் கல்லறைகள் வேலைப்பாடு அமைந்தவை. ஊர் என்னும் இடத்திலுள்ள அரசர் கல்லறைகளில் அரசரது அணிகலன்கள், கருவிகள் முதலியவை காணப்படுகின்றன.

சுமேரியா நகர் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தனி அரசன் உண்டு; அவனே அவ்வூருக்குத் தலைமைப் பூசாரியாகவும் சில சமயங்களில் இருப்பதுண்டு. இந்நகர்களுக்கிடையே சண்டைகள் தோன்றினுலும், ஆற்றுக் கால்வாய்களையும், கரைகளையும் செப்பனிட்டுக் காக்கும் பொறுப்பில் எல்லாரும் ஒத்துழைப்பர். கி. மு. 2750ல் அக்கேடியர் என்னும் செமிடிக் இனத்தவர் சுமேரியரோடு கலந்து நாகரிகத்தை ஏற்றனர். ஒரு பேரரசாகச் சுமேரியர் விளங்கினர்; பல பிரிவுகளாகப் பேரரசு பிரிக்கப்பட்டு ஆளப்பட்டது. வரிப்பொருள் விளைபொருளாகவும், ஆடு மாடுகளாகவும் வாங்கப்பட்டு அரசாங்கக் களஞ்சியங்களிலும் பட்டிகளிலும் சேர்க்கப்பட்டது. பாபிலோன் என்னும் நகரம் அக்கேடியர் தலைவன் சார்கான் என்பானுல் நிறுவப்பட்டுப் பேரரசின் தலைநகரமாயிற்று. பொருள்களை நிறுக்கவும், அளக்கவும் கருவிகள் செய்யப்பட்டன. இவைகளைச் சரிபார்க்கவும், அரசாங்கப் பொருள்களின் வரவு, செலவுக் கணக்கைச் சரிபார்க்கவும் அலுவலாளர்கள் இருந்தனர். சீட்டுப் போட்டுப் பார்த்து, வேலைக்கு அமர்த்தும் முறையும் சுமேரியரிடை இருந்ததாகத் தெரிகிறது. பிற்காலத்திய அசிரியர், பாரசீகர், கிரேக்கர் சுமேரிய நாகரிகத்தைக் கைக்கொண்டு பரவச் செய்தனர்.

பாபிலோனியா: கி. மு. 2200ல் பாபிலோனிய நகரை மையமாகக் கொண்டு பரவி வாழ்ந்த செமிடிக் இனத்தவரான அமோரைட் மக்கள் நாகரிக வளர்ச்சிக்குரிய முயற்சிகளில் ஈடுபட்டனர். சுமேரிய நாகரிகத்தின் தொடர்ச்சியே பாபிலோனியரின் நாகரிகமாகும். சிந்து வெளியில் உள்ளவர்களைப் போலவே இவர்களும் நீண்ட அகன்ற தெருக்களும், பெரிய வீடுகளுமுள்ள ஊர்களை அமைத்தனர். பயிர்த் தொழில், பருத்தியாடை நெசவு முதலியன இவர்களது தொழில்கள். இவர்களது அரசரில் ஒருவனுன அம்முராபி என்பான் தனது மேற்பார்வையிலேயே பழத்தோட்டங்களையும், காய்கறித் தோட்டங்களையும் பயிராக்கி, ஆடுமாடுகளையும் வளர்த்தனன். வண்டல் மண் மிக்க இவ்வெளியில் கற்கள் கிடைப்பதரிதாகையால் கல் உருவங்கள் செய்யப்படவில்லை.

சுமேரியக் கடவுள்களையும், போர்க்கடவுளாகிய மார்டுக், காதற் கடவுளாகிய இஷ்டார் ஆகியோரையும் இவர்கள் வழிபட்டனர். ஒவ்வொரு வீட்டுக்கும் ஒவ்வொரு தனிக் கடவுள் உண்டு. கோவில்களை வாணிகத் தொழில், பணம்

கொடுக்கல் வாங்கல் செய்தல், கல்வி பயிற்றல் முதலிய தொழில்கள் நடைபெறுமிடங்களாக வும் பயன்படுத்தினர். நூற்றுக்கு இருபது விகித வட்டியில் பணம் கடனுகக் கொடுக்கப் பட்டது. சுமேரிய எழுத்துக்கள் 350ம் சிறுவர் சிறுமியர் கற்றனர், ஆசிரியர்களே அரசாங்க அலுவலாளராகவும், பூசாரிகளாகவும் தொழில் செய்தனர். வானில் உள்ள விண்மீன்களின் இருப்பையும், போக்கையும் கணித்தறிந்து, வாழ்வின் எதிர்கால நிகழ்ச்சிகளைக் கூறும் சோதிடக் கலையை முதன் முதல் தொடக்கி வைத்தவர் பாபிலோனியரே.

பாபிலோனிய சமுதாயத்தில் செல்வர், நடுவகுப்பார், அடிமைகள் என்ற பிரிவுகள் உண்டு. செல்வரிடத்துக் குற்றஞ் செய்தோ ருக்கு இரட்டிப்புத்தண்டனை உண்டு. பொருள் களை வாங்கும் செல்வரும் இரட்டிப்பு விலை கொடுக்கவேண்டும். அடிமைகளுக்கு மற்ற வருடன் மண உறவு கொள்ளும் உரிமையைச் சட்டம் அளித்தது. மணத்தில் சமயச் சடங்கு கள் இல்லை. மனைவி என்ற நிலையை அடைந்து விட்டதாகச் சான்று இதழ் ஒன்று அவளுக்கு அளிக்கப்பட்டது. மணமகன் பெண்ணின் தந்தைக்குப் பரிசு கொடுப்பதும், மணப்பெண் தன்னுடன் வீடு, தோட்டம், அடிமைப்பெண், நகைகள் முதலியவற்றைப் பரிசாகக் கொண்டு வருவதும் பழக்கத்திலிருந்தன. மணமுறிவைப் பெண் விரும்பினுல், அவள் கொண்டு வந்த பொருள்களில் பாதியை மணமகன் வீட்டுக் காரர் வைத்துக்கொள்ளுவார். குழந்தைகளை எடுத்து வளர்க்கும் உரிமை இருந்தது. பெண் களுக்குத் தந்தை, கணவர் ஆகியோரின் செல் வத்தில் பங்கு பெறும் உரிமை இருந்தது.

பாபிலோனிய அரசரில் பெரியவன் அம்மு ராபி என்பவன்; கி. மு. 2100-ல் ஆட்சி செய் தவன்; ஒரு கல்லில் அவன் பகலவக் கடவுளிட மிருந்து சட்டங்களைப் பெறுவதாக ஓவியம் வரையப் பட்டுள்ளது; அதன்கீழே அவன் தொகுத்து வைத்த சட்டங்களும் பொறிக்கப் பட்டுள்ளன. ஆட்சி அலுவலாளரை நிறுவிக் கைக்கூலி பெறுவோரை ஒறுத்து ஆட்சி செய் தான். நெறிமுறை மன்றங்களை அமைத்துச் சிறு குற்றங்களுக்கும் கடும் தண்டனைகளை அளித்தான். பல்வேறு தொழிலாளர்களுக்குக் கூலியையும் இவனது சட்டத்தொகுப்பில் வரை யறை செய்துள்ளான்.

அசீரியர்: கி. மு. 3000 முதல் கி. மு. 600 வரை பேரரசு நிறுவி ஆட்சி செய்த அசீரியரும் செமிடிக் மக்களே. டைகிரிஸ் தோன்றும் மலைநாட்டில் உள்ள அசூர், நினெவா என்ற ஊர்கள் அவர்களுடைய நாகரிகத்தைக் காட்டுவன. இரும்புப்போர்க் கருவிகளையும் குதிரைகளையும் பயன்படுத்தி வெகு எளிதில் பாபிலோனியரை வென்ற இம் மக்கள் போர்த்தொழிலையே கலையாகக் கொண்டவர்கள். வாணிகத்திலும் அவர்களது தலைநகரம் சிறந்து விளங்கிற்று. இந்தியா விலிருந்து கொண்டு வரப்பட்ட பருத்திச் செடியைப் பயிராக்கிப் பருத்தியாடை நெசவு செய்தனர். கற்கள் மிகுதியாகக் கிடைத்தமை யால், சிற்பக்கலையையும் இவர்கள் அறிந்திருந் தனர். இம்மக்கள் போரில் தோற்றவர்களை அடிமைகளாகக் கொண்டனர். செல்வர், போர் வீரர், தொழிலாளர், அடிமை என்ற வகுப்பாரை உடையது அசீரிய சமுதாயம். ஆசூர் என்ற கொடிய போர்க் கடவுளையும், இஷ்டாரையும், வேறு அறுபது கடவுள்களையும் இவர்கள் வணங்கினர். குறிகேட்கும் வழக்கமும் இவர் களிடையே இருந்தது; சோதிடத்திலும் உறுதி யான நம்பிக்கை உடையவர்கள் இம்மக்கள்.

எகிப்து, பாலத்தீனம், சிரியா, மெசொ பொட்டோமியா முதலியவற்றை வென்று ஒரு பேரரசை நிறுவின அசீரியப் பேரரசர்கள் டிக்லத் பிலேசர், சார்கான் II, சென்ன கெரிப், அசுர்பனிபால் முதலியோர் ஆவர். முற்றுகை யிட்டுக் கோட்டைகளைக் கைப்பற்றுவதில் பயிற்சி மிக்கவர் அசீரியர்; இவர் போரில் மிக்க உயிர்களை அழித்தனர். அவர்களது பேரரசு அறுபது பெரும் பிரிவுகளாகப்பிரிக்கப்பட்டது. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு படைத் தளபதியே தலைவர்; நாட்டில் அமைதியை நிலைநாட்டி, அரசருக்குரிய வரிப்பொருள் களையும், போர்வீரர்களையும் திரட்டிக் கொடுப்பது அவர்களது வேலை. அசீரியரது கடுமையான ஆட்சியே அவர்களது பேரரசைக் கவிழ்த்தது.

பாபிலோன் கல்தேயர் என்ற கூட்டத்தினரின் அரசரான நெபுக்கட்னெசார் என்பவரின் முயற்சியால் சிறிது காலம் நாகரிக வளர்ச்சியில் தலைதூக்கிற்று. இவர் தாம் மணஞ்செய்துகொண்ட மலைநாட்டு மனைவியை மகிழ்விக்கவேண்டித், தமது அரண்மனை மேன் மாடத்துத் திறந்தவெளியில் ஓர் அழகிய தோட்டத்தை அமைத்தார். இதுவே உலகப் புகழ்பெற்ற 'தொங்குதோட்டம்' ஆகும். இவரது ஆட்சியில் வானிலை ஆராய்ச்சிக்கூடங்கள் நிறுவப்பட்டன; பன்னிரண்டு இராசிக் கூட்டங்களாக விண்மீன்கள் பிரிக்கப்பட்டன. ஐந்து கிரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இக்கலையை இவர்களிடமிருந்து கிரேக்கரும், உரோமரும் கற்றுப் பரப்பினர்.

சிந்து வெளி நாகரிகம்: சுமேரிய, பாபிலோனிய நாகரிகங்களைப்போலக் காலத்திலும், தன்மையிலும் ஒத்து விளங்குவது நம் நாட்டுச் சிந்துவெளியில் கி.மு. 3500-ல் தோன்றிய நகர நாகரிகம். பஞ்சாப், சிந்து நிலப்பிரிவுகளில் கண்டெடுக்கப்பட்டுள்ள மொகஞ்சதாரோ, ஹாரப்பா நகரங்களே இதற்குச் சான்று. நீண்ட, நேரான, அகன்ற தெருக்கள், பெரிய விடுகள், ஒவ்வொன்றிலும் குளிப்பதற்குக் கிணறு, அறைகள், கழிநீர்க் கால்கள், ஊருக்குப் பொதுவான குளிக்கும் குளங்கள் ஆகியவசதிகள் இம்மக்களின் தூயவாழ்க்கை விருப்பத்தை விளக்குகின்றன. கோதுமை, பார்லி, பருத்தி பயிரிடல், நெசவு, மேற்காசியாவுடன் வாணிகம், செம்பு, கல், பொன், வெள்ளி, மரம் இவற்றில் கருவிகளும் கலன்களும் செய்தல், சிறுவர்க்கு வேண்டும் சிறுவண்டிகள், ஊதுகுழல், சிற்றுருவங்கள், கோலி, முதலியன செய்தல், கல்லிலும், வெண்கலத்திலும் உருவங்கள் செய்தல் முதலியன இவர்களது தொழில்கள். அவர்களது களிமண் தகடுகளில், மூன்று முகங்களையுடைய ஓர் ஆணின் உருவம், மீன், திமிலுள்ள காளை முதலியவை வரையப்பட்டுள்ளன. ஒரு பெண் கடவுளையும், முத்தலை ஆண்கடவுளையும், திமில் காளையையும், இலிங்க வடிவிலுள்ள கற்களையும் வழிபட்டனர் இம்மக்கள்; சிறு படங்களையே இவர் எழுத்துக்களாக எழுதினர். இவர்களது வழிபாட்டு முறையே பிற்காலத்தில் ஆரியரால் விரிவாக்கப்பட்டது. குதிரையும் இரும்பும் இவர்கள் அறியாதன. எனவே இவரது நாகரிகத்தைச்சுமேரிய நாகரிகத்தைப்போலவே வெண்கலக் கற்கால நாகரிகம் எனக் குறிப்பிடுவர். இதனை வேத கால இந்திய ஆரிய நாகரிகமே என ஒரு சிலர் குறிப்பிட்டாலும், சிந்துவெளி மக்களின் எழுத்து அமைப்பும், சமய வழிபாடும், நகரச் சிறப்பும், அவர்களது நாகரிகத்தை இந்தியாவின் மூத்த குடியினரான தமிழ் அல்லது திராவிடரின் நாகரிகமே எனக் காட்டும் என்று அண்மையில் காலஞ்சென்ற வரலாற்றுப் பேராசிரியர் ஈராசுப் பாதிரியார் கூறியது கவனிக்கத் தக்கது.

கிரீட், கிரேக்க, உரோம நாகரிகங்கள் கி. மு. 2000 க்குப்பின் தோன்றியவை. கிரேக்கரும், உரோமரும் ஆரியர்கள். அவர்கள் வருமுன்னரே தென்ஐரோப்பாவில் பரவியிருந்த கிரீட் நாகரிகம் ஐரோப்பிய ஆரியரல்லாத ஓரினத்தவரால் தோற்றுவிக்கப்பட்டது. சிந்து வெளியினரைப் போன்று இவர்கள் நகர நாகரித்தைத் தோற்றுவித்தனர். கிரிட், கிரீசுக்குத் தெற்கிலுள்ள ஒரு தீவு; அதிலுள்ள நாசஸ், பீஸ்ட்டஸ் நகரங்களில் கண்டு பிடிக்கப்பட்ட அரண்மனைகள், கருவிகள், அடுக்குக் கட்டடங்கள், குளிப்பறைகள், கழிநீர்க்கால்கள், தொழிற் கூடங்கள், முற்றங்கள் முதலியவை இவர்களது வசதியான வாழ்க்கையைக் காட்டுவன. அரண்மனைச் சுவர்களிற் காணப்படும் ஓவியங்கள் இம்மக்களது ஆடை அணிகலன்களைப்பற்றி அறிவிக்கின்றன. கடல் கடந்து வாணிகஞ்செய்து பொருளீட்டிய இம்மக்களது அரசனுக்குக் கிரேக்கத்திலுள்ள ஆதென்ஸ், ஒரு காலத்தில் கப்பம் செலுத்தியது. கி. மு. 1000ல் இந்நகரங்கள் கிரேக்கரால் அழிக்கப்பட்டாலும், இந்நாகரிகத்தைக் கிரேக்கர் பின்பற்றினர்.

கிரேக்க நாட்டின் நில அமைப்பும், உடைந்த கடற்கரையும் பல சின்னஞ்சிறு தனித்த நகரரசுகள் (city states) தோன்றக் காரணமாயிருந்தன. அவற்றுள் சிறப்பானவை ஆதென்ஸ், ஸ்பார்ட்டா. ஆதென்சில் மன்னராட்சி, உயர்குடிப் பிறப்பாளராட்சி, செல்வர்

ஆட்சி, ஒருமனிதன் ஆட்சி, குடிமக்கள்ஆட்சி என்ற முறைகள் ஆய்ந்தறியப்பட்டன. அதில் தோன்றிய சாக்ரட்டீஸ், பிளேட்டோ, அரிஸ்டாட்டில் முதலிய அரசியல் ஆசிரியர்கள், கிரேக்க அரசியலறிவை வளர்த்தனர். இலக்கியப் புலவர்களான ஹோமர், எஸ்க்கைலஸ், யூரிப்பிடிஸ், சோபோக்ளிஸ், அரிஸ்ட்டோபேனஸ் முதலியோரது இலக்கியப் படைப்புக்களை உலகம் என்றும் போற்றும். சிற்பக்கலையும் இசைக்கலையும் ஆதென்சில் வளர்ந்தன. கணிதஆசிரியர்களான யூக்லிட், ஆர்க்கிமிடீஸ், மருத்துவ ஆசிரியர்களான ஹிப்போக்கிரேட்டஸ், ஜீலன் முதலியோரின் கருத்துக்கள் பிற்காலத்தினரால் ஆய்ந் தறியப்பட்டன. பல கடவுள் வணக்கம் கிரேக்கரிடமும், உரோமரிடமும் பரவியிருந்தது.

உரோமரும் ஆரியரேயானுலும், கிரேக்கரைப்போல முதலில் நாகரிக வளர்ச்சியிலீடுபடவில்லை. நல்ல குடியாட்சிமுறையை நிறுவிச் சிறு நகரரசாக இருந்த உரோமை ஒரு பேரரசாக வளர்த்து விரிவாக்கிய பெருமை உரோமருக்கு உண்டு. அதில் தோன்றிய ஜூலியஸ் சீசர்போன்ற போர் வீரர்களையும், அகஸ்ட்டஸ் சீசர் போன்ற ஆட்சியாளர்களையும் உரோம வரலாறு பெருமையுடன் குறிப்பிடுகிறது. கிரேக்கரது நல்ல சட்டங்களைத் தொகுத்து வைத்து உலகுக்கு அளித்தது உரோம்.

எனவே வாழ்வின் பல்வேறு துறைகளிலும் பல நல்ல படைப்புக்களை நமக்கு விட்டுச் சென்ற இப்பழம் பெரும் மக்களுக்கு எல்லாம் இவ்வுலகம் கடமைப்பட்டுள்ளது. வாழ்க இவ்வுலகம்!

மெய்வேல் பறியா நகும்

முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம்

"கைவேல் களிற்ரெடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்."

என்பது திருக்குறளில் உள்ள ஒரு குறள். தன்னைக் கொல்ல வந்த யானையின் மீது கை வேலை எறிந்து போக்கிவிட்டுப் பகைவன் தன்மீது எறிந்த வேலைப் பறித்து மகிழ்ந்தான் என்பது குறளின் பொருள்.

இக் குறள் படைச்செருக்கு என்ற அதிகாரத்தில் வந்துள்ளது. படைச் செருக்கு என்-பது, படையின் தன்மை, வீரரின் திறம், வீரரின் சிறப்பு என்ருகும்.

உலக மக்கள் பலரிடமும் காணப்படுகின்ற வீரத்திற்கும், தமிழகத்தில் காணப்பெறும் வீரத்திற்கும் வேறுபாடு உண்டு. தமிழகத்தின் வீரம் ஒரு தனிப் பண்பு வாய்ந்தது. இதனைத் தமிழ் வீரம் என்றும், தமிழர் வீரம் என்றும் கூறுவர்.

பழங்காலத்துத் தமிழ் மக்களில் ஆண், பெண் ஆகிய இரு பாலரிடத்தும் காணப்பெற்ற சிறந்த வீரச் செயல்களைப் புறநானூற்றுப் பாடல்கள் அறிவிக்கின்றன. எனினும் வள்ளுவரது குறள் அதனை இன்றும் தெளிவாக்கிக் காட்டுகிறது.

தமிழர், முயல்வேட்டைக்குச் செல்வதைவிட யானை வேட்டைக்குச் செல்வதையே பெரிதும் விரும்புவர். அவரது எண்ணம் அத்தகையது.

முயலைக் கொன்று வெற்றி பெறுவதைவிட யானையை எய்து தோல்வியடைவதையே பெருமையாகக் கொள்ளுவர். அவரது கொள்கை அத்தகையது.

தம்மின் வலிமை குறைந்த எவரையும் தமிழர் தாக்குவதில்லை. மெலியோர் தம்மைத் தாக்க முன் வந்த போதும் வலியோர் அவர்களைத் தாக்காது, அவர்களை நோக்கிப் "போர் எண்ணங்" கொண்டு என் முன் நில்லாதே; நின்ருல் மடிந்து மண்ணிற் புதையுண்டு, நடுகல்லாக நிற்பாய் எனக் கூறி அனுப்பிவிடுவர். அவரது அறம் அத்தகையது.

தம்மோடு ஒத்த அல்லது உயர்ந்த வலிமையுடையவரோடு மட்டுமே போரிடுவர். அப்போதும் கூடப், பகைவனது வலிமை குறைந்து விட்டால், மேலும் தாக்காமல், "இன்றுபோய் நாளை வா" என்று அவர்களை அனுப்பிவைப்பர். அவரது பேராண்மை அத்தகையது.

போர்க்களத்தில் பகைவரை வெகுண்டு நோக்குவர். விழித்துப் பார்க்கும் அக் கண்களை நோக்கி வேல்கள் பறந்து வரும். அம்பொழுதுங்கூட அவர்கள் விழித்த கண்களை இமைப்பதே இல்லை. அவரது போர் ஆண்மை அத்தகையது.

இவைபோன்ற பழந்தமிழ் வீரர்களின் பண்பாட்டினைத் திருக்குறள் நிலைத்து நின்று இன்றும் நமக்குக் காட்டிக் கொண்டிருக்கிறது.

இக்கட்டுரையின் தலைப்பில் இருக்கும் குறள் ஒரு போர் வீரனின் சிறந்த வலிமையைக் காட்டும் உயர்ந்த ஓவியமாகும்.

வீரன் போர்க்களம் புகுந்தான். அவனுக்கு வேல் ஒன்றே படைக் கருவியாக இருந்தது. பகைவரது யானை ஒன்று அவனைக் கொல்ல வந்தது. அதன் மீது குறிபார்த்து வேலை எறிந்தான். யானையோடு வேலும் போய்விட்டது. வெறுங் கையனுனன். அப்போது பகைவனல் எறியப் பெற்ற வேல் ஒன்று தன் மார்பின்மீது வந்து பாய்ந்தது. வீரன் அதனைப்பிடுங்கிக் கைப்பற்றிக் கொண்டு நகைத்தான் என்பதே இக்குறள் கூறும் வரலாறு.

"கைவேல் களிற்றெடுபோக்கி" என்பது வேலின் தாக்குதலால் புண்பட்டு வீறிட்டுப் பின்வாங்கி ஓடும் யானையினது உடலோடு வேலும் போய்விட்டது என்பதா? அன்றிக் களிற்றினது உடலிற் புகுந்து அதன் உயிரைப் போக்கித் தானும் அதன் உடலில் அழுந்தி மறைந்து போயிற்று என்பதா? புலப்பட வில்லை. எனினும் இவை இரண்டுமே வீரனுக்கு வெற்றி தருவதாகும்.

வெற்றி பெற்ற இவன் தன் கை வெறுமை யாயிருப்பதைக் கண்டு மறுபடியும் ஒரு கருவி யைப்பெறப் போர்க்களத்திலிருந்து திரும்பு கிறான். வீரன் திரும்பி வரும் செய்தியைக் குறளில் உள்ள "வருபவன்" என்ற சொல் லால் அறிய முடிகிறது. அப்போது மாற்றான் ஒருவன் எறிந்த வேல் ஒன்று இவன் மார்பின் மீது வந்து பாய்கிறது. அதைத் தன் கைகளினால் பற்றிப் பறித்துக் கொண்டே நகைக்கிறான்.

தரும் என்பது தருதல் என்றாகும். இது, நகைத்தல், சிரித்தல், களித்தல், மகிழ்தல் என்பவைகளைக் குறிக்கும். வீரன் ஏன் நகைத்தான்? எதன் பொருட்டு நகைக்கிறான்? என்று எண்ணும்பொழுதே நமக்கும் ஒரு நகைப்பு உண்டாகிறது.

தேடிச் சென்ற கருவி வழியிலேயே தானே வந்து அகப்பட்டுவிட்டதே என எண்ணி நகைக்கிறானோ? அவ்விதமாயின் இது மகிழ்ச்சிச் சிரிப்பாகும்.

மார்பில் தைத்த வேல் ஊடுருவிச் சென்று தன்னை வீழ்த்தி விடாமல் கையால் பறித்து எடுக்கும் அளவில் மட்டும் தைத்ததே யென்று நகைக்கிறானோ? அவ்விதமாயின் இது வெற்றிச் சிரிப்பு ஆகும்.

கைவேலை எறிந்து விடுவது வீரர்களுக்கு அழகில்லையே. களிற்றின்மீது மட்டுமே எறிய வேண்டியவேலை என் மீது எட்டியிருந்து ஏன் எறிந்தான்? ஒருகால் இவன், மதயானையை ஒழித்த என்னையும் ஒரு மதயானை எனக் கருதி விட்டானோ? என எண்ணி நகைக்கிறானோ? அவ்விதமாயின் அது ஏளனச் சிரிப்பு ஆகும்.

என் கை வேலோ யானையின் உடலையும் ஊடுருவித் துளைத்தது. இவ்வேலோ என் உடலையும் துளைக்கவில்லை. இது எதற்குப் பயன்படப்போகிறது? என்று எண்ணிச் சிரித் தானோ? அவ்விதமாயின் இது மனக்குறைச் சிரிப்பு ஆகும்.

வேலைப் பறித்துக் கையிற் பற்றிக் கொண்டு, வேல் எறிந்த வீரன் தன் முன் இல் லாமை கண்டு "மறைந்திருந்து தாக்கும் இத் தகைய மக்கள் தமிழகத்திலும் உள்ளார்களே" என எண்ணிப் புண்பட்ட மனத்தோடு நகைத் திருப்பானோ? அவ்விதமாயின் இது துன்பச் சிரிப்பு ஆகும்.

தன் கை வலிமைக்கு முன் மதயானையும் நிற்க ஆற்றாமல் போயிற்று. எதிர்த்து வரும் இம்மக்கள் எம்மாத்திரம்? என எண்ணி நகைத் திருப்பானோ? அவ்விதமாயின் இது தன்னம் பிக்கைச் சிரிப்பு ஆகும்.

தன் மார்பின்மீது வேலால் தாக்கப்பெற்ற போதும் அதை எண்ணி வருந்துவதை விட்டுத் தன் கை வேலால் தாக்கப்பெற்ற மதயானை ஒன்று அஞ்சி அலறி ஓடுவதைக் கண்டு அக மகிழ்ந்து நகைத்திருப்பானோ? அவ்விதமாயின் இது வெற்றிச் சிரிப்பு ஆகும்.

யானையோடு போரிட்ட களைப்பையும் கரு தாது, மாற்றாரின் வேலால் உடல் துளைக்கப் பெற்ற களைப்பையும் நினையாது, மீண்டும் மீண்டும் போரில் விருப்பங் கொண்டு தன் மெய்யில் அழுத்திய வேலையே பறித்துப் பகை வரை அழைத்துச் சிரிக்கிறானோ? அவ்வித மாயின் அது பயங்கரச் சிரிப்பு ஆகும்.

இச் சிரிப்புகளில் அடங்கியிருக்கிற பொருள் கள் இவ்வளவுதானோ? இன்னும் என்னென் னவோ? யாரால் கண்டு பிடிக்கமுடியும்? கூற முடியும்? எத்தனையோ சிரிப்புக்களைக் கண்டு

சிரிப்பாய்ச் சிரிக்கின்ற நமக்கு இவ் வீரனது நகைப்பு ஒரு திகைப்பை உண்டாக்கி விடுகிறது.

''மெய்வேல் பறியா நகும்'' என்ற நான்கு சொற்களுக்குள்ளாகவே இவ்வளவு கருத்துக்களையும் அடக்கிக் காட்டுகின்ற வள்ளுவரது புலமையும், திறமையும் பாராட்டு தலுக்குரியவையாகும்.

இக் குறளுக்கு உரை கண்ட ஆசிரியர் பரிமேலழகர், தன் கைவேலைக் களிற்றொடு போக்கிய பிறகு தன்னைக் கொல்ல வரும் மற்றொரு யானையைக் கண்டு தன் மெய்வேலைப் பறித்து நகைத்தான் எனக்கூறுகிறார். மற்றொரு யானையை அவர் வருவித்துக் காட்டுகின்ற காட்சி குறளைத் தழுவாவிட்டாலும் வீரத்தைத் தழுவி நிற்பதால் வரவேற்கக் கூடியதேயாகும்.

வேல், அம்பு முதலியவைகளைத் தம் உடம்பில் வாங்கித் திருப்பி எறியும் போர்ச் சிறப்பைக்,

"கையில் வாளி தெரிவந்தபின்
காய்ந்துதம்
மெய்யில் வாளிகள் வாங்கிவில்
வாங்கினர்'' என்ற

வில்லிபாரதத்தினுலும்,

"எய்தவர் பகழி யெல்லாம்
பறித்தவன் என்மேல் எய்யும்'' என்ற

கம்பராமாயணத்தினுலும் அறிய முடிகிறது. இதிலிருந்து தமிழ்மக்களின் பேராண்மையும், போராண்மையும் நன்கு விளங்கும்.

இவை அனைத்தும் பழம் பெருமைகள் என்று வெறுத்து ஒதுக்கிவிடக் கூடியவையல்ல. பழம் பெருமைகளை எண்ணி நடப்பது புதிய வாழ்வுக்கு வழி வகுப்பதாகும் என்பதை நாம் நம்ப வேண்டும்.

நாட்டின் செழிப்பை, மொழியின் வளர்ச்சியை, மக்களின் வீரத்தை, மறைந்திருந்து தாக்கும் இன்றைய வஞ்சக மக்களை ஒழிக்கவும், பகைவர்கள் என்ன செய்தாலும் உறங்கிக் கிடக்கும் இன்றைய தமிழ்மக்களை விழிப்படையச் செய்யவும் இதுபோன்ற பழந்தமிழ் வீரர்களின் வரலாறு பெரிதும் துணை செய்யும்.

திருமுருகாற்றுப்படை

பொருட் சிறப்பும் பெயர்க்காரணமும்

டாக்டர் மோ. அ. துரை அரங்கசாமி, எம். ஏ., எம். ஓ. எல்., பி. எச். டி.,
துணைத்தமிழ்ப் பேராசிரியர், பல்கலைக்கழகம், சென்னை.

பத்துப் பாட்டில் முதலில் நிற்கும் சிறப்புப் பெற்றுள்ள பாட்டுத் திருமுருகாற்றுப் படை ஆகும். இது 317 அடிகளால் ஆன ஓர் ஆசிரியப்பா. இதனைப் பாடியவர் நக்கீரர். மெய்யுணர்வுடைய புலவராய் அறிவு நெறி பற்றி நிற்பார், முருகனிடம் சென்று பேரின்ப வீட்டினை எய்தும் முறைமையையும், மெய் யுணர்வு எய்தும் புலமை எய்தப் பெருமலிருந் தாலும், அன்பு நெறி பற்றி நிற்பார் எவரா யினும் அவரிடம் முருகன் தானே வந்து அருள் செய்ய அதனுல் பேரின்ப வீட்டினை எய்தும் முறைமையையும் நக்கீரர் திருமுரு காற்றுப்படையில் தெளிய உணர்த்துகிருர்.

நக்கீரர் காலத்திலேயே சாதியும் சடங்கும் முதலாயின, கடவுள் வழிபாட்டில் இணைத்துப், பொதுவில் மக்களாகப் பிறந்தவர் அனைவரும் இறைவனை வழிபட்டு, அவ்விறைவன் அருளைப் பெறுதற்கு முடியுமோ முடியாதோ என்று ஐயத்தை வேரூன்றச் செய்து விட்டன. உயர்ந் தோர், தாழ்ந்தோர், ஆண்பாலார், பெண் பாலார், இன்ன சாதியினர், இன்ன குலத்தினர், இன்ன இனத்தினர், இன்ன மரபினர் என்ற வேறுபாடின்றி மக்களாகப் பிறந்தவர் அனை வருமே அவனருளைப் பெறுதற்குரிய தகுதி யுடையவர் எனப் பொதுமையறம் வகுத்துக் காட்டுகிருர் நக்கீரர். அவனருளை எளிதில் பெறுவதற்குரியது அவனிடத்துக் கொள்ளும் மாருத அன்புடைமையேயாகும்.

நக்கீரர் அறிவு நெறியை உணர்ந்தவர்; அன்பு நெறியைப் போற்றியவர்; இரு நெறி களாலும் வீட்டின்பம் எய்தலாம் என விளக்கி, அவ்விரு நெறிகளுள்ளும் அன்பு நெறியே அனைவராலும் கடைப்பிடித்தற்குரிய எளிய நெறியாம் என்று அவர் உணர்த்தியிருக்கிருர்.

திருமுறுகாற்றுப்படையில் உள்ள ஆறு பகுதிளுள், முதல் நான்கு பகுதிகள் அறிவு நெறியையும், அறிவு நெறியால் வீட்டின்பம் எய்தும் திறத்தினையும் உணர்த்துவன என லாம். ஐந்தாம் பகுதியும் ஆரும் பகுதியும் அன்பு நெறியையும், அவ்வன்பு நெறியால் வீட்டின்பம் எய்தும் வழியையும் உணர்த்து வன எனலாம்.

திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திரு ஆவினன்குடி, திருவேரகம், குன்றுதோறு, பழமுதிர்சோலை என்ற ஆறு படை வீடுகளில் முருகன் தங்கியிருப்பதாக நக்கீரர் பாடுகிருர் என்று கூறுவது மரபு.

"முருகன், ஞாயிற்றைக் கடலிடத்தே எழக் கண்டாலொத்த தண்ணிய பேரொளிப் பிழம்பினன்; தன்னை விரும்புவாரது அறியா மையை உடைத்தெறியும் தாள்களைஉடையவன்; தன்னை விரும்புபவர்க்குப் பகையாயினவரைத் தேய்த்தொழிக்கும் கைகளையுடையவன்; தேவேந்திரன் மகள் தேவயானையின் கணவன்; சூரர மகளிர் தன்னைப் பாடியாடும் சோலையை யுடைய வெற்பின் சரிவில் நின்ற செங்காந்தட் பூவால் ஆகிய பெரிய கண்ணியைச் சூடிய முடியையுடையவன்; பேய் மகள் விறற்களம் பாடித் துணங்கைக் கூத்தாட அக்களத்தில் சூர் முதல் தடிந்த செவ்வேற் சேஎய். இத்தகைய முருகனுடைய சேவடி படரும் செம்மல் உள்ள மொடு நலம்புரி கொள்கைப் புலம் பிரிந்துறை யும் செலவு நயப்பின், அவன் மதுரையின் மேற்கே திருப்பரங்குன்றில் உள்ளான்; ஆண்டுக் காணலாம், செல்க" எனக் கூறுவது திருப்பரங்குன்றப் பகுதி.

'சேவடி படரும் செம்மல் உள்ளம்'என்பது முருகனுடைய செம்மை வாய்ந்த திருவடியையே உள்ளிச்செல்லும் தலைமையையுடைய உள்ளம். 'நலம்புரி கொள்கை' என்பது நல் வினைகளைப் பல பிறப்புக்களிலும் விரும்பி நிகழ்த்தினமை போல், இப் பிறப்பிலும் அவ்வினைகளையே விரும்பி நிகழ்த்தும் கோட்பாடு. 'புலம் பிரிந் துறைதல்' என்பது மெய்யுணர்வால் அறித லைக் கைவிட்டுத் தங்கும் திருவடி ; அஃதாவது காண்பானாகிய தன்னையும், காண்பதற்குரிய காட்சியையும் மறந்து காணப்படும் அத் திருவடியாகவே ஆய்விடுதல்.ஈண்டுத் திருவடி யென்பது வீடெனப் படுவது என நச்சினார்க் கினியர் கூறியிருத்தலை நோக்குக. எனவே, முருகனடியையன்றி வேறொன்றையும் உள்ளு தல் இல்லாத சிறந்த உள்ளத்துடன், நல்வினை களையே பல பிறப்புக்களிலும் நிகழ்த்திவந்த பழக்கத்தால் இப்பிறப்பிலும் அத்தகைய நல்வினைகளையே நிகழ்த்திக் கொண்டு, பிறப் பினை நீக்கிப் பேரின்பம் தரும் அவன் திருவடியின் இலக்கணத்தை மெய்யாக உணர்ந்தவர், அத்திருவடியில் ஈடுபடுங்கால் காண்போராகிய தம்மையும் மறந்து, காணும் காட்சியையும் மறந்து,காணப்படும் திருவடியே யாய் நிற்கும் மெய்யுணர்வினால், பிறப்பு நீங்கிப் பேரின்பம் பெறலாம் என்ற அறிவு நெறி யானது இப்பகுதியால்உணர்த்தப்படுகின்றது.

நீக்கமற எல்லா இடங்களிலும் நிறைந் திலங்கும் அறிவே வடிவமான முருகன் 'சேண் விளங்கு அவிரொளி' என்று கூறப்படுகின்றான். இத்தகைய ஒளியை நம் அறிவினால் சுட்டி அறியவோ, உணர்த்தவோ முடியாது. இந்த ஒளியே சூரியன், சந்திரன், நெருப்பு, நட்சத் திரங்கள் எல்லாவற்றிற்கும் ஒளி தருவது. எல்லாருடைய அறிவிற்கும் அறிவாய் நிற்பதும் அதுவே. எனவே, அவ்வறிவொளியை நம் மெய்யுணர்வினால் கலந்து ஒருவாறு கண் டுணரலாமேயொழிய, இத்தகையது என்று நம்முடைய ஊனக்கண்ணால் காணவே முடி யாது. ஆகையால், 'ஞாயிறு கடற்கண்டாங்கு' என்ற உவமையால் நக்கீரர் அதன் தன்மையை ஒருவாறு உணர்த்திப் பின், அது நினைவார்க்கு நினைந்த வடிவமாய் வந்து காட்சியளிப்பது; கண்ணாலும் அதன் வடிவத்தைக் கண்டு மகிழ லாம் என்று, காலும், கையும், மார்பும், மார்பிற் புரளும் மாலையும், செந்நிறமும், அதனால் சேஎய் என்று பெற்ற பெயரும் எல்லாம் விளக்கிக் கூறி, இத்தகைய உறுப்பு நலங்க ளோடு தேவயானைக்கும் கணவனாய்த் திருப் பரங்குன்றத்தில்எழுந்தருளிக் காட்சியளிப்பது; சென்று காண்மின் சேவடி படரும் செம்மல் உள்ளமும், நலம்புரி கொள்கையும் உடைய புலவீர், என்று வழி காட்டுகிறார் நக்கீரர்.

"ஒளி இருள், நன்மை தீமை, இன்பம் துன்பம் என்ற இவற்றில் சிக்கிக் கிடக்கும் உயிர்கள், அவற்றிடையே எல்லா அறிவும் எல்லா ஆற்றலும் உடைய மெய்ப்பொருளாம் முருகனைக் காணும் புலமையே உண்மைப் புலமையாவது; அப்புலமை உடையவரே உண்மைப் புலவர்", என இப்பகுதியில் நக்கீரர் நுட்பமாக உணர்த்தியிருப்பது வியந்து பாராட்டுதற்குரியது. அதிகாலையில் கொந்தளிப்படங்கியிருக்கும் பெருங் கடற் பரப்பில் ஞாயிற்றின் தண்ணொளியில் முருகன் காட்சியளிக்கிறான். அவ்வொளிக்கு எதிர்மறை யான மழை இருளில், ஒளிபுகாத கடம்பவனத் தில் கையினால் தடவிப் பறிக்கும் உருள் வடிவ மான கடப்பம் பூவில் முருகன் காட்சி புலனா கிறது. நல்லொழுக்கமே வடிவான சூரர மகளிர் அவனைப் பாடியாடும் தண்ணறுஞ் சோலையில் அவனெழுந்து காட்சியளிக்கிறான். தீயொழுக்கமே வடிவான பேய்மகள் எழுந்து கூத்தாடும் படு பிணக்காட்டில் தீமையெலாம் திரண்டோர் வடிவான சூரனைத் தடிந்து நின்று அவன் காட்சியளிக்கிறான். மதுரையின் அழகையும், அதன் சிறந்த கடைத்தெருவின் செல்வத்தையும், பகைவரைப் பெண்கள் என இகழும் வரிப்புனைபந்தும், பாவையும் தூங்கும் கொடிமரத்தையும் விளக்கி, அம்மதுரைக்கு மேற்கில் திருப்பரங்குன்றம் உள்ளது என்று கூறுமிடத்துச் சிறந்த தத்துவக் கருத்தொன்று நக்கீரரால் வண்டின்மேல் வைத்துப் புலப்படுத் தப்படுகிறது. சேற்றில் விளைந்த செந்தாமரை

யில் தேன் உண்ணச் சென்ற வண்டு, அதில் திளைத்துக் கிடக்கப், பொழுது போங்காலத்தில் தாமரை மூடிக்கொண்டதாக, இரவெல்லாம் அதில் சிக்கிக் கிடந்து, பொழுது புலர்ந்ததும் தாமரை கட்டவிழ்ந்து கொள்ள, அவ்வண்டு வெளியே போந்து, நெய்தல் ஊதிச் சுனையில் கண்போல் மலர்ந்த அழகிய குவளை மலரைச் சுற்றி ஒலிப்பதற்கு இடனுவது தண்பரங்குன் றம் என்பதால், உயிர்கள் அறியாமை என்னும் சேற்றில் எழும் அகப்பற்றும் புறப்பற்றுமாகிய தளையிலிருந்து அவனருளால் நீங்கி எழுந்தால் இளமை, அழகு, அழியாமை, தெய்வத்தன்மை என்ற இவையெல்லாம் உடைய முருகனைக் கண்டு பேரின்பத்தில் என்றும் திளைத்திருக்க லாம் என்ற கருத்தைக் குறிப்பாக உணர்ந்து கொள்ளுமாறு அமைத்துத் திருப்பரங்குன்றப் பகுதியை முடிக்கிருர் நக்கீரர்.

அடுத்து வருவது திருச்சீரலைவாய்ப்பகுதி. வேழத்தின்மேல் ஆறுமுகங்களோடும் பன்னி ரண்டு திருக்கைகளோடும் முருகன் எழுந்தரு ளிக் காட்சியளிப்பதாகக் கூறுவது இப்பகுதி. விலங்கு உலகையும், தாமாகச் செயலாற்றும் ஆற்றலில்லாத ஐம்புலப் பொருள்களையும் முருகன் செயற்படுத்தி ஆளுகின்ற காட்சி யளிப்பது இப்பகுதி எனலாம். பொதுமையறத் தில், வேறுபட்ட பொருள்களெல்லாம் ஒன்றுக இணைந்து அழகாகக் காட்சியளிக்கும் தன்மை இங்கே குறிக்கப்படுகின்றது. முருகனுடைய முடியில், முரண்பாடுற்ற திருமணிகள் ஒன்று பட்டு அவனுடைய தலையில் அழகுக்கு அழகு செய்கின்ற காட்சியின் மாட்சியை நக்கீரர் முதலில் விளக்குகிருர். உலகில் அறிவு, காதல், சடங்கு, விஞ்ஞானம், பகைமைப்போர், அன்பு என்று பல பல துறைகளில் மக்கள் முயல்கின்ற முயற்சியையெல்லாம் ஆறுபிரிவாகப் பிரித்து, அவற்றையே முருகனுடைய ஆறு திருமுகங்க ளாகக் குறித்து, அவற்றின் இயக்க நிலையைப் பன்னிரண்டு கைகளின் செயற்பாட்டால் எடுத்துக்கூறி, இறுதியில் பல வாத்தியங்கள் கறங்க, மூங்கிற் குழல் இசைக்கச் சங்குகள் ஒலிக்க, இடியே முரசமாக முழங்க, மயிலே கொடியாக வெற்றி முழக்கம் செய்யத், தன்னைக் காண முயலும் அடியார்க்கு அருள்புரிய விரைந்து வேழத்தின்மேல் வந்து திருச்சீரலை வாய் என்னும் திருச்செந்திலில் காட்சி கொடுப் பதைக் காட்டி முடிக்கிருர் நக்கீரர், இப் பகுதியை.

அடுத்தது திருவாவினன்குடியில் தெய்வயானையோடு முருகன் இருந்து காட்சி தருவதாகக் கூறும் பகுதி. இங்கே ஓர் ஊர்வலக் காட்சியின் ஓவியம் நம் கண்முன் நிறுத்தப் படுகிறது. முன்னணியில் என்பும் தோலுமாய் அறிவொழுக்கம் சான்ற முனிவர்கள் முருகனைக் காண முந்திச் செல்கின்றனர். அவர்களை அடுத்துக் காதலாற் கலந்து ஒன்ருகி இசை யில் மேம்பட்டு யாழ் நரம்பு உளர்ந்துகொண்டு பாடி வருகின்றனர் கந்தருவத் தம்பதிகள். அவர்க்குப் பின்னர்ப் பாம்பு படப்புடைக்கும் கருடக் கொடியுடைய திருமாலும், அவனுக்குப் பின்னர் மூவெயில் முருக்கிய முரண்மிகு செல்வ னை சிவபெருமானும், அவனுக்குப் பின்னர் ஆயிரங்கண்ணுடைய இந்திரனும் வருகின்ற னர். இவர்கள் அனைவரும், முருகனல், அறி யாமைச் செருக்கொழியச் சிறையில் அடைக்கப் பெற்ற நான்முகனை மீட்கவே வருகின்றனர். இவர்கள் வரும் முறைமையைச் சொல்லொலி யாலேயே விளக்குகிருர் நக்கீரர். வான்மீன் பூத்தாற் போன்ற தோற்றம் இவர்கள் தோற்றமாம்; வளி கிளர்ந்தன்ன செலவாம் இவர் செலவு; தீயெழுந்தன்ன திறலாம் இவர் திறல்; இடி இடித்தன்ன குரலாம் இவர் குரல்; மடந்தை தெய்வயானையோடு வீற்றிருக்கும் முருகனை வேண்டிக்கொள்ள இவ்வாறு வரு கின்ற இவர்கள் காணத் திருவாவினன்குடியில் அவன் அருள் செய்யும் சிறப்பு, மிக்க மேம் பாடுடையதாக இப்பகுதியில் பாராட்டப்படு கிறது.

அடுத்த திருவேரகப் பகுதியில் நாற்பத் தெட்டு ஆண்டுகள் பிரம்மசரிய ஒழுக்கம் காத்து, அதன்பின் மணந்து, முத்தீ ஓம்பி

நீர்மூழ்கிப் புலராத ஆடையோடு உச்சிக் கூப் பிய கையினராய் ஆறெழுத்தடக்கிய அருமறைக் கேள்வியை நாவியல் மருங்கில் நவிலப்பாடிப் பூத்தூவி முருகனை வழிபட, அவ்வழிபாட்டை ஏற்று அருள்செய்ய, அத்திருவேரகத்தில் அவன் வீற்றிருந்து அவர்க்கு அருள் செய்யும் காட்சி கண்கொளாக் காட்சியாகக் காட்டப் படுகிறது.

இதனையடுத்து வருவது முருகன் குன்று தோறும்ஆடும் சிறப்பை உணர்த்தும் குன்று தோருடற் பகுதி. அகிலமனைத்தும் ஆண்டவன் கோயில்களே என முன்னர்ப் பொதுமையில் உணர்த்திக் குன்ற மக்களாகிய கொலைத் தொழில் கானவரும், முருகனை அன்பால் நினைந்து தம் காதல் மகளிரொடு கை பிணைந்து குரவைக் கூத்தாடுங்கால், அவர்க ளோடு முருகன் கைகோத்துக் குரவையாடும் எளிமையை உடையவனுகக்காட்டுகின்ருர் நக்கீரர். முருகாற்றுப்படை என்ற தொடரின் உண்மைப் பொருளுக்கு வித்து இவ்வாற்ருல் ஈண்டே காட்டப் பெறுகின்றது. ஆண்டவன் ஒருவனுய்ப் பல ஆன்மாக்களோடும் இயைந்து அவற்றை இயக்கிக் களிப்பூட்டும் சிறந்த உண்மை ஈண்டுப் புலனுகிறது. கண்ணன் கோபிகைகளோடு கைகோத்தாடும் கூத்தும் இத்தகையதே.

இனி எஞ்சி நிற்கும் பழமுதிர்சோலைக் காட்சி பல்வகை வழிபாட்டிடங்களையெல்லாம் பரக்க உணர்த்துகின்றது. வழிபாட்டிற்குத் தகுதியற்ற இடம் என ஒன்றுமில்லை என்று உணர்த்துவது பழமுதிர்சோலைப் பகுதி. குன்றுதோருடல் ஒழிந்த திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திரு வேரகம் என்ற இடங்கள் சாத்திரமும், சடங்கும், தளராத முயற்சியும் கொண்டு நூலுணர்வுடைய நுண்ணறிவுடையவர் வழி பாடு ஆற்றுதற்குரிய இடங்களாக முன்னர்க் குறிக்கப்பட்டன. அவையெல்லாம் அவ்வுயர்ந் தோர்க்கு, வழிபாட்டிற்கு ஏற்றவை ஆயினமைபோல, இப்பகுதியில் கூறப்படும் இடங்களும் வழிபாட்டிற்கு ஏற்றவையாம். வழிபாட்டிடங்களால் உயர்வு தாழ்வு ஒன்றும் இல்லை. அன்பொன்றே வேண்டப்படுவது. அன்புடையார்க்கு முருகன் தானே எளியனுக வந்து அருள் அளிப்பான்'' என்று தெளிய உணர்த்துவது இப்பகுதி. சிறு தினையை மலரொடு விராவியமைத்து, மறி அறுத்து வாரணக்கொடி நிறுத்தி, ஊர்தொறும் கொண்ட சீர்கெழு விழாவிலும் முருகன் தோன்றி அருள் புரிவான்; ஆர்வலர் ஏத்தும் மேவரு நிலையினும் அவன் காட்சி தருவான்; வேலன் வெறியாட்டுக்களத்தினும் அவன் தோன்றுவான்; காடு, கா, கவின் பெரு துருத்தி, யாறு, குளம், சதுக்கம், சந்தி, கடப்ப மரத்தடி, மன்றம், பொதியில், கந்துடை நிலை முதலியனவெல்லாம் அவனை வழிபடுதற்குரிய நல்ல இடங்களேயாகும்.

கோழிக்கொடி ஒன்றை நிறுத்தி, அவன் எழுந்தருளுதற்குரிய திருக்கோயிலாக ஓரி டத்தை அமையப் பண்ணி, நெய்யோடு வெண் சிறு கடுகை அப்பி, வழிபடுதற்கு உரியது என மனம் கருதும் ஏதோ ஒரு மந்திரத்தைத் தோன்ருமல் உச்சரித்து, மலர் தூவி, உன் ளொன்றும் புறமொன்றுமாக ஆடையுடுத்துச், செந்நூல் காப்புக்கட்டி, வெண்பொரி தூவி, ஆட்டுக் கிடாயின் குருதி கலந்த தூவெள் ளரிசியைச் சிறு பலியாக இட்டுப், பல பிரப்பும் வைத்துச், சிறு பசு மஞ்சளொடு நறுமணம் மிக்க சந்தனம் முதலிய தெளித்துச், செவ்வலரி மாலையும், பிறமாலைகளும் தொங்க விட்டு,மலைப் பக்கமுள்ள ஊர்கள் பசியும் பிணியும் பகையும் நீங்குக என வாழ்த்தி, நறிய தூபம் கொடுத்துக் குறிஞ்சிப் பண்ணைப்பாடிப், பல இயங்களும் கறங்க, உதிர மலைந்த தினையையும் பரப்பி, முருகன் உவக்கும் வாத்தியங்களை வாசிக்கப் பண்ணித், தெய்வம் இன்றெனபார் அஞ்சும் படி முருகனை வருமாறு குறமகள் வழிப் படுத்தின அக்கோயிலில் அவன் எழுந்தருளிக் காட்சியளிப்பான்.

இங்கே தான் ‘முருகாற்றுப்படுத்த’ என்ற தொடர் வருகின்றது; அதன் உண்மைப் பொருளும் தெளிய இடம் தருகின்றது.

குறமகள் ஆற்றும் வழிபாடு தூய்மையற்ற தாகத் தோன்றலாம். அச்சமூட்டும் வெறி யாட்டு, ஆட்டுக்கிடாய்ப் பலி, இரத்த அரிசி முதலியனவெல்லாம் தூய்மையுடையன என்று கருதமுடியுமா? ஆனுல், இவற்றினிடையே அன்பே வடிவமான மக்கள் முருகனை வழிபடத் திரண்டு நிற்கின்றனர். அவர்களிடம் குறமகள் முருகனை மிக்க எளியனுக்கி ஆற்றுப்படுத்து கின்ருள். எளியார்க்கு எளியனுகிய முருகன் உயர்ந்த அன்புடைய, ஆனுல் உலகில் எளிய வர்கள் என்று கருதப்படும் மக்களிடம் அந்த அன்பாகிய பரிசிலை நாடி விரைந்து வருகின்ருன்.

ஆண்டவன் ஒருவனே, அவன் அனை வர்க்கும் தன் அருளைப் பொதுமையாக வாரி வழங்கக் காத்துக் கொண்டிருக்கின்ருன். ஆனுல், தம் அரிய முயற்சியால் அவனை அடைந்து அவனருளைத் தம் உரிமையால் பெற்றுவிடலாம் என்று முயல்வார்க்கு, அம் முயற்சியின் முடிவில் அவன் அரியனுய்த் தோன்றி அருள் அளிக்கின்ருன். ‘ஆண்டவன் கடன் தம்மைத் தாங்குதல், தம் கடன் அவன் பணி செய்து கிடத்தல்’ என்று உறுதி கொண்டு அவனிடம் அன்பு பூண்டு ஒழுகு வார்க்கு, அவன் அவர் இருந்த இடத்தில் தானே விரைந்து வந்து எளியனுய்க் காட்சி யளிக்கின்ருன்.

குறமகள், தன் அன்பால் முருகன் அருளைப் பெற்றவள். அன்பர்களைத் தேடித் திரியும் முருகனுக்கு அக்குறமகள் அவர்கள் இருக்கும் இடத்திற்குச் செல்ல வழிகூறி, அவர் களிடத்திற்குச் சென்ருல் அவன் விரும்பும் அவர்களன்பைப் பெறலாம் என்று அவனைச் செலுத்துகிருள். எனவே முருகனை அன்பர் களிடம் ஆற்றுப்படுத்தல் என்ற பொருளே முருகாற்றுப்படை என்ற தொடர்க்கு மிகவும் பொருத்தமாவது இப்போது நன்கு விளங்கும். இப்பொருளில் திருமுருகாற்றுப்படை என்பது இலக்கண நெறியில் பிற ஆற்றுப்படைகளினும் வேறு படாதது என்பதைத் தெளிகின்ருேம்.

அளவுக்கு மேல் பொருளுடையவர்க்கு அப்பொருளுடைமையே ஒரு நோயாகும். அஃதில்லாதவர்களுக்கு அதனைப் பகிர்ந்து கொடுத்தலால் பொருள் மிகவுடையவர் அந் நோயிலிருந்து நீங்குவர்.

ஆண்டவன் பொருள் மிக்கவன் என்று எடுத்துக் கூறத் தேவையில்லை. ஆனுல், அதனைப்பெறுதற்கு முயற்சியை மேற்கொண்டு தன்னிடம்வருவோர் தொகை மிகமிகச் சிறியது. எனவே,பொருள் தேவையாளரை அவன் தேடி அலைகின்ருன். அஃதுணர்ந்த குறமகள், “ஈதோ உண்மைத் தேவையாளர்கள் இருக் கிருர்கள். இவர்களுக்கு உன் பொருளை வாரி வழங்கலாம்” எனக் கூறி அவனுக்கு வழி காட்டுகிருள். அவள் காட்டிய வழியைப் பின்பற்றி அவர்களிடமிருந்து அன்பைப் பெறுவதற்காக அவன் அவர்கள் இருக்கும் இடத்தை அடைந்து அவர்கள் அன்பைப் பெற்றுத் தன்அருளை வழங்குகின்ருன்.

எனவே நூலறிவு, முயற்சி, சடங்கு இவை யெல்லாம் அறியாது, அவனிடத்தில் செலுத்தும் அன்பொன்றையே துணையாகக் கொண்டு அவனருளை நாடி, ஏங்கி, இருந்த இடத்திலேயே இருப்பார்க்கு, முருகன் குற மகள் காட்டிய வழியைப் பின்பற்றி அவர்கள் இருக்கும் இடத்தை அடைந்து, அவர்களுக்கு அருள் செய்யும் எளியார்க்கு எளியனும் தன்மையே திருமுருகாற்றுப்படையில் நக்கீர ரால் வலியுறுத்தப்படுகின்றது எனலாம்.

“பாதகமே சோறு பற்றினவா தோணேக் கம்” என்ற அடியால் சிவபெருமான் தன் னிடத்து அன்புகாட்டும் அடியவர்களுடைய பாதகங்களையே தனக்கு உண்ணும் சோருக வாங்கிக்கொள்ள,மிக்க எளியனுய் அவ்வடியார் களைத் தேடித்திரிகிருன் என்னும் கருத்தை மாணிக்கவாசகர் திருவாசகத்தில் உணர்த்தி யிருப்பது, ஈண்டு நினைவு கூர்தற்குரியது. எனவே, வள்ளல்களில் மிக்குயர்ந்த வள்ள லாகிய முருகனை, அன்பர்களிடத்து, அவர்கள் வழங்கும் அன்பைப் பெற்றுக்கொள்ளக் குறமகள் ஆற்றுப்படுத்தல் என்று “முருகாற் றுப் படுத்தல்” என்ற அடிக்குப் பொருள் கூறுதல் மிகவும் பொருத்தமாகும் என்பதில் ஐயமில்லை.

இதன் உண்மையை மேலும் வலியுறுத்து கிறார் நக்கீரர் ; "எந்த இடமானாலும் ஆகட்டும். எந்த இடத்தில் அவனைக்கண்டு, அவனுக்கு அன்பை வழங்கி, அவனருளைப் பெறவேண்டும் என்று கருதுகிறாயோ, அந்த இடத்தில், உன் விருப்பம்போல் அவன் வடிவத்தை மனத்தில் அமைத்துக்கொண்டு, அவனை முன்னிலைப் படுத்தி, அவனுடைய புகழ் மொழிகளைக் கூறுக. இப்படித்தான் முறைப்பட அவனைப் புகழ வேண்டும் என்ற கட்டுப்பாடு ஒன்றுமில்லை. உனக்குத் தெரிந்தவாறு உன் விருப்பம்போல் அவனைப் புகழ்க. 'உன்னை அளந்தறிதல் எம்மனோர்க்கு அருமையாகும் ; உன் அடியை உள்ளி வந்தோம் ; உனக்கு ஒப்பாரும் மிக்காரும் இலர்' என்று கூறி முடிப்பதற்கு முன்பே, உன் அன்புடைத் தன்மையை அவன் பக்கத்திலிருப்போர் அவனிடம் கூறுவர். உடனே, தெய்வம் சான்ற திறல் விளங்கு உருவினையும், வானத்தீண்டும் வளர்ச்சியினை யும் உடைய அவன், அவ்விடத்திற்கு வந்து, கண்டாரஞ்சும் தன் தெய்வத் தன்மையை உள் ளடக்கிக் கொண்டு, மணம் கமழும் தெய்வத் தன்மையை உடைய தன் இளைய வடிவைக் காட்டி, 'நீ வீடுபெற நினைத்து வந்திருந்த நினைவை யான் முன்பே அறிவேன். அது உனக்கு எய்துதல் அரிது என அஞ்சுதலைப் போக்கிக் கொள்வாயாக', என்று அன்புடைய நன்மொழிகள் பல கூறி, உலகில் நீ ஒருவனுமே பிறர்க்கு வீடு அளிப்பதற்கு உரியையாக் கேடின்றித் தோன்றும்படி சிறப்புடைய, பிறரால் பெறுதற்கரிய, வீடுபேற்றினைத் தருவான்" என்கிறார் நக்கீரர். இப்பகுதியால் அன்பை நாடி அடியார்க்கு எளியனும் தன்மையை உடையவன் முருகன் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாக விளங்கும்.

பழமுதிர்சோலைப் பகுதியின் இறுதியில் நுட்பமான ஒரு பொருளைக் கூறித் திருமுரு காற்றுப்படையை முடிக்கிறார் நக்கீரர். பழமுதிர் சோலை மலையுச்சியிலிருந்து ஓரருவி பழமும், தேனும், பொன்னும் கொண்டு வேகமாக இழிகிறது; ஆனால், அதைக்கண்டு விலங்குகள் எல்லாம் அஞ்சி ஓட்டமெடுக்கின்றன என்று நக்கீரர் கூறுகிறார். இதனால், ஆண்டவன் அருள் பெருவெள்ளமாகப் பெருக்கெடுத்து வந்தாலும், விலங்கின் தன்மையை உடையவர், அதனை நுகர்தல் ஆற்றாது அஞ்சி ஓடிப் பதுங்கும் நிலையை அவர் நுட்பமாக உணர்த் துவது ஊன்றி உணரத்தக்கது. ஆனால், இழுமென இழியும் அவ்வருளை அன்புடைய எளியவரே அஞ்சாது ஏற்று மகிழ்ந்து வீடு பெறுவர் என்ற குறிப்பும் ஈண்டுப் புலப்படு கின்றது. என்னே! திருமுருகாற்றுப்படையின் எழில் நலம் இருந்தவாறு!

'முருகாற்றுப்படை' என்ற தொடர்க்கு முருகனிடம் ஆற்றுப்படுத்தல் என்றே இது வரையில் அனைவரும் பொருள் கூறிவந்துள் ளனர். ஆற்றுப்படை என்ற இலக்கணத் திற்கே இப் பொருள் மாறானது என்று அறிந்தும், வேறுவழி அறியாமல் இலக்கணப் பிறழ்ச்சியுண்டாகவும் இங்ஙனம் பொருள் கூறும் வழக்கம் நிலைத்து நின்றது. பாணாற்றுப் படை என்பதற்குப் பாணனை ஆற்றுப்படுத்தல் என்று பொருள் கூறுவது போன்று, முருகாற் றுப்படை என்பதற்கும் முருகனை ஆற்றுப் படுத்தல் என்ற பொருளைக் கூறுதல் பொருத்த மாகும் என்பது ஈண்டு உணர்த்தப்பட்டது. வள்ளலிடம் பொருளைப் பெறப் பாணனை ஆற்றுப்படுத்தல் போன்று, அன்பரிடம் அன் பைப்பெற முருகனை ஆற்றுப்படுத்தல் என்ற பொருளின் சிறப்பைக் கண்டு எல்லையில்லாத மகிழ்ச்சி கொள்வோமாக. இனி, இப் பாட்டில் வரும் முருகாற்றுப்படுத்த என்ற உயிர்நாடி யான தொடரால் இப் பாட்டு முருகாற்றுப்படை என்று பெயர் பெற்றிருத்தலையும் நோக்குக.



எழுத்துப் பெயர்ப்பு - (Transliteration)

ப. சோதிமுத்து, M. A., B. D,
(தமிழ்ப்பேராசிரியர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.)

மானிடக்குலம் ஒன்றேயாயினும், அதில் அடங்கியுள்ள மக்கள், தாம் தாம் வாழும் நாட்டின் அடிப்படையாலும், வழங்கி வரும் மொழிகளாலும் வெவ்வேருகப் பிரிவுற்று நின்று காட்சியளிக்கின்றனர். மக்கள் பெரும் பாலும் தாம் வாழ்ந்து வரும் நாட்டின் அடிப் படையாலேயே பெயர் பெறுகின்றனர். எனினும் ஒரு நாட்டில் ஒரே மொழி மட்டும் வழங்குகின்றது என்று சொல்லவும் முடியாது. ஏனெனில் மக்கள் நாடு விட்டு நாடு சென்று பல்வேறு தொழிலில் ஈடுபடுகின்ருர்கள். எனவே, ஒரு நாட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட பல மொழிகளும் நிலவுவது கண்கூடு.

மொழி வரலாற்றிலே பேச்சு முந்தியது, எழுத்துப் பிந்தியது என்பது எவர்க்குந் தெரிந்த உண்மையாகும். மேலும் மொழிக்கு மொழி வெவ்வேறு எழுத்து முறைகள் வழங்கி வருவதையும் நாம் காண்கின்ருேம். இவ் வெழுத்துக்களும் என்றும் ஒரே வடிவினவாக இருந்து வந்திருக்கின்றன என்று கூறவும் இயலாது. நமது தமிழ் மொழி எழுத்துக்களின் வரலாறு இதற்குத் தக்க சான்ருகும். அச் சடிக்கு முறை கண்டு பிடிக்கும் வரைக்கும் எழுத்துக்களின் வடிவம் காலத்துக்குக் காலம் மாறிக் கொண்டே வந்திருக்கின்றது

இன்னெரு செய்தியும் நமக்குக் கிடைக் கின்றது. எழுத்துக்கள் இருவடிவம் பெற் றுள்ளன: ஒன்று ஒலிவடிவம்; மற்றையது வரிவடிவம். ஒலிவடிவம் செவிப்புலனுயது, வரிவடிவம் கட்புலனுயது. ஒரு மொழியிலுள்ள ஒவ்வொரு ஒலிவடிவுக்கும் ஒவ்வொரு வரி வடிவம் இருப்பின் அது அரிய காட்சியோகும். உலகத்தில் வழங்கப் பெறும் நூற்றுக்கணக் கான மொழிகளில், இவ்வாறு ஒலிவடிவம் வரிவடிவம் ஒன்ருய் அமையப்பெற்றவை உளவோ என்று கூட நாம் ஐயுறலாம். எனினும் வழக்காறற்ற மொழிகளில் ஒன்ருகிய சமசுக்கிருதம் என்னும் ஆரியமொழி இத்தகைய சிறப்புடன் காணப்பெறுகின்றது. அது பேச்சு வழக்கற்றுக் கிடத்தலினல் இன்னும் ஆயிர மாயிரம் ஆண்டுகளுக்கெல்லாம் அச்சுக் கலேயாமல் அப்படியே காட்சி அளித்துக் கொண்டிருக்கும். ஆனல் பேச்சு வழக்கி லுள்ள மொழிகள் தாங்கள் எழுதப் பெறும் வரிவடிவத்திற்கிசைய ஒலிக்கப் பெறுவதில்லே. இதற்குச் சான்ருக ஆங்கிலம் போன்ற மேனுட்டு மொழிகளேயும், தமிழ் மொழியையும் எடுத்துக் காட்டலாம்.

மக்களில் ஒரு சிலர் தம் நாடு விட்டுப் பெயர்ந்து பற்பல காரணங்களே முன்னிட்டுப் பிறநாடுகளிற் சென்று குடியேறியிருப்பதைக் காண்கின்ருேம். அத்தகையோர் வெவ்வேறு மொழிகளேப் பேசுநராகவும், வெவ்வேறு நாகரிகம், பண்பாடு உள்ளவராகவும் இருக் கின்றனர். எனவே, இவ்வாறு இரு நாட்டினர் ஒருங்கு சேர்ந்து பல வாண்டுகள் வாழ்வரா யின், அவர்தம் நாகரிகம், மொழி, பண்பாடு ஆகியவை ஒன்றையொன்று பாதிக்காது இரா. சிறப்பாக ஒருவர் மொழிச் சொற்கள் மற்றதில் இடம்பெறத் தொடங்கும். அவ்வாறு ஒரு மொழியிலிருந்து இன்னெரு மொழிக்குச் சொற்கள் ஏறி வழங்கப் பெறும்போது, அச் சொற்கள் தாம் கலக்கப்பெறும் மொழியின் வரிவடிவத்துக்குள் அமைந்துதான் காட்சி யளிக்கும். இவ்வாறு கலக்கும் மொழிகள் இரண்டுக்கும் பொதுவான எழுத்துக்கள் இருப்பின், அக்கலப்பின் காரியமாகச் சொற் களில் திரிபு பெரிதும் காணப்படாது. ஆனல் அவை வெவ்வேறு எழுத்து முறைகளேக் கொண்டிருப்பின், ஒரு மொழிச் சொல் மற்ற

தினுடன் கலக்கும் போது வடிவில் திரிந்து தான் காணப்படும் அச் சொல். அத்திரிபும் அவ்வம்மொழியின் நெடுங்கணக்குக் கேற்ப அமையும். இவ்வாறு அமைக்கும் முறைக்குத் தான் 'எழுத்துப் பெயர்ப்பு' என்ற பெயர் வழங் கப்பெறுகின்றது. இதனைப் 'பிறமொழி ஆக்கம்' எனவும் கூறலாம்.

நம் பண்டைய தமிழ் நாட்டினை எடுத்துக் கொண்டால், மிகவுந் தொன்மையான காலத்தில் நாடு முழுதும் தமிழ் மொழியே ஆணை செலுத்தி வந்ததை, நாம் வரலாற்று வாயிலாக அறிகின்றோம். பின்னர் வட நாட்டிலிருந்து ஒரு சில மக்கள், தென்னடாம் தமிழ் நாட்டுக்குப் பெயர்ந்து வரத் தொடங் கினர். அவர்கள் தான் ஆரியர். அவர்கள் மொழிதான் சமசுக்கிருதம். எனவே, தமிழ் மொழி முதன் முதலாகக் கலக்கப்பெற்றது இவ்வாரிய மொழியோடுதான். இதனையே வட மொழி யென்றும் கூறுவர். இவ்வடமொழியின் நெடுங்கணக்குத் தமிழ் நெடுங்கணக்கின் அடிப்படையில் அமைக்கப் பெற்றிருப்பினும், இவையிரண்டிற்கும் இடையே வேறுபாடு மிகுந்து காணப்படுகின்றது. ஒலிவடிவிலும் வரிவடிவிலும் இவை யிரண்டும் வேறு பட்டு நிற்கின்றன. எனவே, வடமொழிச் சொற்கள் தமிழில் கலக்க ஆரம்பித்தவுடன் அச் சொற்களைத் தமிழின் ஒலி வடிவுக்கேற்ப அமைத்துக் கொண்டனர் தமிழிலக்கண, இலக்கியப்புலவர்கள்.

பண்டைய தமிழிலக்கணப் புலவராகிய தொல்காப்பியர் காலத்திலே, 'உயிரும் உடம்பு மாம் முப்பது முதலே' என்றபடி, முதல் எழுத்துக்கள், பன்னிரண்டு உயிரும் பதினெட்டு மெய்யுமாக மொத்தம் முப்பதே. குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்ற மூன்று சார்பெழுத்துக்களும் வழங்கின. அவையே தொன்று தொட்டு இன்றும் நிலவு கின்றன. இவற்றை நாம் இப்போது முப்பத் தைந்து வரிவடிவங்களில் அமைத்து எழுதி வருகின்றோம். ஆனல், ஒலி வடிவங்களைக் கணக்கிடும் போது அவை நாற்பத்தைந்து என விரியும். இதன் வகையினை நான் எழுதி யுள்ள, 'A Guide to Tamil' என்னும் நூலில் காணலாம். ஆனல் வடமொழி நெடுங்கணக்கு அத்தகையதன்று. நன்னூல் இலக்கண ஆசிரியராகிய பவணந்தி முனிவர் கணக்குப்படி, அது பதினறு உயிர்களையும், முப்பத்தேழு மெய்களையும் கொண்டுள்ளது. ஆக ஐம்பத்துமூன்று எழுத்துக்களைக்கொண்டு வடமொழி விளங்குகின்றது. இத் தொகை வடமொழி இலக்கணப் புலவராகிய பாணிநி என்பவரது இலக்கணத்துக்கு ஒத்ததன்று என்று சடகோபராமானுசாச்சாரியார் கூறி யுள்ளார். எனினும் இவ்விரு மொழிகளும் வெவ்வேறு நெடுங்கணக்கைக் கொண்டிருக் கின்றன என்பது தெளிவு.

இனி, இவ்வடமொழிச் சொற்கள் தமிழில் எவ்வாறு இடம்பெற்று வழங்கி வந்தன என் பதைக் காண்போம். உலக வழக்கில் எவ் வாறு வழங்கி வந்தது என்பதை யறிவோம். எனவே இங்குக் குறிக்கப்பெறுவன வெல்லாம் செய்யுள் நடையில் இயங்கியனவே. தொல் காப்பியர் காலத்தே வடமொழிச் சொற்கள் தமிழில் இடம்பெறலாயின. அவ்வாறு வழங்கிய சொற்கள் எவ்வெம் முறையில், எவ்வெவ்வடிவில் ஏற்றுக்கொள்ளப் பெற்றன என்பதைச் சொல்லதிகாரத்தில், எச்சவியலில் ஐந்தாம் ஆறும் நூற்பாக்களில் குறிப்பிட் டுள்ளார். சுருக்கமாகச் சொன்னல் வட வெழுத்துக்களை நீக்கிவிட்டுத் தமிழ் எழுத்துக் களிலேயே வடமொழிச் சொற்களை வழங்க வேண்டும் என்கின்றனர். இம்முறை தற்சமம் என்றும் தற்பவம் என்றும் இரு வேறு கூருகப் பிரிக்கப்படலாம். தற்சமத்தின்படி, வட மொழிச் சொற்கள், இரு மொழிகளுக்கும் பொதுவாகவுள்ள எழுத்தால், எத்தகைய வேறுபாடுமின்றி, வழங்கிவரும். (எ-டு)

A Guide to Tamil By P. Jothimutthu, C. R. S. Madras.

சமயம், காரணம் என்பன. தற்பவத்தின்படி. வடமொழிச் சொற்கள், வடமொழிச் சிறப் பெழுத்துக்களாலாயவழி, தமிழுக்கு ஏற்கத் திரிபுடன் வழங்கும். (எ–டு) சுகி, போகி, சுத்தி, அரி, சயம் என்பன.

தொல்காப்பியருக்குப் பன்னூற்றாண்டு கட்குப்பிற்பட்டுத் தோன்றிய நன்னூலார் இம்முறைபற்றி மிகவும் விளக்கமாகக் கூறி யுள்ளார். அதனை, நன்னூல் பதவியலில் நூற்றுநாற்பத்தாறு முதல், ஒன்பதாம் நூற் பாவில் நாம் காண்கின்றோம். வடமொழி உயிரெழுத்துப் பதினாறில் பத்தும், மெய் எழுத்து முப்பத்தேழுள் பதினைந்தும், தமிழுக் குப்பொது என்றும், ஏனைய உயிரும் மெய்யும் ஆரியத்துக்கே சிறப்பென்றும், அவை தமிழில் திரிந்தே வரும் என்றும் கூறுகின்றார். இந்த இருபத்தெட்டு எழுத்துக்களும் எவ்வெத் தமிழ் எழுத்துக்களாகத் திரியும் என்பதனை நாற்றுநாற்பத்தேழாம் நூற்பாவில் காட்டு கின்றார்.

தவிரவும், வடமொழியில், ர, ல, ய மெய்கள் மொழிக்கு முதலில் வரலாம். இம் மெய்கள் தமிழில் முதனிலையாகா. எனவே, இம் மெய்களை முதனிலையாகக் கொண்ட வட மொழிச் சொற்கள் தமிழில் வருங்கால் அவை எவ்வாறு திரியுமென்றும் காட்டியுள்ளார். (நூற்பா 148.) பின்னர், வடமொழியில் இரண்டு மெய்கள் ஒன்றாய் இணைந்து இயங்கி வரும். தமிழில் எவ்வெம் மெய்கள் இணைந்து வரும் என்பதனை இடைநிலை மெய்ம்மயக்குக் கூறுகின்ற நூற்பாவில் சுட்டியுள்ளார். (எழுத்தியல் 110) இவற்றைத் தவிர்த்த மெய்கள் வடமொழியில் இணைந்து காட்சி யளிக்கும் போது, அவை எவ்வாறு தமிழில் அமைத்துக்கொள்ளப் பெறலாம் என்பதனைப் பதவியலில் 149 ஆம் நூற்பாவில் எடுத்துக் காட்டுகின்றார்.

இவ்வாறு பண்டைய தமிழ் இலக்கணப் புலவர்கள் நம் தமிழ் மொழியின் எழிலை மனத்திற் கொண்டு, வேற்று மொழிகளுக்குத் தமிழ் வடிவு கொடுத்து, அவற்றை ஏற்க வழி காட்டியுள்ளனர். ஆனால் அவர்கள் காலத் துக்குப் பிற்பட்டு, என்றோ, யாராலோ, ஜ, ஸ, ஷ, க்ஷ, ஹ என்ற கிரந்த எழுத்துக்கள் தமிழில் நுழைக்கப்பெற்றன. இவை பாலர் வகுப்புப் பாடப் புத்தகங்களில் இடம் பெற்றன. ஆனால் இலக்கணத்தில் இடம் பெறாதது குறிப்பிடத் தக்கது. இவை வடமொழி ஒலிகள்; இவை தமிழில் அமைக்கப்பெற வேண்டிய வழியை நன்னூலார் எடுத்துக் கூறியும், அவ்வழியைப் பின்பற்ற மனமற்றுத் தமிழ் மொழியின் தூய வடிவு மாசுறும் படியாக, இவை இன்றும் புகுத்தப்பெற்று வருகின்றன. இவை தேவை யல்ல. எனினும் நமது இன்றைய தமிழ் அரசியல் இவற்றிற்கு வழி வகுத்துக் காட்டி எழுத்தடிப்பானில் (Type–writer) இடமும் அமைத்துள்ளது. இதனைத் தமிழ் இலக்கிய, இலக்கணப்புலவர் உலகம் கண்டும் இதுவரை வாளா விருக்கின்ற நிலைமையும் தமிழ் நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. எனினும் அண்மையில், சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கம் இது பற்றி ஒரு குரலை யெழுப்பியுள்ளது. இக்கிரந்த எழுத்துக்களைத் தமிழ் எழுத்துக்களோடு கலந்து எழுதும் முயற்சி வலுத்து வருகின்றது. இதனைப்பற்றித் தமிழறிஞர் தம் கருத்துக்களை யெடுத்துக் கூறும்படி அச்சங்கச் செயலர் கேட்டிருக்கின்றனர். முன்னைய சான்றோரும் புலவோரும் நமக்கு வழி வகுத்துக் காட்டி யிருந்தும், அவ்வழியே செல்ல மன மற்றிருக் கின்ற நிலையினையே இது சுட்டுகின்றது. வட மொழியிலுள்ள இவ்வொலிகளுக்கு இவ்வெழுத் துக்களைச் சேர்த்து வழங்குவோமாயின், பின்னர் நம் மொழியோடு கலக்கக் கூடிய பிற மொழி ஒலிகளுக்கெல்லாம் தனித் தனியாக வெவ்வேறு எழுத்துக்களைப் பிறப்பிக்க வேண்டிய நிலைமை எழாமற்போகாது. இவ்வாறே தமிழ் நெடுங்கணக்கு விரிந்து கொண்டே செல்ல வேண்டும்.

இதுகாறும், முதன் முதலில் தமிழ் மொழி யோடு கலக்க நேரிட்ட வடமொழியின் எழுத்துப் பெயர்ப்பைக் கண்டோம். வட மொழிக்குப் பின்னர்ப் பல்வேறு மொழிகள் தமிழ் மொழியுடன் தொடர்புகொள்ள வாய்ப்பு ஏற்பட்டது. வாணிகத்தின் பொருட்டு மேனாட்டிலிருந்து பலநாட்டு மக்கள் இங்கு

வந்து குழுமினர்; நம் மொழியும் கற்றனர்; தங்கள் மொழியும் கற்பித்தனர். பின்னர்க், கிருத்துவ சமய நற்பணிக் குழுவினரும் ஈண்டு வரலாயினர். இன்னோரின் தொடர்பால், போர்த்துக்கீசியம், பிரெஞ்சு, டச்சு, அரேபியம், ஆங்கிலம் ஆகிய மொழிகள் தமிழுடன் கலக்க ஆரம்பித்தன. இன்றைய தமிழ் அகர வரிசையில் இம் மொழிச் சொற்கள் இடம் பெற்று நிற்கின்றதை நாம் கண்ணுறுகின்றோம். எனினும் இவை தமிழ் நெடுங்கணக்கு இயல்பிற்கேற்ற திரிபுடன்தான் காணப்பெறும். ஆனால் பலவாண்டுகட்கு முன்னர்ச், சென்னைப் பல்கலைக் கழகத்தார் வெளியிட்டுள்ள தமிழ்ப் பேரகராதியில் (Tamil Lexicon), முன்னர்க் குறிப்பிட்ட வடமொழி கிரந்த எழுத்துக்கள் இடம் பெற்றிருப்பது, அக்காலத்துத் தமிழ் மக்களின் உறக்க நிலைக்கு ஒரெடுத்துக் காட்டாகக் காட்சியளிக்கிறது.

இன்று நிலை மாறிவிட்டது. தமிழே நாட்டு மொழியாகவும், ஆட்சி மொழியாகவும் இடம் பெற்றுவிட்டது. முற்றிலுமாயிரா விட்டாலும், ஓரளவிற்காவது கல்விமொழி யாகவும் ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கின்றது. உயர்நிலைப் பள்ளிகளில் கருவி மொழியா யமைந்து விட்டது. விரைவினில் கல்லூரியிலும் கருவி மொழியாக அமைய வேண்டும், அமைந்தே தீரும். இந்நிலையில் பிறநாட்டுச் சாத்திரங்களை நம் மொழியிற் கொணர்ந்து சேர்ப்பிக்கும் முயற்சி வலுவடையும். இதுவரை, உலக மொழியாகத் திகழும் ஆங்கிலமே நமது நாட்டின் கல்வி நிலையங்களில் கருவி மொழியா யிருந்து வந்திருக்கின்றது; இன்னும் வருகிறது. எனவே, இந்நிலை மாறித், தமிழே பல்கலைக்கழகத்தின் கருவி மொழியாகும் பொழுது, பல துறைகளிலும் சிறந்த நூல்கள் தமிழில் வெளிவர வேண்டும். முதலில் அவை மொழி பெயர்ப்பு நூல்களாயிருப்பின், அது தவறாகாது. ஒரு சில ஆண்டுகட்குப் பின்னர்ப், பல்வேறு துறையிலுள்ள ஆசிரியர், தாம் தாம் தமிழில் கற்பிக்கும் பாடங்களை நூல்களாக வெளியிட வாய்ப்புக்கள் உண்டாகும். இது இலக்கியத்துறையில் (Humarities) இயலும்; விஞ்ஞானத்தில் முடியுமா என்ற கேள்வி அடிக்கடி எழுப்பப்படுகின்றது. விஞ்ஞானத் திலும் மொழி பெயர்ப்பே முதலில் இயலு மானாலும் நாளடைவில் தமிழிலேயே சிறந்த விஞ்ஞான நூல்கள் வெளிவரக் கூடும்.

இங்ஙனம் விஞ்ஞான நூல்களை வெளி யிடும்போது அவற்றில் வழங்கப்பெறும் விஞ் ஞானக்குறியீட்டுச்சொற்களை(technical terms) எவ்வாறு வெளியிடுவது? அவற்றை மொழி பெயர்த்து வெளியிடுவதா? அன்றி ஆங்கில எழுத்துக்களில் எழுதுவதா? என்ற கேள்விகள் எழுகின்றன. மொழி பெயர்ப்பாயின், நமது நாட்டு எல்லையைக் கடந்தவுடன் அவை வழக் காறற்றுப்போம். பிறநாட்டு மாணவர் ஆசிரி யருடன் தொடர்புகொள்ள இம்முறை சாத்தியப் படாது அல்லவா? எனவே, இங்குத்தான் எழுத்துப்பெயர்ப்பு என்ற பிற மொழியாக்கம் மிகவும் வேண்டற்பாலது. கல்வித்துறையில் வழங்கப்பெறும் பன்னாட்டுக் குறியீடுகளை (Inter national terms) அப்படியே நாமும் வழங்குவதில் எவ்விதக் குறைபாடும் இல்லை. அந்த அளவுக்குநமது தாய்மொழி வளமுற்றுப் பொலிவடையும். அவ்வாறு பன்னாட்டுக் குறி யீடுகளைப் பயன்படுத்தும் போதுதான், நாம் முன்னர்க் கண்ட, பண்டையோரின் அறிவுரை களைக் கடைப்பிடிக்க வேண்டும். நமது நெடுங் கணக்கிலுள்ள எழுத்துக்களுக் கேற்கவே, அங் குறியீடுகள் அமைக்கப் பெறவேண்டும்.

இன்று உலக மொழியாகக் காட்சியளிக் கின்ற ஆங்கிலமும் தனக்கெனச் சொந்த நெடுங்கணக்கு உடையதன்று. இப்போது ஆங்கில எழுத்துக்கள் என வழங்குவன உண் மையில் உரோம எழுத்துக்களாகும். இலத்தின் மொழியிலிருந்து ஆங்கிலம் இவற்றைத் தழுவிக் கொண்டது. ஐரோப்பிய, அமெரிக்க, ஆத்தி ரேலிய, நியுசுலாந்து நாடுகளில் இவ்வெழுத் துக்கள் வழங்கப்பெற்ற போதிலும், அவ்வந் நாட்டு மக்களுக்கேற்றபடி, உச்சரிப்பில் வேறு பாடு காணப்படுகின்றது. எனவே, ஒரு சில சொற்கள் பன்னாட்டுக் குறியீட்டுச் சொற்களாக வழங்கப்பெறும் போதும், அவ்வந்நாட்டு மொழிகளின் ஆற்றலுக்கேற்றபடி திரிபுறத் தான் செய்யும். இத்தருணத்தில் நமது மொழியின் ஒலிக்குறிப்புக்களை நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும். ஆங்கில

நெடுங்கணக்கின் ஒலிக்குறிப்புக்களையும் நன்கு அறியவேண்டும். ஒன்றிலிருந்து ஒரு சொல்லை மற்றொன்றுக்குப் பெயர்க்கும்போது, அந் நெடுங்கணக்குக்கு இசையத்தான் செல்ல வேண்டுமேயன்றி, அம்மொழியில் இல்லாத ஓர் ஒலிக்காகப் புதியதோர் எழுத்தைப் பிறப்பிக்கலாகாது. இந்த உண்மையைத்தான் நமது தொன்மைப் புலவர்கள் அறிந்து, கடைப்பிடித்தனர். ஆங்கிலமக்களும் அவ்வாறேதான் செய்துவருகின்றனர்.

ஆங்கில மொழியை எடுத்துக்கொண்டால், அதன் நெடுங்கணக்கு இருபத்தாறு எழுத்துக்களை மட்டுந்தான் கொண்டுள்ளது. உயிர் எழுத்துஐந்து;மெய்யெழுத்துஇருபத்தொன்று. ஆனால் இவை இரண்டுமடங்கு எண்ணிக்கை கொண்ட ஒலிகளை வழங்கப் பயன்படுகின்றன. உயிர் எழுத்து ஐந்தேயாயினும் அவை இருபதுக்கு மேற்பட்ட ஒலிகளை வழங்குகின்றன. அப்படியேமெய்களும் தனித்தனியே ஒன்றுக்கு மேற்பட்ட ஒலிகளைச் சுட்டுகின்றன. ஆங்கிலத்தில் எல்லாமெய்களும் எப்போதும் ஒலிப்பதில்லை. தமிழிற்போல, எந்த எழுத்து முதனிலையாகவும் இறுதிநிலையாகவும் வரும்; எந்த மெய் எந்தமெய்யோடு இயையும் என்ற பாகுபாடும் கிடையாது. எனவே, ஆங்கிலக்குறியீட்டுச்சொற்களை அப்படியே நாம் வாங்கிக் கொள்ள இயலாது.நமது நெடுங்கணக்குச்சட்டகத்துக்குட் படுத்தியே அவற்றை வரவேற்க வேண்டும். உயிர் எழுத்துக்களில் சங்கடமொன்றுமில்லை. ஆனால் மெய்யெழுத்துக்களிற் சில நமக்குக் கிடையா. அப்படிப்பட்ட இடங்களில், அவ்வொலிக்கு அடுத்து வருவனவற்றைப் பயன்படுத்தலாம்.

விஞ்ஞானிகள், தமிழ் நெடுங்கணக்கின் இயல்பினை யறியாதவர்கள்—t என்ற ஒலிக்கும் d என்ற ஒலிக்கும் உள்ள வேறுபாட்டை எவ்வாறு தமிழில் காட்டுவது? 'Nitride' என்பதனையும் 'Nitrite' என்பதனையும் தமிழில் எவ்வாறு எழுதிக் காட்ட இயலும்? என்கின்றனர். இது இயலாத காரிய மன்று. மிகவும் எளியது. 'நைற்றிரைடு' என்றும் 'நைற்றிறைற்று' என்றும் நன்கு காட்டலாம். s என்ற ஒலியும் தமிழில் இல்லையே என்கின்றனர். s என்ற எழுத்து ஆங்கிலத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட ஒலியைக் குறிக்கின்றது என்பதனை மறந்துவிடலாகாது. தமிழில் ச கரம், ஆங்கில c, ch, j, s, sh, z, x என்ற ஒலிகளைக் குறிக்கப் பயன்படும்.

மேலும் தமிழிலுள்ள மெய் எழுத்துக்களின் தன்மையையும் நன்கு அறிந்துகொள்ளவேண்டும். ட, ண, ள, ழ ஒலிகள் ஆங்கிலத்தில் கிடையா. தமிழ் ற கரத்தை வல்லினம் என்று பலர் அறியார். அப்படியே ஆய்த வெழுத்தின் ஒலியையும் நன்கு தெரிந்து கொள்ளல் வேண்டும். அது குறிலையடுத்து, வல்லினமேறிய உகரத்துக்கு முன்னர் வரும் என்ப. (எ-டு) எஃகு இதன் உச்சரிப்பை நோக்குக. இது எகு (ehu) அன்று; எக்கு (ekku) அன்று; இரண்டுக்கு மிடைப்பட்டது. (ehhu) இது போன்றே ஏனையவும். அஃது = athhu; கஃசு = kassu. அப்படியே ஆங்கிலச் சொல் '**bus**' என்பதனை 'பஃசு' என்று எழுதலாம். 'Pakistan' என்பதனை 'பாக்கித்தான்', என்றோ, 'பாக்கிஃச்தான்' என்றோ, அன்றி 'பாக்கிசுத்தான்' என்றோ எழுதலாம். தமிழில் வல்லினம் ஆறும் மொழிக்குமுதலில் வாரா. க ச த ப—இந்நான்கும் வரும். வல்லினம் இடம் நோக்கி ஒலியில் வேறுபடும். (எ—டு) த̲ந்த̲து̲; க̲ங்கு̲க̲ள். இவற்றிற்கேற்பவை ஆங்கிலத்திலும் பெயர்க்கப்படல் வேண்டும். 'Pykara' என்பது தமிழில் 'பைக்காரா' என்று தான் இருக்க வேண்டுமேயன்றி 'பைகாரா' என்று வாராது. அதே முறையில் 'முருகன்' என்பது 'Muruhan' என்று தான் இருக்க வேண்டுமேயன்றி 'Murugan' என்று வாராது. அப்படியே '**cycle**' என்பது 'சைக்கில்' என்றும் '**Bible**' என்பது 'பைபில்' என்றும் தான் இருக்க வேண்டும். 'சைக்கிள்' 'பைபிள்' அல்ல. ஏனெனில் இவ்வொலி ஆங்கிலத்தில் இல்லை. '**municipality**' என்பதனை 'முனிசிபாலிடி' என்று எழுதுவது ஆங்கிலமுமன்று,

தமிழுமன்று. 'முனிசிப்பாலிற்றி' என்று ஓசை தழுவி எழுதலாமல்லவா?' **Tea**' என்பதனை ஏன் 'டீ' என்று எழுத வேண்டும்? ட ஒலி ஆங்கிலத்திலேயே கிடையாதே. 'றீ' என்று எழுதலாம். 'றீ' வேறு 'ரீ' வேறு; இல்லாவிட்டால் ரீ யென்று எழுதினல் பொருள் வேறுபட்டுவிடும். இவ்வுண்மைகளை ஏனையவற்றுக்கும் அமைத்துக் கொள்க.

நம்நாடு, அந்நியர் ஆதிக்கத்தினின்று விடுபட்டுப், புத்துயிர் அடைந்து, பல துறைகளிலும் முன்னேறத் துடித்துக் கொண்டிருக்கின்றது. தமிழ்நாடுதான் முதல் முதலாகத் தன் மொழியை ஆட்சிமொழியாகக் கொண்டுவிட்டது. அஃதோடு நின்றுவிடாது, இது போன்ற துறைகளிலும் மொழிப்புலவர், வல்லுநரோடு கலந்து, 'தமிழ்க்காவலர்' களுடன் தமிழ் மொழியினைக் காப்பதோடு, ஆக்கத்துக்கும் வழி வகுக்கவேண்டும். இத்தருணத்தில், அரசியலாரும், கல்வித்துறைப் பொறுப்பினரும், மொழிப்புலவரும், ஆசிரியரும் மாநாடு ஒன்றுகூடி, இப்படிப்பட்ட சிக்கலான கேள்விகளைத் தீர்த்துவைப்பதற்குரிய வழிவகைகளைக் காணவேண்டும். இது இன்றியமையாதது; காலந்தாழ்த்த லாகாது. இல்லையேல், தடியெடுத்தவன் எல்லாம் தண்டற்காரனுகி விடுவான்; படித்தவன் பாட்டைக் கெடுத்தான், எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான், என்றெல்லாம் ஆகிவிடும். தமிழ் மக்களும் தங்கள் மொழியினைக் காப்பதில் இனிமேலாவது விழிப்புடனிருந்து கடமையாற்ற வேண்டும், என்று நான் கூறும்போது அது மிகையாகக் கருதப்படமாட்டாது என்று நம்புகிறேன். தமிழ்ச்சங்கங்களும், கழகங்களும், பள்ளிகளும், மாணவர் ஆசிரியரும், பத்திரிகைகளும் தமிழ்ப்பணியினைச் சீரும் சிறப்புமுடன் செய்யல் வேண்டும். அவ்வாறு செய்யின் என்றுமுள தென்தமிழ் எழில் வடிவுடன் விளங்கும்.

ஓவியக்கலை

டாக்டர் மா. இராசமாணிக்கனுர், எம். ஏ., எல். டி., எம். ஓ. எல்., பி. எச். டி.,
பேராசிரியர், தியாகராசர் கல்லூரி, மதுரை.

முன்னுரை

நாம் கண்ணுல் காணும் பொருள்களைச் சித்தரித்து எழுதும் கலையே ஓவியக் கலை. பண்டை மனிதன் தான் பார்த்தவற்றையே படமாக எழுதிக் காட்டினுன்; பின்பு அறிவு வளர வளரத் தன் மனத்தால் பல உருவங்களை யும் காட்சிகளையும் முடிவு செய்து அவற்றைப் படங்களாக வரைந்தான்; எண்ணும் ஆற்ற லில் சிறந்த புலவர் பெருமக்களுடைய கருத் தோவியங்களுக்கு உருவங்களை அமைத்தான். இவ்வாறு ஓவியக் கலையில், காணும் பொருளி லிருந்து எண்ணும் செய்திகள் வரையிலும் உருவம் தரும் முறை வளர்ச்சி பெற்றது. சுருங்கக் கூறின் ஓவியக்கலை விடு கட்ட அறியாத மனிதன் குகையில் வாழ்ந்த போதே தோற்றமெடுத்தது என்று கூறலாம். பழைய மக்கள் வாழ்ந்த குகைகளில் சிறு சிறு ஓவி யங்கள் இன்றும் காணப்படுகின்றன.

ஏறத்தாழ ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சிந்து வெளிப் பொருள்களில் ஓவியம் தீட்டப் பெற்ற மட் பாண்டங்கள் பலவாகும். தாயித்துக்கள் பலவாகும். இவ் வாறே சுமேரியர், எகிப்தியர் புதைபொருள் களிலும் ஓவியங்கள் காணப்படுகின்றன. எனவே ஓவியம் வரையும் வழக்கம் மனிதனது வாழ்வுத் தொடக்கத்திலிருந்தே வளர்ந்து வந்திருக்கிறது என்பது பொருந்தும்.

சங்க காலத்தில்

இன்றுள்ள தமிழ் நூல்களில் காலத்தால் முற்பட்டது தொல்காப்பியம் என்னும் இலக் கண நூல். போரில் விழுப்புண் பட்டு வீரர்கள் இறந்த இடத்தில், அல்லது அவர்களைப் புதைத்த இடத்தில், அல்லது அவர்களது உடற்சாம்பலை அடக்கம் செய்த இடத்தில் ஒரு கல் நடப்படும்; அக்கல்லில் இறந்த வீரனது உருவம் பொறிக்கப்படும். பின்னர் அதற்குப் பூசை நடத்தப்படும். இதற்கு நடுகல் என்பது பெயர். இது வீரராலும் இறந்தவர் மரபினராலும் தொழப்படும். கல்லில் இவ்வாறு ஒருருவம் செதுக்கப்படுவதற்கு முன் அவ்வுரு வத்தை ஓவியமாக வரைந்து கொள்ளுதலே வழக்கமாகும். அந்த ஓவியத்தின் உதவி கொண்டே கல்லில் உருவம் செதுக்கப்படும். எனவே தொல்காப்பியர் காலத்திலேயே (ஏறத்தாழ 2500 ஆண்டுகளுக்கு முன்ன மேயே) ஓவியம் தீட்டும் வழக்கம் தமிழரிடம் இருந்து வந்தது என்பது தெளிவாகும்.

சங்க கால நடனமகளிர் நடனக் கலைக்காகப் பல்வேறு கலைகளையும் கற்றனர். அவற்றுள் ஓவியக்கலையும் ஒன்று என்று சிலப்பதிகாரம் செப்புகின்றது.

> ' நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த
> ஓவியச் செந்நூல் (உறையூர்க் கிடக்
> கையில்)
> கற்றுத்துறை போகிய பொற்றெடி
> நங்கை '

இவ்வடிகளை நோக்க, ஓவியக்கலை பற்றிய சிறந்த நூல் ஒன்று சங்க காலத்திலிருந்தது என்பது தெளிவாதல் காண்க. மாதவியின் நடன அரங்கேற்றம் நிகழ்ந்த அரங்கின் மேற் கூரையில் கண் கவரும் ஓவியங்கள் பல தீட்டப் பெற்றிருந்தன. அக் கூரை ஓவிய விதானம் எனப் பெயர் பெற்றது.

மதுரைக் கடைகளில் விற்ற உலோகங்க ளாலான கேடய வகைகளில் கண்ணைக் கவரும் ஓவியங்கள் தீட்டப் பெற்றிருந்தன என்று சிலப்பதிகாரம் செப்புகிறது.

தலையாலங்கானத்துச்செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனது, கோப்பெருந்தேவி படுத்திருந்த கட்டிலின் மேற்கூரையில், பல வகை ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன. அவற்றுள் திங்களின் பக்கத்தில் உரோகிணி இருப்பது போன்ற உருவம் ஒன்றுரும். கணவன் பிரிவால் வாடிய கோப்பெருந்தேவி அவ்வோவியத்தைக் கண்டு உரோகிணியைப் போல் நானும் என் கணவனோடு என்றுமே இணைத்திருக்க முடியாதோ என்று எண்ணிப் பெருமூச்சு விட்டாள். இது நெடுநல்வாடை தரும் செய்தியாகும்.

செல்வர் வாழும் வளமனைச் சுவர்கள் மீதும், மாடங்கள் மீதும் தேவர் முதல் எல்லா உயிர்களையும் குறிக்கத்தக்க ஓவியங்கள் தீட்டப் பெற்றிருந்தன என்னும் செய்தி மணி மேகலையில் கூறப்பட்டுள்ளது.

மதுரையை யடுத்த திருப்பரங்குன்றத்தில் முருகப் பெருமான் திருக்கோயிலில் மண்டபங்கள் பல இருக்கின்றன. அவற்றில்புராண இதிகாசக் கதைகள் பல ஓவியங்களாகக் காட்சி அளித்தன. அவற்றுள் கதிரவன், திங்கள், கோள்கள், இரதி, மன்மதன், இந்திரன், அகலிகை, பூனை, கௌதமன் என்னும் உயர் திணை, அஃறிணைப் பொருள்களைக் குறிக்கும் ஓவியங்கள் எழுதப் பெற்றிருந்தன என்றும் பரிபாடல் பகருகிறது.

காதலன் தான் விரும்பிய பெண்ணை மணக்க முடியாத நிலையில் ஒரு துணியில் அவள் உருவத்தை ஓவியமாக வரைந்து மடலேறுதல் வழக்கம் என்று அகப்பொருள் நூல்கள் கூறுகின்றன. நிறங்கள் தீட்டப் பெறுது மேலோட்டமாக வரையப்பட்ட ஓவியம் புனையா ஓவியம் எனப்பட்டது.

ஓவியங்களை அமைத்து ஆடைநெய்தல் சங்ககாலத் தமிழகத்தில் பழக்கமாயிருந்தது. ஆடைகளில் ஓவியங்களை அமைத்தல் எளிதான செயலன்று. அங்ஙனம் அமைத்தவர் மிகச்சிறந்த ஓவியத்திறனுளராக இருந்திருக்கலாம் அல்லவா? காவிரிப்பூம்பட்டினத்திலிருந்த உவவனம் சிறந்த ஓவியரால் ஓவியங்கள் அமைத்துச் செய்யப்பட்ட ஆடைபோலக் காட்சியளித்தது என்று மணிமேகலை ஆசிரியர் குறிப்பிடுகிருர்.

வித்தகர் இயற்றிய விளங்கிய கைவினைச்
சித்திரச் செய்கைப் படாம்போர்த் ததுவே
ஒப்பத் தோன்றிய உவவனம்'

இவ்வாறு சுவர்களிலும், மண்டபக் கூரைகளிலும், ஆடைகளிலும், கேடயங்களிலும் கண்கவர் ஓவியங்களைத் தீட்ட வல்லவர் சிறந்த ஓவியராக இருத்தல் வேண்டும் அல்லவா. அக் கலைவாணரைக் 'கண்ணுள் வினைஞர்' என்று மதுரைக் காஞ்சி செப்புகின்றது. அதற்கு உரையெழுதிய நச்சினர்க்கினியர், கண்ணுள் வினைஞர் — நோக்கினர் கண்ணிடத்தே தம் தொழிலை நிறுத்துவோர் என்று கூறியுள்ளார். அஃதாவது பார்ப்பவர் கண்ணையும் கருத்தையும் ஈர்க்கத்தக்க ஓவியங்களைத் தீட்டுவோர் என்பது பொருள். எனவே, சங்க காலத்தில் ஓவியக்கலை சிறந்த முறையில் வளர்ச்சி பெற்றிருந்தது என்பதை இது காறும் கூறப்பெற்ற விபரங்களைக் கொண்டு நன்கு தெளியலாம்.

இடைக்காலத்தில்

சங்ககாலத்திற்குப் பிற்பட்ட பல்லவர் காலத்தில் (கி. பி. 300–900) குடைவரைக் கோவிலில், பாறைச்சுவர்களின் மேற்கூரையில் ஓவியங்கள் தீட்டப்பெற்றிருந்தன. மாமண்டூர்க் குகைக் கோவில், காஞ்சிக் கைலாசநாதர் கோவில் முதலியவற்றின் சுவர்களில் பல நிறங்கள் காணப்படுகின்றன. அங்கு வரையப்பட்ட ஓவியங்கள் காலப் போக்கில் அழிந்து விட்டன. அழியாமல் இன்றளவும் நாம் பார்க்கத்தக்க நிலையில் இருப்பவை சித்தன்ன வாசல் ஓவியங்களே யாகும். சித்தன்ன வாசல் புதுக்கோட்டைக்கு மேற்கே பத்துக்கல் தொலைவில் இருக்கின்றது. அங்குள்ள குன்றுகள்

ஒன்றில் குடைவரைக்கோவில் இருக்கின்றது. இதனைக் குடைவித்தவன் மகேந்திரவர்மன். அதன் முன் மண்டபத்தில் நான்கு தூண்கள் இருக்கின்றன. நடுத்தூண்கள் இரண்டில் நடனமாதர் இருவரின் உருவங்கள் தீட்டப் பெற்றுள்ளன. அவர் தம் கூந்தலமைப்பு, ஆடையமைப்பு, அணிவகைகள், நடன மாடும் நிலையில் கைகள் வைத்துள்ள முறை முதலியன அவற்றை எழுதிய ஓவியத்திறமையை உல கறியச் செய்கின்றன. அவ்வோவியங்களைக் கொண்டு அக்காலத் தமிழகத்து நடன மாதர் கூந்தலமைப்பு, ஆடையமைப்பு அணிவகைகள் முதலியவற்றை நாம் ஒருவாறு அறியலாம்.

வலப்புறத் தூணின் உட்பகுதியில் அரசன், அரசியர் தலைகள் ஓவியங்களாகத் தீட்டப் பெற்றுள்ளன. மணிகள் பதிக்கப் பெற்றுச் சிறந்த வேலைப்பாடு கொண்ட மகுடம் ஒன்று அரசன் முடி மீது காட்சியளிக் கின்றது. அவன் காதுகளில் குண்டலங்கள் தொங்குகின்றன. அரசியின் தலை மீது ஒரு வகை மகுடம் அழகு செய்கின்றது. அவள் காதுகளில் வளையங்கள் காண்கின்றன. இருவர் உருவங்களும் அழகாக எழுதப் பட்டுள்ளன. மேற்கூரையில் பெரிய ஓவியம் ஒன்று காணப்படுகின்றது. அது ஒரு தாமரைக் குளத்தைக் குறிக்கின்றது. தாமரை இலைகள், மலர்கள், பேரரும்புகள் என்பன அக்குளத்தை அழகு செய்கின்றன. சமணப் பெரியோர் சிலர் தாமரை மலர்களைப் பறிக்கின் றனர். குளத்தில் எருமைகளும் மீன்களும் காணப்படுகின்றன. கண்ணையும் கருத்தையும் தன்பால் இழுக்கும் அவ்வோவியம் ஏறத்தாழ 1300 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பெற்றது. ஆயினும், இன்றும் நாம் கண்டு களிக்கும் நிலையில் இருக்கின்றது என்பதை எண்ண, அதை எழுதிய ஓவியர் திறமையை என்னென் பது!

பல்லவர்க்குப் பிற்பட வந்த சோழர்கால ஓவியங்களுள் இன்று நாம் காணும்படி இருப் பவை தஞ்சைப் பெரிய கோவில் ஓவியங்களே யாகும். அவை தஞ்சைப் பெரிய கோயில் கருவறையின் புறச் சுவர்கள் மீது எழுதப் பட்டுள்ளன. பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு அவை மறைக்கப்பட்டு, அவற்றின் மீது நாயக்கர் கால ஓவியங்கள் எழுதப்பட்டன. இன்று இவ்விருவகை ஓவியங்களும் நமக்குக் கிடைத்துள்ளன.

சோழர் கால ஓவியங்கள் கி. பி. 11 ஆம் நூற்றாண்டில் வரையப் பெற்றவை. சுந்தரர் சிவபெருமானால் தடுத்தாட் கொள்ளப்பட்ட வரலாறு தஞ்சைப் பெரிய கோவிலில் அழகிய ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளது. சிவ பெருமான் கிழவேதியராகத் திருமண மண்ட பத்தில் வந்து நிற்கிறார். அவரது, ஒரு கையில் தாழக்குடையும், மற்றொரு கையில் பனையோலை யும் காணப்படுகின்றன. மண மண்டபத்தில் மறையவர் பலர் கூடியிருக்கின்றனர். மண மகனான சுந்தரர் தமது மணத்தைத் தடுக்க வந்த கிழவரை வியப்போடும் வெறுப்போடும் பார்க்கின்ற பார்வை அழகாகச் சித்திரிக்கப் பட்டுள்ளது. அடுத்த ஓவியம் கயிலைக் காட்சியைக் குறிக்கிறது. சிவபெருமான் புலித் தோல் மீது அமர்ந்திருக்கிறார். அவரைச் சுற்றிலும் தேவரும் பூதகணங்களும் காணப் படுகின்றனர். இக்காட்சிக்கு அடியில், சுந்தரர் வெள்ளானை மீது இவர்ந்து செல்லுதலும், சேரமான் பெருமாள் நாயனார் குதிரை மீது செல்லுதலும் ஓவியங்களாகக் காட்டப் பட்டுள்ளன. யானையின் மீதுள்ள அணி வகைகள் பார்க்கத் தக்கவை. சுந்தரர் தலை முடியும் தாடியும் வைத்துள்ளார்; பல அணி களை அணிந்துள்ளார்; கைகளில் தாளத்தை வைத்துள்ளார். அவரது யானை விரைந்து செல்லுகிறது. அதன் காலடியில் கடல் நீர் காணப்படுகிறது. கடலின் அடியில் மீன்கள் காட்சியளிக்கின்றன. சேர நாட்டுத் தலைநக ரான கொடுங்கோளூரை விட்டு, அதன் அரசரான சேரமான் பெருமாள் நாயனாருடன் சுந்தரர் கடல் ஓரமாகக் கயிலையை நோக்கிச் செல்லும் காட்சியே அங்கு ஓவியமாகத் தீட்டப் பட்டுள்ளது. சேரமான் அணிந்துள்ள

அணிகளும், அவரது முடி அழகும், குதிரையின் அணி விசேடமும் பார்க்கத் தக்கவை. இவ் வோவியங்கள், இடைக்கால அணிவகைகளையும், ஆடவர் குஞ்சி அமைப்பையும், பிறவற்றையும் நமக்கு நன்கு உணர்த்துவனவாகும்.

இவ்வோவியங்களை அடுத்துச் சோழர் கால நடன மகளிரைக் குறிக்கும் ஓவியங்கள் எழுதப் பட்டுள்ளன. அம்மகளிருடைய கூந்தலொப்பனையும், அணிவகைகளும், உருவ அமைப்பும், அவர்கள் கைகளிலுள்ள இசைக் கருவிகளும் நாம் கவனிக்கத் தக்கவை. இவ்வோவியம் பழுது பட்டிருப்பினும் மிகச் சிறந்த முறையில் அக்காலத்தில் எழுதப்பட்டிருத்தல் வேண்டும் என்பது தெரிகிறது. துர்க்கை எருமைத்தலை அசுரனைக் கொல்லும் ஓவியம் அழகானது. இவ்வோவியங்கள் சோழர் கால ஓவியக்கலை வளர்ச்சியை நமக்குத் தெரிவிக்கின்றன. இவை அரசாங்கப் புதைபொருள் அலுவலரால் செப்பனிடப்பட்டும் பாதுகாக்கப்பட்டும் வருகின்றன.

பிற்காலத்தில்

மேலே கூறப்பெற்ற சோழர்கால ஓவியங்களுக்குமேல் சுண்ணும்புப் படை பூசப்பெற்று, அப்படைமீது நாயக்கர்கால ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன. அவையும் மதுரை மீனுட்சியம்மன் கோவில் சுவர்கள் மீதுள்ள ஓவியங்களும் ஏறத்தாழ ஒன்ருக இருக்கின்றன. மதுரையில் சிவபெருமான் செய்த அறுபத்து நான்கு திருவிளையாடல்களும் பொற்ருமரைக் குளத்திற்கு எதிரிலுள்ள சுவர்களில் ஓவியங்களாகக் காட்சியளிக்கின்றன. நாயக்கர் கால மக்களுடைய உடை, கூந்தல் ஒப்பனை, அணிவகைகள் முதலியவற்றை இவ் வோவியங்களைக் கொண்டு நாம் அறியலாம்.

திருக்குற்ருலத்திலுள்ள சித்திர சபையில் (ஓவிய அரங்கில்) உள்ள ஓவியங்கள் நாயக்கர் காலத்தவை. தில்லையில் சிவகாமியம்மன் திருமுன்பு உள்ள மண்டபக் கூரையில் தீட்டப் பட்டுள்ள ஓவியங்களும் நாயக்கர் காலத்தவை. அவற்றுள் திருமால் மோகினி அவதாரம் எடுத்துத் தாருக வனத்து முனிவரை மயக்கும் காட்சி, சிவபிரான் பிட்சாடனராக வருதலையும் அவரைக்கண்டு முனிவர் மனைவியர் உளம் நெகிழ்தலையும் குறிக்கும் ஓவியங்கள் காணத் தக்கவை.

இக்காலத்தில்

நாம் வாழும் இருபதாம் நூற்ருண்டில் ஓவியக்கலை வளர்ந்து வருகிறது. பள்ளிகளில் ஓவியக்கலை கற்பிக்கப்படுகிறது. கோவிற் சுவர்களில் ஓவியங்கள் தீட்டப்படுகின்றன. தில்லையில் புதிதாகக் கட்டப் பட்டுள்ள முருகக் கோவிலில் எழுதப்பட்டுள்ள ஓவியங்கள் இக்கால ஓவியக்கலையறிவதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும். ஓவியக்கலை கண்ணையும் கருத்தையும் ஈர்த்து ஒரு நிலைப் படுத்துவதாகும்; உள்ளத்திற்கு உணர்ச்சி யூட்டுவதாகும். இத்தகைய சிறப்புடைமை யாற்ருன் இது நுண்கலைகளுள் ஒன்று என்று அறிஞரால் பாராட்டப் படுகின்றது.

யாழும் இசையும்

'தமிழண்ணல்'

I

'ஏழிசையாய் இசைப் பயனாய்' இறைவனைக் காட்டுவது நம் தமிழ். 'தமிழோடு இசைபாடல்' மறந்தறியாப் பண்பினர் நம் தமிழர். கல்லிலும் இசை வடித்த கலைத்திறன் சான்றது நம் தமிழ்நாடு!

முத்தமிழில் ஒன்றாய், நடுவணதாய் இலங்கியது இசைத்தமிழ். அன்று இசைத்தமிழ் இலக்கியங்களும் இலக்கணங்களும் மிக்கிருந்தன. "பெருநாரை, பெருங்குருகு, இசை நுணுக்கம்" என்பன மறைந்த இசைநூற் பெயர்களுட் சிலவாகும். இவற்றை எடுத்துக் காட்டித் 'தமிழில் இசையின்றி இருந்திருக்குமோ?' என வழக்காடிப் பெருமை பேச முந்துகிறோம். பெருஞ் செல்வமிருந்த பெட்டி பறிபோன பின்னர், அதன் 'திறவு கோலிருக்கிறதே' என மகிழ்ந்தவனைப் போல நமது நிலையும் ஆகியுளது.

தோற்கருவி, துளைக்கருவி, நரப்புக்கருவி, கஞ்சக்கருவி அனைய பல இசைக்கருவிகளையும் அவை ஒவ்வொன்றிலும் பற்பல வகைகளையும் நாம் பெற்றிருந்தோம். குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனப் பெயரிய ஏழிசைகளையும், அவை முந்நிலைப் பட்டு இருபத்தொரு மூர்ச்சனைகளாகும் வகைகளையும் அறிந்திருந்தோம். பண் பற்றியும், திறம் பற்றியும், இவற்றால் பிறக்கும் பண் வகைகள் பற்றியும் இலக்கணம் வகுத்திருந்தோம். இடம், நேரம், பொருளுக்கேற்ற பண் வகைகளைப் பெற்றுப்பாடி அனுபவித்து வந்தோம். தமிழன் இவ் வனுபவ முதிர்ச்சியினால் இயற்கையிலேகூட இவ் விசை மரபு புலப்படுவதைக் கற்பனை செய்து பாடி மகிழ்ந்தான். குயில் கூவுதலைப் பாட்டாகவும், மயில் ஆடுவதை நாட்டியமாகவும், தென்றலிசைப் பதைக் குழலாகவும், வண்டொலிப்பதை யாழாகவும், அருவி முழங்குவதை முழவாகவும் கற்பனை செய்து மகிழ்ந்து அவற்றைத் தம் பாடல்கள்தோறும் குறித்துச் சென்றனர் நம் முன்னோர். இக் கற்பனைகளைப் பழந்தமிழரின் இசைக்கலை வாழ்வின் நிழற்படம் என்றால் மறுப்பவர் இருக்கமாட்டார்கள். மறுப்பவர் உண்டானால் கண்ணாடி காட்டும் தம் நிழலுருவைக் கண்டும் தாமிருப்பது பொய்யென மறுப்பவர்க்கு அவர்கள் ஒப்பாவார்.

ஆயினும் பயன் என்ன? இசைக் கருவிகளை, இசைமரபை, இசைத்தமிழை இழந்த நிலையில் நாம் இன்று இருக்கிறோம். இசைக் கலையும் நம்மிடம் இருந்ததெனக் கூறத்தக்க அடிப்படைகள் சில நம்மிடம் உளவே தவிர, அவற்றின் மீது வளர்ந்தோங்கி நின்ற அரண்களை இழந்துவிட்டோம். அரசியல் துறையில் மட்டுமன்றி, மொழித் துறையிலும் கலைத்துறையிலும் கூட நாம் 'கோட்டை விட்டவர்களாக' இருக்கிறோம். வறுமையாளனாக இன்று நடுத்தெருவில் நிற்கும் ஒருவன், எதிரே காணும் பலவடுக்குப் பெருமாளிகை ஒன்றைச் சுட்டிக்காட்டி, 'இஃது ஒரு காலத்தில் என்னுடையதாக இருந்தது' எனக் கூறி மகிழ்வானாயின், அஃது உலகோர் நகைப்பதற் கிடமாகுமே யன்றி, நயப்பதற் கிடமாகுமா? தமிழனைப் பொறுத்தவரை அப் பெருமாளிகை தானும் இடிபாடுற்றுக் கிடப்பது காண இரங்கத்தக்கதாய் இருக்கிறது.

முன்பு இசைக்கலையின் உயிர் நாடியாக 'யாழ்' என்னும் கருவி திகழ்ந்தது; அக் கருவியை இயக்குவதிலே திறமை மிக்கதாய்ப் 'பாணர் குடி' எனும் கலைஞர் பரம்பரை ஒன்று வாழ்ந்தது. கால வெள்ளத்தில் படிப்படியாக இப் பாண் குலமும், யாழும், தமிழ்ப் பண் மரபும் மறைந்து போயின. நமது 'கலையிழப்பு' வரலாற்றில், உள்ளம் உருக்கும் உச்சிநிலையில் நிற்பது 'யாழ் இழப்பு' வரலாறேயாகும்.

II

மிகப் பழங்காலத்தில் வாழ்ந்த தமிழன் விலங்குகளின் தோலை மரங்களில் காயப் போட்டு வைத்தான். அவற்றில் உலர்ந்த குச்சிகள் காற்றசைவால் உராயும் போதெல் லாம் ஓர் ஒலி எழக் கேட்டான். அதைப் பற்றி எண்ணினுன்; தோற்கருவிகள் தோன்றின.

காடுகளில் வளர்ந்து நின்ற மூங்கிலில் வண்டுகள் துளையிட்டுச் செல்ல, அத் துளை வழியே புகுந்து சென்ற 'கோடையவ்வளி குழலிசை' காட்டியது. அதைப் பற்றிச் சிந்தித் தான்; குழலும் துளைக்கருவிகளும் பிறந்தன.

கையில் வில்லை எடுத்துக்கொண்டு, காட்டில் வாழும் விலங்குகளை வேட்டை யாடினுன் தமிழன். அவ் விலங்குகளைக் குறி பார்த்து அம்பைத் தொடுத்து, நாணேற்றி விடும்போதெல்லாம், சுண்டி விட்ட அந் நாண் ஓர் இனிய ஓசை எழுப்பக் கேட்டான். மனம் மகிழ்ந்தான்; வில்லிற் பூட்டிய நரம்பினுல் கொலை முடிப்பதை விட்டு, இசைவடிப்பதை ஆராய்ந்தான். வில்யாழும், யாழ் வகைகளும், நரம்புக் கருவிகளும் உருவாயின.

முறையே இவற்றை முழவு, குழல், யாழ் என 'ழ' என்ற தமிழ்ச் சிறப்பெழுத்தைப் பொருத்திப் பெயரிட்டு, இவை தமிழருடையன என 'முத்திரை' பொறித்துவைத்தான் பழந் தமிழன். இவற்றுள் 'யாழ்' இன்பம் தருவதாய், இசையின் அடிப்படையாய்ப் பிறவற்றிற்குத் தலைமையுடையதாய்ப் போற்றப் பெற்றமையை இலக்கியங்கள் பறை சாற்றுகின்றன. சங்கப் பாடல்களில் இசைக் கருவிகளைப் பற்றிக் குறிப்பிடப்படும் போதெல்லாம் யாழுடன் குழலோ அல்லது யாழுடன் முழவோ அல்லது யாழ், குழல், முழவு எனும் மூன்றுமோ சேர்த்தே கூறப்படுகின்றன. எவை இல்லையேனும் யாழ் இல்லா இசையரங்கோ, பிற கலையரங்கோ அன்று நடந்ததில்லை.

'ஆடமைக் குயின்ற வவிர்துளை மருங் கிற்
கோடை யவ்வளி குழலிசை யாகப்;
பாடின் னருவிப் பனிநீர் இன்னிசைத்
தோடமை முழவின் றுதைகுர லாகக்;
கணக்கலை யிகுக்கும் கடுங்குரற் றூம் பொடு
மலைப்பூஞ் சாரல் வண்டி யா ழாக
இன்பல் விமிழிசை.............

(அகநானூறு 82)

எனவரும் பாடலில் இம் மூவகைக் கருவிகளும் 'இன்பல் இமிழிசை' யாக (Orchestra) ஒலித் தமையைக் காணுகிறோம். 'குழல் அகவ, யாழ் முரல, முழவு அதிர' எனவரும் பட்டினப் பாலைப் (156) பாட்டிலும், இம் முக்கருவிகளும் பல்லியமாகச் சேர்ந்து ஒலித்தமையைக் கேட்கிறோம். மேலும் அகவ, முரல, அதிர என்ற வினைச் சொற்கள் அவ்வவற்றின் இசை ஒலிப்பைக்கூட, நமக்குச் செவிப்புலனுக்குவது போல விளக்கி நிற்கின்றன.

III

வரலாற்றுக்கு எட்டாத காலத்தில் தோன்றிய யாழ், கி. பி. 6 ஆம் நூற்றுண்டு வரை கிளைத்துப் பல்கிப் பரவி விளங்கியது. வில்யாழ், சீறியாழ், பேரியாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ், மகரயாழ் என யாழ் வகைகள் பலவாகப் பெருகியிருந்தன. குறிஞ்சி யாழ், முல்லையாழ், மருதயாழ், நெய்தல் யாழ், பாலையாழ் என அவ்வந் நிலக் கருப்பொருள் வகைகளாக யாழ் வழங்கிற்று. ஆயிரம் நரம்புடைய யாழும் இருந்ததெனக் கேள்விப் படுகிறோம். எழில் மிக்க யாழின் உருவம் அமராவதி நகரச் சிற்பத்தில் செதுக்கப் பெற்றுள்ளது.

யாழை அடிப்படையாகக் கொண்டே பண்ணும் திறமும் வகுக்கப் பெற்றிருந்தன. ஐந்து நிலத்திற்கும் தனித்தனி யாழும், தனித் தனிப் பண்ணும் வகுக்கப் பெற்றமை கொண்டு இதனை அறியலாம். 'பண் யாழ் மறப்ப' (65) என்றும், 'பண் யாழ் நிறுமின்' (152) என்றும் அடுக்கிய 'பண்ணமை நரம்பின் பச்சையாழ்' (164) என்றும் வரும் புறப்பாட்டுக்கள் பண்ணுடன் யாழுக்கிருந்த தொடர்பை உணர்த்துகின்றன. யாழை இசைத்து வாழ்ந்த பாணர்களுக்கே அப் பண் மரபுகள் தெரிந்

திருந்தன. பிற்காலத்தில் தேவாரத் திருமுறைகட்குத் திருநீலகண்ட யாழ்ப்பாணரின் மரபிலுதித்த பெண்ணெருத்தியின் துணை கொண்டு, சோழ மன்னன் பண் வகுத்ததாக வரும் கல்வெட்டுச் செய்தியும் இதனை வலியுறுத்தும்.

சங்க இலக்கியத்துள் பற்பல பாடல்களில் யாழைப் பற்றிய குறிப்புக்கள் காணக் கிடக்கின்றன. 'சித்திரப் படத்துட் புக்குச் செழுங் கோட்டின் மலர்புனைந்து, மைத்தடங்கண் மணமகளிர் போல், (சிலம்பு, காதை: 7) யாழ் போற்றிப் பேணப்பட்டிருக்கிறது. யாழின் உறுப்புக்களாகிய பத்தர், கோடு, ஆணி, நரம்பு முதலியன விரிவாக உரைக்கப் பெற்றுள்ளன. பாலையாழின் அமைப்பைப் பொருநராற்றுப்படையும், பேரியாழின் இயல்பை மலைபடுகடாமும், யாழின் வருணனையைப் பெரும்பாணாற்றுப்படையும் எடுத்துரைக்கின்றன.

இடைக்காலத்தில் மதத்துறையிலும் யாழ் போற்றிப் பேணப்பட்டமையை ஒரு பக்கத்திலும், அது முற்றும் புறக்கணிக்கப்பட்டமையை மற்றொரு பக்கத்திலும் காணுகிறோம். திருநீலகண்டயாழ்ப்பாணரும், திருப்பாணாழ்வாரும் யாழ்மீட்டிப் பத்திநெறி பரப்பி வாழ்ந்தனர். சிவபெருமானே யாழைமீட்டிச் சாதாரிப் பண்ணைப் பாடியதாக – அவ்வாறு பாடி வட நாட்டிலிருந்து வந்த இசைவல்லானை விரட்டி ஒட்டியதாகத் திருவிளையாடற்புராணம் கூறுகிறது. புத்த மதத்தாரும் யாழை ஆதரித்ததாக இந்தியக் கலைமுது நிதியம் (The Legacy-of India) என்ற நூல் கூறுகிறது. சமணமதத்தவர்கள் மட்டும் இசை நாடகக் கலைகட்கு எதிராக இருந்ததுடன், யாழையும் புறக்கணித்ததாகத் தெரிகிறது.

யாழின் இன்னோசை சங்க இலக்கியம் அனைத்திலும், பிற்கால இலக்கியங்களிலும் வண்டின் ரீங்கார ஒலிக்கு ஒப்புமையாக, ஒருபடித்தாகக் கூறப்பட்டுள்ளது. மிஞிறு என்ற தேன்வண்டு முரலுவது போல யாழ் இசைக்கும் என ஒரு சங்கச் செய்யுள் சுட்டுகிறது.

காதலியின் இனிய குரலுக்கும், குழந்தையின் மழலை மொழிக்கும் இனிய யாழிசை ஒப்புமையாகக் கூறப்பெற்றுள்ளது.

"காழ்வரை நில்லாக் கடுங்களிற்று ஒருத்தல்
யாழ்வரைத் தங்கி யாங்கு" (கலி: 2.)

என வரும் பாட்டின் மூலம் ஆனிரைக்குக் குழலிசைபோல, யானையை அடக்க யாழிசை பயன்பட்டமையை அறிகிறோம். திருத்தக்க தேவரும், கொங்குவேளிரும் யாழிசையால் காதலர் கூடிக் கலந்தமையைக் காட்டியுள்ளனர். கோவலன் மனங்கவரும் வண்ணம் மாதவி நடனமாடியபோது, இசையாசிரியன் கையிலிருந்து பின்னணியிசை முழக்கியவற்றுள் யாழ் தலைமையானதாகும். கடற்கரையின்கண் கோவலனும் மாதவியும் கானல்வரி பாடுங்கால், அவர்கள் கைகளிலே தவழ்ந்தது யாழே யாகும். சுருங்கச் சொன்னல் யாழெடுத்து இன்னிசை எழுப்பாத இல்லமும், அவ் விசை கேட்டு ஈடுபடாத உள்ளமும் பழந்தமிழகத்தில் இருந்தில.

மேலும் 'நல்யாழ்' (ப. பத்து–41); 'நல் யாழ்' (புறம் 170) என்றுற்போல யாழைப் பற்றிக் குறிப்பிடும்போதெல்லாம் நன்மை அடை கொடுத்துக் கூறியுள்ளமையை நோக்கினுல், பழந்தமிழர் யாழிடத்துக் கொண்டிருந்த நல்லார்வமும், நற்பற்றும் தெற்றென விளங்கும். 'யாழ்' ஒரு தெய்வம் எனவும் போற்றப் பெற்றுளது.

யாழை இயக்குவதில் தனித்திறன் பெற்றிருந்தவர் பாணர் ஆவர். பிற பல இசைக் கருவிகளை இயக்குபவர்களைவிடப், பாணருக்கு ஏற்பட்ட புகழும் செல்வாக்குமே யாழின் அன்றைய பெருமையை விளக்கும். இங்ஙனம் ஒரு கலைக்கு ஒரு பிரிவினர் என ஒதுக்கியமையே, பிற்காலத்தில் அதன் மறைவை விரைவுபடுத்தும் கருவியுமாயிற்று. நாட்டியக் கலையை ஒரு சாரார்க்கு உரியதென ஒதுக்கி வந்தமையால் அக்கலை நலிவுற்றதும், தமிழைப் 'பண்டிதர்களுக்கே' உரியதெனச் சில காலத்திற்கு முன் வரை ஒதுக்கியமையால் அதன் வளர்ச்சிநிலை குன்றியிருந்ததும் இதனோடு

ஒருசேரவைத்து எண்ணற்பாலன. பாணரின் சமுதாயச் செல்வாக்கை ஒழித்து, அவர்களைத் தாழ்வு படுத்திப் புறக்கணித்தமையே மிகச் சிறந்த யாழையும் கைவிடக் காரணமாயிற்று எனலாம்.

யாழ், பாணர் கைகளில் எப்போதும் தவழ்ந்தது. பாணரை முன்னிலைப்படுத்திப் பாடும்போதெல்லாம், பழம்புலவர்கள் ' நல் யாழ்ப்பாண!' (ஐங்குறுநூறு–478) 'சீறியாழ்ப் பாண ' (ஐங்குறு–472) ' தீந்தொடைச் சீறி யாழ்ப் பாண!' (புறம் 70) என்றாற்போலப் பாணனிடமிருந்து பிரிக்கமுடியாத ஓர் உறுப்பைப்போலவே யாழைக் குறித்துச் செல்கின்றனர். பாணர்கள் 'யாழ்ப்புலவர்' என்றும், 'யாழோர்' என்றும் அழைக்கப்பட்டனர். வடமொழியாளரின் ' கந்தர்வ மணம் ', 'யாழோர் கூட்டம்' என மொழிபெயர்க்கப்பட்டது. வடவரின் கற்பனைக் கந்தர்வர், தமிழரிடையே வாழ்ந்த யாழோர்க்கு ஒப்புமையாக்கப் பெற்றனர்! பாணர்களை முன்னிலைப் படுத்திய சங்கப் பாடல்கள் சில, 'சீறியாழ் செவ்வழி பண்ணி யாழ! நின், கார் எதிர் கானம் பாடினேம்' —(புறம் 144) என்ற இடத்திற் போல, யாழோரை–யாழ என்றே சுருக்கமாக முன்னிலைப் படுத்தின. இவ் வழக்காறு பின்னர்ப் பெருகிப், பாணர் அல்லாரை முன்னிலைப் படுத்தவும் பயன்பட்டு, இதனால் 'யாழ' என்பது ' முன்னிலை அசைச் சொல் ' எனவும் இலக்கணத்தில் இடம் பெறுவதாயிற்று !

IV

இங்ஙனம் வாழ்வோடு கலந்து, இமயம் முதல் குமரிவரை யாழ் பரவியிருந்தது. வடநாட்டின் ' வீணை ' எனும் கருவியைச் சீர் திருத்திக்கொள்ளவும் உதவிற்று. பல்லவர் காலத்தில்தான் ' வீணை ' தென் திசையை எட்டிப்பார்த்தது. பல்லவ மன்னன் மகேந்திரப் போத்தரையன் வீணையை இயக்குவதில் வல்லவனாக விளங்கினான். அவன் 'பரிவாதினி' என்ற வீணையைத் திறம்பட இயக்கினான். குடுமியான் மலையிலுள்ள கல் வெட்டுக்களில் ' வீணை'யைப் பற்றிய விவரங்களை அவன் செதுக்கி வைத்துள்ளான். அவன் சமணனாக இருந்தமையால், பிற மதத்தார் தழுவிய யாழுக்குப் பகையாக வீணையைச் சிறப்பித்தான். ' அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி ' அல்லவா ? இதனால் யாழும், அதைத் தழுவி நின்ற தமிழிசையும் புகழ் மங்கின.

சில காலம் யாழும் வீணையும் ஆங்காங்கு உலவின. பின்னர் ஆட்சியாளர் கையிலிருந்த வீணை நிலைக்க, மக்கள் கையிலிருந்த் யாழ் நழுவி வீழ்ந்தது. யாழும், யாழ் வழிப்பட்ட பண்முறையும், அதனை அறிந்திருந்த பாண் குடியும் படிப்படியாய் முற்றும் அழிந்து ஒழிந்தன. பின்னர் கி. பி. 14, 15 ஆம் நூற்றாண்டுகளில் வேரூன்றிய விசயநகரப் பேரரசர் காலத்தில் தமிழிசையிருந்த இடத்தில் தமிழுக்குப் பதிலாகத் தெலுங்கும், இசைக்குப் பதிலாகச் ' சங்கீதமும் ' இடம் பெறலாயின. ' ஆக்ஸ்போர்டு ' பல்கலைக்கழகப் பதிப்பகத்தார் வெளியிட்ட ' இந்தியக் கலைமுது நிதியம் ' என்ற நூலில் " கி. பி. 6ஆம் நூற்றாண்டில் புத்தமதத்தோடு யாழும் மறைந்தது " என்று கூறப்பெற்றுள்ளது. கி. பி. 7 ஆம் நூற்றாண்டினராகக் கருதப்படும் திருநாவுக்கரசர் " மாசில் வீணையும் " என்று பாடியிருப்பதால், அவர் காலத்திலேயே பல்லவர்கள் வீணையை நிலைநாட்டி விட்டனர் என அறியலாம்.

இங்ஙனம், குடியிருந்தவனுக்கு வீடு உரிமையானாற்போலவும், கடன் வாங்கியவனுக்கு முதல் உரிமையானாற் போலவும் யாழிருந்த இடத்தில் வீணையும், தமிழிசை இருந்த இடத்தில் பிற இசையும் உரிமை பெறலாயின.

ஒரு காலத்தில் காதலனின் கையிலிருந்து காதலிக்குக் களிப்பூட்டிய யாழ்; குழந்தையின் மழலைமொழியோடு போட்டியிட்டுக் கொண்டு ஒவ்வொரு குடும்பத்திலும் நின்று நிலவிய யாழ்; இவ்வுலகக் கவலையை அகற்றி மிக இனிய இசையால் உள்ளத்தை உருக்கி வானிலே மனித மனம் வட்டமிடவைத்த யாழ் ; கடவுளன்பர்களை நெகிழ்வித்துத் திருக் கோயில்களை வலம்வந்து நிலைபெற்றிருந்த யாழ் மறைந்தது. கைக்குப் பெருமையும், காட்சிக்கு அழகும், காதிற்கு இனிமையும், காதலர்க்குக் கவர்ச்சியும், அடியார்க்குஅருளும்,


மற்றவர்க்கு மகிழ்ச்சியும் தந்துவந்த கலைக் கருவூல மாகிய யாழ் மறைந்தது. முத்தமிழில் ஒன்றை, இசைக்கலையைத் தன்னோடு இணைத்துக் காத்து வந்த யாழ் மறைந்தது. ஆம், கடலில் முக்குழித்து எடுத்த நன்முத்து, கரையேறுமுன் கைநழுவிப் போய் விட்டது. தென்றலில் கலந்துவந்த இனிய மலர்மணம், திடீரென வீசிய புயலில் கலந்து மறைந்து விட்டது!

இந்நிலையில் மறைந்த யாழை மீண்டும் நிலைநிறுத்த முயன்ற—செய்த நூலாலும் பிறந்த நாட்டாலும் சிறந்த யாழ்ப்பாணராகிய-பேரறிஞர் விபுலானந்தரை நம்மில் எத்தனை பேர் அறிவோம்? அவரைப் போற்றி, அவர் செய்த தொண்டினைத் தொடர்ந்தவர் நம்மில் எத்தனை பேருளர்?

உரோம் நகரம் தீப்பற்றி எரிந்தபோது 'நீரோ' மன்னன் தன்னை மறந்து பிடில் வாசித்துக்கொண்டிருந்தான். கால வெள்ளத்தில் அவன் மறைந்தான்; அக்கருவியும் கலையும் வாழ்கின்றன. பிறர் நுழைவு ஏற்பட்ட காலத்தில் தமிழனும் தன்னை மறந்து யாழ் வாசித்துக்கொண்டிருந்தான். கால வெள்ளத்தில் யாழையும், கலையையும் கை நழுவ விட்டு விட்டுத், தமிழன் வாழ்கின்றான். அங்குத் தன்னலம் ஒழிந்து பொதுநலம் நிலைத்திருக்கிறது. நம் தமிழ்நாட்டிலோ பொது நலம் போன இடத்தில் தன்னலம் குடிபுகுந்து வாழ்கிறது!

யாழ் மறையவே அதனோடு ஒன்றி வாழ்ந்த இசைத்தமிழும் மறைய நேரிட்டது. பல்லாயிரம் ஆண்டுகளாக ஊனாய், உயிராய்த் தமிழோடு ஒன்றி வாழ்ந்த தமிழர்களும் தாய்மொழியைப் புறக்கணித்து விடுவார்களானால், இசைத் தமிழின் நிலைமைதான் அவர்களுக்கும் நேரிடும்.

இன்றைய ஆட்சியின் பிறமொழித் திணிப்பும், மக்களின் தந்நலப் பிணிப்பும் பல்லவர் காலத்தையே மீண்டும் நினைப்பூட்டுகின்றன. பெருங்கலைச் செல்வமாகிய யாழையும் இசையையும் இழந்தமை பற்றிய அவல உணர்ச்சியோ, அதனை ஏன் இழந்தோமென்பதை ஆராயும் ஆர்வ உணர்ச்சியோ, இழந்த கலையைப் புதுப்பிக்கும் செயலுணர்ச்சியோ நம்மிடம் சிறிதும் இல்லாமையைநோக்கப், பல்லவர் கால நிலையினின்று நாம் சிறிதும் முன்னேறவில்லை என்பதை உறுதிப்படுத்தலாம். இனியேனும் தமிழ் மக்கள் தமது நிலை உணர்ந்து, திருந்தி, வாழவேண்டுமானால் பெருஞ்செல்வமாகிய "யாழ் இழப்பு வரலாறு" ஒவ்வொரு தமிழனின் உள்ளத்திலும் இடம் பெறவேண்டும்.



நுண்ணுணர்வு

பூ. அமிர்தலிங்கன், தமிழ் விரிவுரையாளர், அழகப்பா கல்லூரி, காரைக்குடி.

உலகமொழிகளுள் தொன்மையும், செம்மையும், இலக்கண வரம்பும் பெற்ற மொழிகள் சில. அவற்றுள் உலக வழக்கொழிந்து சிதைந்தன போக எஞ்சி நிற்பன ஒரு சில. அவற்றுள் பிறமொழிச் சொற்களின் துணை இன்றித் தனித்தியங்கி வாழவல்ல ஆற்றல் சான்ற மொழிகள் மிகச் சில. அம் மிகச் சில வற்றுள் மொழிநூல் அறிஞரால் உயர்தனிச் செம்மொழி யெனப் பாராட்டப்படும் நிலையி லுள்ளது நம் தாய்மொழியே.

தன்னிலிருந்து பல்வேறு மொழிகளைத் தோற்றுவிக்கும் தாய்மைப் பேறுற்றும், என்றும் மாறு இளமையோ டொளிரும் கன்னித் தன்மை பொருந்தி, என்றுமுள தென்றமிழாய்ச், செய்யுள் வழக்கு உலக வழக்கு என்ற இரு வகை வழக்கினும் நாடோறும் வளர்ந்து வரும் உயிர்மொழியே நம் தமிழ் மொழியாகும். இற்றைக்கு ஏறத்தாழ ஈராயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட பண்டைக்காலத்தே, புலத்துறை முற்றிய புலவர் குழாமும், நிலத்துறை முற்றிய நெடுமுடி வேந்தரும் நெடுநாள் கூடிச் சங்க மிருந்து மொழி வளர்த்த பெருமையைத் தனக் கேயுரிய சிறப்பாகக் கொண்டிலங்குவது நம் தமிழ்மொழி ஒன்றே.

அங்ஙனஞ் சிறந்திருந்த சங்க காலத்தே தோன்றிய முத்தமிழ் நூல்களின் எண்ணிக்கை கணக்கிலடங்காதனவாம். அவற்றுள் ஊழிப் பெருவெள்ளம்போல் இடை யிடையே தோன்றிய கடல்கோள்களாலும், மாற்ருர் படையெடுப்பாலும், தற்சோர்வாலும், சமய முரண்பாட்டாலும், நிலையாமை யெண்ணம் நிலைத்து நின்ற தத்துவத்தாலும், அரசியல் விழ்ச்சியாலும் அழிந்து சென்ற நூல்கள் அளப்பில. பண்டை உரையாசிரியர்களின் குறிப்புக்களால் பெயர்மட்டும் தெரியவருகின்ற நூல்கள் பல. அவர்களால் மேற்கோளாகக் காட்டப்பட்ட ஓரிரு பாடல்கள் மட்டும் கிடைத்த நூல்களும் சில. இவற்றையெல்லாம் கடந்து நம் கைக்குக் கிடைத்திருக்கும் 'பத்துப் பாட்டு, எட்டுத்தொகை, கீழ்க்கணக்கு' முதலிய மிகச் சிறு அளவினவாய நூல்களையே இன்று நாம், அச்சங்க இலக்கியங்களின் அடையாளங்களாக வைத்துப் பாராட்டுகின்ருேம். அங்ஙனம் பிற்சான்ருேர்கள் தொகுத்துச் சேமித்த தொகைப்பாக்க ளுள்ளும் சிலவற்றை நாம் இழந்து விட்டோமென்ருல் நம்மவரின் நிலையை என்னென்றியம்புவது?

ஆனுல், தமிழ்நாடு செய்த தவப்பயனுல் பண்டைத் தமிழ் கூறு நல்லுலகத்தின் வாழ்வுச் செம்மையை, மொழி யிலக்கணமாகத் தொல்காப்பியனுரும், வாழ்விலக்கணமாக வள்ளுவ ருரும் செப்பம் செய்தருளிய தொல்காப்பியமும், திருக்குறளும் சிதைவற்ற முழுமுதல் நூல்களாக நமக்குக் கிடைத்திருக்கின்றன.

நூற்பா வடிவில் அமைந்த தொல்காப்பியமும், குறட்பாவடிவில் அமைந்த திருக்குறளும் தமிழணங்கின் இரு கண்களெனப் போற்றத்தகும் சிறப்புடையன. பரந்து கிடந்த சங்க இலக்கியப் பழம்பெருங்கடலினின்று முகிழ்த்தெழுந்த அமுத கலசங்களே இவ்விரு நூல்களுமாம். கருத்துக் கருவூலமாய் ஒளிரும் இவ்விரு அரும்பெறல் மணிகளும் தோன்றுதற்கு நிலைக்களனுய் அமைந்தவை, பரந்து கிடந்த அச் சங்க இலக்கியங்களேயாகும்.

அவை, பண்டைத் தமிழ்ச் சான்ருேரின் தூய அறிவொளியால் உணர்ச்சியாடியில் பதிவு செய்யப்பட்ட இயற்கைச் சித்திரங்கள். சொல் வண்ணக்குழம்பால் தீட்டப்பட்ட கவின் பெறு வனப்பும், கருத்துச் செறிவும், கலையழகும், உயிர்த்துடிப்பும் ஒருங்கேயமைந்த உயர் வண்ண ஓவியங்கள். ஓங்கி உயர்ந்த

உணர்வுப் பெருமலையில், பெருமித மென்னும் நேர்மை உளியால், அறிவிற்சிறந்த ஆர்வச் சிற்பியர் பலரால் செதுக்கப்பட்ட புலமைச் சிற்பங்கள். சுருங்கக் கூறின், இவற்றை உயர்ந்த உணர்வுகளை உயிராகக் கொண்டு, செந்தமிழ்ப் பண்பாட்டைச் சிறப்புறக்காட்டி, நாகரிகத்தை வளர்க்கவல்ல வண்ணப்படப் பிடிப்புக்கள் எனலாம்.

உயர்ந்த சான்றோரின் சிறந்த பேருணர்வுகளை ஆங்குக் காணலாம்; அருளுள்ளம் கொண்ட அறவோரின் அரிய மெய்யறிவுக் கருத்துக்களை ஆங்குக் காணலாம்; விழித்த கண் வேல்கொண் டெறிய அழித்திமைப்பின் ஒட்டென்றெண்ணும் வீரத்தின் எல்லையினைக் காணலாம்; கொடைமடம் படாத கொற்ற வரையும், நன்றிப் பெருக்கால் நாத்தழும் பிருப்பப் பாடும் நல்லோரையும் காணலாம்; பிரிவின் றியைந்த துவரா நட்பின் இருதலைப் புள்ளின் ஓருயிர் என உயிரும் உடலும் போல் ஒன்றிய காதலரைக் காணலாம். இப் பேருணர்ச்சிக் கடலிடைக் காணப்படும் சில நுண்ணுணர்வென்னும் வெண் முத்துக்களை ஈண்டுக்காண்போம்,

"நுண்ணுணர்வின்மை வறுமை அஃதுடைமை பண்ணப் பணைத்த பெருஞ் செல்வம்" என்றார் ஒரு பெரியார். காதலால் பிணைப்புண்ட காதலன் ஒருவன், கடமை நோக்கித் தலைவியைப்பிரிந்து வேற்றிடம் செல்ல நேர்கிறது. பிரியா விடை பெற்றுச் சென்ற தலைவனின் பிரிவுக்கு ஆற்றாளாய தலைவி, தோழியொடு பல சொல்லிப் பேதுற்று நெஞ்சழிகின்றாள். தினையள வேனும் என்னைப் பற்றி அவர் எண்ணுவாராயின் இன்னும் வாராது காலம் நீட்டிப்பாரோ? என்றெண்ணி ஏங்குகிறாள். இவ்வாறு அலமருந் தலைவிக்கு ஆறுதல் கூற வேண்டுவது தோழியின் கடப்பாடு.

இங்ஙனம் வரும் இடங்களிலெல்லாம் தலைவன் கடந்து செல்லும் பாலை நிலக்காட்சிகளாக "வெம்மையால் வருந்தும் பிடிக்கு நீருட்டிப் பின்னுண்ணும் களிறுகளையும், நிழலின்றி வருந்தும் பிணைக்குத் தன் உடம்பின் நிழலை நின்று தந்து காக்கும் கலைகளையும், சிறகால் பேடைக்கு நிழல் தருஉம் சேவல்களையும்" எடுத்துக்காட்டி, இவற்றைக்காணும் தலைவனுக்கு உனக்கு அருள் செய்தல் வேண்டுமென்ற எண்ணம் தோன்றாது போகுமா? என்று வன்புறை செய்வதாகக் கூறுதல் பண்டைப் புலவரின் புலனெறி வழக்கு. ஆனால் ஐந்திணை ஐம்பதில் காணப்படும் தோழி யொருத்தி மிக்க நுண்மாண் நுழை புலம் உடையாளாகக் காணப்படுகிறாள். அவள் தலைவியை ஆற்றுவிக்கக் காட்டும் காட்சி மிக்க நுண்ணிய மன ஓட்டத்தைப் புலப்படுத்தி ஆராவின்பம் அளிக்கின்றது.

தலைவன் கடந்து செல்லவேண்டிய நெறி, நீரற்று வறண்டதோர் பெருவழி. அவ் வழிச்செல்வோர் தம் கண்ணின் நீரன்றி உண்ணீர் பெறாது அருந்துயர் எய்தும் அரிய பாலை நிலம் அது. அவ்வெம்மையில் வாடித் தாகவிடாய் கொண்ட இரண்டு மான்கள் ஆணும் பெண்ணுமாய் இங்குமங்கும் நீருக்காக ஓடி அலைந்தன. பார்க்குமிடமெல்லாம் கானல் நீரைத்தவிர வேறொன்றும் அவைகட்குக் கிட்டவில்லை. இங்ஙனம் நெடு நேரம் ஓடி அலைந்து வருந்திய பின்பு ஒரு சிறு சுனையை அவைகள் கண்டன. இரண்டும் வேட்கை தீர உண்பதற்கு அச்சுனைநீர் போதாது. இதனை உணர்ந்த ஆணாகிய கலைமான், தன் பெடையாகிய பிணையே அந் நீரைக்குடித்து இன்புற வேண்டுமென்று எண்ணிற்று. ஆனால் பிணைக்குத் தன் மேலுள்ள அன்பு எத்தகையது என்பதும் கலைமானுக்கு நன்கு தெரியும். எனவே, தான் உண்ணாவிடில் பிணை தனியே நீர் பருகாது என்பதையும் எண்ணிற்று. இரண்டுக்குமோ சுனைநீர் காணாது; தான் உண்ணாவிடிலோ பிணையும் உண்ணாது; என்ன செய்வது? சூழ்ந்து ஒருமுடிவுக்கு வந்தது. பெண் மானைத் தன் பெருமிதத்தால் ஏமாற்ற

எண்ணம் கொண்டு தானும் நீரில் வாய் வைத்துக் குடிப்பதுபோலப் பாசாங்கு செய்து உறிஞ்சுவது போன்ற ஒலியைச் செய்தது. கலையும் நீர் உண்கிறது என்றெண்ணிய பிணைமான், சுனை நீரை வயிருரப் பருகி மகிழ்ந்தது. என்னே அக்கலைமானின் மதி நுட்பம்!

பிணைக்கு நீரூட்டும் அதன் அருளுள்ளமும், அதற்கு அது கையாண்ட மதிநுட்பத் தந்திரமும் எவ்வளவு மென்மையானவை! இத்தகைய காட்சியையுடைய சுரத்தின் வழியிலல்லவா தலைவர் சென்றுள்ளார். எனவே உனக்கு அருள் செய்ய அவர் ஓடோடி வருவார் என்று, தோழி தலைவியை ஆற்றுவிக்கின்ருள். தோழி கூற்ருக அமைந்த அப் பாடல் வருமாறு ;

சுனைவாய்ச் சிறுநீரை எய்தாதென்
றெண்ணிப்
பிணைமான் இனிதுண்ண வேண்டிக்-
கலைமாத்தன்
கள்ளத்தின் 'ஊச்சும்' சுரமென்பர்
காதலர்
உள்ளம் படர்ந்த நெறி.

காதலிக்கு அருள் செய்யும் காதலனின் நுண் திறத்தைக் காட்டும், 'கள்ளத்தின் ஊச்சும்' மேற்பாடலைப் போலவே, காதலன் மேல் வைத்த காதலியின் அன்பை நுட்பமாய்க் காட்டும் புறப்பாடல் ஒன்றைப் பார்ப்போம்.

காட்டு வழியில் உள்ள யானை வேட்டுவன் ஒருவனது வீடு. அவ்வீட்டின் முன்புறத்தில் முன்னைக் கொடியும் முசுட்டைக் கொடியும் படர்ந்து இயற்கைப் பந்தலாக விளங்கி நிழல் தந்து கொண்டிருக்கின்றன. அப்பந்தலின் கால் ஒன்றில் விலங்குகளைப்பிடிக்க வேட்டுவன் பயன் படுத்தும் பார்வை மிருகமாகிய பெண் மான் ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. வாயிலின் மற்ருெரு புறத்தே மறு நாள் உணவுக்கு வேண்டிய தினை அரிசி மான்ருேலில் உலர்த்தப் பட்டிருக்கிறது.

வேட்டைக்குப் போய் நல்ல வெயிலில் காட்டில் அலைந்து திரிந்து களைத்துப் போய் வேட்டுவன் வீட்டுக்கு வருகிருன். இல்லாள் அமர்ந்து ஊட்ட இறைச்சியோடு கூடிய வல்லுணவை வயிருர உட்கொள்கிருன். சற்று நேரத்தில் வேட்டையால் ஏற்பட்ட களைப்பாலும், வீட்டில் நல்லுணவு உண்ட மயக்கத்தாலும் சோர்வுற்ற வேட்டுவன், திண்ணையில் படுத்து அயர்ந்து உறங்கிவிடுகின்ருன். ஆண் மான் ஒன்று எப்படியோ பார்வைப் பிணைமானின் இருப்பறிந்து அங்குவந்து, அதை அணைத்துத் தழுவி இன்புற்று இருக்கிறது. காய்ந்து கொண்டிருக்கும் தினைஅரிசியை இதல் என்ற பறவையும், கானக் கோழியும் தம்மிச்சைப்படி கொத்தித் தின்று கொண்டிருக்கின்றன.

வீட்டின் உள்ளே இருந்து வெளியே வந்த வீட்டுத் தலைவி இதனைக் கண்ணுறுகின்ருள். தினையைத் தின்னும் பறவைகளை விரட்ட நெஞ்சும், வாயும், கையும் ஒன்றையொன்று போட்டி போட்டுக்கொண்டு முந்துகின்றன. ஆனுல் இங்குமங்கும் ஓடிக்குரல்எழுப்பிக் கல்லெறிந்து அவற்றை விரட்டுவதால் ஏற்படும் ஒலியால், கணவனின் உறக்கம் கலைந்து விடுமே என் றஞ்சுகிருள். மேலும் அவ்வொலியால் இன்பம் பெருது வருந்தி இருந்த பிணைமானுக்கு ஏற்பட்ட அரிய சேர்க்கை இன்பமும், குலைந்து போகுமே என்று இரங்குகிருள். இவ்வாறு எண்ணிய அவள் தன் அரிய உணவு போனுலும் போகட்டும் என்று துணிந்து கணவன் துயிலும், மான்களின் இன்பமும், கலைந்து விடாமல் இருக்க, யாதொரு ஒலியும் செய்யாது வீட்டிற்குள்ளே கூட நடமாடிஅலையாது, கற்சிலைபோல் அசையாது அமர்ந்து விடுகிருள்.

"முன்றின் முஞ்ஞையொடு முசுண்டை
பம்பிப்
பந்தர் வேண்டாப் பலர்தூங்கு நீழற்
கைம்மான் வேட்டுவன் கனைதுயின்
மடிந்தெனப்
பார்வை மடப்பிணை தழீஇப் பிறிதோர்

தீர்தொழிற் றனிக்கலே திளைத்து
விளையாட
இன்புறு புணர்நிலை கண்ட மனையோள்
கணவ னெழுதலு மஞ்சிக் கலையே
பிணவயிற் றீர்தலு மஞ்சி யாவதும்
இல்வழங் காமையிற் கல்லென
வொலித்து
மானதட் பெய்த வுணங்குதினை வல்சி
கானக் கோழியோ டிதல்கவர்ந்
துண்டென........
...................................."

இப்பாடலிற் காணும் வேட்டுவச்சியின் காதல் சான்ற அருளுள்ளத்தின் நுட்பத்தை என்னென்பது?

இன்பத்தில் திளைத்துச் சேர்ந்து இருக்கும் மான்களின் புணர் நிலைக்கு ஊறு செய்யாத, இம்மனையோளின் நல்லுள்ளத்தை ஒத்த அருளுள்ளம் படைத்த குறும்பொறை நாடன் ஒருவனை, அகநானூற்று முல்லையில் நாம் காண்கின்றோம்.

இன்றியமையாக் கடமையை மேற்கொண்டு பிரியாவிடை பெற்றுத் தலைவியை விட்டுப் பிரிந்த தலைவன் ஒருவன், தன் செய்வினையைச் செம்மையுற முடித்தான். 'மீண்டு வருவேன்' என்று அவன் குறித்துக் கூறிய கார்காலமும் கவினுற வந்து அவனுக்குக் குளிர்ச்சியும் மலர்ச்சியும் ஊட்டியது. காதலியைக்காண வேண்டுமென்று துடிக்கின்ற உள்ளத்தோடு விரைந்தோடும் குதிரைகள் பூட்டிய மாண்வினைத்தேரிலே ஏறினான். இழுத்துப் பிடிக்கும் கடிவாளத்தைத் தளர்த்திவிட்டுக் குதிரைகளை விரட்டிக் கொண்டே தேரிற்கட்டிய மணிகள் கணகணவென ஒலிக்க, மிக வேகமாகத் தன் ஊர்க்கு அண்மையிலுள்ள கானகத்துக்கு வந்துவிட்டான்.

மழை பெய்த காரணத்தால் முல்லையும், இல்லமும், கொன்றையும் மலர்ந்து தேன் பிலிற்றி நறுமணங் கொழித்துக் கொண்டிருக்கும் அக்கவினுர் கானகத்தில், பூவின் தேனை உண்ணும் வண்டுகள் தம் பெடையோடு இன்புற்று மகிழ்ந்து இருக்கும் காட்சியைக் காண்கிறான். விரைந்து செல்லும் தேரை உடனே நிறுத்திக் கீழே இறங்கி மணிகளின் நாவையெல்லாம் அவைகள் ஆர்த்து ஒலி செய்யாத வண்ணம் கட்டிய பிறகே, தேரை மேலே செலுத்துகிறான். மணிகளின் ஆர்ப்பொலிக்கு அஞ்சி வண்டுகள் தம் கூட்ட இன்பத்தை விட்டுப் பிரிந்து போகுமே என்றஞ்சும் இத் தலைவனின் அருளுள்ளத்தின் மென்மைக்கு இணையுமுண்டோ?

காதல் வேகத்தால் உந்தப்பட்டுத் தன் தேரை விரைந்து செலுத்தும் உணர்ச்சி மிக்க நிலையிலும், வண்டுகளின் கூட்ட இன்பத்திற்கு இடையூறு நேர்தல் கூடாது என்றெண்ணும் மென்மை உள்ளத்தின் நுண்ணிய மாண்பு வியத்தற் குரியதன்றோ?

தொல்காப்பியப் பொருள் அதிகாரத்திற்குப் பேருரை கண்ட பேராசிரியர், செய்யுள் உறுப்பினுள் ஒன்றாகிய 'நோக்கு' என்பதற்கு இக்கருத்தடங்கிய அகப்பாட்டை எடுத்துக் காட்டித் தம் நுண்மாண் நுழை புலம் தோன்றக் கூறி இருக்கும் அரிய விரிவுரை, கற்றோர்க்குக் களிபேருவகை தருவதாகும். "முல்லைக்குரிய முதலும் கருவும் வந்து உரிப் பொருளாற் சிறப் பெய்தி முடிந்தது" என நச்சினார்க்கினியர் எடுத்துக்காட்டும் குறுங்குடி மருதனார் பாடிய "முல்லை" யெனத் தொடங்கும் அப்பாடலின் இடையில் வரும்,

"பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த
தாதுண் பறவை பேதுறல் அஞ்சி
மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரன்"

என்ற அடிகள் அவ்வருள் தலைவனை நுண்ணிதின் படம் பிடித்துக் காட்டுகின்றன. வளர்க இந்நுண்ணுணர்வுகள். இவற்றை நமக்குக் காட்டும் சங்க இலக்கியங்கள் வாழ்க!

தமிழ் உரைநடையில்—ஒரு மைல்கல்

திரு அ. மு. பரமசிவானந்தம், எம். ஏ., எம். லிட்.,
தமிழ்ப்பேராசிரியர், தியாகராசர் கல்லூரி, மதுரை.

தமிழில் பழங்காலத்தில் உரை நடை இல்லை என்பார், தொல்காப்பியச் சூத்திரத்தையும், அதன் விளக்கங்களையும், அதன் பின் தோன்றிய சிலப்பதிகார உரை நடையையும் கண்டால் தம் எண்ணத்தை மாற்றிக் கொள்வர். ஆயினும் அச் சிலப்பதிகாரத்தில் காணும் சில உரை நடைத் தொடர்களுக்குப் பின்னர்த் தமிழில் எந்த நூற்றாண்டில் உரை நடை வளர்ந்தது என்று சொல்ல முடியாத நிலையில் நாம் நிற்கிறோம். சிலப்பதிகாரம் கி. பி. முதல் நூற்றாண்டின் இறுதியிலோ, இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலோ எழுந்த நூல் என்பது பலருடைய துணிபு. அதற்குப் பிறகு சில நூற்றாண்டுகளில் தமிழ் நாட்டில் என்ன நடந்தது? என்ன நூல்கள் எழுதப் பெற்றன? என்பன வெல்லாம் அறிய முடியாதபடி இருண்ட நிலை நிலவியது. எனவே அந்த இருண்ட காலத்தில் யார் யார் ஆண்டார்கள்? யார் யார் வாழ்ந்தார்கள்? என்றும் சொல்ல முடியாது. அந்த நிலையில் அவர்கள் எழுதிய நூல்பற்றி அறிவது எங்கே?

ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்திலே தான் மறுபடியும் நம்மால் தமிழகத்தைக் காண முடிகின்றது. அந்தத் தமிழகத்துக்கும் சங்க காலத் தமிழகத்துக்கும் இடையில் எத்தனையோ வேறுபாடுகள் இருக்கின்றன. ஆயினும் அக்காலத்தில் உரை நடை இலக்கியங்கள் தோன்றி வளர்ந்தன என்பதற்குச் சான்றுகள் கிடையா. வேறு இலக்கியங்களும் வளர்ந்தன எனக் காட்ட முடியாவிடினும், இலக்கியமும் பிறவும் வேறு வகையில் வளர்ந்து வந்தன என எண்ண இடமுண்டு. ஏழாம் நூற்றாண்டின் இலக்கியங்களாகிய தேவாரம் போன்றவற்றிற்கும், சங்க இலக்கியத்திற்கும் உள்ள வேறுபாடுகளை யாவரே அறியார்? இந்த வளர்ச்சியில் வடமொழியாளருக்கும் பிற வடநாட்டவருக்கும் பங்கு உண்டு என்பதை வரலாறு காட்டும். பல வட சொற்கள் தமிழில் அதிகமாகக் கலந்துள்ளன. பாட்டிடை மட்டுமின்றி உரையிடையும் வடசொற்களும், வடநாட்டுப் பழக்க வழக்கங்களும் மிகக் கலந்து வந்துள்ளன. இவ்வுண்மையை விளக்கப் போதிய சான்றுகள் அதிகம் இன்றேனும் 'இறையனார் அகப்பொருள் உரை' ஒன்றே சிறந்த சான்றாக நிற்கின்றது என்பது உண்மை யன்றோ! ஆம்! இறையனார் அகப் பொருள் உரை தமிழ் உரை நடையில் ஒரு மைல் கல்லாக நிற்கிறது.

நூலுக்கு உரை எழுதும் பழக்கம் சங்க காலத்தில் இல்லை. சங்க கால இலக்கியங்களாகிய பத்துப்பாட்டுப் போன்றவற்றுக்கும், தொல்காப்பியத்திற்கும், சிலப்பதிகாரத்திற்கும் மிகப் பிற்காலத்திலேயே பல அறிஞர்கள் உரை எழுதியுள்ளார்கள். பாட்டுக்கு உரை என்ற வகையில் முதல் தோன்றிய உரை, இவ் விறையனார் களவியல் உரைதான் எனக் கொள்ள வாய்ப்பு இருக்கின்றது. நாட்டு வரலாற்றை நன்கு ஆராய்வாருக்குக் கல்வி நிலை, தொல்காப்பியர்—சங்க காலம்—தொடங்கி வர வரக் குறைந்து கொண்டே வருகின்றது என நினைக்கத் தோன்றும். உரையே தேவையற்று உயர்ந்த இலக்கியங்களைப் பாடியும் பயின்றும் வாழ்ந்த நிலைபோய், எல்லாவற்றிற்கும் உரை எழுத வேண்டிய நிலை உண்டாயிற்று. அந்த உரைகளும் சில சமயத்தே உயர்ந்த நடையாக அமைவதிலிருந்து அக்காலத்திலும் கற்றறிந்தவர் சிறந்திருந்தார்கள் எனக் கொள்ள இடமுண்டு. என்றாலும் பாட்டுக்கு உரையின்றிப் பயில முடியாத நிலையில் சற்றுக் கல்விமுறை தாழ்ந்திருந்தமை உரைப் பெருக்கத்தால்

விளங்கும். அவ்வுரைகளுக்கெல்லாம் முற்பட்ட உரை நூலே இறையனுர் களவியல் உரை.

இறையனுர் களவியல் உரை எழுதியவர் நக்கீரர் என்பர். கடைச் சங்க காலத்தில் வாழ்ந்த அதே நக்கீரர் என்பர்: அக் கூற்றுச் சற்றும் பொருந்தாத வகையில் உரை அமைகின்றது என்பர். நெடுநல்வாடை போன்ற இலக்கியங்களையும் எழுதிய அந்த நக்கீரரா இந்த உரை எழுதியவர்? என நினைக்கத் தோன்றுகிறது. உரை நடை வளமாகச் செல்லுகிறது என்ருலும் அதில் கலந்துள்ள வடமொழிச் சொற் பெருக்கமும், உதாரணப் பாட்டுகளாகிய பாண்டிக் கோவையும், நக்கீரரைப் பற்றிய சிறப்புரைகளும் பிறவும், நக்கீரர் காலத்துக்குப் பின் யாராலோ இவ்வுரை செப்பம் செய்யப்பட்டது என்பதைக் காட்டுகின்றன. நூல்வழி ஆராய்ந்து பார்த்தாலும் இவ்வுரை நக்கீரருக்குப் பின் பல கால்வழி வந்து கடைசியில் ஒருவரால் எழுதி வைக்கப் பெற்ற தென்பது நன்கு தெரியும். எனவே நூலின் போக்கையும், அமைப்பையும், பிற இயல்புகளையும் நன்கு ஆராய்ந்து கண்ட அறிஞர், ஒரு வேளை இந்நூல் உண்டாகி உரை சொல்லப் பெற்ற காலம், நக்கீரர் காலமாயினும் இன்றையவடிவில் அது அமைந்த காலம் எட்டாம் நூற்ருண்டே என அறுதியிடுவர்,

ஒரு மொழியின் நடை தூய்மையாக இருக்கவேண்டும் என்ருல், அது பிற மொழிகளின் கலப்பற்றதாக வேண்டும் என்றுதான் அனைவரும் கருதுகிருர்கள். ஆயினும் அறிஞர் திருகூட சுந்தரனுர் அவர்கள் [1] மிக எளிமை வாய்ந்ததே தூய்மையானது எனக் குறிக்கின்ருர். அதற்கு ஆக்ஸ்போர்டு அகராதியைத் துணைக்கு அழைக்கின்ருர். 'Chasle' என்ற சொல்லுக்கு 'Simple' Unadorned' போன்ற பொருள்கள் அதில் கூறப்பட்டிருப்பதை எடுத்துக் காட்டுகிருர். அதே சொல்லுக்கு இவ்விரண்டு சொற்களைக் கூறுமுன் Pure, Virgin, Restrained போன்ற உரைகள் இருப்பதைக் காட்டவில்லை. [2] இவற்றிற் கெல்லாம் அவர் என்ன பொருள் சொல்லக்கூடும்? பிற மொழிச் சொற்கள் கலந்தாலும் தவறில்லை; எளிமையாக இருப்பதே மொழிக்கு அழகு என்கிருர் அவர். ஆயினும் பிறமொழிக் கலப்பில்லாமலும் எளிமையும் கலந்தால் பொன் மலர் நாற்றமுடைத் தாகாதா? இந்த நிலை கொண்டு பார்த்தால் இறையனுர் களவியலுரை எளிமை இல்லாத நிலையுடன் வடமொழிக் கலப்பையும் மிகுதியாகப் பெற்ற நிலை எண்ணத் தக்கதுதான். இனி அதன் காலம் எட்டாம் நூற்ருண்டு என்துப பொருந்துமா? எனக் காண்போம்.

இறையனுர் உரையை எட்டாம் நூற்ருண்டிற்குக் கொணர்ந்தால், நக்கீரரும் அந்த நூற்ருண்டிற்கு உரியவராகி விடுவாரே என்று அஞ்ச நேரிடும். அதன் வழிக் கடைச்சங்க காலமே மாறும் என்ற நிலை உண்டாகு மல்லவா! ஆயினும் உரைவழி நோக்கின் அவ்வாறு எண்ணத் தேவையில்லை. அதில் உரை எவ்வாறு வளர்ந்து வந்தது என்பதை ஒரு பகுதி நமக்கு நன்கு எடுத்துக் காட்டுகின்றது. உரை நடை வளர்ந்து வந்த முறை இதுதான்.

> "மதுரைக் கணக்காயனுர் மகனுர் நக்கீரனுர், தம்மகனுர் கீரங் கொற்றனுருக்கு உரைத்தார்; அவர் தேனுர்கிழாருக்கு உரைத்தார்; அவர் படியங் கொற்றனுருக்கு உரைத்தார்; அவர் செல்லத்தாசிரியர் பெருஞ்சுவனுருக்கு உரைத்தார்; அவர் மணலூர் ஆசிரியர் புளியங்காய்ப் பெருஞ் சேந்தனுருக்கு உரைத்தார்; அவர் செல்லூர் ஆசிரியர் ஆண்டைப் பெருங் குமரனுருக்கு உரைத்தார்; அவர் திருக் குன்றத்தாசிரியருக்கு உரைத்தார்; அவர் மாதவனுர் இளநாகனுருக்கு உரைத்தார்; அவர் முசிறியாசிரியர் நிலகண்டனுருக்கு உரைத்தார்;இங்ஙனம் வருகின்றது உரை"

என்று இவ்வுரை வளர்ந்த வரலாற்றை இவ்வுரையே காட்டுகின்றது. எனவே இது உண்டான அந்த நக்கீரர் காலத்திலேயே எழுத்து வடிவில் உருப்பெற்று, ஆசிரிய மாணவ பரம்பரையில் காது வழியாக ஒருவர்

(1) சுதேசமித்திரன் தீபாவளி மலர் 182 (Nov'58) (2) Oxford Dictionary P 188

மற்றவருக்குச் சொல்லும் வகையில் வந்தது என அறிகிறோம். தோன்றிய நாள்தொட்டுக் கேட்டுவருபவர் பதின்மராகின்றார்கள். அதற்குப் பின்னும் அவ்வாறு வந்ததோ என எண்ண இடம் உண்டு. இவ்வாறு காது வழியாகக் கேட்ட உரை, தான் தோன்றிய காலத்திலிருந்து சுமார் அறுநூறு ஆண்டுகள் கழித்து, எழுத்து வடிவில் நூலாக உருப்பெற்றது என்று கொள்ளுதல் பொருந்தும். காது வழியாகக் கேட்டு ஒருவருக்கு மற்றவர் சொல்லும் வகையில் மாறுபட்டிருக்கக்கூடும் என்பதை மறுப்பார் யாரோ! நக்கீரரே இப்போது வந்து பார்ப்பாராயின் அந்த உரைக்கும் தமக்கும் யாதொரு தொடர்பும் இல்லை என்று, திட்டமாகச் சொல்லிவிடுவார் என்பது உறுதி. எனவே தோன்றியநாள் தொட்டு மாற்றம் பெற்றுக்கொண்டே வந்து, அந்த இடைக்காலத்தில் ஏற்பட்ட பல மாறுதல்களுக்கும் உள்ளாகி, வடமொழிச் சொற்களை அதிகமாகக் கலக்கப்பெற்றுத், தான்வெளிவந்த அந்த நூற்றாண்டிற்கு ஏற்ப, அக்காலத்து ஏற்பட்ட உதாரணப் பாட்டுக்களையும் உடன் கொண்டு வெளிவந்தது இவ்வுரை, எனக் கொள்ளல் பொருந்தும். உரை கூறிய முதல்வர் நக்கீரராக இருக்கப், பின்வந்த அவ்வுரைவழிப் புலவர்கள் அவருக்கும் நூலுக்கும் ஏற்றம்கூறி, அவற்றையும் சேர்த்து இறுதியாக வெளியிட்டவர், தம் கால நிலைக்கு ஏற்ப உரை முடித்தார் எனக் கொள்ளல் வேண்டும். இவ்வாறு கொள்வது பொருத்தமானதே. எனவே இதன் உரையாசிரியர் நக்கீரர் என்பதும் பொருந்தும் எனக் கருதுகின்றேன்.

இதன் ஆசிரியர் நக்கீரர் என்பது நூலின் முதலில் நன்கு காட்டப்பெற்றுள்ளது. அது அக்கால உரைநடையையும் காட்டப் பயன்படுமாதலால், இங்கு எடுத்துரைத்து மேலே செல்லலாம்.

'அரசனும் எதிர் சென்று' என்னை? நூற்குப் பொருள் கண்டீரோ? என, 'அது காணுமாறு காரணிகனைத் தரல் வேண்டும்.' எனப், போமின், நுமக்கோர் காரணிகனை நான் எங்ஙனம் நாடுவேன்! நீயிர் நாற்பத்தொன்பதின்மர் ஆயிற்று, நுமக்கு நிகராவார் ஒருவர் 'இன்மையின் அன்றே' என்று அரசன் சொல்லப் போந்து, கன்மாப் பலகை ஏறியிருந்து, அரசனும் இது சொல்லினான், யாம் காரணிகனைப் பெறுமாறு என்னைகொல்? என்று சிந்திப்புழி, சூத்திரஞ் செய்தான், ஆலவாயின் அவிர்சடைக் கடவுளன்றே. அவனையே காரணிகனைத் தரல் வேண்டும் எனச் சென்று வரங்கிடத்தும் என்று வரம் கிடப்ப, இடையாமத்து இவ்வூர் உப்பூரி குடிகிழார் மகனுவான் உருத்திரசன்மன் என்பான், பைங் கண்ணன்; புன்மயிரன்; ஐயாட்டைப் பிராயத்தான்; ஒரு மூங்கைப் பிள்ளை உளன்; அவனை அன்னன் என்று இகழாது கொண்டு போந்து, ஆசனத்தின்மேல் இரீஇக் கீழிருந்து சூத்திரப்பொருள் உரைத்தால், கண்ணீர் வார்த்து மெய்ம்மயிர் சிலிர்க்கும், மெய்யாயின உரை கேட்டவிடத்து; மெய்யல்லா உரைகேட்ட விடத்து வாளாவிருக்கும்; அவன் குமார தெய்வம்; அங்கோர் சாபத்தான் தோன்றினான்' என முக்கால் இசைத்த குரல் அனைவருக்கும் உடன்பாடாயிற்று; ஆக, எழுந்திருந்து, தேவர் குலத்தை வலங்கொண்டு போந்து, உப்பூரி குடி கிழாருழைச் சங்கமெலாம் சென்று, இவ்வார்த்தையெல்லாஞ் சொல்லி, ஐயனுவான் உருத்திரசன்மனைத் தரல் வேண்டும்' என்று வேண்டிக் கொடு போந்து, வெளியது உடீஇ வெண்பூச்சூட்டி, வெண்சாந்து அணிந்து, கல்மாப் பலகையேற்றிக் கீழிருந்து சூத்திரப் பொருள் உரைப்ப, எல்லாரும் முறையே பொருள் உரைப்பக் கேட்டு வாளாஇருந்து, மதுரை மருதனிள நாகனார் உரைத்த விடத்து ஒரோவிடத்துக் 'கண்ணீர் வார்ந்து, மெய்ம்மயிர் நிறுத்திப், பின்னர்க் கணக்காயனார் மகனார் நக்கீரனார் உரைத்த விடத்துப் பதந்தோறும் கண்ணீர் வார்ந்து, மெய்ம்மயிர் சிலிர்ப்ப இருந்தான். இருப்ப, ஆர்ப்பெடுத்து, மெய்யுரை பெற்றாம் இந்நூற்கு!' என்றார்.

இந்தத் தொடர் நக்கீரர் உரையாசிரியர் என்பதைக் காட்டுகிறது. அதனுடன் உரை

நடந்து செல்லும் விதத்தையும் இதிலிருந்தே கண்டறியலாம். ஒரே தொடராக, ஒன்றை ஒன்று பற்றிச் செல்வது போன்று, சற்றுக் கடின நடையென இன்று அனைவரும் கூறும் வகையில் இவ் வுரை நடை செல்லுகின்றது.

பாட்டிலிருந்து உரைநடைக்கு வந்த காலம் அது. பலரும் பாட்டை விரும்பிப் படித்திருக்கலாம். பாட்டு நடை உயர்ந்ததாய் அனைவருக்கும் எளிதில் விளங்காததாய் இருந் தது. உரை நடையும் அந்த நடையில் எழுதி னல் தான் சிறக்கும் என ஆசிரியர்கள் நினைத் திருக்கலாம். மேலே நாம் கண்ட உரை நடை இலக்கணத்துக்குப் பொருந்த விழுமிய நடை யும், ஒழுகிய ஓசையும் கொண்டு செல்லுகின் றது. மற்றும் பெரும் அகவற்பாக்கள் நீண்டு செல்வது போன்று, இவ்வுரை நடையும் மிக நீண்டு சென்று முடிகிறது. பாட்டில் அள பெடைகள் வருவன போன்றே ஈண்டும் அள பெடைகளைக் காண்கிறோம். சாதாரண உரை நடை அமைப்பிற் காணும் எழுவாய், பயனிலை, வைப்பு முறைக்கு ஏற்ப இன்றி முன் பின்னாக மாறிப் பாட்டிடைப் பயிலும் நிலையில் சிலவிடங் களில் அமைக்கப் பெற்றுள்ளன. இவ்வாறு இவ்வுரை நடை பல வகையில் பாட்டின் தன்மை ஒட்டி நின்றாலும்கூட,இது பாட்டன்று, என்று காணும் வகையில் உரை நடையாகவே செல்லுதல் உண்மை. இவ்வாறே இவ்வுரை நடை முழுவதும் செல்லுகின்றது.

இவ்வுரை நடைவழி எப்படி நூலுக்கு உரை கண்டார்கள் என்பது விளங்குகின்றது. அதனுடன் இது தோன்றியது சங்க காலத் தில் என்ற உண்மையும் தெளிவாகின்றது. சங்கப் புலவர் நாற்பத் தொன்பதின்மரும் இந் நூலுக்கு உரை கண்டார்கள் என்பதும், அவற்றுள் சிறந்தது நக்கீரர் உரையே என்ப தும், 'உருத்திரசன்மன்' கண்ணீர் வழி இது நிறுவப் பெற்ற தென்பதும் அறிகிறோம். இதைக் கொண்டே இவ்வுரை சங்க காலத் தியது என வாதிப்பர். அவர் கூற்றுப் பொருந் தாது. நக்கீரர் கூறக் கேட்டார் உருத்திரசன் மரே யன்றி. அதை நக்கீரர் எழுதி வைத்துப் பாதுகாக்க வில்லை. அவர் சொல்லிக் கொண்டே வந்தார், அனைவரும் கேட்டு அதுவே சிறந்தது என ஏற்றுக் கொண்டனர். பின் நக்கீரரே கீரங் கொற்றனுக்கு உரைக்க, அது வழிவழி வந்தது என உரையின் அடுத்த பகுதி கூறுகின்றது. நக்கீரர் எழுதி அறுதி யிட்டு வைத்திருப்பாராயின் இவ்வாறு பின் கூறப்படுவது எவ்வாறு பொருந்தும்? நக்கீரர் எந்த நடையில் உரை வகுத்தாரோ நாம் அறியோம். எனினும் அவர் வழிக் கேட்டுவந்த உரை, எட்டாம் நூற்றாண்டில் இன்று நாம் காணும் வகையில் எழுதப் பெற்று நிலைத்து விட்டது எனக் கொள்ளலாம். எனவே சங்க காலத்தில் தோன்றிய அந்த உரை, எட்டாம் நூற்றாண்டில், இடையில் உண்டான எல்லா வேறுபாடுகளையும் கொண்டு, இன்றும் காணும் வகையில் அமைந்து நின்றமையின், இந் நூலின் காலத்தை எட்டாம் நூற்றாண்டு என்று கொள்ளுவதே மிகவும் பொருத்தமான தாகும்.

தொல்காப்பியர் காலத்தில் செயப்பாட்டு வினை இல்லை. அது பின்னே தோன்றிற்று என்பர் இலக்கண நூலோர். ஆயினும் இவ்வுரையாசிரியர் முதற் சூத்திரத்துக் 'களவெனப் படுவது' என்பதன் உரையில் அப் 'படுவதால்' பெறுவது பொருட் சிறப்பு என்பதை எடுத்துக் காட்டுகின்றார். இன்னும் ஆங்காங்குப்பின் நன்னூலார் இலக்கணஅமை திக்கு ஏற்பவும், முந்துநூல் இலக்கணஅமைதி தழுவியும் தாமே பலவற்றிற்கு இலக்கணம் காட்டிச் செல்லுதல் அறிந்து மகிழத்தக்கதாகும்.

இவ்வுரையில் வடமொழிச் சொற்கள் அதிகமாகப் பயிலப் பெறும் என்பதை மேலே கண்டோம். நாம் காட்டிய சில உதாரணப் பகுதிகளிலே அவ்வுண்மை தெற்றென நன்கு தெளிவுறும். சிட்டர், (6) பிராமணன், (7) மூத்திரபுரீடம், (10) வாசகம், (59) பரியம் (140) போன்ற சொற்கள் உரைநடையில் பலவாக விரவி உள்ளமையும் காண்கின்றோம்.

மதுரை ஆவணிஅவிட்டம்,உறையூர்ப்பங்குனி உத்திரம், கருவூர் உள்ளி விழா போன்றனவும் (பக் 101) இவ்வுரையில் எடுத்தாளப் பெறுகின்றன. இவ்விழாக்களைப் பற்றி நாம் சங்க இலக்கிய நூல்களில் காண்கின்றோமில்லை. மிக நீண்ட பாடலாக அமைந்த மதுரைக் காஞ்சியிலே ஆவணி அவிட்ட விழா குறிக்கப் பெற்றிலது. பிற்காலத்தில் ஏழாம் நூற்றாண்டில் தேவாரத்தின் வழி கோயில்கள் பெருக, அவற்றில் ஆற்றப்பெறும் விழாக்களுள் இவை சிலவாக அமையும் என்று கொள்ளல் பொருந்துவதாகும்.

இனி இவ்வுரையில் மேற்கோளாக எடுத்தாளப்பெற்ற பாண்டிக்கோவையைக் காண்போம். கோவை நூல் சங்க காலத்தே அறியாத ஒன்று. நக்கீரர் இக்கோவையை மேற்கோளாகக் காட்டி இருக்க மாட்டார். இவ்வுரை வழிவழியாகத் தொடர்ந்து வருங்கால் இடையிலே யாரோ ஒரு புலவர்–கோவை இலக்கணம் தோன்றி வாழ்ந்த காலத்திருந்த புலவர், இந்தக் கோவையை எழுதியோ அன்றிச் சேர்த்தோ உரைக்கும் ஏற்றம் தேடி வைத்தார் என்பது பொருந்தும். பின் இவ்வுரை ஏட்டிடை எழுதப் பெறுங் காலத்து இப்பாட்டுக்களும் சேர்க்கப் பெற்றே இருக்க வேண்டும் என்பது மட்டும் தெளிவு. இப்பாண்டிக் கோவையில் வரும் பல நிகழ்ச்சிகள் காலத்தால் பிந்தினவாகவே வேண்டும். அதில் கூறப்பெறும் போர்களுள் பல சங்க காலத்தில் குறிக்கப் பெறாதவை. ஓர் அரசனைப் பற்றிப் போற்றும் இத்துணைப் பெருநூலே சங்ககாலத்துக்குப் பின் நெடுங்காலம் கழித்துத் தோன்றியிருக்க வேண்டும். ஆகவே பாண்டிக்கோவை நூலமைப்பே உரை, காலத்தில் பிந்தியது என்பதைக் காட்டும். அதில் குறிக்கப் பெறும் போர்களின் பெயர்கள் அவ்வாறாகவே சங்க காலத்துக்குப் பிந்தினவே என்னுமாறு அமைகின்றன.

இவ்விலக்கியத்தில் போற்றப்படும் பாண்டியன் யார் எனத் திட்டமாகக் காண முடியாவிடினும் பராங்குசன் (87), அரிகேசரி (203), நெடுமாறன் (109), நெல்வேலி வென்றான் (109), சத்துருதுரந்தான் (201), முதலிய பெயர்களால் குறிக்கப் பெறுகிறான். இவற்றுள் சில பெயர்கள் சங்ககாலத்தை ஒட்டியன எனக் கருத வாய்ப்பு உளவேனும் அவர் தம் செயல் வழி அக்கருத்துப் பொருந்தாது என்னலாம். நெடுமாறனைக் குறிக்கும் பாட்டில் அவன் நெல்வேலி வென்றான் எனக் குறிக்கப் பெற்றுள்ளான். இது திட்டமாக ஏழாம் நூற்றாண்டில் ஞானசம்பந்தர் காலத்து வாழ்ந்த நின்ற சீர் நெடுமாறனைக் குறிக்கும் என்பது சுந்தரர் தேவாரத்தால் [1] அறியலாம். பிறரைப் பற்றியும் அவ்வாறே. இதில் சந்துருதுரந்தன் என்று பாண்டியன் பெயரும் குறிப்பிடப் பெறுகின்றது. இவ்வடமொழிப்பெயர்கள் சங்ககாலத்தில் இல்லை. இக்கோவையில் பல போர்க்களங்கள் குறிக்கப் பெறுகின்றன. அவற்றுள் விழிஞம் (62), ஆற்றுக்குடி (43), கடையல் (41), கோட்டாற்று அரண் (88), வல்லம் (40), பூலந்தை (58), பாழி (29), நறையாறு (69), வெண்மாத்து (45), நெல்வேலி (53), சங்கமங்கை (205), செந்நிலம் (67), நெடுங்களம் (189),குளந்தை(300),முதலியன முக்கிய இடம் பெறுகின்றன. இவை அனைத்தும் பாண்டியன் ஒருவனே போரிட்டு வெற்றி கொண்டானா? அன்றி அவன் பரம்பரையில் பலர் கொண்ட வெற்றியை இவை குறிக்கின்றனவா? என்பது திட்டமாகத் தெரியவில்லை. எப்படியாயினும் சோழ சேரமன்னரையும், பல சிற்றரசர்களையும் தோற்கடித்துப் பெரு மன்னனாக வாழ்ந்தவன் இப்பாண்டிக் கோவைக்குத் தலைவன் என்பது தேற்றம். எனவே வடக்கே பல்லவர் சிறந்தோங்கிய காலத்தில் தெற்கே பாண்டியர் நிலையும் ஓங்கியிருந்தது என நாம் காண்கின்ற வரலாற்று நெறியில் நின்று நோக்குவோமானால், நின்றசீர் நெடுமாறன் காலத்தோ, சற்றுப் பின்னோ எழுந்த இப்பாண்டிக் கோவை அகப்பொருள் உரைக்கு எடுத்துக்காட்டாக அமைய, அடுத்த எட்டாம் நூற்றாண்டில் இந்நூல் எழுத்து வடிவில் உருவாயிற்று என்னலாம்.

---

1 சுந்தரர் தேவாரம் திருத்தொண்டத்தொகை,
'நிறைகொண்ட சிந்தையால் நெல்வேலி வென்ற
நின்ற சீர் நெடுமாறன் அடியார்க்கு மடியேன்

முடிவு கூறுமுன் இந்நூல் தோன்றிய வழியையும் சிறிது எண்ணிப்பார்க்கவேண்டும். பெரும் பஞ்சம் நேர்ந்தபின் பொருளதிகாரம் காணுது கவன்ற பாண்டியன் மனக்கவலையை மாற்றுவதற்காக,மதுரைச் சொக்கேசர், இந்தச் சூத்திரத்தைச் செய்து வாயிற்படியில் வைக்க, மறுநாள் திருக்கோயில் வழிபாடு செய்பவன் கையில் அது கிடைக்கப் பின், அதை அரசன் பெற்று, மேற்கண்டவாறு சங்கநூற் புலவர்களைக் கொண்டு உரை செய்தான் என்ற வரலாற்றை, இவ்வுரையே நமக்குத் தருகின்றது. அது எத்துணைப் பொருத்தம் என்பது நமக்கு ஈண்டு ஆராய்ச்சிக்குத் தேவையில்லை. என்ருலும் தமிழ் நாட்டில் பொருளதிகாரம் வழக்கத்தில் இல்லாத ஒரு காலத்தில் இந்நூல் தோன்றிற்று என்று கொள்ளல் பொருந்தும். தொல்காப்பியப் பொருளதிகாரம் நாட்டில் இருந்திருப்பின் இதை மக்கள் விரும்பி இருக்க மாட்டார்கள். இன்றும் நாட்டில் தொல்காப்பியப் பொருளதிகாரம் மக்கள் உள்ளத்தில் இடம் பெற்ற அளவுக்கு இந்நூல் பெறவில்லை என்னலாம். இதை இறையனுர் என்ற புலவர் ஒருவர் செய்தார் என்று கொள்வது பொருத்தம் என்றும், கடவுளே செய்தார் என்று கொள்வது பொருத்தம் இல்லை என்றும் இன்றைய ஆராய்ச்சி உலகம் கொள்ளுகிறது. எப்படியாயினும் தொல்காப்பியத்தை நோக்க இந்நூல் சிறந்த ஒன்றன்று என்பது புலவர் துணிபு.

இவ்வுரை தமிழ் உரைநடை வளர்ச்சியில் ஒரு மைல் கல்லாகும். சங்ககாலத்தில் உரைநடை நூல்கள் இல்லை. தொல்காப்பியத்தில் உரைநடை பற்றிய குறிப்பு வருகிறது. சிலப்பதிகாரம் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாகின்றது. முதன்முதல் பேருரைநடை நூலாக அமைந்தது இவ்விறையனுர் களவியல் உரையே என்னலாம். இதுவும் தொடர்ந்த உரைநடை நூலாகாது, பாட்டுக்கு உரை கூறுவதாய், அதன் வழிப் பல மேற்கோள் பாடல்களைக் கொண்டு அமைந்துள்ளது. இதன் உரைநடையும், பாநடையை ஒத்து எதுகை மோனையும் ஓசையும் கொண்டு, அளபெடை முதலிய செய்யுள் இலக்கணம் தழுவிப், பல வடமொழிச் சொற்களை உடன் கொண்டு எழுதப் பெற்றதாக அமைகின்றது. அடுத்து வரப்போகின்ற பெரும் உரையாசிரியர்களுக்கெல்லாம் வழிகாட்டியாகவும், வடமொழியும் தமிழும் கலந்து நின்ற ஈடுபோன்ற மணிப்பிரவாள நடைக்கு வித்திட்டதோ என்னுமாறும் இவ்வுரை செல்லுகிறது என்பர் சிலர். வைணவ நூலாகிய ஈடொன்றைத் தவிர்த்து மற்றவை மணிப்பிரவாள நடையில் இல்லை. இந்நூலும் வடமொழியை அதிகமாக எடுத்தாளினும் நடையில் தமிழாகவேஅமைகின்றது. எனவே இது வடமொழிச் சேர்க்கைக்கு இடந்தந்தது என்று கூறுவதல்லது, மணிப்பிரவாள நடை, இதன் அடி ஒன்றி எழுந்தது என்பது பொருந்தாது. மற்றத் தொல்காப்பியம், சிலப்பதிகாரம் முதலியவற்றிற்கு உரை செய்த பேராசிரியர்களுக்கெல்லாம் இவ்வுரைநடை ஒரு வழிகாட்டியாக அமைகின்ற தென்பதை யாரே மறுக்க வல்லார்! இரண்டு சூத்திரத்திற்கு அறுபது பக்கம் அளவு விரிந்த உரை எழுதும் இவ்வுரையாசிரியர் திறனைப் போற்ருதிருக்க முடியுங்கொல்! அதுவும் உரைநடை சிறக்கத் தோன்ருத அந்தக் காலத்தில், இத்துணை அழகாகத் திறம்பட உரை எழுதித் தனக்குப் பின் வரும் அனைவருக்கும் வழிகாட்டியாகத்—தமிழ் உரைநடைப் பாதையிலே ஒரு சிறந்த மைல் கல்லாக அமைந்த இவ்விறையனுர் களவியலுரையை அறிஞர் அறிந்து, ஆய்ந்து, அமைந்து பயில்தொறும் இன்பம் காண்பார்களாக!

மறை வினைகள்

டாக்டர் வி. ஐ. சுப்பிரமணியம், எம். ஏ., பி. எச். டி., (Lnd. U. S. A.)
தமிழ்த்துறைத் தலைவர், கேரளப் பல்கலைக் கழகம்.

0. தமிழ் வினைகள் இரு வகைப்படும்: உடன்பாடு, மறை அல்லது எதிர் மறை. மறைப் பொருள், வினை மூலமாகவும், விகுதி மூலமாகவும் உணர்த்தப்படுகிறது. வினை மூலமாக உணர்த்தப்படும் மறைப் பொருள், பெரும்பாலும் கேட்பார் உளநிலையைப் பொறுத்தும், சூழ்நிலையைப் பொறுத்தும் தோன்றுகிறது. எனவே, அது இலக்கண வரம்பிற்குள் அடங்காது. அதனால், விகுதி மூலம் உணர்த்தப்படும் மறைப்பொருளை மட்டும் விரிவாக இங்கு ஆராய்வோம்.

0–1 மறை விகுதிகளைப் பற்றி, நமது நவீன இலக்கண ஆசிரியர்கள், திராவிடமொழி ஒப்பிலக்கண ஆசிரியர்கள் ஆகியவர்களிடையே மாறுபாடு தென்படுகிறது; இம் மாறுபாட்டை இரு வகையாகப் பகுக்கலாம்: ஒன்று மறை விகுதிகளின் உருவம், எண்ணிக்கை ஆகிய இரண்டும் பற்றிய மாறுபாடு; இரண்டு அவற்றின் தோற்றம். இவ்விரு பிரிவுகளில் மட்டுந்தான் நாம் இங்கு ஆராயப் போகிறோம். பின்னதைப் பற்றி இப்போது ஒன்றும் கூறப்போவதில்லை.

1. பதச்சேதம் செய்யும் போது, நாம் சில விதிகளைப் பின்பற்றுகிறோம். அவற்றுள், முக்கியமான மூன்றை மட்டும் இங்குக் கூறுவோம். முதலில் ஒரு வார்த்தையைப் பிரித்து அதன் பிரிவுகளுக்கு இலக்கண விளக்கம் கூறும்போது, எந்தப் பிரிவையும் விளக்கம் கூறாது விடுவதில்லை. இதை ஓர் உதாரணத்துடன் விளக்குவோம். உண்ணாதே என்ற பதத்தைப் பிரிக்கும் போது, உண் (ண்)-பகுதி –ஆ மறை விகுதி, –ஏ முன்னிலை யொருமை ஏவல் என்று கூறுவது வழக்கம். இந்த விளக்கத்தில் தகர ஒற்று விடப்பட்டுள்ளது. இதற்கு, என்ன இலக்கணப் பொருள் என்று கூறப்பட்டாக வேண்டும். இல்லையெனில் இந்தப் பதச்சேதம் குறைபாடுடையதாகும். இவ்விதியை 'முற்ற உரைத்தல்' [1] என்றழைப்போம். இரண்டாவது, பதச்சேதம் செய்யும் போது ஓரிடத்தில் ஒரு வகையாகவும், இன்னோரிடத்தில் இன்னொரு வகையாகவும் பகுத்துக் குழப்புவது கூடாது. வேறுவகையாகப் பிரிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டால், அதற்குரிய காரணத்தை, அந்த இடத்திலேயே விளக்கியாக வேண்டும். முன் தந்த எடுத்துக் காட்டைச், சில காரணங்களுக்காக, உண் (ண்) + ஆத் + ஏ எனப் பிரித்தால், அந்தப்பதம் வரும் இடங்களிலெல்லாம் இந்தப் பிரிவையே கையாள வேண்டும். இடத்திற்கேற்பக் காரணமின்றி வெவ்வேறு வகையில் பிரித்தல் கூடாது. இவ்விதியை 'முரணாது உரைத்தல்' என்று அழைப்போம். மூன்றாவது, மொழியொருமைப்பாடுடைய ஓர் உத்திஎன்றநினைவுடன்பதச்சேதம் செய்யவேண்டும். மொழியின் இலக்கணம் பல உறுப்புகளைக் கொண்டது. அந்த உறுப்புக்கள் அனைத்தும் தம்முள் இயைந்து உள்ளொற்றுமையுடன் இயங்குகின்றன. எனவே, அந்தஉறுப்புக்களில் ஒன்றை இலக்கண இயைபினின்றும் நீக்கிப் பதச்சேதம் செய்து காட்டுவது கூடாது. ஒரு பதத்தைப் பிரித்து விளக்கம் கூறும்போது, அதைப் போன்ற மற்றுள்ளபதங்களுக்கும், இலக்கணத்தின் மற்றுள்ள பாகங்களுக்கும் அந்த விளக்கம் பொருந்துமா? என்றும் கூர்ந்து நோக்க வேண்டும். இல்லையெனில், நமது விதிகள் பல முரண்பாடுடை

1. தெளிவின் நிமித்தம் மொழி இயல் வழக்குகளைக் கையாண்டிருக்கிறேன். மேலும் விளக்கம் வேண்டுவோர் கலைக்கதிர் 1958 ஏப்ரல் மாதம், பக்கம் 19 முதல் காணும் 'அமெரிக்க நாட்டு மொழியியல் படிப்பு' என்ற கட்டுரையைப் பார்க்க.

யனவாக மாறிவிடும். இந்தமூன்ருவது விதியை 'ஒருமைப்பாடு நோக்கல்' என்றழைப்போம்.

1-1 கால்டுவெல், ஷீல் பிளாக் முதலிய ஒப்பிலக்கண ஆசிரியர்கள் மறைவினைகளைப் பற்றி ஆராய்ந்திருக்கின்றனர். அவர்களுடைய கருத்தில் சில முரண்பாடும், மயக்கமும் காணப்படுகின்றன. இதற்கு முக்கிய காரணம், முன் சொன்ன மூன்று விதிகளில் ஒன்றையோ அல்லது மற்ருென்றையோ புறக்கணித்ததால், என்று கூறலாம்.

2. முன் குறிப்பிட்ட விதிகளின் அடிப்படையில் பழைய தமிழ்மொழியின் பிரதிநிதியாகப் புறநானூற்று உருவங்களையும்,[2] தற்காலத் தமிழின் பிரதிநிதியாகப் பேச்சுவழக்கொன்றின் உருவங்களையும்[3] பதச்சேதம் செய்து அவற்றிற் காணும் மறைவிகுதிகளின் எண்ணிக்கையை அறுதியிட்டு, முன் குறிப்பிட்ட பெரியார்களின் கருத்தோடு ஒப்பிட்டுப் பார்ப்பதே நம் நோக்கம்.

2-1 புறநானூற்றில் முற்று வினை, பெயரெச்சம், வினையெச்சம், வினையாலணையும் பெயர், தொழிற் பெயர் ஆகிய வினைப் பகுப்புகளில் மறைப்பொருள்காணப்படுகிறது.

2-2 முற்று வினைகளில் காணும் மறை உருவங்களை, உடன்பாட்டு உருவங்களுடன் கீழே தருகிருேம். அறிந்தேன்—அறியேன் (86-3), வருவேம்—வாரேம் (145-4), ஒல்லவை —ஒல்லாய் (31-6), திரிந்தீர்—திரியீர் (58-21), உண்டனன்—உண்ணுன் (184-11), அணிந்தனள்—அணியாள் (242-3), உதவும்—உதவாது (18-26), ஒல்லுவர்—ஒல்லார் (153-12), உடுப்ப—உடா (141-10) இவ்வெடுத்துக் காட்டுகளிலிருந்து, உடன்பாடும் மறையும் இருவழிகளில் மாறுபட்டிருக்கின்றன, என்று அறியலாம்: ஒன்று, காலங்காட்டும் விகுதிகள், மறை உருவங்களிலில்லை. இரண்டு, இடம், பால், எண் காட்டும் விகுதிகள் மறை உருவத்தில், குறிப்பாகப் படர்க்கையிடத்தில் நீண்டிருக்கின்றன. படர்க்கை இடத்தில் இடம், பால், எண் காட்டும் விகுதிகள் புறநானூற்றில் சில இடங்களில் நீண்டு வந்திருப்பதும் இங்கே அறியத்தக்கது. ஆனுல் உடன்பாட்டில் இவ்வுயிர்கள் எப்போதும் கால இடைநிலைகளுக்கு அப்புறமே வருகின்றன. மறை வினைகளில் இவ்வுயிர்கள், வினையடிக்கு அப்புறமே வந்திருக்கின்றன. எனவே, உடன்பாட்டில் இடம், பால், எண் உணர்த்திவரும் நெட்டுயிர் வேறு; மறைவினையில் வரும் நெட்டுயிர் வேறு. மறைப் பொருளைக் காட்டுவதால், பின்னதிலுள்ள நெட்டுயிரில் மறைவிகுதி சேர்ந்திருப்பதாகக் கொள்ளலாம். எனவே, படர்க்கையிட உருபான ஆகாரத்தின் முதற் கூருன குறுகிய அகரம், மறை விகுதியாகும். தன்மையில், ஏகாரத்தின் முதற் கூருன குறுகிய எகரமும் மறையை உணர்த்தும். முன்னிலை ஒருமையில் ஆகாரத்தின் முதற் கூருன குறுகிய அகரமும் மறையை உணர்த்தும். முன்னிலைப் பன்மையில் ஈகாரத்தின் முதற் கூருன குறுகிய இகரமும் மறைப்பொருள் உணர்த்தும். சுருங்கச் சொன்னுல், அகரத்தின் முன் அகரமும், எகரத்தின் முன் எகரமும், இகரத்தின் முன் இகரமும் மறைப் பொருளையுணர்த்தும். இவை மூன்றும், ஒன்றின் மாற்றுருவங்களே. பின் வரும் உயிரெழுத்திற்கு ஏற்ப இந்த மூலவிகுதியின் உருவமும் மாறுபடுகின்றது.

2-3 வினையெச்சப் பகுப்பில்—ஆத் என்பது மறைப்பொருளை உணர்த்துகின்றது. அறிந்து—அறியாது (70-8). இந்த மறை விகுதி–ஆத்–, வினையெச்ச விகுதியான உகரத்தின் முன் வருகிறது.

---

2. புறநானூறு, உ. வே. சு., மூன்ரும் பதிப்பு. முதலில் குறிப்பது பாட்டெண். இரண்டாவது குறிப்பது வரியெண். இங்கு எடுத்தாளும் உருவங்களனைத்தும் கேரளப் பல்கலைக்கழகத்து ஆராய்ச்சித்துறையில் உருவாகிவரும் சங்க இலக்கியங்களின் விவரண இலக்கணத்தில்' இருந்து எடுக்கப்பட்டவை.

3. கன்னியாகுமரி மாவட்டத்தில், நாஞ்சில் நாட்டு வேளாளரிடையே காணும் தமிழ் வழக்கே இங்கு ஆராயப்பட்டிருக்கிறது. இங்குக் காட்டிய உருவங்களனைத்தும் இந்தியானுப் பல்கலைக் கழகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட என் டாக்டர் பட்ட ஆராய்ச்சி நூலில் இருந்து எடுக்கப்பட்டவை.

2-4 பெயரெச்சத்தில் முன் குறிப்பிட்ட—அ—கரமே மறைப்பொருளை உணர்த்துகிறது. ஓடிய—ஓடா (126-4). இங்கே மறை விகுதி—அ — கரம், பெயரெச்ச விகுதியான—அ-கரத்தின் முன்னே வருகிறது. ஓடாத என்ற பெயரெச்ச வழக்கு புறநானூற்றில் காணப்படவில்லை.

2-5 வினையாலணையும் பெயரிலும்-ஆத்—உருவமே காணப்படுகிறது. அடங்கியோர்—அடங்காதோர் (35-34). இதில், படர்க்கை இடத்தைக் குறிக்கும் —ஓ—காரத்தின் முன்—ஆத்—வருகிறது.

2-6 நமது இலக்கண ஆசிரியர்களுக்குள்ளே வீரசோழிய ஆசிரியர்–ஆது என்பதை மறை விகுதியாகக் கொள்கிறார். (சொல்-2- சூத்-11). ஆனால்–ஆது–விகுதி வருமிடமாக அவர் கருதுவது வேறாகும். பெயரெச்சத்திலும் வினையெச்சத்திலும் வரும்–ஆத் என்பதை, த,து என முறையே பிரித்து, இறந்த கால எச்சங்களாக்கிக் கூறுவது முண்டு. முன்னர்ப் பார்த்த இடங்களிலெல்லாம், மறை விகுதி–அ–கரம், காலங் காட்டும் இடைநிலை நின்ற இடத்தில் வருகின்றதே ஒழிய, அதற்கு முன்னோ பின்னோ வரவில்லை. மேற்குறித்த பதச்சேதத்தை ஏற்றுக் கொண்டால், கால இடைநிலை எதிர்மறை விகுதிக்கு அப்புறம் வரும் எனக் கூற நேரிடும். இவ்வாறு கூறுவது வினையமைப்பில் காணும் விகுதி ஒழுங்கைக் குலைத்துக் கூறுவதாகும். அல்லாமலும், தகரம் இறந்த காலம் ஆயின், அதைப்போல் நிகழ் காலத்திற்கும் அது பொருந்தி வரவேண்டும் என்று எதிர்பார்ப்பது இயற்கையே. ஆனால் உண்ணுகிற என்ற உருவம் எங்கும் காணப்படவில்லை. யாரேனும் அதை உச்சரித்தால், உடனே அது தமிழ் அன்று என்றும் சொல்லத் தோன்றுகிறது. எனவே, மேற் குறிப்பிட்ட தகரம் இறந்த கால இடைநிலை யன்று. சிலர் இதனை எழுத்துப் பேறு என்பர்: அதாவது, ஆகாரமாகிய எதிர் மறையோடு ஒட்டிவரும் அவசியமற்ற வழக்கெழுத்து என்பர். இந்த முடிவிற்கும், நம் கருத்திற்கும் நெடுந்தொலைவில்லை. நாம் இந்தத் தகர ஒற்றினை மறை விகுதியின் பகுதியாக்கிக் கூறுகிறோம்: அவ்வளவு தான் வேறுபாடு.

2-7 தொழிற் பெயரில் வரும் மறை விகுதியும் அகரமே. இது தொழிற் பெயர் விகுதியான அமையின் முன்பு வருகிறது. போற்றியமை — போற்றாமை (28–17).

2-8 புறநானூற்றில் சில வழக்கு அருகிய வினையெச்சங்கள் காணப்படுகின்றன. வெருவா (238–2), படாஅ (103–9) முதலியவை அவற்றுள் சில. இவை, வெருவாது, படாது எனும் பொருளில் இங்கு வந்திருக்கின்றன. இவற்றில் வரும் ஆகாரத்தை மறை விகுதியாக நாம் கொள்கிறோம். இது, வினையெச்ச விகுதியான உகரம் இருந்துகெட்ட நிலைக்கு முன்னே வருகிறது. இந்த ஆகார இடைநிலை, வினையடிக்கு அப்புறம், படர்க்கை இடத்தில், எந்த விகுதியும் ஏற்காமலும் வந்திருக்கின்றது. கொள்ளா (92–1).

2-9 அல், இல் என்னும் மறை விகுதிகளும் புறநானூற்றில் காணப்படுகின்றன. அல், இல்—லை விடவும் கூடுதல் வழக்காறு பெற்றிருக்கின்றது. அல்—லும், அகரமும் இடவிகுதிகளுக்கு முன்னர் ஒன்றோடொன்று மயங்கி வருகின்றன. கேளலம்—கேளேம் (76–3), உள்ளலெம்—உள்ளேம் (150–3) கூறலன்—கூறான் (239–7), தேறலை—தேறாய் (10–2), கொள்ளலர்—கொள்ளார் (182–6).

2-10 ஆனால் முன்னிலைப் பன்மை விகுதியான மின், மார் ஈறு ஆகிய இரண்டின் முன், அல் மட்டுமே வரும். கொள்ளன்மின் (216-5) கேளன்மார் (389–17). அல்விகுதி, தடைப் பொருள் உணர்த்தி வேறொரு விகுதி ஏற்காமலும் தன்மை முன்னிலைகளில் வருகின்றது. பெயரல்—(3–14).

2-11 ஆல் விகுதி உறு என்னும் வினையடியின் பின்னும் வியங்கோள் விகுதியான க—வின் முன்னும் வருகின்றது. உறற்க (171–13).

2-12 இல்—லும் அல்—லும் மயங்கியும் வருகின்றன. உன்னலன், உன்னிலன்(310-6).

2-13 இல் மட்டும் ஓரிடத்தில் கால இடைநிலையை அடுத்து வருகிறது. இவ்வுருவம் பிற்கால இலக்கியத்தில் மிகுதியாகக் காணப்படுகிறது. போர்ப்பித்திலது (286-5).

2-14 அல், இல் அடியாகப் பிறந்த பதங்களின் சேர்க்கையால், மறைப்பொருள் உணர்த்துவதும் புறநானூற்றில் காணப்படுகின்றது. விகுதிகளான அல், இல் இரண்டிற்கும், அடிச் சொற்களான அல், இல் ஆகிய இரண்டிற்கும் எவ்விதப் பொருள் வேறுபாடு இல்லையெனினும், ஒன்று விகுதியாகமட்டும் வழங்குவதாலும், மற்றொன்று அடிச்சொல்லாக மட்டும் வழங்குவதாலும் இரண்டையும் வெவ்வேறு வகுப்புக்களில் அடக்கி வகைப்படுத்தியிருக்கிறோம். இல்லாத்திணை (27-3) என்ற பெயரெச்சத் தொடரில், அகர எதிர்மறை விகுதி மீண்டும் வருவதால் இல்லும் அகரமும் எதிர் மறையை, இருமுறை உணர்த்துவதாகக் கொள்ளவேண்டும். இல்லையெனில், ஆகாரத்தைப் பெயரெச்ச விகுதியாகக் கொண்டு துன்புற நேரிடும்.

2-15 இதுவரை பார்த்த மட்டில், புறநானூற்றில் மறைவிகுதியாக அகரம் ஒன்றே உண்டென்றும், அதன் வேற்றிட உருவங்களாக எகரம், இகரம், அகரம், ஆத், ஆ, அல், ஆல், இல் ஆகிய எட்டும் உண்டென்றும், அவற்றுள், இல் மட்டும் கால இடைநிலைகளை அடுத்துவரும் இயல்புடையது என்றும், ஏனைய ஏழும் வினையடியை யடுத்துக் கால இடைநிலை நின்ற இடத்தில் வருவன எனவும் கண்டோம். தெளிவான வினை உருவங்கள் புறநானூற்றில் இந்த அமைப்பையே கொண்டிருக்கின்றன.

3. வழக்கு வீழ்ந்த சில வினை முற்றுக்கள் புறநானூற்றில் காணப்படுகின்றன. உண்கும் (125-4) = நாம் உண்போம், கேட்டீ (289-8) = நீ கேட்பாய் முதலியவை அவற்றுள் இரண்டு. பிற சங்க இலக்கியங்களில் உண்கு = நாம் உண்பேம், சென்றி = நீ செல்வாய், காண்டி = நீ காண்பாய், சேர்தி = நீ செல்வாய், முதலிய உருவங்கள் தன்மை முன்னிலை இடங்களில் காணப்படுகின்றன, தொல்காப்பியர் வினையியலில் கும், டும், தும், றும், கு, டு, து, று ஆகிய எட்டும் முறையே பன்மைக்கும் ஒருமைக்கும் உரிய தன்மைவிகுதிகளாகக் கொள்கின்றனர்.[4] ஆனால் டி, றி, தி, ஆகியவற்றை முன்னிலை ஒருமை விகுதியாகக் கொள்ளாது இகரத்தையே கொள்கிறார்.[5] முன்னிலையில் இந்த இகரத்தின் முன் வரும் ஒற்றெழுத்துக்களின் நிலையைப் பற்றித், தொல்காப்பியரின் கருத்து எதுவோ என்று அறிதற்குச் சூத்திரச் சான்றில்லை. உரையாசிரியர் கருத்துக்கள்தாம் கிடைக்கின்றன. ஆனால் இவற்றைப் பதச் சேதம் செய்தற்கு மறைவிகுதிகள் வழிகாட்டுகின்றன. உண்டி என்பதன் மறை உருவம் உண்ணுது என்பதாகும். கேட்டீ—கேளாதி, சென்றீ—செல்லாதி எனவே உடன்பாட்டிலுள்ள த், ட், ற், க் ஆகிய நான்கு ஒற்றுக்களும் கால இடை நிலைகள் என்பது மறைவிகுதியால் விளங்குகிறது. ஏனெனில், மறைவிகுதிகளில் இல் ஒழிந்த ஏனையவை, கால இடைநிலைகள் நின்ற இடத்தில் தான் வரும். அவ்வாறாயின், க், த், ட், ற், ஆகியவை நான்கும் எதிர்கால இடை நிலைகள் என்று கருத வேண்டிய நிலை ஏற்படுகிறது. நன்னூலார், 145-ம் சூத்திரத்தில்[6] று, து, றும், தும் ஆகிய நான்கும் இறந்த காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் வரும் என்பது இங்கே நினைவுகூரத் தக்கது.

3-1 மின், மார் வியங்கோள் விகுதியான க முதலியவற்றையும், ம் + இன், ம் + ஆர், க் + அ என்று பிரித்து மகரமும் ககரமும் எதிர் காலங்காட்டும் என்று கூறுவது தவறு என்பதை,மறைவிகுதிகளின்இடவரவால்அறியலாம்: கேளன்மார் (389-17) கொல்லன்மின் (216-5) உண்ணற்க ஆகிய எடுத்துக்காட்டு

4. தொல்-சொல் 204/205 நச்சினார்க்கினியர் உரை, பவானந்தர் பதிப்பு 1941.
5. தொல்-சொல் 225 நச்சினார்க்கினியர் உரை, முன் சொன்ன பதிப்பு.
6. நன்னூல்-உ. வே. சா. நான்காம் பதிப்பு, 1953.

களில் மகரமும் ககரமும் மறைவிகுதியை அடுத்து வருவதால் அவற்றைக் காலங்காட்டும் இடை நிலைகளாகக் கொள்ளக்கூடாது.

3-2 இதனல் தமிழ் வினையமைப்பில் மறைவிகுதிகள் எவ்வளவு முக்கிய இடத்தை வகிக்கின்றன என்பதும் தெரிய வரும்.

4. பேச்சுத் தமிழில் பதச்சேர்ப்பால் மறைப் பொருளுணர்த்தும் பழக்கம் கூடுதலாகக் காணப்படுகிறது. இல்லே, மாட்—, கூட்–, வேண்ட்–, முதலிய பகுதிகள் இதற்குப் பயன்படுகின்றன. இறந்த காலத்திலும், நிகழ் காலத்திலும் மறைப்பொருளை உணர்த்த இல்லேச் சொல் உபயோகப் படுத்தப்படுகிறது. சாப்பிட்டேன்—சாப்பிடவில்லை. சாப்பிடுகிருன்—சாப்பிடவில்லை. வருங்கால மறையை உணர்த்த மாட்—பயன்படுகிறது. வருவான்–வரமாட்டான். ஆனுல் இந்த வினையடி உயர் திணையில் மட்டுமே வருகின்றது. அஃறிணைக்கு மறைவிகுதிகள் பயன்படுத்தப் படுகின்றன. வரும்—வராது. மாட்டான் என்ற சொல்லில் மறைப்பொருளை உணர்த்துவது படர்க்கை விகுதியான அகரத்தின் முன்னுள்ள அகரமே. மாட்டேன் என்பதில் தன்மை இடவிகுதியான எகரத்தின் முன்னுள்ள எகரமே. மாட்டோம் என்பதில் தன்மை இடவிகுதியான ஒகரத்தின் முன்னுள்ள ஒகரமே: மாட்டீர் என்பதில் முன்னிலை இடவிகுதியான இகரத்தின் முன்னுள்ள இகரமே. மற்ருெரு மறைவிகுதியான—ஆத்—, ஏவல் ஒருமை விகுதியான ஏகாரத்தின் முன்னும் பெயரெச்ச விகுதியான அகரத்தின் முன்னும். வினையெச்ச உகரத்தின் முன்னும் தோன்றுகிறது. கூட்—என்னும் வினையடி, ஆது என்னும் மறைவிகுதியை ஏற்கிறது. வேண்ட்—என்ற வினையடி ஆம் என்ற மறை விகுதியை ஏற்கிறது.

4-1 சுருங்கச் சொன்னுல் பேச்சுத் தமிழிலும் மறைவிகுதி அகரமே என்றும், அதன் வேற்றிட உருவங்களாக எ, ஒ, இ, அ, ஆத், ஆது, ஆம் ஆகிய ஏழும் வருகின்றன என்றும் கண்டோம்.

5. தமிழ்மொழியின் பண்டைய நிலையையும், தற்கால நிலையையும் அறிந்த நாம், ஒப்பிலக்கண நூலாசிரியர்களான கால்டுவெல், ஷில் பிளாக், சுப்பிரமணிய சாஸ்திரி ஆகிய மூவர் கருத்தையும், சமீபத்தில் மறை விகுதிகளைப்பற்றி நன்கு ஆராய்ந்து எழுதிய ஆல்பிரட் மாஸ்டர் என்பாரின் கட்டுரைப் பொருளையும் அறிவது எளிதாகும்.

5-1 கால்டு வெல்[7] மறை விகுதிகளைப் பற்றிய கருத்துக்களை 471-வது பக்கத்தில் ஓரளவு தெளிவாகக் கூறுகிருர். "திராவிட மொழிகள் எதிர்மறைப் பொருளைத் தோற்றுவிக்கும் போது அகர விகுதியை நிலையாகப் பயன் படுத்துகின்றன. தமிழிலும் கன்னடத்திலும் புணர்ச்சிகாரணமாக அது மறைந்து விட்டது. அகர எதிர் மறையோடு இடம் பால் எண் காட்டும் விகுதியின் முதல் உயிர் சேர்வதால், அவ்விரண்டும் நாளா வட்டத்தில் கலந்து விட்டன. இவ்விகுதியின் குறுகிய உயிரோசைகள் நீண்டு ஒலிப்பதே அதற்குச் சான்று." என்கிருர். நாம் உரைத்ததும் அவர் கூறுவதும் உள்ளடக்கத்தில் ஒன்று தான். நாம் வேறுவிதமாக அதனைக் கூறியிருக்கிறோம்.

5-2 கால்டுவெல் இந்தப் பகுதியில் கூறியிருக்கும் வேறு சில கருத்துக்கள் மறுத்துரைக்கத்தக்கன. (1) பக்கம் 469-ல் தமிழ் தெலுங்கு கன்னட மறைவினைகள் எவ்விதக் காலமும் காட்டுவதில்லை என்கிருர். இது முற்றிலும் உண்மையன்று. அவரே பக்கம் 475.ல் உண்டிலன் என்ற பதத்தைக் காட்டியிருக்கிருர். அதில் டகரம் இறந்த கால இடைநிலையாகும். வாழ்ந்திலன், வாழ்கின்றிலன், வாழ்கிலன் ஆகியவை முறையே இறப்பு, நிகழ்வு, எதிர் காலங்களைக் காட்டுகின்றன. (2) பக்கம் 471ல் மைவிகுதியை வினையெச்ச விகுதியாகக் கருது

7. Comparative grammar of the Dravidian Languages by Caldwell, Third Division Reprint, Madras University 1956.

கிறார். ஆனால் மை விகுதி வேற்றுமை விகுதிகளை ஏற்கும் தகுதியுடையது. எனவே அதனைப் பெயர் விகுதியாகக் கொண்டு, குறிப்பிட்ட இடங்களில் வினையெச்சப் பொருள் பயந்து நிற்பதாகக் கூறுவது நன்று. (3) பக்கம் 472-ல் செய்யாத என்றபெயரெச்சஉருவத்தைச் செய்யாது என்ற வினையெச்ச உருவத்தோடு பெயரெச்ச விகுதியான அகரத்தைச் சேர்த்ததால் பிறந்ததென்றும், செய்யாது என்பதிலுள்ள துகரம் பண்பு குறித்த அஃறிணை ஒருமை விகுதி என்றும் குறிக்கிறார். இது உண்மையாயின், அஃறிணை ஒருமைப் பெயர்கள் வினையெச்சங்களைப் பயந்தன என்றும், வினையெச்சங்கள் பெயரெச்சங்களைப் பயந்தன என்றும் ஆகும். இவ்வாறு அவர் கருதுவதற்குக் காரணம் தவருக மறை உருவங்களைப் பதச் சேதம் செய்தமையே. பெயரெச்ச உருவமான உண்ணுக் குதிரையும், உண்ணுத குதிரையும் ஒரே பொருளைத் தருவதால் ஆவும் ஆத்தும் ஒன்றே என்பது விளங்கும். இந்த விகுதியான ஆத், எச்ச உருவங்களில் மட்டுமன்றி, வினையாலணையும் பெயர்களிலும் வருகின்றது. கால்டுவெல் நினைப்பதுபோல் உண்ணுதோன் என்ற பதத்தைப் பிரித்தால் உண் (ண்)-பகுதி,—ஆ—மறை விகுதி,—த்—அஃறிணை ஒருமை விகுதி, —ஓ—படர்க்கை விகுதி,—ன்—ஆண்பால் ஒருமை விகுதி என்ருகும். இம்முறை இதுவரை கண்ட வினை, வினையாலணையும் பெயர்கள் ஆகியவற்றின் உருபு அமைப்பு முறையை முற்றிலும் மாற்றுகிறது. பால் எண் காட்டும் விகுதி, இடம் காட்டும் விகுதிக்கு முன்னும் பின்னும் வருவதை இங்கு நோக்குக. அஃறிணை ஒருமை விகுதிக்கு அப்புறம் ஆண்பால் ஒருமை எண் வரும் விந்தையையும் நோக்குக. இதனுல்தான், ஆத் என்பதை மறைவிகுதியாக நாம் ஏற்றுள்ளோம். பதச் சேதத்தில் நேர்ந்த இதே தவறுதான், திராவிட ஏவல் வினைகளனைத்தும் அழுத்தமாக உச்சரிக்கப்பட்ட தொழில் பெயர்களென்று கூறுமாறு, பேராசிரியர் கால்டுவெல்லைத் தூண்டியதுபோல் தோன்றுகிறது. (பக்கம் 473). இதற்கு அவர் செய்யாதே என்ற உருவத்தை உதாரணமாகக் காட்டுவதும் இங்கு நோக்கத் தக்கது. கால்டுவெல் கண்ட ஓர் அரிய புதுமையைக் கூட இந்தத் தவருன பதச் சேதம் மறைத்து விட்டது. பக்கம் 475-ல் செய்கலாதார் என்ற பதத்தைச் செய்க் + அல் + ஆதார் எனப்பிரித்து அல்—லை மறைவிகுதியென்றும், ஆதார்-என்பதை எண் பால் இடங்காட்டும்விகுதி யென்றும் கூறுகிறார். உண்மையில் அல் இங்குத்தொழில் பெயர் விகுதியாகும். அது வினையடியுடன் சேர்ந்து மறைவிகுதியான ஆத்—ஐ ஏற்றிருக்கிறது. இதனுல் வினையடிகளேயன்றித் தொழிற் பெயர்களும் கால இடைநிலை அல்லது எதிர்மறை உருபை ஏற்குமென்பது புலனுகிறது. முரணுது உரைத்திருப்பராயின் இந்தப் புதுமையைக் கால்டுவெல் விளக்கி யிருப்பர்.

6. ஷீல் பிளாக்,[8] மறை விகுதிகள் குறித்து மிகச் சுருக்க மாகவே கூறுகிறார். 66-ம் பக்கத்தில் "திராவிட மொழிகள் தனி விகுதிகள் மூலம் மறைப்பொருளை உணர்த்துகின்றன : அடிச் சொல்லுக்கும் இடங்காட்டும் விகுதிக்குமிடையே கலக்கும் உயிர் மூலமாக இது காட்டப்படுகிறது : அனேகமாக இந்த உயிர், அகரமாக விருக்கும், (சில இடங்களில் இது இருந்து கெட்ட சூன்யமாக இருக்கும்); இடம் பால் காட்டும் வினைமுற்றுக்களில் இது கெட்டுவிட்டது. இதனுல் காலங்காட்டும் இடைநிலைகள் இல்லாமையாகிய ஒரே ஒரு இயல்பால் மறை உருவங்கள் விளங்கும்படியாக நேர்ந்து விட்டது என்கிறார். இதற்குக் கண்டேன்-காணேன் என்ற சொற்களை உதாரணமாகக் காட்டுகிறார். ஆனுல் இட விகுதிகள் மறையிலும் உடன்பாட்டிலும் ஒரே சூழ் நிலையில் வராததை அவர்மனத்தில்கொள்ளவில்லை. இருந்து கெட்ட சூன்ய நிலையையும் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும் என்று பிளாக்

8. The Grammatical structure of Dravidian Languages by Jules Block, Translated by R. G. Harshe, Deccan college Hand-book series-3, poona, 1954.

சொல்வதை ஒப்புக் கொண்டால், தன்மை, முன்னிலே, படர்க்கை ஆகிய இம் மூன்று இடங்களின் முன்பும் சூன்ய நிலேயே இருப்ப தாகக் கூற வேண்டும். நடை முறையில், சூன்ய நிலேயின் எண்ணிக்கை கூடி, எதன் சூன்யமோ அதன் எண்ணிக்கை மிகக் குறைந்து விடும். இது மொழியியல் போக் கிற்கு முரணுனது.

6-1 தமிழிலும் கன்னடத்திலும், உடன் பாட்டிற்கும் எதிர்மறைக்கும் எவ்விதமாறு தலும் இல்லேயென்று பிளாக் குறிப்பிட்டுக், கண்ணேம்-என்ற உதாரணத்தைக் காட்டி யிருக்கிருர். இந்த உதாரணம் பிழையானது. அடிச்சொல் இவ்விரண்டிற்கும் வேருனது. ஒன்றில் கண்(ண்) : பின்னென்றில் காண் ஆகும்.

7. முன் குறிப்பிட்ட ஆசிரியர் நால்வ ருள்ளே சுப்பிரமணிய சாஸ்திரியாருக்குத் தமிழில் கூடுதல் புலமையுண்டு.[9] அவர் மறைப் பொருளுணர்த்தும் நிலேயை அறுவகையாக்கி உதாரணங்களுடன் 192-ம் பக்கம் முதல் விளக்குகிருர்.

(1) அடிச்சொற்கும் இடவிகுதிக்கும் இடையே அல் சேர்ப்பது. இதை நாம் முன்பே காட்டி னேம். (2) கால இடைநிலேகளுக்கும், இடவிகுதி களுக்கும் இடையே அல் அல்லது இல்—லேச் சேர்ப்பது. இதற்குக் கண்டிலம் (புறம் 202—(2) என்ற பதத்தை உதாரணம் காட்டியிருக் கிருர். இவ்வுதாரணம் புறநானூற்றில்[10] மூன் ரும் பதிப்பு முதல் இல்லே. இந்த உருவம் ஏனேய சங்க இலக்கியங்களிலும், பிற்கால இலக்கியங்களிலும் காணப்படினும் புற நானூற்றில் 'போர்ப்பித்திலது' என்ற பதத் தில் தவிர, வேறெங்கும் வரவில்லே. மற்றெரு உதாரணமான சிறந்தன்று (புறம் 75-5) என் பதை உடன்பாடாகத்தான் பொருள் கொள்ள வேண்டும். ஏனெனில், அல்லின்முன் கால இடைநிலேகள் வந்த உருவங்களே இதுவரை இலக்கியங்களில் நாம் காணவில்லே. ஈந் தன்று, வந்தன்று என வரும் புறநானூற்றுப் பகுதிகளிலெல்லாம் அல்(ன்)—ஐ சாரியை யாகக் கருதி உடன்பாட்டில்தான் உரை யாசிரியர்கள் பொருள் உரைத்திருக்கின்றனர். இங்கும் பழைய உரையாசிரியர் இதற்குப் 'பரிக்கவொண்ணுதாம்படி கனத்தது' என்று உடன்பாட்டில் பொருள் சொல்வதையும் நோக்குக[11].

(3) அல், இல் அடியாகப் பிறந்த பதங் களேச் சேர்த்தல் மூலம் மறைப்பொருளே உணர்த்துவது.

(4) இறந்தகால இடைநிலேயான துக ரத்தின், முன்னர் மறை விகுதியான ஆகாரத் தைப் பெய்து உரைத்தல். இதற்கு உதாரணம் ஆகாது (தொல், எழுத்து 71) முதலாது (தொல், எழுத்து 65). இவை இரண்டும், அஃறிணை ஒருமை எழுவாய் ஏற்பதைச், சாஸ்திரிகளே குறிக்கிருர்கள். எனவே நமக்கு ஆக்—வினேயடி, அ—மறை விகுதி, அ—படர்க்கை விகுதி, து—அஃறிணை ஒருமை விகுதியாகும்.

(5) இடங்காட்டும் விகுதிகளே அடிச் சொல்லுடன் சேர்த்தல் — இதில் மறைப் பொருள் உருபு இருந்து கெட்டதா என்பதைச் சாஸ்திரிகள் குறிக்கவில்லே. எதுவாயினும் இதி லுள்ள குறைபாட்டை முன்பே விளக்கினேம்.

(6) அடிச்சொல் அகரத்தை நீட்டுவதால் மறைப் பொருள் பிறத்தல். இதற்கு வர்—வார்—ஆவதை உதாரணமாகக் காட்டியிருக்

---

9. Comparative grammar of the Tamil Language by P. S. Subrahmanya Sastri, Tiruvadi, 1947.

10. திரு P. S. சுப்பிரமணிய சாஸ்திரிகள் சமீபத்தில் எனக்கெழுதிய கடிதத்தில் புறநானூற்றின் இரண்டாம் பதிப்பைத் தாம் உபயோகித்ததாகக் கூறியிருக்கிருர்கள். இது எனக்குக் கிடைக்கவில்லே.

11. சாஸ்திரிகள் இதனே ஒரு விதி விலக்காகக் கருதுமாறு மேற்குறிப்பிட்ட கடிதத்தில் குறித்திருக்கின் ருர்கள். இதற்கு அவசியம் இல்லே என்று எனக்குத் தோன்றுகிறது.

கிறுர். உடன்பாட்டிலும் வர்—வார் என நீள்வது மிகச் சாதாரணம். வாரீர்—நீர் வாரீர். இதனுல் அடியகரம் நீளுதலே மறைப்பொருள் உணர்த்தற்கு என்று கூறுதல் பொருந்தாது.

8. சமீபத்தில் மறைவினைகளின் அமைப்பை ஆராய்ந்த ஆல்பிரட் மாஸ்டர் [12] அவற்றை நான்கு வகையாக முறைப்படுத்திக் கூறுகிறுர்.

(1) அடிச் சொல்லாகிய அல் இல் ஆகிய வற்றைச் சேர்ப்பது.

(2) அ இடைநிலே, அ விகுதி இவை சேர்ப்பதால் தோன்றும் மறைப்பொருள். வினுவால் தோன்றும் மறையைப் பற்றியும் அவர் இங்குக் கூறுகிறுர். இது இலக்கண வரம்பிற்குட்படாது என்று முன்பே ஒதுக்கியது நினைவிருக்கலாம். வேண்டாம் என்ற உருவத்தில், நடுவிலுள்ள ஆகாரம் மறை விகுதி என்று அவர் கருதுகிறுர். அவ்வாருயின் இறுதியிலுள்ள மகரவொற்றின் நிலே யாது? என்பதை அவர் விளக்கவில்லே. வருங்காலம் காட்டும் மகர இடை நிலேயோ? அல்லது பன்மையுணர்த்தும் விகுதியோ? அல்லது முன்னுள்ள உயிருடன் சேர்ந்த மறை விகுதியோ? என்று தெளிதற்கு அவர் கட்டுரையில் சான்றுகளில்லே. நாம் மறை விகுதியின் பகுதியாகக் கொண்டிருப்பது இங்கு நினைவுகூரத் தக்கது.

3. இருந்து கெட்ட சூன்ய நிலேயால் மறை உணர்த்துதல். இதனுல் ஏற்படும் குறைபாட்டை முன்னரே நாம் கூறியுள்ளோம். இந்தப் பகுதியில், வாய்பாடு ஒன்றின் மூலம் மறை ஏற்ற வினைகளனைத்தும் நீண்ட இடவுருபு ஏற்று வருவதை இந்த ஆசிரியர் திறம்படக் காட்டியிருப்பது, நம் கருத்தை வலிவுறுத்தும். உடன்பாட்டிற்கும் மறைக்கும் மாறுபாடில்லே என்று கூறி அவர் விடாய், பூணேன் என்ற இரு உதாரணங்களேக் காட்டுகிறுர். விடாய் என்பது, உடன்பாட்டில் விடுவாய் என்பதனேடு மயங்கிவரும் உருவமாகும். அவ்வாருயின் இதில் எதிர்கால இடை நிலேயான வகரம் இருந்து கெட்டிருக்கிறது. எனவே அதன் உண்மை உருவம் விட்+வ் (இருந்து கெட்டது)+ஆய். ஆனுல் மறை உருவமான விடாய் என்பதில் விட்+அ (மறை விகுதி) + அய். என்பதே உருவம். எனவே இவ்விரண்டிற்கு முள்ள உருவ வேறுபாடு தெளியலாம். பூணேம் என்பது பூண மாட்டேம் என்று பொருள்பட்டால் அதன் அடிச்சொல் வினையடிச் சொல்லாகும். ஏனெனில் அது எப்போதும் கால இடை நிலேகளேயே ஏற்கும். உதாரணமாகப் பூண்டேம். ஆனுல் பூணேம் என்பது பூணே உடையேம் எனப் பொருள்படின் அது பெயரடிச் சொல்லாகும். "ஏனெனில் அது வேற்றுமையை ஏற்கும். உதாரணம், பூணே, பூணுல். எனவே, உருவ ஒற்றுமை உடையவை ஆயினும் இவை இரண்டும், இரண்டு சொற்பிரிவுகளேச் சேர்ந்தவை. உடன்பாட்டிற்கும் மறைக்கும் இதனுல் வேறுபாடிருப்பதைத் தெரியலாம்.

4. குருஹ், கோண்டி, பிராஹீவி முதலிய மொழிகள் கையாளுகின்ற மறை தோற்றுவிக்கும் முறை. இது திராவிட மொழி வழக்கு அன்மையால் இதை ஆசிரியர் புறக்கணிக்கிறுர்.

9. இதுகாறும் பார்த்தவற்றுல் மறை விகுதிகள் எல்லா வினைச் சொற்களிலும் இருக்கின்றன என்றும், அவை இடத்திற்கேற்ப மாறுபட்டுள்ளன என்றும் கண்டோம்.

---

12. The Zero Negative in Dravidian'by Alfred Master Transactions of the photological society 1946 P. 137 to 155.

கோப்பெருஞ் சோழன்

ஔவை. சு. துரைசாமி பிள்ளை
தமிழ்ப் பேராசிரியர், தியாகராசர் கல்லூரி, மதுரை.

சங்ககாலத்தில் உறையூரில் இருந்து ஆட்சி செலுத்திய சோழ வேந்தருள் கோப்பெருஞ் சோழன் என்பவன் ஒருவன். அவன் ஆன்ற அறிவும், சான்றோர் துணையும் ஒருங்கு பெற்றவன். மன்னர் மதிக்கும் மாநிதிச் செல்வமும், ஒக்கல் விரும்பும் மக்கட் செல்வமும் அவன்பால் குறைவற இருந்தன. பொத்தியார், புல்லாற்றூர் எயிற்றியனார் முதலிய புலமைச் செல்வர் அவனுடைய அரசியலுக்கு உறுதிச் சுற்றமாய் உடனுறைந்தனர். காவிரி பாயும் அவனுடைய நாடும் அவன் கருத்துவழி இயங்கிக் காவற் பணிக்குக் கவின் செய்து விளங்கிற்று

அக்காலத்தே சோழ நாட்டின் மேற்கிலுள்ள கொங்குநாடு முற்றும், சேரரது ஆட்சியில் சேர்ந்தது. அங்கே தென்பொருப்பில் தோன்றி வடக்கே ஓடிக் காவிரியொடு கலக்கும் ஆன்பொருநையாறு, அக்கொங்கு நாட்டின் கீழ் எல்லையாய் நின்றது. அதன் கரையிலுள்ள கருவூரும், கொங்கு வஞ்சியும் சேரர்க்குரிய நகரங்களாக இலங்கின. அவற்றுள் கொங்கு வஞ்சி மாத்திரம் பிற்காலத்தே இராசராசபுரமாகிப் பின் சிதைந்து தாராபுரம் என மாறிப் போயிற்று. தென்பொருப்பு என்பது பாலைக் காட்டுக்கும்,தென்குமரிக்கும் இடையில் உள்ள மலைத்தொடராகும். பாலைக்காட்டுக்கு வடக்கில் தொடர்ந்து செல்வது வானமலைத்தொடர். வானமலையில் தோன்றும் ஆறுகள் வானியெனப் பெயர் பெற்றிருப்பதும், பொருப்பு மலையில் தோன்றுவன பொருநை எனப்பெயர் பெற்றிருப்பதும் இதற்குப் போதிய சான்றுகளாகும். கோப்பெருஞ்சோழன் அரசுமேற்கொண்டு ஆண்டு வரும் நாளில் குடக்கோ இளஞ்சேரலிரும்பொறை சேரவரசனாய்ச் சிறந்து விளங்கினான்.

அந்நாளிற் பாண்டி நாட்டின் தென்பகுதியில்,திருநெல்வேலிக்குஅண்மையில் தண்ணான் பொருநையின் கரையிலுள்ள பழைய கோட்டையில் இருந்து, இளம்பழையன் மாறனும், வடபகுதியில் மதுரைமாநகரின்கண் இருந்து பாண்டியன் அறிவுடை நம்பியும் நாடு காவல் புரிந்து ஒழுகினர். பழையன் கோட்டை இப்போது பாளையங்கோட்டை எனப் பெயர் திரிந்து நிற்கிறது. காவிரியின் வடகரைப் பகுதியிற் காணப்படும் பச்சைமலையைச் சூழ்ந்த நாடு விச்சிக்கோ என்பது நாடறிந்ததொன்று. பழைய விச்சி மலையே இன்று நாம் அறியும் பச்சைமலை. அதன் அடியில் உள்ள விச்சியூரில் விச்சிக்கோக்கள் இருந்து விச்சி நாட்டை ஆண்டு வந்தனர். விச்சியூர் பிற்காலத்தே சிறுவிச்சியூர், பெருவிச்சியூர் என இரண்டாயிற்று; எனினும், நாளடைவில் பெருவிச்சியூர் மறைந்தொழியவே, சிறுவெச்சியூர்,சிறுவெச்சூர் என மருவி வழங்குகிறது.

பாண்டி வேந்தனை அறிவுடை நம்பி இளமையிலே நல்ல கல்வி கற்றுச் சிறந்த புலமையும், மிகுந்த பாவன்மையும் படைத்தவன். மக்களது மனை வாழ்வு மாண்புற வேண்டுமாயின், கணவன் மனைவியரிடையே ஒன்றிய காதலுறவு நிலவவேண்டும்; காதலாற் பிணிப்புண்ட இல்லாளன் இல்லாள் என்ற இருவரா லாகிய குடும்பம், சீரிய மக்கட் சமுதாயத்துக்கு அடிப்படை யாதலின் அவரது காதலறத்தை நன்குணர்ந்து, இனிது பேணுவதையே சங்க காலத் தமிழ் நாகரிகம் பெருநோக்கமாகக் கொண்டிருந்தது. புலமை மிக்க சான்றோரும், வளமிக்க செல்வரும், விறல் மிக்க வேந்தரும் அந்நெறியில் ஆர்வமொடு ஒழுகினர். பாடுவோர் பாடுவன பலவும் அந்தக் காதல் ஒழுக்கத்தையே பொருளாகக்

கொண்டு பெரும்பாலும் இயன்றன. தமிழ் வேந்தனை அறிவுடை நம்பியும் அதனைப் பெரிதும் மதித்து ஒழுகினன்; அவனுடைய புலமை உள்ளம் அவற்கு வளமை நல்கிற்று.

ஒருவர் உள்ளத்தில் காதலுணர்வு பிறந்து சிறக்கும் போது, அவரது கல்வியறிவு ஒடுங்கி நிற்கும்; காதலர் இருவர் ஒருவரையொருவர் கண்டு பயிலுதற்கு இடமில்லாதவாறு ஏதேனும் இடையூறு உண்டாகும் போதுதான் உண்மை யறிவு வெளிப்பட்டு, மேல் விளைவது நினைப்பதையும் அதற்கு ஆவன செய்வதையும் நாடும். அந்த இயல்பை அடிப்படையாகக் கொண்டு பாண்டியன் அறிவுடை நம்பி, தோழி கூறுவதாக அகப்பாட்டொன்றைப் பாடியுள்ளான். "மெய்யின் தீரா மேவரு காமமொடு, எய்யாய் ஆயினும் உரைப்பல் தோழி" எனத் தொடங்கும் அகப்பாட்டைக் கண்ட சான்றோர் அகநானூற்றில் (28) தொகுத்துள்ளனர். மனத்திடை இடம் பெற்றுச் சிறக்கும் காதலுணர்ச்சியை, ஆண்மக்களைப்போலப் பெண்மக்கள் கண் போன்ற நண்பர்க்கும் வாயால் உரைத்தற்கு நாணுவர்; புறத்தே தோன்றுதவாறு மறைத்தல் அவர்கட்குக் கைவந்த செய்கையாம்; ஆயினும் தன்காதல் தன்பால் ஒன்றியிராது பிறிதிடம் செல்வதுபோலத் தோன்றின், அவள் அதனைச் சிறிதும் பொறாள்; அப்போது அவள் மறைத்த காதல்தானே வெளிப்பட்டு விடும். காதலின் இவ்வியல்பை நன்கு கண்ட அறிவுடை நம்பி, இதனை உள்ளுறுத்துத் தோழியின் படைத்துமொழி வாயிலாகக் காதல் வயப்பட்ட நங்கை ஒருத்தியொடு சொல்லாடுவதாக, ஒரு பாட்டைப் பாடியுள்ளான். அதன் நலங்கண்ட சான்றோர் குறுந்தொகையில் அதனையும் ஒன்றாகக் (230) கோத்துள்ளனர். காதலர் இடையே நிலவும் காதல், குறுகிப் பெருகி ஒருவரையொருவர் இன்றியமையாத நிலையை யெய்துங்கால், மகளிர்க்கு அவர் உயிரினும் சிறந்து நிற்கும் நாணமும் உரன் அழிந்து கெடும் என்பது உண்மை; அதனை உளத்திற்கொண்டு,

"மாசில் கற்பின் மடவோள் குழவி
பேஎய் வாங்கக் கைவிட் டாங்குச்
சேணும் எம்மொடு வந்த
நாணும் விட்டேம்; அலர்கஇவ் வூரே"

என்று அந்நங்கை சொல்வதாக இந்நம்பி பாடுகின்றான். இதன் ஒட்பங்கண்டு உவந்த சங்கச் சான்றோர் இதனை நற்றிணைக்கண் (15) தொகுத்துள்ளனர்.

இவ்வாறு காதலறத்தை உணர்ந்துணர்ந்து, கண்டோர் நெஞ்சுருகப் பாடும் இப்பாண்டியன் அறிவுடைநம்பி, காதல் வாழ்வின் விளைபயனாகத் தோன்றும் மக்களது குழவிச் செவ்வியில் பேரீடுபாடு கொண்டு நிற்கின்றான். உணவு கொள்ளுமிடத்துக் குழவிகள்,

"குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை யடிசில் மெய்படட
விதிர்த்தும்"

பெற்றோர் மனத்தை இன்பத்தால் மயக்கும் திறத்தை முறையே எடுத்துரைத்து முடிவில்,

"மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைத்தாம் வாழும்
நாளே"

என்று பாடுகின்றான்.

இங்கே காட்டிய காதலறமும், மக்கட் செல்வமும் நல்கும் பேரின்பத்தில் திளைத்தமையின், பாண்டியன் உள்ளம் அரசியல் துறைகள் யாவற்றினும் தன் முழு அறிவையும் செலுத்தும் திறத்திற் சிறிது குன்றினன். அதனால், அவன் அரசியற் சுற்றத்தார் அரசனுக்குரிய வருவாய்த் துறையில் தாம் விரும்பியவாறு ஒழுகத் தலைப்பட்டனர். அரசர்க்குரிய இறைப்பொருளை நல்குவது குடிகட்குக் கடன் எனினும் அவருள் இறையிறுப்போரும், இறையிலிகளும் எனப் பல்வேறு வரிசையுண்டு. "பொது நோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின், அதுநோக்கி வாழ்வார் பலர்" என்ற அரசியல் முறை அது

பற்றியே உண்டாயிற்று. அறிவுடை நம்பியின் சுற்றத்தார் வரிசை நோக்காது பொது நோக்குக் கொண்டு பொருள் பெறுவாராயினர். அதனுல் நாடு " யானைபுக்க புலம் போல" நலம் குன்றுவதாயிற்று.

அந்நாளில் பாண்டி நாட்டின் கீழ்ப்பகுதியான மாறை நாட்டில் பிசிர்க்குடி என்ருேர் ஊர் இருந்தது; அஃது இன்றும் உளது. அங்கே ஆந்தையார் என்ற நல்லிசைச் சான்ருேர் ஒருவர் வாழ்ந்தார். அவர் மாண்புடைய மனைவி மக்களுடன், ஏவலர் இனிது பணிபுரிய, ஊர்களில் சான்ருேர் இருந்து அறக் காவல் செய்ய நன்ருக வாழ்ந்து வந்தார். ஆயினும் அவர்க்கு அறிவுடை நம்பியின் சுற்றத்தார் வரிசை நோக்காது ஆட்சி செலுத்துவதும், அதனுல் நாடு வருந்துவதும் மிக்க மனநோயைச் செய்தன. ஒருநாள் அவர் அறிவுடை நம்பியைக் காண மதுரைக்கு வந்தார்.

அவர் வரவு கண்ட பாண்டியன் மிகவும் மகிழ்ந்து வரவேற்றுச் சிறப்பித்தான். அவனேடு சின்னுள் இருக்க வேண்டிய நிலை ஆந்தையார்க்கு உண்டாயிற்று. இருக்கையில் அவன் தான் சிறப்புறப் பேணும் காதலொழுக்கத்தின் மாண்பைக் கட்டுரைத்தான். அதுபற்றி மேலும் அவற்கு அறிவுறுத்தக் கருதிய ஆந்தையார், காதல் வயப்பட்ட ஆடவர் அது நல்கும் இன்பமே நோக்கித், தம் செய்கையின் விளைவு நினையாது ஒழுகுவதும், மகளிர் அதனைக் குறிக்கொண்டு நோக்கி, அவர் அறிவை எழுப்பிச் செந்நெறிக்கண் செலுத்துவதும் காதல் வாழ்வின் சிறப்பு என்ற கருத்தை உள்ளீடாக நிறுத்தி, இரவின்கண் காதலியைக் காணப் போந்த காதலனைத் தோழி கண்டு, " இரவில் வருதல் எவன்? பகல்வரின் எம்மொடு இனிதிருந்து, பொழுதுபடுங்கால்,

> காவலர்க் கரந்து கடிபுனம் துழைஇய
> பெருங்களிற்று ஒருத்தலின் [பெயர்குவை
> கருங்கோற் குறிஞ்சிநும் உறைவின் [ஊர்க்கே" (அகம் 308)

என்று கூறுவதாய் அமைந்த பாட்டொன்றைப் பாடிக்காட்டினுர். அது கேட்ட பாண்டியன், "இரவில் தன் காதலியைக் காண விழையும் அவன் கருத்துத் தடைப்படின் மனம் உடைந்து கெடுவன வன்ருே?" என ஐயுற்று நோக்கினன்; அவற்கு ஆந்தையார், பகல்வரின் தன் காதலொழுக்கம் பிறர் அறிய வெளிப்பட்டு விடும் என அஞ்சுவனுயின், அவனது நல்லறிவு எழுந்து, "இங்ஙனம் இரவினும் பகலினும் அலமருவதைக் கைவிட்டுச் சான்ருேரைக் கொண்டு அவளை மணந்து கோடலே செய்யத் தக்கது" என உணர்த்த, அவன் அவளைத் தனக்கே வரைந்துகொள்ளத் துணிந்து, சான்ருேரை அவளுடைய பெற்ருேர் மனைக்கு விடுப்ப, அவன் வரவு கண்ட தோழி, தலைமகளுக்குக் காட்டி "நீயுணர்ந் தனையே தோழி" எனத் தொடங்கும் (நற் 91) பாட்டைப் பாடினுர். அறிவுடை நம்பி கேட்டு மிக்க மகிழ்ச்சி கொண்டான்.

பின்பு, அவர் பாண்டியன் தம் சொல்லில் விருப்புடையனுதலை உணர்ந்து, தாம் கருதிப் போந்ததை உணர்த்த முற்பட்டு,

> "காய்நெல் அறுத்துக் கவளம் [கொளினே
> மாநிறைவு இல்லதும் பன்னுட் காகும்;
> நூறுசெறு வாயினும் தமித்துப்புக்கு [உணினே
> வாய்புகு வதனினும் கால்பெரிது கெடுக்கும்;
> அறிவுடை வேந்தன் நெறிஅறிந்து கொளினே
> கோடி யாத்து நாடுபெரிது நந்தும்;
> மெல்லியன் கிழவ னுகி வைகலும்
> வரிசை யறியாக் கல்லென் சுற்றமொடு
> பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்
> யானை புக்க புலம்போலத்
> தானும் உண்ணுன் உலகமும் கெடுமே"
> (புறம்: 184)

என்று தெரிவித்தார். அறிவுடைநம்பி பெரிதும் மகிழ்ந்து தன்னைத் திருத்திக் கொண்டான். ஆந்தையாரும் தமது பிசிர்க்குடி சென்று சேர்ந்தார்.

சேரமான் குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை அரசியல் சூழ்ச்சியும், போர்வன்மையும் மிக்குடையவன். அவனது ஆட்சி காவிரியின் தென்கரைகாறும் படர்ந்திருந்தது, வடகரைப் பகுதியான மழநாட்டின் வடக்கில் இருந்து வலிமிக்கு நின்ற விச்சிக்கோவுக்கு மன வேதனை அளித்தது. அவன் சோழ பாண்டியர்களைத் தன் கருத்துக் கிணக்கி, அவர் உதவிய படையுடன் சென்று இரும்பொறையோடு போர் தொடுத்தான். அப்போரில் சேரமான் வென்றி கொண்டு விளங்கினன். சோழர் குடியில் தோன்றிய ஒருவன் விச்சிக்கோவொடு கூடிச் சேரமானைப் பகைத்துக் கெட்டது, கோப்பெருஞ்சோழனுக்கு இரும்பொறையின் வலியை அளப்பதோர் கோலாயிற்று. அதனல் அவன் தன் நாட்டோடு அமைந்து, தனக்குரிய அறத்தைப் பேணிக் கொண்டிருந்தான். இரும்பொறைக்குத் தோற்ருேடிய பாண்டிப் படையினருள் இளம்பழையன் மாறனும், வித்தையூர் வேந்தாகிய வித்தையும் இரும்பொறையொடு மறுபடியும் போர் தொடுத்தல் வேண்டுமெனக் கருதினர். அவரது கருத்தை ஒற்றரால் அறிந்த விச்சிக்கோ, கோப்பெருஞ் சோழன் மக்கட்கு உரைத்துச் சேரமானெடு போர் தொடுத்தற்கு உதவுமாறு வேண்டினன். சோழன் மக்கள் அவற்குத் துணையாய் நிற்க இசைந்து, தந்தையான கோப்பெருஞ் சோழனுடைய ஆதரவை நாடினர். பிறர் வாழ்ந்தாலன்றித் தான் இனிது வாழ்தல் ஒருவற்கு இயலாது என்ற பேரறத்தைக் கைக்கொண்டு ஒழுகிய பெருஞ்சோழற்கு அது நன்றெனத் தோன்ருமையால் தன் மக்களை அச்செயலில் ஈடுபடாதவாறு தடுத்தான். அந்நிலையில் இளம்பழையன் மாறனும், வித்தையூர் வித்தையும் பரப்பிய சொல்வலையில் சிக்குண்டு கோப்பெருஞ்சோழன் மக்கள், அவர்களோடு கூடிப் போர்க்குச் சென்றனர். அப்போரில் விச்சிக்கோவும்,வித்தையும், பழையன் மாறனும் சேரமானுக்கு வெந்நிட்டு வெருண்டோடினர். சோழன் மக்கள் வலியிழந்து சோர்வுற்றுத் தம் நாடு திரும்பினர்.

தன் கொள்கைக்கு மாருகவும், தன் அறிவுரையைக் கொள்ளாமலும் சென்று, தன் புகழ்க்கு மாசு வருவித்த மக்கள் செயல், கோப்பெருஞ்சோழன் உள்ளத்தில் மிக்க கொதிப்பை உண்டு பண்ணிற்று. அவர்கள் செயலின் புன்மையை எடுத்துரைத்து வருந்தினன். சோழர் குடியின் தொல்வரவு காட்டி அவர்கட்குத் தகுவன சொல்லித் தெருட்ட முயன்ருன். அவர்களது அறியாமையைப் பயன்கொண்டு சேரமான்பால் படுதோல்வி எய்திய ஏனை வேந்தரையும் இகழ்ந்து பேசினன். அவனுடைய உயரிய மனமாண்பை அறியும் மதுகை இல்லாமையால் அவன் மக்கள் அவனையே வெறுத்தனர்; வெளியில் அவனைத் தூற்றினர். முடிவில் அவன்பால் வெறுப்பு மிகுந்து போர்க்கே எழுவாராயினர்.

தான் பெற்ற மக்களே தனக்கு மாறுபட்டெழுந்து போர் குறிப்பராயின் எந்தத்தந்தைக்குத் தான் மனம் வருந்தாது? தனக்கும் தன் குலத்துக்கும் வசை எய்துவிக்கும் மக்கள் இருப்பதிலும் இறத்தலே சால்பு என்று கோப்பெருஞ்சோழன் எண்ணினன். தானைத் தலைவரை வருவித்துப் படை பண்ணுமாறு பணித்தான். போர்ப்பறை முழங்கப், போர் வயவர் போந்து தத்தமக்குரிய போர்ப்பூவும் படையும் பெறத் தலைப்பட்டனர். சோழர் தலைநகரில் போர் ஆரவாரம் எழுந்து சூழ்ந்துகொண்டது. நாட்டு மக்கள் அனைவரும் தத்தமக்கு வேண்டியவாறெல்லாம் பேசிக்கொண்டனர்.

காவிரியின் வடகரைப் பகுதியில் உள்ள மழநாட்டு ஊர்களுள் புல்லாற்றூர் என்பது ஒன்று. அது புல்லாறு என நின்று பில்லாறு என மருவி, இடைக்காலச் சோழ பாண்டியர் காலத்தும் இருந்து மறைந்து போயிற்று. இதனைத் திருச்சிராப்பள்ளி மாவட்டத்து லால்குடிப்பகுதிக் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. அவ்வூர்க்கண் எயிற்றியனர் என்ற சான்ருேர் ஒருவர் வாழ்ந்தார். அவர்க்கும் கோப்பெருஞ் சோழற்கும் நெருங்கிய நட்புறவு உண்டு. அவருக்குச் சோழன் தன் மக்களொடு போர்க்கெழுந்த செய்தி தெரிந்தது. அதனல் அவர் ஒருநாள் உறையூரில் கோப்பெருஞ் சோழனைச் சென்று கண்டார். எஞ்ஞான்றும் சான்ருேர் சூழ இருப்பதையே பெரிதும் விரும்பும்

இயல்பினனுதலால், அவர் வரவு கண்டதும் அவன் மனத்து நின்ற சினத்தீ சிறிது தணிந்தது.

நகர மெங்கும் போர் மறவர் ஆரவாரம் மிக்கிருத்தலை முன்னுரையாக மொழிந்து, "வேந்தே, நின்னுடன் போர்க்கெழுந்துள்ள வரை நோக்கின், அவர் நினக்குப் பகைவ ரல்லர்; அவர்க்கு நீதானும் பகைவனே எனின் அது தானும் இல்லை. பகைவர்க்கிடையே நடத்தற்குரிய போர் வெற்றிடத்தே நிகழ்வது வருந்தத் தக்கது. மேலும், போர் என்பது மன்னுயிர் பல இறத்தற்குரிய செயலாகும். மண்ணுலகத்து மணிமுடி சூடும் மன்ன ராயினும் இறத்தல் ஒருதலை. மன்னர் இறப்பின் அவரோடு அவரது நாடும் மேலுலகு செல்வது கிடையாது. அவர் வழிவந்தோரே பின்பு அந்நாட்டைப் பெறும் உரிமையுடையராவர். அம்முறையில் நினக்குப் பின், நின் மக்கள் இச் சோழ நாட்டுக்கு வேந்தராகும் வீறு பெற்றவர். இது நீ அறியாத தன்று. நாளை நடக்க இருக்கும் போரில் நின்மக்கள் தோற்று, இறந்து படுவராயின், இந் நாட்டை எவர் ஆட்சி புரிய விடுவாய்? நீ ஒருகால் தோற்பா யாயின் நின் பகைவர் மகிழ்வர்; பழி மிகுந்து நின்னைச் சூழ்ந்து கொள்ளும். ஆகவே, எவ் வகையால் நோக்கினும் நீ கருதிய போர் அறமோ புகழோ பயப்பதன்று; எனவே அதனைக் கைவிடுதலே செயற்பாலது. நேரிதுமாம்" என்றார்.

அது கேட்ட கோப்பெருஞ்சோழன் மனம் தடுமாற லுற்றது. அவன் மக்களுடைய மாண் பில் செயலை நினைக்குந்தோறும் அவனது நெஞ்சம் நீராய் உருகிற்று. அதன்மேல் மான வுணர்வு தோன்றி அவன் மன நோயை மிகுதிப்படுத்துவ தாயிற்று. ஆகவே, அவனது இயற்கையறிவு இனிச் செய்வது தெரியாது திகைப்புற்றது. அந்நிலையில் எயிற்றியனார் பல பட எண்ணி, "உயர்ந்தோர் உலகத்து உரவோர், விரைந்து வரவேற்பதாகிய நல்வினை யொன்றே மேற்கொள்ளத் தக்கது; வேறு செயல் வகை இல்லை" என்பவராய்,

"ஒழிகதில் அத்தைநின் மறனே,
வல்விரைந்து
எழுமதி; வாழ்கநின் உள்ளம்;
அழிந்தோர்க்கு
ஏம மாகும்நின் தாணிழல்; மயங்காது
செய்தல் வேண்டுமால் நன்றே,
வானோர்
அரும்பெறல் உலகத்து ஆன்றவர்
விதும்புறு விருப்பொடு விருந்தெதிர்
கொளற்கே" (புறம் 213)

என்று எடுத்தோதினர். அவர் கூறியது பெருஞ்சோழனுக்கு மன அமைதி தந்தது. அறிவு தெளிவுற்று வடக்கிருத்தலே மன நோய்க்கு மருந்தாம் எனத் துணிந்து அதற்கு வேண்டுவன செய்யத் தலைப்பட்டான்.

வடக்கிருத்தல் என்பது உண்ணாநோன் பிருந்து உயிர் விடும் செயலாகும். இதனைச் செய்பவர் ஆற்றிடைக் குறைகளிலோ, (தீவுகளிலோ) தண்ணிய பொழில்களிலோ, பெரிய வழிக்கரைகளிலோ ஓர் இடங்கண்டு புல்லைப் பரப்பி அதன் மேல் இருப்பர். போர்ப் புண் பட்டவரே போர்க்களத்தில் வாட் படையைப் பரப்பி அதன் மேலிருந்து உண்ணா திருந்து உயிர் விடுவர். அதனை வாள் வடக்கிருத்தல் என்பர். சேரமான் பெருஞ் சேரலாதன் வெண்ணிப்பறந்தலையில் வாள் வடக்கிருந்தது இச் செயல்வகையாகும். அம் முறைப்படியே கோப்பெருஞ்சோழன் காவிரி யின் ஆற்றிடைக் குறையில் — இப்போது திருவரங்கம் என வழங்கும் துருத்தியில்— ஓரிடத்தே வடக்கிருத்தலை மேற்கொண்டான். சான்றோர் பலர் அவனோடு உடன் இருந்தனர். அஃது அக்கால மரபு.

துறவு மேற்கொள்ளினும், வடக்கிருக்கத் துணியினும் அவற்றைச் செய்வோரை எத்தகை யோரும் தடுத்தல் கூடாது என்பது அந்நாளைய அறம். எனினும் அறிஞர் சிலர் போந்து, வடக்கிருந்து உயிர் துறப்பது, தற்கொலை போலும் சால்பில்லதாய், உயர்ந்தோருலகத்து இன்ப வாழ்வு எய்துவிக்கும் எனற்கு ஏது வாகாததாய் இருத்தலின், அது நன்று அன்று

என்ற கருத்துப்பட மொழிந்தனர். அதனை உடன்படாமல்,

> செய்குவம் கொல்லோ நல்வினை எனவே
> ஐயம் அருஅர், கசடுஈண்டு காட்சி
> நீங்கா நெஞ்சத் துணிவுஇல் லோரே;
> யானை வேட்டுவன் யானையும் பெறுமே
> குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே;
> அதனால், உயர்ந்த வேட்டத்து உயர்ந்திசி னோர்க்குச்
> செய்வினை மருங்கில் எய்தல் உண்டு; [1] எனில்
> தொய்யா உலகத்து நுகர்ச்சியும் கூடும்;
> தொய்யா உலகத்து நுகர்ச்சி இல் [2] எனின்
> மாறிப் [3] பிறப்பின் இன்மையும் கூடும்;
> மாறிப் பிறவா ராயினும் இமயத்துக்
> கோடுஉயர்ந் தன்ன தம்மிசை நட்டுத்
> தீதில் யாக்கையொடு மாய்தல்தவத் தலையே" (புறம்-214)

என்று இயம்பினன். அவன் மனத் திண்மை கண்ட சான்றோர் பெரிதும் வியந்தனர். உண்ணாநோன்பு இனிது நடைபெறுவதாயிற்று. உற்றார், நண்பர், சான்றோர் முதலிய பலர் அவனைச் சூழ இருந்துவரலாயினர். அவனுக்கு அமைச்சராய் இருந்த பொத்தியார் என்னும் சான்றோர், அவன் பிரிவாற்றாது தாமும் உடன் இருக்க விரும்பினர். அப்போது பொத்தியாரின்மனைவியார் கருவுற்றிருந்தனர். அதனை அறிந்த சோழன், மனைவி கருவுயிர்த்த பின் வருக எனப் பணித்தான். அவரும் அங்ஙனமே செய்வேன் எனச்சொல்லி உறையூர் சென்றடைந்தார்.

கோப்பெருஞ் சோழன் மக்கள், சேரமான் இளஞ்சேரல் இரும்பொறையோடு போர் தொடுக்க விழைந்து, சோழனை ஆதரிக்குமாறு வேண்டியதும், அவர்கட்கு அவன் அறிவுரை வழங்கியதும், அதனைக் கேளாது அவர்கள் போர் தொடுத்துப் பீடு அழிந்ததும், ஏனைப் பாண்டியரை உள்ளிட்டோர் அவர்களைத் தூண்டியதும் பாண்டி நாட்டுப் பிசிர்ஆந்தையார்க்குத் தெரிந்தன. சோழனது மன மாண்பையும், குணஞ்செயல்களையும் கேள்வியுற்ற பிசிராந்தையார் அவன்பால் பேரன்புடையரானார். அவ்வாறே சோழனும் ஆந்தையாரின் சான்றாண்மை அறிந்து அவர்பால் தன் உள்ளத்து உண்மை நட்பை உணர்ச்சி வாயிலாக உரிமை செய்தான். இருவரும் ஒருவரை ஒருவர் ஒருகாலும் கண்டதிலர். தம்மை அறியாமலே இருவரும் ஒன்றிய உள்ளத்து ஓங்கிய நட்புணர்ச்சி கொண்டனர். அது நாளடைவில் வளர்ந்து சிறந்து வந்தது. பாண்டியன் அறிவுடை நம்பியின் ஆட்சியின்கீழ் வாழ்ந்தாராயினும் அவருடைய எண்ணமெல்லாம் கோப்பெருஞ் சோழனிடமே ஒன்றியிருந்தன. சோழனை நினைந்த வண்ணம் ஒருநாள் ஆந்தையார் தம் மனைக்கண் இருந்தபோது அன்னமொன்று தெற்கிலிருந்து வடதிசை நோக்கிப் பறந்து சென்றது. அதனைக் கோப்பெருஞ் சோழனிருக்கும் உறையூர்க்குச்சென்று அவனைக் காணுமாறு கூறுவராய், "அன்னச் சேவலே, நீ சோழ நாட்டு உறையூர்க்குச் சென்று சோழர் பெருமானுடைய பெருமனையில் தங்கி,

> பெருங்கோக் கிள்ளி கேட்க இரும்பிசிர்
> ஆந்தை அடியுறை எனினே, மாண்டநின்
> இன்புறு பேடை அணியத்தன்
> நன்புறு நன்கலன் நல்குவன் நினக்கே.

(புறம்—67) என்று பாடுவது அவரது அன்பு மிகுதியை இனிது புலப்படுத்துகின்றது. அன்றியும், அவரை யாவரேனும் கண்டு நும் பெயர் யாது? எனக்கேட்பின், என்பெயர் கோப்பெருஞ்சோழன் என்று கூறும் அளவுக்கு ஆந்தையாரின் அன்பு விஞ்சி நின்றது.

---

(1) எனில்-என்று சான்றோர் கூறுதலால்.
(2) எனின்-என்பார் உள ராயின்.
(3) பிறப்ப தாகிய மறுபிறப்பு.

இவ்வாறு இருக்கையில் கோப்பெருஞ் சோழனுக்குப் பிசிராந்தையாரைக் காண்டல் வேண்டு மென்ற விருப்ப முண்டாயிற்று. நாடோறும் அந்த விருப்பம் மிகுந்து பெரு வேட்கையாக மாறிற்று. அவனுடைய எண்ணத்தின் திண்ணிய அலைகள் சென்று ஆந்தையாரைச் சார்ந்தன. அவரும் சோழனைக் கண்டு மகிழக் கருதினர். சிறந்த குடும்பத்தின ராதலால் அவர் நினைவு தோன்றியவுடனே புறப்படவில்லை. கோப்பெருஞ் சோழனுக்கு மாத்திரம் வடக்கிருக்கும் தன் உயிர் நீங்குமுன் அவரைக் காணவேண்டு மென்ற அவா மேலும் பெருகி முறுகுவதாயிற்று.

ஒரு நாள் அவன் உடனிருந்த சான்றோரை நோக்கி, "என் நண்பரான ஆந்தையார் இங்கே வருவார்; அவர் இருத்தற்கு ஓர் இடம் அமைப்பீராக" என்றான். அதுகேட்ட சான்றோர், "உண்ணாநோன்பின் கடுமையால் இவ்வண்ணம் கூறுகின்றான் போலும்" என நினைந்து தம்முள் வருந்தினர். அவர் குறிப் பறிந்த கோப்பெருஞ் சோழன், தன் மனத்தின் தெளிவு புலப்பட,

"தென்னம் பொருப்பின்
நன்னாட் டுள்ளும்
பிசிரோன் என்பஎன்
உயிரோம் புநனே;
செல்வக் காலை நிற்பினும்
அல்லற் காலை நில்லலன் மன்னே"

(புறம்—215) என ஓர் அழகிய பாட்டால் பரிந்துரைத்தான். அதனைக் கேட்டும் சிலர் ஐயம் நீங்காராகச் சோழன் அவர்களை நோக்கி "அறிவுடையீர், ஐயம் கொள்ளன்மின்; என் நண்பனான ஆந்தை, இகழ்விலன்; இனியன்; யாத்த நண்பினன்; புகழ்கெட வரூஉம் பொய் வேண்டலன்; சிறந்த காதற்கிழமையுடையன்; இன்னதோர் காலை நில்லலன்; இன்னே வருகுவன்; அவற்கு இடம் ஒதுக்கி வைம்மின்" (புறம்—216) என்றான். சின்னாட்களில் அவன் உயிர் நீங்கிற்று. சான்றோர் ஒரு நடுகல் அமைத்து அதன்கண் அவனுடைய பெயரும் பீடும் எழுதி அதன் முடியில் மயிற் பீலி சூட்டி வழிபாடு செய்தனர்.

நடுகல்லாகிய சின்னாட்களில் பிசிராந்தையார் பாண்டி நாடு கடந்து சோழநாட்டு உறையூர் போந்து, சோழன் வடக்கிருந்து நடுகல்லாயினமை அறிந்து வருந்தினர். பின்னர்த் தமது பிசிர்க்குடிக்குச் செல்லாது தாமும் அவனோடே வடக்கிருந்து உயிர் துறத்தற்குத் துணிந்து, காவிரியைக் கடந்து அவனது நடுகல் இருக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தார். அவர் வரவறிந்ததும் சான்றோர் பலர் போந்து அவரைச் சிறப்புடன் வரவேற்றுப் பாராட்டி நடந்தது முற்றும் நன்கு நவின்றனர். அதனால் ஆந்தையார்க்கு உண்டான துயர்க்கு அளவில்லை. தாமும் அவனுடன் வடக்கிருந்து உண்ணாநோன்பு மேற்கொண்டனர். அவரை நேரிற் கண்ட சான்றோர், முதுமை தோற்றும் முகமும், அதற்கேற்ப அமைதற்குரிய நரைதிரைகளின்றி மொழு மொழு வென விளங்கும் மேனியும் நோக்கி, வியப்புமிக்குச், "சான்றீர், உங்களைப் பற்றிப் பலகாலமாகக் கேள்வி யுற்றிருக்கின்றோம்; அற்றாக, நரைதிரைகள் சிறிதும் உங்கள் மேனிக்கண் தோன்றாமைக்குக் காரணம் என்னையோ?" என்று வினவினர்.

அவர்கள் கேட்ட வினாவுக்கு மனம் மகிழ்ந்த ஆந்தையார், முறுவலித்து, "யாண்டு பல ஆக நரையில ஆகுதல் யாங்கு ஆகியர் என வினவுதிர்" என்று தொடங்கி, என் மனையில் உறையும் மனைவி, மனத்தக்க மாண்புடையள்; என் மக்களும் அறிவன அறிந்தொழுகும் அமைதியுடையர்; ஏவலரும் என் குறிப்பறிந்து ஏவின செய்யும் இயல்புடையர்; எங்கள் ஊரில் ஆன்றவிந்து அடங்கிய கொள்கை கொண்ட சான்றோர் பலர் உளர்; எங்கள் வேந்தனும் அல்லவை செய்யாது நாடு காவல் புரிகின்றான். இவ்வாற்றால் மனை வாழ்வும்,ஊர் வாழ்வும், நாட்டு வாழ்வும் நன்கு இயலுவதால் என் மனம் கவலை நோய்க்கு இடனாகாமையால் யான் நரை இல்லேனாயினேன்" என்ற கருத்துப்பட,

"மாண்டஎன் எணவியொடு மக்களும்
நிரம்பினர் ;
யான்கண் டனையர்என் இளயரும்;
வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும்;
அதன்றலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழும் ஊரே"
(புறம்-191)

என்ருர். எல்லோரும் வியப்பும் மகிழ்வும் ஒருங்கெய்தி இன்புற்றனர்.

அக்காலை அவரைக் காணப் போந்த சான்றோருள் பொத்தியாரும் ஒருவர். அவரை ஆந்தையார் நன்கு கேட்டிருந்ததுடன் "பொத்தில் நண்பின் பொத்தி" எனப் பாராட்டுபவராதலின், பொத்தியாரும்ஆந்தை யாரும் தம்மில் அன்புடன் அளவளாவி இன்புற்றனர். எனினும், அவர் வருவதற்குள் சோழன் நடுகல்லானது ஆருத்துயரை விளை வித்தது. அவன் உரைத்த வண்ணமே ஆந்தையார் வந்தது, அவர்க்கு மிக்க வியப்பைத் தந்து சோழனது அறிவின் ஒட்பத்தை உள்ளத்தே நினைப்பித்தது. அதனுல் கண் கலுழ்ந்து கையற்று வருந்தினர்; அவ்வருத்தம் ஒரு பாட்டாய் வெளி வந்தது. அதன்கண் ஆந்தையார் வருகையை வியந்து,

"நினைக்குங்காலை மருட்கை யுடைத்தே
எனைப்பெருஞ் சிறப்பினேடு ஈங்குஇது
துணிதல் ;
அதனினும் மருட்கை யுடைத்தே
பிறன்நாட்டுத்
தோற்றம் சான்ற சான்றோன் போற்றி
இசைமர பாக நட்புக்கந் தாக
இனயதோர் காலை ஈங்கு வருதல்"

என்று வாய்விட்டுக் கூறினர். அப்போது சோழனுடைய பெருமையும், ஆந்தையாரது அறிவு நலமும் அவர் மனத்தில் எழுந்தன. அதனுல்,

"வருவன் என்றகோனது பெருமையும்
அதுபழு தின்றி வந்தவ னறிவும்
வியத்தொறும் வியத்தொறும்
வியப்பிறந் தன்றே"

என்ருர். அந்நிலையில் கோப்பெருஞ்சோழ னுடைய நடுகல் கண்ணிற் பட்டது. உடனே அவர் நெஞ்சில் கவலையும் கையறவும் பெருகித் தோன்றின. அதனுல்,

தன்கோல் இயங்காத் தேயத் துறையும்
சான்றோன் நெஞ்சுஅறப் பெற்ற
தொன்றிசை
அன்னேனை இழந்தஇவ் வுலகம்
என்னு வதுகொல் அளியது தானே
(புறம்: 213)

என்று புலம்பினர்.

இந்நிகழ்ச்சியைக் கண்டபிசிராந்தையார்க் குத் தாம் கோப்பெருஞ் சோழனேடு மன மகிழ உரையாடி இன்புறுதற்கு வாய்ப் பில்லாமையை நினைந்தார். உயிரொன்றிய நண்பரைப் பிரிந்த பின் அவர்க்கு இவ்வுலகம் வெறிதாகத்தோன்றிற்று. மனைவியும்,மக்களும், ஊரும், நாடும் அவர் உள்ளத்தில் இடம் பெற வில்லை. தம் உயிரைக் கொண்டு அச்சோழன் உயிரைக் காணும் வேட்கையராய் வடக்கிருக்க லுற்ருர். சின்னுட்களில் அவரும் உயிர்துறந்து நடுகல் ஆனுர். இதற்கு இடையில் பொத்தியார் மனைவியார் கரு வுயிர்த்தார். அது பற்றிப் பொத்தியார் தமது மனைக்குச் சென்று மகன் பிறந்தானைக் கண்டு அவனது எதிர்கால வாழ்வுக்குரிய ஏற்பாடுகளைச் செய்து உறையூர் வந்து சேர்ந்தார்.

பொத்தியார்க்கு உறையூர் தந்த காட்சி அவர் உள்ளத்தை வருத்திற்று. தன் உயிர் போற் பேணி வளர்த்த பெருங்களிறு இறந்து படின், அது நின்ற வெளில் பாழ்பட்டது கண்ட பாகனைப் போல அவர் நெஞ்சம் கையற்றுப் பெரும் புலம்புற்றது. அவர்,

"பெருஞ்சோறு பயந்து பல்யாண்டு
புரந்த
பெருங்களிறு இழந்த பைதற் பாகன்
அதுசேர்ந்து அல்கிய அழுங்கல் ஆலே
வெளில்பா ழாகக் கண்டு கலுழ்ந்
தாங்குக்
கலங்கினெ னல்லனோ யானே பொலந்
தார்த்
தேர்வண் கிள்ளி போகிய
பேரிசை மூதூர் மன்றம் கண்டே"

என்று பாடிப் புலம்பினர்.

பின்பு, அவர் காவிரியைக் கடந்து சோழன் வடக்கிருந்து நடுகல்லாகிய இடம் அடைந்தார். அதனைக்காணுந்தோறும் அவரது மனம் கரைந்து கண்ணீராய் வழிந்தது. அவனுடைய இன்னுயிரைக் கவர்ந்த கூற்றுவன் மேல் மாருச்சினம் எழுந்தது. அங்கு வந்திருந்த சான்றோரை நோக்கினர். அவர் அனைவரும் கண்ணீரும் கம்பலேயுமாய் நின்றனர். "சான்றோர்களே! கோப்பெருஞ்சோழன் பாடுநர்க்கு ஈத்த பல் புகழாளன்; ஆடுநர்க்கு அளித்த பேரன்பாளன்; அறவோர் புகழ்ந்த அரிய செங்கோலன்; திறவோர் புகழ்ந்த திண்ணான் பினன்; மகளிர் சாயல்; மைந்தர்க்கு மைந்து; உயர்ந்தோர் புக்கில். இத்தகைய தக் கோனைக்கொன்ற கூற்றுவன் கொடியன்; அவனை

வைகம் வம்மோ வாய்மொழிப் புலவீர்
நனந்தலே உலகம் அரந்தை தூங்கக்
கெடுவில் நல்லிசை சூடி
நடுகல் ஆயினன் புரவலன் எனவே"

(புறம்: 221) என்று கதறினர். முடிவில் சோழனை நினைந்து, "நின்னோடு வடக்கிருக்க விரும்பிய என்னை விலக்கி, மகன் பிறந்த பின் வருக எனப் பணித்தாய்; அவ்வண்ணமே வந்துளேன்; எனக்கு இடம் யாது?" என்பராய்,

"புகழ்சால் புதல்வன் பிறந்தபின்
வாஎன
என்இவண் ஒழித்த அன்பி லாள
எண்ணு திருக்குவை யல்லே
என்இடம் யாதுமற்று இசைவெய்
யோயே"

(புறம்; 222) என்று சொல்லித் தாமும் வடக்கிருந்து உயிர் நீக்கத் துணிந்தார். அவர்க்குக் கொடுக்கப்பட்ட இடத்தை ஆங்கு இருந்தோர் காட்டக் கண்டு பெரு வியப்புற்ற பொத்தியார்,

நிலேபெறு நடுகல் ஆகியக் கண்ணும்
இடம்கொடுத் தளிப்ப மன்ற
உடம்போடு
இன்னுயிர் விரும்பும் கிழமைத்
தொன்னட் புடையார் தம்முழைச்
செலினே"

(புறம்: 223)

என்று பாடி வடக்கிருந்து உயிர் நீத்தார்.

இச் செய்தி நாடு முழுவதும் பரவிற்று. சோழன் தொடர்பு மிகவுடைய சான்றோருள் கருவூர்ப் பெருஞ்சதுக்கத்துப் பூத நாதனர் என்ற சான்றோர் போந்து கண்டு பெருந்துயர் கொண்டு வருந்தினர். சோழனையும், பாண்டி நாட்டு ஆந்தையாரையும், பிறரையும் கண்டு கழிபெருந்துயர் கொண்ட கண்ணகனர் என்னும் சான்றோர்,

பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய
மாமலே பயந்த காமரு மணியும்
இடைபடச் சேய வாயினும்
தொடைபுணர்ந்து
அருவிலே நன்கலம் அமைக்குங் காலே
ஒருவழித் தோன்றியாங்கு
என்றும் சான்றோர்
சான்றோர் பால ராப
சாலார் சாலார் பால ராகுபவே"

(புறம்:218)

என்று பாடினர்.

மனித வாழ்க்கைக்கு வேண்டுவன

திரு. வி. ஆர். செல்லப்பன், எம். ஏ.,
தமிழ்த்துறைத் தலைவர், மகாராசர் கல்லூரி, மைசூர்.
முன்னாள் முதல்வர், சன்மார்க்கசபை, செந்தமிழ்க் கல்லூரி.

மனித வாழ்வுக்குத் தேவையான பொருள்கள் பலவுளவேனும் முக்கியமாக வேண்டப்படுவன மூன்று. அவை உணவு, கல்வியறிவு, நற்பண்பு என்பன. இம்மூன்றனுள்ளும் முதன்மையாக வேண்டப்படுவது உணவு: ஏனெனில் உணவு இன்றேல் உயிர் வாழ்க்கையில்லை. சுவரை வைத்தன்றோ சித்திரம் எழுதவேண்டும். இது பற்றியே உணவினை "ஆருயிர் மருந்து" என்றும், உடலினை "உணவின் பிண்டம்" என்றும்' உண்டி கொடுத்தோரை "உயிர் கொடுத்தோர்" என்றும் ஆன்றோர் கூறிப் போந்தனர். இங்கு உணவு என்று பொதுப்படக் கூறப்பட்டாலும் அச் சொல் உடையையும், உறையுளையும் உட்கொண்டதாகும். எந்த நாட்டில் மக்கள் உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி இருக்கக் கூரையின்றி வறுமையால் வாடுகின்றார்களோ அந்த நாட்டில் கல்வி வளர்ச்சியையோ, அறிவு வளச்சியையோ ஒழுக்கமேம்பாட்டையோ எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் வறுமையால் வாடி வதங்கும் மக்கள் தம் பசியின் கொடுமை காரணமாக எத்தகைய இழி தொழிலையும் செய்யத் தயங்கார். அரச குடியிற் பிறந்த விசுவாமித்திரனே பசியின் கொடுமையைத் தாங்கமாட்டாது, நாயின் ஊனை உண்ணத் தொடங்கினானென்றால் ஏனைய சாதாரண மக்களைக் குறித்துச்சொல்ல வேண்டுவது என்ன இருக்கிறது? இதுபற்றியன்றோ "பசித்தவன் புசியாத தில்லை, பகைத்தவன் சொல்லாத தில்லை" என்ற பழமொழியும் நாட்டில் எழலாயிற்று. உலகத்தில் நடைபெறும் இழி தன்மை வாய்ந்த பாவச்செயல்களில் நூற்றுக்குத் தொண்ணூறு வறுமை காரணமாக நிகழ்வனவேயாம். பசியின் கொடுமை இத்தன்மைத் தென்பதை,

"மானம் குலம்கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவம்முயற்சி தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்பறந்து போம்"

என்னும் ஔவையார் வாக்கும்,

"குடிப்பிறப் பழிக்கும் விழுப்பம் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாணணி களையும் மாணெழில் சிதைக்கும்
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி என்பதோர் பாவி"

என்னும் சாத்தனார் வாக்கும் படம் பிடித்துக் காட்டுகின்றன, பசியால் வாடிவருந்தும் மக்களுக்கு எத்துணை அறவுரைகள் போதித்தாலும் அவை அவர்கள் காதில் ஏறமாட்டா. அன்னாருக்குச் செய்யும் உபதேசங்கள் செவிடன் காதில் ஊதிய சங்காகவும், விழலுக்கிறைத்த நீராகவும் முடியுமன்றிப் பயன்தர மாட்டா. கடவுள்கூட அவர்கள் முன்னிலையில் சோற்றுமலையாகத் தோற்றமளித்தால் வரவேற்பார்களேயன்றி வேற்று வடிவில் வந்தால் வேண்டாமென ஒதுக்கித் தள்ளிவிடுவர். "சருகு பொறுக்க நேரமிருக்கிறதேயன்றிக் குளிர்காய நேரமேது" என்ற பழமொழிப்படி அவர்கள் தம் வயிறு வளர்ப்பதற்கே காலம் போதாதபோது கல்வி பயிலுவதற்கோ, நல்லுரை கேட்பதற்கோ காலமேது? ஆகவே மனித இனம் முன்னேற வேண்டுமானால் அதற்கு அடிப்படையாகவுள்ள உணவும்,

உடையும் போதிய அளவில் கிடைப்பதற்கான வழி வகைகள் ஏற்பட வேண்டும்.

உணவு மனித வாழ்க்கைக்கு இன்றியமையாததெனினும் உடற்பசி நீங்கின மாத்திரத்தில் மனித சமுதாயம் திருப்தியடைந்து விடுவதில்லை. அடுத்தபடியாக ஏற்படுவது, அறிவுப் பசி. அதனைத் தீர்த்துக் கொள்வதற்கு மனிதன் பல்லாற்றானும் முயல்கிறான். நாகரிகப் படியில் மனிதன் இவ்வளவுதூரம் முன்னேறியிருக்கிறானென்றால் அதற்குக் காரணம் அவனுடைய அறிவுத் தாகந்தான். இன்று நீரையும் நிலத்தையும், காற்றையும் கனலையும், விண்ணையும், மண்ணையும் மனிதன் கட்டி ஆள முயல்கிறானென்றால் அதற்குக் காரணம் அவனுடைய அறிவுப்பசிதான். ஏனைய விலங்குகளினின்றும் மனிதனை வேறு பிரித்துக் காட்டுவது அவனுடைய அறிவுத்திறனேயன்றோ! அவ்வறிவு வளர்ச்சிக்கு அடிப்படையாக விளங்குவது கல்வி. கல்வி என்பது 'கல்' என்னும் பகுதியினடியாகப் பிறந்ததோர் சொல். கல்லுதல் என்பதற்குத் தோண்டுதல் என்று பொருள். ஆகவே கல்வி கற்றல் என்பது அறிவை ஆழமாகச் செலுத்துதல் என்னும் பொருளில் உபயோகப்படுத்தப்படுகிறது. இதனை,

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு"

என்னும் குறள் வாக்கியத்தானுணரலாம். மனிதன் தன் கல்வி வன்மையால் விஞ்ஞான அறிவு, உலகியலறிவு, இயற்கையறிவு, ஆன்ம அறிவு முதலிய பலதிறப்பட்ட அறிவு நுட்பங்களில் தன் கருத்தைச் செலுத்தித் தன் திறனுக்கேற்றவாறு ஒன்றிரண்டில் வெற்றியும் பெறுகிறான். பலதிறப்பட்ட இவ்வறிவு வளர்ச்சியின் காரணமாக மனிதனுடைய தேவைகளும் பெருகிக்கொண்டு செல்கின்றன. அத்தேவைகளைப் பூர்த்தி செய்யும்பொருட்டு மேலும் மேலும் தன் அறிவைக் கூர்மைப்படுத்திக் கொண்டே செல்கிறான். இவ்வறிவுப் போட்டி காரணமாக மனித சமுதாயத்துக்குப் பலவித நன்மைகள் ஏற்படுகின்றனவெனினும் சிற்சில சமயங்களில் பெருந் தீங்குகளும் ஏற்படுகின்றன. விஞ்ஞான அறிவைப் பெருக்கிக்கொண்ட இனம் ஏனைய பிற்போக்கான இனங்களைத் தன் அதிகார பலத்தால் கட்டியாள விரும்புகிறது. இதனால் மனித இனத்துக்கே அழிவு ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சங்கூட எழுகின்றது. இது அறிவின் குற்றமன்று; அதனை உபயோகிக்கும் மானிட இனத்தின் குற்றமேயாகும். அறிவு கூரிய கத்திபோன்றது. அக்கத்தியை நன்மைக்கும் பயன்படுத்தலாம்; தீமைக்கும் பயன்படுத்தலாம். உதாரணமாக விஞ்ஞான வளர்ச்சி காரணமாக விருத்தியடைந்துள்ள அணு சக்தியைக்கொண்டு காடு கெடுத்து நாடாக்கிக், குளந்தொட்டு வளம் பெருக்கி உணவுப் பொருள்களை ஏராளமாக உற்பத்தி செய்து உயிரி (பிராணி)களைக் காக்கலாம். நோய் முதலியவற்றைத் தடுக்கலாம். கைத்தொழில், வாணிகம், போக்குவரத்துச் சாதனங்கள் முதலியவற்றை அபிவிருத்தி செய்து மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தலாம். அதே அணுசக்தியைக் கொண்டு உலகத்தையே ஒரு நொடிப்பொழுதில் அழித்து நிர்மூலமாக்கிவிடலாம். ஆகவே மனிதனுக்கு இயற்கையாயெழுகின்ற அறிவுப் பசி இயற்கையின் இரகசியங்களைக் காண முனைவதில் தவறென்றுமில்லை*. ஆனால் அங்ஙனம் கண்டுபிடிக்கப்பட்ட இரகசியங்கள் அறவழியில் பயன்படுத்தப்படல் வேண்டும்.

---

* குறிப்பு :— "அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு" என்ற பழமொழிக்கிணங்க, விஞ்ஞானம் தலைகால் தெரியாமல் வளர்ந்துகொண்டு போனால், மனிதனின் சுயநலங் காரணமாகவும், சபல சித்தங் காரணமாகவும் அது தவறான வழியில் பயன்படுத்தப்பட்டு, அதனால் இந்நிலவுலகுக்கே பேராபத்து விளையக்கூடுமென்றும், ஆகவே சர்வதேச விஞ்ஞானிகளின் சங்கமொன்று அமைக்கப்பட்டு, அச்சங்கத்தின் கண்காணிப் பின்கீழ் ஒரு வரையறைக்குட்பட்டு, மனித சமுதாயத்துக்குப் பயன்படத்தக்க முறையில் விஞ்ஞானம் வளர்ந்துவரவேண்டுமென்றும் அறிவியல் ஞானிகள் (Humanitarian Philosophers) கூறியும் எழுதியும் வருகின்றனர்.

“ ....அறப்பயனும்
தான்சிறி தாயினும் தக்கார் கைப்
பட்டக்கால்
வான்சிறிதாப் போர்த்து விடும்.”

என்ற நாலடியார்வாக்கிற்கிணங்க, விஞ்ஞானம் நல்லார் கைப்பட்டால் அதனுல் நன்மை பல உண்டு. தீயார் கைப்பட்டால் அது குரங்கு கையிலகப்பட்ட பூமாலையாக முடியும். பெரு வாரியான காட்டு வெள்ளத்தை அணை கட்டித் தேக்கி அந்நீரை விவசாயத்துக்கும், மின்சார உற்பத்திக்கும் பயன்படுத்தி அதனுல் நாட்டு வளப்பத்தைப் பெருக்கவும் செய்யலாம். அவ்வாறன்றித் தேக்கத்தை உடைத்து எத்தனையோ ஊர்களை அழிக்கவும் செய்யலாம். இத்தண்ணீரின் சக்தி போன்றதுதான் விஞ்ஞானத்தின் சக்தியும். அச்சக்தியை ஆக்கத்துக்கும் பயன்படுத்தலாம்; அழிவுக்கும் பயன் படுத்தலாம்.

மனித வாழ்வுக்கு வேண்டிய மூன்ருவது தேவை நற்பண்பு. மனிதன் எவ்வளவு தூரம் கல்வியறிவில் மேம்பட்டுச் சென்ருலும் பண்பு இல்லையேல் அவனுடைய வாழ்க்கை பூரணத்தன்மை அடைந்ததாக மாட்டாது. அவன் எவ்வளவுதான் அறிவுச் சிகரத்தை எட்டிப் பிடித்தாலும் அவனிடத்துச் சத்தியமும் சீலமும் இன்றேல் அவனுல் அமரத்தன்மை எய்த இயலாது. எந்த விஞ்ஞானியும், எந்த அறிவாளியும் இம் மண்ணுலகத்தை விட்டு நீங்கவேண்டியவர்களே. “இருப்பது பொய் இறப்பது மெய்” என்பதை ஒவ்வொரு மனிதனும் உணரவேண்டும். “முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவில் ஒரு பிடி சாம்பராய் வெந்து மண்ணுவதை நாம் நாடோறும் கண்கூடாகக் காண்கிருேம். “நெருநல் உளனெருவன் இன்றில்லை என்னும் பெருமை யுடைத்” தன்ருே இவ்வுலகு. இத்தகைய நில்லாவுலகில் நிலைபெற விரும்புவோர் தாம்அறிவு வளர்ச்சியில் செலுத்தும் ஆர்வத்தைக்காட்டிலும் பன்மடங்கு அதிகமாக ஆன்ம நேயத்தில் செலுத்தவேண்டும். குணக்குன்ருக, சத்தியசீலராக, அன்பின் வடிவாக விளங்கப் பாடுபடல் வேண்டும். கல்வியறிவினும் சீலம்சிறந்ததென்பதை “ஓதலிற் சிறந்தன்ருெழுக்கமுடைமை” என்றவாக்காலும், உயிரினும் சீலம் சிறந்த தென்பதை “ஒழுக்கம் விழுப்பந்தரலால் ஒழுக்கம் உயிரினும், ஓம்பப் படும்” என்ற வாக்காலும் உணரலாம். மனிதன் வெளி உலகத்தை வெற்றிகொள்ள விழைதலினும் தன் மனத்தைக் கட்டியாளப் பழகுதல் நல்லது. மனிதனது மனம் குரங்கு போல் தாவிப்பாயும் தன்மை வாய்ந்தது. அவ்வாறு குதிக்கவிடாமல் அடக்கியாள வேண்டும். செம்புப்பாத்திரம் களிம்பேறும் தன்மையது போல் மனித உள்ளம் மாசுபடும் தன்மையது. பாத்திரத்தை நாடோறும் கழுவி வருதல் போல மனமாசை அடிக்கடி துடைத்து வர வேண்டும். மனிதன் தன்னை நேசிப்பது போல் பிறரையும் நேசிக்கவேண்டும். தன் துக்கத்தைப் போல் பிறர் துக்கத்தையும் காண வேண்டும். அன்புக்கயிற்ருல் பிறரைப் பிணிக்கும் சக்தியைப் பெறவேண்டும். சந்தர்ப்பம் நேரும் போது தன்னுடைய தனத்தையும் அர்ப்பணம் செய்யத் சித்தமாயிருக்க வேண்டும். இத்தகைய தியாகபுத்தி படைத்த சன்மார்க்க சீலர்களே தம்முடைய பூதவுடல் அழியினும் புகழுடம்பால் நின்று நிலவுவோராவர். ஏனையோரெல்லாம் நீர்வழிப்பட்ட புணைபோலக் கால வெள்ளத்தால் இழுத்துச் செல்லப்படுவர். அங்ஙனம் தம்மை உலகுக்கு அர்ப்பணித்த உயர்ந்தோர்களின் ஆன்ம நேயத்தால்தான் இவ்வுலகம் நின்று நிலவுகிறது. ஆகவே மனிதன் அறிவையும், ஆன்ம நேயத்தையும் வளர்க்கக்கூடிய பண்பு வாய்ந்த கல்வியைப் பயிலவேண்டும். பயின்று அதன் படி நிற்கப்பழக வேண்டும். அங்ஙனம் நிற்கப் பழகுவோர்களே இவ்வுலகில் வாழவேண்டிய விதிப்படி வாழ்வோராவர். அவர்கள் மானிடரேயாயினும் தேவர்களாக மதித்துப் போற்றப்படுவர்.

“கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக”

“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்”

— திருக்குறள்.

முதற் குறள்

புலவர் மு. கோவிந்தசாமி, எம். ஏ., தமிழ் விரிவுரையாளர்.
(முன்னுள் முதல்வர், சன்மார்க்கசபை, செந்தமிழ்க் கல்லூரி, அண்ணுமலைநகர்.)

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

அணுவைத் துளைத்து எழு கடலைப் புகட்டி யது குறள் என ஔவையரே பாராட்டினுர். திருக்குறளிலுள்ள குறட் பாடல் பலவற்றிற்கு நூல்களே எழுதலாம். இம்முதற்குறள் அவ் வகையுட் சேர்ந்ததொன்ருகும். இக்குறள் ஒன்றினையே விளக்கி நூல்கள் எழுந்துள்ளன; உரைகள் பெருகியுள்ளன. முதலிலேயே வள்ளுவர் பொருளைப் பொதிய வைத்தார் என்பதனைவிட அங்குப் பொருள் பொதிந் தமைந்தது என்பதே சிறப்புடைத்தாம். எனவே குறள், இயற்றப்பட்ட நூல் என்பதை விட இயன்ற 'இயல்பான' நூல் என்பதே பொருத்தமானதாகும். இத்தகைய நூல்களைத் தான் 'விளங்கிய அறிவின் முனைவன் கண்ட முதல் நூல்' என்றனர் ஆன்ருேர்.

திருவள்ளுவர் காலத்தைப்பற்றி இரண்டு மூன்று கோட்பாடுகள் உள்ளன. கி. மு. முதல் நூற்ருண்டு; கி. பி. இரண்டாம் நூற்ருண்டு; கி. பி. ஆரும் நூற்ருண்டு என்ற அம்மூன்ற னுள் கி. பி. இரண்டாம் நூற்ருண்டுக் கோட் பாடே பெரிதும் உண்மையாதல் கூடும். வரலாற்ருசிரியர் பலர் கி. பி. ஆரும் நூற் ருண்டுக் கொள்கையைப் பாராட்டினுலும் அது குறள் மிகுதியாகப் பரவிய காலம். திருவள்ளுவமாலை தோன்றிய காலம் என்பதே பொருத்தமுடையதாதல் கூடும். வள்ளுவர் காலம் கி. மு. முதல் நூற்ருண்டு என்பது எவ்வளவுதூரம் உண்மையாகுமோ? கி. மு. 200 முதல் கி. பி. 300 வரை 500 ஆண்டுக் காலம், வரலாற்றுள் 'ஒரு பகுதியாக' வகுத்துப் பேசப்படுகின்றது. எனவே அரசியல் நிலை, கால நிலையைப் பொறுத்தமட்டில் இந்த 500 ஆண்டுக் காலம் ஒரே அமைப்புடையதென்ன லாம். இக்கால நிலையை மனத்துட் கொண்டு திருக்குறளையும், இம்முதற் குறளையும் ஆராய வேண்டும்.

வள்ளுவ மாலையில் பாடிய நக்கீரரே இறையனுரகப்பொருளுரையைஎழுதியவராவர்; அவ்வுரையில் மேற்கோளாக இரண்டொரு குறட் பாக்களை எடுத்தாண்டுள்ள அவரே கடைச்சங்க நூல்களுள் குறள் சேர்ந்ததாகக் குறிக்கவில்லை. எனவே குறள் கி. மு. முதல் நூற்ருண்டிற்குரியதென்பது பொருந்தாத தாம்; கடைச்சங்கத்திற்கடுத்த நூற்ருண்டில் குறள் இயற்றப்பட்டிருத்தல் கூடும் என்பதற் கும் இதுவே சான்ருகும்.

மூட நம்பிக்கையோ நல்ல நம்பிக்கையோ வேண்டியதில்லை. ஒரு செயலின் தொடக்கம் அழகாகவும் இனிமையாகவும் இருக்கவேண்டு மென அனைவரும் விரும்புவர். 'அகர முதல' என முதலெழுத்தைக் கொண்டு ஆசிரியர் நூலைத் தொடங்கியதே மங்கலமென்னலாம். மற்றும் தமிழிலக்கியங்களுள் கடவுளை முத லாகப் பாடி நூலைத் தொடங்கியதே குறளில் என்னலாம். எழுத்துக்களுள் தொடக்கமும் அகரம்; இந்நூலின் தொடக்கமும் அகர மாகின்றது. எல்லோருக்கும் பொதுவானதும் எல்லோரும் ஒப்பக்கூடியதுமாகிய ஒன்றே 'நன்று' (நன்மை) எனப்படுவது: எல்லா மொழியினரும் தொடக்கமாக ஒப்பிய ஒலி அகரமாகும்; எனவே அதனைக் கொண்டு நூலைத் தொடங்கியதே மங்கலம் (நன்மை) ஆகும்.

அகரத்தில் தொடங்கி, ‘இன்பம் கூடி முயங்கப் பெறின்’ என னகரத்தில் முடிக்கிஞர். எனவே குறள் அகரமுதல் னகர இறுவாய் கொண்ட முழு நூல், முற்றுப் பெற்ற நூல் எனவெல்லாம் பாராட்டுவர். முதலும் முடிவுமாகிய பகவனைப் பாடித் தொடங்கிய குறள் முழுமையுடையதென்பதில் ஐயமில்லை. கி. பி. ஆரும் நூற்றாண்டிலேயே குறளினது பால், இயல், அதிகார அமைப்புக்கள் பற்றி வள்ளுவமாலையில் வரையறைகள் கூறப்படுகின்றன. ஆனல் உரையாசிரியர்கள்,அதிகாரங்களில் குறள்களைப் பொருளுக்கேற்றபடி முன்பின் அமைத்துக்கொண்டிருக்கலாம் எனத் தோற்றுகின்றது. பரிமேலழகர் முதலோரே ‘கூடிமுயங்கப்பெறின்’ என்ற குறளைக் கடைசியாக வைக்கின்றனர். மணக்குடவர் போன்ற பரிமேலழகர்க்கும் ஆசிரியர்கள், ‘புலத்தலின் புத்தேள்நாடுண்டோ’ என்ற குறளையே கடைசியிலமைத் துரையெழுதியுள்ளனர். அக்குறள் ‘நிலத்தொடு நீரியைந் தன்னு ரகத்து’ என முடிவதாகும். தமிழ் உலகமெல்லாம் ஒருசேர அறிந்து நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து இன்புறும் “செம்புலப் பெயல்நீர் போல அன்புடை நெஞ்சம் தாங்கலந் தனவே” என்ற குறுந்தொகை வரிகளை நினைவூட்டி முடிவதாகும். ‘நிலத்தொடு நீரியைந் தன்னு ரகத்து’ என்ற கடைசிக் குறள்வரி. அகரத்தில், தொடங்கி அகத்து எனக் குற்றியலுகரத்தில் முடியும் இவ்வமைப்பிலும் ஓர் ஏற்றம் இல்லாமலில்லை. முதலும் முடிவும் இறைவனுதல் போல இங்கு அகரம் நிற்கின்றது. அகத்து என்பது நெஞ்சத்து எனப் பொருளானல், திருக்குறள், ‘நெஞ்சத்துள்’ சென்று நிற்கின்றது, பதிகின்றது எனப் பாராட்டலாம்: மற்றும் குறள் என்ற பெயருக்கேற்ப அகத்து எனக் குற்றியலுகரத்தில் போய் முடிகின்றது எனலாம்; முதற்குறளும் ‘உலகு’ எனக் குற்றியலுகரத்திலேயே முடிகின்றது. தமிழுக்கே தனிச்சிறப்புடையது குற்றியலுகரம்; அச்சிறப்பைக் கொண்டு நூல் நிறைவுறுவதும் நல்லது தானே! திருக்குறள் என்ற பெயரை அமைத்தார்களே! அதனிலேயே நெடிலொன்றும் கலவாமல் எல்லாம் குறிலாகவே அமைந்துள்ள நுட்பத்தை நோக்கவேண்டும்: சுருக்கத்தில் பெருக்கத்தை அமைத்தது,அறிந்து மகிழ்ந்தது தமிழ்ப் பண்பு; பெரிய பெரிய தொடர்நிலைப் பாடல்களைவிட வெல்லாம் குறுகிய சங்கநூற் பாடல்கள் சிறந்தனவாகக் கொண்டாடுவது தமிழ் அறிவு!

கிறித்தவ ஆண்டுத் தொடக்க காலத்தில் இந்தியாவில் எழுத்துக்கள் வரிசைப் பட்டன; செம்மைப் படுத்தல் ஏற்றன என வரலாற்ருசிரியர் கூறுகின்றனர். பதஞ்சலி முதலோர் பாணினிக்கு வியாகரணம் எழுதிய காலம் அதுவாகும்; தொல்காப்பியமும் தமிழகத்தே நன்கு பரவியிருந்தது. நக்கீரர்க்கு இலக்கணம் உபதேசித்ததாகத் திருவிளையாடலிற் கூறப்படும் அகத்தியர்*, பரிபாடலிலும், மதுரைக் காஞ்சியிலும் குறிக்கப்படுகிருர். இக்காலப் பகுதியில் கிரேக்கரது செல்வாக்கும் பண்பாடும் இந்நாட்டில் பெரிதும் பரவின என்பதற்குச் சங்கநூல்களுள்ளும் (யவனர்) குறிப்புக்கள் நிரம்ப உள்ளன. அரேபியர்களும், சீனர்களும் மொழி பெயர்தேயத்தராகக் குறிக்கப்படுகின்றனர். இவர் தம் மொழிகளெல்லாம் தமிழகத்தே பரவியும் அறியப்பட்டும் இருந்தன. வரலாற்றுத் துறையிலும் பண்பாட்டுத் துறையிலும் இதனை ஒரு கிளர்ச்சிக் காலம்என்பது போலவே மொழித்துறையிலும், எனக் கூறி விடலாம். இம் மொழிகள் யாவற்றிற்கும் முதலெழுத்து ‘அகரமேயாகும்.’ எனவேதான் வள்ளுவர் ‘அகரமுதல எழுத்தெல்லாம்’ என அனைத்தையும் அடக்கிக் கூறினர். எழுத்து என்பது மொழி எனக் கொள்ளவேண்டும். பரிமேலழகரும் தம் உரையில் எழுத்து என்பதற்குக் கலை, மொழி என்ற குறிப்புக்களைத் தருகின்ருர். அன்றி, தமிழ் எழுத்துக்களுக் கெல்லாம், உயிர்

* ‘பொதியில் முனிவன் புரைவரைக் கீறி’ — பரிபாடல். ‘தொன்முது கடவுள் பின்னர் மேய’ —மதுரைக்காஞ்சி.

எழுத்துக்களுக்கெல்லாம்அகரம் முதல் எனவே அவர் குறித்தார் என அவரது பொது அறிவினை ஒரு மொழிக்குட்பட்டதாகவே குறுக்கி விடலாகாது. இவ்வகையில் திருவள்ளுவர் வரலாற்றறிவு நிரம்பிய, வரலாற்றடிப்படையுடன் நூலெழுதிய ஒரு பேராசிரியராகக் கூறலாம். அவர் கூறும் எதனையும் ஆழ்ந்துணர்ந்துதான் அறிய வேண்டு மென்பது போல, இவ் வரலாற்றுக் குறிப்புக்களையும் நுட்பமாகவே நோக்கியுணர வேண்டும்.

அரசியலில், ‘நாடு முதலிய அதிகாரங்களுள் வள்ளுவரது கால, வரலாற்றுக் குறிப்புக்கள் பல நிறைந்துள்ளன’ எனவே தோன்றுகின்றது. ‘கொல்குறும்பும் இல்லது நாடு’ என்ற விடத்தே குறளினது தோற்ற காலத்திற்குரிய குறிப்பாகுமோ அது என எண்ண இடமிருக்கின்றது. பல்லவரது தோற்றத்தைப் பற்றிய வரலாற்றில் ஆசிரியர்கள் ‘குறும்பர்’ என்ற இனத்தாரைப் பற்றி அடிக்கடிப் பேசுகின்றனர். அவர்களை இக் ‘கொல் குறும்பு’ என்ற பெயர் குறிக்குமோ என ஆராய வேண்டும். எனவே சிறந்த தமிழிலக்கியம் எதுவும் வரலாற்றடிப்படையிலேயே, வரலாற்றுக் குறிப்புக்களுடனேயே இயற்றப்பட்டுள்ளது என்பது உண்மையாகும்.

அகரம் என்பதில் கரம் என்ற சாரியையிட்டுக் கூறியதிலும், எழுத்துக்கட் கெல்லாம் அகரமே முதலாவது என மொழி நூற் கருத்தினை உரைத்ததிலும் குறள் தோன்றிய காலத்தில், மொழியியல் கிளர்ச்சி, மாறுதல், திருத்தங்கள் என ஏதோ இருந்தமை புலனாகின்றது. எழுத்தினை ஒலியெனக் கொண்டால், இங்குக் குறிக்கப்படுவது பொருளொலியே யாகும். பொருளில்லா வொலிகளை எழுதமுடியா தென்பது உண்மை. மற்றும் தமிழ் மரபு பொருளற்ற உணர்ச்சியொலிகட் கெல்லாம் இலக்கணங்கூறுமல், ‘எழுந்து புறத்திசைக்கும் மெய் தெரிவளி யிசைக்கே’ இலக்கணம் கூறுவதாகும். எனவே மொழியென்பது கருத்தினை வெளிப்படுத்தும் பேச்சு என்பது புலனாகும். ‘எண்ணென்ப ஏனை எழுத்தென்ப’ என மற்றோரிடத்தில் கூறுகின்றார். அந்த எண்ணைத் தவிர்த்த எழுத்தே இங்கு பேசப்படுவது. எனவே சமூகத் துறையில் எண் (அறிவியல்–Science) எழுத்து (கலையியல்–Arts) பற்றிய ஏதோ வொரு விழிப்பு, (உணர்ச்சி–அவா) அக்காலத்தில் கிளர்ந்தெழலாயிற்றென்பது அறியத் தக்கதாகும்.

அறிவியல் அறிஞரும் (Scientists) முதலில் அறிவியல் துறைகளை மிகச் சுருக்கமாகவே வகுத்தனர். பிறகே துறைகள் பெருகி ஒவ்வொரு துறையும் பலவாகப் பெருகியது. இன்று பூதவியல் (Physics) பொறியியல் (Engineering) என்ற இருதுறைகளே எத்தனையோ பிரிவுகளாகப் பிரிந்துள்ளன. அன்று அறிவியல் விழிப்பு மிகுதியாக இருந்ததுண்மை; சாங்கியரும், ஜைனரும், உலோகாயதரும், கிரேக்கரும் இவ்வகையில் மிகுந்த உணர்ச்சியையும், ஊக்கத்தையும் உண்டாக்கினர். அவ்விழிப்பு குறளின் ‘எண்ணென்ப ஏனை எழுத்தென்ப, என்பதிலும், எண்ணைத் தவிர்த்து முதலில் ‘எழுத்தெல்லாம்’ என்பதிலும் காணப்படுகின்றது. அறிவியலை மறந்து கலையியலை மட்டும் வளர்த்தது தமிழிலக்கியம் என்பது இதனல் பொருந்தாமை அறியப்படும்.

‘எழுத்துக்களுள் அகரமாக நிற்பவன் ‘யானே’எனக்கூறிய பகவத்கீதை தோன்றியது. கிறித்து ஆண்டுத் தொடக்கத்தேதான். எழுத்துத் தொடக்கமெனில் அது மொழித் தொடக்கமாகும். எழுத்துச் செம்மையுற்ற பிறகே உலகில் அறிவும் நாகரிகமும் செம்மையுற்றன. எழுத்தாலாகிய பேச்சு வளர்ந்த போதே மனிதன் கடவுளைப் பற்றி நினைக்கத் தொடங்கினன். விலங்குகள் கடவுளை நினைப்பதில்லை.

ஆதிபகவன் முதற்றே உலகு எனக் கடவுள் உணர்ச்சியும் எழுத்தெல்லாம் என்ற

மொழி யுணர்ச்சியுடன் இங்கு பிணைக்கப் பட்டுள்ளது. முதலில் தோன்றிய மொழியாகிய வேதங்கள் இறைவனால் அளிக்கப்பட்டன. திருவள்ளுவர் தெய்வப்புலவர் என்பதெல்லாம் இக்கருத்திலிருந்தே யெனலாம்.

எழுத்துக்களுக்கு முதல் அகரந்தானா, உலகத்திற்கு முதல் இறைவன் தானா என்பன போன்ற ஆராய்ச்சிகள் மிகப் பழங்காலந் தொட்டே இருந்துள்ளன. கி. மு. 6-ஆம் நூற்றாண்டிலிருந்து வாழ்ந்த கிரேக்க தத்துவ வாசிரியர்களே இத்தகைய ஆராய்ச்சிகளைப் பற்றிப் பேசுகின்றனர்.

உலகம் தோன்றியது நீரிலிருந்து தான் எனக்கருதியுள்ளனர்; நெருப்பே முதற் காரணம் எனக் கருதினர்; அன்று, காற்றே உலக முதற்காரணம் எனக் கூறினாரும் உளர். உணர்வில்லாத மண், நீர் முதலிய வற்றி லிருந்தே உலகம் தோன்றுகிறதா அன்றி உணர்வுடைய பொருளிலிருந்து (கடவுள்?) உணர்வில்லாப் பொருள்களும் தோன்று கின்றனவா எனவெல்லாம் ஆராய்ந்தனர்? அப்படியாயின், உணர்வுடைய பொருள் ஒன்றா, பலவா, பலவாயின் தலைமையுண்டா என வெல்லாம் முயன்று நினைத்தனர். 'ஆதி பகவன் முதற்றே உலகு' என்ற தொடர் அத்தகைய ஆராய்ச்சி முடிபுகளுள் ஒன்றனைக் குறிப்பதாகும். இம் முடிபு வளர்ந்த முடிவு, சிறந்த முடிவு எனக் கூறத்தக்கதாம்.

பகவன் என்பதனாலேயே உலகிற்கு உணர்வே (மனிதனே) இறைவனே முதல் என்பதனை உணர்த்தி யிருக்கின்றார். உலகில் கடவுளர் பலர் எனக் கொள்கைகள் இருந் தாலும் அவர் யாவர்க்கும் முதலாய உணர்வுப் பொருள் ஒன்றே, அதுவே ஆதிபகவன், அவனே உலகின் முதல் என்கிறார். உலகு ஆதி பகவனை முதலாக உடையது எனச் செய்யுளமைப் பிருந்தாலும் ஆதிபகவன் உல கிற்கு முதலாவான் எனப் பரிமேலழகர் நுட்ப முடன் அதனை விளக்கியுள்ளார். இன்றேல், ஓரளவு சித்தாந்தக் கோட்பாடு புகுந்து அதனை, "உலகம் முதலாக உடையது என்ற மையான் உலகம் பகவனுடன் ஓரளவில் சம நிலை யுடையது, இறைவன் என்றிருந்தானோ அன்று உலகமும் இருந்தது, உணர்வுடைமை யொன்றாலேயே அவற்கு உலகினை இயக்கும் தகுதியுண்டாயிற்று, எனவும் பொருள்பண்ணி விடக் கூடும்.

எழுத்துக்களில் அகரம் முதல் என்பதி லும் இவ்வாராய்ச்சி உள்ளது. உயிர் எழுத்துக் களுக்கு மட்டுமா, மெய்யெழுத்துகட்கும் அகரம் முதலாகுமா என்ற கேள்விகள் பிறந்துள்ளன. நச்சினார்க்கினியர் இவ்வகையில் மெய்க்கும் அகரமே முதலாவதாகும் எனத் தெளிவுரைத்து விட்டார். எனவே இவ்வுவமையால் உணர்வில் பொருள்களுக்கும் உணர்வுப் பொருளே (பகவன்) முதலாகும் என்பது பெறப்படுகின் றது. வாயைத் திறத்தலே (அங்காப்பு) அகர மாகும், வேறொரு முயற்சியும் வேண்டாம். வாயைத் திறவாமல் எந்த மெய்யையும் ஒலிக்க இயலாது. 'ம்' என ஒலிக்கலாமேயெனில், அவ்வகையில் தமிழில் ஒலித்துப் பொருள் உண்டாக்கவியலாது. உயிரொலிகளுக்குப் பின்னரே மெய்யொலிகள் நின்று பொருள் தருதற்குரியன. எனவேதான் பொருளுடைய மொழிக்கு உயிரே முதல், அதினும் அகரமே முதல் எனவெல்லாம் கூறினர். மெய்யையும் இயக்குவது உயிர் என்பது போல உலகின் உணர்வில் பொருள்களையும் தோற்றுவிப்பது உணர்வுப் பொருள் (பகவன்) என்பதாம்.

உலகப் பொதுமையுடையவர் வள்ளுவர் என்பதனை இம்முதற் குறளிலேயே உணர்த்தி விட்டாரென்னலாம். எப்பகுதியினர்க்கும் அவர்க்கேயுரிய சிறப்பெழுத்தினையோ இறை வனையோ கூறாமல் அனைவர்க்கும் பொதுவாகிய அகரம், ஆதிபகவன் என்பவற்றையே குறித் துள்ளார். அகரம் என்பதால் மொழிப் போராட்டத்தையும் ஆதிபகவன் என்பதால் நினைவுப் போராட்டத்தையும் தவிர்த்து ஒரு பொதுமையை முதலில் அடிப்படையிடுகிறார்.

கடவுள் ஒன்றே என்பது பிணக்குக் கொண்ட எவர்க்குங்கூட ஒப்ப முடிந்த கருத் தாகும். எனவே 'ஆதி' என்ற சொல்லையிடா மல் பகவன் என்ற சொல்லாலேயே அக்கருத் தினை உணர்த்த முடியாது. பலவகை மக்களும்

பகவன் எனக் கருதுகிருர்களே அக்கடவுளர் பலர்க்கும் ஆதியாயுள்ளவன் ஒருவன்தானே, அவனே உலகமுதல் என்கிருர். 'அ' என்ற ஒலி எம்மொழியினும் ஒன்றேயாகும் (பொது வாகும்).ஆனுல் அதனைஎழுதுவதில் ஒவ்வொரு வரும் உருவ வேறுபாடு காட்டுவர். (அ, அ, A-போல) சமயந்தோறும் (ஒருவனுகிய) கடவுளே வேறு வேறுருவமும், பெயரும் உடையனுகிருன். இவ்வேறுபாடுகளைக் களைந்து, கடந்து சென்ருலே ஒருமையும் பொதுமையும் (ஓரொலி-ஒருருவம்) கிடைக் கின்றன. இப்பொதுமையறத்தையே இங்கு வள்ளுவர் உணர்த்துகின்ருர். எனவேதான் அவரைத் தமிழர், வள்ளுவர், இந்தியர் என வெல்லாம் கூருமல் உலக மனிதன் (World Citizen) எனக் கூறவேண்டுமென்பது. பரிமே லழகர் இந்நுட்பத்தை எடுத்துக்காட்டாம லில்லை. சத்துவ முதலான மூன்று குணங்கட் கும், அறமுதலாம் மூன்றற்கும் உரிய கடவுளரோடியைபுடைய ஆதிபகவன் என விளக்கங் கூறுகிருர். எனவே அறம் முதலிய உலகியலையும், சத்துவமுதலிய (உயிரியல்) பண்பியலையும் அடக்கிக் கூறியுள்ளார் என்பது பொருத்தமாகும். மனித வாழ்க்கை முழுவதை யுங் கூறினர் வள்ளுவர் என்பது இங்குப் புலனுகின்றது. இராசச, தாமச, குணங்களையே உடையாரையும் பொருள் காம நோக்கமே உடையாரையும் இங்கு விட்டுவிடவில்லை. எனவே அவர் உலக முழுவதையும் தழுவி அறமுரைக்கிருர் என்பது உண்மையாகின்றது.

பொருட்சுவை யன்றி சொற்சுவையும் இப் பாடலில் ஏற்றமடைந்தே உள்ளது. திருக் குறளுக்குப் பின் குறளமைப்பில் இதுவரை ஒரு நாலும் தோன்றி வெற்றிபெறவில்லை யென்பதே அதன் ஒப்புயர்வற்ற தன்மைக் கெடுத்துக்காட்டாகும். ஆதி, பகவன் என்ற இரு சொற்களும் தமிழிலக்கியத்துள் முதன் முதலில் திருக்குறளிலேயே வழங்குகின்றன. வட சொற்களை மிகக் குறைவாகவே, திட்டப் படுத்தியே வள்ளுவர் எடுத்தாள்கிருர். பகவன், ஆதி ஆகிய இரண்டு சொற்களும் இன்னும் மக்களது பேச்சு வழக்கில் பெரிதும் பயன்படு வனவும், கலந்துவிட்டனவுமாகும். குறளுக் கடுத்து சிலப்பதிகாரத்திலேயே இச்சொற்கள் வழங்கப்படுகின்றன. ஆதி என்பது வட சொல்லா அன்றி அது என்பது ஆது, ஆதிஎன மருவிய தமிழ்ச் சொல்லா என ஆராயவேண் டும். ஆதி, பகவன் என்பன வள்ளுவரின் தாய் தந்தைப் பெயர்கள் என்பாரும் உளர். அப்படி யாயின் அவர் நன்றிக்குக் கூறிய இலக்கணத் திற்கு அவரே முதற் சான்ருவார். மற்றும் அவர் தாய் அதனைக்கேட்டிருந்தால் 'ஈன்றபொழுதிற் பெரிதுவந்திருப்பாள்' என்பதில் ஐயமில்லை.

இக்குறளில் தமிழ் எழுத்துக்களெல்லாம் அடங்கியுள்ளன எனலாம்; எனவே மொழி முழுமையும் இதில் இடம் பெற்றுள்ளது எனக் கூறத்தகும். அகரம், ஆதி, எழுத்து, உலகு என்பவற்றுள் 'அ, ஆ, இ, (த்+இ), உ, எ' என்ற உயிரெழுத்துக்கள் உள்ளன. அ, இ, உ, எ என்ற நான்குயிர்எழுத்துக்குள்ளேயே உயிரெழுத்தெல்லாம் அடங்கும். அகரம், ஆதி, பகவன் முதற்றே என்பவற்றுள் க, த, ப, ற என்ற முதன்மையான வல்லினமுள்ளன. 'ற்றே' என்பதில் டகரவொலி உள்ளடங்கி யுள்ளது. முதல, பகவன் என்பவற்றுள் முதன்மையான மெல்லெழுத்துக்களாய மகர மும் னகரமும் உள்ளன. இவ்விரண்டொலி களைக் கொண்டே மெல்லெழுத்துக்களை யெல்லாம் எழுதிவிடலாம். ஞ, ந, ன, ண என நான்கும் னகரத்திலும் ங, ம என விரண்டும் மகரத்திலும் அடங்கும். இவ்வாறடக்கிப் பிற மொழிகளில் எழுதுகின்றனர். அகர முதல எழுத்து என்பவற்றுள் ர, ல, ழ என்ற இடை யினமும், முதலவெழுத்தெல்லாம், முதற்றே யுலகு என்ற புணர்ச்சிகளில் வகர யகர வொலி களும் அடங்கியுள்ளன. இவ்வாறு உயிரினம் வல்லினம் மெல்லினம் இடையினம் ஆகிய எல்லா வின எழுத்துக்களும் இங்கு இடம் பெற்றுள்ளன. தமிழுக்கே சிறப்பாகிய ழ, ற, ன என்ற மூன்றெழுத்துக்களும் எப்படியோ அமைந்துவிட்டன. செய்யுள் வண்ணத்தைப் பொறுத்த அளவில் குறள் என்பதற்கேற்ப லா, ஆ, றே என்ற மூன்று நெடில்களை யன்றி மற்ற 22 எழுத்துக்களும் குறிலாகவே அமைந் துள்ளன. வினை இடையுரிச் சொற்களை

யிட்டுச் செய்யுளை நிரப்பாமல் முதல என்பதுட் பட எல்லாச் சொற்களும் அழகும் பொருட் பொதிவும் இன்றியமையாமையும் உடையன வாகின்றன. த், ற் என்ற இரண்டெழுத்திடங் களிலன்றிச் செய்யுள் முழுதும் உயிரொலி களால் இயன்றது மாதிரியே ஒலிக்கின்றது. வல்லெழுத்தெல்லாம் வன்மை குறைந்து உயிர் போலொலிக்கின்றன. எனவே உயிருள்ள பாடல் திருக்குறள் என்ருல் அது முதலிலேயே உயிரொலிகளைக் கொண்டு மெய்ப்பித்து விடுகின்றது. வெண்பாவிற்குரிய விள, காய்ச் சீர்களை மிகுதியாக்கியும் பாடலாம். ஆனுல் இங்கும் பாடல் குறளாகியிருக்கிறது, எழுத் தெல்லாம் என்ற விடத்திலன்றி காய்ச்சீரில்லை, விளச்சீர் ஒன்றுமே இல்லை. எனவே குறட்பா என்பது பொருத்தமாக அமைந்துள்ளது. விரிவாக ஒன்றைச் சொல்லுமிடத்து, 'தெளி வாகச் சொல்கிறேன்' என்ருே தெளிவுக்குரிய அடையாள மிட்டோ கூறவேண்டு வதில்லை, இது குறளாகையால் முதற்றே உலகு என் கையில் ஏகாரம் ஓரெழுத்தைக் கொண்டே தேற்றப் பொருளை வெளிப்படுத்தி விட்டால்; தன் கருத்து முழுவதனையும் தெளிவுபடுத்தி விட்டாரென்னலாம்.

ஒரு குறளிலேயே உயிர் (எழுத்து உயிர் கட்குரியது) உலகம், இறைவன் என்ற எல்லா பொருள்களையும் அடக்கி விட்டார். உலகை யெல்லாம் நினைத்துத் (தழுவித்) தொடங்கி விட்டது இவ்வொரே குறள். இக்குறளில் எத்தனை பொருள்கள்! அடங்காத பொருளே இல்லை எனலாம்.

இங்ஙனம் இம் முதற்குறள் பொரு ளாழமும் பரப்பும் செய்யுளழகும் இனிமையும் உடையதாகி நிலவுகின்றது.

தமிழ்க் கல்லூரிகள்

அர. சு. நாராயணசாமி நாயுடு, எம். ஏ.,
தமிழ்ப்பேராசிரியர், செந்திற்குமார நாடார் கல்லூரி, விருதுநகர்.

மேலைச் சிவபுரி சன்மார்க்க சபை தனது பொன்விழாக்கொண்டாடுகிறது. பல்லாண்டுகளாகச் செந்தமிழ்க் கல்லூரியொன்றை நடத்தி வரும் இச்சபை, நாட்டிலுள்ள தமிழ்க் கல்லூரிகளின் நிலை பற்றியும் அங்கே பயிற்றப்படும் படிப்பின் நிலை முதலியன பற்றியும் எண்ணிப் பார்த்தல் நல்லதாகும் என நம்புகிறேன். அவ்வாறு எண்ணிப் பார்க்குங்கால் பின்வருங் கருத்துக்கள் துணை செய்வன ஆகுக.

தமிழைப் பயிற்றி வித்துவான் தேர்வுக்கு மாணவரைத் தயாரிக்கும் இந்நிலையங்கள் 'கல்லூரிகள்' எனப் பேர் கொண்டு நிற்கின்றன. கலை, விஞ்ஞானக் கல்லூரிகளுக்கும், தொழிலியல், மருத்துவக் கல்லூரிகளுக்கும் உள்ள பேரே இவற்றிற்கும் உள்ளது. பேரில் ஒற்றுமை, ஆனல் பொருளில் என்ன வேறுபாடு?

தமிழ்க்கல்லூரிகளிற் பயின்று வித்துவான் தேர்வில் தேறியோரெல்லோரும் உயர்நிலை அல்லது நடுநிலைப் பள்ளிகளில் தமிழாசிரியர்களாகப் பணியாற்றுகின்றனர். ஆசிரியராதற்கன்றி வேறெதற்கும் இந்தப் படிப்பானது பயன்படவில்லை. மற்றுள்ள பாடங்களைப் பயிற்றும் ஆசிரியரைப் போன்ற நிலையும் இவர்க்குக் கிட்டுவதில்லை. உயர்நிலைப் பள்ளிகளிற் கற்றுப் பள்ளியிறுதித் தேர்விலாவது தேறிய வித்துவான்களே, (தலைமையாசிரியர்களாகும் உரிமை பெருவிட்டாலும்) பிற துணையாசிரியரோடொத்த நிலையாவது பெறுவர்.

தமிழ்க் கல்லூரிகளிற் படிக்கவரும் மாணவரிற்பலர், வேறு படிப்புக்குத் தகுதியில்லாதாராகவே உள்ளனர்.

இக்கல்லூரிகளிற் சேரும் மாணவர் இன்ன தகுதியுடையராயிருக்க வேண்டும் என்ற வரையறை, பல்கலைக் கழகத்தாரும் ஏற்படுத்தவில்லை; கல்லூரிகளும் ஏற்படுத்திக் கொள்ளவில்லை.

இவ்வாறு சேர்ந்து தமிழிலக்கிய இலக்கணங்களைப் பயின்று தேறும் இவர்கள், கலை விஞ்ஞானக் கல்லூரிகளிற் பயின்ருரோடு ஒன்றிப் பழகுதல் முடியாது போகிறது.

இந்நிலை தமிழ் மொழியைப் பல துறையறிவுக் கருவியாக ஆக்க முடியாத சூழ்நிலையை உண்டாக்குகிறது.

தமிழானது, இலக்கிய இலக்கண மொழியாக மட்டுமே நின்ருல் தமிழர்க்கு அதனல் முழுப்பயன் நேராது. பிறமொழியின் துணையை நாடியே என்றும் தமிழகம் நிற்கவேண்டிவரும். தமிழ், எல்லாத் துறை யறிவும் பெறுங்கருவியாக விளங்க வேண்டும். எனவே ஒவ்வொரு துறையிலும் வல்லுநரான தமிழர், தம்மறிவைத் தமிழ்மொழி வாயிலாக வெளியிட்டுப் பிறரொடு பகிர்ந்து இன்புறவேண்டுமாயின், அவரெல்லோரும் தமிழ் மொழிப் புலமையும் உடையராதல் வேண்டும்.

தமிழ்ப் புலமையுடையோர் பலர் தமிழகத்துள்ளனர். அவருட் பெரும்பாலார்க்குப் பிற கலைகளிலும் அறிவியலிலும் அழுந்திய புலமை கிடையாது. அதனையுடையோர் பலர் தமிழகத்துள்ளனர். அவருள் மிகப் பெரும்பாலார்க்குத் தமிழ்ப் புலமை கிடையாது. இவ்விரு வேறியற்கை நிலை கொண்டுள்ளவரை தமிழகத்தார்க்கு அறிவொளி விளங்காது.

பிறதுறை யறிவினைப் பிறமொழிகளின் வாயிலாகப் பெற்ருேர், தம்மறிவினைத் தமிழகம்

பயன்கொள்ளட்டுமென்று கொண்டு, தாமறிந்தவாறு தமிழில் வெளியிட்டால், தமிழ்ப் புலவர்கள் அவராலுந் தமிழைத் தமிழென்றேப்புக் கொள்ள முடிவதில்லை.

இச்சிக்கல் தீரும்வழி கண்டுதான் ஆக வேண்டும். இன்றுள்ள நிலையில், வேற்று மொழிவாயிலாகப் பலதுறையறிவினைப் பெறுந் தமிழக மாணவரெல்லாரும் தமிழ் மொழிப் புலமையையும் பெறுவதுதான் அவ்வழியாகும்.

எந்தப் படிப்பும் மனிதனை வாழ்வாங்கு வாழும் வழி காட்டுவதாகவே இருக்கவேண்டும். உலகம் இன்றுள்ள நிலையில் ஒவ்வொருவனும் பல துறைகளைப் பற்றி ஓரளவாவது படித்தறிதல் இன்றியமையாததாகி விட்டது. எனவே 'தமிழைப் படித்தல்' என்பதனைப் பிறதுறைப் படிப்பொடு கலவாது தனித்து நிறுத்தி வைத்தல் நல்லதன்று.

நம் நாட்டில் நம்மொழி இன்றும் ஒதுக்கிடம் புகுந்து வாழ்தல் தகுதியாகாது. தமிழ்ச் சிறுவர், சிறுமிகள் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தமிழ்மொழிப் புலமை பெறுமளவு தமிழ்ப் பாடத்தைப் பயிலும் வழிவகைகளைச் செய்தலே தகுதியாம். பி. ஏ., பி. எஸ். சி. முதலிய வகுப்புக்களிற் படித்துக் குறிப்பிட்ட சிலதுறைகளில் உலகில் கண்டுள்ள அறிவினையெல்லாம் உணரும் மாணவர், அவ்வறிவினைத் தமிழிற் கூறுமளவுக்குத் தமிழ்ப் பாடமும் பயின்று தமிழ்ப் புலமை பெறவேண்டும். அவ்வறிவினையெல்லாம் தமிழ் வாயிலாகவே கற்க முடியும் என்ற நிலையும் விரைந்து ஏற்படவேண்டும்.

உயர்நிலைப்பள்ளிகளில் தமிழ்ப்பாடத்தை கற்றுக்கொடுப்பதற்கெனத் தமிழ் நாட்டில் 'தமிழ்ப் பண்டிதர்' என்ற ஒரு வகையினர் தனியாக இருத்தல் வேண்டப்படுவதன்று. பிறபாடங்களைப் பயிற்றும் ஆசிரியர்கள்—ஆங்கிலத்தையும் பயிற்றும் ஆசிரியர்கள்—அப் பாடங்களைக் கல்லூரிகளிற் படித்த போது தமிழையும் ஒரு பாடமாகக் கொண்டு படித்தவர்களே யன்றே? ஏன் அவர்களே தமிழ்ப் பாடத்தையும் பயிற்றக் கூடாது? பயிற்றுந் தகுதி பெறும்படி பாடத்திட்டம் அமைய வேண்டுமன்றே? அவர்களே தமிழ்ப்பாடமும் பயிற்றுவதால் இருபெரு நன்மைகள் விளையும். ஒன்று: தமிழ், ஒதுக்கப்பட்டவரால் பயிற்றப் பெறும் ஒதுக்குதற்குரிய பாடம் என்னும் எண்ணம் மாணவர் எவர்க்கும் தோன்றாது. இரண்டு: அவ்வாசிரியர்களும் பிற பாடங்களைப் பயிற்றும் போது நல்ல தமிழில் நன்றாகப் பயிற்றும் பழக்கம் கைவரப் பெறுவர்.

இதன் கருத்து: பள்ளியாசிரியர் ஒவ்வொருவரும் தமிழைக் கற்பிக்கும் ஆசிரியராகவும் இருத்தல் வேண்டும்.

ஏன் இருத்தல் கூடாது? பி. ஏ. வகுப்பு வரை ஆங்கிலங்கற்றவர் பள்ளியிறுதி வகுப்பு வரையுள்ள ஆங்கிலப்பாடம் பயிற்றுகிறார். பி. ஏ. வகுப்புவரை தமிழையுங்கற்றுள்ளார். பள்ளியிறுதி வகுப்புவரை தமிழும் பயிற்றுபவராகவும் அவரிருக்க வேண்டுமன்றே? இந்த நிலையை உண்டாக்கினால் தான் தமிழ்ப் பாடத்துக்கு மதிப்பும் தமிழின் வழியாக நல்ல முறையில் பாடங்கற்பித்தலும் நிலவும்.

II

பிற கல்லூரிகளிற் படித்துத் தேறி, யாசிரியராகுந் தமிழரே தமிழ் நாட்டுப் பள்ளிகளில் தமிழையும் பயிற்றுபவராவர் என்றால் தமிழ் வித்துவான்கள் என்ன ஆவர்? தமிழ் வித்துவான்களைப் பண்ணும் தமிழ்க் கல்லூரிகள் என்ன ஆகும்? இவற்றைப் பற்றியுங் கருத வேண்டும்.

பேரளவிற் கல்லூரிகளாயுள்ள இக் கல்லூரிகள் எல்லா வகையிலும் பிற கல்லூரிகளைப் போல உயர வேண்டும். பல்கலைக் கழகப் பணிகளிற் பங்கு பெறும் உரிமை பெற வேண்டும். தமிழ்ப் புலமையோடு மாணவர்க்குக் குறிப்பிட்ட சில துறைகளில் அறிவு விரிப்பனவாகவும் ஆக வேண்டும்.

தாம் பயிற்றும் படிப்பின் முதற்பகுதியாகத் தமிழிலக்கியம், இலக்கணம், மொழியியல், தமிழக வரலாறு இவற்றையும், இரண்டாம் பகுதியாக ஆங்கிலத்தையும், மூன்றும் பகுதி யாக வரலாறு, பொருளாதாரம், தத்துவநூல், இசை,உள நூல்முதலிய கலைகளுளொன்றையும் கணக்கு, பொருளியல், கலவை நூல், உயிர் நூல் முதலிய அறிவியற் பகுதிகளி லொன்றை யும் பயிற்றுவன வாக அவை மாற வேண்டும். தமிழ் வழியாகவே மூன்றும் பகுதிப் பாடங் களைப் பயிற்ற முடியும் என்பதற்கு இவை வழிகாட்டிகளாக அமைதல் இயலும். இங்கே பயில் வாரும் பிற கல்லூரிகளிற் பயில் வாரைப் போலப் பட்டம் பெற்று எல்லா வகை யலுவல் களிலும்அமர உரிமையுடையராதல் வேண்டும். சில வகை அலுவல்களிலமர இவரே பிறரினுந் தகுதியுடையர் என்ற நிலையும் உருவாக வேண்டும். ஆட்சி மொழியாகத் தமிழ் அமரும் நாளில் இந்நிலை இயல்பாகவே உண்டாகி விடும். பயிற்று மொழியாகத் தமிழ் பயன்படும் நாளில் இது பயனற்ற கனவாகி விடாது.

ஆசிரியர்கள், நூல்நிலையங்கள், கட்டி டங்கள், பொருளாதாரம் முதலியன தகுதியாக வுள்ள இன்றுள்ள தமிழ்க்கல்லூரிகளில் முற் குறிப்பிட்ட படிப்பின்பின் எம். ஏ. தமிழ் வகுப்புக்களையும் நடத்தலாம்.

அப்போது தான் இவை நம் நாட்டுக்கு வாழ வழிகாட்டும் நாட்டுக் கல்லூரிகளாதல் இயலும். பிற கல்லூரிகளினும் உயர்த்துச் சிறப்பிக்கப் பெறும். தமிழ் மொழி வளமுறச் செய்யும். தமிழ் மொழியை வளரச் செய்யும்.

பிற கல்லூரிகளிற் போலவே, பள்ளிப் படிப்பு முடித்துத் தேறியோரே இக்கல்லூரி களிலும் சேர்த்துக் கொள்ளப் பெறுதல் வேண்டும்.

அடுத்தபடி, தமிழ் வித்வான்களாக இப்போதுள்ளார் இப்போதுள்ள நிலை யிலேயே இருப்பர். இவர்கள் தம் வேலையி லிருந்து விலக, விலக, இவர் தந்திருப்பணியை வேறு ஆசிரியர்கள் ஏற்றுக் கொள்வர். ஏற்றுக் கொள்ளுந் திறமையுடையராக ஒவ்வொரு ஆசிரியரும் அமைந்து நிற்றல் வேண்டும். அதற்கேற்ற மாற்றங்கள் பாடத் திட்டத்திலும், பயிற்று முறையிலும் உண்டாக வேண்டும்.

III

பலநிலைப்பள்ளிகளிலும் பலவகைக் கல் லூரிகளிலும் நிலவிவரும் படிப்பு முறையைப் பற்றி ஆராய்ந்து மதிப்பிடவும், ஏற்ற மாற்றங் கள் தெரிவிக்கவும், அவற்றை நிறைவேற்றவும் அவ்வப்போது ஆய்வுக் குழுக்கள் இந்திய சர்க்காராலும் சென்னையரசியலாராலும் ஏற் படுத்தப் பெறுகின்றன. பல்கலைக் கழகங்களும் கல்லூரிப் படிப்பு முறையையும் பாடத் திட்டங் களையும் அவ்வப்போது ஆராய்ந்து மாற்றியே அமைத்து வருகின்றனர்.

கல்லூரிகளில் தமிழ்ப்படிப்பு முறையும் பாடத்திட்டங்களும் பற்றியாராய்ந்து சென்னை யரசியலாரும் சென்னை மாநிலப் பல்கலைக் கழகங்களுஞ் சேர்ந்து கூட்டாக ஆராய்வுக் குழுவை யமைத்து நன்முடிவு காணவேண்டும். அவ்வாய்வின் குறிக்கோள், தமிழக இளைஞர் கள் தம் மொழிப் புலமையுடையவராகவும் தாங்கற்ற பலதுறைப் பாடங்களாயறிந்தன வற்றை மரபோடொட்டித் தமிழிற் கூறுந்திற முடையவராகவும் இருக்கவேண்டுமென்பதா தல் வேண்டும்.

அவ்வாறே தமிழ்க் கல்லூரிகளின் நிலை, அங்கே பயிற்றப்படும் படிப்பு, அதன் பயன் முதலியவற்றை யாராய்ந்து தமிழ்நாட்டுக்குப் பயன்படும் வகையில் மாற்றங்கள் காணவும் ஓராய்வுக்குழு அமைக்கப் பெறுதல் வேண்டும்.

இவ்விரண்டு குழுக்களும் தன் ஆய்வு முடிந்த பின் கலந்துபேசித் தக்க நன் முடிவு களைத் தெரிவிக்க வேண்டும். அந்த நன்னாள் விரைவில் எதிர்ப்படுவதாக. கடந்த சில ஆண்டுகளாகச் சென்னைப் பல்கலைக் கழகத் தார் இக்கல்லூரிகளின் நிலைபற்றி ஆய்ந்து

வருவதாக அவ்வப்போது கூறிவருகின்றனர். எப்போது அவ்வாய்வு முடியுமோ — எந்த முடிவு ஏற்படுமோ ?

பத்தாண்டுகளுக்கு முன் இந்திய அரசியலாரால் அமைக்கப்பெற்ற பல்கலைக் கழகப் படிப்புப் பற்றிய ஆய்வுக்குழு 'இக்கல்லூரிகளைப் பற்றியோ இங்குள்ள படிப்பு' முறையைப் பற்றியோ தன் கருத்தைச் செலுத்தாமலே விட்டது வியப்புக்குரியதே. மதிப்புக்குரிய திரு சர் வே பல்லி ராதாகிருஷ்ணன் அவர்கள் அதன் தலைவராகப் பணியாற்றினார். அக்குழு, தமிழ்க்கல்லூரிகளையும் அங்கே பயிற்றப்படும் படிப்பையும் பல்கலைக் கழகத்தொடு தொடர்பு பட்ட படிப்பாக நினைத்திலது போலும்.

கல்லூரிப் படிப்பில் பல மாறுதல்களை நிறைவேற்றுதற்கும் பல்கலைக் கழகப்படிப்பின் தரங்குறையாது போற்றுதற்குமென்று சட்ட நிலை கொண்டமைந்துள்ள பல்கலைக் கழக மானியக் குழுவும் இந்தக் கல்லூரிகளைப் பற்றியொன்றுஞ்செய்யவில்லை; எண்ணிப் பார்க்கவுமில்லை. இதுவும் எண்ணுதற்குரியது.

இக்கல்லூரிகள் ஒதுக்கிடங்களாதலே இவற்றிற்கெல்லாம் காரணம். இந்நிலையை ஒழித்துக்கட்டிப் பிறகல்லூரிகளோடு 'சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே' என்று இவை எழுச்சிபெற வேண்டும். தக்கார் துணையும் தயக்கமின்றிச் சாருமெனவே நம்புவோம்.

தமிழ் வளர்க.

★

உ

"சித்தாந்தப் புலவர்மாமணி, பாலகவி"

வயிநாகரம் வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்

(பாலருவாயர் நிலையம், சம்பந்தர் தெரு, தேவகோட்டை.)

வாழ்த்துப்பா.

நன்மார்க்க மறிந்திந்த நானிலத்து
மக்களெலா நன்மை சேரச்
சன்மார்க்க சபையொன்றைத் தமிழகத்துத்
தனவணிகர் தழைத்து வாழ்ந்து
முன்மார்க்க முறுமேலைச் சிவபுரியில்
முறைநிறுவி மூளுங் கீர்த்தி
தன்மார்க்கத் துறநின்றூர் தகு. வ. பழ. சா.
குடும்பச் சான்றோர் தாமே.

சீராருஞ் சௌமியசித் திரைமுப்பத்
தொன்றென்று திகழ்ந்த நாளில்
பேராரும் பண்டிதமா மணியாரைத்
துணைக்கொண்டு பிறந்தவிந்த
ஏராரும் சபையைம்ப தாண்டுநிறை
வெய்திநல மீந்து வாழ்ந்தெவ்
வூராரும் பாராட்டப் பொன்விழாக்
கண்டதின்னும் ஊழி வாழி.

★ *திருச்சி வானொலி வழியாக 25-11-58-ல் ஒலிபரப்பப்பட்டது. வானொலியினர் இசைவோடு வெளியிடப்படுகிறது.*

பண்டிதமணி கதிரேசன் செட்டியார்

(சில நினைவுக் குறிப்புகள்)

(*டாக்டர் அ. சிதம்பரநாதன்*, எம். ஏ., எம். எல். சி.)

பண்டிதமணி கதிரேசன் செட்டியாரொடு எனக்கு ஏறத்தாழ 23 ஆண்டுகள் பழக்கம் உண்டு. அவர் 1953-ஆம் ஆண்டு அக்டோபர் 24-ஆம் தேதி வயது முதிர்ந்த நிலையில் மறைந்தார். அவர் 1930-இல் சென்னையில் நடைபெற்ற சைவசித்தாந்த மகா சமாச வெள்ளி விழாவின்போது தான் முதன்முதலில் எனக்கு அறிமுகம் ஆயினர். அப்பொழுது பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற சமாச வெள்ளி விழாவின் கூட்டங்கள் மூன்று நாட்களிலும் தலைமை தாங்கிப் பல அரும்பெறற் கருத்துக்களை அவர்கள் தெரிவித்தார்கள். நீளமான மஞ்சள்நிறக் கோட்டு அணிந்து, கழுத்தைச் சுற்றிலும் வெள்ளிய மேல்வேட்டி ஒன்றனைச் சுற்றிப் போட்டுக் கொண்டு, தலைப்பாகையுடன் அவர் உட்கார்ந்திருந்த காட்சி இன்னும் நினைவிற்கு வருகிறது. கும்பகோணம் அரசினர் கல்லூரியில் நான் படித்தபொழுது எனக்கு ஆங்கிலம் கற்பித்த ஆசிரியருள் ஒருவராகிய திரு. கே. எஸ். வைத்தியநாத ஐயர் அவர்களுடைய நினைவு பண்டிதமணியைக் கண்டபொழுது எனக்கு ஏற்பட்டது. காரணம், இருவரும் தூய வெள்ளாடைஉடுத்தி அழகிய வெள்ளைத்தலைப்பாகை அணிந்து இருந்தார்கள் என்பது மாத்திரம் அன்றி, ஆங்கிலக் கவிதைகளை இனிமையொடு சுவைத்துப் பிறர்க்கு எடுத்து இயம்பும் திறன் திரு. கே. எஸ். வைத்தியநாத ஐயர் பெற்றிருந்ததுபோலப் பண்டிதமணி அவர்கள் தமிழ்ச் செய்யுட்களைச் சுவைத்து அவற்றை எளிய தெள்ளிய நல்ல நடையில் பலர்க்கும் எடுத்து வழங்கும் ஆற்றல் படைத்திருந்தார் என்பது. பச்சையப்பன் மண்டபக் கூட்டத்திற் கலந்து கொண்டவர்கள் அவர் ஆங்கிலம் அறிந்திலர் என்பதை ஊகித்திருக்கவே முடியாதபடி, அவருடைய உடையும் நடையும் சொற்பொழிவுகளும் இருந்தன. பள்ளிக்கூட வாயிலாக அல்லது கல்லூரி வாயிலாக அவர் தமிழ் இலக்கியம் கற்கும் வாய்ப்புப் பெற்றாரில்லையேனும், நல்லறிஞர்கள் துணைகொண்டு தாமே பல தமிழ் நூல்களையும், வடமொழி நூல்களையும் துருவித்துருவி ஆராய்ந்து கற்ற பெருமையுடையவர் திரு. கதிரேசன் செட்டியார். ஆதலினால், அவர் இயற்றிய சொற்பெருக்குகள் அறிஞர்களையும் ஏனையோரையும் மகிழ்வித்தமை வியப்பன்று. அவர் கற்றறிந்த செய்திகள் பலவற்றையும் எழுதிக் குறிப்புப் புத்தகத்தில் வைத்துக்கொள்ளும் மரபுடையவராகக் காணப்பட்டார். மேடைகளுக்கு வரும் பொழுது அவர் கையில் இரண்டு அல்லது மூன்று குறிப்புப் புத்தகங்கள் இருக்கும். அக்குறிப்புக்களில் சிலப்பதிகாரம், திருக்குறள், கம்பராமாயணம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, காளிதாசர் நூல்கள் போன்ற இலக்கியங்களிலிருந்து எடுக்கப்பட்ட மேற்கோள்கள் உண்டு. வேளை வாய்க்கும்போதெல்லாம் அவ்வேடுகளைப் புரட்டிப் புரட்டித் தமது கருத்துக்களை அவர் அழகுற எடுத்தியம்பியது உண்டு. தமிழரேயன்றி ஆங்கிலம் அல்லது சமஸ்கிருதம் கற்றறிந்த பெரியவர்களும், மாணவர்களும் அவருடைய சென்னைச் சொற்பொழிவுகளால் ஈர்க்கப்பட்டனர். அவர்களுள் ஒருவன் நான். அப்பொழுது சென்னை அரசாங்க முஸ்லீம்கள் கல்லூரியில் நான் தமிழாசிரியனாகப் பணியாற்றிக்கொண்டிருந்தேன். அவ்வாண்டினை ஒட்டிய ஆண்டுகளில் திரு. வி. கலியாண

சுந்தர முதலியார் அவர்களுடைய தொடர்பு எனக்கு ஏற்பட்டது உண்டு. அவர் இராயப் பேட்டையில் அமைத்து நடத்திவந்த ''பாலசுப்பிரமணிய பக்தஜன சபை''யில் ஒரோ ஒருகால் சென்று சொற்பொழிவு ஆற்றியது உண்டு. பண்டிதமணி அவர்கள் சமாச மாநாட்டிற்கு வந்திருந்தபொழுது, அவர்களையும், திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளை அவர்களையும் பாலசுப்பிரமணிய பக்தஜன சபைக்கு அழைத்துத் திரு. கல்யாண சுந்தர முதலியார் அவர்கள் பெருமைப்படுத்திச் சொற்பொழிவு ஆற்றுமாறு செய்வித்தார்கள். எனவே, ஜார்ஜ் டவுனிலும் இராயப்பேட்டையிலும் உள்ள தமிழ் மக்கள் சிறப்பாகப் பண்டிதமணியினுடைய அறிவுசான்ற சொற்பொழிவுகளைக் கேட்கும் வாய்ப்புப் பெற்ருர்கள். திருவாசகத்தில் வரும் "வெள்ளந் தாழ் விரிசடையாய்'' எனத்தொடங்கும் பாட்டினையும், "யானே பொய் என் நெஞ்சும் பொய்'' எனத் தொடங்கும் பாட்டினையும் திரு. பண்டிதமணி அவர்கள் நெக்கு நெக்குருகி எடுத்து விளக்கிய திறமையைக் கண்டு வியந்தவர்கள் பலர்.

''மையி லங்குநற் கண்ணி பங்கனே
வந்தெ னைப்பணி கொண்ட பின்மழக்
கையி லங்குபொற் கிண்ண மென்றலால்
அரியை யென்றுனைக் கருது கின்றிலேன்''

என்ற பகுதியை எடுத்து அவர் விளக்கிய விளக்கம் இன்னும் என் உள்ளத்தினுள் பதிந்து கிடக்கின்றது. "கடவுளே நின்னை அரியவன் என்று நான் மதிக்கவில்லை. இங்கு என்னுடன் நீ எப்பொழுதும் இருக்கின்ருய் எனவே மதிக்கிறேன்'' என்ற கருத்தினைத் தெரிவிக்கக் கருதிய மாணிக்கவாசகர் நல்லதோர் உவமையை எடுத்தாண்டார் என்றும், "மழக்கை இலங்கு பொற் கிண்ணம்'' என்ற அவ்வுவமை சிந்திக்கத் தக்கது என்றும் அவர் அடிக்கடி எடுத்துக்காட்டியதுண்டு. குழந்தையினுடைய கையில் விளங்குகின்ற பொற்கிண்ணத்தைப் போலக் கடவுள் இருக்கின்ருர் என்ருல், அதன் கருத்து இன்னது என்று பெரும் பேராசிரியர் கதிரேசன் செட்டியார் விளக்கிய நயம் சிந்திக்கத் தக்கது. அழுகின்ற குழந்தை அழாமல் இருப்பதற்காக அதன் கையில் பொற் கிண்ணத்தைத் தாய் கொடுத்துவிடக், குழந்தை கிண்ணத்தைக் கையில் எடுத்துக்கொண்டு, இப்படியும் அப்படியும் அசைந்து நடமாடுகின்றபொழுது பொற்கிண்ணம் கீழே விழுந்து விட்டால் உடைந்துபோய்விடுமோ என்று அஞ்சித் தாயார் குழந்தையின் கூடவே நடந்து செல்லுகின்ற வழக்கத்தை எடுத்துக்காட்டி, அவர் பொருத்தியுள்ள விதம் சிந்திக்கத் தக்கது. குழந்தை கிண்ணத்தின் பெருமையை அறியாததுபோல ஆன்மாக்கள் கடவுளின் பெருமையை அறியாது இருத்தல் உண்டு என்றும், கடவுள் ஆன்மாக்களைத் திரும்பவும் பாதுகாக்கும்பொருட்டு ஆன்மா செல்லும் இடமெல்லாம் உடன் வந்து பாதுகாக்கின்ருர் என்றும் அவர் அன்றுகாட்டிய செய்தி இன்றும் என்உள்ளத்தினின்றுநீங்காது அமைந்துகிடக்கிறது. இதற்கு மாருக, மாணிக்கவாசகர் தம்முடைய கையிலே உள்ள ஒரு கிண்ணத்தைப் போலத் தமது உடைமையாகக் கடவுளை மதிக்கிருர் என்று எவரேனும் அதற்குப் பொருள் செய்தால், அது பொருந்தாது என்பதைப் பண்டிதமணி அவர்கள் எடுத்துக்காட்டியதுண்டு. மழக்கை என்றபோது தம்முடைய இளைய மெல்லிய கையினை மாணிக்கவாசகர் குறித்தார் என்று கூறுவது பொருத்தமில்லை என்று அவர்கள் எடுத்துக்காட்டியதுண்டு.

நீத்தல் விண்ணப்பத்தில் வரும் "இருதலைக் கொள்ளியின் உள் எறும்பு ஒத்து நினைப் பிரிந்த விரிதலை யேனை விடுதி கண்டாய்'' என்ற இடத்தில் வரும் "இருதலைக் கொள்ளி எறும்பு'' என்பதற்குப் பண்டிதமணி அவர்கள் தந்த விளக்கம் நினைவுகூர்ந்து பாராட்டத் தக்கது. இரண்டு பக்கத்திலும் நெருப்பு இருக்கின்ற கொள்ளிக்கட்டையில் தாவுகின்ற எறும்பு போல ஆன்மா இருக்கிறது என்று பொதுவாகக் கூறுவது பொருந்தாது என்றும், உள்ளே புழையினையுடைய ஒரு தீக் கோலின் இரண்டு பக்கங்களிலும் தீப்பற்றிக்கொண்டு

இருக்கிற பொழுது ஓர் எறும்பு உள்ளே அகப் பட்டால் எவ்வாறு வாடி வருந்துமோ அவ் வாறு ஆன்மா பொறி உணர்ச்சியால் வருத்தப் படுகிறது எனக் கூறுதல் வேண்டுமென்றும் அவர் கூறிவந்தவை நினைவிற்கு வருகின்றன. இரண்டு பக்கங்களிலும் நெருப்பு உள்ள குச்சி ஒன்றின் மீது எறும்பு இருந்தால், இரண்டு பக்கத்திலும் போகமுடியாமல் தவிக்கும் என்று லும், இரண்டு மூலைக்கும் போகாமல் நடுவிடத் தின் ஓரத்திலிருந்து எவ்வாருவது குதித்துத் தப்பித்துக்கொள்ளுதல் முடியும். ஆனதால், இதனை விலக்கவே ''கொள்ளியின் உள்ளே எறும்பு'' என மாணிக்கவாசகர் கூறினர் என அழகுபடஅவர்எடுத்துக்காட்டியதைஆராய்ச்சி யாளர்கள் பலர் 1930–31-ஆம் ஆண்டுகளில் மகிழ்ந்து பாராட்டிய பாராட்டுக்கள் இன்றும் என் நினைவில் உள்ளன. பண்டிதமணி கதிரேசன் செட்டியாரைப் பிறகு 1934–ஆம் ஆண்டில் என்னுடைய நேர்முக ஆசிரியராகப் பெறக்கூடிய வாய்ப்பு அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் கிட்டிற்று. நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் அவர்கள் பேராசிரியராக இருந்த பொழுது, நான் 1933 முதல் 35 வரை அப் பல்கலைக் கழகத்தில் தமிழ் எம். ஏ. பட்டப் படிப்பிற்காகப் படித்துக் கொண்டிருந்த ஞான்று பண்டிதமணி அவர்கள் எனக்குச் சிலப்பதிகாரத்தையும், அகநானூற்றையும் சிறப்பாகக் கற்பித்தார்கள். அப்பொழுது பாட மாக இருந்த சிலப்பதிகாரப் பகுதி அடியார்க்கு நல்லார் உரையில்லாத வஞ்சிக்காண்டமே யாகும். அதற்கு அரும்பத உரையாசிரியர் உரை மாத்திரம் உள்ளது. அரிய சொற்கள் சிலவற்றின் விளக்கம் மாத்திரம் அவ்வுரையில் உண்டு. ஆனுல் புகார்க் காண்டத்திற்கும் மதுரைக் காண்டத்திற்கும் உள்ள உரைகள் இரண்டு. ஒன்று அடியார்க்கு நல்லாருடைய விளக்கமான உரை; மற்ருென்று பழைய உரை யாசிரியராகிய அரும்பத வுரை ஆசிரியர் உரை. அடியார்க்கு நல்லார் உரை வஞ்சிக்காண்டத் திற்குக் கிடைக்கப்பெற்றிருந்தால், எத்துணை மகிழ்ச்சியுற்றிருப்போமோ அத்துணை மகிழ்ச்சி உண்டாகும்படி பண்டிதமணி அவர்கள் வஞ்சிக்காண்டத்திற்கு உரைதந்து படிப்பித் தார்கள்.

''கற்றீண்டி வந்த புதுப்புனன் மற்றையார்
உற்ருடி னேந்தோழி நெஞ்சன்றே''

எனவுள்ள குன்றக்குரவை அடிகளுக்கு உரை காண இடர்ப்பட்ட அறிஞர்கள் நிரம்பிய காலத்தில், திரு. கதிரேசன் செட்டியார் அவர்கள் தக்கதோர் உரை கண்டார்கள். தோழி ஒருத்தி ''தலைவனுடைய நாடு அல்லாத நாடு ஒன்றனுள் உள்ள மலையைத் தீண்டித் தண்ணீர் வந்தபோது, அதனுள் நம் உற வினர் அல்லாதார் பொருந்தி நீராடினுல் நம் நெஞ்சம் நடுங்கும் அன்ருே தோழி'' என்ற வாறு பொருத்திப் பொருள் கண்ட பெருமை பண்டிதமணியாரைச் சாரும். சிலர் ''மற்றை யார் உற்ருடினேம் தோழி நெஞ்சன்றே'' என்றவாறு பிரித்துப் பிரித்துப் பொருள் கொள்ள மாட்டாது இடர்ப்பட்ட நிலையில், பண்டிதமணி அவர்கள் ''உற்ருடின் நோம் தோழி நெஞ்சு'' என்றவாறு பிரித்து, அரும் பத உரைகாரர் உரையொடும் நூலாசிரியர் கருத்தொடும் பொருந்துமாறு பொருள் செய் தார்கள், என்பதை என்போன்ற மாணவர் சிலர்இன்றும் மீண்டும் மீண்டும் கூறி மகிழ்வது உண்டு.

செங்குட்டுவன் வடநாட்டு மன்னருடைய காவா நாவினை அடக்குவதற்காகப் போரொடு சென்ற பொழுது, அவன் முன்னரே சிவ பிரானை வணங்கியுள்ள காரணத்தால் திருமால் கோயிற் சேடங்களைத் தோளில் தாங்கிச் சென் ருன் என்று வருகின்ற இடத்தில், சிவனுக்குப் பெருமை கொடுத்திருப்பது காரணமாக அப் பகுதியைச் சுவைத்துச் சுவைத்துக் கற்பிக் கின்ற மரபு உடையவராகப் பெரும் பேராசிரியர் இருந்தார். அவரால் இயன்ற இயன்ற பொழுதெல்லாம் தேர்வுகளில் அப்பகுதியில் வினு அமைத்துவிடுவது அவருடைய மரபாக இருந்து வந்தது. வாழ்த்துக் காதையில் தேவந்தி சொல்வதாகவும், காவற்பெண்டு

சொல்வதாகவும், அடித்தோழி சொல்வதாகவும் வருகின்ற பகுதிகளை அவர்கள் உளம் உருகிப் படிப்பித்த நிலை என்போன்றாரால் இன்றும் உன்னத் தக்கதாக உள்ளது. இக்காதையில் ஈற்றில் வரும்,

"நீணில மன்னர் நெடுவிற் பொறையன்நற்
றாடொழார் வாழ்த்தல் தமக்கரிது,
சூழொளிய
எங்கோ மடந்தையும் ஏத்தினாள் நீடூழி
செங்குட் டுவன்வாழ்க வென்று"

என்ற செய்யுட்கு மிகவும் பொருத்தமான உரை பண்டிதமணி அவர்கள் ஒருவராலேயே கூறப்பட்டது என்று சொல்வது புனைந்துரை யாகமாட்டாது. உலகில் உள்ள ஏனைய மன்னர்கள் செங்குட்டுவனுடைய நற்றாளைத் தொழாமல் அவனை வாழ்த்துதல் அரிதென்றும், கண்ணகி ஒருத்தி மட்டும் அவ்வாறு அவன் தாளைத் தொழாமல் 'வாழ்க', என்று அவனை வாழ்த்தினாள் என்றும் அவர்கள் எடுத்துக் காட்டினார்கள்.

பொதுவாக, அவர் பாடம் சொல்லும் மரபு ஆசிரியர் அனைவரும் அறிந்துகொள்ள வேண்டியதொன்றாகும். தாம் கற்பிக்க எடுத் துக்கொண்டிருக்கும் பாடப்பகுதியைக் கவன மாக வீட்டில் ஒருமுறைக்கு நான்கு முறை அவர் படித்து ஐயம் திரிபுகள் அற அறிந்து கொண்டுதான் வகுப்பிற்கு வருவது வழக்கம். மாணவர்களுக்கு உண்டாகக் கூடிய ஐயங்கள் எவை என முன்கூட்டியே எதிர்பார்த்து, அவ் வையங்களைக் களைதற்குச் செம்மைப்படுத்திக் கொண்டு வருவது அவரது வழக்கம். அன்றி யும், அவரால் எதிர்பார்க்கப்படாத பல ஐயங் களை மாணவர்கள்திடும்என எழுப்பினால் அவற் றிற்கு விடை கூறுவதில் அவர் தயங்கவேமாட் டார். எனினும் ஒருசெய்யுட்பகுதிக்குப் பொருள் கூறும்பொழுது, அதற்குரிய நேர்பொருளை உடனே தெரிவித்துவிடாமல், மற்றவர்கள் கரு தக் கூடிய பொருள்களைச்சொல்லி அவை எவ் வாறு கொள்ளத் தக்கவை அல்ல என்று குறிப் பிட்டுத், தக்கவுரை காணவேண்டும் என்பதன் கண்ணே மாணவர்களுக்கு ஆர்வத்தை எழுப்பிவிட்டுப் பிறகு தக்க பொருளைத் தம் மதிநலத்தாற் கண்டு கூறும் பெற்றியுடையவர் என் ஆசிரியர் என்று கூறிக்கொள்வதில் நான் பெருமை கொள்கிறேன். அவருடைய மற்றோர் இயல்பு பல சங்கச் செய்யுட்களிலிருந்து ஒத்த மேற்கோள்கள் தருதல் என்பதும், இலக்கண நயம் எடுத்துரைத்தல் என்பதும், இன்முகத் தோடு தாம் கூறக் கருதும் கருத்துக்களைக் கூறுதல் என்பதுமாம். ஒருமுறை, எங்கள் வகுப்பிற்கு வந்தபொழுது, "இவ்வகுப்பிற்கு வருதல் என்றால் எனக்கு மிக்க மகிழ்ச்சி உண் டாகிறது. அதற்கு முக்கிய காரணம் திரு. அ. சிதம்பரநாதன்போன்றவர்களுடைய நுண் மாண் நுழைபுலமும், உள்ளக் கிளர்ச்சியும், மன எழுச்சியும் ஆகும்" என்று குறிப்பிட்டார்கள்.

தமிழ்ச் சிறப்பு வகுப்பு மாணவர்களாகிய நாங்கள் அனைவரும் பண்டிதமணி அவர்கள் அக்காலத்தில் பேராசிரியர் நிலையில் இல்லை யெனினும், விரிவுரையாளராகத்தான் இருந் தார் எனினும், அவர்களிடத்து மிக்க பெரு மதிப்பு வைத்திருந்தோம். அதற்குச் சிறந்த காரணம் ஆற்றின் ஊற்றிலிருந்து நீர் சுரப் பது போல அவருடைய உள்ளத்திலிருந்து ஊறி ஊறி வந்த இன்னுரைகள். அவ்வமிழ் தத்தை மாந்துதற்குக் காத்திருந்த சிறப்பு வகுப்பு மாணவர்கள் பலர் இன்று ஒரோ ஒரு கல்லூரியில் அல்லது ஒரோ ஒரு பல்கலைக் கழகத்தில் தமிழ்ப்பேராசிரியர்களாக உள்ளார் கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பண்டிதமணி கதிரேசன் செட்டியார் மாணவர்களோடு ஆசிரியர் என்ற முறையிலே மட்டும் பழகாமல், மாணவர்களுள் ஒருவரைப் போலத் தம்மைச் சிலவேளைகளில் அமைத்துக் கொண்டு அளவளாவுதல் உண்டு. இது மேல் நாட்டு மேலைமொழி ஆசிரியர்கள் கைவந்த திறம்என்பார்கள். அது அவ்வாசிரியர் மாட்டுக் காணப்பட்டமையின் மாணவ ருடைய உள்ளங்கள் எல்லாம் அவர்பால் வலிய இழுக்கப்பட்டன. அக்காரணத்தால் மாணவர்களுடைய பேரன்பிற்குப் பண்டித

மணியார் உரியவர் ஆகி, மாணவர்களிடத்தி லும் பேரன்பு காட்டுவாராயினர். பல் இல்லாத வாயினுல் அவர்கள் சிரித்தாலும்கூட, அச்சிரிப் பிலே ஓர் அழகும் பொலிவும் இருத்தல்கண்டு மாணவர்கள் மகிழ்வது உண்டு. அவரிடம் மாணவராய் இருந்த எவரும் வாழ்க்கையில் தாமாகப் பிறகு இலக்கியச் சுவை பெற முயலா மல் இருத்தல் அரியதொன்று என்றே கூறுதல் வேண்டும்.

அவர் தண்டு ஊன்றிய கையினராய்த் தளர்ந்த நடையினராய் வகுப்பினுள் நுழை தற்குச் சிறிது நேரம் ஆகும் எனினும், மாண வர்கள் அனைவரும் அவர் வருதலைச் சாளரத் தின் வழியே அறிந்துகொண்டு முன்னரே தாமாக எழுந்து நின்று அவரை வகுப்புகளில் வரவேற்பது வழக்கம். இத்தகைய மதிப்பு மாணவரை மருட்டி உருட்டி அவரால் வாங் கிக்கொள்ளப்பட்டதொரு மதிப்பன்று; மாண வர்கள் தாமே விருப்பத்தோடு அவர் அறிவிற் கும் அன்பிற்கும் தந்த மதிப்பு என்று கூரு திருத்தல் இயலாது. அவரிடம் பன்னிரண்டு மாதங்கள்தான் நான் படிக்கக் கூடிய வாய்ப்புப் பெற்றிருந்தேனுயினும் என்னுடைய வாழ்நாள் முழுதும் அவரை என் உள்ளம் கவர்ந்த ஆசிரியராக மதிப்பேன் என்பது உறுதி.

1935-இல் நான் எம். ஏ. பட்டம் பெற்றுப் பிற்பாடு அப்பல்கலைக் கழகத்திலேயே பேராசிரியர்—நாவலர்—சோமசுந்தர பாரதியா ரொடும், பண்டிதமணி கதிரேசன் செட்டியா ரொடும் உடனுறைந்து தமிழ்த்துறையில் அவர்க்குஉதவியாளனுக இருந்து பணியாற்றக் கூடிய பேறு எய்தினேன். 1946-இல் நான் அப் பல்கலைக் கழகத்துப் பேராசிரியனுகத் தேர்ந் தெடுக்கப்பட்டுப் பணியாற்றத் தொடங்கிய பிற்பாடு, ஓரிரண்டு மாதங்கள் பண்டிதமணி அவர்கள் ஆராய்ச்சித்துறையில் பணியாற்றிக் கொண்டிருந்து, பிறகு உடல்நலக்குறைவு காரணமாக விலகிக்கொண்டார். விலகிக் கொள்ளுதற்கு முன்னுல் என் அறைக்கு வந்து என்னிடம் அரைமணி நேரம் உரையாடி உறவு க்காட்டிப் பிரியா விடைகொண்டு சென்ருர். அதனை நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும் இன்னும் என் உள்ளம் உருகுகின்றது. 1948-இல், நான் அண்ணுமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராகச் சில மாதங்கள் பணி யாற்றுமாறு ஆட்சியாளரால் தேர்ந்தெடுக்கப் பட்டபொழுது பண்டிதமணியவர்கள் என்னைப் பாராட்டி வாழ்த்தியருளினுர்கள். ஒரு முறை, கொப்பனுப்பட்டி மகளிர் கல்லூரிப் பட்ட மளிப்பு விழாவில் தலைமை தாங்குவதற்கு நான் சென்றகாலை, அவர்களுடைய ஊராகிய மகிபாலன்பட்டியில் பண்டிதமணி அவர்களை அவர்களுடைய இல்லத்தின்கண்ணே கண்டு என் வணக்கத்தைத் தெரிவித்து வருவதற்கு வாய்ப்புப் பெற்றேன். அன்றும் பண்டே போல என்பால் அன்புகாட்டி உருகிய அவர் களுடைய உள்ளமும் என் உள்ளமும் ஒன்று கலந்தன. இவ்வாறு, ஆசிரியர் மாணவரிடத் துத் தொடர்பு உண்டாகுமேயானுல், மாணவ ரும் ஆசிரியரும் உடனுறையும் பல்கலைக் கழகங்களால் விளையவேண்டிய நற் பயன் விளைந்ததாகுமன்ரே என்று சில வேளைகளில் நான் எண்ணுவதுண்டு.

1941—இல் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்திலிருந்து பண்டிதமணி அவர்கள் விலகிக்கொண்டு ஊருக்குப் போதற்கு முன் னுல், ஆசிரியர்கள் கூட்டம் ஒன்றில் அவர்கள் சொல்லிய சொற்களின் நயம் இன்றும் தோற்றுகிறது. "இப்பல்கலைக் கழகத்தில் நான் மூன்று துணைவேந்தர்களைப் பார்த்திருக் கிறேன். அவர்கள் முறையே சர். எஸ். ஈ. அரங்கநாதன், மகாகனம் சீனிவாச சாஸ்திரியார், சர். கே. வி. ரெட்டி ஆகியவர். இம்மூவரும் என்னைப் பொறுத்தவரையில் மும்மூர்த்திகள். முதலவர் என்னை ஆக்கினுர்; இரண்டாமவர் என்னை அளித்தார்:மூன்ருமவர் காலத்தில் இப்பல்கலைக் கழகத்திலிருந்து நீங்கிப் போகிறேன்" என்ருர். அன்று தம்மைச் சங்கார மூர்த்தி ஆக்கிவிட்டாரே என்று சர். கே. வி. ரெட்டியார் அவர்கள் நினைத்து நினைத்து உருகி, மீண்டும் வேலைக்கு அவரை

வரவழைத்துக்கொள்ளுதற்குமுயன்ருர். அம் முயற்சியின் பயனுகப், பண்டிதமணி பல்கலைக் கழக வேலைக்கு ஓராண்டு கழித்து அழைக்கப் பட்டார். அப்பொழுதுதான் அவர் ஆராய்ச்சிப் பகுதியின் தலைவராக இருந்து கௌடிலியத் தைத் தமிழில் மொழிபெயர்த்தார்.

பண்டிதமணி அவர்கள் தமிழில் புலமை யுற்றிருந்த அளவு வடமொழியில் சிறந்த புலமை எய்தி இருந்தமையால், அவரால் பற் பல வடமொழி நூல்கள் தமிழில் மொழிபெயர்த் துத்தரப்பட்டன. அவற்றுள் தலையாயதும், நல்ல தமிழ்மணம் உடையதும், மொழிபெயர்ப் பெனத் தோன்ருததும் ஆகிய "மண்ணியல் சிறு தேர்" என்னும் நாடகம் ஒன்று. "மிருச் சகடிகா" என்ற வடமொழி நாடகத்தைத் தமிழ்ப்படுத்தி, அரிய முகவுரையோடு அதனைத் தமிழகத்திற்கு அளித்த பெருமை பண்டித மணியாருக்கு உரியது. சிலப்பதிகாரத்திற்கும் மண்ணியல் சிறுதேருக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை அவர்கள் அடிக்கடி எடுத்துக் காட்டுவது உண்டு. அம்மொழிபெயர்ப்பினைப் பற்றி நான் 1936–இல் 'தமிழ்ப்பொழிலில், வெளியிட்ட ஓர் ஆராய்ச்சி மதிப்புரையைப் படித்துச் சுவைத்து மகிழ்ந்து, என்னை அவர்கள் வீட்டிற்கு அழைத்துப் பாராட்டி ஞர்கள்.

பண்டிதமணி நகைச்சுவை தோன்றப் பேசும் இயல்பினர். ஒரு நாள் ஒருவர் வீட் டில் அவர்க்குக் குடிப்பதற்குப் பால் கொடுத் தார்கள் என்றும், அதனுள் ஓர் எறும்பு விழுந்து கிடந்தது என்றும், எறும்பு கிடக் கிறது என்று கூறுவதற்குப்பதிலாகத் தாம் 'பாற்கடலில் சீனிவாசன் பள்ளிகொள்ளு கிருன்' என்று கூறினதுண்டு என்றும் அவர் என்போன்றவரிடம் சொல்லியுள்ளார்கள். ஒரு நாள், பொதுக்கூட்டம் ஒன்றில் அவர் தலைமை தாங்கிக்கொண்டு இருந்த நேரத்தில் மகளிர் தங்களுக்குள்ளே ஏதேதோ பேசி ஒலி எழுப்பிக்கொண்டு இருந்தார்கள். அதனைத் தாங்க மாட்டாத பண்டிதமணி, "அவர்கள் பெண்மணிகள் அல்லவா! மணிகள் ஒலித் துக்கொண்டுதானே இருக்கும்! என்று குறும் பாகக் கூறினுர். அதைக் கேட்டவுடன் மகளிர் பேசாமல் அடங்கிவிட்டனர்.

அவர் இன்னெரு செய்தி எங்களிடம் சொல்லுவதுண்டு. அதை ஒரு கதை போல வும், தாம் கண்ட கனவு போலவும் கூறுவது வழக்கம். அஃதாவது, அவர் கடவுளை நோக்கி ஏதோ ஒரு வரம் வேண்டி உறங்கிக்கொண் டிருந்ததாகவும், அப்பொழுது கடவுள் அவரு டைய கனவில் தோன்றி "உமக்குத் தந்தம் போம்" என்று கூறியதாகவும், மறுநாள் பார்த் தால் இருந்த பல்கூடப் போய்விட்டதாகவும் பலரும் நகைக்கும்படி கூறுவது உண்டு. தாம் பற்கள் இழந்துள்ள நிலையை வைத்து, அதை ஒரு பெருங்குறையாக மதிக்காமல், அது காரணமாகவே பிறரை மகிழ்விக்கும் பெற்றி யாளராயிருந்தார் பண்டிதமணி என்பதை உற்றுநோக்கினுல், எவ்வளவு சிறந்த உவகையர் அவர் என்பது புலப்படும். தொல் காப்பியர் "உவகையெல்லாம் அல்லல் நீத்தன வாக இருக்க வேண்டும்" என்ருர். அவர் கூறியது பிறர்க்குத் துயரம் தருவதாக இருக்கும் உவகை தக்க உவகை என மதிக்கும் தன்மையதன்று என்பது. பண்டிதமணி பிறர்க்கு அல்லல் வராமல், தமக்குச் சிறிது அல்லல் வந்தாலும் குற்றம் இல்லை என்று கருதி இவ்வாறு பன்முறை உடன் இருந்தவர் களுக்கு உவகை ஊட்டியது உண்டு.

திருவள்ளுவர் கூறிய ஓர் அருமையான திருக்குறளுக்கு முற்றிலும் எடுத்துக்காட்டாக விளங்கியவர் பண்டிதமணி கதிரேசன் செட்டியார் அவர்கள். "நவில்தொறும் நூல் நயம் போலும் பயில்தொறும், பண்புடையாளர் தொடர்பு" என்ருர் திருவள்ளுவர். அவர் காலத்தில் நூல்களில் நயத்தை அறிந்து அறிந்து துய்த்தவர்கள் பலர்போலும். அதனுல் அதனை உவமையில் வைத்துப் பயில்தொறும் பண்புடையாளர் நட்புப் பெருகும் என்ருர். நவிலுந்தொறும் நவிலுந்தொறும் நூல், நயம் பல பயக்கும் என்பது பண்டிதமணி அவர்கள்

எடுத்துக் காட்டிய நூனயங்களிலிருந்து விளங்கிற்று. பயிலுந்தொறும் பயிலுந்தொறும் பண்புடையாளர் தொடர்பு இனிக்கும் என்பது அவர்களுடைய தொடர்பினுல் என் போன்ரூர்க்கு நன்கு விளங்கிற்று. பிறர் உவக்கும்படி பிறரோடு கூடி, இவ்வறிஞர் நம்மிடமிருந்து பிரிந்து போகின்ருரே எனப் பிறர் கருதி உளம் நையும்படி பிரிந்து செல்லும் இயல்பின ராகப் பண்டிதமணி அவர்கள் இருந்தார்கள். அதனுல்,

"உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்"

என்ற திருக்குறளிற்கு இலக்கியமாக விளங்கியவர் அம்முதுபெரும் புலவர் என்பது விளங்கும்.

அப்பெரியாரொடு தொடர்புகொண்ட மாணவர்களும், அறிஞர்களும், பிறரும் களங்கமில் மகிழ்ச்சி கொள்ளுதற்கு உரியவராக வாழ்ந்த பெருமை பண்டிதமணி அவர்களுடையது. அவர்களது நினைவு நாட்டில் நெடுங்காலம் நிலைத்திருப்பதாகுக!

பண்டிதமணி - எமது ஆசிரியர்

திருமதி ஆர். இராசாமணி, பி. ஏ. (ஆனர்சு) எல். டி.,
விரிவுரையாளர், அரசி மேரி கல்லூரி, சென்னை.

பண்டிதருள் பெருமைபெற்று விளங்கியவரும், கருவிலே திருவுடைய தனவணிகச் செம்மலும், மகாமகோபாத்தியாயர் என்னும் மாபெரும் பட்டம் பெற்றவரும், தென் மொழியில் தேர்ந்து வடமொழிக்கோர் எல்லை கண்டவருமான திருவாளர் கதிரேசச் செட்டியார் அவர்களை 1934-ம் ஆண்டு முதல் 1937-ம் ஆண்டு வரையில் ஆசிரியராகப் பெறும் பேறு எமக்குக் கிடைத்தது. ஒருவருடைய வாழ்நாளில் மாணவப் பருவமே சிறந்ததென்பர். அதிலும் ஆசிரியர் தலைசிறந்தவராக அமைந்துவிட்டால் கேட்கவும் வேண்டுமோ!

பண்டிதமணியவர்கள் அதிகாலையில் எழுந்து நூலாராய்ச்சி செய்வார். அறிவுச் செல்வம் நிரம்பிய அவரை ஆசிரியப் பெருமக்களும், மாணவரும் எப்போதும் சூழ்ந்து கொண்டிருப்பர். ஆசிரியர்குழாம், தன் அறிவைப் பெருக்கிக்கொள்ள விழையும். மாணவர் குழாம், தனது ஐயப்பாட்டினை அவ்வப்போது அகற்றிக்கொள்ள விரும்பும். வேண்டியவருக்கு வேண்டியாங்கு அளிக்கும் கற்பகத் தருவைப்போன்று, பண்டிதமணியவர்கள் தம்மையடைந்தோருக்கு வடமொழி தென்மொழிச் சுரங்கங்களினின்றும் சொற்சுவையல்களையும், பொருட்சுவையல்களையும் வாரி வாரி வழங்குவார். ஆராய்ச்சியில் ஈடுபட்டுவிட்டால் காலக்கழிவே தெரியாது.

வகுப்புகள் தொடங்குதற்கு வெகு நேரத்துக்கு முன்னரே ஆசிரியர் தமது இல்லத்தை விட்டுப் புறப்பட்டுவந்து, கல்லூரியிலுள்ள ஆசிரியர்கள் அறையில் அமர்ந்து உரையாடிக் கொண்டிருப்பார். மணியடித்ததும் வகுப்பிற்கு வந்துவிடுவார். பாடம் தொடங்குமுன் இனிய குரலுடைய மாணவரைக்கொண்டு சில பாடல்களைப் பாடச் செய்து மகிழ்வார். பின்னர்ப் பாடம் நடைபெறும். வாசிக்கும்போது தெளிவாகவும், பொருள் விளங்கும்படியும், உயர்த்தவேண்டிய இடத்தில் உயர்த்தியும், தாழ்த்தவேண்டிய இடத்தில் தாழ்த்தியும் இனிமையாக வாசிப்பார். அக்காலத்தில் உரை யெழுதப்படாதிருந்த அகநானூறு, சிலப்பதிகாரம்–வஞ்சிக் காண்டம் போன்ற நூல்களுக்குத் தாமே உரைகண்டு போதிப்பார். செய்யுட்களிலுள்ள கடினமான பகுதிகளையும் இனிய பகுதிகளையும் எளிய முறையில் எடுத்துக்கூறுவார். அவரது விளக்கவுரையில் சொல்லழகும் பொருளழகும் செறிந்திருக்கும். தமிழ் வகுப்பு என்றாலே உறங்கும் வகுப்பு என்பது பெரும்பான்மையோரது எண்ணம். ஆனால் அது தவறான கருத்து. பண்டிதமணி அவர்களின் போதனா சக்தி, உறங்குகின்றவர்களைத் தட்டியெழுப்பவும், உறக்கத்தை மேற்கொள்ள விழைகின்றவர்களை அவ்வாறு செய்யவொட்டாது தடுக்கவும் வல்லது. அன்றாடம் நடக்கவேண்டிய பாடங்கள் செவ்வனே நடைபெறும். ஆசிரியர் கல்லூரிக்கு வராத நாட்களே இல்லையென்று கூறலாம்.

பண்டிதமணியவர்கள் தாம் கல்விபயின்ற முறையைக் கூறுங்கால் அது அசாத்தியமானதாகவே தோன்றும். ஆனால் கல்வியின் மீது அவா, விடாமுயற்சி, தளராத ஊக்கம் முதலிய பண்புகள் ஒருவரிடம் அமைந்திருக்குமாயின் கற்றல் எளிது. பிறர் உதவியின்றித் தாமே கற்று,

"ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து" என்ற குற

ளுக்கோர் எடுக்துக்காட்டாக விளங்கிய பெருமை ஆசிரியரையேசாரும். ஒரு செய்யுளைப் பன்முறை படித்துப் பதம் பிரித்துப் பொருள் கொள்ளவேண்டுமென்றும், பொருள் விளங்காத இடங்களுக்கு மாத்திரமே உரையின் உதவியையோ ஆசிரியர் உதவியையோ நாடவேண்டுமென்றும், இல்லையேல் எப்போதும் உரையுங்கையுமாக இருக்கும் பழக்கம் நம்மிடம் குடிகொண்டுவிடும் என்றும், அப் பழக்கத்தைத் தவிர்க்கவேண்டுமென்றும் அவர் தமது மாணவருக்கு அடிக்கடி கூறுவதுண்டு. மாணவர்கள் பிழையின்றி அழகாக எழுதவேண்டும்; பட்டதாரிகள் ஆனபிறகு பலவிடங்கட்கும் சென்று சொற்பொழிவுகள் ஆற்றித் தம்மை வெளியுலகிற்கு அறிமுகப் படுத்திக்கொள்ளவேண்டும்; நாப்பழக்கம் இன்றியமையாதது; கேள்வி ஞானத்தைப் பெருக்கிக் கொள்ளவேண்டும்; கட்டுரைகள் எழுதிப் பழகவேண்டும். என்பன அன்னாரது பொன்னுரைகளாகும்.

பண்டிதமணியவர்கள் அருங்குணங்கள் பலவும் ஒருங்கே அமையப்பெற்றவர். தம்முடைய உடல்நிலை வெளியூர்ப் பிரயாணங்களுக்கு இடங்கொடாதிருந்தும் அன்பர்களது வேண்டுகோளுக்கிணங்கிப், பல விடங்கட்கும் சென்று கடல்மடை திறந்தாற்போல் சொற்பொழிவுகள் ஆற்றி அனைவரையும் மகிழ்ச்சிக் கடலில் திளைக்கச் செய்வார். தமது தலைமையில் விரிவுரையமுதம் வழங்கும் பேரறிஞர்களை, அவையினருக்கு அறிமுகப்படுத்துகையில் "பொற்குடத்துக்குப் பொட்டிடவேண்டியதில்லை" யென்பர். சொற்பொழிவுக்குச் செல்லுமிடங்களிலுள்ள தமது மாணவரைக் கண்டு அளவளாவுவார்.

எமது ஆசிரியர், நகைச்சுவை ததும்பப் பேசுவதில் வல்லவர். வகுப்பில் சிலசமயங்களில் மாணவியரைக் கேள்வி கேட்பதுண்டு. சரியான விடை தெரிந்திருப்பினும், அது தவருக இருக்குமோ என்ற ஐயப்பாட்டினலோ, அதைக் கேட்டு மாணவர் நகைப்பர் என்ற அச்சத்தினலோ வாளாவிருப்பின், "பாவையர் பாவைகள் போலவே இருக்கிருர்கள்" என்பார். தேர்வுகளில் விடைத்தாட்களுக்கு மதிப்பெண்கள் வழங்கியபின் "இந்த விஷயத்தில் யான் செட்டியார் போலவே நடந்துகொண்டேன்" என்பார். கல்லூரிக்குச் சிலநாட்கள் வராமலிருந்து பிறகு வரும் மாணவர்களை நோக்கி, "ஒருவன் தன் வீட்டுத் தோட்டத்திலுள்ள தேங்காய்களைப் பறிக்குமாறு ஒருவனிடம் கூறினனும். மரத்திலிருந்த மொத்தத் தேங்காய்கள் நான்கு. பறித்தவன் நான்கு காய்களையும் எடுத்துச் சென்றுனும். அதைக்கண்ட மரத்துக்குச் சொந்தக்காரன், என்னப்பா எனக்கு ஒன்றும் கொடாமல் போகிருயே என்றுனும். அதற்கு அவன், மரத்தில் ஏறியதற்கு ஒன்று, இறங்கியதற்கு ஒன்று, நீயாகக் கொடுத்தது ஒன்று, நாஞக எடுத்துக்கொண்டது ஒன்று என்று கூறினனும், என்று கதை சொல்லுவார். எல்லா விசேடங்கட்கும் கல்லூரியில் விடுமுறை கொடுக்கிருர்கள். அப்படியிருக்க, மாணவர் தமது இல்லங்களில் நடைபெறும் இதர விசேடங்கட்கும் விடுமுறை பெற்றுக்கொண்டால், அவர்கள் எங்ஙனம் தமது பாடங்களைப் படிக்க இயலும் என்பதை இவ்வாறு சுட்டிக் காட்டுவார்.

தகுந்த காரணம் இருந்தாலன்றி ஆசிரியர் அதிருப்தியடைய மாட்டார். கொண்ட சினத்தை வெளியிற் காட்டுவதுமில்லை. ஆங்கிலப் புலமையற்றவர்களை அவமதித்த அந்த நாளில் செருக்குற்றவருக்கு ஏற்ற பதிலளித்து அன்னாரையடக்கினர். ஆங்கிலத்தில் அவருக்கு எவ்வளவு புலமை உண்டு என்று வினவிய ஒருவருக்கு, "உங்களுடைய தமிழறிவைக் காட்டிலும் என்னுடைய ஆங்கில அறிவு அதிகம் என்பதற்குக் கிஞ்சித்தும் ஐயமில்லை" என்று விடையிறுத்தாராம். அதைக்கேட்ட கனவான்

வெட்கித் தலைகுனிந்தாராம். ஒரு நாள் பாடம் நடந்து கொண்டிருக்கையில் அவரைச் சொற்பொழிவுக்கு அழைக்க வந்த துறவி, வகுப்பிற்குள் நுழைந்துவிட்டார். அப்படி அவர் நடந்து கொண்டதைப் பண்டிதமணி யவர்கள் விரும்பவில்லை, எனினும் வந்தவர் துறவியாகையால், அவரைக் கடிந்து கொள்ள வில்லை. ஒரு சமயம் நெய்யென்று சொல்லி இலுப்பை எண்ணெயைக் கொடுத்துத் தம்மை ஏமாற்றிய ஓர் அறிவிலியை மன்னித்து' "இவன் இனிமேல் இப்படிச் செய்யமாட்டான்; இவனைத் துன்புறுத்தாதீர்கள்" என்று ஏனை யோரையும் கேட்டுக்கொண்டார். ஒருவரு டைய தவறுகளையெடுத்துக் காட்டிக் கண்டிப் பது போலவே அவரிடமுள்ள அருங்குணங் களையும் பாராட்டத் தவறமாட்டார்.

ஆசிரியர் எப்போதும் தூய ஆடையணிந் திருப்பார். புன்முறுவல் பூத்த முகத்துடனும், நீறணிந்த நெற்றியுடனும் காட்சியளிப்பார். தமிழ்மொழியையும், சைவத்தையும் இரு கண் களாகக் கொண்டவர்; இல்லத்துக்குச் சென் றோரை இனிது உபசரிப்பார். அப்பெரியார் இலக்கியவுலகத்திற்குச் செய்த தொண்டு கடலினும் பெரிது. மலையினும் மாண்புடைத்து.

"திகழிரவி சவினாணத் தேயமெலா
மிகவிளங்கும்
புகழுடம்பைப் பொருந்தினவர்
பொன்றுகினும் பொன்றூரே !"



கவிஞனும் பொருளும்

— முடியரசன் —

ஒருமைப்பாடு

சொல், சீர் முதலியன நிரல்பட நின்று, இனிய ஓசை பொருந்தி, செறிந்த பொருளுடையதாய், அணி அமைப்புங் கொண்டு, பயில்வார்தம் உள்ளுணர்ச்சிகளைத் தட்டி எழுப்ப வல்லதாய், அவர்தம் உள்ளங்களை யெல்லாம் தன்பாற் கவியச் செய்யும் ஆற்றல் உடையதாய் அமைவதே கவிதை எனப்படும். உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு எழுப்பப்படும் கவிதைக்கே உள்ளங்களைத் தன்பால் ஈர்க்கும் ஆற்றல் உளதாகும். கவிஞன் ஒரு பொருளைக் காணுங்கால், தான் வேறு அப் பொருள் வேறு என்ற வேறு பாட்டுணர்வு மறைந்து, அப் பொருளும் தானும் ஒன்று என்ற நிலை ஏற்படும் பொழுது தான், அஃதாவது அதனோடு கூடும் பொழுது தான் உண்மைக் கவிதை பிறக்கிறது. அக் கூட்டுணர்விலேதான் உணர்ச்சி ததும்பும் சொல்லோவியங்கள் பிறக்கமுடியும். அவ்வாறு பிறக்கும் பாட்டுத் திறத்தால் மட்டுமே இவ் வையத்தைப் பாலிக்க முடியும்; வையத்து மக்களை ஈர்த்துத் தன்வயப்படுத்த முடியும். இவ் வண்ணம் வயப்படுத்த வல்லதே சிறந்த கவிதை என உலகத்தால் மதிக்கப் பெறுகிறது.

கவிஞன் ஒரு பொருளைக் கண்டு, அதனோடு ஒன்றிக் கூடுங்கால் அவன் உள்ளங் கனிகிறது. அக் கனிவிலிருந்துதான் கவிதை தோன்றுகிறது. ஏனைய நேரங்களில் வெளி வருவன கவிதை என்ற பெயர்பெறும் தகுதியை இழந்து விடுகின்றன. இவ் வுண்மையை நாவுக்கரசர் நன்குவலியுறுத்துகின்றார். "உளங் கனிந்த போதெல்லாம் உவந்து உவந்து பாடுதுமே" — என்னும் வாய் மொழியைக் கூர்ந்து நோக்குதல் வேண்டும். கவிவல்லார் என்ற காரணத்தாலே தான் நாம் அவரை நாவுக்கரசர் என்கின்றோம். அப் பெருமகனரே உளங்கனிந்த போதுதான் கவிதை வரும் என்னுங் குறிப்பை உணர்த்திச் சென்றார் எனின், பிறிதொரு சான்றும் வேண்டுவதோ?

கூட்டுக் களி

கவியரசர் பாரதியாருக்கு ஆசை யொன்றுண்டு. அஃது இவ் வையத்தைப் பாலிக்க வேண்டும் என்பதாகும். எத் திறத்தால் பாலிப்பது? படைத்திறத்தாலா? அன்றிப் பிறிதொரு சூழ்ச்சித் திறத்தாலா? அன்று. பாட்டுத் திறத்தாலே பாலிக்க வேண்டும் என்கிறார். அப் பாட்டுத்திறம் எவ் வழியாற் பெறுதல் கூடும் என வினவின் "கூட்டுக்களி யினிலே" எனக் கூறக்கேட்கிறோம். பொருளோடு கூடும் கூட்டுக் களியிலேதான் கவிதைகள் தாமாக வரும் என்னும் உண்மையை, நல்ல ஒரு சூழ்நிலையை உருவாக்கி— படப்பிடிப்பாக்கிக் காட்டுகிறார். "கூட்டுக்களி யினிலே—கவிதைகள்—கொண்டு தரவேணும்" என்று பாடுகிறார். கொண்டு தர வேண்டும் என்றால் பொருள் என்ன? கவிதைகள் தாமாகப் பீறிட்டுக் கொண்டு வெளிவர வேண்டும் என்பதுதானே பொருள்? பத்தினிப் பெண்ணும் தாமும் கூடும் கூட்டுக்களி எனக் காதற் பொருள் பற்றிப் பாரதியார் கூறியிருப் பினும் நாம், கவிஞனும் பொருளும் வேறு பாடின்றி இணைந்து நிற்பதாற் பெறும் களி என்றே பொதுப்படக் கொள்வோம். இங்கே 'களி' என்ற சொல்லை உன்னிப் பார்த்தல் வேண்டும். களி என்ற சொல் மகிழ்ச்சி, இன்பம் என்ற பொருள் தருவதாக மட்டும் அமையவில்லை. அப் பொதுப் பொருளைத் தருவது உண்மையாயினும், அச் சொல் எடுத்தாளப் பெறும் இடம், சூழ்நிலை முதலியவற்றால் வேறொரு சிறப்புப் பொருளையும் தன்னுள் அடக்கிக் கொண்டு நிற்பதை நாம் உணர்தல் வேண்டும். இங்கேதான் அந்தச் சொல்லின் முழு அழகையும் நாம் அனுபவிக்க முடிகிறது.

நனவழிந்த கனவு

களி என்பது தன்னை மறந்த ஒரு நிலையைக் குறிக்கிறது. கள்ளுண்டோன் எவ்வாறு தன்னை மறந்த நிலையாகிய ஓரின்பத்தை அடைகின்றானோ அந்த நிலைக்கும் இன்பத்திற்குந் தான் களி என்று பெயர். ஆகவே கவிஞன் அந்தக் களி நிலையிலே தன்னைமறந்து பொருளோடு கூடி விடுகிறான். அப்பொழுது சாதாரண மனிதர் நிலையினின்றும் உயர்ந்து விடுகிறான்; வானத்திலே மிதக்கிறான்; பறக்கிறான்; அங்கிருந்து உலகையும் உலகப் பொருள்களையும் காண்கிறான்; சொக்கி விடுகிறான். அம் மயக்கத்தில் கண்களை மூடிக் கொள்கிறான்; இன்பக் கனவுகளை அடுக்கடுக்காகக் காண்கிறான். கண்ட காட்சியால் விளைந்த பேரின்பப் பெருக்கைத் தனக்குள் அடக்கி வைத்துக் கொள்ள முடியவில்லை கவிஞனுக்கு; தன்னலம் உடையவனாக அவனால் வாழ முடியவில்லை; வள்ளலாகிறான். யான் பெற்ற இன்பத்தை இவ் வையகமும் பெறட்டுமே என்று வாய்விட்டுக் கூறுகிறான்; நம்மிடம் பேசுகிறான். அந்தப் பேச்சுத்தான் கவிதை, கவிதை என்று திக்கெல்லாம் ஒலிக்கிறது.

> "முன்னிக் கவிதைவெறி மூண்டே
> நனவழியப்
> பட்டப் பகலிலே பாவலர்க்குத்
> தோன்றுவதாம்
> நெட்டைக் கனவின் நிகழ்ச்சியிலே"

என்ற பாரதியாரின் கவிக்கனவை இங்கே நினைவு கூர்தல் வேண்டும். நனவு அழியத் தோன்றும் கனவு பாவலன் காணும் கனவு என்பதை மனத்தில் நன்கு பதித்துக் கொள்ளுதல் வேண்டும். உலகோர் காணும் கனவு இரவிலே துயிலும் பொழுது காணும் கனவாகும். ஆனால் கவிஞன் காண்பதோ பட்டப் பகலிலே விழிப்பு நிலையிலே காணும் கனவு. விழிப்பு நிலையாயினும் நனவு அழிந்து விடுகிறது. அஃதாவது தன்னை மறந்து விடுகிறான் என்பது கருத்து. அப்பொழுது தான் கவிதை வெறி மூண்டெழும்.

ஊடுருவும் கண்கள்:

இவ்வாறு தன்னை மறந்த நிலை, பொருளோடு ஒன்றும் நிலை எப்பொழுது, எப்பொருளைக் காணும் பொழுது ஏற்படுகிறது? எந்தப் பொழுதிலும் எப்பொருளைக் காணினும் கவிஞன் மட்டும் அந் நிலையைப் பெற்று விடுகிறான். நிலவைக் காணினும், இருளைக் காணினும், மயிலைக் காணினும், குயிலைக் காணினும், கிளியைக் காணினும், காக்கையைக் காணினும், குழவி கிழவர், மருதம் பாலை எப்பொருளைக் காணினும் கவிஞனுக்கு அந் நிலை தானாகவே உண்டாகி விடுகிறது. கவிஞன் கண்களுக்கும் மற்றையோர் கண்களுக்கும் உள்ள வேறுபாடு அது தான். அந்தக் கண்களுக்கு ஒரு தனி ஆற்றல் இருக்கத்தான் செய்கிறது. எப்பொருளையும் ஊடுருவிச் சென்று, அதனுள் அமைந்து கிடக்கும் அழகியலையெல்லாம் கண்டு கண்டு கழி பேருவகை கொள்ளும் ஆற்றல் பெற்றவை அக் கண்கள். கட் புலனாகாப் பண்புகளிலும் அப்படியே தான். அக்கட்புலனாகாப் பண்புகளுள் அன்பு, காதல், என்ற இன்னோரன்ன பொருள்களிலேதான் உலகினர் உள்ளம் படியும், சுவைக்கும். ஆனால் கவிஞன் உள்ளமோ அவ்வாறன்று. அன்பு, கொடுமை, காதல், அவலம், கோபம், உவகை எப்பொருளாயினும் சரி அதனுள் படியும்; அதனைச் சுவைக்கும்; மற்றவரையும் சுவைக்கச் செய்யும். இத்தகு ஆற்றல் பெற்றது கவியுள்ளம்! ஆகவே காணும் பொருள் அழகியதாயினும் அழகற்றதாயினும், இன்பமாயினும் துன்பமாயினும் அதனுடன் ஒன்றி, ஈடுபட்டு, தன்னை மறந்து பாடுகின்றான் கவிஞன். இவ்வுயர் நிலையை, கவிப்பண்பை, நனவழியத் தோன்றும் கனவு நிலையை நமது சங்க இலக்கியங்களில் தொட்ட இடமெல்லாம் காணலாம். அவ்விலக்கியங்களில் ஓரிரு காட்சிகளைக் காண்போம்.

ஒல்லையூர் முல்லை

ஒல்லையூர் என்னும் சிற்றூரில் வாழ்ந்த சாத்தன் ஒரு பெரு வீரன்; ஈத்துவக்கும் பண்பும் உடையவன். அவனுடைய உயர் குணங்களைக் கேட்டறிந்த குணிவாயிற்

கீரத்தனுர் என்ற புலவர் அவனே நாடி அவ்வூருக்கு வருகிருர். வந்த விடத்து அவன் இறந்து பட்டனன் என்ற செய்தி எட்டுகிறது அவருக்கு. உள்ளம் துனுக்குற்ருர். பரிசில் பெற்றிலேமே என்ற வருத்தம் அவருக்கில்லே. வீரனும் வள்ளலும் ஆகிய ஒரு பெருமகன் இறந்தானே! இனி, பாணர் பாடினியார்க்குப் புகல் யார்? என்ற பெருநோக்கு அவர் நெஞ்சில் அவலத்தைத் தேக்கியது. செயலற்ற நிலேயோடு திரும்புகின்ருர். ஒல்லேயூர் பகுதியிலே முல்லேக்கொடிகள் பூத்துக் கிடக்கின்றன. புலவர் பார்வையில் அம் மலர்க் கொடிகள் தென்படுகின்றன. அக் கொடிகளுடன் பேசத் தொடங்கி விடுகிருர். அவலம் அவரைப் பேசச் செய்கிறது. "முல்லேயே! ஒல்லேயூரிலே நீ பூக்கின்ருயா? சாத்தன் மாய்ந்த பிறகும் பூக்கின்ருயா? ஏன் பூக்கின்ருய்? நீ பூக்கும் மலரை யார் சூடிக் கொள்ளப் போகிருர்கள்? இளய வீரர் சூட மாட்டார்; வளயணிந்த மகளிரும் பறிக்க மாட்டார்; பாணனும் தன் யாழின் கோட்டால் வளத்துப் பறித்துச் சூடான்; பாடினியாவது அணிந்துகொள்வாளா? அவளும் அணியாள். அனேவருமே அவன் பிரிவால் கலங்கிப் போயிருக்கிருர்களே! ஒருவருக்கும் பயன்படவில்லே என்ருல் வீணுக நீ ஏன் பூக்கின்ருய்? அவனேயிழந்து நான் தான் கொடியேனுய் வாழ்கிறேன்; நீயும் கொடியைதானே? அவன் பிரிவு உனக்குத் துயர்தர வில்லேயா? தந்திருப்பின் பின்னும் உனக்கேன் மலர்ச்சி? வீரன் மாய்ந்தான், வள்ளல் மாய்ந்தான்! நீ பூக்கலாமா?" என்று தம்மை மறந்து பேசுகின்ருர் புலவர். முல்லே தன்னியல்பால் பூக்கிறது. இவர் அவலத்தால் செயலற்ற நிலேயடைகிருர்; அவலத்தோடு இணேந்து விடுகின்ருர். அதனுல் தம்மை மறந்து விடுகின்ருர். முல்லே நம்முடன் பேசுமா?, நாம் சொல்வதைக் கேட்குமா? சாத்தன் மறைவை உணருமா? என்றெல்லாம் பகுத்துப் பார்க்கும் அறிவு அங்கே ஒடுங்குகிறது. ஒடுங்கவே சாத்தன் மறைவை உணரமுடியாத — சொல்லும் சொற்களேக் கேட்கமுடியாத முல்லேயிடம் சென்று இவ்வாறெல்லாம் புலம்புகின்ருர். அப் புலம்பலேப் பாருங்கள்

"இளேயோர் சூடார் வளேயோர்
கொய்யார்
நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்
பாணன் சூடான் பாடினி அணியாள்
ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த
வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை
முல்லேயும் பூத்தியோ ஒல்லேயூர்
நாட்டே"

புறம்—242.

இப்பாடலேப் படிக்கும்போதே அவலம் அரும்பும்; வாய்விட்டுப் படித்தால் உள்ளம் உருகும்; இன்னும் இசையுடன் பாடத் தெரிந்து பாடிவிட்டால் நம்மையும் அறியாமல் உடல் நடுங்கும், உள்ளம் துளங்கும், கண்கலங்கும். கையறுநிலே பாடிய புலவர் நம்மையும் கையறு நிலேக்குக் கொண்டு வந்து விடுகிருர்.

மயக்குறு மக்கள்

பாண்டியன் அறிவுடை நம்பி, அரசனுக விளங்கியதுடன் ஒரு பெரும் புலவனுகவும் விளங்கினுன். குழந்தைகளேப்பற்றிய பாடலொன்று அவன் பாடியதாகப் புறநானூற்றில் வருகிறது. அங்கே அவன் குழந்தையாகவே மாறிவிடுகிருன். அப்பாடலேப் படிக்கும்போது பாண்டியன் அறிவுடை நம்பி என்ற பெருமகன் நம் கண்முன் வரவே மாட்டான்; சிறு சிறு பச்சிளங் குழந்தைகளே வரக் காண்போம். அந்தப் பிள்ளேக்கனியமுதங்க ளிடையேயிருந்து உணவுண்ணும் காட்சியும் நமக்குத் தோன்றும். பாடலேப் பார்ப்போம்,

"...............................
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்ப்பட
விதிர்த்தும்
மயக்குறு மக்களே......................"

—புறம்-188

குழந்தைகளேப் பெற்றெடுத்து, அச் செல்வங்களின் திருவிளேயாடல்களிலே திளேத்து, இன்பங் காணுவோர் இப்பாட்டின் அருமைப்

பாட்டை நன்கு உணர்வர். இதனைப் பாடிய வன், பாடும்போது தன்னைப் பாண்டியனுகவும் அறிவுடை நம்பியாகவும் எண்ணியிருப்பின் இந்த அரிய பாடலை அவன் படைத்திருக்க முடியாது; நாமும் பெற்று இன்புற்றிருக்க முடியாது. அவன் குழந்தைகளோடு குழந்தையாகவே ஆகிவிடுகிருன். அங்கே குழந்தை—புலவன் என்ற இரண்டு பொருள்களில்லை; ஒன்று என்ற தன்மையைத்தான் காண முடிகிறது. மேலைநாட்டு கவிஞன் ஒருவன் கூறுகிருன். "நான் சாளரத்தின் வழியாகப் பறவைகளைப் பார்க்கும் போது நானும் பறவையாகி விடுகிறேன்" என்று. கவிஞன் பறவையாகவே மாறும் போது, குழந்தையாக மாறுவதில் வியப்பென்ன இருக்கிறது? கவிகட்குக் "கூடு விட்டுக் கூடுபாயும்" வித்தை தெரியும்போலும்.

சீறிய நங்கை

இனி, இளங்கோவைக் காண்போம். பாண்டியனிடம் வழக்காடுவதற்காகக் கண்ணகியை அழைத்துச் செல்கிருர் இளங்கோ. கண்ணகி வழக்காடுவது இளங்கோவிற்காக அன்று. வழக்கு கண்ணகிக்கும் பாண்டியனுக்குந்தான். இளங்கோ தான் கண்ணகிக்காக (காவியத்தில்) வாதாடவேண்டும்; ஆனல் அவர் கண்ணகியைத் தான் பேசச்சொல்கிருர். கண்ணகியின் கணவன் கள்வன் எனப் பழி சுமத்தப்பட்டான்; பழியுடனமையாது கொலையும் செய்யப்பட்டுவிட்டான். அவளுக்கு ஆத்திரம் பொங்கிக் கொண்டு வருகிறது; சீற்றம் பெருக்கெடுத்து வருகிறது. அந்த நிலையில் பேசத் தொடங்குகிருள்.

"வாயி லோயே வாயி லோயே
அறிவறை போகிய பொறியறு
நெஞ்சத்து
இறைமுறை பிழைத்தோன்
வாயி லோயே"

என்ற சொற்கள் கனலைக் கக்கிக் கொண்டு வெளி வருகின்றன. இந்தச் சொற்கள் வெளி வந்தனவோ இல்லையோ, வாதாட வந்த இளங்கோ வஞ்சிக்கே ஓடியிருப்பாரோ என்று எண்ணத் தோன்றுகிறது. அப்படிப் பேசுகிருள் கண்ணகி. இளங்கோ பாடியதாயினும் படிக்கும் பொழுது இளங்கோ பாடுவதாக நமக்குத் தோன்றவில்லை; கண்ணகிதான் பேசுகிருள் என்ற உணர்வே உண்டாகிறது. இவ்வாறு கவிஞன் அவ்வவ்வுணர்வுகளோடும் பொருள்களோடும் ஒன்றி நின்று பேசும் பலப்பல காட்சிகளை முன்னைய இலக்கியங்களிற் பரக்கக் காணலாம்.

கம்பன் தன்மை

இவ்வாறு ஒன்றி நின்று பேசும் கவிதைப் பண்பு கம்பனிடத்தில் எவ்வாறு அமைந்து கிடந்தது என்பதையும் சிறிது காண்போம். இராமனுக்கு ஏற்றந்தர எழுந்த நூலே இராம காதை. ஆகவே கம்பன் இராம பக்தனுகத் தான் இருக்க முடியும். ஆயினும் இராமனுடைய குலப்பகைவனுன இராவணனும் வருகிருன்; பேசுகிருன். அவன் பேசும் பொழுது இராமனுக்கு ஏற்றங் குறைந்துவிடுமே என்று கம்பன் நினைந்தானல்லன். நினைந்திருப்பின் தான் என்ற எண்ணம் அங்கே தலைதூக்கி விடும். அப்பொழுது இராவணன் பேசுவதை நாம் கேட்க முடியாது. கம்பன் பேச்சுத்தான் கேட்கும். ஆனல், "கவிச்சக்கரவர்த்தி" எனப் புகழப் பெற்ற கம்பன் தவறுவானு? அவனும் இராவணனுகி விடுகிருன்; இராவணனேடு கலந்து விடுகிருன். ஆகவே தான் உண்மையான இராவணன் பேச்சை நம்மால் கேட்க முடிகிறது.

பரதன் படையொடு வருவதைக் கண்ட குகன் சினத்துடன் கங்கைக் கரையிலே நிற்பதைக் கம்பன் காணுகிருன். சினந்து நின்ற குகனைக் கண்ட கம்பன் அவ்விடத்தில் திடீரென்று காணுமற் போய் விடுகிருன். அங்கே குகன்தான் நிற்கிருன்; பேசுகிருன். இன்னும், தன் அண்ணனை விட்டு விட்டு, குலப்பகைவன் என்றுங் கருதாமல், இராமனிடம் ஓடி, உடன் பிறப்புக்கு ஊறு செய்யும் விடணனுகவும் ஆகிவிடுகிருன். அதே சமயத்தில் கம்பன் இலங்கையில் இராவணனுக்கு அருகிலும் கடமை உணர்ந்தவனுக நிற்கிருன் கும்பகருணன் என்ற உருவத்தில். காதலின் திருவுருவமாக மிதிலைச் சீதையாக நிற்கிருன்; பின்னர் சோகத்தின் மறுவுருவமாக அசோக

வனத்துச் சீதையாகியும் நிற்கிருன். அனுமனு கின்ருன் ; அரக்கனுகின்ருன் ; சாதாரணத் தோழி நீல மாலேயும் ஆகிவிடுகிருன் கம்பன். காவிய உறுப்பினர்களுடன் ஒன்றுபடும் தன்மைக்கு எடுத்துக்காட்டாக ஒன்று காண் போம்.

படை தொடர வரும் பரதனைக் கண்ட குகன், அவன் போர்கருதி வருகின்ருன் என மாருகக் கருதி விடுகிருன். உடனே தன் தோழர்களை அழைத்துப் போருக்கு ஆயத்த மாக இருங்கள் என வீரவுரையாற்றுகிருன். அப்பொழுது

" ஆழ நெடுந்திரை ஆறு
கடந்திவர் போவாரோ ?
வேழ நெடும்படை கண்டு
விலங்கிடும் வில்லாளோ ? "

என்று பேசுகிருன். மறுபடியும் இப்பாடலே வாய்விட்டுச் சொல்லிப் பாருங்கள். சொல்லும் பொழுது நம் கண்முன் கம்பனு நிற்கிருன் ? வெங்கரியின் ஏறனைய விற்பிடித்த குகன்தான் தோன்றுகிருன்.

இவ்வண்ணம் பொருள்களுடன் ஒன்றும் பொழுது தான் உண்மைக்கவிதைகள் தோன்ற முடியும் என்னும் தத்துவத்தை இதன் வாயி லாக நாம் உணர்கிருேம். பாரதியார் இவ் வுண்மையை நன்குணர்ந்தமையாலேதான், கவிதையைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது " கவிதையாம் மணிப் பெயர்காதலி " என்றும், " மனேவியாம் கவிதைத் தலேவி " என்றும் உணர்த்திச் சென்ருர்.

பாட்டும் பொருளும்

பேராசிரியர்
பண்டித. தி. இராமாநுசன். வித்வான்.

கவிதையைப் பாட்டு என்பது பெருவழக்கு. நல்ல பாட்டிற்கு மூன்று உறுப்புக்கள் இன்றி யமையாதவை. பாட்டின் வடிவம், ஒன்று. சுட்டும் பொருள், இரண்டு. பயன் உறுத்தும் வன்மை, மூன்று. இம் மூன்றும் ஒன்று பெறக் கூடுவதே நல்ல கவிதை. ஒன்று குறையினும் கவிதையில் நலம் குறையும். அது சிறந்த கவிதையும் ஆகாது.

"மிக்க வேதியர் வேதத்தின் உட்பொருள்
நிற்கப் பாடிஎன் நெஞ்சுள் நிறுத்தினன்
தக்கசீர்ச் சடகோபன்" — என்று ஒரு

பாட்டு, சடகோபர் இயற்றிய திருவாய்மொழி யின் பெருமை சுட்டுவது. தக்கசீர் ஆவது மிக்கபுகழ். புலவர் பாடும் புகழுடையோர் என்று புறநானூறு கூறும். புலவரால் பாடுப வரே புகழ்பெறுவர் என்ருல் புலவர் புகழுக்குக் கேட்பானேன்? பலர் புகழ் சிறப்பும் புலவர் கட்கு உண்டு. சடகோபர் அத்தகைய பெரும் புகழ் பெற்றவர். காரணம், அவர் பாடிய பாட்டின் சிறப்பு. அவரது பாட்டிற்கு மூன்று பெருமைகள். வேத விழுப்பொருளே ஓதுவது திருவாய் மொழி. இது பொருளால் வந்த சிறப்பு. சீரிய பொருளேக் கருதலாம். ஆனல் அது உரிய சொற்கட்டிலே அமையவேண் டாமா? சடகோபரது பாட்டு இப்படிச் சொல் லும் பொருளும் ஒத்துநிற்கப் பாடியதாம்! இதனல் 'நிற்கப் பாடி' என்றது கவிதைக் குரிய வடிவச் சிறப்பின் அமைப்பு. இனி, மூன். ருவது "என் நெஞ்சுள் நிறுத்தினன்" – என் பது. இது, 'பயனுறுத்தும் சிறப்பினே'க் கருதி யது. பாடுபவர் பெறும் உணர்ச்சியினேப் படிப்போர்க்கும் உறுத்துவது தான் சீரிய கவிதைப் பயன். இப்படி பாட்டின் வடிவம்: பொருள்; பொருளால் பொருந்தும் பயன்— என்று, மூன்ருலும் சிறந்தது சடகோபர் கவிதை என்பது கருத்து. இக்கருத்தாழம் நல்ல கவிதைக்குத் திருத்தம் தரும். கவிதைத் திறனுய்வு தமிழிலே இப்படிப் பண்டே சிறந் திருந்தது.

கவிதையைப் பற்றிய பிறிதொரு கருத்து. மேனுட்டறிஞன் 'பிராட்லி' பேசுகிருன். "கவிதையில் எதைச் சொல்லுகிறது என்பது பெரிதில்லே—எப்படிச் சொல்லுகிறது" என்பது தான் குறிக்கோள் என்று. இஃது அவனது அளவுகோல். வேறு அளவு கருவியும் உண்டு. நல்ல முறையிலே சொன்னல்–அது மெய்யாகிப் பயன் தருமா? தராது. அப்படியே தீமையை நல்ல முறையில் விதைத்தாலும் கெடுதல் தானே! ஆகையால் சொல்லும் செய்தி நல்லதா என்று கொண்டு தான் கவிதை மதிப்பீடு செய்ய முடியும் – என்பது பிறிதொரு சாராரின் விருப்பம்.

ஒருவனது சொல்வன்மையால் பொய் மெய்யாகிறது. இது தான் கவிவன்மை என்கிறது ஒரு கட்சி. எம்முறையில் பேசி ஞலும் அதனுள் காணும் மெய்ப் பொருள் பற்றித்தான் கவிச்சிறப்பு அமையும் என்கிறது மற்ருெரு கட்சி. இரண்டு கட்சிகளேயும் கண்ட இக்காலத்தாரோ மூன்ருவது கொள்கை கொண்டனர். எதையும் பாடலாம் : எப்படியும் பாடலாம்: பாடுவன எல்லாம் பாட்டே"— என்பது அது. இல்லாவிட்டால் "வசன கவிதை" வளருமா? நேற்று வரை இருந்த புலவர் நிலே அப்படி இல்லே. வருந்தி முறைப் படி கற்றுத்தேர்ந்து தான் கவிதை இயற்றினர். உள்ளத்து எழும் ஆசையும்: கையாட்கள் தரும் ஆதரவும் மட்டும் கவிஞன் ஆகப் போதுமா? போதாது. வருந்தி முயன்று பெறும் ஆற்றலும் மிகமிகத் தேவை. முயன்ருல் முடியாதது இல்லே. முயன்று பெறத்தான் வேண்டும். பெற்றும் தான் வந்தார்கள்.

குமரகுருபர அடிகள் முந்நூறு ஆண்டு கட்கு முந்தியவர். தமிழில் பழுத்த புலவர். கலைமகளை நோக்கி அவர் வேண்டுகிருர். அவ்வேண்டுகோளைக் காண்போம்!

"பாட்டும் பொருளும் பொருளால்
பொருந்தும் பயனும் என்பால்
கூட்டும் படி நின் கடைக்கண்
நல்காய்—"

என்பது அது. பாட்டின் வடிவம்: அமையும் பொருள்: பொருந்தும் பயன்—இம்மூன்றும் ஒத்தியங்கவேண்டும் என்பதே அதன் குறிப்பு. பொருளைவிட்டு வடிவத்தையோ, அன்றி வடிவத்தைவிட்டுப் பொருளையோ, மட்டும்–போற்றும் வழக்கம் தமிழில் இல்லை. இருந்தால் 'குதிரையைவிட்டுக் கொட்டம் பூட்டும் நிலைக்கு அது ஒப்பாகும். சீரிய செம்பொருள் குறித்து; கூரிய உணர்வின் வல்லோர்: செவ்விய அணியுறச் செய்வது எதுவோ அதுவே கவிதை— என்பது செய்யுள் இயல்.

கவி. நல்ல கவி. மிக நல்லகவி. மிக நல்ல வான்கவி — கழியமிக நல்ல வான்கவி என்றெல்லாம் முன்னோர் போற்றினர். பாட்டும் பொருளும் பயனும் இயைந்த முத்திறநயம் தான் பெரிது. அந்நிலையிலேயே கவி நலத்தினை அங்ஙனம் வரையறுத்தனர். தமிழ்ப் புலமையின் விழுமிய நிலையினை வேண்டின காலம் அது!

கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி ஒரு தமிழ் நூல். அதனை இயற்றியவர் அதிவீரராம பாண்டியர். அவர் பாடிய பாடல் ஒன்று, உண்மைக் கவிதையின் இயல்பினை நமக்கு நன்கு தெரிவிக்கிறது.

"கன்னல் பாகில்: கோல் தேனில்
கனியில் கனிந்த கவிபாட
அன்னம் தொகுதி வயல்கருவை
ஆண்டான் என்னை ஆண்டதுவே"

நல்ல இனிய கவிகள் பல பாடுமாறு கருவையாண்டவன் எனக்கு அருளினன்—என்றது பொருள். இதில்–அவர் உண்மைக் கவிதை இயல்பினை மூன்றுவமைகளால் விளக்கியுள்ளார். கன்னல் பாகு போல; கோல் தேன் போல: கனிந்த கனிபோல—என்பன அவர் தந்த உவமைகள். "இனிய கவி—என்பதற்கு இப்படி மூன்று உவமைகள் வேண்டுமா? கொம்புத்தேன்: பழுத்தபழம்: வெல்லப்பாகு எல்லாம் ஒரே இனிமைதானே"-என்று கேட்கத் தோன்றும் நமக்கு. ஆனல் உண்மை அப்படி இல்லை. வேறுவேறு தன்மைகளை அவைகள் காட்டும். ஒன்றுக்கே மூன்றுமானல் 'கூறியதுகூறல்' என்ற வழுவரும்.

கன்னல் பாகு—கரும்பின் நின்று ஆட்டிக் கொள்ளும் கட்டி. கரும்பு வெல்லக்கட்டியை எளிதில் தருமா? ஆலையில் இட்டு ஆட்டி, கோது நீக்கிச், சாறு எடுத்து, தீயிடை வேக விட்டு–பதம் பார்த்து — பக்குவம் தவருது பெறுவது அது. இப்படி, அரும்பாடு பட்டுப் பெறுவதிலேதான் பயன் நயன் எல்லாம். இல்லையா? இது போலவேதான் மேலான கவிதை ஆகுவதும். பாடும் புலவர் கல்வி கேள்விகளில் தேறவேண்டும். இயற்றும் பரிசினை முயன்று கற்கவும் வேண்டும். மொழியிலே வருந்தித் திருந்திய பயிற்சியும் வேண்டும். இப்படி அரும்பாடு பட்டுப் பாடுவதுதான் கவிதை. இதை விடுத்து "பைய நாவை அசைத்தால் போதும்: கவிதை தானே வரும்: ஆன்ற அறிவோ சான்ற புலமையோ தேவையில்லை"–என்று நினைப்பது தவறு. இதனையே "கன்னல் பாகு போன்ற கவிதை" என்ற உவமை சுட்டுகிறது.

இனி அடுத்தது கோல்தேன் என்பது. கோல் தேனவது கொம்புத்தேன். பல பூக்களிலே சென்று சேர்த்துக் கூட்டித் திரட்டி ஈட்டிவைப்பது–அது. தேனீக்களின் அயராத உழைப்பு, சலியாத முயற்சி, ஓயாத நாட்டம் இவற்றின் பயனய் விளைவது தேன். பாடும் புலவனது பரிசும் இத்தகையதே. பல நூல்களைத் தேடிப் படிக்கிருன். நல்ல கருத்துக்களை விரும்பிப் பெறுகிருன். காலத்திற்கு

ஏற்பப் புதுக்குகிறுன். அறிவுலேயிலேயிட்டுத் திருத்தவும் செய்கிறுன். பிறகு சுவையுள்ள கவிதையாகச் சமைக்கிறுன். இப்படி ஒப்பு நோக்கித் திரட்டிய புலமைப் பயனுவதே கவிதை. இதனேயே 'கொம்புத்தேன் போன் றது கவிதை' என்ற உவமை காட்டுகிறது.

மரத்தில் காய்த்தவுடன் எதுவும் பழமா காது. அதற்கு ஒரு பருவம் வரவேண்டும். முதிரும் காலம் வரை மரத்தில் இருந்து பழுப் பது தான் நல்லபழம். ஊத்தம் போட்டுக் காயைப் பழுக்கவைக்கும் செயல்முறை உண்டு. அது இயல்போடு ஒட்டாதது. இயற்கைக்கு முரணுனது. தானே, மரத்தில் பருவம் முதிரும் வரை இருந்து கனிந்து பழுத்த பழம்தான் மேல். இல்லேயா? கவிஞனுக்குச் சொல்லும் கருத்திலே காதல் வேண்டும். காதலித்த கருத்திலே மனதை நிலேநிறுத்தி கனிந்துருகிக் கசியவும் வேண்டும். அக்கசிவின் முதிர்ச்சியே 'அநுபவம்' ஆகும். அவ்வநுபவ முதிர்ச்சி அகத்தையும் புறத்தையும் ஒன்ருக்கும். அவ் வொன்ருன நிலேயிலே மெய்ம்மறந்து உள்ள டங்காத உணர்ச்சி வெளிப்பட்டால் வழிந்து வரும் உண்மைக் கவிதை. பருவகாலம் வரை இருந்து முதிர்ச்சியால் தன்னடைவே கனிவது பழம். உரிய நேரம் வரும்வரை இருந்து, மனத்தகத்து முதிர்ந்த அநுபவமாய்ப் பொங்கி வழியும் இயல்பினது கவிதை — என்ற பேருண்மை கனியுவமையால் துலங்குகிறது.

இப்படி முத்திறப் பயனும் கூடிக் கவிகள் அமைவது அருமை. காரிகை கற்பதனுல் மட்டும் வாராது. செயற்கரிய செய்யும் பெரிய செயல் ஆகும். அதனுலேயே நம் தமிழ் மேலோர் இதனேத் 'திருவருட் பயன்' என்று கொண்டனர். கவிஞன் கருவிலே திருவுடைய வன். பிறவியிலேயே கவிஞுக அமைகிறுன்— என்பதன் உண்மையும் இதுவே. அதிவீர ராமபாண்டியரும்இக்கருத்திலேயே பேசுகிறுர். பதிற்றுப் பத்தந்தாதி மட்டும் இல்லே, தமிழிலே புகழ்வாய்ந்த பல நூல்கள் செய்தவரவர். எல்லா நூல்களேயும் இயற்றிய பின் தானே படித்தார். அதன் சொல் பொருள் நயங்களேக் கண்டார். கண்டவர் இது நாம் பாடியது அன்று என்று கொண்டார். கருவை ஆண்ட வனே தன்னேப் பாடுமாறு ஆட்கொண்டான்– என்ற உண்மை அவருக்குத் துலங்கிற்று. அதனேயே அவர்,

"கவிபாட கருவை ஆண்டான் என்னே ஆண்டது" என்று கூறினுர். இக்கருத்தாலேயே நம் முன்னேர்கள் சிலரைத் 'தெய்வக்கவிஞர்' என்று போற்றினர்.

கவிஞனேக் கருவி எனக்கொண்டு கடவுளே பாடிக்கொள்கிறுர் என்ற உண்மை யில் புதுமை இல்லே. கம்பன் வரலாற்றிலே சுவைதரும் பகுதி ஒன்று. சிலர் கம்பனிடம் சென்ருர்கள். சென்று அவனது பாடலில் உள்ள சொல் ஒன்றிற்குப் பொருள் கேட்டார் கள். அவன் சொன்ன விடை நமக்கு வியப் பளிக்கும். "நானும் அறியேன்: அவளும் பொய் சொல்லாள்" என்பது மறுமொழி. கலேமகளே என்னேக் கருவியாகக் கொண்டு பாடினுள் என்ற உண்மையின் வெளியீடு அல்லவா அது! பிரௌனிங் என்ற மேலேத் தேயப் புலவனது வரலாறும் இஃது ஒத்தது. அவன் ஒரு கடவுட் சிந்தனே படைத்த தெய்வக் கவிஞன். சிலர் அவனிடம் சென்று நீர்பாடிய பாடலுக்குப் பொருள் சொல்லும் என்ருர்கள். "இதனேப் பாடிய போது பொருள் இருவர்க் குப் புரியும்; இப்பொழுதோ ஒருவர்க்குத்தான் தெரியும்; அந்த ஒருவர் ஆண்டவனே"— என்று மறுமொழி பகர்ந்தார். இதன் கருத்து என்ன? நான் அதனேத் தெய்வத் தூண்டு தலால் பாடினேன். பாடுங்கால் நான் ஒரு கவியே ஒழியப் பிறிதில்லே. கடவுள் என் மூலம் பாடி முடித்துக் கொண்டார். ஆகவே இப் பொழுது பொருள் சொல்ல என்னுல் இய லாது" என்பதே கருத்து.

திருமங்கை மன்னர் தமிழிலே பெரும் புலவர். அவரது நூல், தமிழ் நூல் துறைகள் அஞ்சுக்கும் இலக்கியம். 'இருந்தமிழ் நூல் புலவர்' என அவரைப் பலரும் போற்றுவர். அவர் பேசினுர்:-

"பாட்டினுல் உன்னை என் நெஞ்சத்
திருந்தமை
காட்டினுய் கண்ணபுரத்து
உறை அம்மானே"

என்று: அதற்கு, "நாம் பாடிய கவியில் மதிப் பிருந்த படியால் இது நம்மால் வந்ததாகக் கூடாது. உள்ளே இருந்து பாவிக்கின்றுன் ஒருவன் உண்டு என்று அறிந்தேன். நீ இது கொண்டு என் இருதயத்துள் இருக்கின்ற இருப்பை நிச்சயிக்கலாம் படி பண்ணினுய்" என்றது பெரியோர்கள் பணித்த உரை.

"என் நாமுதல் வந்து புகுந்து நல்இன்
கவி
தூமுதல் பத்தர்க்குத் தன்னைத் தான்
சொன்ன
என் வாய் முதல் அப்பன்" — என்ற

சடகோபர் திருவாய் மொழியும் இங்கு ஒப்பு நோக்கத் தக்கது. "எனதுரை தனதுரை யாக" என்ற சைவப்பெருமக்களது வாக்கும் இதனையே ஊக்குவதாகும்.

இத் தெய்வப் புலமைக் கொள்கையைப் பழைமை கூறியும் பழிப்பதற்கில்லை. நேற்றிருந்த புரட்சிக் கவிஞர் சுப்பிரமணியபாரதியார். அவர் பகுத்தறிவற்ற பழங் கொள்கைகளிலே மனம்கவியாதவர். புதுமையே விரும்பிய தேசிய கவி. அவர் வெளியிடும் உண்மை இது. "காவியம் பல நீண்டன கட்டு என்பார்: கதைகள் நல்லன புனைந்திடுக என்பர்; நாடகம் பல நெடுகிலும் செய் என்பர் :—ஆனுல்,

"நாட்டு மக்கள் வறுமையும் பிணியும்
நையப் பாடு என்று ஒரு தெய்வதம்
கூறுமே"— என்கிருர்.

இதிலிருந்து அவர் தேசிய கவியான மருமம் தெரிகிறது. ஒரு கவிஞன் தன் அறிவையும் ஆற்றலையும் எந்த வகையில் திருப்பமுயன்றுலும்—அவன் அறியாத ஒரு தெய்வீகத் தூண்டுதல் அவனைத் தன்வழியே திருப்புகிறது. எந்த நாட்டுப் பெருங்கவிஞர்களும்இந்தவிதிக்கு விலக்கல்லர்.

இத்தகைய தெய்வக் கவிதைகளே—" மேலாம் தரமுடையவை. மக்கள் உள்ளத்துள் ஊடுருவிப் பாயும். பள்ளத்துள் பாயும் வெள்ளம் போல் விரைந்தும் பதியும். செயலளவிற்கும் உயர்வு அளித்து உதவும். அரசனது ஆணை மக்களைக் கீழ்ப்படிந்து ஒழுகச்செய்து நல்வாழ்வுக்கு வழி செய்வது போலப் புலவனது போதனையும் மக்களைப் பண்படுத்தி ஆளும். இந்த ஆட்சி நலம் பெற்ற கவிதைகள் தாம் தனிப்பெரும் சிறப்பின. மக்கள் மனதில் நற்கருத்துக்களை உள்ளுறுத்தி உணர்ச்சி ஊட்டி உயிர்த்தெழச் செய்யும். வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வழிகோலும். மக்களையும் திருத்திப் பணிகொள்ளும். இக்கவிதைகளே— "கழியமிக நல்லவான் கவி" எனப் புகழப் பெறும். "என்தன் பாட்டுத் திறத்தாலே உலகைப் பாலித்திட வேண்டும்" — என்றுர் பாரதி.

"மண் கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரும் என்
பண்கண்ட அளவில் பணியச்
செய்வாய்" — என்று

கலைமகளை வேண்டினுர் குமரகுருபரர். மேம்பட்ட இக்கவிதை நலத்தையே எப்புலவரும் வேண்டினர். புவியிலே கவியாட்சியை விரும்பிய மன்னர்களே கவிஞர்கள். புவியரசு: கவியரசு என்று பேசுவது மரபல்லவா?

கவிதை பற்றிய பலவேறு நுணுகிய கருத்துக்கள்; தமிழுக்கே உரிய தனிப்பெரும் கொள்கைகள்; என்றும் எங்கும் காண ஒண்ணுக் கலை நலங்கள்—எல்லாம் தமிழிலே இலைமறைகாய் போல் நிறைந்து கிடக்கின்றன. காணும் பொறுமையோ புலமையோ நம்மவர்க் கில்லை. தமிழிலே கவிதைக்கு விளக்கமில்லை. கவிதை பற்றித் தனி நூல் இல்லை. கவிதைக் கலைக்குப் புலமைக் கருத்தில்லை. திறனய்வோ புலவன் அறியாப் புதுத்துறை" என்றெல்லாம் பேசுகிறேம்; எழுதுகிறேம். வேறு சிலர் இவைபற்றிய மேல்புலக் கருத்துக்களை இறக்குமதி செய்கிருர்கள். மேல் காற்றைத் தென்றலாகத் திரித்தோம் என்கிருர்கள். இருப்பதை

மறந்த தம்குறையை நினைப்பதில்லை. தமிழைப் பிறமொழியின் துணையால் ஆய்வது நலம் தான். பிறமொழியால் தமிழைப் போற்றலாம். பிறமொழியாக மாற்றல் ஆகாது. தமிழிலே பற்றேடும் பயிலவேண்டும். பிறமொழியோடு ஒப்பிட்டுச் செப்பனிட வேண்டும்: தமிழின் தகுதிநிலை ஒப்புயர்வற்றது என்ற உண்மை காண உதவ வேண்டும். நாம் இவ்வழியிலே நின்று தொண்டு புரிதல் நலம். அதுவே நாட்டிற்கும் வளம் தரும். மொழிக்கும் புகழ்தரும்.

வாழ்த்துக்கள்

சிவக் கவிமணி
சம்பந்த சரணலயத் தம்பிரான் சுவாமிகள்
கோவை.

மேலைச் சிவபுரியில் மேன்மை பெறஅமைந்து
காலை யெழுங்கதிர்போற் கைபரப்பி — நாலுதிக்கும்
நன்புகழ்க ளோங்கி நாளும் வளர்ந்திடுக
சன்மார்க்க மேன்மைச் சபை.

திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள்
(ஆசிரியர் : திருப்புகழ் அமிர்தம்)

வேலைப் பிடித்த விமலன் திருவருளால்
காலைக் கதிர்போல் கலைபரப்பி — மேலைச்
சிவபுரிசன் மார்க்கசபை சீர்பெறவே பல்லாண்டு
நலமுடனே வாழ்க நயந்து.

திருவள்ளுவரின் பொருளியல் கொள்கை

திரு. மா. இளையபெருமாள், எம். ஏ., எம். லிட்.,
தமிழாராய்ச்சித்துறை, பல்கலைக்கழகம், கேரளம்.

திருவள்ளுவரின் வாழ்க்கை வரலாறு நமக்குக் கிடைக்கவில்லை. அவர் நம் நாட்டில் எந்தப் பகுதியில் பிறந்தார், எந்தச் சூழ்நிலையில் வளர்ந்தார், எத்தகைய வாழ்வு வாழ்ந்தார், அவர் அனுபவித்த இன்ப துன்ப நிகழ்ச்சிகள் யாவை என்பவையெல்லாம் இன்னும் ஆராய்ச்சிக்குரிய பொருள்களாகவே அமைந்திருக்கின்றன. திருக்குறளிலிருந்து அவரைப்பற்றி நாம் தெரிந்துகொள்வதென்ன? திருவள்ளுவர் பிறப்பால் மனிதன், உணர்வால் கவிஞன், உள்ளத்தால் சான்றோன், அறிவால் மேதை. மனித சமூகத்தின் நேர்மைக்குரல் அவரது குறள்.

இந்த நிலையை அவர் எப்படி அடைந்திருக்க வேண்டும்? மனிதசமூகத்தின் குரலாக அவரது நூல் அமையவேண்டுமானால் மனித வாழ்வைப் பற்றி எவ்வளவு நாள் ஓயாது சிந்தித்திருக்கவேண்டும்? சிந்தித்திருக்க வேண்டுமானால் தன்னோடு வாழ்ந்த சகோதர மனிதர்களின் இன்பதுன்பங்களிலே எவ்வளவு அதிகமாகப் பங்கு கொண்டிருக்கவேண்டும்? ஆம்; அவர் மனித இனத்தின் நன்மையைப் பற்றியே எண்ணி வாழ்ந்திருப்பார். சாதாரண மனிதன் கூட 'ஒத்தது உணர வேண்டும், உணராதான் செத்தாருள் வைக்கப்படும்' என்று பேசுகின்ற வள்ளுவர் தனது சூழ்நிலையில் வாழ்ந்த மக்களது உணர்ச்சிகளை விட எதனை முக்கியமாக எண்ணியிருக்க முடியும்? 'மக்கட் பண்பில்லாதான் மரம்' என்று கருதுகின்ற வள்ளுவர் தன்னைச் சூழ்ந்திருந்த மக்களையும் அவர்களது நல்வாழ்வையும் தவிர எதனை நினைத்திருக்கமுடியும்? 'பிறிதின் நோய் தன்னோய்போல் போற்றாதான் அறிவினால் பயனுண்டோ?' என்று கேட்கின்ற வள்ளுவருக்கு மனிதவெள்ளம் படும்பாடு கண்ணில் படாமலா போயிருக்கும்? வாழ்வில் நேரும் இன்ப துன்பங்கள் அவர் உள்ளத்தைப் படுத்திய பக்குவந்தானே அவரது சான்றாண்மை! நன்மையும் தீமையும் மோதுகின்றபோது, நீதியும் அநீதியும் எதிர்க்கின்றபோது அநீதிக்குஆட்பட்டுக்கொடுமைக்குப் பணிந்து தீமைக்கு ஒடுங்கிச் செய்வதறியாது திகைக்கும் மக்கட் கூட்டத்தை நெருங்கிப் பார்க்காமலா திருக்குறள் எழுதியிருக்க முடியும்?

நாடு என்பது வள்ளுவருக்கு வெறும் நிலப்பரப்பு அல்ல. மக்கட் கூட்டம் வாழ்கின்ற நிலம். மனித இனம் நல்ல முறையில் வாழ இடங்கொடுப்பது தான் நாடு. எனவே தான் நாட்டைப் பற்றி எண்ணும்போது அதன் வளத்தை முக்கியமாக எண்ணுகிறார். தள்ளா விளையுள் சேர்வது நாடு; பெரும் பொருளால் பிற தேசத்தாரும் விரும்பத் தக்கது நாடு; பிணியின்மை செல்வம் இரண்டையும் அணியாகக் கொண்டது நாடு; என்றெல்லாம் நாட்டிற்கு இலக்கணம் வகுக்கிறார். எனவே மனித வாழ்வு நேர்மையான முறையில் இன்பமாக அமையவேண்டுமானால் நாட்டின் வளம்—மக்களது பொருள் வாழ்வு, பொருளாதார நிலை—சிறந்திருக்கவேண்டும் என்பது வள்ளுவரது அடிப்படைக் கருத்து. பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை என்பது அவரது உறுதி. அதனால் தான் அறத்தையும் பொருளையும் பற்றிப் பேசுகின்ற சுமார் ஆயிரம் குறட்பாக்களில் ஏறக்குறைய கால்பகுதியைப் பொருள் நிலை பற்றிப் பேசுவதில் செலவு செய்திருக்கிறார்.

அவர் காலத்திலும் இலர் பலர் என்ற நிலைதான். விரிநீர் வியனுலகில் உள் நின்று உடற்றும் பசியால் வாட்டப் பெற்றோர் இம் மக்கள். நல்குரவு என்னும் அதிகாரம் தோன்றுதற்குக் காரணமாய் இருந்தவர் இவர்களே.

உலகத்தில் வறுமையினும் தீமை பயப்பது ஒன்றில்லை. செல்வாக்கைத் தொலைத்து, குடிப் பிறப்பைக் கெடுத்து, சோர்வை உண்டாக்கி வாழ்வையே அழித்துவிடும். உலகில் துன்பத்தின் வகைகளையெல்லாம் எண்ணிக் கணக்கிட்டால் அவையெல்லாம் இந்த வறுமையில் வந்தடங்கிவிடும். பெற்ற தாயாலும் பிறன்போல நோக்கப்படும்வறுமை ஒருவனைக் கொல்வது போன்ற துன்பத்தை விளைப்பது. இவ்வாறு வறுமையைப் பற்றி வருந்திக் கூறுகிறார் வள்ளுவர்.

எனவே வள்ளுவர் காலத்துச் சமூகம் இருபிரிவினரால் ஆகியது. சிலர் செல்வம் படைத்தோர், பலர் இல்லாதோர்; இல்லாதோரில் பலர் உழைப்போர், சிலர் இரப்போர்; செல்வம் படைத்தோரில் பலர் கரப்போர், சிலர் ஏனையோர். இந்தச் சூழ்நிலையில் எழுந்தது வள்ளுவரின் பொருளாதாரக் கொள்கை. ஒரு பக்கம் சுகபோக வாழ்விலே திளைக்கும் செல்வர், மற்றொரு பக்கம் வறுமையால் வாடும் மக்கள். ஒரு பக்கம் பொருளின்மையால் ஏற்படும் இரவும் நல்குரவும், மற்றொரு பக்கம் அளவிறந்து செல்லும் செல்வமிகுதி. இந்த இரண்டு நிலைகளையும் பற்றி வள்ளுவர் சிந்தித்திருக்க வேண்டும். இந்த நிலை மாறி எல்லோரும் நல்வாழ்வு வாழும் வழி யாது என்று ஆராய்ந்திருக்க வேண்டும். இந்த இருகூட்டத்தினரையும் நோக்கிப் பேசும் அறிவுரை தான் திருவள்ளுவரது பொருளியல் சாரம்.

இரக்கின்ற கூட்டத்தை உழைக்கின்ற கூட்டமாக மாற்ற எண்ணுகிறார் முதலில். இரவச்சம் என்னும் அதிகாரத்தில் இரவாமை சிறந்த செல்வம் மட்டுமல்ல, இழிவைப்போக்கி இன்பந்தரும் சால்பு என்றும் பேசுகிறார். அடுத்து நிற்பது தொழிலாளப் பெருமக்கள். எத்துணை உழைத்தாலும் வாழ்க்கைத் தேவைக்குக் வேண்டுமளவு பொருள் பெறாது வருந்தி உழலும் கூட்டம். இவர்கள் முன்னேறினால் தான் நாடு வாழமுடியும் என்று எண்ணுகிறார் வள்ளுவர். ஏமாற்றத்தாலும் சோர்வாலும் உள்ளம் அழிந்து அவர்கள் வாழ் விழந்து விடக்கூடாது என்றெண்ணுகிறார். வறுமையைக் காரணமாகக் காட்டி அறமல்லாதன செய்து அவர்கள் வருந்தக்கூடாது என்றும் எண்ணுகிறார். இடுக்கண் வருங்கால் நகுக. உள்ளத்தின் ஊக்கம் ஆக்கத்தை மட்டுமல்ல உயர்வையும் அளிக்கும். அறிவும் முயற்சியும் கொண்டு வாழ்பவன் தான் மனிதன். சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம். முயற்சிதான் நாட்டின் உயிர். உழைப்பே உலகம் உவகையாய் வாழ உயிரளிப்பது என்பன போன்ற கருத்துக்கள் உழைப்பவனால் தான் நாடு காக்கப்படுகிறது என்பதை யாவரும் உணர வேண்டும் என்னும் எண்ணத்தோடு எழுதப் பட்டவை. இந்த நோக்கத்தோடுதான் அவர் ஆள்வினையுடைமை, ஊக்கமுடைமை, மடியின்மை, உழவு ஆகிய அதிகாரங்களை இயற்றியிருக்க வேண்டும்.

எஞ்சியிருக்கும் பகுதி செல்வர் கூட்டம். இவர்களை நோக்கிப் பேசுகின்ற பாக்கள் ஏனையோரை நோக்கிப் பேசுவதைக் காட்டிலும் அதிகமாக அமைந்திருக்கின்றன. இக் கூட்டத்தினர் எல்லோரும் மேலும் மேலும் செல்வம் சேர்க்கவேண்டுமென்னும் ஆசை உடையவர்கள். பலர் தீய முறைகளைக் கையாண்டு பொருள் குவித்தலை உணர்ந்த வள்ளுவர் அந்த வழிகளையெல்லாம் சுட்டிக் கண்டிக்கிறார். நடுநிலை தவறி வருகின்ற பொருள், அழுக்காற்றினால் அடையும் பொருள், பிறன் பொருள் வெஃகி வருகின்ற ஆக்கம், பழி செய்து பெறும் பொருள், பிறரை அழச்செய்து கொள்ளும் பொருள் இவையெல்லாம் பயன் தரா, கேடு பயக்கும் என்று கூறித் தீய வழியிற் பொருள் குவித்தலைத் தடுக்கிறார்.

நல்ல வழியில் தான் பொருளீட்டுகிறேன் என்று கூறிப் பொருள் குவிப்பவனை எவ்வாறு நாட்டின் நன்மைக்கு உதவச் செய்வது? அவனுக்கு வள்ளுவர் இடுகின்ற கட்டளை மிகவும் சாதுரியமானது. அன்றாடக் கடமையின் வடிவிலே அவனது செல்வக் குவியலைத் தாக்குகிறார். அவர் கூறுகின்ற அறவழியில் நிற்கின்ற செல்வன் எவனும் கோடீஸ்வரனாக ஆகமுடியாது. செல்வனை நோக்கி இல்லாதானுக்குக் கொடு என்று பல இடங்களில் பல முறைகளில் வற்புறுத்துகிறார். திருக்குறளில்

ஒரு கருத்து ஒருஅதிகாரத்திற்குள் தேற்றத் திற்காக மறுமுறையும் கூறப்படுவதைச் சாதா ரணமாகக் காண்கிறோம். ஆனால் பல அதி காரங்களில் சந்தர்ப்பத்தை வரவழைத்துக் கொண்டு திரும்பத் திரும்பப் பேசப்படும் கருத்து செல்வனை நோக்கி ஏவுகின்ற ஆணையைத் தவிர வேறில்லை. ஈகை என்ற அதிகாரத்தில் வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை என்று இலக்கணம் வகுக்கிறார். ஈத்துவக்கும் இன்பத்தைச் சுட்டிக்காட்டுகிறார். கொடுத்தல் நன்று, அது குலனுடையானது என்று போற்றுகிறார். ஒப்புரவறிதல் என்று மற்றோர் அதிகாரம் வகுக்கிறார். அதில் வற்புறுத்தப் படுவதும் இதே கருத்துத்தான். மேகத்தை உதாரணம் காட்டிப் பொருளீட்டலே பிறர்க்கு அளிக்கத் தான் என்று பேசுகிறார். அறி வுள்ளவன், நயனுடையன், பெருந்தகையான் இவர்களது செல்வம் ஊருணி நீர், உள்ளூர் பழுத்த பயன் மரம், மருந்தாகும் மரம் என் றெல்லாம் பாராட்டுகிறார். புகழ் என்னும் அதி காரத்தில் யார் எப்படி வேண்டுமானாலும் சொல்லட்டும், ஈவார் மேல் நிற்பது தான் புகழ் என்று முடிவு கட்டுகிறார். ஈதல் இசைபட வாழும் முறை என்று பேசுகிறார். இல்வாழ் வானின் கடமையாகப் பகுத்து உண்ணல், விருந்தோம்பல், சுற்றம்தழுவல், குடிமை ஆகியவற்றை வற்புறுத்துகிறார். பொருள்வெறி பிடித்தோனுக்குப் பொருளினது நிலையாமை யைக் காட்டுகிறார். கூத்தாட்டில் மக்கள் கூடுவதுபோலத்தான் செல்வம் என்று குறிப் பிடுகிறார். ஆகவே சமூகப்பொறுப்புணர்ச்சி, நிலையாமைஆகியவற்றின் வாயிலாகச் செல்வம் குவிதலைத் தவிர்க்கிறார்.

இவ்வாறு நயமாகப் பேசுகின்ற திருவள்ளு வர் இதனை உணரமுடியாத செல்வர்களுக்குச் சிறிது கடுமையாகப் பேசி உணர வைக்கிறார். பிறர்க்குக் கொடுக்காது செல்வத்தைக் குவிப் போனுக்குப் பொருளை இழப்பது நிச்சயம் என்று முன்னறிக்கை விடுக்கிறார். வைத்திழப் போரை வன்கண்மையுடையவர்கள் என்று வைகிறார். செல்வம் படைத்துப் பிறர் விரும்ப வாழாதானிடம், 'கொடுக்காதான் செல்வம் ஒருவகை நோய்' என்று குறிப்பிடுகிறார். 'அற் றார்க்கு ஒன்று ஆற்றாதான் செல்வம் மிக நலம் பெற்றாள் தமியள் மூத்தற்று' என்று உதார ணம் காட்டுகிறார். அருஞ் செவ்வி இன்னா முகத்தான் பெருஞ்செல்வம்' பேயாகத்தோன்று கின்றது அவருக்கு. 'ஈர்ங்கை உதிராதவனை'க் கயவன் என்று கருதுகிறார். கொடுப்போனைக் குலனுடையான், ஊருணி, பயன்மரம், தப்பா மருந்து என்றெல்லாம் பாராட்டுகின்ற வள்ளு வர்; கொடாதோனை நோயாளி, பயனிலான், கயவன், பேய் என்று திட்டுகிறார்.

பொருளியலில் ஏற்படுகின்ற ஏற்றத் தாழ்வைச் சமப்படுத்தும் முறையாகவே இதனை எண்ணுகிறார் என்பதைக் கள்ளாமை என்னும் அதிகாரத்தால் உணர்கிறோம். கள்ளாமையின் எதிர்மறையாகிய களவு என்பது வள்ளுவருக் குப் பிறன் பொருளை அபகரிப்பது என்பதல்ல. அளவு கடந்து பொருள் குவித்தல் தான். அளவுக்கு மீறிய செல்வத்தை உடைமையே களவாகிவிடுகிறது அவருக்கு. எனவேதான்

அளவின்கண் நின்றொழுக லாற்றார்
களவின்கண்
கன்றிய காத லவர்.
களவென்னும் காரறி வாண்மை
அளவென்னும்
ஆற்றல் புரிந்தார்க ணில்.
அளவறிந்தார் நெஞ்சத்து அறம்போல
நிற்கும்
களவறிந்தார் நெஞ்சிற் கரவு.
அளவல்ல செய்தாங்கே வீவர்களவல்ல
மற்றைய தேற்றா தவர்.

என்றெல்லாம் பாடுகிறார். எனவே மிதமிஞ்சிப் பொருள் குவித்தலைச் சட்டத்திற்கும் அறத்திற் கும் மீறிய செய்கையாக்குகிறார்.

செல்வர்களைத் திருத்தி அளவுபடுத்தி வறுமையைப் போக்கி நாட்டை வாழ்விக்க முடி யும் என்பது வள்ளுவரது நம்பிக்கை. ஆனால்,

"அல்லற்பட் டாற்றாது அழுத
கண்ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை"

என்ற எச்சரிக்கையையும் அவர் கூறாதுவிட வில்லை.

திருவாசகம் செப்பும் சிவபுர யாத்திரை

திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை, பி. ஏ., எல். டி.

திருவாசகத்தைப்பற்றிச் சிறிதேனும் அறிந்திராத தமிழர் எவருமிரார். அது திருக்கோவையாரொடு சேர்ந்து, சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் எட்டாவதாய்த் திகழ்வது. பதினெரு மந்திரங்களில் சிகாமந்திரத்தில் இருப்பதென்றும், வேதங்கட்கு உபநிடதம் போல் தமிழ்மறைகளில் இலகுவதென்றும் சைவநூல்வல்லார் சாற்றுவர். நெஞ்சுருக்கும் நீர்மையில், தேவாரங்களைவிட விஞ்சியிருப்பதென்றும் போற்றுவர். திருவாசகத்திற்கும், மணிவாசகர்க்கும் சில தனிச் சிறப்புகள் சிவாலயங்களிலும் பரம்பரைச் சைவக்குடும்பங்களிலும் செய்யப்படுகின்றன. சிவபெருமானே இந்நூலைத் தம் திருக்கரத்தால் எழுதிக்கொண்டார் என்பது ஓர் தனிச் சிறப்பாம். அன்றியும், தாயுமானுர், சிவப்பிரகாசர், சிவஞான முனிவர், இராமலிங்கர் முதலிய அநுபூதிமான்களாகிய புலவர்கள் பலர் இவ்வாசகத்தைச் சிறப்புவகையிற் போற்றிப் பாடியுள்ளனர். இதன் பெருமைகள் இன்னன பலவுள. தென்னுடெங்கிலும் இதற்குள்ள மதிப்பைப் பற்றி, இதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த டாக்டர் ஜி. யூ. போப் "It is quite certain that the influence of these poems in South India is like that of Psalms among Christians and that they have touched for generations the hearts of the vast majority of the Tamil speaking people" என்று தமது திருவாசக மொழிபெயர்ப்பின் முன்னுரையில் எழுதியுள்ளார். இதன்பால் வைத்திருந்த உயர் மதிப்பு காரணமாகவே 19-ம் நூற்ருண்டுவரை இதற்கு உரை வரைய எவருந் துணிந்திலர். 1835-ல் சீர்காழித்தாண்டவராயர் தாம் முதலில் இதற்குத் தாம் வரைந்த உரையைச்சிதம்பரத் தலத்தில் வெளியிட்டருளினுர்: பின்பு நவநீதகிருஷ்ண பாரதியார் இந்த நூற்ருண்டில் நூல் முழுவதற்கும் விரிவான உரை எழுதினுர். திருவாசகத்தின் சிற்சில பகுதிகட்கு மட்டும், வளப்பமும் - நுட்பமும் பொருந்திய பேருரைகளை மறைமலையடிகளும், மகாமகோபாத்தியாய பண்டிதமணியவர்களும் வழங்கியுள்ளார்கள். திருவாசகத்தின் முடிந்த பயன், மக்களது "தொல்லையிரும்பிறவிச் சூழும் தளை நீக்கி அல்லறுத்து ஆனந்தமாக்குவதே" என்று இந்நூற்சிறப்பைக் கூறும் பண்டை வெண்பா கட்டுரைக்கும். "திருவாசகம் என்பது மெய்ப்பொருள் நிரம்பிய வார்த்தை, மெய்ப்பொருளைத் தரும் வார்த்தை" என்பர் இராமலிங்க அடிகள். "திருவாசகம் என்பது அழகிய தெய்வத்தன்மை வாய்ந்த சொற்களால் ஆகிய செய்யுள் நூல் என்னும் பொருளையுடையதாகும்" என்று தொடங்கி மேலும் விரித்துரைப்பர் பண்டிதமணியவர்கள். இதன் பல பெருஞ்சிறப்புக்களில் ஈண்டுக் குறிப்பிடக் கருதுவது ஒன்று. அது யாதெனில், அன்பும் அறிவும் ஓரளவு வளரப்பெற்ற நன்மக்களை வரையும், 'புன்னெறியதனிற்செல்லும் போக்கினை' விடுத்து, 'மேலாம் நன்னெறி'யில் நடக்க வேண்டும் என்னும் வேட்கையைக் கொள்ளத் தூண்டுவதோடு, அந்நன்னெறியின்படிமுறை இயல்புகளையும், முடிவிற்பெறும் அநுபூதி மாண்பினையும், தெய்வத் தன்மையும் அழகும் பொருந்திய தெளிதீந்தமிழ்ப் பாடல்களால் புலப்படுத்தித் தூய்மை அளிக்கும் ஆற்றலுடைமையேயாகும். இதன் மாட்சிமையை வேறு பல கோணங்களிலிருந்தும் அறிஞர்கள் கண்டு வியந்து பிறர்க்கும் உணர்த்தி வந்துள்ளனர்.

இந்தக் கட்டுரை, திருவாசகம் கூறும் பொருள்களில் ஒரு கோணத்திலிருந்து காண்பார்க்குப் புலப்படும் உண்மைகளை மட்டும் சிறிது எடுத்தியம்பும் நோக்குடையதாகும். மேலே குறிப்பிட்டபடி, திருவாசகம் மணிவாசகர்க்கு மட்டும் பயன்பட்டதொன்றன்று. மக்களினத்திற்கு எக்காலத்தும் விழுப்பயன்

விளக்க வல்லதோர் தெய்வீக நூலாகும். திருவாசகத்தை டாக்டர் ஜி. யூ. போப் சென்ற நூற்றூண்டின் இறுதிப் பகுதியில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். இவ்வாண்டு திருவாசகமணிகே.எம். பாலசுப்பிரமணியமவர்களும் இதற்கு நல்ல ஆங்கில மொழிபெயர்ப்பொன்றை உலகிற்களித்தார்கள். இவையும் இந்நூலின் பொதுத்தன்மைக்கொரு சான்ருகும்.

சிவபுரத்தை நோக்கிச் செய்யும் யாத்திரையின் பல்வேறு அநுபவங்கள் திருவாசகத்தில் காணக்கிடக்கின்றன. யாத்திரை என்பது மக்கள் புனித க்ஷேத்திரங்கட்கும், 'தீர்த்தங்கட்கும் உயர்வுடனும், நம்பிக்கையுடனும் செய்யும் பயணமாகும். உற்றுநோக்கில், ஆன்மாக்கள் யாவும், யாத்திரீகர்களே என்னும் உண்மை புலப்படும். ஆன்மாக்கள் ஆதியில் ஆணவ மலத்தால் முற்றிலும் மறைக்கப்பெற்று ஒரு செயலும் புரியமாட்டாது ஒடுங்கிக்கிடந்த நிலை கேவலநிலை என்னப்படும். அந்த அவல நிலையை அவபுரம் என்றும் உருவகப்படுத்தலாம். ஆண்டவன் திருவருளால் அவைகளின் தேவைக்கு ஏற்ற தநு, கரணம், புவனம், போகம் இவைகள் ஒரு நியதிப்படி தரப்படுகின்றன. அப்போது அவை ஆணவ இருட்டினின்றும் படிப்படியாக விடுபட்டு, குணம் செயல்கள் வளரப்பெறுகின்றன. இந்நிலை சகலநிலை (கலைகளொடு கூடிய நிலை) என்னப்படும். இவ்வியக்கத்தை யாத்திரை நிகழ்வு என்னலாம். இந்த யாத்திரை முடிவுறும் இடம் சிவபுரம். யாத்திரைப் பத்து என்னும் பெயருடனேயே ஒரு பதிகம் திருவாசகத்தில் இருப்பது குறிக்கத்தக்கதாம். இப்பெயர் திருவாசகத்தில் பிற சில இடங்களில் காணப்படுகிறது. (உ-ம்) (1) "செழுமலர்ச் சிவபுரத்து அரசே போற்றி" (போற்றித் திருவகல்). (2) "சிவபுரத்தார் போரேறு. (3) "சிவபுரத்துள் அணிவார் கதவம்" (4) "சீரார் சிவபுரத்துச் சென்று சிவன்தாள் வணங்கி". (5) "சிவபுரத்துத் திருப்புயங்கன் திருத்தாள் சென்று சேர்வோமே" [யாத்திரைப் பத்து]. வாழாப்பத்தின் 10 பாடல்களில் ஒவ்வொன்றிலும் "சிவபுரத்தரசே" என்னும் விளி பொருந்தியுள்ளது. "சிவமாநகர் குறுகப் போனர்" [திருச்சதகம்]. "சிவபுரம் போற் கொண்டாடும் உத்தரகோசமங்கை" [திருத்தசாங்கம்]. "சிவலோகன்", "சிவலோகம்" என்னும் பெயர்களும் வருகின்றன. எனவே, கேவல நிலையாகிய அவபுரத்திலிருந்து சுத்தநிலையாகிய சிவபுரத்தை நோக்கிச் சீவான்மா தன் யாத்திரையைத் தொடங்குகின்றது என்பது பெற்ரும்.

இந்த யாத்திரையின் தொடக்கப் பகுதியில் உலோக உடம்பு, ஐயறிவு வரையில் படைத்த அஃறிணை உயிர்களுக்குரிய உடம்பு, ஆறறிவுடைய மக்களுடம்பு முதலிய உடம்புகளின் துணைகொண்டு ஆணவப் பிடிப்பினின்றும் ஆன்மா சிறிது சிறிதாக விடுதலைபெற்று மேற்செல்லுகின்றது. இதனை, "புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப் பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக் கல்லாய், மனிதராய்" மேலும் "பேயாய்க், கணங்களாய், வல்லசுரராகி, முனிவராய்த் தேவராய்"ச் செல்லாநின்றஇத்தாவர சங்கமத்துள் எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்" என்ற சிவபுராணப் பகுதியில் (சிவனது பழமையான அருட்செயல் முறையைக் கூறும் பகுதியில்) காணலாம். மனிதப் பிறவிக்கப்பாலும் வேறு உடம்புகள் சில கிடைக்கலாம் என்பதையும் இவ்வடிகள் தெரிவிக்கின்றன. மத்தியகால முஸ்லிம் பேரறிஞர் ஒருவர், தாம் உலோக உடம்பு, தாவர உடம்பு, விலங்கு உடம்பு, மனித உடம்பு இவற்றுள் தங்கியிருந்து வெளிப்பட்டதைப் பின்வரும் அன்ன வசந்த அம்மையார் தமது நூலொன்றில் ஆங்கில மொழிபெயர்ப்பில் காட்டியுள்ளார்:

"I died out of the mineral and
[became a plant.
I died out of the plant and became
[an animal.
I died out of the animal and
[became a man.
When did I ever grow less by
[dying"

மேற்காட்டிய சிவபுராணப் பகுதி குறிக்கும் பல்வேறு வகை உடல்கள் உலவுவதற்குப் பல்வேறு வகைப்பட்ட உலகங்களும் வேண்டுமே. அப்படியே எண்ணில் பல உலகங்கள் உள்ளன. என்று மணிவாசகர் திருவண்டப் பகுதியின் முதல் நான்கு அடிகளிலேயே குறிக்கின்ருர். அவை இக்கால வானநூற் பேரறிஞர்கள் கண்டுள்ள உண்மைகளைத் தன்பாற் கொண்டுள்ளன. அவ்வடிகள்

"அண்டப்பகுதியின் உண்டைப்
பிறக்கம்
அளப்பரும் தன்மை வளப்பெருங்
காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில்
பகரின்
நூற்ருெரு கோடியின் மேற்பட
விரிந்தன"

எனவரும்.

இப்படிப் பல உலகங்களில் பல பிறப்பெடுப்பதெல்லாம் முடிவில் ஆருயிரனைத்தும் அரன்கழல் செல்லுதற்கே. அவன், "தில்லை மூதூர் ஆடிய திருவடி, பல்லுயிரெல்லாம் பயின்றனனுகி, எண்ணில் பல் குணம் எழில் பெற விளங்கி, மண்ணும் விண்ணும் வானோர் உலகும், துன்னிய கல்வி தோற்றியும் அழித்தும் .... மருவி எப்பொருளும் வளர்ப்போனய்" "தாயிற்சிறந்த தயாவான தத்துவனய்" அனைத்துயிர்களையும் ஓர் நியதியின் படி தனது சிவபுரத்துக்கு அழைத்துச் சென்றருளுகின்ருன்.

இனி, நமது மண்ணுலகில் வாழும் மக்களது யாத்திரையை மட்டும் தொடர்ந்து, திருவாசகம் தரும் கண்கொண்டு காண்போம்: போற்றித் திருவகவலில், "மானிடப்பிறப்பினுள் மாதா உதரத்து" என்னும் அடி தொடங்கி "புல்வரம்பாய பலதுறை பிழைத்தும்" என்னும் அடிவரையில் மகவு பிறக்குமுன் படும் துன்பம், பிறந்தபின் உடலோம்பற் பொருட்டுப்படும் தொல்லை, வாலிபத்தில் வளரும் மோகவேதனை, பேராசை எனும் பிணி இவற்ருலெல்லாம் அழிந்து படாது இறைவன் காத்து வரும் பெற்றியை ஆசிரியர் குறிக்கின்ருர். பின்பு, "கல்வி என்னும் பல்கடல் பிழைத்தும் நல்குரவென்னும் தொல்விடம் பிழைத்தும்" என்னும் அடிகளால் பொருள் மிகச் செறிந்த உலகாநுபவங்கள் சிலவற்றைக் குறிக்கின்ருர். இவற்ருலெல்லாம் நெடுங்காலம் அவதியுற்ற பின்புதான் "தெய்வமென்பதோர் சித்தம்" உண்டாகின்றது. அவ்வுணர்ச்சி பிறந்ததும் அதனைக் கலைக்க ஆறு கோடி மாயாசக்திகள் வேறு வேறு தம் மாயைகள் தொடங்கும் விதங்களை விவரிக்கின்ருர். அவற்றுள் நாத்திகப் பேச்சு, விரதமே பரம் என்னும் ஆரவாரம், சமயவாதிகளின் பூசல், பௌத்த மாயாவாதக் கலக்கம், உலகாயத விஷம் இவை யாவும் வந்து யாத்திரீகனைச்சிவபுரம் நோக்கி மேற் செல்லவொட்டாதபடி தடுக்கின்றன என்று அறிகின்ருேம்.

இவ்வாறு பெத்த நிலையில் தவிக்கும் ஆன்மாக்களின் நிலைமையைத் தம் மீதே வைத்துக்கொண்டு, மணிவாசகப் பெருமான் பல பாடல்களில் தம்மையே பழித்துக்கொள்கின்ருர்*. மேற்கொண்ட குறிக்கோள் அமையவில்லையே என்று பெரிதும் கலங்குகின்ருர்.

---

* இவை திருவாசகத்திற் பல்வேறு பகுதிகளில் உள்ளவை. கருத்து ஒற்றுமை மட்டும் நோக்கி, சில பகுதிகள் திரட்டித்தரப்படுகின்றன. இந்நிலைகளில் தாமும் நின்றே அடிகள் அப்பாடல்களைப் பாடினுர்களா என்பதில் சிறிது ஐயமும் தோன்றலாம். முழு அநுபூதி அடைந்த பின்னும்; தமது முன்னை நிலையை ஆங்காங்கே குறித்துச் செல்லல் தவறன்று. அவை உலக நலம் கருதி வெளிப்பட்ட வாசகங்கள்.

1. "வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்டாழ்கின்றாய் ஆழாமற் காப்பானை ஏத்தாதே"

2. "நெடுங்காலம் ஊனையானிருந்து ஓம்புகின்றேனே"

3. 'மாடும் சுற்றமும் மற்றுள போகமும்.........அங்குள்ள குணங்களால் ஏறுண்டு குலாவியே திரிவேனை!'

4. "சீலமின்றி நோன்பின்றிச் செறிவேயின்றி அறிவின்றித் தோலின்பாவைக் கூத்தாட்டாய்ச் சுழன்றுவிழுந்து கிடப்பேனை"

5 "ஏழைத் தொழும்பனேன் எத்தனையோ காலமெல்லாம் பாழுக்கிறைத்தேன் பரம்பரனைப் பணியாதே"

6. "சாதிகுலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும் ஆதமிலி நாயேனை"

ஆன்மா தன் பெத்த நிலையின் புன்மையை உணர்ந்து, அதற்கு மேற்படியில் செல்ல வேண்டும் என்னும் பதைப்பு உள்ளமீதில் எழுகின்றது.

(1) "நானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக்கு என்கடவேன்"

(2) "ஆமாறுன் திருவடிக்கே அகங்குழையேன் அன்புருகேன்"

(3) "ஆடுகின்றிலை கூத்துடையான் கழற்கு அன்பிலைஎன்புருகிப்
பாடுகின்றிலை பதைப்பதும் செய்கிலை பாதமலர்
சூடுகின்றிலை, சூட்டுகின்றதுமிலை துணையிலிபிண நெஞ்சே
தேடுகின்றிலை தெருவுதோ றலறிலை செய்வதொன்றறியேனே"

இப்பதைப்பு முதிர்ந்த போது, ஆண்டவன் தானே வாதவூரர்க்குக் குருவாய் எழுந்தருளி வருகின்றான். "நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி" அருளுகின்றான். "ஈறிலாத நீ எளியையாகி வந்து ஒளிசெய் மானுடமாக நோக்கியும்" என்று பின்னும் குறிக்கின்றார். ஏனையோர்க்கு இப்பேறுவாய்த்தல் அரிது. 'கோலம் சிறந்தபடியே நற்குணமும் சிறந்த' அநுபூதிமானாகிய ஆசாரியர் கிடைத்தால் சாலும். இவரை இறைவன் அதிட்டித்து நின்று நமக்கு ஆவன புரிந்தருளுவான். திருவாதவூரரின் தகுதிக்கேற்பச் சிவபெருமான் அவருக்குத் திருநோக்கால், பரிசத்தால், வாசகத்தால் (உபதேசத்தால்) பேசா அநுபூதி பிறக்க வழிசெய்கின்றார். "என்னையோர் வார்த்தையுட் படுத்து" என்று மணிவாசகர் தாம் பெற்ற உபதேசத்தைப் பற்றிக் குறிக்கின்றார். அவருக்குச் சமாதிநிலை கைகூடுகின்றது. ஆனந்த அநுபவம் வாய்க்கின்றது. அமைச்சர் துறவியாய் விடுகின்றார். பின்பு அரசனாணைப்படி அவர் மதுரைக்குத் திரும்பியதும் நிகழ்ந்த, இறைவன் திருவிளையாடல்களை, அவர் சரித்திர வாயிலாக அறிந்திருக்கின்றோம்.

அப்பால், மணிவாசகர் திருப்பெருந்துறைக்குத் திரும்பித் தமது ஆசாரியரைக் கண்டு மகிழ்கின்றார். ஆனால் இறைவன், "நலமலிதில்லையுள் கோலமார்தரு பொதுவினில் வருகென" அவருக்குக் கட்டளையிட்டு அடியார் குழாத்தோடு மறைந்து விடுகின்றான். அவர் தலயாத்திரை செல்கின்றார். தம்மை நிறுத்திய நிலையினின்றும் உலக மாயை தம்மைக் கலைக்கப் பார்க்கின்றதென்று கதறுவது போன்ற பாடல்கள் எழுகின்றன.

மணிவாசகர் இப்பிரிவினால் பெரிதும் வருந்திக் கலங்குகின்றார்.

(1) "தன்மை பிறரால் அறியாத தலைவா!
பொல்லா நாயான
புன்மை யேனை ஆண்டு, ஐயா!
புறமே போக விடுவாயோ?
என்னை நோக்குவார் யாரே! என் நான்
செய்கேன்! எம்பெருமான்
பொன்னே திகழும் திருமேனி எந்தாய்!
எங்குப் புகுவேனே!"

(2) "மெய்ம்மை அன்பருன் மெய்ம்மை
மேவினர் பொய்யிலங்கெனைப்
புகுத விட்டு நீ போவதோ சொலாய்!
பொருத்தமாவதே?" என்றெல்லாம்
கதறுகின்றார்.

இது நீத்தல் விண்ணப்பத்தில் நன்கு புலப்படுகின்றது. அதிலிருக்கும் மணிவாசகப் பகுதிகள் சில அடியில் தரப்படுகின்றன:

(1) ''கடையவனேனைக் கருணையினாற்
கலந்தாண்டு கொண்ட விடையவனே!
விட்டிடுதி கண்டாய்!......................
சடையவனே! தளர்ந்தேன், எம்பிரான்!
என்னைத் தாங்கிக்கொள்ளே''

(2) ''இருதலைக் கொள்ளியின் உள்ளெறும்பொத்து, நினைப் பிரிந்த விரிதலையேனை விடுதி கண்டாய்.''

(3) ''மாறுபட்டு அஞ்சு என்னை வஞ்சிப்ப யான் உன் மணிமலர்த்தாள் வேறுபட்டேனை விடுதி கண்டாய்.''

(4) ''புலன்கள் திகைப்பிக்க யானும் திகைத்து இங்கோர் பொய்ந்நெறிக்கே விலங்குகின்றேனை விடுதி கண்டாய்.''

(5) ''பழிப்பில் நின்பாதப் பழந்தொழும்பு எய்தி, விழப், பழித்து விழித்திருந்தேனை விடுதி கண்டாய்!''

(6) ''ஏசினும் யான் உன்னை ஏத்தினும் என் பிழைக்கே குழைந்து வேசறுவேனை விடுதிகண்டாய்!'' சீவனது சிவபுரயாத்திரையில் வரும் இந்தத் தடைகளை, வாசனா மலத்தாக்குதல் என்னலாம்.

இப்படிக் கதறும் மெய்யடியார்களை, அவர் உள்ளும் புறம்புமுள்ள அருள்வடிவ ஆண்டவன் காவாதிருப்பனோ! உள்ளொளி விளக்கத்தைப் பெருக்கி ஆணவ மலச் சேட்டையை அடியோடு அடக்கிக் காத்தருளுகின்றான்.

''கள்வன் கடியன் கலதியிவன் என்னாதே
வள்ளல் வரவர வந்தொழிந்தான் என் மனத்தே
உள்ளத் துறுதுயர் ஒன்றொழியா வண்ணமெல்லாம்
தெள்ளும் கழலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ!''

என்று திருக்கோத்தும்பியிலும்,

''உரை மாண்ட உள்ளொளி உத்தமன் வந்தென் உளம் புகலும்
கரை மாண்ட காமப் பெருங்கடலைக் கடத்தலுமே
இரை மாண்ட இந்திரியப் பறவை இரிந்தோடத்
துரை மாண்ட வாபாடித் தோணோக்கமாடாமோ.''

என்று திருத்தோணோக்கத்திலும் அரும் பெரும் அநுபவ உண்மையொன்று நமக்கு அளிக்கப் பட்டுள்ளது.

''மூவாசை கொண்டு முசிக்கு நெஞ்சே! போரூரில்
தேவாசை கொள்ளத் தெரியாதோ? —தேவாசை
கொண்டாயேல் நந்தம் குறைகளெலாம் இக்கணமே
விண்டாயே, கண்டாயே வீடு''

என்னும் திருப்போரூர் சந்நிதி முறைத் திருப் பாட்டும் இங்கு ஒப்பு நோக்கத் தக்கதாம்.

''சிவமாநகர் குறுகப் போன'' யாத்திரிகன் சரியை கிரியைப் படிகளைத்தாண்டி ஆத்தும நிவேதனம் செய்கிறான். குழைத்த பத்தில் அற்புத வாசகங்களால் உணர்த்தப் படும் உள்ள நிலை உறுதிப்படுகின்றது.

(திருப்பாட்டுக்கள் 1, 3, 5, 6, 7, 8, 9 பாடிப்பரவசமடையத் தக்கவை)

திருக்கதவந் திறக்கப்பட்டதும் உள்ளொளி உத்தமன், ''பேரா, ஒழியாப், பிரிவில்லா, மறவா, நினையா, அளவிலா, மாளா இன்பமாகடலா''ய்த் திகழ்ந்து, தனதெண் குணங்களையும் பதிவித்துத், தன்னோடு கலந்து நிற்கும் அத்துவித உறவின் முடிந்த பெரும் பயனை அளிக்கின்றான்.

இப்பேரானந்தப் பெருநிலையைப் பற்றித் திருவாசகம் பல இடங்களிற் குறிக்கின்றது திருவண்டப் பகுதியில் வரும்

"தடக்கையின் நெல்லிக்கனி எனக் காயினன்
சொல்லுவதறியேன் வாழி முறையோ!
தரியேன் நாயேன் தானெனைச் செய்தது.
தெரியேன் ஆ! ஆ! செத்தேன்.

அடியேற்கு
அருளியதறியேன். பருகியும் ஆரேன்.!
விழுங்கியும் ஒல்லகில்லேன்
....
வாக்கிறந்து அமுதம் மயிர்க்கால் தோறும்
தேக்கிடச் செய்தனன்.

....
அற்புதமான அமுத தாரைகள்
எற்புத்துளை தொறும் ஏற்றினன்.

உருகுவது
உள்ளங் கொண்டோர் உருச் செய்தாங் கெனக்கு
அள்ளூருக்கை அமைத்தனன்.
....
கருணை வான்தேன் கலக்க
அருளொடு பராவமு தாக்கினன்"

என்னும் அடிகள் அற்புதமான அநுபவ வாச கங்கள் என்பது தேற்றம்.

சிவ விளைவாம் இவ்வநுபவத்தை வழங்கிய பரமனை, "சட்டோ நினைக்க மனத்தமுதாம் சங்கரன்" என்றும், "நினைத்தொறும் காண்டொறும் பேசும் தோறும் எப்போதும் அனைத்தெலும்பு உள்நெக ஆனந்தத் தேன் சொரியும் குனிப்புடையான்" என்றும் குறிக் கின்றார். அவன் "பரமானந்தப் பழங்கடல்." "இன்னமுதாய வெள்ளத்தான்.அவன் திருவடி "காயத்துள் அமுதூற ஊற நீ கண்டு கொள் என்று காட்டிய சேயமா மலர்ச்சேவடி". அவன், "மூவரும் முப்பத்து மூவரும், மற்றைத் தேவரும் காணாச் சிவபெருமான்". "மூவராலும் அறியொணா முதலாய ஆனந்த மூர்த்தியான். யாவராயினும் அன்பர் அன்றி அறியொணா மலர்ச் சோதியான்:" "சிட்டன், மெய்ச் சிவலோக நாயகன்."

எவரும் எதுவும் மறைக்கவும் குறைக்கவும் மாட்டாத இப்பேரின்ப நிலையை எய்திய ஆன்மா, இறைவனை "அட்ட மூர்த்தி, அழகன்" என்றும் உணர்கின்றது. எல்லாம் சிவமயமாய் காண்கின்றன. பிரபஞ்சத்தில் வெறுப்பும், மயக் கும் மாயைகள் பெண்கள் என்று கண்டதால் விளைந்த அச்சமும் போய்விடுகின்றன. ஞான வெற்றி விளைகின்றது. இயற்கை அன்னையை யும் மகளிரையும் சிவசம்பந்தம் உடையனவாய் காண்கின்றார். திருவெம்பாவை முதல் பல பதிகங்களில் மகளிர் விளையாட்டுகளைத் தெளி தீந்தமிழால் அழகுற வருணித்து, ஆங்காங்கு சிவப்பொலிவையும் அவ்வாறே காட்டுகின்றார். சிவபுரத்துட் சென்று சிவனோடு ஒன்றாய்க் கலந்துவிட்ட சீவன் முத்தருக்கு, எல்லாம் சிவமாகவே தோன்றும்.

சிவபுரயாத்திரையை வெற்றியுடன் முடித்த வர்களிற் சிலர் ஆண்டவன் தூண்டுதலால் மீண்டும் அவனியிற் புகுந்து நமக்கு அருந் துணை புரிவர். அதனால் அவர்கள் சிவாநுபூதி ஆனந்தத்திற்குக் குறைவேதும் விளையவேண் டியதில்லை. இம்முறையில், மணிவாசகப் பெருமான் நம்மனோரை நோக்கி அன்புரிமை யுடன் நல்லுபதேசம் செய்யத் தலைப்படுகிறார். உதாரணமாக யாத்திரைப்பத்து ஒன்றைப் பார்ப்பது சாலும்.

(1) "புகவே வேண்டா புலன்களில் நீர், புயங்கப்பெருமான் பூங்கழல்கள் மிகவே நினைமின், மிக்கவெல்லாம் வேண்டா போக விடுமின்கள்"

(2) "தாமே தமக்குச் சுற்றமும்; தாமே தமக்கு விதிவகையும் யாமார்! எமதார்! பாசமார்! என்னமாயம்! இவைபோகக் கோமான் பண்டைத் தொண்டரொடும் அவன்றன் குறிப்பே குறிக்கொண்டு போமாறமைமின் பொய் நீக்கிப் புயங் கன் ஆள்வான் பொன்னடிக்கே"

(3) " அடியாரானீர் எல்லீரும் அகல விடுமின் விளையாட்டைக் கடிசேர் அடியே வந்தடைந்து கடைக்கொண்டிருமின் திருக்குறிப்பை "

(4) " நிற்பீர் எல்லாம் தாழாதே நிற்கும் பரிசே ஒருப்படுமின் பிற்பால் நின்று பேழ்கணித்தால் பெறுதற்கரியன் பெம்மானே ".

அவர் அருளிச் செய்த திருப்படையெழுச்சியும், நாம் பிரபஞ்சப் போரில் வெற்றி பெறத் தூண்டுவதே யாகும்.

இறுதிப் பதிகமாகிய அச்சோப்பதிகத்தில், ஆன்மாக்கள் பெத்தநிலை தாண்டி முத்திநிலை யடைவதால் கிடைக்கும் பெருவாழ்வை நன்றி யுணர்வுடன் போற்றுகின்றார்.

இதுகாறும் கூறியதிலிருந்து ஆன்மா பல்வேறு பிறவிகளை எடுத்து ஓரளவு அறிவநுபவம் வளரப்பெற்றபின்பு மானிடப் பிறவியை அடைந்து, அருள்வேட்கை கொண்டு குருவை நாடுவதும், இறைவனே குருவாய் வந்து உணர்த்துவதும், வாசனாமலத்தாக்குதலி லிருந்து விடுபட்டு ஆன்ம சுத்தி நிகழப்பெறுவதும், பாசம் நீங்குவதும், சிவப்பேறு வாய்ப்பதும், சீவன் முத்தி சித்திப்பதும், சிவன் தூண்டலால் உலகுக்குபதேசம் கிடைப்பதும் சீவன் செய்யும் சிவபுரயாத்திரையில் பொருத்திக்காட்ட முயன்றிருப்பது தெரியலாம். சிறியேனைவிடப் புலமையிலும், சாத்திர அறிவிலும் அநுபவத்திலும் சிறந்த பெரியோர்கள் இதனை இன்னும் திருத்தமாகவும், விரிவாகவும், அழகாகவும் சொல்லக்கூடும். அவர்கள் இவ்வுபகாரத்தைச் செய்தருள இச் சிறுகட்டுரை தூண்டுமாயின் இதனை வரைந்ததும் ஒரு நன்மைக்கே என்று கொள்ளலாம். இது நிற்க,

மேலே சுட்டிய போக்கில் ஆன்மாவிற்கு ஞான வளர்ச்சியும் அதன் பயனும் சித்தியாகின்றன என்பதை, இக்காலத்தில் உலகறிந்த தத்துவ சாத்திரப் பேராசிரியர், பாரத நாட்டு உபஜனாதிபதி டாக்டர் ச. இராதாகிருஷ்ணன் அவர்கள் தமது நூலொன்றில் திருவாசகத்தைப்பற்றி எழுதியுள்ள பகுதியிலும் கண்டு இன்புறலாம். அப்பகுதி பின்வருமாறு:

" Tiruvasagam depicts in beautiful hymns the progress of the soul from the bondage of ignorance and passion into the liberty of light and love; its first awakening, its joy and exaltation, waywardness and despondency, struggle and unrest, the peace and joy of union" [Indian Philosophy Vol II – P 729]

சர் சார்லெஸ் எலியட் என்னும் மற்றோர் அறிஞர் சைவசித்தாந்த நூல்களைப் பற்றி எழுதியிருப்பதிலிருந்து அடியில்தரும் பகுதியும் படித்து மகிழத்தக்கதாம்.

"On no literature with which I am acquainted has the individual religious life -its struggles and defections. its hopes and fears, its confidence and its triumph — received a delineation more frank and more profound" *

அன்பால் ஆண்டவனைத் தரிசித்த சிறந்த மெய்யடியார்கள் கிறித்துவ மதத்திலும் இஸ்லாமிய மதத்திலும் பலர் தோன்றியுள்ளனர். மேலை நாட்டுத் தத்துவப் பேராசிரியர் வில்லியம் ஜேம்ஸ் என்பவர் எழுதிய The Varieties of Religious Experience என்னும் உலகப் பிரசித்தி பெற்ற நூலில், இந்து மதம், பௌத்தம், கிறிஸ்துவம், இஸ்லாம் என்னும் சமயங்கள் உலகிற்கு அளித்துள்ள அநுபூதிமான்களின் அநுபவங்களை அறிவுபெற விளக்கியுள்ளார். அவற்றிற் பல, மணிவாசகர் திருவாக்குகளை நினைப்பூட்டுவனவாம்.

ஆன்மாக்கட்குப் பலபிறவிகள் உண்டென்னும் உண்மையை, இஸ்லாத்திலிருந்து பழுத்த ஸுஃபி என்னும் பிரிவினராகிய ஞானியர் வாக்குகளிலிருந்தும் அறியலாம்.

[* Quoted in Hinduism and Buddhism Vol. II P 217]

பல்வகையான அல்லல்களில் அகப்பட்டு அலறுகின்றது இக்கால உலகம். "திகைத்தால் தேற்ற வேண்டாவோ" என்று கூறுகின்றனர்—அழுத்தமான தெய்வங் கொள்கையுடைய நன்மக்கள். "சமயவாதிகள் தத்தம் மதங்களே அமைவதாக அரற்றி மலைந்தனர்" என்ற வாசகத்திற்கு இலக்காக இன்னும் சில மதவாதிகள் விரிவிலா அறிவினராய் வீண் வம்பு விளைக்கின்றனர். இப்பூசல்களிடையே, பண்டைப் பெருஞ் சமயங்கள் அனைத்திலும் இருக்கும் ஒற்றுமைப் பகுதிகளைச் சமரச நோக்குடன் கண்டு போற்றி ஏற்கவேண்டும் என்றும், தெய்வங் கொள்கையுடைய சமயங்கள் யாவும் உளமார ஒன்று சேர்ந்து உலகில் அவ்வுணர்ச்சியைப் பரப்பவேண்டும் என்றும் பல நாடுகளில் உள்ள ஆன்றோர்கள் அவாக் கொண்டுள்ளனர். Union for the study of the great Religions என்னும் உலக சங்கம் ஒன்று இங்கிலாந்தில் தொடங்கப் பெற்றுள்ளது. சென்னையிலும் அதன் கிளையொன்று அரிய பணிபுரிந்து வருகின்றது. "அறிவனே! அமுதே! அடிநாயினேன், அறிவனாகக் கொண்டோ எனையாண்டது?, அறிவிலாமையன்றே கண்டது ஆண்ட நாள்! அறிவனோ அல்லனோ? அருள் ஈசனே" என்று முறையிட்டார் பல்துறைக் கல்வியின் கரைகண்ட புலவர்பிரான் மாணிக்கவாசகர். "அமுமதுவே அன்றி மற்று என்செய்கோ! பொன்னம்பலத்தரசே" என்ற உளமுருக்கும் மணிவாசகத்தால், உலகுய்ய ஓர் இனிய எளிய வழியைக் காட்டியருளினர்—அழுதடி அடைந்த அன்பராகிய மணிவாசகர். அவர் இறைவனை, "இன்பமே! என்னுடை அன்பே?" என்று விளித்தார். அன்பினால் இன்பம் ஆர்ந்தார். அவர் காட்டியருளிய அன்பு நெறியைப் பின்பற்றி உலகம் இன்புறுவதாக.

வாழ்த்து

தமிழ்க்கடல், உயர்திரு. இராய. சொ. அவர்கள்

(அமராவதி புதூர்)

"தனவணிக நாட்டிலேயே உயிரோடு இருக்கும் மிகப் பழமையான சபை சன்மார்க்கசபை. அறிஞர் பலரும் அலங்கரித்த சபை அது. பொன்விழாக் காணும் அச்சபையைப் போற்றுகிறேன். சன்மார்க்கசபை, வைரவிழாக் கண்டு அதற்கு மேலும் பலப்பல பணியாற்றிச் சன்மார்க்கத்தை உலகெல்லாம் பரப்பிப் பல்லாண்டு வாழ்வதாக."

சைவ சித்தாந்த தோத்திர சாத்திர நூல்களின் சுருக்க வரலாறு

பேராசிரியர், ச. ஆறுமுக முதலியார், எம். ஏ., பி. ஓ. எல்., எல். டி.
முதல்வர், அரசினர் பயிற்சிக் கல்லூரி, குமாரபாளையம்.

தமிழகத்தில் பல்லவராட்சிக்குப் பின் அதைத் தொடர்ந்து விசயாலய சோழ மரபினர் ஆட்சி ஏற்பட்டது. இக்காலத்திற்றான் இலக்கியம் பல துறைகளிலும் வளரலாயிற்று. இதை ஓர் "இலக்கிய வெழுச்சிக் காலம்" எனலாம். பல்லவர் காலத்தில் ஆழ்வார்களும் நாயன்மார்களும் தோன்றி வைணவ சைவ சமய வெழுச்சியை உண்டாக்கினர். வடமொழிக் கல்வியும் பண்பாடும் அரசியலாதரவுடன் வளரலாயின. அதைத் தொடர்ந்து சமய நூல்களெல்லாம் தொகுக்கப்பட்டுத் திருமுறைகளாகவும் திவ்வியப் பிரபந்தங்களாகவும் வகுக்கப்பட்டன. அவற்றினின்றும் சைவ வைணவ சித்தாந்த சாத்திரங்கள் தோன்றலாயின.

மறைந்து கிடந்த தேவாரப்பாடல்களை வெளிக்கொண்டு வந்ததின் வழியாகச் சோழ மன்னர் தமிழிலக்கியத்திற்குச் சிறந்ததோர் தொண்டு செய்தவராயினர். நம்பியாண்டார் நம்பி, பத்தாம் நூற்றாண்டின் இறுதியிலும் பதினோராம் நூற்றாண்டின் தொடக்கத்திலுமிருந்து அத்தேவாரப் பாடல்களைத் திருமுறைகளாக வகுத்தருளினார்.

திருஞான சம்பந்தரின் 384 திருப்பதிகங்கள் முதல்மூன்று திருமுறைகளாகவும், திருநாவுக் கரசரின் 307 திருப்பதிகங்கள் நான்கு, ஐந்து, ஆறும் திருமுறைகளாகவும், சுந்தரரின் 100 திருப்பதிகங்கள் ஏழாம் திருமுறையாகவும், மாணிக்கவாசகரின் திருவாசகமும் திருக்கோவையாரும் எட்டாம் திருமுறையாகவும், திருவிசைப்பா ஒன்பதாம் திருமுறையாகவும், திருமூலரின் திருமந்திரம் பத்தாம் திருமுறையாகவும் வகுக்கப்பட்டன. இவை முதலிராசராச சோழனின் வேண்டுகோளுக்கிணங்க நம்பியாண்டார் நம்பியால் வகுக்கப்பட்டன. அவர், பன்னிரு சான்றோரின் பிரபந்தங்களைப் பதினோராம் திருமுறையாக்கினார். இதனிறுதியில் நம்பிகளின் நூல்களும் இடம் பெற்றுள்ளன.

சுந்தரர், தம்திருத்தொண்டத் தொகையில் திருமூலரைக் குறிப்பிடுகின்றார். எனவே திருமூலர் சுந்தரருக்குக் காலத்தால் முற்பட்டவராகின்றார். எனினும் திருமூலர் பாடல்கள் பத்தாம் திருமுறையாகவும் சுந்தரரின் பாடல்கள் ஏழாம் திருமுறையாகவும் வகுக்கப்பட்டுள்ளன. இதிலிருந்தே திருமுறை வகுப்பு கால முறைப்படி அமைக்கப் படவில்லை என்பது புலனாகின்றது. மேலும் பதினொரு திருமுறைகளையும் நம்பிகளே வகுத்திருப்பார் என்பதும் ஐயத்திற்குரியதே. தம்மால் வகுக்கப்பட்ட திருமுறையில் தாமேதம் நூல்களையும் சேர்த்திருப்பார் என்று எண்ணுதற்கில்லை. மேலும் முதலிராசராசன் தேவாரப் பாடல்களைக் கேட்டு, அவற்றிலீடுபட்டு, அவற்றைத் தொகுத்து வகுக்க விரும்பினான் என்றும் கூறப்பெறுகின்றது. அவன், தேவாரப் பாடல்களுக்கீடான சுவையுடைய திருவாசகத்தையோ, திருக்கோவையாரையோ கேட்டதாகக் கூறப்பெறவில்லை. எனவே அவன், கிடைத்தவரையிலுமான தேவாரப் பாடல்களை மட்டுமே நம்பிகளைக் கொண்டு வகுத்திருத்தல் வேண்டும். அதனாலேயே அவன், தான் எழுப்பிய தஞ்சைப் பெரியகோவிலில் தேவார ஆசிரியர் மூவர் திருவுருவங்களை மட்டும் எழுந்தருளச் செய்தான்.

இக்கட்டுரை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 1955-ம் டிசம்பர் திங்களில் நடைபெற்ற அனைத்திந்திய கீழ்க்கலை மாநாட்டில் ஆங்கிலத்தில் அரங்கேற்றப்பெற்றதாகும்.

தமிழாக்கம்: கோ. இராமலிங்கனார், முதல்வர், கணேசர் செந்தமிழ்க் கல்லூரி, மேலைச்சிவபுரி.

நம்பிகளே திருவாசகத்தை எட்டாம் திருமுறை யாக்கியிருந்தால் இராசராசன் மாணிக்க வாசகர் திருவுருவத்தையும் எழுந்தருளச் செய்து வணங்கியிருப்பான். நம்பிகளே, திருநாவுக்கரசரையும் திருஞானசம்பந்தரையும் பாடியிருக்க, மாணிக்கவாசகரைப் பற்றி ஏதும் பாடவில்லை. நம்பிகளுக்கு வெகு காலத்திற்குப் பின், ஒன்பது, பத்து, பதினொன்றும் திருமுறை களின் ஆசிரியர்கள் இருந்திருப்பார்களே யாயின் அவரால் இத்திருமுறைகளும் வகுக்கப் பெற்றிருக்க முடியா. எனவே, எட்டு, ஒன்பது, பத்து, பதினொன்றும் திருமுறைகள் நம்பி களுக்குப் பின்னிருந்த யாராலாவது வகுக்கப் பெற்று, அவர் வகுத்த முதல் ஏழு திருமுறை களுடன் சேர்க்கப் பெற்றிருத்தல் வேண்டும். இறுதியில் பெரிய புராணம் பன்னிரண்டாம் திருமுறையாகச் சேர்க்கப் பெற்றது.

திருமுறை வகுப்புக் காலத்தையும் சில திருவிசைப்பா ஆசிரியர்களின் காலத்தையும் ஒருவாறு முடிவுகட்டலாம். திருமுறை கண்ட புராணத்தில் "திருமுறை வகுக்க உதவியவன் இராச ராச அபயகுல சேகரன்" எனக் கண் டுள்ளது. இவன் முதலிராசராசனே யாவன். 'இவனே தம்மைத் திருமுறைகளை வகுக்கும்படி கேட்டுக் கொண்டவன்' என நம்பிகள் ஓரிடத் திலும் தெளிவாகக் குறிப்பிடவில்லை. எனினும் இ வர், திருத்தொண்டர்திருவந்தாதியில், "சிங்கள நாடு பொடிபடுத்த" சோழனொருவன் தம்மைத் திருமுறைகளை வகுக்கும்படி கேட்டுக் கொண்டானென்ற குறிப்பைக் காட்டுகின்றார். இத்தொடருக்கேற்ப அக்காலத்திலிருந்தவன் முதலிராசராசனே யாவான். அவனது ஈழப் படையெடுப்பும் அவன் ஆண்டமைத்த கட்டிடச் சின்னங்களுமே இவ்வுண்மையைத் தெளிவிக்கும். எனவே நம்பிகள் முதலிராச ராசன் காலத்தவரேயாவர். அது பத்தாம் நூற்றாண்டின் இறுதியும் பதினொன்றும் நூற் றாண்டின் தொடக்கமுமாகிய கி. பி. 985 முதல் 1014 வரையான காலமாம்.

மேற்கூறிய இக்காலத்தில் திருவிசைப்பா ஆசிரியர்களும் இருந்தார்கள். அவர்களில் ஒருவர் கண்டராதித்தராவர். இவர் ஒரு சோழ மன்னராவர். இவர் பாடல்கள் இவரைக் கோழி (உறையூர்) தஞ்சை ஆகிய வற்றை ஆள்பவர் என அறிவிக்கின்றன. இவரே தம் பாடலில் சிற்றம்பலத்திற்குப் பொன்வேய்ந்த தம் தந்தை முதலாம் பராந்த கனைப் பற்றித் தெளிவாகக் குறிக்கின்றார். "சிவஞான கண்டராதித்தர்" என்னும் சாசனக்கூற்றே இவர் ஒரு சிறந்த சிவனடியார் என்பதை வலியுறுத்தும். இவருடைய கோப் பெருந்தேவியாரும் ஒரு சிறந்த சிவனடியா ராவர். இது பற்றியே இவர், "செம்பியன் மாதேவி" என்றும், "மாதேவி" என்றும் அழைக்கப்பட்டார்.

திருமாளிகைத்தேவர் ஒருதிருவிசைப்பா ஆசிரியராவர். திருவீழிமிழலையில் உள்ள முதலிராச ராசன் கல்வெட்டில் "சிவஞானியும் திருமாளிகைத்தேவர் என்று வழங்கப் பெற் றவருமான ஜயந்தன் என்ற பெயரால் திருவீழிமிழலைக் கோயிற்குத் திருநந்தா விளக்கொன்று அமைக்கப்பட்டது", என்று காணப்படுகின்றது. 'ஜயந்தன்' என்பது தமிழில் 'சேந்தன்' எனத் திரிதல் மரபு. இதைக்கொண்டு மு. இராகவையங்கார், திரு விசைப்பா ஆசிரியரான திருமாளிகைத்தேவ ரும் சேந்தனும் ஒருவரே என்பர். ஆனால் இக்கல்வெட்டொன்றே இவ்வொருமைப்பாட் டிற்கு முற்றமுடிந்த சான்றாகாது.

கருவூர்த்தேவர் மற்றொரு திருவிசைப்பா ஆசிரியராவர். இவர் முதலிராச ராசன் காலத் திலும் அவன் மகன் இராசேந்திரன் காலத் திலும் இருந்தவராவர். அவர் இவ்விருவர் எழுப்பிய தஞ்சைக் கோயிலையும் கங்கை கொண்ட சோழபுரக் கோயிலையும் பாடியுள் ளார். முதலிராசராசன் காலத்தில் திருமுறை வகுக்கப்பட்டிருந்தால், கருவூர்த் தேவரின் கங்கைகொண்ட சோழபுரத்தைப் பற்றிய பாடல்கள் அவ்வகுப்பில் சேர்க்கப்பெற்றிருக்க முடியா.

பூந்துருத்தி, நம்பி காடவநம்பி திருவாரூர், சிதம்பரம் ஆகிய திருப்பதிகளின் மேல் திரு விசைப்பா பாடியவராவர். இவர், இராசாதிராச னின் 32-வது ஆட்சியாண்டின் (1050)

திருவையாற்றுக் கல்வெட்டில் காணப்பெறும் நம்பியேயாவர் எனக் கூறப்பெறுகின்றது. இக் கல்வெட்டிருக்கும் இடமாகிய திருவையாறும் இவரது பிறப்பிடமாகிய திருப்பூந்துருத்தியும் அருகருகேயுள்ளதும் இவ்வுண்மையை வலியுறுத்தும். இதனுல், இவரது காலம் பதினொன்ரும் நூற்ருண்டின் இறுதி என்பதை ஒப்புக்கொண்டால், இவர் உறுதியாக நம்பி யாண்டார் நம்பிக்குப் பிற்பட்டவரேயாவர்.

வேணுட்டடிகள் மற்ருெரு திருவிசைப்பா ஆசிரியராவர். இவரது பெயரிலிருந்தே இவர் வேணுட்டைச் சார்ந்தவர் என்பது தெளிவா கிறது. வேணுடு தென் திருவாங்கூர் பகுதியி லுள்ள ஒரு நாடாகும். "12ஆம் நூற்ருண்டுச் சாசனங்களில் அச்சீமையையாண்ட அரசர் சிலர் 'வேணுட்டடிகள்' என்று வழங்கப் பெற்றி ருத்தலும் அச்சாசனங்கள் மூலம் அறியப்படு வன" என மு. இராகவையங்கார் கூறுகின்ருர். வேணுட்டடிகள் என்ற பெயரிலுள்ள 'அடிகள்' என்ற சொல், இவர், இளங்கோவடிகள், அற வணவடிகளைப் போல் ஒரு துறவி என்பதைக் குறிக்கின்றது.

சோழராட்சிக் காலத்தில் தென்னுர்க்காடு மாவட்டத்தின் வடமேற்குப் பகுதி மலையமான் கள் . என்றழைக்கப்பெறும் சேதிராயர்கள் ஆட்சியின் கீழிருந்தது. இவர்கள் முதலாம் குலோத்துங்கன் (1070—1120) காலத்திலி ருந்துதான் சேதிராயர்கள் என்ற பெயரில் கல்வெட்டுக்களில் குறிக்கப் பெறுகின்றனர். இந்தச் சேதிராயர்களில் ஒருவராகக்கூட திரு விசைப்பா ஆசிரியரான சேதிராயர், குலோத் துங்கன் காலத்திலோ அதற்குப் பின்னரோ இருந்திருப்பார். அவ்வாருயின் இவர் பாடல் கள் நம்பிகளால் திருமுறை வகுப்பில் சேர்க்கப் பெற்றிருக்க முடியா.

மற்றும் இரு திருவிசைப்பா ஆசிரியர் களான திருவாலியமுதனர், புருடோத்தம நம்பி என்பாரைப் பற்றி ஏதும் உறுதிப்படுத்திக் கூறமுடியவில்லை.

இனி, பதினொன்ரும் திருமுறை ஆசிரியர் களில் சிலரது காலத்தையும் சுருக்கமாகக் காண்போம். இத்திருமுறையுள் திரு ஆலவா யுடையார், காரைக்கால் அம்மையார், ஐயடிகள் காடவர்கோன் நாயனுர், சேரமான் பெருமாள் நாயனுர், நக்கீரர், கல்லாடர், கபிலர், பரணர், இளம்பெருமானடிகள், அதிராவடிகள், பட்டி னத்தடிகள், நம்பியாண்டார் நம்பி ஆகிய பன்னிரு ஆசிரியர்கள் பாடல்கள் அடங்கியுள் ளன. காரைக்கால் அம்மையார், ஐயடிகள் காடவர்கோன் நாயனுர், சேரமான் பெருமாள் நாயனுர் ஆகியோர் திருத்தொண்டத் தொகையிலும் பெரியபுராணத்திலும் குறிக்கப் பெறுகின்றனர். நக்கீரர், கல்லாடர், கபிலர், பரணர் போன்ற பெயர்கள் கடைச்சங்க காலத்திலும் காணப்பெறுகின்றன. எனவே இவ்விருதிறத்தார் நூல்களையும் கொண்டு இவர்கள் வெவ்வேருனவர்களா அல்லரா எனப் பார்த்தல் வேண்டும்.

திருமுருகாற்றுப்படை ஆசிரியரும் சங்க காலத்தவருமான நக்கீரர் தம் பாடல்களில் யாண்டும் கண்ணப்ப நாயனுரைக் குறிக்க வில்லை. மேலும், அந்தாதி, கலிவெண்பா, மும்மணிக்கோவை போன்ற யாப்புமுறைகளும் பாடல்களும் சங்க நூல்களில் காணப்பெரு. எனவே இவ் யாப்பு முறைகளை எடுத்தாண்ட திருமுறையாசிரியரான நக்கீரர் பிற்காலத்த வரே. இதே முறையில் திருமுறையாசிரியர் களான கபிலரும் பரணரும் பிற்காலத்தவர் களே எனத் துணியலாம். இன்னும் திருமுறை யில் காணப்பெறும் விநாயகர் வணக்கம், சில சொல்லாட்சி முதலியவைகளின் துணை கொண்டு சங்ககாலப் புலவர்களும் மேற்கூறப் பெற்ற திருமுறையாசிரிகளும் வெவ்வேருனவர் களே என்ற முடிவுக்கு வரமுடியும்.

பட்டினத்தடிகள் வரகுணபாண்டிய னையும் மாணிக்க வாசகரையும் பாடியுள்ளார். இதனுல் இவர் ஒன்பதாம் நூற்ருண்டிற்குப் பிற்பட்டவராகின்ருர். பதினேராம் திருமுறை யாசிரியர்களில் சிலர் தேவார ஆசிரியர்கள் காலத்திற்கு முன்பும் இருந்தவராவர். இவர் களுக்குப் பின்னிருந்த தேவாரவாசிரியர்களின் பாடல்கள் ஏழாம் திருமுறையிலும். இவர்கள் பாடல்கள் பதினேராம் திருமுறையிலுமாகச் சேர்க்கப் பெற்றிருப்பதால் இவைகளை நம்பி களே வகுத்திருப்பார் எனக்கொள்வதற்கில்லை.

சைவ ஆச்சாரியர்களின் சமயவெழுச்சியும் திருமுறைகளுமே பதினன்கு சைவசித்தாந்த சாத்திரங்களும் தோன்றக் காரணமாயிருந்தன. "சைவசித்தாந்த சாத்திரம் தமிழர்களின் அரும்பெரும் செல்வமாகும். இது, தொன்று தொட்டே தமிழ் நாட்டில் தோன்றி, மிகவும் சிறப்பினதாய் நின்று நிலவி வழங்கி வரும் ஒப்புயர்வற்ற பழம் பெருஞ் சமயத் தத்துவமாகும்" என்று டாக்டர், போப் கூறியுள்ளார். மற்றும் கௌடி, மாக்ஸ்முல்லர் போன்ற மேனுட்டறிஞர்கள், சைவ சித்தாந்தத்தின் தொன்மையையும் முதன்மையையும் அதன்பால் தமிழருக்குள்ள உரிமையையும் போற்றிப் புகழ்ந்துள்ளனர்.

சைவசித்தாந்த சாத்திரங்களில் ஒப்புயர்வற்றதும் தலைமையானதுமானது சிவஞான போதமாகும். இது பன்னிரு நூற்பாக்களைக் கொண்டு, முறையாக வகுக்கப் பெற்ற சித்தாந்த கோட்பாடுகளுடன் மிளிரும் முதல் சாத்திர நூலாகும். பதின்மூன்றும் நூற்ருண்டின் முற்பகுதியில் மெய்கண்டாரால் அருளிச் செய்யப் பெற்றது. 'சிவஞான போதத்திற்குப் பெயர் விளக்கம்:- "நின்ற சிவம் ஒன்று;அதனைத் தேர்தல் ஞானம்; நிகழ்போதம் தேர்ந்ததனைத் தெளிதலாகும்" எனக் கூறப் பெற்றுள்ளது. "ஞானத்தைப் பாதுகாக்கும் உயிர்கள், இறைவன் தம்முடன் ஒன்றுபட்டு நிற்றலால் பாசநீக்கம் பெறும். இறைவன் உயிர்களுடன் அத்துவிதமாக நின்று 'சிவப்பேறு' அல்லது முத்தி நிலையைக் காட்டுவான்; அவை காணும்படி உதவியும் செய்வன்" என்பது போன்ற கருத்துக்கள் இந்நூலின் கண் சொல்லப் பெறுகின்றன. இந்நூல் முதல் நூலா, அன்றி மொழிபெயர்ப்பு நூலா என்பது பற்றித் தமிழறிஞர்களிடையே கருத்து வேற்றுமைகள் உள. தீர்ந்ததோர் ஆராய்ச்சிக்குப் பின்னரே இது பற்றியதோர் முடிவுக்கு வரவியலும். இது முதல் நூலே என்பார், இதன் கருத்துக்கள் நெடுங்காலமாகவே நூல்களில் அங்குமிங்கும் சிதறிக் கிடந்தன ; அவற்றை யுணர்ந்தோர் பின்னர்த் தொகுத்து வகுத்து வெளியிட்டனர்" என்பர்.

"வேதம் பசுவதன்பால் மெய்யா
கமநால்வர்
ஓதும் தமிழதனி னுள்ளுறு நெய்
—போதமிகு
நெய்யி னுறுசுவையா நீள்வெண்ணெய்
மெய்கண்டான்
செய்ததமிழ் நூலின் றிறம்."

என்று தமிழில் ஒரு பாடல் உண்டு. இது தென் மொழிக்கும் வடமொழிக்கும் முள்ள தொடர்பை விளக்கும். எனினும் இந்நூலின் முதன்மை கருத்துக்களெல்லாம் தமிழரின் சைவசமயக் கருத்துக்களே. இந்நூலுக்கு மெய்கண்டாரே 'வார்த்திகம்' என்னும் பொழிப்பும், எடுத்துக் காட்டு வெண்பாக்களும் வகுத்துள்ளார். திருவாவடுதுறை ஆதீனத்துச் சிவஞான முனிவர் இந்நூலுக்குச் சிற்றுரை யொன்றும், பேருரை யொன்றும் (திராவிட மாபாடியம்) செய்துள்ளார்.

திருவண்ணுமலை சிவன் கோயிலுள்ள மூன்றும் இராசராசரது ஆட்சிக் காலத்துக் கல்வெட்டைக் கொண்டு மெய்கண்டாரின் காலத்தை அறியலாம். அது "தருவெண்ணெய் நல்லூர் மெய்கண்ட தேவன் என்பாரால் அக்கோயிலுள் பிரதிஷ்டிக்கப்பட்ட சிவ மூர்த்தத்தின் நித்தியபூசை முதலியவற்றுக்காக மூன்றும் இராசராச சோழனது 16-ஆம் ஆட்சியாண்டில் நிலம் இறையிலி செய்து அளிக்கப் பட்டது" என்று கூறுகின்றது. அச்சோழன் 1216-ல் பட்டம் பெற்றவனதலின் கி. பி. 1232ல் இக்கல்வெட்டு பிறந்தமை தெரியலாம். இக்கல் வெட்டு கூறும் மெய்கண்டதேவர் சிவஞான போத ஆசிரியரேயாதல் வேண்டும் என்பர் ஆராய்ச்சியாளர். உமாபதி சிவாசாரியாருக்கு நான்காந்தலைமுறைக்குரவரே மெய்கண்ட தேவர்என்பது சந்தானசாரியரின் வரலாறுகும். அச்சிவாசாரியர் தாம் இயற்றிய சங்கற்ப நிராகரணம் என்ற நூலுள், சகாப்தம் 1235-ல் அதனைத் தாம் இயற்றியதாகக் கூறுகின்றுர். இவ்வாண்டு கி. பி. 1313 ஆகும். இக்காலத்துக்கும் மேற்குறித்த கல்வெட்டு பிறந்த 1232

க்கும் 81-ஆண்டுகளே இடையீடுள்ளன. இஃது, உமாபதி சிவத்துக்கு நான்காம் தலை முறைச் சந்தானகுரவரான மெய்கண்டதேவர்க் குப் பெரிதும் ஏற்புடைத்தாதல் காணலாம். ஆகவே கல்வெட்டு கூறுமவரே சிவஞான போத ஆசிரியர் என்றும், நடுநாட்டு வெண் ணெய் நல்லூரினரான அப்பெரியாரே தம் மூர்க்கு அயலதான திருவண்ணுமலையில் சிவ மூர்த்தமொன்றைப் பிரதிஷ்டித்தவர் என்றும் கொள்ளலாம். கொள்ளவே மெய்கண்டார் 13-ஆம் நூற்றாண்டின் முற்பாதியில் இருந்தவ ராகின்றார்.

திருவுந்தியாரும் திருக்களிற்றுப்படியா ரும் சிவஞான போதத்திற்கு முற்பட்ட நூல் களாம். இவை முறையே ஆசிரியரும் மாண வரும் ஆகிய திருவியலூர் உய்யவந்ததேவ நாயனுராலும், திருக்கடவூர் உய்யவந்த தேவ நாயனுராலும் இயற்றப்பட்டவையாம். இவை சித்தாந்தக் கருத்துக்களை எளிய நடையில் நன்கு விளக்குகின்றன. திருவுந்தியார் 45 மூவடிச் செய்யுட்களைக்கொண்டது. ஒவ்வொரு செய்யுளும் ‘உந்தீபற’ என முடியும் ஈற்றடி களைக் கொண்டது. ‘உந்தீபற’ என்பது ‘குழாங்கூடிய மகளிரது விளையாட்டு’ என்றும், உம்+தீ+பற எனப் பிரிந்து ‘உம் தீமை களெல்லாம் பறந்து போக’ என்றும் பொருள் படும். திருக்களிற்றுப்படியார் 100 வெண் பாக்களைக் கொண்டதோர் சிறந்த நூலாகும்.

சிவஞானபோதத்திற்கடுத்த சிறப்பு வாய்ந்த நூல் அதன் வழி நூலாகிய சிவஞான சித்தியாராகும். இதை அருளிச் செய்தவர் அருள்நந்திசிவாச்சாரியாராவர். இவர் மெய் கண்டாருடைய தந்தையின் குலகுருவாயிருந்து பின்னர் மெய்கண்டாரின் மாணவராகி அந் நூலைச் செய்தார். அது, சிவஞான போதம் சுருக்கிக் கூறிய பொருளை நன்கு விளக்கிக் கூறுகின்றது. அந்நூல் பரபக்கம், சுபக்கம் என்னும் இரு பெரும் பிரிவுகளைக் கொண்டது.

இருபா விருபஃது, பத்து வெண்பாவும் பத்து அகவலுமாய் இரண்டு பாவாக இருபது செய்யுட்களைக் கொண்டு விளங்கும் ஒரு சித்தாந்த நூலாகும். அருள்நந்திசிவாச் சாரியார் தம் ஞான குருவாகிய மெய்கண்டாரை முன்னிலையாக்கி வினவுதல் போலவும் அவர் விடை கூறுதல் போலவும் அமைந்ததாகும் இந்நூல். திருவதிகை மனவாசகங் கடந்தார் செய்த ‘உண்மை விளக்கம்’ மற்றொரு சித் தாந்த சாத்திரமாகும்.

பதினான்கு சித்தாந்த சாத்திரங்களுள் மேற் குறித்த ஆறும் போக, மற்ற சிவப்பிரகாசம் முதலிய எட்டும் உமாபதி சிவாச்சாரியாரால் செய்யப்பட்டவை. சங்கற்ப நிராகரணப் பாயிரக் குறிப்பின்படி இவர் சகாப்தம் 1235 ல் வாழ்ந்தார். இது கி. பி. 13–ஆம் நூற்றாண்டி னிறுதியும் 14 ஆம் நூற்றாண்டின் தொடக்க முமாம். அவர் அருளிச் செய்த எட்டு நூல் களாவன :-

1. சிவப்பிரகாசம்: இது சித்தாந்த முத்தி யைக் கூறும் 100 விருத்தங்களைக் கொண்டது.
2. திருவருட் பயன்: இது, திருக்குறளைப் போன்று அதிகாரத்திற்குப் பத்துக் குறட் பாக்களுடன் பத்து அதிகாரங்களைக் கொண்டது.
3. வினா வெண்பா: இது வினா விடையாக வமைந்த 13 வெண்பாக்களைக் கொண் டது.
4. போற்றிப்பஃறொடை வெண்பா: இது 100 அடிகளைக் கொண்ட தொரு சிறிய நூலாகும்.
5. கொடிக் கவி: இது 4 வெண்பாக்களைக் கொண்ட மிகச்சிறிய நூலாகும்.
6. நெஞ்சு விடுதூது: இது கலிவெண்பாவி னால் ஆனது. நெஞ்சினைத் தூது விடுப் பதாகச் செய்யப்பட்டுள்ளது.
7. உண்மை நெறி விளக்கம்: இது 10 உண்மை நெறிகளை விளக்கும் நூலாகும்.
8. சங்கற்ப நிரா கரணம்: இது மாயாவாத மதத்தையும் அகச்சமயம் அகப்புறச் சமயம் என்பனவற்றையும் எடுத்தோதி மறுத்து, அவற்றிற்கும் சைவசித்தாந்தத் திற்குமுள்ள வேறு பாட்டை நுண்ணிதின் உணர்த்துவது.

திருக்கடைக் காப்பு

பேராசிரியர், வித்துவான், பாலூர், கண்ணப்ப முதலியார், பி. ஓ. எல்;
தமிழ்த்துறைத் தலைவர், புதுக்கல்லூரி, சென்னை.

தோற்றுவாய் :

திருவளர்ந் தோங்கும் இப்பரத கண்டத்துள் தலை சிறந்து விளங்கும் உயர் தனிச் செம்மொழிகளில் ஒன்று நந்தம் நற்றமிழ் ஆகும். இம்மொழி தன்னகத்தே கொண்டுள்ள சிறப்புக்களில் ஒன்று, பழமொழிகள் பலவற்றையும் பெற்றிருப்பது ஆகும். அப்பழமொழிகளில் ஒன்று " நாலுபேர் போன வழி நாமும் போக வேண்டும் " என்பது. இப்பழமொழியின் பொருள் வளத்தை நன்குணர்ந்தே திருத்தக்க தேவர் தமது சிந்தாமணியில்,

" யாவராயினும் நால்வரைப் பின்னிடில்
தேவர் என்பது தேறும்இவ் வையகம்"

என்று இயைத்துப் பாடியுள்ளார். இவ்வாறு நாலுபேர் நால்வர் என்பார்கள் யாவர் ? அவர்களே சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்க வாசகர். அவர்கள் அறிவுறுத்திய மார்க்கம் (வழி) சத்புத்ர மார்க்கம், தாச மார்க்கம், சக மார்க்கம், சன்மார்க்கம் என்பன. அவர்கள் நில உலகில் வந்திலரேல் நீற்றின் மாண்பையோ, ஐந்தெழுத்தின் மேன்மையையோ அறிந்துகொள்ள இயலாது. இது குறித்தே

"சொற்கோவும் தோணிபுரத்
தோன்றலும்நம் சுந்தரனும்
சிற்கோல வாதவூர் தேசிகனும்—
முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே மாமறைநூல்
தான்எங்கே
எந்தைபிரான் ஐந்தெழுத்தெங்-கே"

என்னும் பாடலும் எழுந்தது.

இத்தகைய பெருமைகட்கு உறைவிடமாகிய இந்நால்வர் திருவாய் மலர்ந்த திருப்பாடல்கள் சைவத்திருமுறைகள் பன்னிரண்டனுள் முதல் எட்டுத் திருமுறைகளாக விளங்குகின்றன. அவற்றுள் முதல் ஏழு திருமுறைகள் தேவாரம் என்றும், எட்டாம் திருமுறை திருவாசகம் என்றும் சிறப்பு முறையில் கூறப்படும். இங்குத் தேவாரம் என்று கூறப்படுவது குறித்துச் சில குறிப்புக்கள் தரவேண்டியது இன்றியமையாததாகின்றது.

தேவாரக் குறிப்பு :

மூவர் முதலிகள் பாடிய திருப்பாடல்கள் தேவாரம் என்ற திருப்பெயரால் அறியப்பட்டு வருவன வாயினும், சிறிது ஊன்றி ஆய்ந்து பார்க்குங்கால், அவ்வாறு மூவர் பாடல்கட்கும் அப்பெயர் தொன்றுதொட்டு இருப்பதாகப் புலனாகவில்லை. ஒரு வேளை இரட்டையர்கள் பாடிய ஏகாம்பர நாதர் உலாவில் வரும்,

"மூவாத பேரன்பின் மூவர் முதலிகளும்
தேவாரம் செய்த திருப்பாட்டும்"

என்பதைக் கொண்டு தேவாரம் என்ற பெயர் மூவர் பாடல்கட்கும் வந்திருக்கலாம். இவர்கள் காலம் கி. பி. 15 ஆம் நூற்றாண்டு. இவர்கட்குப் பின்னர்ப் பதினாறும் நூற்றாண்டில் திகழ்ந்த தத்துவப் பிரகாசர், "பேசுவது தேவாரமே அலால்" என்று கூறுவதும் மூவர் முதலிகளின் திருப்பாடல்களைக் கொண்டே ஆகும். இவர்கட்கு முன்னர்த் திகழ்ந்தவர்களும் திருமுறைகளில் நன்கு மூழ்கியவர்களுமான நம்பியாண்டார் நம்பிகளோ, சேக்கிழார் பெருமானாரோ மூவர் பாடல்களைத் தேவாரம் என்று கூறிற்றிலர். இவர்கட்கு முன்னவரான பட்டினத்தடிகளும் " வித்தகப் பாடல் முத்திறத்தடியரும் " என்று தான் கூறிப் போந்தனர். ஔவையார், "மூவர் தமிழ்" எனப் பாடிவைத்தனர்.

ஆனால், பதினைந்தாம் நூற்றாண்டினதான சிவப்பிரகாசப் பெருந்திரட்டின் வாயிலாகவும், பதினெட்டாம் நூற்றாண்டில் தோன்றிய

சிதம்பரசுவாமிகள் தாம் எழுதிய உரைகளின் வாயிலாகவும் மூவர்கள் பாடிய திருப்பாடல் கட்குத் தனித் தனிப் பெயர்கள் தந்து பேசி இருப்பது கருத்துள் இருத்தற்குரியதாகும். அவர்கள் திருஞானசம்பந்தர் திருப்பாடல் களைத் திருக்கடைக் காப்பு என்றும், திருநாவுக் கரசரது திருப்பதிகங்களைத் தேவாரம் என்றும், திரு நாவலூரரது திருப்பாடல்களைத் திருப்பாட்டு என்றும் சுட்டிச் சென்றுள்ளனர். பானை சோற்றிற்கு ஒரு சோறு பதம் காண்பார் போல் காண விழைவார் அவிரோத உந்தியா ரில் வரும் இருபதாம் பாடலின் உரையில் இவ் வுண்மையினைக் காணவும். சுந்தரரது பாடல் கள் திருப்பாட்டுத்தான் என்ற குறிப்பை இராமலிங்க வள்ளலாரும் "தேன் படிக்கும் அமுதம் உன் திருப்பாட்டை" என்றே குறிப் பிடுகிறார். சிவப்பிரகாச சுவாமிகளும், "படி யிலா நின் பாட்டில்" என்று பாடுகிறார்.

இவ்வாறு இருக்க மூவர் பாடல்களும் ஏன் தேவாரம் என்ற பெயரால் குறிக்கப்படுவ தாயிற்று எனில், தேவாரம் என்பது வழிபாடு என்னும் பொருளையும், போற்றப்படுவது, பூசிக்கப்படுவது என்ற பொருளையும் தருவதா கும். இதனை முறையே இராசராசன் கல்வெட் டில் வரும் "தேவாரத் தேவராக" எனவும், குலோத்துங்கன் கல்வெட்டில் "தேவாரம் செய்து" என்றும், திரு வாய் மொழி முப்பத் தாருயிரப்படி சீயர் அரும்பத உரை, ஈடு ஆறு எட்டாம்பத்து, பத்தாம் பாசுரத்துள் தேவாரம் என்பதற்குக் கிருகார்ச்சை என்ற பொருள் எழுதியிருத்தலாலும் அறியலாம். இவற்றால் மூவர் பாடல்களும் இவ்வாறு வழி படுதற்கும் பூசிக்கப்படுதற்கும் உரியன ஆத லின் மூவர் பாடல்கட்கும் இப் பெயர் வழங்க லாயிற்று. இவ்வாறு பலவாற்றாலும் துருவப் பட்டதனால் திருஞான சம்பந்தரது திருப்பதி கங்கள் திருக்கடைக் காப்பு என்னும் பெயர்க்கு உரித்தாதலைப் பெற்றும்.

திருக்கடைக்காப்பு என்ற பெயர்க்குக் காரணம்:-

திருக்கடைக்காப்பு எனச் சிவபுரச் செம்ம லார் பதிகங்கட்கு ஏன் பெயர் அமையவேண் டும் எனில், அன்னார் சிறிதும் மாறாது தமது திருப்பதிகங்களின் ஈற்றில் அப்பதிகங்களைப் பாடுதலால் பெறக்கூடிய பயனையும் தம் திருப் பெயரையும் அமைத்துப் பாடிக்கொண்டே சென்றுள்ளார். கடைசிப்பாட்டில் இவ்வாறு ஒரு முறையினை முழுமையும் கையாண்டு சென் றிருப்பதனால் திரு என்னும் அடைமொழியினை இணைத்துத் திருக்கடைக்காப்பு என்ற பெயர் அமைவதாயிற்று. "அற்றேல், மணிமொழியா ரும், "பொருளுணர்ந்து சொல்லுவார் செல் வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ் பல் லோரும் ஏத்தப் பணிந்து" என்று பயன் கூறி யிருப்பதாலும்.ஆளுடைய அரசரும், நாப்பிணை தழுவிய நமச்சிவாயப்பத் தேத்தவல் வார்தமக் கிடுக்கண் இல்லையே"

என்று பாடியிருத்தலாலும், ஆளுடைய நம்பி களும் தாம்பாடிய எல்லார் திருப்பாட்டுக்களின் இறுதியில் தம் பெயரையும், பாடுதலால் வரும் பயனையும் சுட்டி இருப்பதாலும், அவைகளையும் திருக்கடைக் காப்பு எனல் ஒண்ணாதோ எனில், ஒண்ணாது எனக் கூறிவிடலாம்.

ஆளுடைய அடிகளார் திருகடைக் காப் புக்கு எனத் தனிப் பாடல் பாடி அமைத்திலர். ஒரே பாட்டின் இறுதியில் இயைத்துப் பாடிச் சென்றனர். இவ்வாறு வேறிடங்களில் பாடினார் இல்லை. ஆளுடைய அரசர் திருக்கடைக் காப்புச் செய்யுள் ஒன்றேதான் பாடினர். ஒவ் வொரு பதிகத்திலும் பாடினாரில்லை. மேலும், இவ்விருவரும் பயனைமட்டும் கூறினரே அன்றித் தம் திருப்பெயர் இலங்கப் பாடிற்றிலர். ஆகவே அவர்கள் பாடிய பாடல்கள் திருக்கடைக் காப்பு என்னும் பெயர்க்கு உரியன அல்ல. ஆளுடைய நம்பிகள் திருஞானசம்பந்தரைப் போலத், தம் பெயரையும் பயனையும் பாடியுள்ளரே எனில், ஆளுடைய பிள்ளையாரின் அடியொற்றிப் பாடினமையின், அவர் தம் திருப்பாட்டுக்கள் திருக்கடைக் காப்பு என்னும் பெயரைத் தாங்கு தற்கு உரியன அல்ல. மேலும், திருக்கடைக் காப்புக்கு உரியவர் திருஞான சம்பந்தரே என்ற குறிப்பினை அவர் தம் பதிகத்து ஈற்றுப் பாடலில் தம் பெயர் இலகுவதாலும்

இறைவனும், மூவர், பாடல்களைப் பற்றித் தம் கருத்தைக் கூறியதாக வழங்கும் தொடர்களில் '' சம்பந்தன் தன்னைப் பாடினன், சுந்தரன் பொன்னுக்குப் பாடினன், என் அப்பன் என்னைப் பாடினன் என்று வருவதாலும் தெளியலாம். இவ்வாறு இருக்க ஒரு சிலரிடை சிரபுரக் கோனரது திருப்பதிகங்களில் வரும் இறுதிப் பாடல்கள் அவரால் பாடப்பட்டவை அல்ல; அவர் மாட்டுப் பேரன்பும் பெருமதிப் பும் கொண்ட யாரோ ஒருவரால் பாடப்பட்ட வை ஆகும்'' என்னும் கருத்து நிலவியுள்ளது. எனவே, அத்தகையவர்கள் உளம் கொள்ளும் முறையில் திருக்கடைக்காப்புச் செய்யுளைப் பாடியவர் திருஞானசம்பந்தரே என்பதைச் சிறிது நிலைநாட்டுவோமாக.

திருக்கடைக்காப்புச் செய்யுள் திரு ஞானசம்பந்தருடையதே.

வெங்குரு வேந்தனர் இறுதி வரையில் திருக்கடைக் காப்புச் செய்யுளைப் பாட வேண்டியது அவர்க்கு இன்றியமையாத தாயிற்று. புகலி வேந்தர் பொலிவுற்ற காலத்தில் அமண் சமயம்,ஆங்காங்குச் சென்று தம் மதத்தின் சிறப்பையும், அம்மதத்தில் சேர்வதால் பெறக் கூடிய பயனையும் மக்க ளிடையே கூறி மக்கள் பலரையும் தம் மதத்தில் ஈர்த்து வந்தது. இவ்வாறான நிலையினைச் சேக்கிழார்

"பூழியர் தமிழ்நாட் டுள்ள பொருவில்
சீர்ப் பதிகள் எல்லாம்
பாழியும் அருகர் மேவும் பள்ளிகள்
பலவும் ஆகிச்
சூழிருள் குழுக்கள் போலத் தொடை
மயில் பீலியோடு
மூழிநீர் கையிற் பற்றி அமணரே ஆகி
மொய்ப்ப''

என்று கூறியது கொண்டு யூகிக்கலாம். இதனல் வேணுபுர வேந்தனர் மக்கட்குச் சைவ சமயத்தின் மாண்பைப் புலப்படுத்தும் முறையில் சிவபெருமான் பெருமையும், அப் பெருமான் மீது பாடப்பட்ட பாடல்களைப் பாடுவதால் பெறக்கூடிய பயன்களையும், இயைத்துப் பாடி, இவ்வாறு கூறுதற்கு உரி யவன் எல்லாப்படியாலும் தகுதியுடையவனே என்று அறிவிக்கப் படர்க்கையில் தம் பெயரைச் சுட்டிப்பாடினரே அன்றித் தம் பெருமை தோன்றப் பேசினர் அல்லர். அமையம் வரும் போது அறிஞர் தம்மைப் புகழ்ந்து கொள்வது இலக்கண மரபே அன்றி இழுக்கன்று.

'' மன்னுடை மன்றத் தோலை தூக்கினும்
தன்னுடை ஆற்றல் உணரார்
இடையினும்
மன்னிய அவையிடை வெல்லுறு
பொழுதினும்
தன்னை மறுதலை பழித்த காலையும்
தன்னைப் புகழ்தலும் தகும்புல
வோர்க்கே ''

என்று பனம்பாரனர் பண்டே கூறியுள்ளார் அல்லரோ! இதனல் திருஞான சம்பந்தரே திருக்கடைக் காப்பினைப் பாடினர் என்பதற்கு இதனை முதற் காரணமாகக் கொள்ளவும்.

சண்பையர் செம்மலார் தாம் பாடியுள்ள திருக் கடைக்காப்புச் செய்யுட்களைத் தாம் எந் தெந்தயாப்பில் பதிகத்தினைப் பாடினரோ, அந் தந்த யாப்பிலேயே திருக்கடைக் காப்புச் செய் யுளைப்பாடியுள்ளார். பிறர்பாடியிருப்பின் யாப்பு அமைதி மாறுபட்டிருக்கும். ஆகவே, இது இரண்டாம் காரணமாகும்.

காழிப்பதிக் காவலர் தாம் பிறந்தருளிய பதியாகிய சீர்காழியைப் பற்றி பாடியுள்ள திருப் பதிகங்களில் அப்பதிக்குரிய பன்னிரண்டு பெயர்களையும் பொருத்தி ஒவ்வொரு பெயர்க்கும் ஒவ்வொரு பாடலைப் பாடியுள்ள பதிகங்களும் உள்ளன. அதுசந்தர்ப்பங் களில் அப்பதிகங்கள் பன்னிரண்டு திருப் பாடல்களால் அமைக்க வேண்டியது நியதி யாயிற்று. அங்ஙனம் பாடிய முறையிலும் பன்னிரண்டாவது திருப்பாடலினைத் திருக் கடைக் காப்புச் செய்யுளாக அமைத்துக் கொண்டனர். திருக்கடைக் காப்பினைத் தாம்

பாடவேண்டிய முறையினைக்கைக் கொள்ளாமல் இருப்பரேல் பன்னிரண்டாவது திருப்பாடலைப் பிரமபுரத்துக் குரிய பன்னிரண்டு பெயர்களில் ஒன்றற்குரிய பாடலாக அமைத்து வாளாச் சென்றிருப்பர். அவ்வாறு செய்திலர். பன்னிரண்டாம் பாட்டினைத் திருக்கடைக் காப்புச் செய்யுளாகவும், சீர்காழிப் பதியின் பன்னிரண்டாம் திருப்பெயரும் பொருந்தப் பெற்றதாகவும் பாடித் தாமே திருக்கடைக் காப்புச் செய்யுட்குரியவர் என்பதை அறிவித்துள்ளார். இது மூன்றும் காரணம்.

திருஞான சம்பந்தர் பாடியுள்ள பாடல்களில் திருஎழுகூற்றிருக்கை என்பதும் ஒன்று. அது பதிக முறையில் பத்துப்பாடல்களால் அமைந்ததன்று. ஒரே பாடலாலாயது. அப்பாடலின் இறுதியில் "கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை" என்ற அடி காணப்படுகிறது. இவ்வாறு இப்பாடலில் கூறப்பெறுமல் விட்டிருந்தாலும், தனியே ஒரு பாடல் திருக்கடைக் காப்பிற்கென அமைந்திருந்தாலும் திருக்கடைக்காப்புச் செய்யுள் பிறரால்பாடப் பட்டது என்று கருதலாம். அவ்வாறின்றி அவ்வொரு பாட்டின் இறுதியில் பயன்சுட்டப் பட்டிருத்தலின் அவரே திருக்கடைக்காப்பினைப் பாடினர் என்பதற்கு இது நான்காம் காரணமாகும்.

இரண்டாம் திரு முறையில் திருக்கோவலூர் வீரட்டானப் பதிகத்துள் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் "வீரட்டானம் சேர்துமே" என்னும் தொடர் காணப்படுகிறது. இந்தத் தொடர் திருக்கடைக் காப்புச் செய்யுளின் இறுதியடியிலும் காணப்படுகிறது. பிறர்பாடி இருப்பின் இவ்வாறு கூறத்துணிவு வராது. வாளா பயனும் பெயரும் மட்டும் அமையப் பாடிச் சென்றிருப்பர் அல்லரோ? ஆகவே, இஃது ஐந்தாவது காரணமாகும்.

இரண்டாம் திருமுறையில் திருநனிப் பள்ளிப்பதிகத்தும் கோளறு பதிகத்தும், மூன்றும் திருமுறையில் திருவேதி குடிப்பதிகத்தும் திருக்கழுமலப்பதிகத்தும் திருக்கடைக் காப்பினை அமைக்கும்போது முறையே, "வினை கெடுதல் ஆணை நமதே" என்றும், "வானில் அரசாள்வர் ஆணை நமதே," என்றும், "அந்த உலகெய்தி அரசாளும் அதுவே சரதம் ஆணை நமதே," என்றும், "வானிடை வாழ்வர் மண்மிசைப் பிறவார் மற்றிதற்கு ஆணையும் நமதே" என்றும் ஆணையிட்டும், நமதே எனப் பன்மை மொழியிலும் பாடும் உரம் பிறர்க்குவர இயலுமோ? மேலும், கோளறு பதிகத்தின் பொருளின் இயைபு திருக்கடைக் காப்புச் செய்யுளில் இயையும் வண்ணமாகத் "தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து நலியாத வண்ணம் உரை செய் ஆன சொல்மாலை" என்றல்லவோ பாடப்பட்டுள்ளது. "ஆணை நமதே" என்று இத்தகைய துணிவுடன் இசைத்ததன் கருத்து, தாம் பாடும் திருப்பாடல்களை இறைவன் தம் உள்ளத்திலிருந்து உணர்த்த உரைக்கின்ருர் ஆதலின் என்க. இந்த உண்மையினைச் சம்பந்தரே "எனதுரை தனதுரையாக நீறணிந்து ஏறிய நிமலன்" என்று பாடிய தொடர் உணர்த்தி நிற்கின்றது. ஆகவே, இஃது ஆருவது காரணம்.

மூன்றும் திருமுறையில் வரும் திருப்பிரமபுரப் பதிகத்தில் பத்தே பாடல்கள் உள்ளன. அப்பத்துப் பாடல்களுள் இறுதிப் பாட்டுத் திருக்கடைக் காப்புப் பாடலாகும். இத்திருக்கடைக் காப்புச் செய்யுள் பிறரால் பாடப்பட்டிருக்குமேல் இப்பதிகம் ஒன்பது பாடல்களால் முடிந்திருக்கும். அங்ஙனம் முடிந்திருப்பின் பதிகம் என்னும் பெயர்க்கு அது உரியதாகாது. பதிகம் என்பது பத்து அல்லது பதினெரு பாடல்களால் அமைதல் வேண்டும். ஒரு பாடல் மிகுதிப்படினும் இழுக்கில்லை. குறைதல் தான் கூடாது. ஆகவே இவரே திருக்கடைக் காப்பினைச் செப்பினர் என்பதற்கு இஃது ஏழாவது சான்ருகும்.

இரண்டாம் திருமுறையில் காணப்படும் திருக்கோமூத்திரி என்னும் திருப்பிரமபுரப்பதிகம் அந்தாதித் தொடை அமையப் பாடப்

பட்டுள்ளது. அப்பதிகத்தில் பத்தாவது பாட்டின் இறுதியும் பதினோராம் பாடலின் முதலும் இயையும் முறையில் அந்தாதி இலக்கணம் கெடாதமுறையில் அமைந்துள்ளது. திருஞானசம்பந்தரே அப்பதினோராவது பாடலாகிய திருக்கடைக்காப்புச் செய்யுளைப் பாடினமையால்தான் அந்தாதித் தொடை முரணுதவாறு முடித்துக் காட்டினர். எனவே, இஃது எட்டாவது காரணமாகும்.

இங்ஙனமெல்லாம் இயைத்து இயைத்துக் கூறிச் செல்வானேன்? திருஞான சம்பந்தர் தமது திருப்பெயரைப் படர்க்கையில் வையாது தன்மையிடத்தில் வைத்து, நான் பாடிய இப் பதிகத்தைப் பாடின பயன் இது என்று கூறிச் சென்றிருக்கலாமே, என வினவவும் கூடும். திருஞான சம்பந்தர் இவ்வாறு ஓர் ஐயம் எழக் கூடும் என்பதற்காகவே ஓர் இடத்தில் மட்டும் தம்மைப் படர்கையில் வைத்துப் பாடாமல் தன்மையில் வைத்தே பாடியும் உள்ளார். இதனை மூன்றும் திருமுறையில் திருவாலவாய்த் திருவியமகப் பதிகத்துள் வரும் திருக்கடைக் காப்பில் "நான் உரைத்தன செந்தமிழ்ப்பத் துமே" என்று வரும் தொடரில் காணவும். இதைவிட வேறு அகச்சான்றும் வேண்டுமோ? ஆதலின் இஃது ஒன்பதாம் காரணமாகும்.

சேக்கிழார் பெருமானர் திருவாக்குகளைக் கொண்டும் திருக்கடைக் காப்புச் செய்யுளைச் செப்பியவர் திருஞான சம்பந்தரே என்பதை அறுதியிட்டு உறுதியாகக் கூறிவிடலாம். சேக்கிழார் பெருமானர் "இன்ன தன்மையில் இன்னிசைப் பதிகமும் திருக்கடைக் காப்பும் ஏத்தி" என்றும், "பன்னுதமிழ்மறையாம், பதிகம் பாடித் திருக்கடைக் காப்புச் சாத்தி" என்றும், "தூல பதிகத்திருக்கடைக் காப்புத் தொடுத்து அணிய" என்றும், "ஓங்கு திருக்கடைக் காப்புச் சாத்தி" என்றும் இவ்வாறு பல வேறு இடங்களில் பாடிக் காட்டுதலின் திருக்கடைக் காப்புச் செய்யுளைப்பாடியவர் ஞானசம்பந்தரே என்பதில் தடையுண்டோ எனவே இது பத்தாவது காரணமாகும்.

★

★ ★

சைவம் காத்த செல்வியர்

ந. சரோஜினிதேவி, எம். ஏ.

தமிழ் விரிவுரையாளர், அழகப்பா மகளிர் கல்லூரி, காரைக்குடி.

உலகிலுள்ள மற்ற நாடுகளைவிட, மற்ற மொழிகளைவிடத் தமிழ்நாடும், தமிழ் மொழியுமே பெண்டிர்க்குச் சிறப்பும், தலைமையும் தந்துள்ளன என்றுரைத்தல் உயர்வு நவிற்சியன்று. இதனை விளக்குதற்குச் செந்தமிழ்ச் சொற்கள் சிலவற்றை விளக்கியமைதல் பொருத்தமேயாம்.

மனைவி, இல்லாள் என்ற இரு சொற்களுக்கு ஆண்பாற் சொற்கள் கிடையா என்பது யாவரும் அறிந்ததாகும். கணவன் என்ற சொல், பொருளால் ஆண் பாலன்றி, மேற் குறித்த சொற்களுக்கு நேரடியான ஆண்பாற் சொல்லின்மை அங்கைநெல்லிக்கனியென்பது தேற்றம். இல்லத்தின் தலைமையை அவளுக்கு நல்கிப் பெருமை கொண்டவன் தமிழன். உலகியலிலே உழன்று போராட்டச் சுழலிலே சிக்கித்துன்புறும் ஆடவன் தன் கவலைகளினின்று விடுதலை பெறுதற்கு இல்லம் நோக்கி வருகிறான். இக்கருத்தினைத் தன்கருவாகக் கொண்டு எழுந்ததே 'வீடு' என்ற அழகிய தமிழ்ச்சொல்லாகும். அத்தகைய விடுதலை அருளும் வீட்டினுக்குத் தலைமை தாங்கும் பொறுப்பு மெல்லியல் நல்லாருக்கு உரியதென்பது தமிழ்ப் பேரினத்திற்குப் பெரிதும் பீடு தருவதாகும். நல்லார் என்ற சொல்லும் பெண்டிரையே குறிக்குமென்பது கருதற்பாலது.

உலகியலில் வெற்றிபெறுவது மனித இனத்தின் குறிக்கோளாகும். அப்பொறுப்பை ஏற்கும் பாரினருக்கு வெற்றிக் குரியவர் எனப் பொருள்படும், ஆடவர் (ஆடு—வெற்றி) என்ற சொல்லினை அமைத்தனர் தமிழ்ச் சான்றோர். வாழ்க்கைப் போரிலே தவிக்கும் மனித இனத்தினைத் தன் அன்பு நெறியால் ஆட்கொண்டு துயர்ச் சுமை நீக்கும் பொறுப்பினை வீட்டின் தலைவி ஏற்றிருக்கிறாள். அவள் இன்பமைந்த இயல்பினளாய்—விருப்பத்தைக் கிளர்ந்தெழச் செய்பவளாய் இருத்தல் இன்றியமையாதது. இக்கருத்தினை அடிப்படையாக வைத்தே எழுந்தது பெண் என்னும் சொல்லாகும். (பெட்பு—விருப்பு) பெண்ணுக்குரிய தொழில் யாது? பேணுதல்; முதலெழுத்து நீண்டக்கால் அந்நல்லாரின் தொழிலைப் புலப்படுத்துவதாகின்றது. இத்தகைய சிறப்பு வாய்ந்த செல்வியர்தான் அன்றும் சைவத்தை நிலை நாட்ட ஆண்களைவிட பாடுபட்டனர்; இன்றும் நாமும் போற்றுமாறு சைவத்தை நிலைநாட்டினர். அன்று தொட்டு இன்றும், என்றும் சைவம் பெண்களாலேயே தான் தழைக்கும் என்பதே உண்மை.

பண்பாட்டின் கண்ணுடியாக விளங்க வேண்டும் பெண்ணுள்ளம். மேலும் பழந் தமிழ் மகளிர் தம் கணவனுக்கு உற்ற துணைவியராய் அமைந்து அவர் பணியே தம் நலனகக் கொண்டதோடு அமையாது தம், கணவர் நெறிபிறழ்ந்த காலத்திலே அவரை நன்னெறிக்குய்த்தலையும் தமது உரிமையும், கடமையுமாகக் கொண்டனர்.

'பேணுதகு சிறப்பின் பெண்' என்பது பதிற்றுப்பத்து. இத்தகைய செந்தமிழ்ச் சொல் நுட்பங்களை ஆராயுமிடத்துத் தமிழகப் பெண்களின் நிலைமை எத்துணை உயர்ந்ததாயிருக்க வேண்டும்! பேணும் தகைமை பொருந்திய தையலார்தான் நம் சமயத்தையும் பேணி வளர்த்தனர். "தீண்டுவிராகில் எம்மைத் திருநீலகண்டம்" என்று ஆணையிட்டு, தன் கணவனைத் தடுத்து, அன்றுதொட்டு திருநீலகண்டரை மனதாலும் பெண்களைத் தீண்டாதொழிக்கச் செய்த வரலாறும், பெருமைசேர் வடிவம் வேண்டிப் பெற்ற காரைக்காலம்மையார் வரலாறும், சமண

வலைப்பட்ட பாண்டிய மன்னனை மங்கையர்க் கரசியார் சம்பந்தர் துணைகொண்டு சிவநெறிக் குய்த்த வரலாறும், தமிழ் மகளிரின் திறத்தை யும், கடமையையும், சமயப்பற்றையும் நன்கு விளக்குவதாகும். நெடுமாறரைச் சைவராக்க மங்கையர்க்கரசியார் மேற்கொண்ட முயற்சி மிகப் பெரிதாகும். அவரது முயற்சி இன்றேல் பாண்டியநாட்டில் சைவம் பரவி இராதென்பது உறுதி. அதனாலன்றோ சைவம் காத்த செல் வியை, சம்பந்தப்பெருமான் 'மங்கையர்க்கரசி' என்று சிறப்பித்தார். பெண்மணிகளுக்கெல் லாம் தலைவியாம் பேறு பெற்றவர் என்ற கருத் தினால் மங்கையர்க்கரசி என்று போற்றிப் பரவி னார். இந்த உலகம் தோன்றியநாள் தொட்டு வந்த பல கோடி பெண்மணிகளில் இவர் ஒருவரே அரசியாகும் தகுதிபெற்றனர் என்று பரவினர். ஆனால் பெரிய புராண ஆசிரியரான சேக்கிழாரடிகள் அதுவும் போதாது என்று கருதி "மங்கையர்க்குத் தனியரசி" என்று வாழ்த்துகிறார்.

'மங்கையர்க்குத் தனியரசி எங்கள்
தெய்வம்
வளவர் திருக்குலக் கொழுந்து
வளைக்கை மானி
செங்கமலத் திருமடந்தை கன்னி
நாடாள்
தென்னர்குலப் பழி தீர்த்த தெய்வப்
பாவை
எங்கள் பிரான் சண்பையர் கோன்
அருளினாலே
இருந்தமிழ் நாடுற்ற இடர் நீக்கித்
தங்கள்
பொங்கொளிவெண் திருநீறு பரப்பினாரைப்
போற்றுவார் கழல் எம்மால்
போற்றலாமே"

என்பது சேக்கிழார் பெருமானின் வாக்கு. திரு ஞான சம்பந்தர் சிவஞானமுண்டு பொழிந்த தூய திருவாக்கினாலேயும், தொண்டர் சீர் பரவும் பெருமை பெற்ற சேக்கிழாரடிகளினா லேயும் பாடப் பெற்றும், பாராட்டுப் பெற்றும் விளங்கும் மங்கையர்க்கரசியம்மையாரது பெருமையினை நாம் என்னென்று அறிந்து போற்ற வல்லோம்! அம்மையாரது முயற்சி இன்றேல் பாண்டிய நாட்டில் சைவம் பரவி இராது. மற்றும் தம் மகனை அறுத்துச் சமைக்க உடன்பட்ட சிறுத்தொண்டர் மனைவியாரின் (வெண்காட்டு நங்கை) சமயப்பற்றுக்கு எல்லை கூற ஒல்லுமோ?

அடியார்க்குச் சமைக்க வயலில் விதைத்த நெல்லைக் கொண்டு வரும்படி யோசனை கூறிய இளையான்குடிமாற நாயனாரின் மனைவியாரின் சிறப்பைச், சிவத்தொண்டர்கள் என்றும் மறத் தற்கியலாது. அம்மையார் திருவமுது அமை த்து 'இணையிலாதவரை ஈண்டு அமுது செய் விப்போம்' என்று கூறவும், நாயனார் உணர் வினால் உணரவொண்ணா ஒருவரை உணர்த்த வேண்டியன்றோ அமுதுபடைத்து இறைவனால் இன்பமார்ந்திருக்கும் பேறுபெற்றார். மேலும் நெல்வாங்கத் தம் தாலியைத் தந்த குங்கிலியக் கலயரின் மனைவியார், விளக்கெரிக்கப் பணம் வேண்டித் தம்மை விற்க உடன்பட்ட கலயநாயனாரின் வாழ்க்கைத் துணைவியார் முதலான மாதரசியார்களின் சிவபக்தியை என்னென்பது? இத்தாய்மார்களின் ஒத் துழைப்பு இன்றேல் நாயன்மார்கள் சமயத் திருப்பணி செய்திருத்தல் இயலுமோ? சைவ சமயம் வளர, சமயம் காத்த இப்பெண்மணி களின் ஒத்துழைப்பு இன்றியமையாததன்றோ! ஈண்டு அறநெறியே போற்றும் செல்வியரின் உயர்வினைக் கருதுக. இல்லறத்திலே ஒழுகு தற்குரிய நெறிமுறையை இன்னதெனக் குறிக் கிறது இம்மங்கையர்களின் உள்ளம். அற நெறியான சைவசமய நெறிகளைப் போற்றும் உள்ளம் பெண்மைக்கே சாலப் பொருந்து வதாகும். நற்பண்புகள், பொறுமை, உறுதி தாய்க்குலத்துக்கே தனியுடைமைகளாகும் என் றுரைப்பது சாலப் பொருத்தமுடையதன்றோ! பெண்ணினத்தாரின் ஈரநெஞ்சம் இன்றேல் சமயமும், உலகும் வாழ்வறியாது மாய்ந்து போயிருக்குமன்றோ! சைவம் காத்த செல்வியர்கள் இவர்களன்றோ!

கல்வியிலும் ஆத்மீகத்துறையிலும் பெண்கள் சிறந்திருந்த நாட்டிலே இடைக் காலத்தில் முன்னைய நிலைமாறி மகளிர் ஏட்டுப் படிப்பும் இல்லாது அடிமை வாழ்வு வாழ்வாரா யினர். சமயமும் ஓடி ஒளியலாயிற்று. எந்த நாட்டிலே எவ்வகைச் சமூகத்திலோ, அன்றி வீட்டிலோ பெண்குலம் தாழ்வுற்றிருக்கிறதோ, அந்த நாட்டிலே, சமூகத்திலே, வீட்டிலே அன்பு முதிர்ச்சியும், அறிவுப் பெருக்கமும், சமய வாழ்வும், இன்பமும், இணையில் ஆக்கமும் காண இயலாது. இந்நிலை கண்டுதான் பார தியார் ‘ மாதர்தமை இழிவு செய்யும் மடமை யைக் கொளுத்துவோம் ’ என்றும், ‘ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை என்றெண்ணி யிருந்தவர் மாய்ந்துவிட்டார்’ என்றும் உறுதி யுடன் வீரமுழக்கம் செய்தார். ‘ பெண்களறி வை வளர்த்தால் வையம் பேதமை அற்றிடும் கண்டீர் ’ என்று அறிவு கொளுத்துகிறார்.

வேதம் படைக்கவும், நீதிகள்
செய்யவும்
வேண்டிவந்தோமென்று கும்மியடி
சாதம் படைக்கவும் செய்திடுவோம்
தெய்வச்சாதி படைக்கவும்
செய்திடுவோம்

என்று சங்கநாதம் செய்கிறார். அவருடைய கனவெல்லாம் பலிக்க ‘ சிற்றுயிர்க்கு உற்ற துணை’யாகிய சமயக்கல்வி இன்றியமையாத தாகும்.

தமிழ்மொழியையும், தமிழ்க்கலையையும், தமிழ்ச்சமயத்தையும், தமிழ்ப்பண்பையும், தமிழ்ப்பெண்களும்; ஆண்களும் விரும்பிப் பேணுவாராயின் தமிழினம் முழுவதும் உய்ந்துவிடும் என்பதில் ஐயமில்லை.

வாழ்த்து

வள்ளுவர் மன்றம்

(மேலைச்சிவபுரி)

திருச்சி மாவட்டம்

அன்புடையீர்,

கடந்த 50 ஆண்டு காலமாக, மொழிக்கும், நாட்டிற்கும், சமயத்திற்கும் நற்பணி யாற்றிவரும் சபையின் பொன்விழாக் காண, மிக்க மகிழ்ச்சி.

மணிவிழாக் கொண்ட தாங்கள், முன்னின்று சபையின் பொன்விழாக் காணல் சாலச் சிறப்புடைத்து.

“ ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம்
பேரறிவாளன் திரு ”

என்னும் தமிழ்மறைக்கு ஒப்ப, நல்ல மனமுடையோரின் நன்முயற்சியினால் இனிது வளர்ந்து செழிப்புற்று இலங்கும் சபை, மேன்மேலும் வளர்ச்சி பெற்றுப் பல்லாண்டு வாழி! வாழி! என மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

திருவள்ளுவர் சித்தாந்த சைவரே

“ தருமபுர ஆதீன வித்துவான், திருவண்ணுமலை ஆதீன விரிவுரையரசு,
மதுரை ஆதீனச் சித்தாந்த சைவ வித்தகர், சித்தாந்த புலவர்மாமணி, பாலகவி”
வயிநாகரம் வே. இராமநாதன் செட்டியார், தேவகோட்டை.

உலகம் போற்றும் ஒப்பற்ற நல்லற நூலாகிய திருக்குறளைத் தந்துதவிய திருவள்ளுவர் பெருமானது சமயம் பற்றிப் பலவேறு வகைப்பட்ட கருத்துக்கள் இங்கே நிலவி வருகின்றன. மாறுபட்ட கருத்துக்களையுடைய ஒவ்வொருவரும் அவரவர் கருத்துக்களை உறுதிப்படுத்துதற்குரிய சான்றுகள் பலவற்றை அறிவுத் திறமையால் எடுத்துக்காட்டி நிலை நாட்டிவிட முயன்றிருக்கிருர்கள். இதனுல் திருவள்ளுவ தேவரது சமயம் பற்றி உணர்த்தப் புகுந்த நல்லாசிரியர்களின் அறிவாழத்தை அறிந்து இன்புற முடிகிறதேயன்றி வள்ளுவப் பெருந்தகையார் கைக்கொண்டொழுகிய உண்மைச் சமயமிது வெனத் துணிந்து கொள்ளுதற்கு முடியவில்லை. ஆகவே நேர் வழியாக உண்மைகாண முயலுதல் என்பதை முதல் நோக்கமாகக் கொண்டு அறிவாற்றலை அதற்குத் துணை செய்யுங்கருவியாக வைத்துத் திருக்குறளாசிரியரின் சமயத்தைத் துணிவதற்கு இக்கட்டுரை முற்படுகிறது என்பதை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம் நாட்டிலோ அன்றிப் பிற நாடுகளிலோ நம் கண் முன்னே வாழ்ந்து கொண்டிருப்பவர்களைப் பற்றி வெளிவரும் செய்திகளிலேயே பெரும்பாலானவை உண்மையும், சிறுபாலானவை புனைந்துரையுமாக வந்துவிடுவதை நாம் நன்கு அறிவோம். இந்த நிலையில் நமக்குப் பல நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னே வாழ்ந்திருந்தவர்களைப் பற்றி வழங்குஞ் செய்திகள் அத்தனையையும் உண்மையானவைகளென்றோ அல்லது வழங்கப் பெறுகின்ற அவ்வளவிலேயே அவர்கள் வரலாறு நிறைவுபெற்றுவிட்டதென்றோ முடிவு கட்டி விடுவது அறிவுடைமையாகாதல்லவா ? இனி வரலாற்றுக் குறிப்புக்களாக எழுதிவைக்கப்பெற்று இப்போது நமக்குக் கிடைப்பவைகள் பலவற்றில் உண்மைகள் மறைக்கப்பெற்றும் திரித்துக் காட்டப்பெற்றும் பொய்மைகள் புகுத்தப்பெற்றும் இருக்கின்றன என்பதை நாணும் வளர்ந்து வருகின்ற வரலாற்று ஆராய்ச்சிக் குறிப்புகளிலிருந்து நாம் தெரிந்து கொள்ள முடிகின்றது.

எனவே ஒருவரது வரலாற்றை அவருக்குப் பின்னே வந்தவர்கள் எழுதிவைத்த வாழ்க்கைக் குறிப்பைப் பார்த்து முடிவு செய்வதை விட அவரது வாய்மொழி கொண்டும் வெளிப்படையாகத் தெரிகின்ற அவரது பெயர், இன்னுங் காணத்தக்கதாக அவரைப் பற்றிக்கிடைக் கிடைக்கின்ற மற்றச் சான்றுகள் ஆகியவற்றை வைத்தும் உண்மையைக் காண முற்படுவது பெரிதும் பொருத்த முடையதாகும்.

இந்த முறையில் திருவள்ளுவரது திருப் பெயர்களைப் பற்றிய சிந்தனை முதலில் நமக்கு வரத்தக்கது. இவருக்குப் பின்னே வந்த ஆசிரியர்கள் இவரைப் பாராட்டிச் சூட்டிய திருப்பெயர்களிற் பத்தைத் திருக்குறட் பதிப்பு ஆசிரியர்கள் எடுத்துக்காட்டியிருக்கிருர்கள். அவைகளில் தேவர் என்ற ஒரு பெயரும், நாயனுர் என்ற ஒரு பெயரும் காணப்பெறுகின்றன. இவ்விரண்டு பெயர்களையும் ஒன்று கூட்டித் திருவள்ளுவர் என்பதோடு சேர்த்துத் திருவள்ளுவ தேவ நாயனுரெனவும் ஒன்று ஒன்றுகக் கூட்டித் திருவள்ளுவ தேவர்-திருவள்ளுவ நாயனுர் எனவும் இவரை வழங்கி வருகின்ருேம்.

திருவள்ளுவர் வேதவுடன்பாடுடையவரே என்பதை, பின்னே அவரது திருவாக்கை வைத்து முடிவு செய்ய இருப்பதால், அந்த அடிப்படையின் மேல் வைதிக ஒழுக்கமுடைய

சமயங்களில் இவர் எதனைச் சார்ந்து ஒழுகியிருத்தல் கூடுமென்னும் வினாவுக்கு இவரது பெயர்கள் நல்ல விடையைத் தந்து தெரிவிக்கின்றன. புறப்புறச் சமயங்கள் ஆறு, புறச் சமயங்கள் ஆறு, அகப்புறச் சமயங்கள் ஆறு, அகச்சமயங்கள் ஆறு, சிந்தாந்த சைவம் ஒன்று ஆகச் சமயங்கள் இருபத்தைந்து எனச் சமய கோடிகளை இவற்றுள் அடக்கி ஆன்றோர்கள் காட்டுவார்கள்.

நான்கு பிரிவுகளில் அவ்வாறுவகையாகப் பேசப் பெறுகின்ற இருபத்து நான்கு சமயங்களுக்கும் தலையாயதாய், அச் சமயங்களிற் காணப்பெறும் சிறப்பு நலங்களைத் தனது பொது நலங்களாகக் கொண்டிருப்பதாய்ப், பிற எந்தச் சமயத்திலும் காணமுடியாத பெரு நலங்களைத் தனக்கேயுரிய சிறப்பு நலங்களாகக் கொண்டதாய் விளங்குவது சித்தாந்த சைவ சமயம். சித்தாந்த சைவத்தில் மக்கள் ஞானம் பெறுதற்குத் தீட்சை இன்றியமையாதது என்று சொல்லப் பெற்றுள்ளது. சிவ தீட்சையில் ஆசாரியரால் மாணவனுக்குத் தீட்சா நாமம் சூட்டப் பெறும். அதில் அந்தணர், அரசர், வணிகர், வேளாளராகிய நான்கு வகையினர்க்கும் நாமத்தோடு சிவன், கணன், குப்தன், தேவன் முதலிய பட்டங்களை புணர்த்திக் கூறுதல் மரபு. அந்த முறையில் சிவ தீட்சை பெற்ற வேளாளர்களுக்குத் தீட்சா நாமத்தோடு தேவர் என்ற பட்டப் பெயரும் சேர்ந்து வழங்கும். இதனைத் திருமூலதேவர் மெய்கண்ட தேவர் முதலிய பெயர் வழக்காறுகளிலிருந்து அறிந்து கொள்ளலாம். இனித் தேவரென்ற, தீட்சையால் வரும் சிறப்புப் பெயர், இயற்பெயரோடும் ஒட்டி வழங்கியிருக்கிறதென்பதை நக்கீர தேவர், கபில தேவர், பரணதேவர், கல்லாட தேவர் முதலிய பெயர் வழக்காறுகள் புலப்படுத்துகின்றன. உலகியலில் மறவர் என்னும் ஒரு குலத்தினர்க்குரிய பட்டப் பெயராக இன்று வழங்கி வரும் தேவர் என்னும் பொதுப் பெயர் சமய நெறியில் தீட்சை பெற்றுக் கொண்ட ஒரு வருணத்தார்க்குரிய பொதுப் பெயராக வழங்கப் பெறுவது என்னும் உண்மையை அறியும் போது திருவள்ளுவ தேவர் "சிவதீட்சை பெற்றுக் கொண்ட ஒரு சித்தாந்த சைவரே என்று துணிந்து சொல்லலாமல்லவா?

வேத உடன்பாடுடைய எல்லாச் சமயங்களிலும் பல பெரியோர்கள் தோன்றி வாழ்ந்திருக்கிறார்கள். அவர்களில் சித்தாந்த சைவப் பெரியோர்கள் மட்டுந்தான் நாயனார் என்ற சிறப்புப் பெயர் கூட்டித் தொன்று தொட்டு அழைக்கப் பெற்று வந்திருக்கிறார்கள். ஏனைச் சமயத்துப் பெரியவர்களிலெவரேனும் ஒருவராவது நாயனார் என்று இதுவரை அழைக்கப் பெற்றாரில்லை என்பதை அனைவரும் அறிவார்கள். நக்கீரராகவும், கல்லாடராகவும் கபிலராகவும், பரணராகவும் சங்க இலக்கியங்களிற் பெயர் பெற்ற புலவர்கள் சிவதீட்சை பெற்றுக் கொண்டு தேவர்களாகிப் பதினொராந் திருமுறை ஆசிரியர்களான பிறகு நாயனார்களாக ஆனார்களென்பது நினைவிலிருத்தத்தக்கதாகும். இந்த முறையிலேயே திருவள்ளுவர் சிவதீட்சை பெற்றுத் திருவள்ளுவதேவராகிச் சமயக் கணக்கர் மதிவழி கூறாது உலகியல் கூறிப் பொருளிது வென்ற திருக்குறள் அருளிய பிறகு திருவள்ளுவ தேவ நாயனாரானாரென்பது வெள்ளிடை மலை.

திரு மயிலாப்பூரில் இன்று நாம் காணத் தக்கதாயிருக்கின்ற திருவள்ளுவர் கோயில், அவர் சமாதி அடைந்த இடத்தில் எழுப்பப் பெற்றது என்பது கர்ண பரம்பரை வரலாறு. இதிற் கருத்து வேற்றுமையுடைய அறிஞரும் இக்காலத்திலில்லாமலில்லை. அது சமாதிக் கோயிலாயினும், அல்லாத வேறு கோயிலாயினும் அங்கே பிரதிட்டை செய்யப் பெற்றுள்ள சிவலிங்கத் திருவுருவத்தைப் பார்த்து அது சிவலிங்கமில்லையென்றோ, அங்கு வழிபட வரும் அன்பர்களுக்குத் தொன்று தொட்டே வழங்கப் பெற்று வருகின்ற திருநீற்றைச் சைவத் தொடர்பற்றதென்றோ, யாரும் சொல்லத் துணிய மாட்டார்கள். திருவள்ளுவர் காலத்தை அடுத்து, ஆனால் நம் காலத்திற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னே எழுப்பப் பெற்ற மயிலைத் திருவள்ளுவர் கோயிலில், "காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய், நீணாக மணிந்தார்க்கு நிகழ் குறியாஞ் சிவலிங்கம்" இருப்பதும், அங்கே திருநீறு

வழங்கப் பெறுவதும், பிறவும் அவரைச் சித்தாந்த சைவரே என்று நன்கு அறிவுறுத்திக் கொண்டிருக்கின்றன.

இனித் திருக்குறளுக்குரியனவாக ஆசிரியர்கள் காட்டிய பெயர்கள் பத்தில் உத்தர வேதம், திருவள்ளுவர், பொதுமறை, தமிழ் மறை என்பன சிந்தனைக்கு எடுத்துக்கொள்ளத் தக்கனவாம். இவற்றுள் திருவள்ளுவர் என்பது தவிர மற்றைய மூன்றும் திருக்குறளை வேதமென்று குறிக்கின்றன. உத்தர வேத மென்பதற்குப் பின்பு தோன்றிய வேதமென்றும், பொதுமறை என்பதற்குப் பொதுவான வேதமென்றும், தமிழ்மறை என்பதற்குத் தமிழிலுள்ள வேதமென்றும் பொருள் காணலாம். இப்பெயர்களெல்லாவற்றையும்கொண்டு பார்க்கும் பொழுது பின் வந்த வேதம் திருக்குறளெனவே முன்வந்த வேதம் ஒன்று உண்டெனவும், பொதுமறை திருக்குறளெனவே சிறப்புமறை ஒன்று உண்டு எனவும், தமிழ் மறை திருக்குறள் எனவே மற்றொரு மொழி மறை உண்டு எனவும் எளிதில் புரிந்து கொள்ளுகிறோம். அந்த முன்னைய வேதம் இருக்கு, யசுர், சாமம், அதர்வண மாகிய வடமொழிச் சிறப்புமறையே என்பது பற்றித் திருவள்ளுவரது திருவாக்கைத் துணைக் கொண்டு பின்பு முடிவு செய்து கொள்ளுவோம். அவ்வடமொழி வேதமே முன்னே தோன்றிய பூர்வ வேதமும் அந்தணர்க்கேயுரிய சிறப்புமறையும் வடமொழி மறையுமாகும். அப்பூர்வ வேதமாகிய நான்மறையைப் பொது நூலென்றும்,அதன் முடிந்த முடிபைச் சொல்லுவதாகிய சிவாகமம் சிறப்பு நூலென்றும்,இவையிரண்டுமே வேதமென்னும் பொதுப் பெயராற் சிற்சில இடங்களில் குறிக்கப்பெற்று முதனூலாகச் சிவபெருமானால் உலகர்க்கும் சத்தி நிபாதர்க்கும் அருளிச் செய்யப் பெற்றன் என்றும் சித்தாந்த நூல்கள் கூறுகின்றன.

உலகியலை வெளிப்படையாகவும், இறையியலைக் குறிப்பாகவும் வேதம் உணர்த்த, முன்னதைக் குறிப்பாகவும் பின்னதை வெளிப்படையாகவும் சிவாகமங்கள் உணர்த்திக் கொண்டிருக்கின்றன. "வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம்" எனவும் "ஒரும் வேதாந்தமென்றுச்சியிற் பழுத்த, ஆரா இன்ப அருங்கனி பிழிந்து, சாரங் கொண்ட சைவ சித்தாந்தம்" எனவும் வருகின்ற ஆன்றோர் திருவாக்குகளை இங்கே நினைவு கூருதல் வேண்டும். வேதசாரம் சிவாகம மாதலால் அவை ஒன்றினொன்று மாறுபாடுடையன வல்ல. ஆனால் வேதத்திற் பருமையாகக் கூறப்பெற்ற பொருள்கள் சிவாகமத்தில் நுண்மையாகவும் அதில் நுண்மையாகக் கூறப் பெற்ற பொருள்கள் இதிற் பருமையாகவும் இருக்கின்றபடியால் உண்மை காணமாட்டாத ஒரு சிலர் தங்களை வேதாந்திகளெனக் கூறிக் கொண்டு சிவாகமத்திற்கு முரண்பேசி ஒழுகுவார்கள். "வேதமோ டாகம மெய்யா மிறைவ னூல், ஓதும் பொதுவுஞ் சிறப்பு மென்றுள்ளன, நாதனுரையிவை நாடில் இரண்டந்தம், பேதமதென்பர் பெரியோர்க்கபேதமே" என்பார் திருமூலர். உலகியலை விரித்துக் கூறி அதில் இறைவனது தடத்த நிலையை வேதம் விளக்குகிறது. அதுபோலவே திருக்குறளும் இருக்கிறதாதலின் இவ் வுண்மையை அறிந்த சான்றோர்கள் திருக்குறளையும் வேதமென்றே வழங்கினார்கள் என்பது அறியத் தக்கதாகும்.

மேற்கண்ட உண்மைகளைத் திருவள்ளுவ மாலையில் வெள்ளிவீதியார் பாடியதாகவுள்ள "செய்யா மொழிக்கும் திருவள்ளுவர் மொழிந்த, பொய்யா மொழிக்கும் பொருளொன்றே— செய்யா, வதற்குரிய ரந்தணரே யாராயினேனை, யிதற்குரியா ரல்லாதாரில்" என்ற வெண்பாவினாலும், கல்லாடத்திலுள்ள "சமயக் கணக்கர் மதிவழி கூருதுலகியல் கூறிப் பொருளிது வென்ற, வள்ளுவர்" என்ற பகுதியினாலும் அறிந்துகொள்ளலாம். "உலகியல் வேதநூல் ஒழுக்க மென்ப தூஉம், நிலவு மெய்ந் நெறி சிவ நெறியதென்பதூஉம்" என்ற சேக்கிழார் பெருமான் திருவாக்கு வேதநூல் உலகியலொழுக்கத்தை அடிப்படையாகக் கொண்டதும், முடிந்த முடிபாகச் சிவநெறி ஒழுக்கத்தை உடையதும் என்பதை அறிவுறுத்துகின்றது.

இருக்காதி வேதங்கள் நான்கிலும் விரித்துக் கூறப்பட்ட பொருள்கள் உபநிடதங்களில் முடித்துக் கூறப்பெற்றன. அதனாலேயே உபநிடதங்களை வேதாந்தமென்றும், வேத சிரசு

என்றும் சொல்லுவார்கள். வேதத்தில் இலை மறை காய்போல் இருக்கும் ஞானப்பொருளைத் தெரிவிப்பன ஐதரேய முதலாகிய நூற்றெட்டு உபநிடதங்களும், சீருத்திர முதலாகிய முப்பத்திரண்டு உபநிடதங்களும் ஆம். இவற்றுள் அதர்வ சிரசு, கைவல்யம், சுவேதாச்சுவரம், காலாக்கினி, சீருத்திரம் என்னும் ஐந்தும் மிக உயர்ந்தனவாகக் கொள்ளப்பெறும். இவ்வுபநிடதப் பொருளைத் தெளிந்தவரே சிவாகம நெறியாகிய சித்தாந்த சைவத்தில் தலைப்படுவர். இதனை "வேதச் சிரப்பொருளை மிகத் தெளிந்தும் சென்றுற் சைவத் திறத்தடைவர்" என்று சிவஞானசித்தியார் உணர்த்துகின்றது. அதனுலே தான் வேதப் பொருளும் உபநிடதப் பொருளும் சிவாகமப் பொருளும் தம்முள் வேற்றுமை யுடையனவல்ல என்று பெரியோர்கள் அபேதம் கண்டார்கள். ஆகவே முடிந்த முடிபாகிய சிவாகமப் பொருளைச் சூக்குமமாகத் தன்னுள் அடக்கிக் கொண்டிருப்பது வேதமெனவும், அதனேடு ஒத்து விளங்குவதாகிய திருக்குறளும் அதுபோலவே சித்தாந்த முடிபுகளைத் தன்னுட் சூக்குமமாக அடக்கிக் கொண்டிருக்கிறதெனவும், அதனுலேயே திருக்குறளுக்கு உத்தர வேதம், பொதுமறை, தமிழ்மறையாதிய பெயர்கள் ஏற்பட்டன எனவும் நாம் அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

இனித் திருக்குறளாசிரியரது பெயர்களுள் ஒன்ருகிய திருவள்ளுவர் என்பதே திருக்குறளுக்குரிய பெயர்களுள் ஒன்ருகவும் வழங்குவதிலிருந்து ஒரு உண்மை வெளியாகின்றது. இதுபோல நூலாசிரியரது பெயர் எவ்விதத் திரிபுமின்றி நூலுக்கும் வழங்கப் பெறுவதை நாம் வேறெங்கும் காணமுடியாது. வடமொழியிலும் தென்மொழியிலும் கருத்தனுற் பெயர் பெற்ற நூல்களில் பாணினீயம் ஐந்திரம், அகத்தியம், தொல்காப்பியம் முதலியவற்றின் பெயர்கள் நூலாசிரியர்களின் பெயர்களிலிருந்து திரிபுடையனவாகவே காணப் பெறுகின்றன. திருக்குறள் ஒன்றே நூலாசிரியர் பெயரில் எவ்விதத் திரிபும் இல்லாதபடி திருவள்ளுவர் என்ற பெயரைப் பெற்று விளங்கிக்கொண்டிருக்கின்றது. இது கொண்டும் திருக்குறள் வேதமே யென நாமறிந்து கொள்ளலாம். வேதத்தைச் சிவபெருமான் அருளிச் செய்தார். அவருக்கு "சுயம்பு" என ஒரு பெயருண்டு. அச்சுயம்பு என்ற பெயரில் எந்தத் திரிபும் இல்லாமல் அப்பெயராலேயே வேதமும் குறிக்கப் பெறும். வடமொழி வேதம் அதன் ஆசிரியர் பெயரை எந்த மாற்றமுமின்றித் தனக்கு உரிமையாக்கிக் கொண்டதுபோலத் தமிழ் வேதமாகிய திருக்குறளும் அதன் ஆசிரியர் பெயரை எவ்வித மாற்றமுமின்றித் தனக்கு உரிமையாக்கிக் கொண்டதென்பது உணரத் தக்கதாகும். நூலுக்குள்ள பெயர்களை அடிப்படையாகக் கொண்டு இது காறுங் கூறியவற்ருல் சித்தாந்த சைவத் திருநெறிக்குப்பிரமாணமாக அமைந்த முதனூல் வேதமென்பதும், அவ்வேதத்தோடு ஒத்த பொருளை யுடையது திருக்குறளென்பதும், அதனை யியற்றிய ஆசிரியர் திருவள்ளுவர் சித்தாந்த சைவரே என்பதும் தெள்ளத் தெளிய விளங்குவனவாம்.

திருவள்ளுவர் பெருமானருளிச் செய்த திருக்குறளிற் சிலவற்றை எடுத்துக் கொண்டு அவற்றில் தத்தஞ் சமயக்கொள்கைகள் காணப்படுகின்றனஎன்று சொல்லித் திருவள்ளுவரைத் தம்மவராக்கிக் கொள்ளப் பலரும் முயன்றிருக்கிருர்கள். ஆனல் சித்தாந்த சைவ சமயத்திற் குறிக்கப்பெறும் பொது ஒழுக்கங்களிற் சில, மற்றைச் சமயங்களிற் கூறப்பெறும் சிறப்பு ஒழுக்கங்களாயிருக்கிற காரணம் பற்றிச் சித்தாந்த சைவத்தைத் தம்முடைய தெனச் சொல்லிக் கொள்ளும் மதவாதிகள் எவரையும் காண முடியவில்லை. "சைவர்கள் பொது வகையால் வேண்டப்படும் இலக்கணங்களை முன்னே வழுவாது தழுவிக்கொண்டே,பின்புத் தங்களுக்குச் சிறப்பு வகையால் வேண்டப்படும் இலக்கணங்களை உடையவர்களாய் ஒழுகல் வேண்டும். பொது விலக்கணங்களாவன:- கொல்லாமை, புலாலுண்ணுமை, கள்ளாமை, பிறர்மனை நயவாமை வரைவின் மகளிர் நயவாமை, இரக்கம், வாய்மை, பொறை, அடக்கம், கொடை, தாய்தந்தை முதலிய பெரியோரை வழிபடுதல் முதலிய நன்மைகளாகும். சிறப்பிலக்கணங்கள் :- நத்திலக்கணம், உடலிலக்கணம், அகத்திலக்கணம் என மூவகைப்படும்." என ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுக நாவலரவர்கள் எழுதி

யிருப்பது கொண்டு சித்தாந்த சைவத்தில் குறிக்கப் பெறும் பொது இலக்கணங்களே மற்றைச் சமயத்தாரின் சிறப்பிலக் கணங்களாக அமைந்திருப்பன வென்பதும் அதனலேயே எல்லாச் சமய உண்மைகளும் சித்தாந்த சைவத்தில் அடங்கும்என்று அறிந்து கொள்ள வேண்டு மென்பதும், விளங்கும். எனவே பிற சமயக் கொள்கைகளின் உண்மையை வைத்துத் திருக்குறளை அவ்வச்சமயங் களின் நூலென்று முடிவு கட்டுவது, யானை பார்த்த குருடர்களின் கதையாகவே வந்து முடியும். ஆதலால் எவ்வெச் சமயக்கொள் கைகள் இந்நூலில் மறுக்கப்பட்டு எந்தச் சமயக் கொள்கைகள் மறுக்கப்படாமல் ஏற்றுக் கொள்ளப் பெற்றிருக்கின்றன வென்பதைக் கண்டு தான் இந் நூலாசிரியரது சமயத்தை முடிவு செய்து கொள்ளுதல் வேண்டும்.

திருக்குறள் ஒரு அறநூல் என்பதில் இது வரை மாறுபட்டவர்கள் எவருமில்லை. திருவள் ளுவர் காலத்திற்கு முன்னே தமிழ் நாட்டில் ஒழுகலாறு இல்லையென்று எவரேனும் சொல்லி விட முடியுமா? திருக்குறளுக்குப் பலநூறு ஆண்டுகளுக்கு முன்னே எழுந்த தொல்காப் பியத்திலும் தமிழ் மக்களின் அறவழி ஒழுக லாறுகள் கூறப்பெற்றுள்ளன. மக்கள் கைக் கொள்ள வேண்டிய அறவொழுக்கங்களை வரம்புபடுத்தித் திருவள்ளுவர் தமிழ்மொழியில் முதல் நூலாகத் திருக்குறளைச் செய்து தந்தார். அவரது நூலில் அவருக்கு முன்னே தோன்றிய நூல்களில் எவையேனும் குறிக்கப் பெற்றுள் ளனவா என்று தேடினேமானல் பூர்வ வேத மும், சிறப்புமறையும், வடமொழி மறையுமாகிய நூலைத்தவிர வேறு நூல்கள் அங்கே காணப் பெறவில்லை. எடுத்துக் காட்டுகளாக, "அத் தணர் நூல், அறுதொழிலோர் நூல், பார்ப் பான் ஒத்து" என்பனவற்றைக் குறிப்பிடலாம். இச்சொற்றொடர்களில் நூல் என்ற பெயரில் திருவள்ளுவரால் போற்றப் பெறுவது வேதம் ஒன்றே யாதலின் அவர் வேத வுடன்பாடுடைய சமயத்தினராதல் பெறப்படும்.

இனி அவ்வேதத்தை உடன்படுவோ ராகவே புறச்சமயத்தாரும், அகச்சமயத்தாரும், அகப்புறச் சமயத்தாரும் நின்று சித்தாந்த சைவத்தை உடன்படாதவராக இருப்பது போலத் திருவள்ளுவரும் இருக்கலாகாதோ வென ஓர் ஐயம் எழலாம். இதனை மற்றைச் சமயத்தார்கள் காணாத பேருண்மைகளாகச் சித்தாந்த சைவம் கூறுகிற சில, திருவள்ளுவர் பெருமானது திருக்குறளில் இருப்பது கண்டு தெளிவு செய்து கொள்ளவேண்டும். கடவுள், உயிர், உலகம் ஆகிய முப்பொருள்களின் உண்மையும், கடவுள் உயிருலகங்களோடு ஒன்ருயும், வேருயும், உடனுயும் இருக்கின்ற தன்மையும், உயிர்களின் பெத்த நிலை முத்தி நிலைகளும், உயிர்களுக்கு வினைப்பயனைச் சேர்க்க இறைவனே கருத்தாவாதலும், முத்தியு மாதிய பேருண்மைகள் சித்தாந்த சைவ நூல் களில் தெளிவு படுத்தப்பெற்று மற்றைச் சமய நூல்களின் சிந்தனைக்கே எட்டாதவைகளா யிருப்பன. அதனேடு அவைகள் அச்சமயங் களால் ஏற்றுக்கொள்ளப் பெருதனவுமாம். அவ்வுண்மைகளைத் திருவள்ளுவர் பெருமான் தமது நூலில் திறம்பட விளக்கி யிருக்கின்றார்.

"பற்றுக பற்றற்ருன் பற்றினை அப் பற்றைப், பற்றுக பற்று விடற்கு" என்னுங் குறளில் பற்றற்ருன் என்பது கடவுளையும், 'பற்றுக' என்பது உயிரையும், 'பற்றுவிடற்கு' என்பதிலுள்ள "பற்று" என்பது உலகத்தை யும் உணர்த்துகின்றன. இக்குறளில் உள்ள சொற்கள் முப்பொருள்களின் உண்மையைக் குறிப்பதோடன்றி அவற்றின் இயல்பையும் உணர்த்தி நிற்கின்றன என்பதை அறிவுடை யோர் உடன்படுவர்.

'அகரமுதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு" என்ற முதற் குறளில் எழுத்துக்களோடு ஒன்ருகவும், வேருகவும் இருந்தியங்குகின்ற அகரத்தை எடுத்துக் காட்டி அதுபோல் ஒன்ருய் வேருய் உடனுய் இறைவன் இருப்பதை வள்ளுவர் பெருமான் நினைவுபடுத்தியுள்ளார். அகரம் மற்றை

உயிரெழுத்துக்களோடு ஒன்றியும், தனித்திருந்து வேருயும், மெய்யெழுத்துக்களோடு உடனுயும் இருந்தியங்குவதைச் சித்தாந்த சைவரையன்றி வேறு எவர் அறியவல்லார்? “ஊனுருடல் புகுந்தான் உயிர் கலந்தான்” என்ற மணிவாசகம் இங்கே நினைவுகூர்தற்குரியது.


உயிர்களின் பிறந்து, இறந்து உழலுகின்றதாகிய பெத்தநிலையை “புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள் துச்சில் இருந்த உயிர்க்கு” என்ற குறளினுலும் அவை அடையும் மீண்டுவாராப் பெருநெறியாகிய முத்தி நிலையை “ஆரா இயற்கை அவா நீப்பின் அந்நிலையே, பேரா இயற்கை தரும்” என்ற குறளினுலும் ஆசிரியர் திருவள்ளுவனுர் அறிவுறுத்துகின்ருர்.

“வகுத்தான் வகுத்த வகையல்லாற்கோடி தொகுத்தார்க்கும் துய்த்த லரிது” என்னுங் குறளில் உயிர்கள் வினைகளைச் செய்யும் இயல்புடையன என்பதும், அதற்குப் பயனுக அவ்வுயிர்களுக்கு இன்ப துன்ப அநுபவங்கள் உண்டென்பதும், அவ்வனுபவங்கள் இறைவனுலேயே ஊட்டப் பெறுகின்றன வென்பதும் உணர்த்தப் பெற்றன.

முத்திகளில் முடிந்ததாகிய சுத்தாத்துவித முத்தியை “அடிசேர் முத்தி” என்று சிந்தாந்த சைவ நூல்கள் கூறும். இதனையே கடவுள் வாழ்த்தில் உள்ள ஏழு குறள்களில் ஆசிரியர் வலியுறுத்திக் கூறியுள்ளார். கடவுள் ஒருவர்; உயிர்கள் எண்ணிலாதன; என்னும் சிந்தாந்த உண்மையைக் கடவுள் வாழ்த்தில் இறைவன் ஒருமையிலும், உயிர்கள் பன்மையிலும் குறிக்கப்பெற்றிருப்பதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். இவை போலப் பல சித்தாந்தக் கருத்துக்களைத் தமது நூலில் தெளிவுபடுத்தி எல்லாச் சமயங்களுக்குமுரிய பொது ஒழுக்கங்களை உரைத்ததனுல் அவ்வெல்லாச் சமயத்தவரும் தத்தம் சமயத்தைச் சார்ந்தவரே என்று வாதிட அவர்களில் ஒருவராய், அச்சமயங்கள் எல்லாவற்றினும் மேம்பட்ட சித்தாந்த சைவத்தைத் தம்முடையதாகக் கொண்டு அவர்களின் மேம்பட்டவராய்த் திருவள்ளுவர் பெருமான் விளங்கிக் கொண்டிருக்கிருர்.

திருக்குறளாகிய வானமுதப் பெருங்கடலின் ஆழங்கண்டு குளித்து அங்கேயுள்ள சித்தாந்த சைவப் பேருண்மைகளாகிய நன்முத்துக்களை எடுத்துப் பயன் படுத்திக் கொள்ள வேண்டியது அறிஞர் பெருமக்களது கடமை என்பதை நினைவூட்டி அமைகின்றேன்.

நலம் பெருகுக.



நாங்கூழ்ப் புழுவும் நாவுக்கரசும்

(பேராசிரியர், கோ. சுப்பிரமணியம், எம். ஏ., பி. எல்.)
அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.

“ ஒகோ! நாங்கூழ்ப் புழுவே! உன்பாடு
ஓவாப் பாடே உணர்வேன், உணர்வேன்.
உழைப்போர் உழைப்பில் உழுவோர் தொழில்மிகும்
உழுவோர்க் கெல்லாம் விழுமிய வேந்துநீ
எம்மண் ணுயினும் நன்மண் ணுக்குவை
விடுத்தனை யிதற்கா எடுத்தஉன் யாக்கை
உழுதுழுது உண்டுமண், மெழுகினும் நேரிய
விழுமிய சேருய் வேதித் துருட்டி
வெளிக்கொணர்ந்தும், புகழ் வேண்டார் போல,
ஒளிக்குவை உன்குழி வாயும் ஓர் உண்டையால்
இப்புற் பயிர்நீ யிங்ஙனம் உழாயேல்
எப்படி யுண்டாம்? எண்ணு துனக்குங்
குறும்புசெய் யெறும்புங் கோடி கோடியாய்
புழுக்களும் பூச்சியும் பிழைக்குமா றென்னை?
ஒழுக்கமும் பொறையும் உனைப்போ லியார்க்குள?
விழுப்புகழ் வேண்டலை அறிவோம் ஏனிது?
துதிக்கலம், உன்தொழில் நடத்துதி” ஆ! ஆ!

— (மனேன்மணியம்)

இவ்வாறு பேராசிரியர் சுந்தரம்பிள்ளை புழுவின் புகழினைச் சிறப்பித்துப் பாடினர். புழு இயற்கையின் உழவாளி. நல்ல பாட்டாளியும் கூட. அது உழுது உழுது மண்ணைக் கிண்டித் துளைத்துப் பண்படுத்தினலொழியப் பயிர் பச்சைகள் நிலத்தில் உண்டாகா. பயிருக்கு வேண்டிய சத்து மண்ணெல்லாம் புழுவினு டைய குடலுக்குள் போய்ப் போய் உரம்பெற்று வெளிவருகின்றது. புழுவினுடைய உதவியால் தான் மண்ணிலுள்ள தாதுப் பொருள்கள் பயிர்களுக்கு வேண்டிய உணவுச் சத்துக்க ளாய்ப் புழுவின் உடலிலிருந்து வெளிவருகின் றன. அழிந்து கெடுகின்ற தாவரப் பொருள் களைச் செரிக்க வைத்துப் பதமாக்கி மீண்டும் பயிர்களுக்கு உதவும் உணவுப் பண்டமாய்ப் பக்குவப்படுத்திக் கொடுப்பன புழுக்களே யாகும். புழுக்கள் நிலமகளின் வயிற்றுக்குடல் என்று அரிஸ்டாட்டில் கூறியுள்ளார். உலகி லுள்ள தாவரப்பொருள்கள்யாவும் புழுக்களின் குடல்களில் நுழைந்து நுழைந்து வெளிவந்து மீண்டும் நுழைவனவேயாகும் என்று டார்வின் எழுதியுள்ளார். ஓர் ஏக்கர் பயிர் நிலத்தில் 1,750,000 புழுக்கள்வரை காணப்படும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

ஒரு புழுவை எடுத்துப்பார்த்தால், அதன் தலைமுதல் வால் வரையில் நூற்றுக் கணக் கான வளையங்கள் சங்கிலித் தொடர்போல் பிணைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அதற் குக் காதோ மூக்கோ கண்ணுே கிடையாது. மண்ணைக் குடைந்து ஊடுருவித் துளைப்ப தற்கு இயன்றவாறுஉடலுறுதியும்,வழவழப்பும், நெகிழ்வும் கொண்டுள்ளது. அது தன் உடற் பளுவுக்கு அறுபது மடங்கு பளுவுள்ள கல்லை

யும் புரட்டும் வலிமை பெற்றுள்ளது. கபந்தனைப் போன்று உடல் பூராவும் அதற்கு வயிறுதான். உணவைத் தேடித் தேடி உண்டு உண்டு வெளியில் தள்ளுவது தான் அதன் ஓயாத வேலை. ஒருவித வழவழப்பான கோழை அதன் உடலின் புறத்தே ஊறிக்கொண்டிருக்கும். அவ்வாறு அதன் உடல் வழுவழுவென்றிருப்பதால், அது எந்த மண்ணினுள்ளும் எளிதாக நுழைந்து விடும். அதன் மேனியில் நுண்ணிய சிலாம்புகளும் உள்ளன. அதை இரண்டாக வெட்டினாலும், வெட்டிய பகுதியில் வாலை வளர்த்துக் கொண்டு அது உயிர்வாழ்ந்திருக்கும். அது நினைத்தபடி உடலை நீட்டியும் சுருக்கியும் வைத்துக்கொள்ளும். அது தரை மட்டத்திற்கு நான்கு அடி ஆழம் வரையில் சென்று வாழும். குளிர் மழைக் காலங்களில் இன்னும் ஆழமாகச் செல்லும். கண்ணில்லாவிட்டாலும் ஒளி யுணர்ச்சி அதற்கு உண்டு. இரவில் வெளியே வந்து உணவைத் தேடிக் கொண்டு, பகலில் மண்ணினுள்ளே சென்று விடும்.

வாலை நன்றாக ஊன்றவைத்து, அது உடம்பை நீட்டி நெளித்து நிமிர்ந்தெழுந்து மனவூக்கத்துடனே உழைக்கத் தொடங்கும். புழுக்களில் பலவிதம் உண்டு. அவை நான்கு அடி நீட்டம் வரையிற் காணப்படும். காய்ந்து வறண்டு சூடான இடங்களில் அவை காணப்படமாட்டா. வெயிலில் புழுவானது துடியாகத் துடித்து மாய்ந்து விடும். அதன் உடம்பில் எலும்பு இல்லாத காரணத்தால் வெயிலின் வெப்பத்தைத் தாங்கும் ஆற்றல் அதற்கு இல்லை. எலும்பில்லாத புழு வெயிலில் துடிப்பது கண்டு வள்ளுவரும் வருந்திப் பாடினார் :—

"என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம்."

இங்கு திருவள்ளுவர் நாங்கூழ்ப் புழுவை 'என்பு இல் அது' (எலும்பில்லாதது) என்று பெயரிட்டழைப்பது நோக்கத் தகும்.

ஆண் பெண் தத்துவம் இரண்டும் ஒரு புழுவின் உடம்பிலே காணப்படுகின்றன. இரண்டு புழுக்கள் ஒன்றாய்க் கூடுவதும் உண்டு. அது ஒரு வேளைக்கு இருபது முட்டைகள் வரை இடும். அவை ஒரு மூட்டையாக வெளியே வரும். பத்து நாட்களில் முட்டை பொறித்துப் புழுக்குட்டிகள் வெளி வரும். ஓயாமல் உழைத்து உழைத்து மண்ணை இழைத்து இழைத்து வளப்படுத்துவதுதான் புழுவின் வேலை. உலகத்தின் உயிர்களுக்கெல்லாம் உணவளிக்கும் பாட்டாளி இந்த நாங்கூழ்ப்புழு என்று சொன்னால் அது மிகையாகாது. மண்ணைச் சீராக்கிப் பதப்படுத்தும் நுணுக்கத்தொழிலை ஆண்டவன் இரகசியமாய் இந்தப் புழுக்களுக்கு அளித்திருக்கிறான். இப்புழுக்கள் தனக்குச் செய்துவரும் நற்பணியை நன்கு உணர்ந்து மனிதன் மட்டும் அவற்றைப் போற்றி வளர்த்தான் ஆயின், உலகம் வளமும் உரமும் பெற்று மேலும் பன்மடங்கு செழித்து வளரும் என்பதில் ஐயமில்லை. விஞ்ஞானத்தில் மேற்பட்ட மேல் நாட்டு மக்கள் இப்புழுக்களைத் திரளாக வளர்த்துப் பாழ்நிலங்களையும் பசும் பயிர்ப் பண்ணைகளாக மாற்றிவருகின்றனர். கடவுள் படைத்த படைப்பிலே மிகமிகக் கீழானது இந்தப் புழு. ஆனால் அது செய்யும் காரியமோ அற்புதமாய், மிகப்பயனுடையதாய், எல்லார்க்கும் எல்லா நலமும் உண்டாக்குவதாய் இருக்கிறது. அங்ஙனமாயின், கடவுள் படைப்பிலே மிக உயர்ந்த நிலையைப் பெற்றிருக்கும் மனிதன் அப்புழுவைவிடச் சிறப்பாக எவ்வளவு நல்ல பணிகளை ஆற்ற வேண்டியவனாய் இருக்கிறான் ?

புழுவையும் மனிதனையும் ஒப்பிட்டுப் பார்க்கிறார் அப்பர் அடிகள். புழுவுக்கும் மனிதனுக்கும் பொதுவாக நான்கு குணங்கள் உள்ளன. அவற்றுள், முதலாவது, உயிர் வாழ்தல். மனிதன் எவ்வாறு தன் உயிரை அருமையாகப் பாதுகாக்க முயல்கிறானோ அது போலவே, புழுவும் தன் உயிரைப் பாதுகாக்க முயல்கிறது. இரவின் இருட்டிலே வெளியில் ஊர்ந்து திரிவதும், பகல் ஒளியிலே

மண்ணிற்குள் பதுங்கி ஒளிந்து கொள்வதும் எது ஒன்று தன்னைத் தடைப்படுத்தினாலும் தலையைத் தூக்கி நிமிர்ந்து நெளிவதும், மறைவிடம் தேடுவதும் முதலிய செயல்கள் தன் உயிரைக் காத்துக் கொள்ள அது துடிக்கும் துடிப்பேயாகும்.

இரண்டாவது குணம், இயங்குதல். ஓரிடம் விட்டு ஓரிடம் பெயர்தல் மனிதனுக்கும் புழுவுக்கும் உள்ள இயல்பான குணம். ஓரிடத்திலேயே அசைவற்று, மரங்கள் மலைகளைப் போல இருக்கும் நிலை மனிதனுக்கு இல்லை. அது போலவே புழுவும் இடைவிடாமல் நெளிந்து நெளிந்து சலியாமல் உழைக்கிறது. மனிதன் நடப்பது, ஓடுவது, பறப்பது, கிரகம் விட்டுக் கிரகம் பெயர முயல்வது எல்லாம் இந்த இயங்குதல் ஆகிய குணத்துள் அடங்கும்.

மூன்றாவது குணம், உண்ணுதல். பசி நோயாலே மனிதன் பதங் குலைகிறான். ஆக்கைக்கே இரைதேடி அலமந்து போகிறான். சாணும் வளர்க்க மனிதன் படும்பாடு சற்றல்ல. அறுசுவையுண்டியை ஆயிரம் விதமாய் அமைத்து அருந்துவதுயாவும் இக்குணத்துள் அமையும். மனிதன் சாப்பிடுகிறான், புழுவும் சாப்பிடுகின்றது. இம்மண்ணுலகத்தில் பாதிக்குக் குறையாமல் அது தன் வயிற்றில் அடக்கி வெளிப்படுத்தியிருக்கிறது என்பதை எண்ணும் பொழுது, அது அரைத்திருமால் ஆகிவிட்டது என்றே சொல்லலாம்.

நான்காவது குணம், இனத்தைப் பெருக்குதல். மனிதனும் மங்கையை மணந்து மக்களைப் பெற்று மகிழ்கிறான். மங்கல மனைமாட்சியின் நன்கலம் மக்கட்பேறே என்று அதை வாழ்க்கையின் இன்ப முடிவாகக் கொள்கிறான். புழுக்களும், பெட்டையும் ஆணுமாய்க் கூடி மகிழ்ந்து, முட்டைகள் இட்டுக் குட்டிகள் பொறித்து, மேலும் தங்கள் இனத்தைப் பெருக்குகின்றன.

இவை நான்கும் புழுவுக்கும் மனிதனுக்கும் இயல்பாகவே அமைந்துள்ள குணங்கள். மனிதனுக்கும் புழுவுக்கும் ஆக்கை, அறிவு, ஆற்றல் எனும் இவற்றுக்கு இயைய இந்த நான்கு குணங்களும் வெவ்வேறு விதமாய் அளவில் மாறுபட்டுக் காணப்படுமே யன்றிக் குணவகையில் பொதுவாக மாறுபாடுஇல்லை. இவையெல்லாம் நல்ல குணங்கள். மனிதன் தோன்றிய நாள் முதல் இன்றுவரையில் இந்த நான்கு குணங்களையே கொண்டு விளங்கி வந்திருக்கிறான். கற்காலத்து வாழ்ந்த கரடுமுரடான மனிதனிடத்தும் இந்த நான்கு குணங்கள் இருந்தன. தற்காலத்து வாழும் இருபதாம் நூற்றாண்டின் நாகரிக மனிதனிடத்தும் இவையே உள்ளன. புழுவுக்கும் அப்படியே.

ஆனால் புழுவினுக்கு இல்லாத கெட்ட குணங்கள் எல்லாம் மனிதனிடத்தில் நிறைய உள்ளன. அவன் உண்மையை மறைத்துப் பொய் பேசுகிறான், களவாடுகிறான், பொறாமை கொள்கிறான், புறங் கூறிப் பொய்த்துயிர் வாழ்கிறான், பிற உயிர்களை வதைக்கிறான், கொலை புரிகிறான், வஞ்சகமாய் வாழ்கிறான். பிறரை வாழவிடாது தான் மட்டும் வாழ நினைக்கிறான். தன்னைவிடப் பெரியவர்கள் இல்லையென்று இறுமாக்கிறான். கூட்டங் கூட்டமாய் உயிரினத்தை அழிக்கவல்ல படைக்கருவிகளைத் திரட்டிக் குவிக்கிறான். மனிதனை மனிதன் அச்சுறுத்தி அடிமையாக்குகிறான், வன்பும் துன்பும் செய்து வாட்டுகிறான். மதுவருந்தி மதி மயங்குகிறான். கடவுளும் காதலும் கற்பும் கற்பனை என்று கதைக்கிறான். கணவன் மனைவியைக் கலங்கச் செய்கிறான். மனைவி கணவனை மறந்து மறைகிறாள். தாயைத் துறந்து பிள்ளை தறுதலையாகிறான். உழைக்காமலே சோம்பித் திரிந்து ஊதியத்தை எதிர் பார்க்கிறான். பொதுமையின் பெயரால் உரிமையைப் பறிக்கிறான். இகழ்ச்சியில் இறங்கிப் புகழ்ச்சியைப் புதைக்கிறான். ஏமாற்றுகிறான், ஏமாறவும் செய்கிறான். நடலை வாழ்வு கொண்டு உடலைப்

பேணுகிருன். மெய்போல் நடித்துப் பொய்யே புனைகிருன். தீங்கே புரிந்து ஏங்கிச் சாகிருன். கடமையை மறந்து காலியாய் உழல்கிருன். அவன் எண்ணுவது வேறு, பேசுவது வேறு, செய்வதோ அவற்றினும் வேறு. தானும் வாழ மாட்டான், பிறரையும் வாழவிட மாட்டான். இவ்வாறு நல்ல உலகை நரக மாக்குகிருன் மனிதன். இவையெல்லாம் நாகரிகத்தின் பெயரால் நடந்து வரும் முன்னேற்றங்கள். இவை மனிதனுக்கு என்று ஏற்பட்ட, தனியுரிமை பெற்ற தீய குணங்கள். இவற்றை விரித்துக் கூறத் திருநாவுக்கரசருக்கு நாவெழவில்லை. இவைபோன்ற எல்லாத் தீக்குணங்களையும் 'பொல்லாங்கு' என்ற ஒரு சொல்லிலே அடக்கிக் கூறுகிருர். இந்தப் பொல்லாங்கு புழுவினிடம் இல்லை. அதற்கு உரிய நல்ல குணங்கள் யாவும் மனிதனிடம் உள்ளன. ஆனல் மனிதனுக்கு உரிய பொல்லாங்குக் குணம் புழுவுக்கு இல்லை. இதனுல் புழு மனிதனை விட எவ்வளவு நல்லது என்று தெரிகிறதல்லவா? மனிதன் புழுவை விடவும் கீழ்ப்பட்டவனு? கடவுள் படைப்பிலே மிகக் கீழான புழுவைக் காட்டிலும் இழிநிலையடைந்து கிடக்கும் மனிதனு தன்னை மிக உயர்ந்த படைப்பாகக் கருதி மண்ணிலே பெருமித நடைபோடுகிருன்?

கேவலம் ஒரு புழுவினிடத்திலே கூடக் காணப்படாத இந்தப்பொல்லாங்கைச் சுமந்து கொண்டு மாட்சி மிகும் மனிதன் திரியலாமா? இந்தப் பொல்லாங்காகிய மாசினைப் போக்கித் தூய்மையடைந்து, நல்லோரின் இணக்கம் பெற்று, அன்பையே புரிந்து, இன்பையே விழைந்து, அருள்வழி ஒழுக வேண்டியது மனிதனின் கடமை. இதை அவன் கைவிட்டு, விலங்கினுங் கேடாய், கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று வறிதே காலம் போக்கினல், இறைவன்அடியாரின் திருக் கூட்டத்தை எவ்வாறு சார முடியும்? அப்பர் வருந்திப் பாடுகிருர் பாருங்கள் :-

"புழுவுக் குங்குணம் நான்கெனக்
கும்மதே
புழுவுக் கிங்கெனக் குள்ள பொல்
லாங்கில்லை
புழுவி னுங்கடை யேன்புனி தன்தமர்
குழுவுக் கெவ்விடத் தேன்சென்று
கூடவே."

உலக மக்களிடைக் கண்ட பொல்லாங்கைத் தமக்குள்ளதாக வைத்து அப்பர் இங்ஙனம் பாடினர்.

இந்தப் பொல்லாங்கு இருக்கும் வரை இறையுணர்வு பெற்றுப் பிறவிப் பிணியைப் போக்க முடியாது. பிறவி போகாதவரை, மனிதன் எழுவகைப் பிறப்பினுள்ளும் மாறி மாறிப் புகுந்து உழல வேண்டி வரும். எத்தகைய பிறப்பு வாய்ப்பினும் இறைவனை ஒரு பொழுதும் மறத்தல் கூடாது. ஒரு வேளை புழுவாகப் பிறக்கநேர்ந்தாலும் நேரும். அப்பிறவியினும் ஆண்டவன் திருவடியைத் தாம் மறந்துவிடக் கூடாதே என்று அப்பர் வருந்தினர். "நான், புழுவாய்ப் பிறந்தாலும், ஆண்டவனே! உன் திருவடியை என் நெஞ்சிடமாக வைத்து நான் வழிபடுவேன். நான் நழுவினும் உன் திருவடி வழுவி விடக் கூடாது. இந்த ஒரு வரமும் நீ எனக்குத் தந்து காப்பாற்ற வேண்டும்!" என்று அவர் கரைந்துருகிக் கசிவதைக் காணுங்கள்:-

"புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா
வுன்னடி என்மனத்தே
வழுவா திருக்க வரந்தர வேண்டுமிவ்
வையகத்தே
தொழுவார்க் கிரங்கி யிருந்தருள்
செய்பா திரிப்புலியூர்ச்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடை
மேல் வைத்த தீவண்ணனே"

ஒரு புழுவின் மனதிலிருந்து கூட இறைவன் திருவடி வழுவாதிருக்க வேண்டுமானல், மனிதன் மனத்திலிருந்து அதை நழுவவிடக் கூடாது என்பது நன்கு விளங்கும் அல்லவா?

பொங்கல் விழா

வித்துவான் திரு. மு. அருணசலம் பிள்ளை
தமிழ்ப் பேராசிரியர், (ரீடர்) அண்ணமலைப் பல்கலைக் கழகம்.

மக்கள் பலர் ஒருங்குகூடி மகிழ்ந்து செய்யும் செயல்களெல்லாம் விழா என்று கூறப்பெறும். விழாக்கள் பண்டைக் காலந்தொட்டு நம் தமிழகத்தில் நடைபெற்று வருகின்றன. அவற்றைப் பெருநாள் திருநாள் மங்கலநாள் என வழங்குதலும் உண்டு. அவ்விழாக்கள் எல்லாம் நாடாளும் அரசர் சார்பாகவும், கடவுளரோடு தொடர்பு கொண்டும், ஒவ்வொரு குடும்ப நிகழ்ச்சிகள் குறித்தும், இயற்கையாக நிகழும் பருவநிலைகளை ஒட்டியும் பெரும்பாலும் நிகழ்வனவாம்.

அரசர் விழாக்கள்

அவற்றுள், அரசர் சார்பாக நிகழ்வன அவர்கள் பிறந்தநாள் விழா, முடி சூடிய நாள் விழா, பகைவென்று திறைகொண்டு வரும் வெற்றிவிழா முதலாகப் பலவகைப்படும். அரசர் பிறந்தநாள் விழாவினைச் "சிறந்த நாளணி செற்றம் நீக்கிப், பிறந்த நாள்வயிற் பெருமங்கலம்" என்பர் தொல்காப்பியர். அந்நாளில் அரசர்கள், சிறைவிடுதலும் செருவொழிதலும் இறைதவிர்தலும் வறியோர்க்கு வேண்டுவன வழங்குதலும் செய்வர். அன்று மங்கல வண்ணமாகிய வெள்ளாடை முதலியன அணிந்து எவ்வுயிர்க்கும் அருள் செய்தலால் அது வெள்ளணி நாள் என்றுங் கூறப்பெறும். அரசர் முடிபுனைந்தநாள் விழாவினைச் "சிறந்த சீர்த்தி மண்ணு மங்கலம்" என்பர். முடிபுனையு நாளிற் சிறந்த நீராட்டு நடைபெறுமாதலின் அது 'மண்ணு மங்கலம்' என்று கூறப்பெறது. வெற்றிவிழாவும் சிறப்பாகக் கொண்டாடப் பெற்ற செய்தியைக் கலித்தொகையிற் காணலாம். இக்காலத்திற் கொண்டாடிவரும் உரிமை பெற்ற நாள் விழா, குடியரசு நாள் விழா முதலியன இப்பகுதியில் அடங்கும்.

கடவுளர் விழாக்கள்

கடவுளரோடு தொடர்புடையனவாக மதுரையில் ஆவணியவிட்டமும், உறையூரில் பங்குனியுத்தரமும், கருவூரில் உள்ளி விழாவும், காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திர விழாவும் நடைபெற்றன. தமிழ்வேந்தர் மூவருடைய தலைநகரங்களிற் கொண்டாடப்பெற்ற இவ்விழாக்கள் மிகச் சிறப்புடன் நடைபெற்றிருக்குமென்பதில் ஐயமில்லை. ஐப்பசி ஓணவிழா, கார்த்திகை விளக்கீடு, ஆதிரைநாள்விழா, செவ்வேள் விழா, ஏழுநாள் விழா முதலான பல விழாக்கள் சங்க இலக்கியங்களிற் பேசப்படுகின்றன. பெருநகரங்களில் அடுத்தடுத்துப் பல திருவிழாக்கள் நடைபெற்றமையால் 'விழவு வீற்றிருந்த வியலுள் ஆங்கண்' என நகரமும், 'விழவுஅருவியல் ஆவணம்' என வீதிகளும் பாராட்டப்பெற்றன.

இந்திர விழாவென்பது ஆண்டுதோறும் இருபத்தெட்டு நாட்கள் காவிரிப்பூம்பட்டினத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றதோர் பெருவிழாவாகும். சிலப்பதிகாரம் மணிமேகலையாகிய தமிழ்க் காப்பியங்கள் இரண்டிலும் இவ்விழா நிகழ்ச்சிகள் விரிவாகக் கூறப்பெற்றுள்ளன. அக்காப்பியங்கள் இரண்டிற்கும் அடிப்படையாயமைந்தது இவ்விந்திரவிழாவேயெனலாம். சிலப்பதிகாரத்தில், இந்திரவிழா முடிவிற் கடல்நீராடச் சென்றவிடத்து மாதவி பாடிய வரிப்பாட்டால் மனம் மாறுபட்ட கோவலன் அம்மங்கைநல்லாளை விட்டுப் பிரிந்து கற்பரசியாகிய கண்ணகிதேவியுடன் கூடி மதுரை நோக்கிப் புறப்பட்டான். அது முதல் அவ்விருவர் வாழ்விலும், அவர்களைச் சார்ந்தோரிடத்திலும், தமிழ் மண்டலங்கள் முதலான பிறநாடுகளிலும் எதிர்பாராத பல

விளைவுகள் நேர்ந்தன. அவற்றையெல்லாம் உள்ளடக்கியே " மாதவி பாடிய கானற் பாணி, கனகவிசயர்தம் முடித்தலை நெரித்தது " எனச் சுருக்கமாகவும் அழகாகவும் இளங்கோவடிகள் கூறியுள்ளனர்.

மணிமேகலையின் வரலாறு இந்திரவிழா விலிருந்தே தொடங்குகிறது. இவ்விருபெருங் காப்பிய நிகழ்ச்சிகளுக்கும் இடனுயிருந்த இந்திரவிழா இப்போது நூலளவில் அமைவ தாயிற்று. இவ் விழாவே மார்கழித் திங்கள் இறுதி நாளில் போகிப் (இந்திரன்) பண்டிகை யென்னும் பெயரால் ஆரவாரமின்றி உண்டு களிக்குமளவில் ஒரு சிலராற் கொண்டாடப் படுகின்றது போலும் என எண்ண இடமிருக் கிறது. எனவே, நாடு வளங்கூர நன் மழை பொழிந்த மேகங்களுக்குத் தலைவனை இந்தி ரனைக் குறித்துச் செய்து வந்த இப் பெருவிழா வினை மக்கள் இன்று மறந்துவிட்டனர் என்றே கூறலாம். ஐப்பசி ஓணவிழா ஆவணித் திரு வோணத்தில் மலையாளத்தாரால் மட்டும் கொண்டாடப் பெறுகின்றது. கடவுளர் சார் பான விழாக்களில் இன்றும் நடைபெறுவன சில. மாறுதலடைந்தனவும், மறைந்தனவும் பலவாகும். மூத்தபிள்ளையார் நோன்பு, கலை மகள் விழா, சீராம நவமி, கண்ணன் பிறந்த நாள் விழா, நாயன்மார்கள் ஆழ்வார்கள்விழா முதலியன இப் பிரிவில் அடங்கும்.

குடும்ப விழாக்கள்

ஒவ்வொரு குடும்பத்திலும் நிகழும் திரு மணம், மகப்பேறு, அம்மகவிற்குப் பெயரிடு தல், மயிர்களைதல், காதணிபுனைதல், கல்வி பயில்வித்தல் ஆதியவெல்லாம் விழாவாகக் கொண்டாடப் பெறுகின்றன. அவ்விழாக் களெல்லாவற்றிற்கும் காரணமாயிருப்பவள் மனையாளாதலின் அவளை ' விழவு முதலாட்டி ' எனக் கூறினர் நம் முன்னையோர். "யாயா கியளே விழவு முதலாட்டி " (குறுந்–10)என்றல் காண்க.

இயற்கை விழா

இயற்கையாக நிகழும் பருவ நிலைகளை யொட்டி நடைபெறும் விழாக்களுட் சிறந்தது பொங்கல் விழாவாகும். இது, தைத்திங்கள் முதல்நாளில் நாடு முழுதும் இக்காலத்திற் கொண்டாடப் பெறுகின்றது.மக்கள் வீடுகளைத் தீற்றியும் திருத்தியும் புதுக்குகின்றனர். புத் தாடையுடுக்கின்றனர். புதிதாக விளைந்து வந்த செந்நெல் அரிசியும் கன்னற்கட்டியும் சிறுபருப்பும் நறுநெய்யும் தீம்பாலும் பிறவும் சேர்த்துப் பொங்கல் செய்கின்றனர். ஞாயிற்று மண் டிலத்திற்குப் படைத்துப் பிறர்க்கும் வழங் கித் தாமும் உண்டுகளிக்கின்றனர். இவற்றை நோக்கும்போது புதிதாகக்கிடைத்த அரிசியைப் பொங்கல் செய்து உண்பதே பொங்கல்விழா என்ற எண்ணம் நமக்கு உண்டாகின்றது. மேலும், இப்பொங்கல் விழா, உழவர் திருநாள் தமிழர்திருநாள், தமிழ்த்திருநாள் எனப் பல பெயர்களிட்டுச் சில பல ஆண்டுகளாகக் கொண்டாடப்பட்டு வருதலையும் காண்கின் றோம். எனவே, இவ்விழா நெடுங்காலமாக இந்நாட்டில் நடைபெற்றுவரும் ஒரு பெருவிழா என்ற நினைவும் உண்டாகின்றது. ஆயினும், பொங்கல் என்னும் இத்தூய தமிழ்ச் சொல் சங்க இலக்கியங்களில் எடுத்தாளப் பெற்றுள் ளதா? உள்ளதாயின் எப்பொருளில் எடுத் தாளப் பெற்றுள்ளது? இப் பொங்கல்விழா பண்டைத் தமிழகத்திற் கொண்டாடப் பெற் றதா?' என ஆராய்ந்து உண்மை காண முயலு தல் நன்ருகும். இக்கட்டுரையின் நோக்கமும் அதுவேயாம். பொங்கல் என்பது முன்பனிப் பருவத்தின் இடைக்காலத்தில் தோன்றும் இயற்கையையொட்டி நிகழ்வதொன்று. அஃது இன்னதென அறிய வேண்டுமாயின் அதற்கு முன்னுள்ள பருவங்களையும் அவற்றின் இயல்பு களையும் ஓரளவு தெரிந்துகொள்ளுதல் இன் றியமையாததாகும்.

ஆறுபருவங்கள்

காலம் என்பது எல்லையின்றி விரிந்து பரந்து நிற்பதோர் அருவப் பொருளாயினும்

அக்காலத்தின் வயப்பட்டு ஒழுகும் மக்கள் தங்கள் வாழ்க்கையை வளமுற நடத்துதற் பொருட்டு இயற்கையிற் காணப்படும் ஞாயிறு திங்கள் நாண்மீன் முதலியவற்றின் இயக்கங்களைக் கருவியாகக் கொண்டு, கண்ணிமைப் பொழுதினும் நுண்ணிய பல காலக் கூறுகளையும், நாழிகை நாள் திங்கள் யாண்டு ஊழி யென எண்ணப்படும் மிகப் பெரிய காலக்கூறுகளையும் வரையறுத்துக் கொண்டனர். அவற்றுள் ஞாயிறு தனக்குரிய சிங்க வோரை முதல் திங்களுக்குரிய கடகவோரை யீறுகவுள்ள பன்னிரண்டு ஓரைகளிலும் இயங்கிவரும் கால எல்லையை ஓராண்டு என்றனர். ஓராண்டின் உட்பிரிவாகிய பெரும் பொழுதுகளையும், ஒரு நாளின் உட்பிரிவாகிய சிறு பொழுதுகளையும் ஐந்திணைகளுக்கும் உரிமைப்படுத்துக்கூறவந்த ஆசிரியர் தொல்காப்பியர் "காரும் மாலையும் முல்லை" எனவும், அதற்கு முன்னும், பின்னும் முறையே "மாயோன் மேய காடுறையுலகம்" "முல்லை முதலாச் சொல்லிய முறை" எனவும் கார்காலத்தையும் முல்லைத் திணையையும் முதலிற் கூறியிருத்தலால் கார்காலத்தின் தொடக்கமாகிய ஆவணித்திங்களே ஆண்டின் தொடக்கம் எனக் கொள்ளுதல் பொருந்தும். தென்பாண்டி நாட்டிலும் திருவனந்தபுரத்தைச் சேர்ந்த பகுதிகளிலும் ஆவணி முதல் ஆடியீறுக ஓராண்டு கணக்கிடப் பெற்றுவருதலும் ஈண்டுக்கருதத்தக்கது.

ஆவணிமுதலாகக்கொண்ட ஓராண்டுக் காலம் மழைக்காலம் பனிக்காலம் வெயிற்காலம் என ஒவ்வொன்றும் நந்நான்கு திங்களைக் கொண்ட மூன்று பருவங்களாக முன்பு பகுக்கப்பட்டிருந்தது. அவற்றுள் ஒவ்வொன்றிலும் சிறு சிறு வேறுபாடுகளிருத்தல் கண்டு அவற்றை ஆறு பருவங்களாகப் பிரித்தனர். மழை பெய்யத் தொடங்குதலும், பெருமழை பெய்யினும் இடையிட்டுப் பெய்தலும் ஆகிய தன்மை பற்றி ஆவணி புரட்டாசியாகிய இரு திங்களைக் கார்காலம் என்றும், அடுத்துள்ள ஐப்பசி கார்த்திகையாகிய இருதிங்களில் இடையறுது மழை பெய்தலும், குளிர் மிகுதியாயிருத்தலும் பற்றி அவற்றைக் குளிர்காலம் என்றும் மழைக் காலத்தை இருகூருக்கினர். மார்கழி முதலிய நான்குதிங்களும் பனிக்காலமாயினும் ஞாயிறு படும் அந்திநேரத்திற் பனி வீழ்தலும் இரவின் இறுதிநேரத்திற் பனி வீழ்தலும் ஆகிய வேறுபாடிருத்தல் கண்டு முன்னைய இரண்டு திங்களை முன் பனிக்காலமென்றும், பின்னைய இருதிங்களைப் பின் பனிக்காலமென்றும் பிரித்தனர். இவ்வாறே வெயில் வெப்பத்தின் குறைவு மிகுதி குறித்துச் சித்திரை முதலிய நான்குதிங்கள் இளவேனில் வேனில் என இரண்டாகப் பகுக்கப்பட்டன.

இனி, பொங்கல் வருதற்கு முன்னுள்ள பருவங்களின் இயல்புகள் பண்டைக்காலத்தில் எவ்வாறிருந்தன வென்பதை அக்காலத்தில் தோன்றிய நூல்களின் வாயிலாகக் காண்போம்.

வேனிற் பருவத்தின் இயல்புகள்

"வேனிற் காலத்து வித்திய தினைப் பயிர்கள் வெயில் வெப்பத்தால் வாடுதல் கண்ட குன்றவாணர்கள் மழை பெய்வதற்காக மலையுறை கடவுட்குப் பலி தூவி வழிபட்டனர். வழிபாட்டின் பின் மழை மிகப்பெய்தமையால் இனி மழை வேண்டாவென மீண்டும் அக் கடவுளைப் போற்றினர். மழை நின்றமை கண்டு மகிழ்ச்சியுடையராய், விளைந்த தினைக் கதிரைக் கொய்து அடிசிலாக்கி அயின்றனர்" என்று மலை நாட்டிலேயே தம் வாழ்நாளிற் பெரும் பகுதியைக் கழித்த கபிலர் என்னும் புலவர் பெருமான் 143-ஆம் புறப்பாட்டிற் கூறியுள்ளனர். இக்கருத்தினையே,

> "ஏனற் பசுங்கதிர் என்றூழ்க் கழிய
> எழிலியுன்னிக்
> கானக் குறவர்கள் கம்பலை செய்யும்வம்
> பார்சிலம்பா" (159)

என மணிவாசகப் பெருந்தகையார் திருக்கோவையாரில் எடுத்தாண்டிருக்கின்றனர். இச் செய்யுட்கு உரை எழுதிய பேராசிரியர்,

'என்றூழ்க்கு அழிய' என்பதற்குக் 'கோடையால் அழிய' என்றும், 'வம்பு = காலமல்லாத காலத்து மழை 'என்றும் பொருள் கூறியுள்ளனர். இவற்றை நோக்கும் போது வேனிற்காலம் மழைபெய்தற்குரிய காலம் அன்றெனப்பதும், கடவுள் வழிபாட்டால் மழைபெய்த தென்பதும் புலனுகின்றன.

கார்ப் பருவத்தின் இயல்புகள்

ஆவணி, புரட்டாசி யாகிய கார்ப் பருவத்தில் இயல்பாகவே மழை பெய்யத் தொடங்குதலும், பெருமழை பெய்யினும் இடையிட்டுப் பெய்தலும் நிகழுமென்பது பின்வருவன வற்ருல் அறியப் படுகின்றது.

"முல்லைக் கொடிகளில் கூரிய நுனியையுடைய அரும்புகள் தோன்றவும், தேற்ரு, கொன்றை ஆகிய மரங்களில் பேரரும்புகள் முறுக்கவிழ்ந்து மலரவும், பழுக்கக் காய்ச்சிய இரும்பை முறுக்கி விட்டாற் போன்ற கரிய பெரிய கொம்புகளையுடைய கலைமான்கள் பரற்கற்களையுடைய பள்ளங்களில் ஓடும் நீரைப்பருகியும், வேனில் வெப்பத்தால் உண்டாய நீர்வேட்கை தணியாமையால் அப்பள்ளங்களை விட்டு விலகாமல் துள்ளித் திரியவும், காடுறையுலகம் நீரில்லாத வருத்தத்தை விட்டொழிக்கவும் மேகம் காற்ருலுந்தப்பட்டு விரைந்து விழும் துளிகளைச் சிதறி அக்காட்டினைக் கார்ப்பருவஞ் செய்தது" என 'முல்லை வைந்நுனை தோன்ற' என்னும் அகப்பாட்டு (4) கூறுகின்றது. இதனுல் கார்காலத்தில் இயற்கையாக மழை பெய்யத் தொடங்கும் என்பது தெரிகின்றது.

"ஞாயிற்றின் வெம்மையால் வருந்திய பெண்யானை வெள்ளத்திற்படிந்து களிற்றுடன் விளையாடவும், நிலத்திலும் வானத்திலும் நீர் நிறையவும், நாழிகைவட்டிலால் நாழிகையறிதலன்றி ஞாயிறு உள்ள இடம் அறியப்படாமையால் உலகம் அஞ்சவும், கடல் நீரை முகந்து சூற்கொண்ட மேகம் எங்கும் பரந்து பெருமழை பெய்வதாயிற்று. யாம் மடந்தையது நல் எழில் ஆகம் சேர்ந்தனம், இக் கார்காலத்தில் பொருட் பற்றுக் கொண்டு தம் துணைவியரைப் பிரிந்து செல்லும் மடமையோர் மிகவும் இரங்கத்தக்கவராவர்" என்னுங் கருத்தினைப்பொருளீட்டிவந்து தம் இல்லத்தில் இனிதுறையும் தலைமகன் ஒருவன் கூற்ருக மதுரையாசிரியர் நல்லந்துவனுர் பாடிய 43-ஆம் அகப்பாட்டால் அறியலாம். இதனுல் கார்காலம் மக்களும் மாக்களும் வரவேற்று மகிழும் வண்ணம் பெருமழை பெய்தற்கும் உரிமையுடைய தென்பது உணரப்படும்.

குளிர்ப் பருவத்தின் இயல்புகள்

ஐப்பசி கார்த்திகையாகிய குளிர்காலம் விடாது மழை பெய்தலுடன் வாடைக் காற்றும் வீசும் காலமாகும். இக்குளிர்காலத்தின் இயல்பு பற்றி நக்கீரனுர் நெடுநல்வாடையில் வரைந்து காட்டிய சொல்லோவியத்தினைக் காண்போம்.

"ஆயர்கள் தம் ஆநிரைகளை மேடாகிய முல்லை நிலத்திலே மேயவிட்டு மிக்க குளிர் வருத்துவதால் கையை நெருப்பிலே காய்ச்சி அதனுற் பெற்ற வெப்பத்தைக் கன்னங்களிற் சேர்த்துப் பற்பறை கொட்டி நடுங்குகின்றனர். விலங்குகள் மேய்தலை மறந்து ஒடுங்குகின்றன. மந்திகள் கூனிக்குறுகி நிற்கின்றன. மரங்களில் தங்கும் பறவைகள் வாடை தாங்கமாட்டாமல் நிலத்தில் வீழ்கின்றன. பசுக்கள் குளிர்மிகுதியால் கன்றுகளை உதைத்துத் தள்ளுகின்றன. பூந்தட்டில் வைத்துள்ள பிச்சியரும்புகள் மணங்கமழ்தலால் அந்திப்போது வந்தென்றறிந்து மகளிர் மனைகளில் விளக்கேற்றி வைத்து, நெல்லும்மலருந்தூவி இல்லுறை தெய்வத்தை வணங்குகின்றனர். மாடப் புருக்கள் மன்றுகளிற் சென்று இரைதேடியுண்ணுமல் கொடுங்கையைத் தாங்கும் பலகைகளில் கடுத்த கால்கள் ஆறும்படி மாறிமாறியிருக்கின்றன. பணிப்பெண்கள் சாந்தரைக்கும் அம்மியில் கத்தூரிக்கலவையை அரைக்கின்றனர். வடநாட்டார் கொண்டு வந்த சந்தனக் கல்லும் தென்றிசைச் சந்தனக்கட்டையும் பயன் படாமற்கிடக்கின்றன. மகளிர் தம் தலையிற் பூமாலை சூடாமல் மங்கலமாகச் சில மலர்களை யிட்டு முடிக்கின்றனர். மயிர்ச்சந்தனமாகிய விறகிலே நெருப்பை மூட்டி அதில் அகிற்

கட்டையையும் கண்ட சருக்கரையையுங் கூட்டிப் புகைக்கின்றனர். வேலைப்பாடமைந்த விசிறிகள் உறைகளுடன் சிலந்திநூல் சுற்றப்பட்டு மூலைகளில் தூங்குகின்றன. மேல்மாடங்களில் தென்றல் வருவதற்கு அமைத்த சாளரக் கதவுகள் திறக்கப்படாமல் தாழிட்டுக் கிடக்கின்றன. கல்லென்ற ஓசையையுடைய சிறு துவலையை வாடைக்காற்று எங்கும் வீசுவதால் மக்கள் குளிர்ந்த நீரைப்பருகாமல் கொதிக்கும் நீரைப் பருகுகின்றனர். ஆடல் பாடல் செய்யும் மகளிர் யாழ்நரம்புகள் குளிர்ந்து நிலைதிரிந்தமையால் அவற்றைத் தம் மார்பில் அணைத்துச் சூடேற்றிப் பண் அமைக்கின்றனர். மலையுச்சியிலிருந்து வீழும் அருவிபோல் மாடத்து நிலா முற்றங்களிற் பெய்தமழைநீர் திரண்டு கூடல் வாயின் வழியே ஆரவாரத்துடன் முற்றத்தில் விழுகின்றன. இவ்வாறு காலமழை செறிந்து மலையைக் குளிர்விப்பது போன்ற கூதிர்க்காலமாய் நிலைபெற்றது.'' என நக்கீரர் வரைந்து காட்டிய சொல்லோவியத்தின் வாயிலாக அடைமழையும் குளிர்காற்றுங் கலந்த ஐப்பசி கார்த்திகைத் திங்களின் இயல்புகளையும் அக்காலத்து மக்களும் விலங்குகளும் பறவைகளும் அடைந்த வருத்தங்களையும் மனக்கண்ணாற் கண்டோம்.

சங்க இலக்கியங்களும் பொங்கலும்

இனி, அடுத்து வருவது மார்கழியும் தையும் ஆகிய முன்பனிப் பருவமாகும். பொங்கலும் அக்காலத்தே தான் வருகின்றது. அதனைப் பற்றி யறிவதற்கு அப்பொங்கல் என்னும் சொல் சங்க இலக்கியங்களில் எடுத்தாளப் பெற்றுள்ளதா? உள்ளதாயின் எப்பொருளில் எடுத்தாளப் பெற்றுள்ளது? என்பவற்றை முதலிற் காண்போம்.

(1) ''...... ...... பொங்கல் வெண்மழை
அகலிரு விசும்பில் துவலை கற்ப''
(நெடுநல்-19-20)

(2) ''பெய்து புலந்திறந்த பொங்கல்
வெண்மழை
எஃகுறு பஞ்சித் துய்ப்பட் டன்ன
துவலை தூவல் கழிய......அற்சிரம்
வந்தன்று'' (அகம்-217)

(3) ''பெய்து புறந்தந்து பொங்க லாடி
விண்டுச் சேர்ந்த வெண்மழை''
(பதிற்று-55)

(4) ''வில்லெறி பஞ்சியின் வெண்மழை
தவழுங் கொல்லை'' (அகம்-133)

(5) ''...... .... கடுவன்,
தண்கமழ் நறைக்கொடி கொண்டு
வியலறைப்
பொங்கல் வெண்மழை புடைக்கும்
நாடு'' (ஐங்குறு-276)

(6) ''கடாஅம் மாறிய யானை போலப்
பெய்துவறி தாகிய பொங்குசெலற்
கொண்மூ
மைதோய் விசும்பின் மாதிரத்
துழிதரப்
பனியடூஉ நின்ற பானாட் கங்குல்''
(அகம்-125)

(7) ''அழிதுளி பொழிந்த இன்குரல் எழிலி
எஃகுறு பஞ்சிற் றாகி வைகறைக்
கோடுறு நெடுவரை யாடும் நாடு''
(நற்றி-247)

(8) ''தைஇ நின்ற தண்பெயற் கடைநாள்
வயங்குகதிர் கரந்த வாடை வைகறை
விசும்புரி வதுபோல் வியலிடத்
தொழுகி
மங்குல் மாமழை தென்புலம் படரும்
பனியிருங் கங்குல்'' (அகம்-24)

எனப் பலமேற்கோள்கள் பொங்கல் என்பது பற்றியும் அதன் இயல்புகள் குறித்தும் விளக்கமாகக் கூறுகின்றன. இவை முறையே,

(1) (குளிர்காலத்து மிகுதியாகப் பெய்தலையே இயல்பாகவுடைய மேகம்) ''பொங்கு தலையுடைய வெள்ளிய மேகமாய், அகன்ற பெரிய வானத்தே முன்பனிக் காலத்தில் சிறிய துவலைகளாகத் தூவுதலைக் கற்றுக் கொள்ள'' எனவும்,

(2) ''இடையறாது மழை பெய்து முன்பு மறைத்திருந்த திசைகளை வெளியாக்கிய பொங்கிய வெள்ளைமேகம், கடைந்தெடுத்த பஞ்சின் நுனிபோல் மென்மைத்

தன்மை யடைந்து துவலே தூவுதலேயும் ஒழிய ......முன்பனிப் பருவம் வந்தது" எனவும்,

(3) "மழைபெய்து உலகத்தைக் காப்பாற்றிப் பின்பு பன்னிய பஞ்சுபோலப் பொங்கி யெழுதலேச் செய்து மலேயைச் சேர்ந்த வெளுத்த மேகம்" எனவும்,

(4) "வில்லால் அடித்து நொய்தாக்கப்பெற்ற பஞ்சுபோல வெள்ளே மேகம் தவழுங் கொல்லே" எனவும்

(5) "ஆண்குரங்கு நறைக்கொடியைக் கொண்டு பொங்கிய இளேதான வெண் மேகத்தைப் புடைக்கும் நாடு" எனவும்,

(6) "மதம் பொழிந்து ஓய்ந்த யானேயைப் போல மழை பொழிந்து வறுமைப்பட்ட பொங்கிய செலவினேயுடைய மேகம், கருமை பொருந்திய வானத்திலும் திசை களிலும் திரியும் வண்ணம் பனி வருத்து கின்ற பாதி நாள் இரவு" எனவும்,

(7) "மிக்க மழையைப் பொழிந்த இனிய முழக்கத்தையுடைய மேகம், வில்லா லடித்து நொய்தாக்கப் பெற்ற பஞ்சின் தன்மையுடையதாகி விடியற்காலத்தில் சிகரம் உயர்ந்த நெடியமலேயில் இயங்கும் நாடு" எனவும்,

(8) "தைத்திங்களின் தன்மை நிலேபெறு தற்குக் காரணமான, குளிர்ந்த மாரி பெய்து ஓய்ந்த இறுதி நாளில்–அஃதா வது மார்கழியின் பிற்பகுதியில் ஞாயிறு மறைந்திருக்கும் வாடையுடன் கூடிய வை கறைப் போதில், (முன்பு) இருண்ட பெரிய மேகம் விசும்பு தோலுரிவது போன்று அகன்ற வானத்தின் கண் இயங்கித் தென்றிசைக்கட் சென்று சேரும் பனிக்காலத்துக் கங்குற் பொழுது" எனவும் பொருள்தருதலேக் காணலாம்.

இவற்ருல், பொங்கல் என்பது பொங்கி யெழுதலென்னுந் தொழிலேயுணர்த்தும் ஒரு பெயர்ச் சொல் என்பதும், அது மழை பெய்து ஓய்ந்த வெண்மேகத்திற்கு அடைமொழியாய்ப் புணர்க்கப்பட்டுள்ளதென்பதும், அப்பொங் கல்மேகம் முன்பனித் தொடக்கத்தில் சிறு துவலேகளேத் தூவுமென்பதும், பின்னர் அதுவுமொழிந்து எஃகிய பஞ்சைப்போல் மெல்லிதாய் வானத்திலும் திசைகளிலும் மலே களிலும் பரந்து வாடையால் உந்தப்பட்டுத் தென்திசை நோக்கிச் செல்லுமென்பதும், இந் நிகழ்ச்சிகள் மாரிபெய்து கழிந்த முன்பனிப் பருவத்தின் இடைக்காலமாகிய மார்கழியின் பிற்பகுதியில் தோன்றுமென்பதும், பிறவும் பெறப்பட்டன. இச்சொல் ஓரோவழித் தொழி லாகுபெயராய் வெண்மேகத்தை யுணர்த்தலும் உண்டு.

இப்பொங்கல் தோன்றிஞல் மழைபெய்யா தென்பது மக்கள் அநுபவத்திற் கண்ட உண் மையும் நம்பிக்கையுமாகும். ஆதலின், அடை மழையாலும் குளிர்காற்ருலும் ஐப்பசித் திங்கள் முதலாக, மேகங்கள் மறைத்தலால் விசும்பைக் காணுமலும், நீர்பரந்தொழுகலால் நிலத்தைக் காணுமலும் அல்லலுற்று வருந்திய மக்கள் பொங்கியெழுந்த வெண்மேகத்தைக் கண்டு, பொங்கல் வந்தது பொங்கல் வந்தது என மகிழ்ந்து, இனி மழை பெய்யாதெனத் துணிந்து, இடிந்தும் சிதைந்தும் கழுவாமலும் மெழுகாமலும் பலவாறு பழுதுபட்டுக் கிடந்த தத்தம் இல்லங்களேத் தீற்றியும் திருத்தியும் பூசியும் புதுக்கியும் கழுவியும் மெழுகியும் கோலஞ்செய்திருப்பர். தொழுவங்களில் அடைக்கப்பெற்றும் கட்டப்பெற்றுங்கிடந்த ஆடுமாடுகளே திறந்துவிட்டும் அவிழ்த்துவிட் டும் வெளியில் உலவிவரச் செய்திருப்பர். அவற்றைக் குளிப்பாட்டியும் தாம் நீராடியும் மகிழ்ந்திருப்பர். பழையமட்கலங்களே மாற்றிப் புதுக்கலங்களிற் பாற்சோருக்கிப் பகுத்துண் டும் இருக்கலாம். ஆனல் இது பற்றிய சிறு குறிப்பாயினும் பழந்தமிழ் நூல்களிற் காணப் படவில்லே யென்பதும், பொங்கலென்னும் சொல் உணவிற்குப் பெயராக வழங்கப்பட வில்லேயென்பதும் குறிப்பிடத்தக்கன.

புறநானூறும் பொங்கலும்

'அருவியார்க்கும்' என்னும் புறப்பாட்டில் குதிரைமலேக் குறவர்கள் நல்லநாளிற் புதிது உண்ணவேண்டித் தமக்குக் கிடைத்த புது

வருவாயாகிய தினையரிசியைப் பாலுலையிலிட்டு ஆக்கிப் பலருக்கும் பகுத்து உண்டனர்'' எனக் கூறப்பட்டிருத்தலால், இது தைத்திங்கள் முதல் நாளில் பாற்பொங்கலிட்டு உண்டதைக் குறிக்குமன்றோவெனின், உணவுக்குரிய நெல் முதலிய விளைபொருள் யாதாயினும் விளைந்து வந்த காலத்தில் அதனை நல்லதொருநாளில் ஆக்கி இல்லுறை தெய்வத்திற்குப் படைத்துப் பிறர்க்கும் வழங்கித் தாமும் உண்பதும், 'இன்று எங்கள் இல்லத்தில் புதியது ஆக்கப் பெற்றது' என்று கூறிக்கொள்ளுதலும் நாட்டுப்புறத்து மக்கள்பால் இன்றும் நடைபெறுவன. இவ்வழக்கம் தொன்றுதொட்டுத் தமிழகத்தில் உள்ளதாகும். இம் முறைபற்றிக் குதிரைமலைமக்களும் நல்ல நாளிற் புதியது ஆக்கியுண்டனர் என்பதை அப் புறப்பாட்டு புலப்படுத்துகின்ற தன்றித் தைத்திங்கள் முதல் நாளில் இற்றைநாட்போலப் பாற்பொங்கலிட்டனர் என்பதைப் புலப்படுத்தவில்லை. அன்றியும், தினைப்பயிர் செய்வது வேனிற் காலத்திலென்பது மேலே காட்டப்பட்ட 143-ஆம் புறப்பாட்டாலும் திருக்கோவையார்ச் செய்யுளாலும் தெரிதலால் தைத்திங்களில் அப் புதியது உண்டனர் என்றலும் பொருந்தாது.

சிலப்பதிகாரமும் பொங்கலும்

''புழுக்கலும் நோலையும் விழுக்குடை-
மடையும்
பூவும் புகையும் பொங்கலும் சொரிந்து''
(இந்திர) 68–69)

என்றவிடத்து இளங்கோவடிகள் பொங்கல் எனக் கூறியுள்ளனர். அது பொங்கற் சோற்றினைக்குறிக்கும்எனின்,சித்திரைத்திங்கள் நிறைமதிநாளில் மறக்குடிமகளிர் நாளங்காடிப் பூதத்திற்கு, அவரை துவரை முதலியவற்றின் புழுக்கலும் எள்ளுருண்டையும் புலாற்சோறும் பூவும் புகையும் பொங்கலுஞ் சொரிந்து வழிபட்டனரெனக் கூறியுள்ளார் இளங்கோவடிகள். இதற்கு உரையெழுதிய அரும்பத உரையாசிரியரும் அடியார்க்கு நல்லாரும் 'கள்' என்றே பொருள் கூறினராதலின் அது பொங்கற் சோற்றினைக் குறிப்பதாகாது. அடியார்க்கு நல்லார் இரண்டாவது உரையாக ''பொங்கல்...பொங்கற் சோறும் என்ப'' என எழுதியுள்ளாரெனின், அவர் காலத்தில் சோற்றினைப் பொங்கல் என்று கூறும் வழக்கு வந்துவிட்டதாயினும் பன்னூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட நூலிலுள்ளதோர் சொல்லுக்கு அக்காலத்து ஆட்சியின்றிப் பிற்காலத்துத் தோன்றிய புதுப்பொருள் கூறல் தமக்கு உடன்பாடன்று என்பதை யுணர்த்தவே தங்கூற்றாக எழுதியுள்ளாராகலின் பொங்க லென்னுஞ் சொல்லைக் 'கள்' என்னும் பொருளிலேயே இளங்கோவடிகள் எடுத்தாண்டனர் என்று கொள்ளுதலே பொருந்தும்.

சிந்தாமணியும் பாற்பொங்கலும்

''மதுக்குலாம் அலங்கல் மாலை
மங்கையர் வளர்த்தசெந்தீப்
புதுக்கலத் தெழுந்த தீம்பாற்
பொங்கலின் நுரையிற் பொங்கிக்
கதிர்த்துவெண் மாடந் தோன்றும்
செவ்வெயிற் காத நான்கின்
நதிக்கரை வந்து விட்டார் நச்செயிற்
றரவோ டொப்பார்''—(கனகமா–182)

என்னும் சிந்தாமணிச் செய்யுளில், மங்கையர் புதுக்கலத்திற் பாற்பொங்கலிட்டதாகக் கூறப்பட்டுள்ளதேயெனின், பாற்சோருக்கியுண்ணும் பழக்கம் பண்டேயுளது எனினும் அதனைப் பொங்கலென்று கூறுதல் அக்காலத்தில் இல்லை. கடைச்சங்க காலத்திற்கும் இளங்கோவடிகள் காலத்திற்கும் பல நூற்றாண்டுகளுக்குப்பின் தோன்றிய திருத்தக்கதேவர் காலத்தில், பொங்கல் என்பதற்குச் சோறு என்னும் பொருள் வழக்கில் வந்துவிட்டது. அதனால் அவர் கூறியதில் தவறில்லை. ஆயினும் அவர் கூறிய பாற்பொங்கல் தைத்திங்கள் முதல் நாளிற் செய்யப் பெற்றதே யென்பதற்குச் சான்று ஒன்றுமில்லை.

கார்த்திகைத்திருநாளும் அவற்பொங்கலும்

திருக்கார்த்திகை நாளில் தெருவெங்கும் விளக்கேற்றிவைத்து மலர்மாலைகளைத் தொங்கவிட்டு விழாக்கொண்டாடுதல் பண்டுதொட்டுள்ளது. அந்நாளில், புதிதாக மணஞ்செய்து வரப்பெற்றமகளிர், பல்கோட்டடுப்பில்

பாலுலையேற்றிப் பழனத்தில் விளைந்த பசுஞ் சாலிக் கதிர்களை முறித்துவந்து பதமாக அவ லிடித்து அப்பாலுலையிலிட்டு அடிசிலாக்கினர் என்பது 141-ஆம் அகப்பாட்டால் அறியப் படுகின்றது.

பாவை நோன்பு

மார்கழித்திங்கள் மதிநிறைந்த நன்னாளிற் கன்னிப்பெண்கள் தொடங்கிய பாவைநோன்பு தைத்திங்களில் முடிவு பெறுதலால் அது 'தைந்நீராடல்' என்றுங் கூறப்படும். விழாக்கள், முடிவு பெறும் நாளாற் பெயர் பெறுதலைத் தைப்பூசம், மாசிமகம், பங்குனியுத்தரம் என வழங்குதலால் அறியலாம். அங்ஙனம் பாவை நோன்பு நோற்றலை மேற்கொண்ட கன்னிப் பெண்கள் தாம்வழிபட்ட வண்டலம்பாவையை நீருண்ணுந் துறையிற் கொணர்ந்து வைத்துக் குரவைக் கூத்தாடி அந்நோன்பினை முடிவுசெய் தனர் என்பது,

''தைஇ நின்ற தண்பெயற் கடைநாள்
....
வண்டலம் பாவை யுண்டுறைத் தரீஇத்
திருநுதல் மகளிர் குரவை யயரும்''
(அகம்–269)

என்பதனுலும் பிறவற்ருலும் அறியப்படுகின் றது.

பாகும் பாலுங் கலந்த அவல்

இளவேனிற் காலத்தில் பாகும் பாலுங் கலந்த அவல் வறியோர்க்கு வழங்கப் பெற்ற தாகப் ''புன்காற் பாதிரி'' என்னும் அகப்பாட் டில் (237) கூறப்பட்டுள்ளது.

இங்ஙனம் பண்டைக்காலத்து நிகழ்ச்சி கள் பலவற்றைக் குறிப்பாகவும் வெளிப்படை யாகவும் கூறும் சங்க இலக்கியங்களில், தைத் திங்கள் முதல் நாளில் பொங்கலிட்டனர் என் பதற்கும், பொங்கலென்னும் சொல் உணவுக் குரிய பெயராக ஆளப்பட்டதற்கும் ஒரு சான்றும் அகப்படாமை வியப்பூட்டுகிறது. அதற்குக் காரணம் அக்காலத்தில் இன்றுள்ள வழக்கம் இல்லையென்பதேயாம். ஆயினும், ''உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு, பலர்புகழ் ஞாயிறு'' என்னும் திருமுருகாற்றுப் படை (1–2)யாலும், '' ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்'' என்னும் சிலப்பதிகார மங்கல வாழ்த்துப் பாடலாலும்'', '' ஆயிரங் கதிராழி ஒருபுறந்தோன்றகலத்தான்'' என்னும் தொல்காப்பியச் செய்யுளியல் மேற்கோட் செய்யுளாலும் பிறவற்ருலும் ஞாயிற்று வழிபாடு பண்டுதொட்டிருந்த தென்பது தெரி கிறது.

காலந்தோறும் பழையசொற்கள் மறைந்து புதிய சொற்கள் தோன்றுதலும், ஒருபொருளை யுணர்த்தியசொல் அப்பொருளை விட்டுப் பிறிது பொருளுணர்த்தி நிற்றலும் இயல்பாதல்போல, ஒருகாலத்தில் நடைபெற்ற வழக்க வொழுக் கங்களிற் சில மற்ருெரு காலத்தில் மறைந்து போதலும் மாறுபடுதலும் புதியன சில தோன்று தலும் இயல்பேயாம். தைத்திங்கள் முதல் நாளில் பொங்கலிடுதலும், பொங்கலென்னுஞ் சொல் உணவை யுணர்த்துதலும் பண்டைக் காலத்தில் இல்லையாயினும் அவ்விரண்டும் இன்றைய வழக்கில் இடம் பெற்று நிலைத்து விட்டன. அவற்றை மாற்றவும் மறைக்கவும் முடியாது. இப் பொங்கல் விழாவால் வீடு புனிதம் அடைகின்றது. மஞ்சளும் இஞ்சியும் கன்னலும் கதலியும் நாட்டி மாவிலைத் தோர ணங்கள் கட்டி மனையை மக்கள் அழகு செய் கின்றனர். புத்தாடையுடுத்துப் புதுக்கலங் களிற் பொங்கலிடுகின்றனர். நன்றிமறவா மைக்கு அறிகுறியாக ஞாயிற்று மண்டிலத் திற்குப் படைத்துத் தாமும் உண்டு பிறர்க்கும் வழங்கி உள்ளக் கிளர்ச்சியும் உவகையும் உறுகின்றனர். இதனை, உழவர்விழா, தமிழர் விழா தமிழ் விழா என எப்பெயரிட் டழைப் பினும் குற்றமில்லை. குலம், மதம், கொள்கை முதலிய வேறுபாடின்றி நாடுமுழுதும் கொண் டாடப்பெறுகின்றது. ஆதலின் இப் பொங்கல் விழாவை வரவேற்று வாழ்க வளர்க என வாழ்த்துவோமாக.

வணிகர் வரலாறு

(மெ. சுந்தரம் M. A., M. Litt., B. O. L.)

செந்தமிழ் நாட்டைச் செல்வங்கொழிக்கும் நிலமாக்கிய பெருமை பண்டைத் தமிழ் வணிகர்க்கு என்றென்றும் உண்டு. நினைப்பிற்கும் எட்டா நெடுங்காலத்திற்கு முன்னரேயே வரலாறு வடித்தெடுக்கப்படாத சேய்மைக் காலத்திலேயே, தமிழ் நாட்டின் பெருமையினை வெளிநாட்டாரும் உணரும்படி செய்த பெருமை தமிழ் வணிகரையே சாரும். அவர்களின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றிய வரலாறு புதை இருளில் மிக அழுந்திப் பொன்றிக் கிடக்கின்றது. அதனை அகழ்ந்தெடுத்து ஆராய்ந்து உண்மை காண வேண்டுவது தமிழக மக்களின் தலையாய கடனுகும். ஆதலின் அவ்வரலாற்றை ஒல்லும் வகையான் கால முறைப்படி இப்பொழுது காண முற்படுவோம்.

வேத காலம்

வணிகரைப் பற்றிய சிறு குறிப்பு வேதங்களில் காணப்படுகிறது. அவர்களை 'வணிக்' (Vanik) என்று வேதம் குறிப்பிடுகிறது. அவர்கள் 'அநாரியர்' (ஆரியர் அல்லாதார்) களில் ஒருவர் என்றும், வியாபாரிகள் என்றும்' ஒரு தனிஇனம் என்றும் கூறுகிறது. அவர்களைப் பற்றி மேலும் விளக்கம் அளிக்கும் போது, அவர்கள் கடலோடிகள்; அஞ்சாமை மேற்கொண்டொழுகுபவர்கள் ; சுறுசுறுப்பானவர்கள் ; வணிகத்தில் கண்ணுங் கருத்துமாக இருப்பவர்கள் ; செட்டானவர்கள் ; பொருள் ஈட்டுவதையே வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டவர்கள் ; கருமிகள் என்றெல்லாம் பலபடப் பாரித்துரைக்கின்றது. நெய்தல் நில மக்களாகிய பரதவர்கள் இன்று தனி இனமாகக் கூறப்படுதல்போல, அக்காலத்தே வணிகரையும் தனி இனமாக வைத்து வேதம் வழங்கிற்று போலும்.

தொல்காப்பியம்

கி. மு. 300-இல் தோன்றியதாகக் கருதப்படும் தொன்மைத் தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் வணிகரைப் பற்றிய பேச்சு வருகிறது.

> " வைசிகன் பெறுமே வாணிக
> வாழ்க்கை " [1]

என்று நூற்பா உரைத்துச் செல்கின்றது. வணிகச் சாதியினர் பற்றியும் அவர்க்குரிய பிரிவு பற்றியும் விளக்கமாக மேலும் எடுத்துரைக்கின்றது.

திருக்குறள்

> ', வாணிகம் செய்வார்க்கு வாணிகம்
> பேணிப்
> பிறவும் தமபோல் செயின் " [2]

என்று குறள் கூறுகிறது. இதனுல் வணிகரின் பிறர் நலம் பேணும் பெருந்தகைமை பெறப்படும்.

புறநானூறு

> " இம்மைச் செய்தது மறுமைக்
> காமெனும்
> அறவிலை வணிகன் ஆய்அலன் " [3]

என்று புறம் கூறுகிறது. இதனுல் செய்வினையின் பயனை எதிர்பார்க்கும் வணிகரின் சிந்தை புலப்படுகிறது.

> "யானேர் வாணிகப் பரிசிலனல்லேன்" [4]

என்று புலவர் ஒருவர் பெருமிதத்தோடு பேசுகிறுர். இவ்வுரையால் வரவு செலவு பர்த்துப் பேரம் பேசும் வணிகர் மனப்பான்மை விளங்குகின்றது.

---

1. பொருள். மரபியல் சூத்திரம் 79.
2. 120.
3. 134.
4. 208.

சிலப்பதிகாரம்

"மாசாத்து வாணிகன் மகனை ஆகி" [5]

என்று கோவலன் கண்ணகியால் குறிக்கப் படுகிறான். வாணிகம் பேணும் வழக்காறுடைய குலத்தில் தோன்றியவன் கோவலன் என்று கண்ணகி பாண்டியன் நெடுஞ்செழியனிடம் எடுத்துக் கூறுகிறாள்.

"அரசர் பின்னோர்க்கு அருமறை மருங்கின்
உரிய எல்லாம் ஒருமுறை கழித்தாங்கு" [6]

என்று வணிகரை 'அரசர் பின்னோர்' என்று இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார். மன்னர் பின்னோர் மாதனவணிகர் என்பது இதனால் பெறப்படுகின்றது.

மணிமேகலை

'இளங்கோக்கள்' என்று வணிகரைச் சாத்தனார் கூறுகிறார். இதில் சாதுவன் என்ற வணிகன் நாகர் தீவிற்குச் சென்ற வரலாறு பேசப்படுகிறது.

இது. அரசியலிலும் சமுதாயத்திலும் வணிகர் பெற்றிருந்த செல்வாக்கையும் பெருமதிப்பையும் காட்டுகிறது. உள்நாட்டு வணிகத்தையும் வெளிநாட்டு வணிகத்தையும் தம் கைக்குள் வைத்திருந்த காரணத்தாற்றான் இவர்கள் 'அரசர் பின்னோர்' 'இளங்கோக்கள்' என்று சிறப்பித்துரைக்கப்பட்டனர், இவர்களைப் பாராட்ட வேண்டிப் பட்டங்களும் வழங்கப்பட்டன. எட்டி என்னும் பட்டம் இதனுள் தலைசிறந்ததாகும். 'எட்டி குமரன்' எனும் வணிகன் மணிமேகலையில் குறிக்கப் படுகிறான். 'எட்டி' என்பதே பிற்காலத்தில் 'செட்டி' என மருவிற்றுப் போலும். சகர எகரச் சேர்க்கை தமிழ் இலக்கணத்தில் பெருவரவிற்று. 'மாணிக்க எட்டி' என முன்னர் வழங்கி வந்ததே பிற்காலத்தில் 'மாணிக்கஞ் செட்டி' என வழக்கில் வருவதாயிற்று. வணிகத்தில் செல்வம் கொணர்ந்து நாட்டின் பொருளாதார நிலையினை வளம் பெறச் செய்த காரணத்தால் இவர்களை ஊக்குவிப்பான் வேண்டி அக்கால அரசியலார் இவர்களுக்குப் பட்டங்கள் அளித்துப் பாராட்டினர் போலும். இக்கால அரசியல் அமைப்பிலும் இம்முறை பின்பற்றப்படுவது அறியத்தக்கது.

இங்ஙனம் சங்க இலக்கியங்களில் இலக்கண நூல், நீதிநூல், இலக்கிய நூல், காப்பியம் ஆகியவை அனைத்தும் வணிகரைப் பற்றிய குறிப்புக்களைத் தருகின்றன. இவற்றுள் தொல்காப்பியமும், திருக்குறளும் இடைச்சங்க நூல்கள் என்றும், புறநானூறு, சிலப்பதிகாரம் மணிமேகலை ஆகியவை கடைச்சங்க நூல்கள் என்றும் ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இதனால் தொன்மை இலக்கியம் எழுந்த, தொடக்க காலத்திலேயே வணிகர்கள் திரை கடல் ஓடித் திரவியம் தேடியவர்கள் என்பது பெறப்படும்.

தேவாரம்

"சிறுகாலை நாமுறு வாணிபம்" [7]

என்று ஏழாம் நூற்றாண்டில் எழுந்த தேவாரம் கூறுகிறது. நிலைபேறுடைமையின்றி ஓரோவொரு கால் செய்யப்படும் வாணிகத்தின் முறையை இவ்வடி எடுத்துக்காட்டுகிறது.

பிங்கல நிகண்டு

இடைக்காலத்து இலக்கியங்களிலும் வணிகரைப்பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன, அவர்களது பண்பு நலன் பற்றிப் பேசவந்த பத்தாம் நூற்றாண்டு நூலாகிய பிங்கல நிகண்டு அவர்கள் எண் குணத்தார் என்று எடுத்து இயம்புகின்றது. அவை:

1) தனிமையாற்றல் 2) முனிவிலனாகுதல் 3) இடனறிந்தொழுகல் 4) பொழுதொடு புணர்தல் 5) உறுவது தெரிதல் 6) இறுவது அஞ்சாமை 7) ஈட்டல் 8) பகுத்தல்.

---

5. 20. வரி 58.   6. 16. வரி 44-45.   7. 259, 3.

புறப்பொருள் வெண்பாமாலை

வாணிகத்தாற் சிறப்பெய்திய வணிகன் தன் பொருளிற் பற்றிலனாய்ப் பிறர் மிடியை நீக்கும் பெருந்தன்மையை எடுத்துக் கூறும் "வாணிக வென்றி" என்ற புறத்துறை ஒன்று புறப்பொருள் வெண்பாமாலையில் காணப்படு கிறது.

"காடுங் கடுந்திரை நீர்ச்சுழியுங்
கண்ணஞ்சான்
சாடுங் கலனும் பலவியக்கி—நீடும்
பலிசையாற் பண்டம் பகர்வான்
பரியான்
கலிகையான் நீக்கல் கடன்" [8]

என்று வெண்பா கூறுகிறது. காட்டையும் கடிய அலையினையுடைய நீர்ச்சுழியையும் கண்டு அஞ்சானாய், சகடம் பலவும், மரக்கலம் பலவும் இடந்தோறும் செலுத்தி நீடும் இலாபம் காரண மாகப் பல பண்டமும் விற்கும் வணிகன் பொருளில் பற்றிலனாய்ப் பிறர் மிடியைத் தன் கையாலே நீக்குகிறான் என்பது இதன் கருத் தாகும். இதனால் வணிகரது பொருளீட்டும் முறையும், அப்பொருளை அறத்தாற்றில் மன் பதைக்குப் பயன்படுத்தும் நெறியும் நன்கு புலனாகின்றன.

வாணிக வாழ்க்கை

சாத்து

கோவலன் தந்தை மாசாத்துவான் என் றும், கண்ணகி தந்தை மாநாய்கன் என்றும் சிலப்பதிகாரம் கூறுகிறது.

சாத்து என்ற சொல் வாணிகக் கூட்டத் தைக் குறிக்கும். வாணிகச் சாத்து என்ற சொல் இலக்கியங்களில் பரந்து காணப்படு கிறது. இதற்கு உள்நாட்டு வணிகக் கூட்டம் என்று பொருள். "சாத்தொடு போந்து தனித் துயர் உழந்தேன்" [8a] என்று சிலம்பு கூறு கிறது. 'சாத்து எப்பொழுது போகிறது' என்று வணிகக் கூட்டத்தார் ஒருவரை யொரு வர் கேட்டுக் கொள்வது வழக்கம். இருபது அல்லது முப்பது எருதுகளிலும், கோவேறு கழுதைகளிலும் பண்டப் பொதிகளை ஏற்றிக் கொண்டு ஊர் ஊராகச் சென்று விற்பது வாணிகச் சாத்தின் வழக்கம். சாத்து என்ற சொல்லை ஆங்கிலத்தில் 'காரவான்' (Caravan) என்று வழங்குவர். தொடர்ச்சியாய்ச் செல்வது என்பது அதன் பொருள். அரேபியாவில் 'காரவான் டிரேட்' (Caravan trade) என்ற சாத்து வாணிகம் சிறப்புற்றிருந்ததை வரலாறு எடுத்துக் காட்டுகிறது. ஒட்டகங்களின் மீது சரக்கு மூட்டைகளை ஏற்றிக்கொண்டு அரே பியப் பாலைவனத்தைத் தாண்டிச் செல்வர் அவ்வணிகர். அவ்வாறு செல்லும் போது வழிப்பறிக்கு அஞ்சித் தனித்துச் செல்வதில்லை. கூட்டங் கூட்டமாகவே செல்லுதல் வழக்கம். ஆதலை கள்வர்களை எதிர்த்துப் போரிடும் சிறந்த போர்வீரர்களாகவும் அவ் வணிகர் விளங்கியிருக்கிறார்கள். தென்னாடு முழுவதும் இத்தகைய வணிகப் போர்வீரர்கள் இருந் தமைக்கு வரலாறு சான்று பகர்கின்றது. இடைக்காலத்தே கன்னட நாட்டை ஆண்ட ஜகதேவ மல்லனுடைய கல்வெட்டில் வணிகப் போர்வீரர்கள் குறிக்கப்பட்டுள்ளனர். பெரிய புராணத்தில் சேக்கிழாரும் வணிகப் போர் வீரர் பற்றிக் குறித்துள்ளார். காவிரிப்பூம்பட் டினத்தில் இயற்பகை நாயனார் என்ற வணிகர் வாள் எடுத்துப் போர்புரியும் வீரராக விளங்கி யுள்ளார்.

இத்தகைய சாத்தில் தலைமைச் சிறப்புடை யோனாக விளங்கினான் மாசாத்துவான். உள் நாட்டு வணிகத்திலே தலைமையும் சிறப்பும் பெற்றிருந்த காரணத்தால் இவன் 'மா சாத்து வான்' (உள்நாட்டுப் பெருவணிகன்) என்று காரணப் பெயரிட்டு அழைக்கப்பட்டான். இன் றும் தனவணிகர் என்று கூறப்படும் நாட்டுக் கோட்டைச் செட்டியார் குலத்தில் சாத்தப்பன், சாத்தன், சாத்தம்மை என்ற பெயர்கள் வழக் கில் இருந்து வருகின்றன. சீத்தலைச் சாத்தனார் என்ற புலவர் பெயரும் இங்கு ஒப்புநோக்கி உணரத்தக்கது. உள்நாட்டு வணிகராகவும் ஒண்டமிழ்ப் புலவராகவும் இவர் விளங்கியிருக் கிறார் என்று கொள்ளத்தகும்.

---

8. செய்யுள் 344.

8a. 11, வரி 190 உரை.

இவன் போன்ற கண்ணகியின் தந்தையாகிய மாநாய்கனும் காரணப்பெயரோடு விளங்கினுன். நாய்கன் என்ருல் நாவாய் மிகுதியாக உடையவன் என்று பொருள்படும். நாவாயை உடையவன் நாய்கன் எனப் பட்டான். நாவாய்கன் என்ற சொல் நாய்கன் என மருவியது என்று கொள்ள இடமுண்டு. மா நாய்கன் என்ருல் 'பெரிய கப்பல் வணிகன்' என்று பொருள். ஆகவே இவன் கடல் வாணிகமாகிய வெளிநாட்டு வாணிகத்தில் சிறந்திருந்தமை பெறப்படும். இதனுல் உள் நாட்டு, வெளிநாட்டு வணிகர்கள் உறவின் முறையினராகிக் கொள்வினை கொடுப்பனை செய்து கொண்டனர் என்ற உண்மை புலனுகும்.

பல்லவர் காலத்தில் நாகப்பட்டினம், காரைக்கால் ஆகியவை சிறந்த துறைமுகப் பட்டினங்களாய் விளங்கின. இந்தக் கால வணிகர் குலத்தைச் சேர்ந்தவர்தாம் இயற்பகை நாயனுரும், காரைக்கால் அம்மையாரும். 'செல்வமலி நாகை' 'செல்வமலி காரைக்கால்' என்று சேக்கிழாரும் இத் துறைமுகப் பட்டினங்களைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

மணிமேகலையில் சாதுவன் என்ற வணிகன் பொருளீட்டக் கருதி வெளிநாட்டுச் செலவை மேற்கொண்ட செய்தி கூறப்படுகிறது. இதனுல் பழந்தமிழர் மேற்கொண்ட கடல் வாணிகத்தைப் பற்றிய குறிப்பு நன்கு தெரிய வருகிறது. வாழ்வு நெறி பிறந்த காரணத்தால் வளவிய செல்வம் எல்லாம் தொலைத்த சாதுவன் பொருளீட்டும் பெருநோக்கோடு வணிகரோடு ஒரு கலத்தேறி அயல்நாடு நோக்கிச் செல்கின்ருன். இடையே கடலில் கலம் கவிழ்ந்த காரணத்தால் நாகர் தீவை அடைகின்ருன். இவனை அத்தீவினர் மரியாதையுடன் வரவேற்று, இவன் கூறும் அறிவுரையும் ஏற்றுப் பொருள் கொடுத்து அனுப்புகின்றனர். இதற்குக் காரணம் இவன் நாகர்மொழி பேசியமையேயாகும். இதனின்று வணிகர் அக்காலத்திலேயே பல மொழி அறிந்திருந்தனர் என்பது தெளிவாகும். வணிக வளர்ச்சிக்கு இப் பன்மொழிப் புலமை இன்றியமையாத ஒன்று என்று அவர்கள் கருதியிருந்தமை இதனுல் விளங்கும். சாதுவனது வெளிநாட்டுச் செலவால் மலேயா, கிழக்கு இந்தியத் தீவுகள் முதலிய நாடுகளோடு தமிழர்க்கிருந்த நெருங்கிய வாணிகத் தொடர்பு நன்கு புலனுகும். பர்மா முதலிய கிழக்கு நாடுகளோடும் தமிழர் வாணிக உறவு மேற்கொண்டமை விளங்கும். இந்நாடுகளோடு இக்காலத்தில் நாட்டுக்கோட்டை நகரத்தார் வாணிக உறவு கொண்டிருப்பது நாடறிந்த நற்செய்தியாம்.

தேக்கமரத் துண்டு

அசிரியர்கள் நாடாகிய அசிரியாவில் (Assyria) 'உர்' (Ur) என்ற பெயரையுடைய ஒரு நகரம் இருந்தது. அதனை அகழ்ந்தபோது தேக்கமரத்துண்டு ஒன்று காணப்பட்டது. அதன் காலம் கி. மு. 4000 என்று ரைஸ் டேவிட்ஸ் (Rhys Davids) கூறுகிருர். அப் பழங்காலத்தில் தேக்கமரம் தமிழ் நாட்டைத் தவிர வேறு எங்கும் இல்லை என்று அவரே குறிப்பிடுகிருர். எனவே தமிழ் நாட்டு வணிகர்கள் அசிரியா, பொனிஷியா, எகிப்து முதலிய மேலை நாடுகளோடு வாணிகம் செய்து வந்தனர் என்பதும், அவர்கள் மூலமாகவே தேக்குமரம் ஆங்குச் சென்றிருக்க வேண்டும் என்பதும் தெளிவாகும்.

பொனீசியரும் நாட்டுக்கோட்டை நகரத்தாரும்

சிரியா (Syria), பாலத்தீனம் (Palestine) ஆகிய இருநாடுகளுக்கும் பழங்காலத்தில் பொனீசியா (Phonesia) என்று பெயர். அதில் வாழ்ந்த மக்கள் பொனீசியர் என வழங்கப் பட்டனர். அவர்கள் தான் முதன்முதலில் கப்பல் வழியாக இங்கிலாந்து சென்று நல்ல துணிமணிகளையும், ஆடைகளையும் ஆங்கில நாட்டினருக்குக் காட்டினர். அந் நாளில் நாகரிகத்தில் அத்துணை செம்மை பெருத வெள்ளையர் ஆண்களோடும் பெண்களோடும் கூடிக்கொண்டு ஆடை வகைகளைப் பார்த்து

வியந்தனர். இதனை 'அறிவுக் களஞ்சியம் (Book of Knowledge) என்ற நூல் ஓவியத் தோடு விளக்கிக் காட்டியுள்ளது. அந்த ஓவியத்தில் உள்ள பொனீசியர், மொட்டை அடித்த தலையுடனும், தொளையிடப்பட்ட காது டனும் காட்சி யளிக்கின்றனர். இவ்வுருவம் நாட்டுக்கோட்டை நகரத்தாரை நமக்கு நினை வூட்டுகிறது. ஏனெனில் நம் தமிழ் நாட்டில் பலவணிகப் பிரிவுகள் உள்ளன. அவற்றுள் மொட்டை யடித்தலும், காது வளர்த்தலும் ஆகிய செயல்களைத் தனவணிகராகிய நகரத் தாரே சிறப்பாக முன்பு மேற்கொண்டிருந் தனர். வேறு எவரும் இந்த ஒழுகலாற்றை வரன் முறைப்படி மேற்கொள்ள வில்லை. மேனுட்டுப் பண்டைய வணிகருக் குள்ளே பொனீசியரைத் தவிர வேறு யாரும் இந்த இருவினையும் மேற் கொள்ளவில்லை. இதனுல் பொனீசியருக்கும் தனவணிகருக்கும் உள்ள பழங்காலத் தொடர்பு நன்கு விளங்கும். பொனீசியரைப் பார்த்து நம் தனவணிகர் தம் தலையினை மொட்டையடித்தல், காது தொளை யிடல் ஆகியவற்றை மேற் கொண்டனரா அல்லது தனவணிகரைப்பார்த்து பொனீசியர் இவ்வொழுக்கம் மேற்கோண்டனரா என்பது ஆராயத்தக்கது. மேலும், வேதத்தில் வணி கரைப் பற்றிக் கூறிய தகுதி அத்தனையும் பொனீசியரைப் பற்றி வரலாற்றுசிரியர்கள் குறிக்கிருர்கள். இந்தப் பொனீசியர் காலம் கி. மு. 3000 முதல் கி. மு. 1000 வரை ஆகும். நம் தமிழ்நாட்டு வணிகம் கி. மு. 4000-இல் எகிப்து, அரேபியா, பாரசீகம் ஆகிய மேலை நாடுகளில் பரவியிருந்தமை வரலாறு காட்டும் உண்மையாகும். இவற்ருல் நகரத்தாருக்கும் மேலைப்புல வணிகருக்கும் மிகப் பழங்காலந் தொட்டே இருந்துவரும் வணிகத்தொடர்பு நன்கு விளங்கும்.

அசிரியா, சுமத்திரா, அபிசீனியா ஆகிய நாட்டவரோடு பழந்தமிழர் வணிக உறவு மேற்கொண்டமைக்கு வரலாறு சான்று பகர் கின்றது. வணிகக் கப்பல்கள் இந்நாடு களின் கரையோரமாகப் போய் வந்து கொண் டிருந்தன.

தமிழ் வாணிகத்திற்கு பைபிளும் (Bible) தக்க சான்று பகர்கின்றது. தமிழ்நாட்டிலிருந்து கி. மு. 1000-ஆம் ஆண்டில் சாலமன் என்ற அரசனுக்கு மயில் தோகை, குரங்கு முதலியவை அனுப்பப்பட்டிருக்கின்றன. பைபிளின் "பழைய ஏற்பாட்"டில் (Old Testament) தோகை என்பது துகி என்றும், அரிசி என்பது அரிசா என்றும் கூறப்பட்டுள்ளது.

இடைக்காலம்

பிற்காலச் சோழர் காலத்தில் கடல் வாணிகம் செழித்திருந்தது. இராசேந்திரன் மலேயாவில் இப்பொழுதுள்ள 'கெடா' என்ற கடாரத்தை வென்ருன். இதனுல் இவன் 'கடாரம் கொண்ட சோழன்' எனப் பெயர் பெற்ருன். சுமத்திரா, சாவா, மலேயா, இந்தோசீனு ஆகிய நாடுகளில் தமிழ்நாட்டு வணிகர் வாணிகம் புரிந்துவந்தனர். அந்த வணிகருக்கு நேர்ந்த இன்னலைப் போக்க இராசேந்திரன் மலேயாவின்மேல் படையெடுத் துச் சென்று ஆண்டுகொண்டிருந்த மன்னனை வென்ருன். வென்ருனே தவிர நாடாட்சியை இவன் மேற்கொள்ளவில்லை. உரிய அரச னிடமே ஒப்படைத்து ஒழுங்காக ஆளும்படி பணித்தான். சில துறைமுக நகரங்களை இவன் உரிமையாக்கிக் கொண்டான். சோழர் கப்பற் படை மலேயா செல்லவேண்டிய இன்றியமை யாமை என்ன என்ருல்? அங்கு வாழும் வணி கர் இடுக்கண் களைய உடுக்கை இழந்தவன் கைபோல உதவவும், வணிகர் நலனில் அக்கறை காட்டவும், வெளிநாட்டு வணிகம் செழிக்க அரசு தன்னுலியன்ற ஆதரவு காட்டவு மேயாம். வணிகர் மூலம் வெளிநாட்டு நாணயச் செலாவணியில் தமிழரசிற்குப் பெருவருவாய் கிடைத்தமையின், அவர்கள் நலனில் தமிழரசு பேரக்கறையும் பெருங்கவனமும் செலுத்துவ தாயிற்று. எவ்வித இடையூறுமின்றி வாணிகம் பேணவும், வளம் பல பெருக்கவும் வழி வகுத் துக் கொடுத்தது. அதனுற்ருன் வணிகருக்கு இடையூறு என்று அறிந்ததும் அலைகடலையும் தாண்டிக் கப்பற்படை போர்மேற் சென்றது. அதே நாட்டிற்குத்தான் முன்னர்ச் சாதுவனும் சென்ருன். ஆயிரம் ஆண்டுகட்குப் பின்னரும் அதே நாட்டிற்கு இப்பொழுது தனவணிகர்

சென்றுவருகின்றனர். சங்க காலத்தில் ஏற்றப் பெற்ற வணிகக் கொடி இடைக்காலத்தே சோழர் ஆட்சியிலும், இப்பொழுது இருபதாம் நூற்றுண்டின் இடைக்காலம் வரையிலும் வானில் பட்டொளிவீசிப் பறந்துகொண்டிருந் தது. ஆனல் இன்று வெளிநாட்டில் தமிழ் வ ணி க ர் நிலே வருந்துவதற்குரியதாய் உள்ளது. ஏனென்று கேட்பார் இன்மையா லும், மற்றுமொரு சோழ அரசு மாநிலத்தில் இல்லாமையாலும், ஆளும் அரசும் அக்கறை காட்டாமையாலும் இந்த அவலநிலே ஏற்படுவ தாயிற்று.

வணிகப் புலவர்கள்

சங்க காலத்தில் வணிகர் பலர்வண்டமிழ்ப் புலவராகவும் விளங்கியிருக்கின்றனர். மொழித் துறையும் தொழில் துறையும் முரண்படாமல் இணேந்து சென்றிருக்கின்றன என்பதற்கு இப்பெருமக்கள் வாழ்வு ஓர் அரிய சான்று.

ஆடுதுறை மாசாத்தனுர், உறையூர் இளம் பொன் வணிகனுர், உறையூர் முதுகண்ணன் சாத்தனுர், ஒக்கூர் மாசாத்தனுர், ஒக்கூர் மாசாத் தியார், கருவூர்க் கந்தப்பண்ணேச் சாத்தனுர், சாத்தந்தையார், பெருந்தலேச் சா த் த னு ர், மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனுர், மதுரைக் கூல வாணிகன் சீத்தலேச் சாத்தனுர், வாணியன் தாதன் முதலிய பெருமக்கள் வணிக வாழ்வினராய், வண்டமிழ் நயந் தேரும் செவ்வியராய்ச் சிறந்து பொலிந்தனர். இரண்டாம் நூற்றுண்டில் இருந்த இம்மரபு, மங்காமல் மாருமல் மாண்புடன் இருபதாம் நூற்றுண்டிலும் தொடர்ந்து நிலேபெற்று வரு கிறது என்பதற்கு இக்காலப் புலவர் சிலர் சான்ருய் விளங்குகின்றனர். வன்றெண்டர், அவர் மாணுக்கர் காரைக்குடி முத்துப்பட்டணம் சொக்கலிங்க ஐயா, கீழச்சிவற்பட்டி பாடுவார் முத்தப்ப செட்டியார், பெரும்பேராசிரியர் பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார், வயி நாகரம் இராமநாதச் செட்டியார் முதலியோர் இப்பட்டியலில் இடம் பெறுவோராவர்.

வணிகப் பெண்மணிகள்

சிலப்பதிகாரத்தில் பேசப்படும் கண்ணகி யும் மணிமேகலேயில் கூறப்படும் ஆதிரை, விசாகை ஆ கி யோ ரு ம் இடைக்காலத்தில் காரைக்காலம்மையாரும் தலேசிறந்த வணிகப் பெண்மணிகளாவர்.

கணவனேப்பிரிந்த மகளிர் சோமகுண்டம், சூரியகுண்டம் ஆகிய நீர்த்துறைகளில் மூழ்கி எழுந்தால் கணவனேத் திரும்பப் பெறுவர் என்று தேவந்தி என்ற பார்ப்பனத் தோழி கண்ணகியிடம் கூறுகிருள். அதைக் கேட்ட கண்ணகி ''பீடன்று'' என்று அவள் கூற்றை ஏற்க மறுக்கிருள். தன் போன்ற மகளிர்க்கு அச்செயல் பெருமை தருவதன்று என்று அவள் கருதினுள். இதனுல் கண்ணகியின் கற்புங் காழ்த்த சிந்தையும், மனேயற மாண்பும் நன்கு விள்ங்கும். விருந்தோம்பலிலும் இவள் சிறந் தவள் என்பதைத் ''தொல்லோர் சிறப்பின், விருந்தெதிர் கோடலும் இழந்த என்னே'' [9] என்று இவள் கோவலனிடம் கூறும் கூற்றுல் நன்கு உணரலாம்.

மணிமேகலேயில் கூறப்படும் சாதுவன் மனேவி ஆதிரை கற்பிற் சிறந்த காரிகையாகக் காட்டப்படுகிருள். மணிமேகலே, தன் கையில் ஏந்திய அமுதசுரபியில் அன்னம் எடுக்க, எடுக்கக் குறையாமல் இருப்பதற்காக முதன் முதலில் ஆதிரையிடம் பிச்சை ஏற்கிருள். மணிமேகலே, ''புனேயா ஓவியம் போல நிற் றலும் ...... ஆதிரை இட்டனள் ஆருயிர் மருந் தென்''[10] என்று சாத்தனுர் ஆதிரையின் செம் மை சான்ற உள்ளத்தைச் சிறப்பித்துக் கூறுகிருர்.

விசாகை என்ற மற்றெரு பெண்ணின் சீ ரி ய கற்பையும், மணிமேகலே பாராட்டிக் கூறுகிறது. தா ன் காதலித்த அன்பனேக் கடிமணம் செய்து கொள்ள முடியாமற் போயினமையின், இறக்கும்வரை மணவாமலே

9. 16. வரி 72-73.

10. 16 வரி 131-135

அவன்பால் காதல் ஒழுக்கம் மேற்கொண்டு ஒழுகினுள். முனிவர்கள் இவளது சிறந்த பண்பு நலத்தைச் சோழனிடம் எடுத்துரைக் கின்றனர். இது மணிமேகலேக்கு முற்பட்ட கதையாகும்.

பல்லவர் காலத்தே காரைக்காலம்மையார் செந்தமிழ்ப் புலமையும், சீரிய கற்பும் செறிந்த செல்வியராகக் காட்சியளிக்கிருர். "பேய்" என்ற இயற்பெயருடன் காரைக்காலில் தோன் றிய அம்மையார், நாகபட்டினத்தில் வாழ்க் கைப் பட்டார். கணவன் கூற்றுப்படி தெய்வ மாங்கனி வருவித்து அளித்தார். இவரது பாடல்கள் பதினேராம் திருமுறையில் இடம் பெற்றுள்ளன. இவை இவர்தம் புலமை நலத்தைப் புலப்படுத்துவனவாகும். ஆண்ட வனல் "அம்மையே" என்று அழைக்கப்படும் சிறப்பிஜனப் பெற்றதாகப் புராண நூலுடை யார் கூறுவர். யாப்பருங்கல விருத்தியுரையில் "இது பத்தினிப் பாட்டு" என்று நூல் ஒன்று குறிக்கப்படுகிறது. கண்ணகியே பத்தினி யென்று காவியங்களில் சிறப்பித்துப் பேசப் படுபவள். அவள் ஆக்கிய பாட்டா அல்லது அவள் மேல் எழுந்த பாட்டா என்பது ஆராய் தற்குரியது.

வணிகர் சமயம்

வணிகர்கள் காலநிலேக் கேற்ப வாழ்க் கைக்கு ஏற்புடைய சமயங்களேச் சார்ந்து வாழ்ந்து வந்தனர். சங்க காலத்தில் பௌத் தர்களாகவும், சமணர்களாகவும், சைவர்களா கவும் அவர்கள் விளங்கி யிருக்கிருர்கள். கோவலன் சமண சமயத்தையும், மாசத்து வான், மாநாய்கன் ஆசீவகச் சமணத்தையும், சாதுவன் பௌத்தத்தையும் சார்ந்திருந்தனர் என்று காவியங்கள் கூறுகின்றன. பலர் சமணத்தையும், பௌத்தத்தையும் தழுவக் காரணம், அவை அன்பையே ஆணிவேராகக் கொண்டிருந்தமையேயாம். எச் சமயத்தைச் சார்ந்திருந்தாலும் ஒழுக்கத்தையே உயிர்நாடி யாகக் கருதி வந்தனர். நேர்மையும் நாணய முமான நெறியிலேயே தலேப்பட்டனர். அதனுல் உலக வாழ்வில் ஒரு குறையுமின்றி வாழ்ந்து வந்தனர்.

★

தொல்காப்பியமும் மொழிநூலும்

சுப. அண்ணுமலை, பி. ஓ. எல். (ஆனர்சு)
தமிழ் விரிவுரையாளர், தியாகராசர் கல்லூரி, மதுரை.

மக்கள் சமூகமாகக் கூடிவாழ்ந்து சிறப் படையப் பயன்படுத்தும் கருவிகளுள் தலையாயது மொழி. அவர்கள் தம் உடலில் உயிரினை இயங்கச்செய்யும் மூச்சுக்காற்றினையும் உண்ணுதற்கு அமைந்த உறுப்புக்களையும் கொண்டே இம் மொழிக் கருவியை உண் டாக்கிக் கொள்ளுகிறார்கள். நினைவு, உணர்ச்சி, சிந்தனை என்னும் மூவகை ஆற்றல்களால் உள்ளத்தில் எழும் கருத்துக்களை இக்கருவியின் உதவியால், சிறந்த பயன் விளையும் வண்ணம் வெளியிடுகிறார்கள். பல்லாயிரம் ஆண்டு களாக மனித இனம் மொழியின் தேவையை உணர்ந்து அதனை நன்கு வளப்படுத்திப் பயன்பெற்று வருகிறது.

உலகில் ஆயிரக்கணக்கான மொழிகள் வழங்கி வருகின்றன. இவற்றில் சிலவற்றின் ஒலியமைப்பு, சொல்லமைப்பு, தொல் தொடர் அமைப்பு, சொற்பிறப்பியல் முதலியவை பற்றிய முறையான ஆராய்ச்சி மேலைநாட்டில் கி. பி. 19-ஆம் நூற்றாண்டில் எழுந்தது. அதற்கு முன்னும் அங்கு மொழியாராய்ச்சி நடந்ததெனினும், மொழியில் காலப்போக்கில் மாறுதல் ஏற்படுவது இயல்பே என்னும் பேருண்மையும் அம் மாறுதல்களால் புதிய மொழிகள் உண்டாகி வளர இடமுண்டு என்னும் உண்மையும், தம்முள் அடிப்படைத் தொடர்புடைய பல மொழிகள் உலகில் ஆங் காங்கு வழங்குகின்றன என்பதும் பழங்கால மேலைநாட்டு மொழியறிஞருக்குத் தெரிந் திருக்கவில்லை. இலத்தீன் மொழி தவிரப் பிற மொழிகள் எல்லாம் சிதைவுமொழிகள் என்றும், பாமரர் இலத்தீனைச் செவ்வையாகக் கற்று ஒழுங்காக வழங்காததாலேயே சிதைவு மொழி கள் உண்டாகி விட்டன என்றும் உறுதியாக நம்பிய அவர்கள் இம் மொழியின் இலக்கணத் தைப் பின்பற்றி ஆங்கிலம், பிரெஞ்சு, செர்மன் முதலிய மொழிகட்கு இலக்கணம் வகுப் பதிலேயே தம் காலத்தைக் கழித்தனர்.

16, 17-ஆம் நூற்றாண்டுகளில் இந்தியா விற்கு வந்த ஐரோப்பியப் பாதிரிகளின் வாயிலாக வடமொழி யிலக்கிய இலக்கணங்கள் பற்றிய அறிவு மேலைநாட்டு அறிஞரிடையே சிறிது பரவியது. 18-ஆம் நூற்றாண்டில் ஆங் கிலேய அறிஞர் பலர் இங்கு வந்து வடமொழியை நன்கு கற்று ஐரோப்பாவில் அம் மொழி யிலக்கணங்கள் பரவ வழிசெய் தனர். கி. மு. 3 அல்லது 4-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படும் பாணினியின் வடமொழி யிலக்கணம் ஐரோப்பிய மொழி நூலறிஞரின் கண்ணைத் திறந்து புதுப்பாதை காட்டியது என அமெரிக்க மொழி நூலறிஞர் புளும் பீல்டு எழுதுகிறார். பாணினி தம்காலத்து வடமொழியின் ஒலிமுறை, ஒலியமைப்பு, சொல் லமைப்பு, சொல்லின் உட்பிணைப்பு நிலை, தொகைச் சொற்களின் அமைப்பு, சொற்களைத் தொடராக அமைத்து வழங்கும் வழக்குகள் ஆகியவற்றை மிக நுணுக்கமாகவும் விரிவாகவும் விளக்கியுள்ளதைக் கண்டு அவர்கள் வியந் தனர். அவருடைய விளக்கங்கள் இலக்கண விதிகளை மட்டும் அடிப்படையாகக் கொண் டிராமல் மக்களின் பேச்சை நேரிற்கேட்டு ஆராய்ந்து தரப்பட்டுள்ளதையும் அவர்கள் உணர்ந்தனர். இவ்விலக்கணத்தை நன்கு படித்ததால் ஐரோப்பிய மொழிகட்கும் வட மொழிக்கும் இடையே உள்ள தொடர்பு மேற் போக்காக அவர்கட்குப் புலனாகியது. அதிலி ருந்து மேலைநாட்டின் பல்வேறிடங்களில் இம்மொழிகளை ஒப்புநோக்கிக்காணும் ஆய்வும் (Comparative study of the Indo-European languages) அதன் விளைவாக, இவை எல்லா

வற்றிற்கும் மூலமொழியாக இருந்த மொழியின் நிலை பற்றிய ஆய்வும் தொடங்கி வளர்ந்தன.

தமிழ் மொழிக்குப் பேரிலக்கணம் வகுத்த தொல்காப்பியர் பாணினிக்கு முன்பு வாழ்ந்திருந்தவர். இதற்குப் பல சான்றுகள் காட்டலாம் எனினும் இங்கு ஒன்றோடு அமைகிறேன்: பனம்பாரனுர் தொல்காப்பியத்திற்கு அளித்த பாயிரத்தில் "ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்" என்று கூறியுள்ளார். வடமொழியிலக்கணங்களில் ஐந்திரம் முற்பட்டது; பாணினீயம் பிற்பட்டது. பின்னது தோன்றிய பின்னர் முன்னைய இலக்கண முறைகள் எல்லாம் செல்வாக்கிழந்தன என்பர் வடமொழியிலக்கிய வரலாற்று நூலார். தொல்காப்பியர் செல்வாக்குடைய பாணினீயத்தைப் படிக்காமல் ஐந்திரத்தைப் படித்து வல்லரானுர் என்னும் செய்தி அவர் பாணினிக்கு முற்பட்டவர் என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றது. தொல்காப்பியருக்கு முன்பே இலக்கண ஆய்வும், நூல்களும் தமிழகத்தில் இருந்து வந்தன என்பதற்கு அவர் நூலிலேயே சான்றுகள் உள்ளன. வடமொழியைப் பன்னூற்ருண்டுகளாக அறிஞர் ஆராய்ந்து வந்தது போலவே தமிழகத்திலும் தமிழ் மொழி ஆய்வு நெடுங்காலம் நடந்திருக்கிறது. அதன் விளைவாகத் தொல்காப்பியரின் நிறைந்த அறிவும் பரந்த அனுபவமும் கருவியாகநிற்க எழுந்ததே தொல்காப்பியம். பாணினீயத்திற்கு மாருக அல்லது அதற்கு முன்பாகத் தொல்காப்பியம் ஐரோப்பிய நாடுகட்குச் சென்றிருந்தால் அங்கு மொழியாராய்ச்சியுலகில் அது ஏற்படுத்திய மாறுதலைத் தானும் உண்டாக்கியிருக்கும் என்பது உறுதி. இந்தியா வெங்கிலும் வடமொழி செல்வாக்குப் பெற்றிருந்ததனுலும் பின்னூற்ருண்டுகளில் தமிழ் மக்களுக்கே தம் பழைய இலக்கண நூலைப் பற்றிய அறிவுஇல்லாதிருந்ததாலும் பாணினீயம் கடல் கடந்து சென்றது; தொல்காப்பியம் பிறந்த இடத்திலும் பாராட்டுவாரின்றிக் கிடந்தது.

தமிழ் ஒலிகளின் பிறப்பு, ஒலியமைப்பு சொல்லாக்கம் முதலியன தொல்காப்பியத்தில் வியக்கத்தக்க முறையில் விளக்கப் பட்டிருக்கின்றன. பாணினீயத்தின் துணையால் மேலை நாட்டினரால் வளர்க்கப்பட்டு இன்று சொல்லாக்கப்பெற்று வருகின்ற "விளக்கமுறை மொழியியல் (Descriptive linguistics) கூறும் உண்மைகள் பல தொல்காப்பியருக்கு ஓரளவு புலனுகி யிருந்தன. இன்றைய மொழி நூலார் மேற்கொள்ளும் ஒலிப்புமுறை ஒலியியல் (Articulatory phonetics) சொல்லாக்கவியல் (Morpholozy) ஆகிய ஆய்வுகளை அவரும் ஓரளவு செய்திருக்கிருர். அவரது அரும்பெரும் நூலை ஒருவாறு துருவி, மொழியாராய்ச்சி உலகிற்குப் பயன்படும் குறிப்புக்களை எடுத்து விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.

மொழியின் இருபெருங் கூறுகள் ஒலியும் சொல்லும் ஆகும். சொற்களாகத் தொடர்ந்து நின்று பொருள் தரும் ஒலிகள் மனிதரின் வாயினின்றும் மூக்கினின்றும் பிறப்பதை ஆய்வது மிகவும் சுவை பயக்கும். மேலை நாட்டார் ஒலிப்பிறப்பு ஆராய்ச்சியைத் தனிப்பிரிவாக்கி அதில் மிக்க வல்லமை பெற்று விளங்குகின்றனர். தொல்காப்பியரும் எழுத்ததிகாரத்தில் பிறப்பியல் என்று தனியியல் வகுத்துள்ளார். அவ்வியலில் முதற்கண் பல், இதழ், நாக்கு, மூக்கு, மேல்வாய் என ஒலியுறுப்புக்களை (Articualators ant Points of articulation) வகைப்படுத்தி இவற்றின் முயற்சியால் ஒன்றுக்கு ஒன்று வேறுபட்ட ஒலிகள் பிறக்கின்றன என்று கூறுகிருர்.

"பல்லும் இதழும் நாவும் மூக்கும்
அண்ணமும் உளப்பட
.... உறுப்புற்றமைய நெறிப்பட நாடி
எல்லா எழுத்தும் சொல்லுங் காலைப்
பிறப்பின் ஆக்கம் வேறு வேறியல"
(தொல். 83)

உடலினுள்ளிருந்து எழும் காற்று, தொண்டையில் உள்ள ஒலித் தசைகளின் (Vocal chords) ஊடே நுழைந்து ஒலியாக மாறி வாயில் யாதொரு தடையும் இன்றி உயிர் ஒலிகளாகப் பிறக்கிறது. வாயின் அமைப்பை நாம் பல வகையாக மாற்றுவதால் உயிர்கள் பலவாக உள்ளன ஆதலால் தொல்காப்பியர்,

" பன்னீருயிரும் தம் நிலை திரியா
மிடற்றுப் பிறந்த வளியின் இசைக்கும்"
(84) என்றும்

இவ்வொலி வெளிப்படும் போது வாய் விரிவதால் சில உயிர்களும், குவிவதால் சில உயிர்களும் பிறப்பதால்,

" உ ஊ ஒ ஓ ஔ என இசைக்கும்
அப்பால் ஐந்தும் இதழ்
குவிந்தியலும்" (87) என்று கூறிப்

பிற உயிர்கள் ஏழும் வாய் விரிவதாற் பிறப்பவை யெனப் பெற வைத்தும் செல்கிறார். விரிப்பு உயிர்களில் (unround vowels) அ, ஆ என்பவை அடிநாக்கு வாயின் கீழ் இடத்திலேயே படிந்து நின்று சிறிது மேலே எழுவதால் பிறக்கும் 'பின்தாழ் உயிர்கள்' (Low Back vowels) ஆதலின், "அவற்றுள் அ ஆ அங்காந்தியலும்" என்றும், பிறவற்றுள் நான்கு நுனி நாக்கு மேல் வாய்ப் பல்லை நோக்கியும் வாயின் நடுவிடத்தில் நின்றும் (ஐ-என்றஒலி இவ்வாறு பிறப்பதன்று) செய்யும் சிறு முயற்சியால் பிறக்கும் முன்னுயிர்கள் (Front vowels) ஆதலின்,

" இ ஈ எ ஏ ஐ என இசைக்கும்
அப்பால் ஐந்தும் ....
அண்பல் முதல் நா விளிம்புறல்
உடைய" (86) என்றும்

கூறுகிறார்.

மெய்யொலிகள் யாவும் வாயுறுப்புக்களின் கூட்டு முயற்சியால் - அவை ஒலிக்காற்றைப் பல வகையாகத் தடை செய்வதால் பிறப்பவை. நாக்கு வாயின் எல்லா இடங்களையும் தொடவல்லது; விரியவும், குவியவும், வளையவும் வல்லது. ஒலியாகவோ ஒலியின்றியோ தொண்டையினின்று வெளிப்படும் காற்று மேல் வாயின் பல இடங்களை நாக்குத் தொடுவதாலும், இதழ்கள் தம்முள்ளும், மேல்வாய்ப் பல்லுடனும் பொருந்துவதாலும் தடைப் பட்டு மெய் யொலியாக வெளிப்படுகிறது. இக்காற்று மூக்கின் வழியாக வெளிவர, அதே நேரத்தில் வாயில் மேற் சொல்லிய தடைகள் ஏற்படுமாயின் மூக்கின் மெய்கள் (nasal consonants)– மெல்லின மெய்கள் பிறக்கும். பல் இங்ஙனம் வல்லொலி, மெல்லொலி இரண்டிற்கும் ஒலிப் பிடம் (Point of articulation) ஒன்றுதலால் தான் தொல்காப்பியர், "ககார ஙகாரம் முதல்நா அண்ணம்", "சகாரம் ஞகாரம் இடை நா அண்ணம்", "டகார ணகாரம் நுனிநா அண்ணம்" என இரண்டிரண்டாகச் சேர்த்தே பிறப்பு வகுக்கிறார். இது அவரது ஒலிப் பிறப்பு ஆய்வின் நுண்மையைக் காட்டுகிறதன்றோ?

வாயில் தடை அதிகமின்றிப் பிறக்கும் மெய் யொலிகளைத் தமிழிலக்கணம் இடையினம் என வழங்கும். தடையே இல்லாமற் பிறக்கும் உயிரொலிகட்கும், மிகத்தடைப் பட்டுப் பிறக்கும் வல்லொலி மெல்லொலிகட்கும் இடைப்பட்டனவாதலின் இவைகட்கு இப் பெயர் பொருத்தமே. ஒலி நூலார் இவற்றை மூச்சினம் (Spirants), பக்கவினம் (Laterals) தட்டினம் (Flaps) எனப் பல வகையுள் அடக்குவர். இடையின மெய்கள் பிறக்கும் முறையையும் தொல்காப்பியர் குறித்துச் செல்கிறார்.

மொழிநூலார் பேச்சொலிகளைச் (Speech sounds) சிறப்பொலிகள் (Significant sounds) என்றும் சார்பொலிகள் (allophones) என்றும் இருவகையாகப் பிரிப்பர். ஒரு மொழியில் வழங்கும் ஒலிகள் எல்லாம் சிறப்பொலிகள் அல்ல. அவை வழங்கும் தன்மையைக் கொண்டே சிறப்புத் தன்மையையும் சார்புத் தன்மையையும் அறிய முடியும். எடுத்துக்காட்டாக'க்'-என்றும் எழுத்தால் குறிக்கப்படும் ஒலிகளைப் பற்றி ஆராய்வோம். கல், கட்டு, காட்சி, குன்று என்ற சொற்களில் முதலில் கேட்கப் படும் ஒலி, சுகம், புகார், முகில், உலகு என்ற சொற்களின் இடையில் கேட்கப்படவில்லை. தங்கம், சிங்கி, பங்கு, மங்கை என்ற சொற்களின் இடையில் வேறு ஒலி கேட்கப்படுகிறது. ஆயின் இம் மூன்று ஒலிகளையும் க்–என்ற ஓர் எழுத்தே (உயிர் மெய்க்குரிய சிறு மாறுபாடுகளுடன் சேர்ந்து) குறிக்கிறது. இம் மூன்று ஒலிகளும் தமிழ் ஒலிகளே. ஆனால் இவற்றுள் ஒன்று சிறப்பொலி; ஏனையவை சார்பொலிகள். இதனை எவ்வாறு காண்பது ?

கல், கட்டு முதலியவற்றில் க்–என்ற ஒலி (வசதிக்காக)–[k] என்ற ஒலி (எனக் கொள் வோம்) மொழி முதல் ஆவது போல், அகம், முகில் முதலியவற்றில் உள்ள [h] ஒலியோ தங்கம், மங்கை முதலியவற்றில் உள்ள [g] ஒலியோ எந்தத் தமிழ்ச் சொல்லிலும் முதலில் ஒலிப்பதில்லை. இதையே வேறு வகையாக விளக்குவோம். கல், பல் என்ற இரு சொற்களில் க், ப்–என்ற ஒலிகளைத் தவிர ஏனைய (அல்) ஒத்திருக்கின்றன. இவற்றினிடையே உள்ளது ஓர் ஒலி வேறுபாடே. அதுவே இவற்றின் பொருள் மாறுபாட்டிற்குக் காரணம். எனவே அவ்வேறுபாட்டைப் பொருட் சிறப்புடைய வேறுபாடு (Significant difference) எனலாம். க், ப்–என்ற ஒலிகளையும் சிறப்பொலிகள் எனலாம். க்–வருமிடத்தில் ப்–வந்து சொற்பொருளை மாற்றுவது போல்,[h] ஒலியோ [g] ஒலியோ வந்து வேறு பொருள் தரும் சொல்லை உண்டாக்குவதில்லை. k–h–g இவற்றினிடையே பொருட் சிறப்புடைய வேறுபாடு காணப்படவில்லை. எனவே h, g என்பன தமிழில் சிறப்பொலிகள் அல்ல. (ஆங்கிலத்தில் call [ka : wl], hall [ha : wl], gall [ga : wl] என்ற சொற்களில் இம்மூன்று ஒலிகளும் பொருட் சிறப்புடைய வேறுபாடுடன் மொழி முதலில் நிற்பது காணத்தக்கது. அங்கு இவை மூன்றும் சிறப்பொலிகளே.) தங்கம் [t̲angam] என்பதை வெளிநாட்டார் ஒருவர் [t̲ankam] எனக் கூறினாலும், அகம் [aham] என்பதை [akam] எனக் கூறினாலும் அவர் கருத்துத் தமிழர்க்கு விளங்காமற் போகாது. ஆனால் அவர், 'கல் உடைந்தது என்பதைப் 'பல் உடைந்தது' என்பராயின் அது நகைப்புக்கு இடமாகும்.

கொஞ்சம், காசு, செந்தமிழ், மாம்பழம்- இவற்றில் முறையே உள்ள [j], [s], [d̲], [b], ஒலிகள் தமிழில் சிறப்பொலிகள் அல்ல; இவற்றையும் மேற்கண்டவாறு ஆராய்ந்து உண்மை காணலாம். இவைகள் யாவும் குறிப்பிட்ட ஒலிச்சார்புகளில் மட்டும் வருகின்றன. [h], [s], ஒலிகள் இரண்டு உயிர்களுக்கு இடையேயும், [g], [j], [d], ஒலிகள் மூக்கின் மெய்களை யடுத்தும் வருகின்றன. எனவே இவற்றைச் சார்பொலிகள் (allophones) என்றனர் மொழிநூலார். இவை சிறப்பற்றவை. ஆதலினாலேயே தொல்காப்பியரும் இவற்றின் பிறப்பைக் குறித்து விளக்கவில்லை; இவற்றிற்கெனத் தனி எழுத்துக்களும் வகுக்கவில்லை. /k h g/ மூன்றும் ஒன்றுக்கொன்று சார்பொலிகள் ஆதலின் க-என்றும் ஓர் எழுத்தே வகுக்கப்பட்டது. இன்றைய மொழி நூலார் இம்மூன்றையும் [k] என்றும் ஓர் ஒலிக்கோள் (phoneme) என அடக்குவர். சார்பொலிகளே இல்லாத தனிச் சிறப்பொலிகளும் தமிழில் உண்டு. அவற்றையும் ஒலிக்கோள் என அழைக்கலாம். phoneme—என்ற சொல்லுக்கு வரையறைப்படுத்திய பொருள் இல்லை. ஆனால் இதனை மூன்று வகையாக விளக்கிக் காட்டலாம். அவற்றின் இரண்டு விளக்கங்களே மேலே தரப்பட்டவை. தொல்காப்பியர் சிறப்பொலிகட்கு மட்டுமே பிறப்புக் கூறியுள்ளமை, ஒலிக்கோள் ஆராய்ச்சி (phonemic analysis) என இக்காலத்தார் கூறும் ஒன்றை அவரும் நிகழ்த்தியிருக்கவேண்டும் எனக் காட்டுகிறதன்றோ?

ஒரு மொழியின் ஒலிகளைச் சிறப்பும் சார்புமெனப் பிரித்தறிவதோடு ஒலிபற்றிய கல்வி முடிந்து விடுவதில்லை. சொற்களில் ஒலிகள் நிற்கும் முறைபற்றி அறிவது மிகவும் இன்றியமையாததாகும். ஒரு மொழியின் ஒலிக்கோள்கள் சில குறிப்பிட்ட ஒழுங்கான முறைகளில் அசைகளாகச் சேர்ந்து நின்று, ஒலி அமைப்புக்களை (patterns of speech sounds) உண்டாக்குகின்றன வென்றும், இவ்வாறு அமையும் அசைகள் (syllables) எத்தனை சேர்ந்து சொல்லாக அமைகின்றன என்று அளவிடுவதும், அவ்வாறு சேருங்கால் முதல் அசை, இடையிசை, ஈற்றசை ஆகியவை எவ்வெவ்வாறு (எந்தெந்த ஒலிகளை முதலிலும், ஈற்றிலும் கொண்டு) அமைந்துள்ளன எனக்

காண்பதும் மொழியாய்வாளரின் தலையாய கடமைகள் என்றும் இன்றைய மொழிநூலார் கூறுவர். அசை யமைப்புக்கள் மொழிக்கு மொழி வேறுபடும். தமிழில் உயிரும் மெய்யும் மாறி மாறித் தொடர்ந்து வரும் நிலையே பெரும் பகுதியாக உள்ளது. இதனுற்றான் மெய் முன்னும் உயிர் பின்னுமாக அமைந்த உயிர் மெய் எழுத்துக்கள் இருநூற்றுப் பதினறும் இலக்கணத்தில் சித்தமாக, தனித்தனி வடிவோடு எடுத்தோதப்படுகின்றன. இவை தனி ஒலிகள் அல்ல. தொல்காப்பியர்,'எழுத்து எனப் படுபஅகரமுதல் னகர இறுவாய் முப்பஃதென்ப சார்ந்துவரல் மரபின் மூன்றலங்கடையே' எனத் தமிழ் ஒலிகள் அத்தனையையும் குறித்து, அவற்றின் மாத்திரையும், எண்ணும் எடுத்துக் கூறிப் பின்னர் எழுத்துக்களின் வடிவு கூறும் இடத்தில் உயிர்மெய்களைப் பற்றி, அவற்றின் வடிவினைக் கூறியே விளக்குவது காணத் தக்கது. தமிழ்ச்சொல் எதிலும், முதலில் இரண்டு மெய்கள் சேர்ந்து நிற்பதில்லை. இவ்வியல்பினைத் தொல்காப்பியர்,

"உயிர் மெய்யல்லன மொழி முதலாகா"

என்ற நூற்பாவில் எடுத்துக்காட்டுகிறுர். இரண்டு உயிர்கள் மொழி முதலில் சேர்ந்து நில்லா என்ற இயல்பையும் இதனுல் பெற வைக்கிறுர். (வடமொழி, ஆங்கிலம் போன்ற மொழிகளில் த்வைதம், க்ஞானம், School. Stream என இரு மெய்கள் மொழி முதலில் சேர்ந்து நிற்பது இயல்பானதாகும்) எல்லா உயிர் மெய்களும் மொழி முதலில் வருவதில்லை; வரத்தக்கவை எவையென்றும் மொழியிறுதியில் வரத்தக்க மெய்களும் உயிர்களும் எவை யென்றும் தொல்காப்பியர் வகுத்துள்ளார். மொழியிடையில் இரண்டு அல்லது மூன்று மெய்கள் (தனித்தனிமெய்கள்) சேர்ந்து நிற்பது இயல்பே. இவ்வாறு சேர்ந்து நிற்கும் மெய்கள் இன்னின்ன வென்றும் அவற்றுள் முதலில் நிற்பன இன்னவென்றும், மூன்று மெய்கள் சேர்ந்து நிற்குமிடத்தில் முதலில் நிற்கத்தக்க மெய்கள் இவை யென்றும் அவர் ஆய்ந்துரைக்கும் முறை மொழி நூற் கண் கொண்டு நோக்குவார்க்கு மிக்க வியப் பளிப்பதாகும்.

ஒலிகள் தனியாகவோ சேர்ந்து நின்ருே பொருள் தரும் நிலையில் சொற்கள் ஆகின்றன. நெடில் உயிர்கள் ஏழும் தனியாக நின்றே பொருள் தரும் என்பதை, 'நெட்டெழுத்தேழும் ஓரெழுத்தொரு மொழி' என மொழி மரபில் கூறுகிறுர். ஈரெழுத்துச் சேர்ந்த ஓரசைச் சொற்களும் உண்டு என்பதைப் புலப்படுத்த ஈரெழுத்தொரு மொழியென அடுத்துக் கூறுகிறுர்.

வெறும் ஒலிகளின் சேர்க்கை சொல் லாகாது. பொருள்களைக் குறிக்கும் ஒலிவடிவ அடையாளங்களே சொற்கள் ஆதலின் பொருள்களும் காட்சியும் கருத்தும் அவற்றிற் குரிய - சொற்களும் மக்களின் காட்சியில் இரண்டறக் கலந்து வழங்குகின்றன. பொருள் உணர்ச்சியின்றிச் சொல்ஆராய்ச்சி செய்வது அரங்கின்றி வட்டாடுதலைப் போன்றதாகும். தொல்காப்பியர் சொல்லின் இயல்பினை'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்ற நூற்பாவில் கூறுகிறுர். அவரது சொல்லதி காரம் கட்புலனுக்கு அகப்படும் பொருள்களை யெல்லாம் உயர்திணை,அஃறிணை யென வகைப் படுத்தும் நூற்பாவுடன் தொடங்குகிறது. தமிழ் வழக்கில் பொருள்களின் திணையே சொற்களுக்கும் உரியன.

"மேலும் பிரிக்க முடியாத, பொருள் பொதிந்த ஒலி வடிவமே சொல்" என இக்கால மொழி நூலார் சொல்லை விளக்குவர். இவ் வியல்புடைய சொல்லை அடிச்சொல் (Free morph), இடைச் சொல் (Bound morph) என இரு வகைப்படுத்துவர். அடிச்சொல் என்பது வேறுேர் ஒலித் தொடரின் துணையின்றித் தனியே நின்றும் பொருள் தர வல்லது. (இந்த அடிச் சொல், சொற்பிறப்பியலில்(Etymology) Root எனக் கூறப்படும் 'வேர்ச் சொல்'அன்று. வேர்ச் சொல் ஆராய்ச்சி ஓரின மொழிகள் பல

வற்றை ஒப்புநோக்கி நிகழ்த்தப்படுவது.) இடைச் சொல்லோ அடிச் சொல் ஒன்றுடன் சேர்ந்து நின்ருலன்றிப் பொருள் தராதாகும். அடிச்சொல் பெயரும் வினையும் (Nominative and infinitive forms) என இரு வகைப்படும். காலங்காட்டும் இடை நிலைகள், பால் காட்டும் விகுதிகள், சுட்டெழுத்துக்கள், வினவெழுத்துக்கள், எச்சவினை யீறுகள், எதிர்மறை இடை நிலைகள், ஏவல், வியங்கோள் விகுதிகள், வேற்றுமையுருபுகள் முதலியன மொழிநூலாரின் பிரிவுப்படி (Analysis) யும் இடைச்சொற்களே. ஆங்கில இலக்கணம் பன்மை விகுதிகள் இறந்தகால விகுதிகள் முதலியவற்றைப் பின்னிணைப்பு (Suffix) என்றும், behead, believe, behave என்பனவற்றில் முன் அசையாகச் சேர்ந்து நிற்கும் be–என்பதையும் இது போன்றவற்றையும் முன் இணைப்பு (Prefix) என்றும் கூறினும் மொழிநூலார் இவற்றைச் 'சொல்' என்றே குறிப்பர். இவை தனித்து நின்று பொருள் தாராமையால் இடைச் சொற்கள் ஆகும். பழங்காலத்திலேயே தொல்காப்பியர் மேலே சொல்லிய இடைநிலை, விகுதி முதலியவற்றை இடைச்சொல் எனவே பாகுபாடு செய்ததை எவ்வாறு வியப்பது? (உண்மையில் அவர் இட்ட பெயர்தான் Bound morph என்ற தொடருக்கு நேர் தமிழ்த் தொடராகப் பயன்படுகிறது.) அடிச் சொற்கள் சிறப்புடையனவாதலின்,

" சொல் எனப் படுப பெயரே
வினையென்று
ஆயிரண் டென்ப அறிந்திசி னோரே "

(643) என முதலிற் கூறி அவற்றைச் சார்ந்து நிற்கும் தன்மையுடையன இடைச் சொற்களும் உரிச்சொற்களும் எனக் கூறுகிருர்:

" இடைச் சொற் கிளவியும் உரிச்சொற்
கிளவியும்
அவற்றுவழி மருங்கின் தோன்றும்
என்ப " (644)

உரிச்சொற்களைப் பற்றிப் பின்னர்க் காண்போம். இடைச் சொற்கள் பெயர், வினையடிச் சொற்களோடு சேர்ந்து நிற்பதெவ்வாறு என்பதை இங்கு ஆராய்வோம்.

அடிச்சொற்கள் பெருத்த மொழிகளும், இடைச் சொல் மருந்துக்கும் இல்லாத மொழிகளும் உலகில் உண்டு. பழம்பெரும் மொழியான சீன மொழி இரண்டாவது வகையைச் சேர்ந்தது. தமிழ் முதலிய திராவிட மொழிகளில் இடைச் சொற்களின் ஆட்சி நன்கு குறிப்பிடத் தக்க வகையில் உள்ளது. அடிச் சொற்களுடன் இடைச் சொற்கள் சேர்ந்து 'சொற்களை' (words) ஆக்கும் முறையைச் சொல்லாக்கவியல் Morphology) என்பர். அடிச் சொற்களே தொடராகச் (Phrases) சேர்ந்து நின்று பொருள் தரும் முறையைச் சொல் தொடரியல் (Syntax) என்பர்.

கட்புலனுகும் பொருள்களைக் குறிப்பனவாகத் தமிழில் வழங்கும் பெயர் அடிச்சொற்களிற் (Nominative Free Forms) பெரும் பான்மை அஃறிணைச் சொற்களே யாகும். அரசு, வேள், வேந்து, இறை போன்ற சிலவே உயர்திணையாகும். பெரும் பான்மையான உயர்திணைப் (மூன்று பால்) பெயர்கள் அடிச் சொல்லும் இடைச் சொல்லும் சேர்ந்தனவாகவே உள்ளன. ஓர் அடிச் சொல்லை வைத்தே வெவ்வேறு இடைச் சொற்களைத் தனித்தனியே அதனோடு சேர்த்து மூன்று பாலையும் (ஆண், பெண், பலர்) காட்டும் சொற்கள் ஆக்கப் பட்டுள்ளன. இவ் வாக்கத்தை மொழிநூலார் துணை நிலை ஆக்கம் (Secondary derivation) என்பர். எடுத்துக் காட்டாகப் பொன்னன், பொன்னி, பொன்னர்; அரசன், அரசி, அரசர்; வேலன், வேலள், வேலர் என்ற சொற்களை நோக்கினுல் பொன், அரசு, வேல் என்ற அஃறிணையடிச் சொற்களோடு முறையே அன்; இ, அள்; அர் என்னும் இடைச் சொற்கள் சேர்ந்து முப்பால்களையும் தனித்தனி காட்டுவதைக் காணலாம். இவற்றில் பால் வேறுபாடு காட்டுவன இடைச்சொற்களே யன்றி அடிச் சொற்களல்ல.ஆங்கிலத்தில் King என்ற ஆண் பாற் சொல்லுக்குப் பெண்பாற் சொல் Queen

என்பது. வடமொழியில் புருஷ என்னும் ஆண்பாற் சொல்லுக்கு ஸ்த்ரீ என்பது பெண் பாற் சொல். முற்றிலும் வேறுபட்ட சொற்கள் பால்களைக் காட்டப் பயன்படுவதைப் பார்க்கிறோம். தமிழில் உயர்திணைப் பால் வேறுபாடு காட்டும் அடிச்சொல் இணையே இல்லை எனலாம். வேந்து என்ற அடிச்சொல் ஆண் பால் காட்டினும், இதற்குரிய பெண்பால் காட்டும் அடிச்சொல் இல்லை. வினையடிச் சொற்களோடு மேலே கூறிய இடைச் சொற்களும் இன்னும் சில இடைச் சொற்களும் சேர்ந்து 'வினைச் சொற்களை' ஆக்குகின்றன. நடந்தான், நடந்தாள், நடந்தார்; நடக்கிறாள் நிற்கிறாள், உண்ணா நின்றான், நடவான், நடவாள், நடவார், வருப, காண்மார் என்பன வற்றைப் பிரித்துக் காண்க. அஃறிணை "வினைகளில்" தனியிடைச் சொற்கள் இதே வினையடிகளுடன் சேர்ந்து நின்று ஒன்றன் பாலும், பலவின் பாலும் காட்டுகின்றன. நடந்தது, உறங்கிற்று, பொருட்டு, நடந்தன, நடவா, வருவ. முதலிய சொற்களைக் காண்க. இச் 'சொற்களை' யெல்லாம் துணைநிலையாக்கச் சொற்கள் (Secondary derived words) எனலாம்.

தமிழின் சிறப்பியல்பான (திராவிட மொழிகளின் சிறப்பியல்பான) இச் சொல்லாக்க முறையை வற்புறுத்தக் கருதிய தொல்காப்பியர், கிளவியாக்கத்தில், 'னஃகான் ஒற்றே ஆடூஉ அறி சொல் என அன், ஆன் என்னும் இரண்டையும் அடக்கியும், 'ளஃகான் ஒற்றே மகடூஉ அறிசொல்', 'பெண்மை அடுத்த இகர இறுதியும்.........' என அள், ஆள், இ என்னும் மூன்றையும் அடக்கியும், 'ரஃகான் ஒற்றும் பகர இறுதியும் மாரைக் கிளவி உளப்பட மூன்றும் நேரத் தோன்றும் பலரறி சொல்லே என அர், ஆர், ப, மார் என்னும் நான்கையும் அடக்கியும் உயர்திணையை வகுத்து, "ஒன்றறி கிளவி தறட ஊர்ந்த குன்றியலுகரத் திறுதி யாகும்" என்றும் அ ஆ வ என வருஉம் இறுதி அப்பால் மூன்றே பலவறி சொல்லே" என்றும் அஃறிணையை வகுக்கிறார்.

இரண்டு இடைச்சொற்கள் தம்முட் சேர்ந்தும் ஆக்கச் சொல் அமைவதுண்டு. அவன், இவன், யாவன், எவர், யாவர் முதலிய சொற்கள் இவ்வாறு அமைந்தவையே. இவற்றை மொழி நூலார் முதனிலை ஆக்கச் சொற்கள் (Primars derived words) என்பர். தொல்காப்பியரும் பெயரியலில் உயர்திணைப் பெயர்களை வகுத்துரைக்கும் போது முதலில் இம் முதனிலை ஆக்கச் சொற்களையே, 'அவ் வழி அவன் இவன் எவன் என வருஉம் பெயரும்' என்ற நூற்பாவில் எடுத்தோதுவது குறிப்பிடத்தக்கது.

மேற் சொல்லிய பெயர், வினைஅடிச் சொற்கள், ஆக்கச் சொற்களுக்குப் பின்னும் முன்னும் சேர்ந்தோ, அடுத்தோ நின்று எண்ணற் பொருள், ஐயம், அச்சம், வினை மாற்றம், தேற்றம், பிரிநிலை முதலிய பல பொருள்களைத் தரும் ஏராளமான இடைச் சொற்கள் தமிழில் உண்டு. அவற்றைத் தொல் காப்பியர் இடையியலில் வகுக்கின்றார்.

உரிச்சொற்கள் தமிழில் அமைந்த தனி வகையான அடிச் சொற்களும் ஆக்கச் சொற்களும் ஆகும். மழ, உரு, பழுது, படர், அரி, கமம், உயா, புனிறு, மாதர், வை முதலியவை அடிச்சொற்கள். முரஞ்சல், அலமரல், அதிர்வு, கூர்ப்பு, விழுமம், துவைத்தல் முதலியன ஆக்கச் சொற்கள். தொல் காப்பியர் கூறும் உரிச்சொற்களாக உள்ள அடிச்சொற்கள் சில வேர்ச் சொல்லாகவும் (Roots) உள்ளன. உரிச்சொற்களுள் சில பெயர் போலவும் சில வினைபோலவும் சில இரண்டிற்கும் பொதுவாகவும் வழங்கும்; சில வினையுடன் மட்டும் சேர்ந்து வரும்; சில பெயருடன் மட்டும் சேர்ந்து வரும். சில இரண்டுடனும் சேர்ந்து வரும். உரிச்சொற்களில் ஆக்கச் சொல்லாக உள்ளவை சில தம் இடைச்சொல் நீங்கப் பெற்று அடிச்சொல்லளவில் வினைபோல வழங்கும்; சில பெயர் அடையாக வழங்கும். இங்ஙனம் பலவகையாக

வரும் எல்லா உரிச்சொற்களும் இசை, பல் வகைக் குறிப்பு, பண்பு ஆகிய (கட்புலனுகிய) பொருள்களை (meaning) உணர்த்துபவை யாகும். இவற்றை மொழி நூல் முறைப்படி சொற்பொருளியல் (Semanties) என்னும் தலைப்பில் ஆராயலாம். தொல்காப்பியரும் இவற்றின் பொருள்களைக் கூறி, பொருள் உலகம் வளர்ந்து கொண்டே செல்வது என்று இக்காலத்தார் கூறும் கருத்தையும்

''கூறிய கிளவிப் பொருள் நிலை அல்ல
வேறு பிற தோன்றிறும் அவற்ருெடு
கொளலே'' (873)

என்று உணர்த்திச் சென்றுள்ளார்.

மக்களின் மொழி வழக்கில் காலப் போக்கில் புதிய சொற்கள் உண்டாவது இயற் கையே யென மொழிநூலார் மொழிவர். தொல் காப்பியர் 'கடி சொல் இல்லைக் காலத்துப் படினே' (935) என்னும் நூற்பாவால் இப் புதிய சொற்களை ஏற்றுக் கொள்ள வழி வகுத் தார். நெருங்கிப் பழகும் மொழிகளுள் சொற் கலப்பு உண்டாவது இயற்கை யாதலின் வட மொழிச் சொற்களையும் தமிழ் ஒலி முறைப்படி வடசொல்லாக அமைத்துக் கொண்டு செய் யுளில் வழங்கலாம் என்று விதி வகுத்தார்.

வடமொழி தவிர வேறு மொழிகளின் சொற்கள் தமிழில் வந்து கலப்பதைத் திசைச் சொல் வழக்கு என்று தொல்காப்பியர் குறித்தார் என்று சில அறிஞர்கள் கருதி வருகிருர்கள். 'செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தும் தங்குறிப்பினவே திசைச் சொற் கிளவி' என்னும் நூற்பாவில்பன்னிரு நிலம் எனக் குறிப்பிடப் படுபவை தமிழ்ப் பகுதிகளே; இவையன்றி வேறு மொழிகள் வழங்கும் 18 நாடுகளினின்று சொற்கள் வந்து தமிழில் கலப்பதுண்டு. இவையிரண்டு திறத்தனவும் திசைச் சொற்களே என்று நன்னூலார் விளக் குகிருர். [3] தொல்காப்பியர் வட சொல்லினும் வேற்று மொழிச் சொல் சிறந்தது எனக் கருதி அதனைத் 'திசைச் சொல்' என்னும் பெயரால் குறித்து வடசொல்லுக்கும் முன் அமைத்தார் என்பது பொருத்தமாகாது. [4] அவருக்கு அது கருத்தாக இருந்திருக்குமாயின், வடக்கும் ஒரு திசையாதலின் வடசொல்லையும் திசைச் சொல் லினுள் அடக்கியிருக்கலாம்: வட சொல்லென வேறு கூறவேண்டுவதில்லை. ஆகவே தமிழ் நாட்டின் தெற்கு, வடக்கு. மேற்கு, கிழக்குப் பகுதிகளில் வழங்கும் கிளைமொழிகளின் சொற் களையே அவர் திசைச் சொல் என்னும் பெய ரால் குறித்தார் எனக் கருதுவதே பொருந்தும். மொழி நூலாரும் ஒரு மொழிக்குள் கிளை மொழிகள் பல இருப்பது இயற்கையே என்றும் அவற்றுள் ஒரு கிளைமொழி, அதனைப் பேசும் மக்களின் செல்வாக்கால், அல்லது அது வழங்கும் பகுதியில் பல கிளை மொழியினரும் கலந்துறையும் காரணத்தால், அல்லது அதனைப் பேசும் புலவர்களின் செல்வாக்கால் அவர்கள் இயற்றும் இலக்கியங்களின் ஆற்ற லால் பொது மொழியுமாகிப் பிற கிளை மொழிப் பகுதிகளில் எல்லாம் அறியப்பட்டு ஆட்சி மொழியும் இலக்கிய மொழியும் நாகரிக மக்கள் பேசும் மொழியாகி வளம் பெற்று வாழ்கிறது என்றும் கூறுவர். அப் பொது மொழியில் பிற கிளை மொழிச் சொற்கள் சில கலந்து வழங்க இடமுண்டு என்றும் கூறுவர். அதன்படி செந் தமிழ் என்பது தொல்காப்பியர் காலத்திலேயே தமிழகத்தின் பொது மொழியாக (Standard tongue) வளர்ந்து நின்ற மொழி; அதில் தென்பாண்டி, சீதம், குட்டம், அருவாவடதலை முதலிய 12பகுதிகளின் சொற்கள் கலந்ததையே 'செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிருநிலத்தும் தங்குறிப்பினவே திசைச் சொற்கிளவி' என்ற நூற்பாவால் தொல்காப்பியர் குறிக்கிருர் எனக்

3. செந்தமிழ் நிலஞ் சேர் பன்னிரு நிலத்தினும் ஒன்பதிற்றிரண்டினில் தமிழொழி நிலத்தினும் தங்குறிப்பினவே திசைச் சொல் என்ப. (நன்: 273.)

4. இயற் சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என்றனைத்தே செய்யுளீட்டச் சொல்லே (880).

கொள்ளலாம். இன்றும் குமரித்தமிழ் வேங்கடத்திற் சிறிது புதுமையாகத் தோன்றுகிறது; கொங்கர் தமிழ் செங்கற்பட்டில் சிறு இடர்ப்பாட்டுடனேயே புரிந்து கொள்ளப்படுகிறது. இவ்வெல்லா இடத்திலும் மக்கள் புரிந்து கொள்வது செந்தமிழ். புதிய இலக்கியங்களும் செந்தமிழாகிய பொதுத் தமிழையே கருவியாகக் கொள்கின்றன. தமிழ் என்றும் மாரு இளமைத் தன்மை கொண்டு விளங்குவதற்குக் காரணம் செந்தமிழ் என்ற பொது மொழி பழங்காலத்திலேயே உண்டாகி இலக்கியப் புலவரால் வளர்க்கப்பட்டும் இலக்கணப் புலவரால் காக்கப் பட்டும் வருவதே யாகும்.

இதுவரை கூறியவற்ருல் மிகப் பழங் காலத்திலேயே தமிழகத்தில் தமிழ் மொழியியல் ஆராய்ச்சி சிறந்து இருந்தது என்பதும், தொல்காப்பியர் தம் நெடுங்கால ஆய்வால் இன்றைய மொழிநூல் கூறும் உண்மைகள் பலவற்றை ஓரளவில் உணர்ந்து தமிழ் மொழிக்கு இயல் விளக்கம் (Description) தரும் முறையிலேயே தம்ஒப்பற்ற நூலை அமைத்துள்ளார் என்பதும் அறியப்பட்டன.



திருக்குறளில் பாடவேறுபாடு

புலவர் இரா. சாரங்கபாணி, எம். ஏ.

தமிழ் விரிவுரையாளர், அழகப்பா கல்லூரி, காரைக்குடி.

பண்டைக்கால இலக்கிய இலக்கணங்கள் யாவும் ஏட்டுச் சுவடியில் கையால் எழுதப் பெற்றவையே. ஆதலின் எழுத்துருவங்கள் தெளிவாக விளங்குதற்கில்லை. அது காரண மாகவே ஒன்றைப்பார்த்துப் படியெடுத்தோர் ஒரெழுத்தைப் பிறிதோரெழுத்தாக மயங்கி எழுதியுள்ளனர். மாணவர் அனைவர்க்கும் முற் காலத்தே நூல்கள் கிடைத்தல் அருமை. ஆகவே ஆசிரியர் ஒருவர் பாடங்களைக்கூற, மாணவர் பலர் அவற்றை எழுதிக்கொண்டு பின் கற்றுப் போற்றும் வாய்ப்பே அக்காலத்து அமைந்திருந்தது. அங்ஙன் மாணவர் எழுதிக் கொள்ளும் போது ரகர றகரம், லகர ளகரங் களை மயங்கி எழுதிக்கொள்வதுமியல்பே. பல படிகள் தேவைப்படும் பொழுது பலரைக் கொண்டு படியெடுக்கச் செய்வர். படியெடுப் போரின் விரைவு, சோர்வு, நெகிழ்ச்சி, மதிக் குறை முதலியவற்றாலும் சில தப்புக்கள் நேர லாம். ஒற்றுக்குப் புள்ளியிடும் வழக்கம் பண் டின்மையால் ஒன்றைப் பிறிதாக மயங்கி உணர வும் வாய்ப்புண்டு. இவ்வாறு வழுக்கள் தோன்றுதல் குறித்தே, 'எழுதியவன் ஏட்டைக் கெடுத்தான் படித்தவன் பாட்டைக் கெடுத் தான்' என்னும் பழமொழி முகிழ்த்தது. இவை யன்றிப் பாட வேறுபாடுகளுக்கு வேறுசில காரணங்களுமுள. எதுகை மோனையாய செய் யுளின்பம் இருந்தும் பொருட்சிறப்பு இல்லை யெனச் சிலர் ஒருவகைத் திருத்தம் செய்தனர். யாப்பு வழு உள்ளதென வழா நிலையாகச் சிலர் திருத்தம் மேற்கொண்டனர். எனவே பா ஒன்றற்கே பாடங்கள் பல பல்கின.

தொல்காப்பியம் போன்ற நூலில் பாட வேறுபாடுகள் அருகித் தோன்ற, பிற்கால நூல்களில் அவை பெருகித் தோன்றலாயின. பாடங்களைத் திருத்துவதில் பயிற்சியும் துணி வும் பெற்ற சிலர், போட்டியிட்டுக்கொண்டு திருத்தியமையே அவை வரம்பின்றி மிகுதற்குக் காரணமாயிற்று. ஒரு பாட்டில் எத்துணைச் சொல் உளவோ அவற்றினும் மிகுதியாகக் கம்பராமாயணப் பாக்களுள் சில வற்றுக்குப் பாட வேற்றுமை காண்கின்றோம். நூலாசான் இங்ஙனம் பல்வேறு பாடங்களைப் படைத் திரான் என்பது ஒருதலை. அதனைப் பயின்ற பெருமக்கள் சிலர் தம் கைவேலையே இப்பாட வேறுபாடுகளுக்குக் காரணமாகும். இப்பாட வேறுபாடுகள் ஒரு பாலிருப்ப, முழுப்பாடல் களையும் சிலர் நூல்களுக்கிடையே புகுத்தத் தொடங்கினர். இதனால், இந்நூல்கள் நாம் இயற்றியவைதாமா என நூலாசிரியரே கண்டால் ஐயுற்று வியக்குமளவு சில நூல்கள் மாற்றம் பெற்றன. தொல்காப்பியத்துள்ள நூற்பா 'எல்லே இலக்கம்' என்பதா? 'எல்லே இரக்கம்' என்பதா? எனச்சிலர் ஐயுறுகின்றனர். 'குரவர்த் தப்பிய கொடுமையோர்க்கும்' பார்ப் பார்த் தப்பிய கொடுமையோர்க்கும்' என்னும் புறநானூற்று அடிகளுள் ஆசிரியன் அமைத்த அடி எது எனத் தெளிய வேண்டியுள்ளது. பாடம் தெளிதலிலுள்ள இவ்விடர்ப்பாடு திருக் குறளுக்கும் இல்லாமலில்லை. ஆகலான், காணப்படும் பல்வேறு பாடங்களைக் கொண்டு வள்ளுவனர் அமைத்த பாடம் எதுவாகவிருக் கும் என ஓராற்றான் முடிவு காண்பாம்.

சிலர் சில குறள்களுக்குக் கொண்டுள்ள பாடங்கள் இலக்கணப் பொருத்தமின்றி வழு வுடையவாய்க் காண்கின்றன. 'ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய வழுக்கியும் வாயாற் சொலல் (139) என்றும் குறளில் தாம் பாடமாகக் கொண்ட' ஒல்லாவே எனும் பன் மைக் கேற்பச் சொலல்' என்பதைச் சாதி யொருமையாகக் கொண்டு 'சொல்லு ந்

தொழில்கள்' எனப் பொருள் கூறுவர் பரிமேலழகர். அதனினும், 'ஒல்லாதே' என ஒருமையாகக் கொண்ட மணக்குடவர் பாடம், பால் வழுவின்றிச்'சொலல்'என்னும் ஒருமைக்கு ஏற்ற பயனிலையாக அமைதலின், அதுவே ஏற்கத்தகும். 'நல்லவை எல்லாந் தீயவாம்' (375) எனப் பாடங்கொள்வர் காளிங்கர். அங்ஙனம்கொள்ளின் 'எல்லாம்' என்ற தேமா வின்முன் 'தீயவாம்' எனக் கூவிளம் வந்து வெண்டளை தட்டலின் 'எல்லா அம்' என அளபெடை பெய்துகொண்ட பரிமேலழகர் பாடமே வள்ளுவனர் கொண்ட பாடமாகும். 'அளித்தஞ்சல் என்றூர் உரைநீப்பின் தெளித்த சொல் தேறியார்க் குண்டோ தவறு' (1154) எனக் காளிங்கர் கொள்வர். உரைநீப்பின் தெளித்த என்ற இருசீரும் இயையும் வழிக்காய் முன் நிரைவந்து தளை தட்டுநிற்றலின், 'என் றவர் நீப்பின் தெளித்த சொல்' எனும் பரிமேலழகர் பாடமே தகுவதாம். 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றல்லாதார் தொழு துண்டு பின்செல்பவர்' எனக் காளிங்கர் கொள்வது பொருந்தாது. மற்றல்லாதார் தொழுதுண்டு என்பது வெண்தளை பிழைத்தல் காண்க. 'வாழ்வார் மற்று எல்லாம்' எனப் பரிமேலழகர் கொண்டதே ஆசான் பாடம் எனத் துணிதல் வேண்டும். 'நயப்பித்தார் நல்காமை தூற்ருது எனின்' (1190) எனும் காளிங்கர் பாடத்தினும் 'தூற்ருர் எனின்' என்னும் பரிமேலழகர் பாடமே திணைவழு வின்றி முடிதல் காண்க.

எதுகை மோனை நயம் கருதிச் சிலரும் பொருட் சிறப்புக்கருதிச் சிலரும் சில குறளுக்கு பாடவேறுபாடு கொண்டுள்ளனர். அவற்றை நோக்கின், ஆசிரியர் வள்ளுவனர் எதுகை மோனை நயத்தோடு தம் குறளினை யாத்தாரா? பொருட் செறிவுக்காக அந்நயத்தை விடுத் தாரா? என்றெல்லாம் ஐயுறவேண்டியுள்ளது. பொருட் சிறப்போடு யாப்பின்பம் இருப்பின் அப்பாடம் கொள்ளலும் பொருட் சிறப்பிலதாயின் அதனைத் தள்ளலுமே செயற்பாலன. 'தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தான் என்ருங் கைம்புலத்தா ரோம்பல் தலை' எனப் பரிமேலழகர் பாடங்கொள்வர். அதனினும் 'ஐம்புலத்தார் ஓம்பல் தலை' எனக் கொண்ட தாமத்தர், நச்சர்பாடம் (வ. உ. சி. கூற்று) எதுகை முற்றும் இயைதல் காணலாம். மேலும் குறளில் எண்ணிய ஐவரையுங் குறிக்க ஐம்புலம் என்பதினும் ஐம்புலத்தார் என்பதே திணைவழுவின்றி யமைகின்றது. 'மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு' (295) எனப் பரிமேலழகர் முதலிய உரையாசிரியரெல்லாம் பாடங்கொள்ளப் பரிதியார் மட்டும் 'தனத் தொடு' எனக் கொள்வர். எதுகை நயத்தோடு தானஞ் செய்தற்கேதுவான தனத்தையும் உடனியைத்துக் கூறும் பொருத்தம் நோக்கி அவர் அப்பாடம் கொண்டார் போலும். மனத் தானு செய்யாமை தலை (317) என்பது பரிமேலழகர் கொண்ட பாடம். அதனினும் 'மனத்தானும்' என்னும் மணக்குடவர் பாடம் மொழியானும் மெய்யானும் என அவற்றையும் தழுவிப் பொருள்நயமும் எதுகை நயமும் சிறக்கின்றது. 'காலாழ்களரின்.........வேலாண் முகத்தகளிறு' (500) எனப் பாடங்கொள்வர் பரிமேலழகர். 'வேலாழ்' எனக் காளிங்கர் முதலானேர்கொள்ளும் பாடத்தை, 'வேற்படை குளித்த முகத்தவாயின் அதுவும் நரியடுதற் கேதுவாய் முடிதலின் அது பாடமன்மையறிக' எனப் பரிமேலழகர் மறுப்பர். களிறு களரியில் காலாழும் பொழுதுமுகத்தில் வேலுடையதாகப் பரிமேலழகர் பொருள்கொள்வது போல் கொள்ளாது, 'வேலாழ் முகம்' என்ற வினைத் தொகையை இறந்த காலம் விரித்து வேலாழ்ந்த மையால் வடுவுடைய முகம் எனக் காளிங்கர் பொருள் கொள்வது போற் கொள்ளின், பரிமேலழகர் மறுப்புக்கிடனின்மையோடு எதுகை நயமுந்தோன்றும். 'கடிதோச்சி மெல்ல எறிக' (562) எனப் பரிமேலழகர் பாடம் கொள்ள, கடிதோக்கி எனக் காளிங்கர் கொள்வர். 'எறிதல்' வீசுதல் என்னும் பொருளதாகிய ஓச்சுதல் என்பதினும் உயர்த்தல், ஓங்குவித்தல் என்ற பொருளதாகிய ஒக்குதல் என்பது பொருட் சிறப்புடையதாதலோடு, பின்வரும் சீராகிய நெடிதாக்கம் என்பதனெடு ஒரூஉ எதுகைப் பொருட் சிறப்புடையதாய்ப் பாடற்கு ஓசை நயமூட்டுதல் தேர்ந்து கொள்ளுக' என்னும் பழனியப்பப் பிள்ளையின் பொருட்பால் முன்னுரையால் அப்பாடச் சிறப்புப் போதரும்.

'நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப் பின்னீர பேதையார் நட்பு' (782) இக்குறளில் வரும் 'பின்னீர்' என்பதற்குப் பதிலாகப் பின்னீர்மை எனக் காளிங்கர் பாடம் கொள்வர், அதனினும் 'பின்னீர' என்பதே பேதையார் நட்பு என்பதற்கு ஏற்ற வினைமுடிபாகவும் 'நிறைநீர' எனும் தொடைக்கு ஏற்றதாகவும் அமைகின்றது. ஆதலின், 'பின்னீர' எனும் பரிமேலழகர் பாடமே தகும். 'மாலைநீ அல்லை மணந்தார் உயிருண்ணும் வேலை நீ வாழி பொழுது' (1221) என்னும் குறளில் மாலை நீ, வேலை நீ எனவருதல் எதுகைச் சிறப்புடையதாயினும், நீ என்பது ஈரிடத்தும் வேண்டாது வருதலான், மாலையோ அல்லை எனப் பரிமேலழகர் பாடம் கொள்வர். நாளொற்றித் தேய்ந்த விரல் என்பதற்கேற்ப வாளொற்றிப்புற்கென்ற கண்ணும் (1261) எனக்கொள்ளும் காளிங்கர் பாடம் தொடையின்பம் பயப்பினும், 'வாளற்று' என்ற பரிமேலழகர் பாடமே பொருட் பொலிவுடையது. 'அணங்கு கொல் ஆய்மயில் கொல்லோ கணங்குழை (1083) எனும் பரிப்பெருமாள் பாடம் தொடையின்பம் பயத்தலின் கனங்குழை எனும் பரிமேலழகர் பாடத்தினும் நன்று. 'மணியுள் திகழ்தரு நூல்போல் மடந்தை அணியில் திகழ்வதொன்றுண்டு (1273) இக் குறளில் வரும் 'மணியுள்' எனும் பாடத்தினும் 'மணியில்' எனும் பரிமேலழகர் பாடம் 'அணியில்' எனும் முதற்சீரொடு பொருந்தி எதுகை நயம் வாய்ந்துள்ளது. இன்னோரன்ன நயம் வாய்ந்த வேறு குறட் பாடங்களுமுள.

மோனை நயம் வாய்ந்த வேறு சில பாடங்களை இனிக் காண்போம். இகழ்ச்சியிற் கெட்டாரை உள்ளுக (539) எனும் பாடத்தினும் மணக்குடவர் கொண்ட 'எண்ணுக' எனும் பாடமும் நாளொற்றித் தேய்ந்த விரல் (1261) என்பதினும் 'தேய்ந்த நகம்' எனும் காளிங்கர் பாடமும் 'தண்ணந்துறைவன் துறந்தமை' (1277) எனும் காளிங்கர் பாடத்தினும் 'தணந்தமை' எனும் பரிமேலழகர் பாடமும் 'ஈர்ங்கை விதிரார்கயவர் கொடிறுடைக்கும்' (1077) எனும் பாடத்தினும் 'கூர்ங்கை' எனும் காளிங்கர் பாடமும் மோனை நயம் வாய்ந்தனவாகும். மோனைநயம் வாய்ந்திருப்பினும் 'கூர்ங்கை' எனும் பாடமும் 'நாள் ஒற்றித் தேய்ந்த நகம்' எனும் பாடமும் பொருட்சிறப்பில.

எழுத்துரு நன்கு விளங்காமையால் ஒன்று பிறிதாகத் துணியப்பட்டுத் தோன்றிய பாடங்களும் உள. காட்டாக 'ஆதிபகலன்' முதற்றேயுலகு' (1) எனும் பாடத்தைக் கொள்ளலாம். இப்பாடமுண்மை பழனியப்பப் பிள்ளையின் முன்னுரையால் அறியப்படும். ல, வ, இரண்டிற்கும் ஏட்டில் வேறுபாடு விளங்காததே அப்பாடத் தோற்றத்திற்கு ஏதுவாகும். புள்ளியிட்டெழுதும் வழக்கமின்மையால் தோன்றிய பாட வேற்றுமைக்கு ஓர் எடுத்துக்காட்டு,' தொடியொடு தோள் நெகிழ நோவல்' (1236) எனும் குறட்பகுதியாகும். 'நோவல்' எனப் பரிமேலழகர் கொள்ள, 'நேர்வல்' எனக் காளிங்கர் கொள்வர். நோ என்பதில் உள்ள காலை ரகர ஒற்றாகக் கருதியமையே வேறு பாடத்துக்கு அடிப்படையாகும். 'நோவல்' எனும் பாடமே பொருட் சிறப்பினது.

ஒருமைப் பன்மை வேற்றுமையாலும் கால வேற்றுமையாலும் சில பாடங்கள் எழுந்தன. 'ஓதியுணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப் பேதையிற் பேதையாரில்' (834) எனப் பரிமேலழகர் கொள்வர். தாமடங்கா எனக் காளிங்கர் கொள்வர். காளிங்கர் கொள்ளும் 'தாம்' எனும் பன்மைச்சொல் பேதை எனும் ஒருமைக்கு ஏலாமையின் பரிமேலழகர் பாடமே ஏற்புடையது. தந்நெஞ்சத் தெம்மைக் கடிகொண்டார் நாணார் கொல் எந்நெஞ்சத் தோவா வரல் (1205) எனப் பன்மையாகப் பரிமேழலகர் பாடங் கொள்ள, 'என்னை' என்றும் 'என்னெஞ்சத்து' என்றும் ஒருமையாகக் காளிங்கர் கொள்வர். இது போன்ற வருங்குறள்கள் ஒருமைப் பன்மை வேறுபாடு உணர்த்துமதல்லது வேறுபொருள் வேறுபாடு உணர்த்தா.

'காமம் உழந்து வருந்தினர்க்கு' (1131) எனப் பரிமேலழகர் கொள்ள 'வருந்து வார்க்கு' எனக் காளிங்கர் கொள்வதும், வீழுநர் விழப்படுவார்க்கமையுமே' (1193) எனப்

பரிமேலழகர் சொல்ல, 'அமைந்ததே' என காளிங்கர்சொல்வதும் காலவேற்றுமைகாட்டுவ தல்லது வேறுபொருள் வேற்றுமை காட்டா.

குறளகத்துப் பொருள் வேறுபாடு யாது மின்றி சொற்கள் வேருகக் காணப்படும் சில பாடங்களும் உள்ளன. வேண்டுதல் வேண் டாமையிலானடி சேர்ந்தார்க் கியாண்டு மிடும்பையில (4) என்பது பரிமேலழகர் கொண்ட குறள். இதனை வேண்டுதல் வேண் டாமை யில்லா னடிசேர்ந்தார் யாண்டு மிடும்பையிலர்' என மணக்குடவர்' கொண் டுள்ளதாக வ. உ. சி. குறிப்பர். 'வாரி வளங் குன்றிக்கால்' (14) என்பது 'குன்றுங்கால்' (மணக்குடவர், தாமத்தர்) எனவும் 'மாணு செய்யாமைதலே' (317) என்பது 'இன்னு செய்யாமைதலே' (காளிங்கர்) எனவும் 'ஒளி மாழ்குஞ் செய்வினே' (காளிங்கர்) எனவும் 'யானையால் யானையாத்தற்று' (678) என்பது 'யார்த்தற்று' (காளிங்கர்) எனவும் 'துணையல் வழி' (1299) என்பது) 'தமரல்வழி' (காளிங்கர்) எனவும் 'என்பாக்கறிந்து' (1312) என்பது 'என்பதறிந்து' (மணக்குடவர்) என வும் பொருள்வேறுபாடின்றிப் பாடம் மட்டும் வேருகி நிற்றல் காண்க.

எழுத்தானும், சொல்லானும், தொடரா னும் வேறுபடும் பாடம் அமைந்த குறள்களும் சில உள. 'அஞ்சுவ தோரு மறனே' (366) என்பதற்கு 'அறிவே' என நச்சரும் 'அவாவே' எனத்தாமத்தரும், 'அறம் பொரு ளின்பம் உயிரச்சம்' (501) என்பதற்கு 'உயி ரெச்சம்' எனக்காளிங்கரும், 'ஒற்று முரை சான்ற' (581) என்பதற்கு 'ஒற்றும் முறை சான்ற' என மணக்குடவரும், விழை தகை யான் வேண்டி யிருப்பர்' (581) என்பதற்கு 'விழை தகையார் வேண்டியிருப்பர்' எனக் காளிங்கரும் 'சீரிடம் காணின் (821) என்ப தற்குத் 'தீர்விடங் காணின்' என மணக்குட வரும் பாடங் கொள்வதால் இவர் தம் உரை கள் பரிமேலழகர் உரையினும் வேறுபடுகின் றன. இங்ஙனமே பரிமேலழகர் கொண்ட பாடங்கட்கு வேருகப் 'பகல் கருதிப் பற்றுர் செயினும்' (852) 'இறப்போர் இருந்த தொழிற்ரும் (977) 'உழுவார் உலகத்தார்க் காணி அஃதாற்றுர் தொழுவாரே எல்லாம் பொறுத்து (1031) 'தோட்டாழ் கதுப்பினுள் தோள்' (1105) என மணக்குடவர் வேறு பாடமோதுவர். ஏந்திய கொள்கையார் சீறின்' (899) அற்றமறைக்கும் சிறுமை பெருமைதான் குற்றமாக் கொண்டுவிடும் (980) 'எண்பதத் தான் எய்தல் எளிதென்ப' (991) 'பலகுடை நிழலும் தங் கொடைக் கீழ்க்காண்பர்' (1034) 'செல்லான் கிழவனிருப்பின் நிலமடந்தை புல் லாள் புரள விடும்' (1039) 'துறைவன் துறந் தமை தேற்ருகொல்'. (1157) 'கூடிய காலம் பிரிந்தார்' (1264) எனக் காளிங்கர் பரிமேல ழகர் பாடத்தினும் வேறு பாடங் கொள்வர். 'தானைக் கண் டன்ன துடைத்து' (1082) என் பது பரிதிகொண்ட வேறு பாடம். இப்பாட வேறுபாடுகளே உரை வேற்றுமைகளுக்கு அடிப்படையாகின்றன.

திருக்குறளுக்குப் பல பாடங்கள் இருத் தலைக் கண்டமையானும் அப் பாடங்கள் தெளி வான பொருளைப் பயக்கவில்லை எனக் கருதிய மையானும் எதுகை மோனை இன்பஞ் சிறந்து பொருட் செறிவோடிருந்த குறள் ஏடெழுது வோரால் சிதைக்கப்பட்டு விட்டது எனத் துணிந்தமையானும் வ. உ. சிதம்பரனுர் சில புதுப்பாடம் கொள்வாராயினர். இவரும் பரிமே லழகர் கொண்ட பாடத்துக்கு வேருகச் 'சிறியர் செயற்குரிய செய்கலாதார்' (26) 'அன்புற்ற மர்ந்த வழக்கென்ப ஆருயிர் என்புற்ருர் எய்தும் பிறப்பு' (75) 'அஃதில தென்பு தோல் போர்த்த வுடம்பு (க) 'உடைமையுள் உண்மை விருந்தோம்பல்' (89) 'மறவற்க மாசறுத்தார் கேண்மை' (106) 'ஆருதே வாயினுற் சுட்டவடு' (129) 'எனைத்துணைய ருமினும் என்னும், (144) 'பிறன் பொருளைக் கள்ளத்தாற் கொள்வே மென' (282) 'மருங்கோடித் தீவினை செய்வா னெனின்' (210) 'செயு நீரசெய்ய அமைகலா வாறு' (219) 'நத்தம் போர்க்கேடும்' (235) 'வழி வழங்கும் மல்லன்மா ஞாலம்' (249)

'அண்ணுத்தல் செய்வதளறு' (255) என்றெல்லாம் சொந்தமாகப் புதுப்பாடங் கொண்டு கருத்து விளக்கஞ் செய்வர்.

உரையாசிரியர்களின் சில உரை காணப்படும் மூலத்துக்கு முரணுதலின் அவ்வுரை துணையாக அவ்வாசிரியர் தம் மூல பாடங்களை நாம் ஆய்ந்து காண வேண்டியுள்ளது. 'பாத்தூண் மரீஇயவனை' (227) என்னும் குறட்பகுதிக்கு உரைவரைவுழி, பசித்தவர் உண்டோ என்று பார்த்துக் கூட்டிக் கொண்டு வந்து பசியாற்றுவானை எனப் பரிதியார் கூறியுள்ளார். இவ்வுரை நோக்கின், 'பார்த்தூண்' என்பது அவர் பாடம் எனத் தெளியலாம். 'சூழ்வார் கண்ணாக வொழுகலான் மன்னவன் சூழ் வாரைச் சூழ்ந்து கொளல்' (445) என்னும் குறளுக்கு அரசன் தன்னைச் சூழ்ச்சியாற் கொல்ல நினைப்பாரைத் தானும் சூழ்ச்சியால் கொல்ல வல்லனாதல் காரிய மெண்ண வல்லார் தனக்குக் கண்ணாக ஒழுகலான் என்பது மணக்குடவர் உரை. 'சூழ்ந்து கொளல்' என்னும் மூலத்துக்கும் இவ்வுரைக்கும் தொடர்பின்மையால் 'சூழ்ந்து கொலல்' என்பதே பாடமாகலாம். 'மரத்தின் கொம்பின் மேலே போய் ஏறினார் போல, மற்று அதனை அறிந்து பின்னும் உரம் செய்வாராயின்' என்னும் காளிங்கர் உரைப்பகுதி 'நுனிக்கொம்பரேறினார் அஃதிறந் தூக்கின்' எனும் குறட்பகுதியோடியையாமையின் 'அஃதறிந் தூக்கின்' என்பது அவர் பாடம் போலும். 'முரண் சேர்ந்த மொய்ம்பினவர்க்கும்' (492) என்னுங் குறட் பகுதிக்குச் சதுரங்க பலமான தன்படையும் உதவிப்படைக் குறைச்சலும் உண்டாகிலும் என்னும் பரிதி உரை இயைந்திலது. அவ்வுரைக்கு 'மொய்ம்பிலவர்க்கும்' எனப் பாடங் கொள்ளின் ஓராற்றான் பொருந்துவ தறியலாம். தனக்கு வரும் பழியை அறுக்க வல்ல நாணமுடையான் எனும்மணக்குடவர் உரைப்பகுதி, 'வடுப்பரியும் நாணுடையான்' (502) எனும் மூலத்துக்குப் பொருந்தாமல், வடுவரியும்' எனும் மூலத்துக்குப் பொருந்துவதால் அதுவே அவர்க்குப் பாடமாகலாம். 'அளவளாவில்லாதான் வாழ்க்கை' (523) எனும் குறள் மூலத்துக்கு அளவுக்களவாகச் செலழியாதான் பெற்ற செல்வம் எனும் பரிதி உரை பொருந்தாமையின், 'அளவளவில்லாதான்' என்பது அவர் பாடமெனவும்; அருமையுடைத்தென்றசாவாமை வேண்டும்' என்பதற்கு, இந்தக் காரியத்தை எடுத்து முடிக்கஅருமையுண்டென்று விசாரிக்க வேண்டாம் எனும் பரிதி உரை பொருந்தாமையின் 'உசாவாமை' அவர் பாடமெனவும், 'அறிகொன்றறியான் எனினும்' (638) என்பதற்கு எல்லாம் அறிவுள்ள ராசா அறிகிற தறுவாயில் அறியாத போது எனும் பரிதி உரை பொருந்தாமையின் 'அறிகோன்' என்பது அவர் பாடமெனவும், 'இளையர் இனமுறையர்' (698) என்பதற்கு, இவர்க்கும் நமக்கும் இப்படி நட்பு இன்ன முறையாம் எனும் பரிதி உரை இயையாமையின் இனையர் என்பது அவர் பாடம் எனவும் தெளியலாம். இங்ஙனம் உரைகளால் உய்த்துணர்ந்த பாடங்களுள் சில வள்ளுவனார் பாடமாகத் தோன்றவில்லை. காட்டாக, 'பார்த்தூண்' எனும் வழக்கு குறளாட்சியில்லை. தம்மிலிருந்து தமது பாத்துண்டற்றால் (1107) என்னும் ஆட்சிகாணின் பாத்தூண் என்பதே பாடமெனத் துணியலாம். பிறவற்றையும் அங்ஙனம் கண்டு துணிக.

குறள்களுக்குக் காணப்படும் வேறு பாடங்களுள் எது தக்கது எனக் காரணங் கண்டு உறுதி செய்தல் வேண்டும். 'தீயவை தீய பயத்தலால் தீயவை தீயினுமஞ்சப் படும்; (202) இக்குறளுக்குத் தீயவே தீய பயத்தலால் என ஒரு பாடமுண்டு எனக்காட்டுவர் அரசஞ் சண்முகனார். நன்மையுந் தீமையுந் தரும் தீயினும், தீமையே தரும் தீயவை அஞ்சப்படும் எனும் கருத்தழுத்தம் 'தீயவே தீயபயத்தலால்' எனும் பாடத்தாற் பெறப் படுதலின், அதுவே பரிமேலழகர் கொண்ட பாடத்தினும் சிறந்த தாகும். 'தினற் பொருட்டாற் கொல்லாது' (256) எனும் பரிமேலழகர் பாடத்தினும் கொள்ளாது' எனும் மணக்குடவர் பாடமே தக்கது. அக்குறட் பிற்பகுதியாய 'ஊன்தருவாரில்' என்பதிலுள்ள 'தருதல்' எனுஞ் சொற்குக் 'கொள்ளாது' என்பதே பொருட் பொருத்தமுற இயைதல் காணலாம். 'நாளென ஒன்றுபோற் காட்டி' (334) எனப் பரிமேலழகர் பாடங் கொள்ள 'நாளென்பதொன்று போற்காட்டி, என மணக்குடவர் பாடங்கொள்வர் என்பர்

வ. உ. சி. வாள் என்னும் பெயர்ப் பயனிலேக்கு 'நாளென்பது' ஏற்ற எழுவாயாய் அமைதலின்' இப்பாடமே தக்கது. இப்பாடங் கொள்ளின், 'வாளது' என்பதைப் பரிமேலழகர் போல் வலிந்து முற்றுகக் கொள்ள வேண்டுவது மின்று. 'இயல் புளிக்கோலோச்சு மன்னவன் நாட்டில் (545) எனும் பாடத்துக்குப் பயனிலே வருவிக்க வேண்டுதலின் 'நாட்ட' எனக்குறிப்பு முற்றுகக் கொண்ட பரிமேலழகர் பாடம் ஏற்ற முடிபுடையது. 'அகலாதணுகாது தீக்காய்வார் போல' (69) என்னும் பாடத்தினும் 'போல்க, எனும் பரிமேலழகர் பாடமே தக்க வினைமுடி புடையதாகும். 'நிலத்தெறிந்தான் கைபிழையா தற்று' (307) எனும் மணக்குடவர் பாடத்தினும் 'நிலத் தறைந்தான்' எனும் பரிமேலழகர் பாடமே மரபுக் கியைகின்றது. 'யாண்டும் அஃதொப்பதில்' (363) எனும் பரிமேலழகர் பாடத்துக்கு 'அஃ' என்பதைக் குறிலிணைந்த நிரையசையாகக் கொண்டால் தான், தளைதட்டாது. முப்பாற் புள்ளியெனப் பெயர் பெறும் ஆய்தத்தை உயிராகக் கொள்ளுதலினும், 'அது வொப்பதில்' எனக் கொள்ளும் மணக்குடவர் பாடம் சிறக்கும். 'செவிக் குணவில்லாத போழ்து' (412) எனும் பாடத்துக்குப் பதிலாக 'செவிக்குணர் வில்லாத' எனப் பரிதியார் பாடங் கொள்வர். 'வயிற்றுக்கு மீயப்படும்' என வரும் அக் குறளின் பிற்பகுதி நோக்கின் பரிதியார்பாடம் பொருத்தமில தெனத் தெளியலாம். 'கடனறிந்து காலங்கருதி யிடனறிந் தெண்ணி யுரைப்பான் தலே' (687) எனக் கொண்டு, தூதுவரில் மூவகை உண்டு என வடநூன் முறை ஒட்டிக் கூறுவர் பரிமேலழகர். 'எண்ணி யுரைப்பதாந்தூது' எனக் காளிங்கர் கொள்வது போற் கொள்ளின், அப்பகுப்பு முறைக்கிடனில்லே. 'நன்றி பயப்பதாந்தூது' (685) 'தக்கதறிவ தாந்தூது' (686) 'உறுதி பயப்பதாந்தூது' எனவரும் குறள் நடைக் கொப்ப காளிங்கர் பாடமும் அமைதல் நோக்குக. 'முகநக நட்பது நட்பன்று நெஞ்சத் தகநக நட்பது நட்பு' (786) எனும் பாடத்தினும், 'நட்பதே நட்பு' எனும் மணக்குடவர் பாடம் கருத்தழுத்தமுடைமை காண்க, 'இணரூழ்த்து நாரு மரத்தனையர்' (650) என்பது காளிங்கர் பாடம். நாற்றமுடைமையும் இன்மையும் மலருக்கு அடையாக வருவதே சிறக்குமன்றி மரத்துக்கு அடையாக வருவது சிறவாதாதலின், 'நாருமலரனையர்' எனும் பரிமேலழகர் பாடமே தகும். 'ஊனுடையச்சம் உயிர்க் கெல்லாம் வேறல்ல' (1012) என்னும் குறளில் காளிங்கர் கொள்ளும் 'அச்சம் என்னும் பாடத்தினும் ஊனுடையோடு சேர்த்து உயிர்க்கெல்லாம் பொதுவாக எண்ணற்குரியது மக்கள் எனும் பொருள்படும் 'எச்சம்' என்பதாகலின் அங்ஙனம் கொண்ட பரிமேலழகர் பாடமே இயைவதாகும். ஊனைக் குறித்த உயிரெல்லாம்' (1013) எனும் பரிமேலழகர் பாடத்தினும் 'ஊணைக் குறித்த' எனும் மணக்குடவர் பாடமே சிறந்தது. 'உணவின் பிண்டம் உண்டி முதற்று' எனும் பகுதி நோக்குக. 'பலகுடை நீழலுந் தம்குடைக் கீழ்க் காண்பர், (1034) எனும் பரிமேலழகர் பாடத்தினும் 'தங்கொடைக்கீழ்' எனும் காளிங்கர் பாடமும் 'இலமென்றசை இருப்பாரை' (1040) எனும் பாடத்தினும் 'இரப்பாரை' எனும் காளிங்கர் பாடமும் சிறப்பினவாதல் பொருள் நோக்கி யறிக. 'காமக்கணிச்சி உடைக்கும் அறிவென்னும் நாணுத்தாழ் வீழ்த்தகதவு' (1251) என்று இக்குறளைப் பரிப்பெருமாள் காளிங்கர் ஆகியோர் கொள்ள, 'நிறையென்னு நாணுத் தாழ் வீழ்த்த கதவு' என்று பரிமேழகர் கொள்வர். 'நிறையுடையேன் என்பேன் மன் யானே என் காமம் மறையிறந்து மன்று படும்' (1254) எனும் குறளை நோக்கின் 'நிறையென்னும்......கதவு' எனக் கொண்ட பரிமேலழகர் பாடமே தகும் என்னலாம்.

குறளாட்சி, மரபு, சொல்லமைப்பு பொருட் சிறப்பு, எதுகை மோனை நயம், யாப்பமைதி இன்னபிற துணையாகக் கொண்டு, பல் வேறுபாடங்களுள் ஆசிரியன் பாடம் இஃ தெனத் தேர்ந்து பொருட்டெளிவு பெறுதல் இன்றியமையாதது. திருக்குறளின் உண்மைக் கருத்தையறிந்து ஆசானின் உள்ளத்தை உணர அனைத்துப் பாடங்களையும் ஆய்ந்து தெளிந்த, நற்பாடங்களைக் கொண்ட ஓர் ஆய்வுப் பதிப்பு திருக்குறட்கு வருதல் வேண்டும்.

பாட்டு

வித்துவான் திரு. சி. துரைசாமி, தலைவர், தமிழ்க்கல்லூரி, மயிலம்.

பாட்டென்பது பாவின்வேறுய் உறுப்பாகி நின்று, சேய்மையிலுள்ள ஒருவன் எழுத்தும் சொல்லும் தெரியாமல் பாடம் ஓதுங்கால் அவன் பாடுகின்ற செய்யுளை இன்னதென அறிதற்குக் காரணமாகிப் பரந்துபட்டுச் செல்கின்ற ஓசை. ஆடல் ஆட்டு என்றுற்போல பாடல் பாட்டென அத்தொழில் உறுகின்ற ஓசைமேல் நின்று பாட்டாயிற்று.

சங்ககாலம் முதல் பிற்காலம் உள்ள நூல்களில் பல நூல்கள் பாட்டென்னும் பெயரோடு காணப்பெறினும், முல்லைப்பாட்டு, குறிஞ்சிப் பாட்டு, பத்துப்பாட்டு, உழத்திப்பாட்டு எனப் பாட்டு என்னும் பொதுப்பெயரை முல்லை முதலிய அடைமொழிகள் வந்து குறித்த பொருளை விளக்கி நிற்கின்றன. பூவென்னும் பொதுப்பெயரை மல்லிகை முல்லை முதலிய சிறப்புப் பெயர்கள் அடைமொழியாக வந்து குறித்த பொருளை விளக்கி நின்றுற்போல; ஆயினும் பூவென்னும் பொதுப்பெயரே, பல்லாற்றுனும் சிறப்புடைமை கருதிப் பொதுமை நீங்கி தாமரையையே உணர்த்துகின்ற நிலையும் உண்டு. ''பூவினுக்கு அருங்கலம் பொங்குதாமரை.'' ''பூவிற்குத் தாமரையே.'' ''பூவெனப் படுவது பொறிவாழ் பூவே'' என்பன போன்ற வாக்குகள் இதனை வலியுறுத்தும்.

அதுபோலப் பாட்டென்னும் பொதுப் பெயரும் சொல்லுவதற்கரிய நலன்கள் பலவற்றையும் உள்ளடக்கிக் கொண்டிருக்கு மானுல் பொதுமை நீங்கிச் சிறப்புப் பொருளைத் தருவதும் உண்டு. அவ்வாறு சிறப்பாகப் பாட்டு என்று கூறப்படுவது மணிவாசகர் மொழிந்த திருவாசகம்.

> செய்ய வார்சடைத் தெய்வ நாயகன்
> பாதம் போற்றும் வாதவூ ரன்ப
> பாவெனப் படுவது உன்பாட்டு
> பூவெனப் படுவது பொறிவாழ் பூவே.

என்று துறைமங்கலம் அருண்மிகு சிவப்பிரகாச சுவாமிகள் கூறியுள்ளார். பொதுவாகி நின்ற பாட்டு திருவாசகம் என்னும் சிறப்புப் பொருளைத்தரும் என்று சுவாமிகள் கருதியதற்குக் காரணம் மணிவாசகர் மொழிந்த திருவாசகத்துள் ஒரு பகுதியான சிவபுராணத்துள்,

> "சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
> செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கிழ்ப்
> பல்லோரும் ஏத்தப் பணிந்து.''

என்று தாம்பாடிய பாடல்களுக்குப் பாட்டு என்றே வழங்கினமை கண்டேயாம்.

நீலம் குவளை காந்தள் முதலிய பூக்கள் இறைவர்களது ஒவ்வொரு உறுப்புக்களையே ஒத்திருப்ப தாமரை ஒன்றே பல உறுப்புகளுக்கும் உவமையாகின்ற பெருஞ் சிறப்புடையது. ஆதலின் பூவெனப்படுவது பொறிவாழ் பூ என்பது பொருந்தும். அவ்வாறு திருவாசகத்திற்குப் பாட்டென்பது எவ்வாறு பொருந்தும் எனின் ஏனைய நூல்களுக்கில்லாத தனிப் பெருஞ்சிறப்பு திருவாசகத்திற்கு உண்டு ஆதலின் பொருந்தும். அச்சிறப்புக்களில் சில பின் வருமாறு.

'' திருவாசகம், தில்லைக் கூத்தனுல் எழுதப் பெற்றது.''

பண்டைக்கால்ந்தொட்டு இக்காலம் வரை தமிழில் தோன்றியுள்ள பல நூல்களும்,

இயற்கை எழில், வரலாற்று முறை, கற்பனை நயம், அன்பு நெறி, அருள்நிலை, ஒழுக்க நெறி தோத்திரப் பாக்கள் ஆகியவற்றை உணர்த்து மேனும் அவைகள் நூல் செய்யப்பெற்றவ ராலோ அல்லது அவரிடத்துக் கேட்ட மக்க ளாலோதான் எழுதப்பட்டன. ஆனால் திரு வாசகமோ ஆதியந்தம் இல்லா அருட்பெருஞ் சோதியாகிய திருவம்பலமுடைநாதன் திருக் கரத்தால் எழுதப்பெற்றது. இதனை,

" மதுரவாசக......தெய்வனுயகன்......
தன்னைநீபுகழ்ந்துரைத்த
பழுதில்செய்யுள் எழுதினன்...... "

என்று சிவப்பிரகாச அடிகள் கூறுகின்றார். அன்றியும் திருப்பெருந்துறைப் புராணமும் இக்கருத்திற்கு அரண்செய்கிறது. அல்லா மலும் பிற்கால ஆராய்ச்சியாளர்களாகிய அருண்மிகு மறைமலை அடிகள் திரு நெல்லை யப்பப் பிள்ளை போன்ற அறிஞர்களும் ஆராய்ந்து கூறுகின்றனர். திரு. கா. சு. பிள்ளையவர்கள் அடியார்கள் பொருட்டு இறைவன் அற்புதச் செயல்களை செய்துள்ளார் ஆதலின் திருச்சிற்றம்பலமுடையார் திருவாச கத்தை எழுதினர் என்பது ஏன் பொருந்தாது என்று கூறியுள்ளார். ஆதலின் இறைவன் திருக்கரத்தால் எழுதப்பெற்ற காரணத் தாலேயே தனிப்பெருஞ் சிறப்புடையது திரு வாசகம் என்று சொல்லப் படுகின்ற பாட்டு என்பது தெளிவுறலாம். அன்றியும் கடையூழி வருந்தனிமை கழிக்க வன்றோ அம்பலத்துள் உடையார் உன் வாசகத்தில் ஒரு பிரதி கருதின தே—1, என்ற சான்றோர் செய்யுளையும் உற்று நோக்குக.

நாடு, நகரம், பொழில், இயற்கை வரலாறு முதலியவற்றின் நலன்களையும், தற்குறிப் பேற்றம் போன்ற அணிகளையும் அங்கமாகக் கொண்டு நகை முதலிய பலசுவைகளையும் வெளிப்படுப்பனவாகப் பிறபாடல்கள் அமைந் துள்ளன. ஆனால் மணிவாசகர் மொழிந்த திருவாசகப் பாடல்கள் பலவும் அவலச் சுவையை உணர்த்துவனவாக அமைந் துள்ளன. திருவாசகப் பாடல்களை ஓதுபவர் களே அன்றிக் கேட்பவர்கள் உள்ளம், கல்லா யினும் கசிந்து உருகும் தன்மை உடையது ஆதலின் திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார் என்னும் பொன்மொழி ஆகிய பழமொழியும் வழங்குவ தாயிற்று.

" இளிவே யிழவே அசைவே வறுமை
யென
விளிவில் கொள்கை அழுகை
நான்கே. "

என்பர் தொல்காப்பியர். ஒருவன் பிறரால் இகழப்படுகின்ற நிலையில் எளியனை இடத்தும் சுற்றத்தாரையும் இன்பம் மயக்கும் நுகர்ச்சிப் பொருள்களையும் இழந்த காலத்தும், பண்டை நிலை கெட்டு வேற்றுநிலை அடைந்த தன்மை யிலும், மேன்மேலும் இன்பம் துய்க்கப் பெற வேண்டும் என்ற எண்ணத்திற்கு இடையூறு உண்டாகிய காலத்தும் அவலந்தோன்றுவது இயல்பு.

" ஏசா நிற்பர் என்னையுனக் கடியா
னென்று பிறரெல்லாம் பேசா
நிற்பர்......... "

[கோயில்மூத்த திருப்பதிகம் 6]

பிறரெல்லாம் உனக்கு அடியான் என்று உன்னைப் பேணுத என்னைப் பேசி ஏசா நிற்பர் ஆதலின் பொன்னம்பலத்தாடும் எந்தாய் இரங்கி எனக்கு அருள்செய் எனவேண்டுகின் ருர் என்ற கருத்தில் இளிவு பற்றி அவலந் தோன்றியது.

"பேசப் பட்டேன் நின்னடி யாரில் "
என்பது மதுபோன்றது. [திருச்சதகம் 82]

திருப்பெருந்துறையில் குருந்தமரத்தினது நிழலில் அந்தணனுகி வந்து ஆண்டபின் மறைந்தமையின் பிரிவு ஆற்றுமை குறித்து அடிகள் இரங்குமிடங்கள் மிகப்பல.

" முனிவன் பாதநன் மலர்பிரிந்
திருந்துநான் முட்டிலேன் தலைகீறேன்"
[திருச்சதகம் 37]

" தாயி லாகிய இன்னருள் புரிந்தவென்
தலைவனை நனிகாணேன்
தீயில் வீழ்கிலேன் திண்வரை உருள்
கிலேன் செழுங்குடல் புகுவேனே"
[திருச்சதகம் 39]

"..............................
மெய்ம்மை யன்பருன் மெய்ம்மை
மேவினுர் பொய்யி லங்கெனைப் புகுத
விட்டுநீ போவ தோசொலாய்
பொருத்த மாவதே"
[திருச்சதகம் 92]

" அரத்த மேனியா யருள்செ யன்பரும்
நீயு மங்கெழுந் தருளி யிங்கெனை
இருத்தி னுய்முறை யோவெ
னெம்பிரான்
வம்ப னேன்வினைக் கிறுதி யில்லையே"
[திருச்சதகம் 93]

" ஊனெலாம் நின்றுருகப்
புகுந்தாண்டா னின்றுபோய்
வானுளான் காணுய்நீ மாளாவாழ்
கின்ருயே"
[திருச்சதகம் : 19]

என்பன போன்ற வாக்குகளில் இழவு பற்றி அவலந் தோன்றியது.

இறைவனுல் ஆட்கொள்ளப் பட்டுப்பேரா வியற்கை பெறுதற்குத் த கு தி யா க் கி அருளியதை,

" கல்லை மென்கனி யாக்கு மிச்சை
கொண்டு
என்னை நின்கழற் கன்ப னுக்கினுய்"
[திருச்சதகம்: 94]

என்பனபோன்ற சொற்றெடரால் கூறிய அடிகள், அந்நிலையிலின்றி மாறி வாடி வருந்தி நொந்தமை குறித்து

" செழிகின்ற தீப்புகு விட்டிலிற்
சின்மொழி யாரிற் பன்னுள்
விழுகின்ற என்னை........."
[நீத்தல் விண்ணப்பம்: 5]

" வேனில்வேள் மலர்க்கணைக்கும்
வெண்ணகைச் செவ்வாய்க்கரிய
பானலார் கண்ணியர்க்கும் பதைத்
துருகும் பாழ்நெஞ்சே"
[திருச்சதம் : 19]

" மாழைமைப் பாவிய கண்ணியர்
வன்மத் திடவுடைந்து
தாழியைப் பாவு தயிர்போற்
றளர்ந்தேன்"...........
[அடைக்கலப் பத்து : 6]

என்று கூறிய மணிவாக்குகளால் அசைவுபற்றி அவலம் தோன்றியது என்ன லாம். செல்வம் இல்லாமைதான் வறுமை என்பது என்று இப்போது நினைக்கின்றுர்கள் உலகினர். பண்டைக் காலத்து, பெற வேண்டிய பொருள்களுள் ஒன்று இல்லையா யினும் அப்பொருள் இல்லாமையை வறுமை என்று கூறுவர். 'நல்கூர்ந்தார் செல்வமகள்' என்பன போன்ற சொற்றெடர்கள் இதனை வலியுறுத்துமன்றே! மணிவாசகப் பெருந் தகையார் தன்னிடத்து இல்லையென்று கருதிய உயிர்க்குணங்களுள் ஒன்ருகிய அன்புஎன்பது

" இல்லை நின்கழற் கன்ப தென்கணே"
[திருச்சதகம் : 94]

" நெகும் அன்பில் நின்னைக் காண"
[திருச்சதகம் : 60]

" ஆடுகின்றிலை கூத்துடை யான்கழற்
கன்பிலை"
[திருச்சதகம் : 31]

என்பன போன்ற வாக்குகளால் உணர்த் திய அவர் அன்புவேண்டி பலவாறு அவலிக் கின்ருர்.

"வேண்டு நின்க ழற்க ணன்பு"
"... ... ... இடையரு அன்புனக்கென்
ஊடகத்தே நின்றுருகத் தந்தருளெம்
முடையானே"
[திருச்சதகம் : 11]

"கற்றாவின் மனம்போலக் கசிந்துருக
வேண்டுவனே"
[திருப்புலம்பல் : 3]

என்பனவாகிய வாக்குகள் எல்லாம் அருங்கவிவாதவூரனே முதலோர் அன்பிலேன் என்று அது வேண்டி இரங்குதல் பொய்ம்மை எனப் பிற்காலத்துள்ளார் எண்ணும்படி நிறைந்த அன்பிருந்தும் மேலும் மேலும் அன்பினைப் பெறவேண்டும் என்கின்ற பற்றுள்ளத்தை உணர்த்தும் அன்றோ ! அதனால் வறுமை பற்றி அவலம் பிறந்தது.

இன்னும் ஆசிரியர் தொல்காப்பியர் விளிவில் கொள்கை என்ற மிகையினால் உவகை போன்ற இன்னும் வேறுபல காரணம் பற்றியும் அவலந் தோன்றும் என்பது உணரக் கிடக்கிறது, மணிவாசகரும் தன்னுடைய சிறுமையை எண்ணி பேரருட் பெருக்காகிய இறைவன் எளிவந்து ஆண்டமையை வியந்து அற்புதப்பத்து, அதிசயப்பத்து பாடல்களால் அறிவித்து அவலிப்பதும் உணர்தற்குரியன.

அன்றியும் ஒரு பொருளை அழுதால் பெற முடியும் என்ற கருத்துடைய மகாரைப் போல இறைவனாகிய முழு முதற் பொருளை அழுதால் பெறமுடியும்என்றகருத்துடையவர் என்பதனை,

"வினையேன் அழுதால் உன்னைப்
பெறலாமே"
[திருச்சதகம் : 90]

"அழுகேன் நின்பால் அன்பாய்"
[திருச்சதகம் : 88]

"மயல்கொண் டழுகேனே"
[திருச்சதகம் : 87]

"அழுமதுவே யன்றி மற்றென்
செய்கேன்"
[கோயில்மூத்த திருப்பதிகம் : 4]

என்பனவற்றால் அறியலாம். திருச்சதகம் முதல் அச்சோப்பதிகம் வரை உள்ள திருவாசகப் பாடல்கள் பலவும், பாடுவார்களேயன்றி கேட்டாரது மனதையும் உருக்கவல்ல அவலச் சுவைநிரம்பித் ததும்பி வழிகின்ற தன்மை உடையது. அதனால்தான் அழுதடி அடைந்த அன்பர் என்ற பெயரும் பரஞ்சோதிமுனிவரால் இடப்பெற்றது.

"திருவாசகம் வேதத்தினும் சிறந்தது"

இக்கருத்தை வலியுறுத்த வந்த சிவப்பிரகாச அடிகள் கருதல் அளவை—நூல் அளவைகள் வேண்டாம், காட்சியளவையினாலேயே உணரப் பெறும் என்னுங் கருத்தினை

"விளங்கிழை.... மற்றையர் இலரே"
என்ற செய்யுளால் உணர்த்துகின்றார். அன்றியும் வேதங்கள் ஒருசில பிரிவினராலேயே கற்கப்பெறும் தன்மையுடையது, திருவாசகம் எல்லாப் பிரிவினராலும் கற்றற்குரியது என்பதை உவமை கொண்டு விளக்குகின்றார்.

"வாசகன் புகன்ற மதுர வாசகம்
யாவரும் ஓதும் இயற்கைத்து ஆதலின்
பொற்கல நிகர்க்கும் பூசுரர் நான்மறை
மட்கல நிகர்க்கும்

என்று உணர்த்திய தோடன்றி மதுர வாசகம் ஓதின் முத்தி உறுபயன்; வேதம் ஓதின் மெய்ப் பயன் அறமே — எனப் பயன்தரும் வேறு பாட்டினையும் உணர்ந்து இன்புறுமாறு சிவப்பிரகாச அடிகள் கூறும் திறன் அறிந்து மகிழ்தற்குரிய தன்றோ!

"திருவாசகம் என்னும் பெயர்"

மணிவாசகப் பெருமான் தான்பாடிய பாடல்களுக்குப் பாட்டு என்று கூறியிருப்பவும் திருவாசகம் என்னும் பெயர் எவ்வாறு ஏன் யாரால் சூட்டப்பெற்றது என்பதும் ஆராய்தற்குரியது.

நூலுக்குப் பெயரிடுங்கால் முதனூல் கருத்தன் அளவு மிகுதி பொருள் செய்வித்தோன் தன்மை முதல் நிமித்தினும், இடுகுறியானும் பெயரிடுவர். ஆதலின் மாணிக்கவாசகர்

இயற்றிய பாடல்களைப் பலகாற் பயின்ற ஒருவர் நூலின் தன்மை பற்றிப் பெயரிட்டிருக் கக்கூடும் என எண்ணப் பெறுகின்றது. தன்மையாதோ வெனின், சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நால்வகையில் ஞானமார்க்கத்தை உணர்தற்குரிய பாடல்களே பெரும்பாலும் பாடப்பெற்றுள்ளன ஆதலின் திருவாசகம் எனப் பெயரிட்டனர் என்னலாம்.

ஞானப் பாடல்களுக்குத் திருவாசகம் என்னும் பெயர் எவ்வாறு பொருந்துமெனின், திரு என்ற சொல்லுக்குப் பல உரையாசிரியர்கள் பலவாறு பொருள் கூறினும் மணிவாசகரே ஞானம் என்று பொருள் கூறுகின்றார். "தவமே புரிந்திலன் தண்மலரிட்டு முட் டாதிறைஞ்சேன் அவமே பிறந்த அருவினை யேனுனக் கன்பருள்ளாம், சிவமே பெறுந்திரு வெய்திற்றிலேன்" [திருச்சதகம் 5] என்ற பகுதியில் சிவத்தைப் பெறுதற்கு இன்றியமையாது வேண்டப்படுவது ஞானமன்றோ! ஆதலின் திரு. பண்டித மணி அவர்கள் திரு என்ற சொல்லுக்கு இவ் விடத்தில் சிவஞானம் என்றே உரை கூறியுள்ளார்கள். ஆதலின் திரு என்பது ஞானம் என்று உணரக் கிடக்கின்றது, வாசகம் என்பதற்கு வாக்கு என்பது பொருள். "மன வாசகங் கடந்தானெனை மத்தோன்மத்த னுக்கி" [உயிருண்ணிப்பத்து 3] என்று அடிகள் பிறிதொரு பாடலில் அருளியுள்ளதையுங் காணலாம். எனவே திருவாசகப் பாடல்களின் சுவை அறிந்த ஒருவர் அதன் தன்மையை நோக்கி ஞானவாக்கு என்னும் பொருள்படுகின்ற திருவாசகம் என்று பெயரிட்டிருப்பார்கள் என்று உணரக் கிடக்கின்றது.

"மாணிக்கவாசகர் பெருமை"

எல்லாம் வல்ல இறைவனிடத்தில் அருள் பெறுவான் வேண்டிய அடியார் பலர் பல அல்லலுற்று செய்தற்கு அரியனவாகிய மைந்தனைக் கொன்றும், துணைவியை அளித்தும், தந்தையைத் தடிந்தும் இன்னும் பலவாகிய செயல்களைச் செய்தும் பண்டைக் காலத்து அடியார்கள் ஆயினர். ஆனல் திருவாதவூரடிகளது பாடல்களைப் பாடக்கேட்க விரும்பிய இறைவன் தந்நிலைக்கு ஒவ்வாதனவாகிய மதுரைமாநகரிற் குதிரை மாறியும், விண்புகழ் முடிமிசை மண்பொறை சுமந்தும், நீற்றெழில் மேனியின் மாற்றடிபட்டும், தொண்டனுக்கிக் கொண்டான் என்றால் வாசகரின் பெருமை அளவிட்டுக் கூறமுடியாதன்றோ!

பெண்சுமந்த பாகப் பெருமா
னொருமாமேல்
எண்சுமந்த சேவகன்போ லெய்தியதும்
வைகைநதி
மண்சுமந்து நின்றதுமோர் மாறன்
பிரம்படியாற்
புண்சுமந்து கொண்டதும் நின்
பொருட்டன்றோ புண்ணியனே

இராமலிங்க அடிகள்.

முடிவுரை

எனவே திருவாசகப் பாடல்களை நன்கு பலகால் பயின்று உள்ளத்தோடு கலந்து பாடி இன்புற்ற அடியார்கள் "தேனைப் பாலைக் கன்னலின் தெளிவை" "தேனே அமுதே கரும்பின் தெளிவே" "தேனையும் பாலையும் கன்னலையும் ஒத்து" "தேனுய் அமுதமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய்" "ஞானக்கரும்பின் தெளிவைப் பாகை நாடற்கரிய நலத்தை" "நந்தாத் தேனைப் பழச்சுவை யாயினனை" "நெல்லிக் கனியைத்தேனைப்பாலை நிறையின் அமுதை" என்றெல்லாம் சொல்லி இறைவனை இனிமையாகக் காண்கின்ற வாதவூரடிகளை ஒத்து திருவாசகத்தையே அவ்வாறு காண்கின்றார்கள் ஆதலின் திருவாசக மென்னுந் தேன் என்று கூறுகின்றார்கள். அன்றியும் திருவாசகத்தின் விரிவுரைபோன்ற அருட்பா பாடிய அருட்பிரகாச வள்ளலார்

"வான்கலந்த மாணிக்க வாசகநின்
வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ்
சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து தீங்கனித்தீஞ்
சுவைகலந்து
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல்
இனிப்பதுவே"

என்று அனுபவ உண்மையைக் கூறுகின்றார்.

எனவே இதுகாறும் கூறியவற்ருல் இம்மைப் பிறப்பின் இருவாதனைகளாகிய கடலினின்றும் பேரா இயற்கைத்தாய பேரின் பத்தினை அருளவல்ல இறைவனது திருவடிகளாகிய கரையை அடைய எண்ணுபவர்களுக்கு புணையாக இருப்பது திருவாதவூரடிகளால் அருளப்பெற்ற திருவாசகமென்னும் ஞானவாக்காகிய பாட்டு என்பது போதரும். திருவாசகமென்பது ஞானவாக்காகிய பாட்டு என்பதை உணர்ந்து திருவாசகப் பாடல்களை ஓதி இன்புறுவார்களாக.

★

வாழ்த்து

சா. கணேசன் அவர்கள்

காரைக்குடி.

செட்டிமார் நாட்டின் முதியதொரு தமிழ்ப் பணிக்கூடமான மேலைச்சிவபுரி சன்மார்க்க சபையை ஈன்றளித்த வ. பழ. சா. குடும்பத்தாரை வாய் படைத்து உடையார் எல்லாம் வாழ்த்தவேண்டும். அப்படியே, இதன் செவிலித் தாயான பண்டிதமணி கதிரேசனுரையும் நாம் எவ்வளவு பாராட்டினும் தகும்.

அரசஞ் சண்முகனுர், மகாமகோபாத்யாய உ. வே. சா., மகாவித்வான் ரா. ராகவையங்கார், திரு. வி. க., விபுலானந்த அடிகள், நாட்டார் ஐயா, உமா மகேசுவரனுர், வெள்ளக்கால் முதலியார், தெ. பொ. மீ, போன்ற அருந்தமிழ்ப் பெருமக்களின் தொடர்பால் இதன் பெருமையும், தகுதியும் உயர்ந்திருக்கிறது.

இதன் கடந்தகாலப் பணியில் உள்ளநிறைவு கொள்ளும் நல்லன்பர்களுக்கு இதன் எதிர்கால வளர்ச்சியில் நன்னம்பிக்கை நிரம்ப உண்டு. செல்வ வளம் படைத்தவர்களும், தருமப் பணத்தை தம்பால் உடையவர்களும், சன்மார்க்க சபைக்குத் தாராளமாய் வாரி வழங்கிப் பணம் படைத்த பயனைப் பெறவேண்டும்.

ஆண்டவன் அருளும், அன்பர்கள் துணையும் பெருகி நின்று சன்மார்க்க சபை தன் திருப்பணியில் நாளும் நாளும் ஓங்கி உயர்ந்து ஒளிர நாம் யாவரும் முடிந்தவற்றை யெல்லாம் முட்டின்றி யளித்து மகிழ்வோமாக.

முல்லைப் பாட்டில் ஓருவமை

புலவர் க. திருமேனி, B. O. L.
தமிழ் விரிவுரையாளர், தேசியக் கல்லூரி, திருச்சி.

சங்க இலக்கியங்களுள் பத்துப் பாட்டு என்ற தொகுப்பு நூல் தன்னகத்துத் தனி நூலாம் தகுதிவாய்ந்த பத்துப் பாடல்களைப் பெற்றுள்ளது. அவற்றுள் முல்லைப் பாட்டென்பது மிகச் சிறிய பாட்டாம். நூற்று மூன்று அடிகளில் அதனைப் பாடிமுடித்த நப்பூதனார் என்ற புலவர், தம் திறமை தோன்ற அதன் கண் ஐந்து உவமைகளை அழகுற அமைத்துள்ளார்.

தொல்காப்பியர் கருத்துப்படி உவமைஎன்பது, "வினை, பயன், மெய், உரு" என்ற நான்கு வகைப்பட்டுப் பின்னர் பலவாய் விரியும் இயல்புடையது. இந் நால்வகை உவமையும், அவற்றின் விரிவும் எல்லாம் சொல்ல வந்த பொருளைக் கேட்டார் தெளிவுற உளங்கொளற்கே அமைவன. கவி, ஓர் உவமையைக் கையாளும் போது தன் திறமை தோன்ற உவமையின் கண்ணும், பொருளின் கண்ணும் பொருத்தமுற அடைமொழிகளைப் பெய்துரைக்கிறான். தான் உணர்த்தக் கருதிய பலவற்றையும் படிப்போர் உய்த்துணருமாறு உவமை வாயிலாக அமைத்து, நவில்தொறும் நயம் பயக்கச் செய்தல் புலவனியல்பாம்.

சங்கப் புலவர்கள் உவமைகளை அளவறிந்து கையாண்டுள்ளனர். கையாளும் இடங்களிலெல்லாம் உவமை, பொருள் என்ற இரண்டினுள்ளும் உள்ள பொதுத் தன்மையும் சிறப்புத் தன்மையும் விளங்கித் தோன்றுமாறு, உன்னி உணர்ந்தே அமைக்கின்றனர். அதனால், உவமையிடத்து ஆளப்பட்டுள்ள அடைமொழிகளாகிய சொற்களின் சிறப்பினைப் புலனுக்கிக் கோடல் வேண்டும். அதனோடு, உவமைக்குள்ளவற்றைப் பொருளுக்கும், பொருளுக்குள்ளவற்றை உவமைக்கும் ஏற்றிப் பார்த்தல் தொல்காப்பியர்க்கும் உடன்பாடேயாம்.

"உவமப் பொருளின் உற்றது உணரும்
தெளிமருங் குளவே திறத்தி யலான."
(உவ. 20).

என்பது அவர் வாக்கு. அதனால், அவர் அடியொற்றி முல்லைப்பாட்டில் நப்பூதனார் கையாண்டுள்ள உவமைகளைத் துருவிக் கண்டால் எத்தனையோ புதைபொருள்கள் கிடைக்கின்றன.

முல்லைப் பாட்டில், ஒருதலைவன், தன் தலைவியைப் பிரிந்து பகைப்புலம் புகுந்து அங்கு பாசறை அமைக்கிறான். அப் பாசறை அமைப்பில் வீரர்கள் தம் விற்களைக் கீழே ஊன்றி அவற்றின்கண் தம் அம்பறுத் தூணிகளைத் தொங்க விட்டிருக்கின்றனர்; வீரர்கள் விற்களில் அம்பறுத் தூணிகளை நாற்றிய தன்மையை ஓர் உவமை சொல்லிப் புலவர் விளக்குகின்றார்.

"கற்றோய்த் துடுத்த படிவப் பார்ப்பான்
முக்கோல் அசைநிலை கடுப்ப நற்போ
ரோடா வல்விற் றூணி நாற்றி"—
என்பது

அவ்வுவமை. இந்த உவமையில் முக்கோலந்தணனுக்கும், வீரனுக்கும் உள்ள பொதுத் தன்மையை அடைமொழிகளால் நாம் உய்த்துணருமாறு நப்பூதனார் அழகுற நன்கு அமைத்துள்ளார்.

தான் உடுத்துகின்ற ஆடைகளைக் காவிக் கல்லிலே தோய்த்து நிறமாற்றி அணிகின்ற, விரதங்களை மேற்கொள்ளும் முக்கோலந்தணன் தன் துகிலை அம் முக்கோலினைக் கீழே ஊன்றி அதில் இட்டு வைத்தல் மரபு. அது போல, அறத்தால் பொருகின்ற போரினை மேற்கொண்டு அதில் தோலாமைக்குக் காரணமாய வலிமை பொருந்திய வில்லை நிலத்தில் ஊன்றி,

அதில் அம்பருத் தூணிகளைத் தொங்கவிட்டு வைப்பது வீரனுக்கு இயல்பு. இந்த இருவர்க்கு முள்ள இயல்பை விளக்க வந்த அடைமொழிகளைத் துருவி நோக்கிப் புலவர் கருத்தறிவோம்:

அந்தணனுக்குக் கல்தோய்த்து உடுத்தல், விரதம் அல்லது படிமம் கோடல், முக்கோலு டைமை, துகிலினையிட்டு வைத்தல் முதலிய செயல்கள் உரியன. வீரனுக்கு நற்போர் புரிதல், ஓடாமை, வலிய வில்லுடைமை, தூணி நாற்றல் முதலிய செயல்கள் உரியன. இங்கு வீரனுக்கும், துறவிக்கும் நன்நான்காக எட்டுத் தன்மைகள் தரப்பட்டுள்ளன.

துறவி, பிறநெறி நிற்கும் மக்களினின்றும் வேறு பட்டோன். பற்று நீங்கப் பெற்றவன். எல்லாம் துறந்து எடுத்த செயலைச் செம்மை யாக நிறைவேற்றப் படிமம் பூண்டவன். இவற்றிற்கறிகுறியாக காவி நிறம் தோய்த்த ஆடையை உடுத்துகிறுன்.

வீரன் பலநிலைப்பட்ட மக்களுள்ளும் வேறுபட்டு மனைவி, மக்களையும், உற்றூர் உறவி னரையும், தன் உயிரையுமே வெறுத்து வீரம் விளைத்தலையே விரும்புவோன். அவனும் தன் னிலைக் கேற்பக் கழல், பூ, கவசம் முதலியன புனைந்தும், பூண்டும் தன்னை வீரன் என்று காட்டுகின்றுன்.

துறவி வீழ்நாள் படாது நன்ருற்றித் தன் வாழ்நாள் ஒன்றேனும் வழுக்கினுள் வைகாது வழியடைக்கும் கல்லைப் பெறுகிறுன். வீரனும் விழுப்புண் படாத நாளெல்லாம் வழுக்கினுள் வைகும் என்று நாடொறும் பொர நினைந் தாற்றி வீழ்நாள் படாது காளைக்குரிய கடன் கழித்து உலகில் பொன்றுந்துணையும் புகழ் நிறுவுகின்றுன்.

துறவி தன்னுற்றின் நிலை தளர்வானுயின் அவன் ஒழுக்கமுடைய உண்மைத் துறவியாக மதிக்கப்பெருன். நிலை தளர்வதற்கு முன்னர் ஓடாப் பூட்கையொடு, இம்மை இன்பம் நீங்க மேற்கொண்ட பற்றற்ற துறவறத்தின் பயனை ஒரு சேர இழப்பான். அன்றியும் இகழவும் பெறுவான்.

வீரனும் "விழித்த கண், வேல்கொண் டெறிய அழித்து இமைப்பினும் அது ஓட்டு" என்று உலகு பழிதூற்றும் என்ற நினைவுடை யான். வீரன் போர்க்கள நெறி தவறின் பயனி ழத்தலும், இகழ்வெய்துதலும் கண்கூடு.

காப்பது விரதம். அது துறவிக்குரியது. அஃதாவது ஐம்புலங்களாலும் தீமை புகாது ஆமைபோல் ஐந்தடக்கிக் காத்தல் துறவிக் காகிய செயல். ஏறுண்டவரைப் பிறர்மிச்சில் என்று கழித்தல், மாறு இல்லை என்று இளை யாரை உய்யவிடுதல், அறமின்மையால் முதி யாரை எறியாமை, அருளன்ருதலின் மதவேழ மும் எறியாமை, முதலிய விரதம் பூணல் வீரர்க் குரியன. காவாமை துறவிக் கிழுக்காதல் போன்றே படைமடம் படாது நிற்றல் வீரனின் விரதமாம். இவை அவரவர்க்கு அரியவாஞ் செயல்களே!

முக்கோலை அயன், அரி, அரன் மூவரை யும் ஒப்பமதிக்கும் வேறுபாடற்ற தன்னுடைய தன்மையைக் காட்டத் துறவி கைக்கொண்டுள் ளான். வீரனே, அறம், மறம், கடன் என்ற மூன்றையும் ஒப்பமதித்துப்போரிட்டு அவற்றை நிலைநாட்ட ஓடாமைக்குக் காரணமாகிய வலிய வில்லைக் கொண்டுள்ளான். துறவிக்கு முக் கோலெனின் வீரனுக்கு வில்லே!

ஆதலின், முக்கோலைத் தரைக்கண் ஊன்றித் துறவி தன் ஆடையை வைக்கப் பயன் படுத்துமாறு போல வீரனும் வில்லைத் தரைக்கண் ஊன்றித் தன் அம்புப் புட்டிலை வைக்கப் பயன் படுத்துகிறுன்.

வீரன் முறைப்படிப் பொருதலையே தனக் குரிய அறமெனக் கருதிப் போரிடுகின்றுன். துறவி தான் மேற்கொண்ட நெறிக்குரியவாறு எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டல் அற மெனக் கொண்டோம்புகின்றுன்.

ஓடாமை,-அடிபிறக்கிடாமை வீரர்க்கழகு. கூற்றுடன்று மேல்வரினும் எதிர்த்து மடிவ தன்றி அடிபிறக்கிட்டு வீரம் கெட உயிர்பிழைத்தல் இழுக்கென்று கொள்வது வீரனின் இயல்பு. தன்உயிர் நீங்கினும், தான் பூண்ட விரதத்தில் இளையாமையும், அதனைக் கடைபோக முடித்தலும் துறவிக்கியல்பாம்.

பல்வகைப்பட்ட பகைவர் நிரைநிற்கும் போர்க்களத்தே உடல் வலிமையையும், உள்ளத்துரனையும் உணர்த்தி வீரம் விளக்கக் கருவியாகிய வலிய வில் வீரனுக்குப் பயன் படுகிறது. அவ்வாறே துறவி கொண்ட மன ஒருமைப்பாட்டிற்கறிகுறியாக தெய்வ வேற்றுமையிடையே ஒற்றுமையைக் காட்டி உள்ளத் துணிவை உணர்த்தி ஒன்றே "கடவுள்" என்றதோர் உண்மையை முக்கோல் உணர்த்தி நிற்கிறது.

வீரர்கள் அம்புப்புட்டிலைத் தாம் மடிந்தாலல்லது கீழிடுதல் தோல்விக் கறி குறியாய் மாசு எய்தும் என்று கருதுவர். ஆதலின், தம் வில்லூன்றி அதனை மாட்டிவைப்பர். துறவியும் தன் ஆடை தரையிற் பட்டால் மாசுண்ணும் என்றெண்ணியே முக்கோலிலிட்டுவைக்கிறன்.

இவ்வுவமையை இவ்வாறெல்லாம் விரித்துப் பொருள் கொள்வழியெல்லாம் நயம் பயக்குமாறு அமைத்துள்ள நப்பூதனர் திறத்தை அறிவுலகம் அறிந்து போற்றும். இத்தகைய உவமைகளைச் சங்க இலக்கியங் களிற் பரக்கக் காணலாம், இஃது ஒரு சோற்றுப் பதமாயிற்று.

இசைக்கலை

இரஞ்சிதகான இசைமணி, கானவாரிதி, இசைரத்தினச்சுடர்

ச. சோமசுந்தரம், மதுரை.



ராகம் சரஸ்வதி] பல்லவி [தாளம் ஆதி

உள்ளம் அள்ளும் தமிழ் வெள்ளைக் கலைஉடுத்தி
முல்லை நகை காட்டுகிருள் முதுகலை அரசிசரஸ்வதி (உள்ளம்)

அநுபல்லவி

கள்ளம் கபடமற்ற கருத்ததனைத் திட்டி
கற்பனைக்கரசி ஞான காரமுதூட்டி (உள்ளம்)

சரணம்

வள்ளியை வேட்டும் வேடன் வாக்கில் பரிணமித்து
வான்புவியர்க் கெல்லாம் அன்பு தொடுத்து
தெள்ளத் தெளிந்த ஞானதிருவருளைப் படித்து
தித்திக்கும் சுருதி சரஸ்வதி ராகபாவம் கொடுத்து.

இசை என்ற சொல்லுக்கு இசைவிப்பது அல்லது வயப்படுத்துவது என்று பொருள். பல்லுயிரும் பலவுலகும் படைத்தளிக்கும் எல்லை யற்ற பரம்பொருளும் இசைவடிவமாக விளங்கு வதாகவே அறிஞர்கள் கருதுகின்றனர். ஊனாய், உயிராய், உயிர்கலந்த உட்பொருளாய் விளங் கும் இயற்கையன்னையின் இனியஒலி இசைவடி வமாகவே ஒலித்துக்கொண்டிருக்கின்றது.

இத்தகைய பெருமை வாய்ந்த இசைக் கலை நுண்கலைகளுள் ஒன்ருகும். இதன் உண்மையினையும் நுண்மையினையும் அறிந்த மக்களே சிறந்த நாகரீகம் படைத்த மக்களாகக் கருதப் படுவர். அத்தகைய நாகரீக மிக்க குடி எது? அது கற்ருேன்றி மண் தோன்ருக் காலத்தே முன்தோன்றிய மூத்த குடி. அதுதான் தமிழ்க் குடி. பண்டைத் தமிழர் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இசைக் கலையை அறிந்து, தெளிந்து மகிழ்ந்திருக் கின்றனர்.

அன்பின்ஐந்திணைக்கு இலக்கணம் கூறப் புகுந்த தொல்காப்பியனர், கருப்பொருள்கள் இவை என உரைக்கும் போது 'தெய்வம் உணவே மாமரம் புட்பறை, செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ' என்று இசைக் கருவிகளுட் பழமையான யாழினையும் குறிக்கின்ருர். தொல் காப்பியருக்கு முன்பே இசை வளர்ந்து சிறந்த வரம்பான இலக்கணமும் பெற்றிருந்தது என்ற செய்தியை 'அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும் இசையொடு சிவணிய நரம்பின் மறைய என்மனர் புலவர்' என்ற தொல்காப்பிய எழுத்ததிகார நூற்பாவால் அறியலாம்.

தமிழ் மொழியை முப்பெரும் பிரிவாகப் பிரித்து அதில் இசைத் தமிழை இடையே வைத்துச் செப்பம் செய்த பண்டைத் தமிழரின் அறிவுத்திறம் எண்ணி யெண்ணி வியத்தற் குரியது. 'தெரிமாண் தமிழ் மும்மைத் தென்னம் பொருப்பன்' என்ற பரிபாடலால் தமிழ் முப்பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டிருந்த திறத்தை உன்னலாம். 'பண் என்னும் பாடற் கியைபின்றேல்' என்ற குறளில் 'பண்' என்ற சொல் வருதல் கொண்டு திருக்குறட் காலத்தின் இசை வளர்ச்சியை உணரலாம்.

தனித்தமிழ்க் காப்பியமாம் சிலப்பதி காரத்தை 'முத்தமிழ்க் காப்பியம்' என்றே வித்தகர் பலரும் அழைப்பர். ஆற்றுவரி, கானல் வரிப் பாடல்களில் இசைக்கலை எழிலுறத் தோற்றமளிக்கின்றமையாலேயே அவர்கள் இவ்வாறு அழைத்தனர் போலும். சிலப்பதி காரத்திற்கு அரியதோர் உரைகண்ட அடி யார்க்கு நல்லாரும் தம்முரையில் 'பெருநாரை, பெருங்குருகு' போன்ற அழிந்துபோன தமிழிசை நூல்களைக் குறிப்பிடுவதுகொண்டு தமிழிசையின் பெருமையினையுணரலாம்.

ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்ருன சீவக சிந்தாமணியில் காந்தருவதத்தையார் இலம் பகத்தில் இசைபற்றிய குறிப்புக்கள் காணக் கிடக்கின்றன. உதயணன் இசையின் துணை கொண்டு மதம்பிடித்த யானையின் சினத்தைத் தணித்த செய்தி, இசையினைத் தமிழர் பயன் படுத்திய முறையினைத் தெளிவுபடுத்துகின்றது.

இவ்வாறு சீரும் சிறப்புமாய் வளர்ந்த இசைக்கலை, காலப்போக்கால் இடைக் காலத்தே வீழ்ச்சியுற்றதெனினும் தமிழகச் சமயகுரவர்களின் முயற்சியால் மீண்டும் மலர்ச்சிபெற்றது. இன்னிசையால் தமிழ் பரப் பிய ஆளுடை பிள்ளையார், 'இசையாதரித்துக் கற்றுவல்லார் சொலக்கேட்டு உகந்தவர்தம்' என்று பாடுகின்ருர். திருநாவுக்கரசரும் 'சலம் பூவொடு தூபம் மறந்தறியேன் தமிழொடு இசைபாடல் மறந்தறியேன்' என்று குறிப்பது கொண்டு இசையைச் சமய குரவர்கள் எவ் வளவு கருத்தாகப் பாதுகாத்துவந்தனர் என்ற உண்மையை அறியலாம். சுந்தரர் இறைவனை 'ஏழிசையாய் இசைப்பயனுய்' என்று பாடுகின் ருர். திருமுறைகளுள் ஒன்று 'திருவிசைப்பா' என்றே பெயர் பெற்றுள்ளது. ஆழ்வார் பெரு மக்களும் இசையைக் கருவியாகக் கொண்டே தமிழையும் இறை உண்மையினையும் முழக்கி வந்தனர் என்ற உண்மையினை அவர்தம் பாடல்களுட் காணலாம்.

'பண்சுமந்த பாடல்' 'ஏழிசைச் சூழல் புக்கோ' என்ற மாணிக்க வாசகரின் திருவாக் கால், இசை ஏழு வகையாகப் பிரிக்கப்பட்டு வளர்க்கப்பட்ட செய்திகளை அறியலாம்.

குலோத்துங்கன் துணைவி ஒருத்தியின் பெயர் 'ஏழிசை வல்லபி' என்ற செய்தியை செயங்கொண்டாரின் பரணியின் மூலம் அறியலாம். ஏழிசைத்திறம் வாய்ந்தவருக்கு 'ஏழிசை வல்லபி' என்ற விருது வழங்கல் மரபுபோலும்.

பிற்காலத்தே இசை பலவேறு வகையாக வளர்ந்தது. 14-ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த அருணகிரிநாதரின் சந்தப்பாடல்கள் கேட்போர் மனதைப் பிணிக்கும் தன்மைய. முத்துத் தாண்டவர், அருணாசலக் கவிராயர், கோபாலகிருஷ்ண பாரதியார் முதலியோர் பழமையான கதைகளைக் கருப்பொருளாகக் கொண்டு இசைப்பாடல்கள் பாடினர். வேதநாயகம் பிள்ளை, இராமலிங்க சுவாமிகள் முதலியோர் இசைக்கலைக்குப் புத்துணர்ச்சியூட்டினர் என்று சொல்லலாம். அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச் சிந்து கேட்போரின் உள்ளத்தைவிட்டு நீங்காது. பாரதியார் சுத்தானந்த பாரதியார், பாரதிதாசன் முதலியோர் இசைத் துறையில் தனியானதொரு வழி வகுத்துக்கொண்டு அதை வளர்ப்போராவர்.

பெருங் கொடைவள்ளல், ராஜா சர்-அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் தமிழ் இசையை வளர்ப்பான் வேண்டி இசைப் பகுதியை அண்ணாமலை நகரில் தோற்றுவித்ததோடன்றிச் சென்னையிலும் தமிழிசைச் சங்கத்தை நிறுவித் தமிழிசையை வளர்த்தார்கள். அன்னார் புதல்வர் ராஜா சர் மு. அ. முத்தைய செட்டியார் அவர்களும் இசையைக் கண்களெனப் போற்றிக் காத்து வளர்த்துவருகிறார்கள். இவ்வாறு முத்தமிழில் ஒன்றாய் விளங்கிவரும் இசைத் தமிழ் என்றென்றும் இனிது வளர்ந்து அனைத்துலகினையும் இன்புறுத்துவதாக.

1925-ம் ஆண்டுக்குப் பின் இச்சன்மார்க்க சபையைச் சார்ந்த ஸ்ரீ கணேசர் செந்தமிழ்க் கலாசாலையிற் கல்வி பயின்று மதுரைத் தமிழ்ச் சங்கப் பரீட்சைகளிற்றேறிப் பட்டமும் பரிசும் பெற்றுப் பதவியிலிருப்போர் விவரம்.

தொடர் எண்	பெயர்	தேறிய வகுப்பு	தேர்ச்சி பெற்ற ஆண்டு	பரிசு விபரம்	பதவி
1	மீ. முத்துச்சாமி பிள்ளை	பிரவேசம்	1925	முதற்பரிசு	தமிழ்ப் பண்டிதர். ஸ்ரீ கணேசர் செந்தமிழ்க் கலாசாலை, மேலைச்சிவபுரி.
2	மு. அருணசலம் பிள்ளை	பாலபண்டிதம்	1928	...	தமிழ்ப் பண்டிதர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.
3	ப. முத்தையா பிள்ளை	பிரவேசம்	1928	...	தமிழ்ப் பண்டிதர். மெய்கண்ட வித்தியாசாலை, சிதம்பரம்.
4	மீ. முத்துசாமி பிள்ளை	பாலபண்டிதம்	1929	...	
5	V, சுப்பிரமணிய அய்யர்	பிரவேசம்	1930	முதற்பரிசு	தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீ கணேசர் செந்தமிழ்க் கலாசாலை, மேலைச்சிவபுரி,
6	A. முத்துச்சாமி பிள்ளை	ஷை ...	1930	2-ம் பரிசு	தமிழ்ப் பண்டிதர். St. Mary's High School, மதுரை.
7	ப. முத்தையா பிள்ளை	பாலபண்டிதம்	1931	...	
8	அ. சிதம்பரம்	பிரவேசம்	1931	...	தமிழ்ப் பண்டிதர், ஆத்தூர்—சேலம்,
9	M. சுப்பிரமணிய தேசிகர்	பிரவேசம்	1932	...	ஆசிரியர், ஆவினிப்பட்டி.
10	அ. மூத்துச்சாமி பிள்ளை	பாலபண்டிதம்	1933	...	
11	சு, அ. மல்லிங்கசாமி	ஷை	1934	...	தமிழ்ப் பண்டிதர். ஸ்ரீ கணேசர் செந்தமிழ்க் கலாசாலை மேலைச்சிவபுரி.
12	அ. சிதம்பரம்	பாலபண்டிதம்	1934	...	
13	மீ. கந்தசாமி	பிரவேசம்	1934	முதற்பரிசு	தமிழ்ப் பண்டிதர். St. Mary's High School, மதுரை.
14	ரா. கந்தசாமி	ஷை	1934	...	ஆசிரியர், தீர்த்தபதி ஹைஸ்கூல் அம்பாசமுத்திரம்.
15	அ. மு. கருணையா நந்தன்	ஷை	1934	...	ஆசிரியர், நெற்குப்பை,
16	க. இராமமூர்த்தி	ஷை	1934	...	தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் ஹைஸ்கூல், மாம்பலம்.
17	ச. குழந்தைவேற்சாமி	பாலபண்டிதம்	1935	...	தமிழ்ப்பண்டிதர், காரனேஷன் ஹைஸ்கூல் ஸ்ரீ வைகுண்டம்.
18	மு. பழனியப்பன்	பிரவேசம்	1935	...	தமிழ்ப்பண்டிதர் கொல்லங்கோடு.
19	மீ. கந்தசாமி	பாலபண்டிதம்	1936	2-ம் பரிசு	
20	க. இராமமூர்த்தி	ஷை	1936	...	
21	மு. பழனியப்பன்	ஷை	1936	...	
22	ச. பாலசுப்பிரமணியன்	பிரவேசம்	1936	...	
23	மு. கந்தசாமி	பிரவேசம்	1936	...	தமிழ்ப்பண்டிதர் St. Xavier's High School, பாளையங்கோட்டை.
24	K. S. துரைராஜன்	பிரவேசம்	1939	...	மாணவன், வித்துவான் வகுப்பு சன்மார்க்க சபை.
25	கு. கந்தசாமி	ஷை	1939	...	ஷை
26	S. நாராயணசாமி	ஷை	1939	...	மாணவன் வித்துவான் பிரிலிமினரி சன்மார்க்க சபை.

இச்சன்மார்க்க சபையைச் சார்ந்த கணேசர் செந்தமிழ்க் கல்லூரியிற் பயின்று சென்னைப் பல்கலைக் கழகத்துத் தனித் தமிழ்த் தேர்வுகளில்

தேர்ச்சி பெற்றவர் விபரம்.

தொடர் எண்	பெயர்	தேறிய வகுப்பு	தேர்ச்சி பெற்ற ஆண்டு	பரிசு விபரம்	பதவி
1	கு. கந்தசாமி	முன்னிலை	1943	...	திருமயம் கழகப்பள்ளி
2	மு. பழநிவேல்	முடிநிலை	1943	...	சிட்டாள் ஆச்சி உயர்நிலைப்பள்ளி, கண்டனூர்.
3	ப. சிவப்பிரகாசம்	முடிநிலை	1943	...	யாழ்ப்பாணம்
4	K. S. துரைராசன் (கவிஞர் முடியரசன்)	,,	1943	...	ஸ்ரீ மீனாட்சிசுந்தரேசுவரர் உயர்நிலைப் பள்ளி, காரைக்குடி.
5	சு. நாராயணசாமி	,,	1944	...	நகரத்தார் உயர்நிலைப்பள்ளி, தேவகோட்டை.
6	க. நாகராசன்	,,	1946	...	ஒக்கூரார் உயர்நிலைப்பள்ளி, மானாமதுரை.
7	தி. பொ. நாராயணசாமி	,,	1946	...	உயர்நிலைப்பள்ளி, கம்பம்.
8	சா. அழகப்பன்	,,	1946	...	வணிகத்துறை
9	பெரி. சிவனடியான்	,,	1946	...	வணிகத்துறை
10	இரா. ஆறுமுகம் பிள்ளை	,,	1947	...	முஸ்லீம் உயர்நிலைப்பள்ளி, மேலப்பாளையம்.
11	சி. சொக்கலிங்கம்	,,	1948	...	வணிகத்துறை
12	த. வடிவேலன்	,,	,,	...	திருச்சி மாவட்ட உயர்நிலைப்பள்ளி.
13	ந. தி. நல்லப்ப ரெட்டியார்	,,	,,	ஐந்தாம் ஜார்ஜ் நினைவுப் பரிசு ரூ. 1000/–	இந்துக்ஷத்திரியர் நாடார் உயர்நிலைப் பள்ளி, சிவகாசி.
14	கதி. சுந்தரம்	,,	,,	...	தமிழ் விரிவுரையாளர், தியாகராசர் கல்லூரி, மதுரை.
15	கரு. காசி	,,	1949	...	உயர்நிலைப்பள்ளி, ஈரோடு.
16	மு. சேதுராமன்	,,	,,	...	தமிழ்நேசன், கோலாலம்பூர்.
17	அ. ரா. திருவேங்கடன்	,,	1951	...	உயர்நிலைப்பள்ளி, சென்னை.
18	மு. அருணாசலம்	,,	1952	...	நகராட்சி உயர்நிலைப்பள்ளி, கரூர்.
19	சிவ. சண்முகசுந்தரம்	,,	...	...	
20	சுப. இலக்குமணன்	,,	1953	...	அமராவதிபுதூர் குருகுலம்.
21	மு. செயராமன்	,,	,,	...	கொடைக்கானல் உயர்நிலைப்பள்ளி.
22	மு. சின்னையா	,,	,,	...	

தொடர் எண்	பெயர்	தேறிய வகுப்பு	தேர்ச்சி பெற்ற ஆண்டு	பரிசு விபரம்	பதவி
23	நாக. சண்முகம்	முடிநிலை	1953	...	திரைப்படக்கதையமைப்பாளர், சேலம்.
24	அருள் ஒளியார்	,,	1954	...	நச்சாந்துபட்டி, நகரத்தார் உயர் நிலைப்பள்ளி.
25	வே. பாலசுப்பிரமணியன்	,,	,,	...	கழக உயர்நிலைப்பள்ளி, திருப்பாச்சேத்தி.
26	சு. இலக்குமணப்பெருமாள்	,,	,,	...	தொழிலாளர் நல உயர்நிலைப்பள்ளி, விக்கிரமசிங்கபுரம்.
27	லெ. பெருமாள்செட்டி	,,	,,	...	உயர்நிலைப்பள்ளி, வேட்டவலம்.
28	து ஆனந்தன்	,,	1955	...	கழக உயர்நிலைப்பள்ளி, பாகனேரி.
29	க. முத்தானந்தன்	,,	,,	...	,, கருமத்தான்பட்டி, சேலம்.
30	மு. பழநிச்சாமி	,,	,,	...	,, பீடம்பள்ளி, கோவை.
31	மலை சோமசுந்தரன்	,,	,,	...	வடுகநாதன் உயர்நிலைப்பள்னி, பொன்னமராவதி.
32	வீர. சுப்பையா	,,	,,	...	விசாலாட்சி உயர்நிலைப்பள்ளி, ஆ. தெக்கூர்.
33	கோ. அய்யக்கோன்	,,	1956	...	கழக உயர்நிலைப்பள்ளி, ஆலங்குளம்.
34	சி. ஆறுமுகம்	,,	,,	...	
35	நா. காசினிவேந்தப் பெருமாள்	,,	1956	...	குமரகுருபர சுவாமிகள் ஆண்கள் உயர்நிலைப்பள்ளி, ஸ்ரீவைகுண்டம்.
36	பி. முருகேசன்	,,	,,	...	திருப்பராய்த்துறை உயர்நிலைப்பள்ளி.
37	இரா. இராமச்சந்திரன்	,,	,,	...	கழக உயர்நிலைப்பள்ளி, படுகைப்பத்து.
38	க. இராமசாமி	,,	,,	...	கழக உயர்நிலைப்பள்ளி, ஓட்டன் சத்திரம்.
39	பெ. சண்முகம்	,,	,,	...	,, கோவை.
40	ம. விவேகாநந்தன்	,,	,,	...	
41	போ. சுப்பிரமணியன்	,,	,,	...	கழக உயர்நிலைப்பள்ளி, இளையரசனேந்தல்.
42	து. காசிநாதன்	,,	1957	...	
43	கொ. கொன்னையாண்டி	,,	,,	...	திரு. வள்ளியப்பா உயர்நிலைப் பள்ளி, கோபிநாயக்கன் பட்டி.
44	ப. கிருஷ்ணன்	,,	,,	...	
45	அ. நடராசன்	,,	,,	...	தேனி நாடார் சரசுவதி ஆண்கள் உயர்நிலைப் பள்ளி

தொடர் எண்	பெயர்	தேறிய வகுப்பு	தேர்ச்சி பெற்ற ஆண்டு	பரிசு விபரம்	பதவி
46	அ. பெருமாள்	முடிநிலை	1957	...	கருங்கல் உயர்நிலைப்பள்ளி, குமரி மாவட்டம்
47	சு. பிச்சைக்குழந்தைசாமி	,,	,,	...	
48	J. இராமகிருட்டினன்	,,	,,	...	கழக நடுநிலைப்பள்ளி, மேலப்பாலச்சி.
49	R. சைலவாசன்	,,	,,	...	
50	வீ. சேதுராமலிங்கம்	,,	,,	...	
51	துரை. சுப்பிரமணியன்	,,	,,	...	சேத்தியாத்தோப்பு, உயர்நிலைப்பள்ளி.
52	ந. சுந்தரேசன்	,,	,,	...	
53	க. சுப்பிரமணியன்	,,	,,	...	சிவந்திபட்டி நாடார் உயர்நிலைப் பள்ளி.
54	பெரி. ஆறுமுகம்	,,	1958	...	விசாலாட்சி உயர்நிலைப் பள்ளி, ஆ. தெக்கூர்
55	மு. கிருட்டினமூர்த்தி	,,	,,	...	
56	மு. மாணிக்கம்	,,	,,	...	B. H. S. பசுவந்தனை திருநெல்வேலி.
57	மீ மு. சின்னசாமி	,,	,,	...	நகராண்மை உயர்நிலைப் பள்ளி, சேலம்.
58	அ. மணிவாசகன்	,,	,,	...	அரசர் உயர்நிலைப் பள்ளி, சிவகங்கை.
59	V. காளிக்கௌண்டர்	,,	,,	...	
60	S. இராசகோபால்	,,	,,	...	
61	V. கண்ணையன்	,,	,,	...	சாரியர் மகாசன உயர்நிலைப் பள்ளி, அருப்புக்கோட்டை.
62	பெ. இராமசாமி	,,	,,	...	
63	நா. சிங்காரம்	,,	,,	...	உயர்நிலைப் பள்ளி, உதகமண்டலம்.
64	சி.த. சுப்பிரமணியன்	,,	,,	...	வணிகத்துறை
65	கோ. விசுவநாதன்	,,	,,	...	B. H. S. மெய்ஞ்ஞானபுரம், நெல்லை மாவட்டம்.
66	வே. ஆறுமுகம்	,,	1959	...	
67	மு. பாலசுப்பிரமணியன்	,,	,,	...	
68	அ. மரியமைக்கேல்	,,	,,	...	
69	T. V. மாரிசெட்டி	,,	,,	...	

தொடர் எண்	பெயர்	தேறிய வகுப்பு	தேர்ச்சி பெற்ற ஆண்டு	பரிசு விபரம்	பதவி
70	D. மோகனரங்கசாமி	முடிநிலை	1959	...	
71	K. முப்புடாதி	,,	,,	...	பிள்ளைமார் சங்க உயர்நிலைப் பள்ளி, மதுரை
72	துரை. முருகையா	,,	,,	...	
73	சுப. நாராயணன்	,,	,,	...	நகரத்தார் உயர்நிலைப் பள்ளி, கண்டரமாணிக்கம்.
74	R. P. நடராசன்	,,	,,	...	உயர்நிலைப் பள்ளி, மம்சாபுரம்.
75	சி. பு. நாயகம்	,,	,,	...	
76	துரை. அரங்கராமானுசன்	,,	,,	...	கழக உயர்நிலைப் பள்ளி, வான்பாக்கம்.
77	வே. அரங்கசாமி	,,	,,	...	காந்தி வித்தியாபீட உயர்நிலைப் பள்ளி, கன்னிச்சேர்வை பட்டி
78	ப. தமிழ்மாறன்	,,	,,	...	
79	வே. சாத்தூர்சாமி	,,	,,	...	
80	மு. சண்முகம்	,,	,,	...	
81	பெ. சீனிவாசப்பெருமாள்	,,	,,	...	உயர்நிலைப் பள்ளி, வேங்கடாசலபுரம்.
82	அ. வைகுண்டபதி	,,	,,	...	
83	அ. வரதராசன்	,,	,,	...	
84	மா. ரா. வஞ்சிக்கோ	,,	,,	...	உயர்நிலைப் பள்ளி, சென்னை.
85	M. G. சிவசுப்பிரமணியன்	,,	,,	...	
86	பெரியாழ்வார்.	,,	,,	...	

LALITHA PRINTERS PRIVATE LIMITED,
MADURAI-1-59.

சன்மார்க்க சபை வெளியீடுகள்

1. சுலோசனை (இரண்டாம் பதிப்பு)

இஃது அரிய இனிய வசன நடையமைந்த நூல். கற்பின் மாட்சிமையையும், உண்மை அன்பின் இயல்பையும் நன்கு விளக்குவ[illegible] விலை ரூ. 0-8-0

2. உதயன சரிதம் (மூன்றும் பத[illegible])

இது தெள்ளிய இனிய வசன நடையிலெழுதப் பட்ட நூல்; உதயனன், நாவாகனதத்தன் வரலாறுகளைச் சுருக்கி விளக்கிக் கூறுவது; ஆங்கிலக் கல்லூரிகளிற் பாடப் புத்தகமாகப் பயிலப்படுவது. விலை ரூ. 2-0-0

3. சுக்கிர நீதி.

இது வடமொழிப் பொருள் நூல்களுள் தலையாயது. தெள்ளிய தூய தமிழ் நடையில் மொழிபெயர்க்கப்பட்டது. பண்டைக்காலத்து அரசியல் நிலைகளை விளக்கிக் கூறுவது. விலை ரூ. 6-0-0

4. மண்ணியல் சிறுதேர்.

இது வடமொழியில் உள்ள மிருச்சகடிகம் என்னும் சிறந்த பழைய பிரகரண நாடகத்தின் நேரான மொழிபெயர்ப்பாகும். சந்தர்ப்பங்களுக்கேற்ற இனிய 371 பாடல்கள் இடையிடையே விரவப்பெற்ற சிறந்த உரைநடையாலமைந்தது. விலை ரூ. 4-0-0

இந்நான்கும் மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்களால் மொழிபெயர்த்து இயற்றப் பெற்றவை.

குறிப்பு :- இந்நான்கும் ஒருங்கு வாங்குவோர்க்குத் தபாற்செலவின்றி அனுப்பப்படும்.

கிடைக்குமிடம் :— செயலாளர், சன்மார்க்கசபை,
மேலைச்சிவபுரி, திருச்சி மாவட்டம்.

லலிதா பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிடெட், மதுரை-1 '59.